இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை

பொது மற்றும் சமூகப்பிரிவு

மார்ச் 2018-உடன் முடிந்த ஆண்டிற்கானது

लोकहितार्थ सत्यनिष्ठा

Dedicated to Truth in Public Interest

தமிழ்நாடு அரசு

அறிக்கை எண் 1 - 2020

இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை

பொது மற்றும் சமூகப்பிரிவு

மார்ச் 2018-உடன் முடிந்த ஆண்டிற்கானது

தமிழ்நாடு அரசு

அறிக்கை எண் 1 - 2020

பொருளடக்கம்

	பத்தி	பக்கம்
முகவுரை		vii
அத்தியாயம் I - முன்னுரை		
இவ்வறிக்கை பற்றிய விவரம்	1.1	1
தணிக்கைக்கு உட்படுத்தப்பட்ட அமைப்புகளின் விவரக்குறிப்புகள்	1.2	1
தணிக்கை செய்வதற்கான அதிகாரம்	1.3	2
திட்டமிடல் மற்றும் தணிக்கை நடத்துதல்	1.4	3
தணிக்கைக்கான பதிற்குறிப்பு	1.5	4
செயலாக்கத் தணிக்கைகளின் தணிக்கைக் குறித்துரைகள்	1.6	4
இணக்கத் தணிக்கையின் தணிக்கைக் குறித்துரைகள்	1.7	8
பரிந்துரைகள்	1.8	10
தணிக்கை அறிக்கைகள் மீதான தொடர் நடவடிக்கை	1.9	10
அத்தியாயம் II - செயலாக்க தணிக்கைகள்		
மக்கள் நல்வாழ்வு & குடும்ப நலன், நெடுஞ்சாலைகள் & சிறு துறைமுகங்கள் மற்றும் உள், மதுவிலக்கு & ஆயத்தீர்வை துறைகள்		
தமிழ்நாட்டில் சாலை பாதுகாப்பு அமைப்பு	2.1	13
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை		
இந்திய மருத்துவ முறைகள் மூலம் நல்வாழ்வு சேவைகள் மற்றும் மருத்துவ கல்வி வழங்குதல் மீதான செயலாக்க தணிக்கை	2.2	64
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை		
நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாடுகளின் கணினிமயமாக்கம் மீதான செயலாக்கத் தணிக்கை	2.3	97
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் மற்றும் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறைகள்		
சென்னை பெருநகர் பகுதியில் திட்ட அனுமதி மற்றும் கட்டட உரிமம் வழங்குவதில் வளர்ச்சி விதிமுறைகளை பின்பற்றுதல்	2.4	129

அத்தியாயம் III - இணைக்கத் தணிக்கை		
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை		
ஒகேனக்கல் நீர் வழங்கல் மற்றும் புளோரோசிஸ் பாதிப்பு குறைப்பு திட்டத்தை செயல்படுத்துதல்	3.1	159
தவிர்த்திருக்கக்கூடிய/பயனற்ற செலவு	**3.2**	
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை		
மருத்துவ கருவிகளின் முறையற்ற கொள்முதல் மற்றும் அவற்றின் பயனற்ற நிலை	3.2.1	173
உயர்கல்வித் துறை		
குறைபாடுடைய திட்டமிடுதல் காரணமாக ஏற்பட்ட பயனற்ற செலவு	3.2.2	178
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை		
மருந்துகளின் முறையற்ற கொள்முதலால் ஏற்பட்ட தவிர்த்திருக்கக்கூடிய செலவினம்	3.2.3	180
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை *தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்*		
இந்திய தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையத்தின் முன் அனுமதியின்றி குழாய்கள் அமைத்ததால் ஏற்பட்ட தவிர்த்திருக்கக்கூடிய செலவினம்	3.2.4	183
மக்கள் நலவாழ்வு மற்றும் குடும்ப நலன் மற்றும் பொதுப்பணி துறைகள்		
உணவகங்கள் மற்றும் பொது அறைகள் கட்டுவதில் பயனற்ற செலவினம்	3.2.5	185
சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை		
பணிபுரியும் பெண்களுக்கான விடுதி கட்டும் திட்டத்தை முடிக்காததால் ஏற்பட்ட தவிர்த்திருக்கக்கூடிய செலவு மற்றும் நிதி முடக்கம்	3.2.6	187
பள்ளிக் கல்வி துறை		
முறையற்ற ஆண்டு பராமரிப்பு ஒப்பந்தம்	3.2.7	190
ஒழுங்குமுறை விவகாரங்கள்	**3.3**	
சிறப்பு திட்ட செயலாக்கத் துறை மற்றும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை		
மாநிலத்திலுள்ள பெண் பயனாளர்களுக்கு விலையில்லா மின்விசிறிகள், மிக்ஸிகள் மற்றும் கிரைண்டர்கள் வழங்கும் திட்டம்	3.3.1	193

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறை		
பயன் மாற்றம் செய்யப்பட்ட உடலுழைப்பு தொழிலாளர்கள் பொது நல நிதி	3.3.2	201
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை		
குத்தகை வாடகை திருத்தியமைக்காததால் வசூலிக்கப்படாத வருவாய்	3.3.3	203
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை திருத்தணி நகராட்சி		
உயிரி எரிவாயு மற்றும் மின் உற்பத்தி ஆலையின் குறைவான பயன்பாடு	3.3.4	205
கோயம்புத்தூர் மாநகராட்சி		
செயற்கை ஹாக்கி விளையாட்டு புல்தரை பயன்படுத்தப்படாமை	3.3.5	207
வருவாய் இழப்பு	**3.4**	
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை கோயம்புத்தூர் மாநகராட்சி, பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் பழனி நகராட்சி		
தவறாக மதிப்பிடப்பட்ட சொத்து வரி	3.4.1	209

இணைப்புகள்

இணைப்பு எண்	விவரங்கள்	பக்கம் எண்
1.1	நிலுவையிலுள்ள ஆய்வறிக்கைகள் மற்றும் தணிக்கை பத்திகளின் துறைவாரியான விவரங்கள்	215
2.1	மாவட்ட வாரியான பார்வையிடப்பட்ட அலுவலகங்கள்	216
2.2	மாதிரி தேர்வுக்கான முறை	217
2.3	சென்னை மாவட்டத்தில் சோதனை ஆய்வு செய்யப்பட்ட சாலைகள்/ பகுதிகளில் IRC குறியீட்டின்படி இல்லாத சாலை பாதுகாப்பு நடவடிக்கைகள்	218
2.4	மாதிரி மாவட்டங்களில் சோதனை சரிபார்ப்பு செய்யப்பட்ட மருத்துவமனைகளின் அவசர கால சிகிச்சை மையங்களில் போதுமானதாக இல்லாத கருவிகளின் விவரங்கள்	219
2.5	மாதிரி மாவட்டங்களில் சோதனை ஆய்வு செய்யப்பட்ட மருத்துவமனைகளின் அவசர கால சிகிச்சை மையங்களில் போதுமானதாக இல்லாத ஊழியர்களின் விவரங்கள்	222

இணைப்பு எண்	விவரங்கள்	பக்கம் எண்
2.6	கூட்டு நேரடி ஆய்வின்போது, காணப்பட்ட/ மாவட்ட சாலை பாதுகாப்பு குழுவால் பரிந்துரைக்கப்பட்டு செயல்படுத்தப்படாத சாலை பாதுகாப்பு நடவடிக்கைகளின் விவரங்கள்	223
2.7	மாதிரி ISM அமைப்புகள்	225
2.8	உள்நோயாளி வசதிகள் வழங்கப்படாத சோதனை சரிபார்ப்பு செய்யப்பட்ட ISM பிரிவுகள்	226
2.9	சித்தா, ஆயுர்வேதா மற்றும் யுனானி பிரிவுகளில் வழங்கப்பட்ட/வழங்கப்படாத/செயல்படாத உபகரணங்களின் விவரங்கள்	227
2.10	நீலகிரி மாவடடத்தில் ISM பிரிவுகளுக்கு வழங்கப்பட்ட செயல்படாத கருவிகள்	230
2.11	ISM மருத்துவமனைகள் மற்றும் ISM பிரிவுகளில் பணியாளர் பற்றாக்குறை (AMO/MO)	231
2.12	மருத்துவர்கள் பணியமர்த்தப்படாததால் சோதனை ஆய்வு செய்யப்பட்ட மாவட்டங்களில் இயங்காத ISM பிரிவுகள்	234
2.13	மாதிரிகளை எடுப்பதில் குறைவு	235
2.14	வர்த்தகர்களிடமிருந்து தொழில் வரி பெறாததால் வருவாய் கசிவு	236
2.15	மாதிரி நகராட்சிகளில் செப்டம்பர் 2015 முதல் ஜனவரி 2018 வரை பெறப்பட்டு, நிலுவையிலுள்ள கோரிக்கைகள்	237
2.16	நகராட்சி சேவைகளை வழங்குவதில் தாமதம்	238
2.17	மாதிரி நகராட்சிகளில் தொழில் வரி நிலுவை	239
2.18	மாதிரி நகராட்சிகளில் வரி அல்லாத இனங்களில் நிலுவை	240
2.19	திட்ட அனுமதி வழங்குவதற்கான நிலைகள்	241
2.20	சொத்து வரி மதிப்பீட்டு விவரங்கள்	242
2.21	உள்ளாட்சி அமைப்புகள் வழங்கிய திட்ட அனுமதிகளில் விதி மீறல்	243
2.22	2013-18 காலகட்டத்தில் சென்னை பெருநகர் பகுதியில் வளர்ச்சிக் கட்டணங்கள் மற்றும் திறந்தவெளி ஒதுக்கீட்டுக் கட்டணங்கள் பெற்றதும் மற்றும் வழங்கிய தொகைகள்	244
2.23	OSRக்கு மாறாக கட்டணங்கள் வசூலித்தல்	245

இணைப்பு எண்	விவரங்கள்	பக்கம் எண்
2.24	சோதனை சரிபார்ப்பு செய்யப்பட்ட திட்ட அனுமதிகளில் OSR இடங்களை உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாற்றம் செய்யாமை	246
2.25	பல்வேறு வகை கட்டடங்களுக்கான FSI மற்றும் ஊக்க FSI விவரங்கள்	247
2.26	FSI கணக்கீட்டில் அளவுருக்கள் தவறாக கடைபிடித்தமை	248
2.27	போதுமான வாகன நிறுத்துமிடம் இல்லாமை	249
2.28	GCCயின் கள ஆய்வு மற்றும் கட்டட உரிமங்களை வழங்குவதில் தாமதம்	250
2.29	திட்ட அனுமதி வழங்கப்பட்ட பின் பெறப்பட்ட சுற்றுச்சூழல் அனுமதி	251
2.30	திட்ட அனுமதி வழங்குவதற்கு முன் தொடங்கப்பட்ட கட்டுமானப் பணிகள்	252
3.1	மாதிரி செயலாக்க பிரிவுகள்	253
3.2	உந்து நீரேற்றுக் குழாய்கள் மற்றும் ஈர்ப்பு நீரேற்றுக் குழாய்கள் மூலம் உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்பட்ட ஒகேனக்கல் குடிநீர்	254
3.3	கூடுதல் அளவுகளுக்கு புதிய விகிதங்களை பின்பற்றியதால் அதிகமாக பணம் செலுத்தப்பட்டமை	256
3.4	நீள் இரும்புக் குழாய்களை (DI) இணைக்க தனி இனம் வழங்கப்பட்டதால் ஏற்பட்ட தவிர்த்திருக்கக்கூடிய செலவினம்	257
3.5	இரண்டு மாதிரி மருத்துவமனைகளில் தானியங்கி/பகுதி அளவு தானியங்கி பகுப்பாய்வு கருவிகளை கொண்டு இரத்த மாதிரிகள் பரிசோதிக்கப்பட்ட விவரங்கள் (எடுத்துக்காட்டு நேர்வுகள்)	258
3.6	ரப்-ன்-ரன் (*Rub N Run) எண்ணெய்* மற்றும் லீவர் டானிக் (*Liver Tonic)* ஆகியவற்றின் கொள்முதலில் தவிர்த்திருக்கக்கூடிய மிகைச் செலவினம்	259
3.7	தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்கள் மற்றும் வட்டங்களின் விவரங்கள்	260
3.8	பொருள் வழங்கலுக்கு முந்தைய ஆய்வின் (PDI) கட்டணங்கள் மீதான தவிர்த்திருக்கக்கூடிய மிகை செலவினம்	261

இணைப்பு எண்	விவரங்கள்	பக்கம் எண்
3.9	காப்புறுதி செய்யப்படாத கிடங்குகளில் FMG கருவிகள் வைக்கப்பட்டதன் காரணமாக ஏற்பட்ட இழப்பு	262
3.10	கிடங்குகளிலுள்ள சேதமடைந்த மற்றும் குறையுடைய FMG கருவிகள்	263
3.11	கோயம்புத்தூர் மாநகராட்சியில் குறைவாக சொத்து வரி விதிக்கப்பட்ட நேர்வுகள்	264
3.12	2014-18 காலத்திற்கான பழனி நகராட்சியில் சொத்து வரி குறைவாக விதித்தமை	265
	சுருக்கச் சொற்றொடர்களின் திரட்டு	266

முகவுரை

மார்ச் 2018 உடன் முடிந்த ஆண்டிற்கான இத்தணிக்கை அறிக்கை, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151வது பிரிவின் கீழ் விதிக்கப்பட்டுள்ளவாறு தமிழக ஆளுநரிடம் சமர்ப்பிப்பதற்காக தயாரிக்கப்பட்டுள்ளது.

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலம், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல், உயர்கல்வி, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டம், பள்ளிக்கல்வி, சிறப்புத்திட்டச் செயலாக்கம், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு ஆகிய துறைகள் உள்பட பொது மற்றும் சமூகப் பணிகளின் கீழ் தமிழ்நாடு அரசுத் துறைகளில் நடத்தப்பட்ட செயலாக்கத் தணிக்கை மற்றும் இணைக்கத் தணிக்கைகளின் முக்கிய தணிக்கைக் குறிப்புகளை இந்த அறிக்கை கொண்டுள்ளது.

2017-18 ஆண்டின் கணக்குகளை சோதனை தணிக்கை செய்யும்போது கண்டறியப்பட்ட நேர்வுகளும், முந்தைய ஆண்டுகளில் கண்டறியப்பட்டு முந்தைய ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகளில் சேர்க்கப்படாத நேர்வுகளும் இந்த அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளன. 2017-18 ஆண்டிற்குப் பிந்தைய காலத்தில் கண்டறியப்பட்ட குறிப்புகளும் தகுந்த இடங்களில் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத்துறைத் தலைவரால் வெளியிடப்பட்ட தணிக்கைத் தரங்களுக்கு இணங்கும் வகையில் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இத்தமிழ் அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள தணிக்கை குறிப்புகள் ஆங்கில அறிக்கையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டவை. ஆங்கில அறிக்கையில் உள்ள குறிப்புகளின் பொருள் இத்தமிழ் அறிக்கையில் மாறுபடாமல் இருக்க எல்லாவித முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இத்தமிழ் அறிக்கையில் ஏதாவது ஐயம் எழுமானால், ஆங்கில அறிக்கையையே அதிகாரபூர்வமானதாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

அத்தியாயம் I
முன்னுரை

அத்தியாயம் I

முன்னுரை

1.1 இவ்வறிக்கை பற்றிய விவரம்

இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் (CAG) இவ்வறிக்கையானது தெரிவு செய்யப்பட்ட திட்டங்கள் மற்றும் நடவடிக்கைகளின் மீதான செயலாக்கத் தணிக்கை மற்றும் அரசுத் துறைகள் மற்றும் தன்னாட்சி அமைப்புகள் மீதான இணக்கத் தணிக்கை ஆகியவற்றின் மூலம் எழும் குறிப்புகள் தொடர்பானதாகும்.

மாநில சட்டமன்றத்தின் பார்வைக்கு தணிக்கையின் முக்கிய விளைவுகளை கொண்டு செல்வதே இவ்வறிக்கையின் முக்கிய நோக்கமாகும். நிதிசார் நடவடிக்கைகளின் இயல்பு, அளவு மற்றும் பரிமாணம் ஆகியவற்றிற்கு ஏற்றாற் போல் அறிக்கையளித்தலின் தன்மை இருக்க வேண்டும் என்று CAGயால் வெளியிடப்பட்ட தணிக்கைத் தரநிலைகள் கூறுகின்றன. சிறந்த ஆட்சி முறைக்கும், அரசு அமைப்புகளின் மேம்பட்ட நிதி மேலாண்மைக்கும் வழி வகுக்கும் தகுந்த கொள்கை முடிவுகளையும், ஆணைகளையும் உருவாக்கவும் அவற்றை நிறைவேற்றுபவர்கள் தகுந்த திருத்த நடவடிக்கைகளை எடுக்கவும் தணிக்கைக் கண்டுபிடிப்புகள் உதவிட வேண்டும்.

இந்திய அரசியலமைப்புச் சட்டம், பொருத்தமான சட்டங்கள், விதிகள் முறைமைகள், பல்வேறு ஆணைகள், தகுதி வாய்ந்த அமைப்புகளின் அறிவுறுத்தல்கள் ஆகியவற்றிற்கு தணிக்கைக்குட்படுத்தப்படும் அமைப்புகள் இணங்கி நடக்கின்றனவா என்பதை உறுதி செய்து கொள்ள அந்த அமைப்புகளின் வரவுகள், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளின் ஆய்வையே இணக்கத் தணிக்கை குறிக்கிறது.

ஓர் அமைப்பு, பெருந்திட்டம் அல்லது திட்டத்தின் நோக்கங்கள் எந்த அளவு சிக்கனமாகவும், சிறந்த முறையிலும் பயனுள்ளதாகவும் நிறைவேறின என்பதை ஆய்வு செய்வது செயலாக்கத் தணிக்கையாகும்.

தணிக்கைக்கு உட்படுத்தப்படும் அமைப்புகளின் விவரம், தணிக்கைக்குத் திட்டமிடல் தணிக்கையின் அளவு மற்றும் தணிக்கைக் குறிப்புகளின் சுருக்கம் இந்த அத்தியாயத்தில் இடம் பெற்றுள்ளன. செயலாக்கத் தணிக்கையின் குறிப்புகளை அத்தியாயம் IIலும், பல்வேறு துறைகள் மற்றும் தன்னாட்சி அமைப்புகளின் நடவடிக்கைகள் மீதான இணக்கத் தணிக்கையின் குறிப்புகள் அத்தியாயம் IIIலும் தரப்பட்டுள்ளன.

1.2 தணிக்கைக்கு உட்படுத்தப்பட்ட அமைப்புகளின் விவரக்குறிப்புகள்

மாநிலத்தில் தலைமைச் செயலக அளவில் கூடுதல் தலைமை செயலர்கள்/முதன்மை செயலாளர்கள்/செயலாளர்கள் தலைமையில் இயங்கும் 37 துறைகள் உள்ளன. இவர்களுக்கு உதவியாக ஆணையர்கள், இயக்குநர்கள் மற்றும் சார்நிலை அலுவலர்கள் செயல்படுகின்றனர். இவற்றில் 16 பொதுத்துறை நிறுவனங்கள், 1,900 தன்னாட்சி/

இவ்வறிக்கையில் உபயோகிக்கப்பட்ட சுருக்கச் சொற்றொடர்களின் திரட்டும் 266ம் பக்கத்தில் உள்ளது.

உள்ளாட்சி அமைப்புகள் ஆகியவற்றை உள்ளடக்கிய 23 துறைகள், முதன்மை கணக்காய்வுத் தலைவர் (பொது மற்றும் சமூகப்பிரிவு தணிக்கை), தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி, அவர்களின் தணிக்கைக்கு உட்பட்டவையாகும்.

அரசு 2017-18ம் ஆண்டில் மேற்கொண்ட செலவினம் அதற்கு முந்தைய நான்கு ஆண்டுகளோடு ஒப்பீடு செய்யப்பட்டதன் நிலை **அட்டவணை 1.1**ல் கொடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 1.1: செலவினத்தின் ஒப்பீட்டு நிலை

(₹ கோடியில்)

செலவுகள்	2013-14	2014-15	2015-16	2016-17	2017-18
வருவாய் செலவினம்	***1,09,824***	***1,28,828***	***1,40,993***	***1,53,195***	***1,67,874***
பொதுச் சேவைகள்	35,729	41,655	45,512	51,452	60,451
சமூக சேவைகள்	45,276	50,349	54,806	55,297	59,790
பொருளாதார சேவைகள்	19,644	26,843	29,943	33,980	36,162
உதவி மானியங்களும் பங்குத் தொகைகளும்	9,175	9,981	10,732	12,466	11,471
மூலதனச் செலவினம்	***17,173***	***17,803***	***18,995***	***20,709***	***20,203***
வழங்கப்பட்ட கடன்களும் முன்பணங்களும்	***2,242***	***4,319***	***2,331***	***26,046***	***6,517***
பொதுக்கடன் திருப்பிச் செலுத்துவது (வழிவகை முன்பணங்களின் கீழான நிதி நடவடிக்கைகள் உட்பட)	***4,977***	***6,488***	***6,605***	***8,200***	***8,991***
எதிர்பாராச் செலவு நிதி	***19***	***இல்லை***	***19***	***இல்லை***	***இல்லை***
பொதுக் கணக்கு செலவுகள்	***1,44,022***	***1,59,384***	***1,77,442***	***1,73,007***	***1,84,209***
மொத்தம்	**2,78,257**	**3,16,822**	**3,46,385**	**3,81,157**	**3,87,794**

(ஆதாரம்: அந்தந்த ஆண்டுக்கான நிதிக் கணக்குகள்)

1.3 தணிக்கை செய்வதற்கான அதிகாரம்

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 149 மற்றும் 151 பிரிவுகள் மற்றும் இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத்தலைவரின் (கடமைகள், அதிகாரம் மற்றும் பணி முறைமை) 1971 ஆண்டு சட்டத்தின் (DPC சட்டம்) மூலம் CAG தணிக்கை செய்வதற்கான அதிகாரத்தைப் பெறுகிறார். இச்சட்டத்தின் பிரிவு 13[1]ன் கீழ் தமிழ்நாடு அரசுத் துறைகளின் செலவுகளை CAG தணிக்கை செய்கிறார். இச்சட்டத்தின் பிரிவுகள் 19(2)[2], 19(3)[3] மற்றும் 20(1)[4]

---

1 (i) மாநிலத்தின் தொகு நிதியிலிருந்தான அனைத்து நிதி நடவடிக்கைகள், (ii) எதிர்பாராச் செலவு நிதி மற்றும் பொதுக் கணக்குகள் தொடர்பான அனைத்து நிதி நடவடிக்கைகள், (iii) வணிகம், உற்பத்தி, இலாப நட்டக் கணக்குகள், ஐந்தொகைக் குறிப்பு மற்றும் இதர துணை கணக்குகள் ஆகியவற்றின் மீதான தணிக்கை.

2 சம்பந்தப்பட்ட சட்டங்களில் செய்யப்பட்டுள்ள வழிவகைக்கு ஏற்ப பாராளுமன்றம் இயற்றிய சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட அல்லது பாராளுமன்றம் தாமே நிறுவிய கழகங்களின் கணக்குகள் மீதான தணிக்கை (நிறுமங்கள் அல்லாதவை).

3 மாநில ஆளுநர் கேட்டுக் கொண்டதன் பேரில் மாநில சட்டப் பேரவையால் இயற்றப்பட்ட சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட அல்லது மாநில சட்டப் பேரவை தாமே நிறுவிய கழகங்களின் கணக்குகள் மீதான தணிக்கை (நிறுமங்கள் அல்லாதவை).

4 CAG மற்றும் அரசு ஒப்புக்கொண்ட விதிமுறைகள் வரையறைகளின்படி மாநில ஆளுநர் கேட்டுக் கொண்டதன் பேரில் எந்தவொரு அமைப்பு அல்லது அதிகார அமைப்பின் கணக்குகள் மீதான தணிக்கை.

ஆகியவற்றின் கீழ் தணிக்கை செய்யப்படும் 33 தன்னாட்சி அமைப்புகளுக்கு CAG பிரத்யேக தணிக்கையாளராவார். CAGயின் DPC சட்டம் பிரிவு 19 (1)ன் கீழ் அரசு நிறுமங்களின் தணிக்கை நடத்தப்படுகிறது. மேலும், அரசால் கணிசமான அளவு நிதியுதவி வழங்கப்படும் இதர தன்னாட்சி அமைப்புகளின் தணிக்கையும் இச்சட்டத்தின் பிரிவு 14[5]ன் கீழ் CAGஆல் மேற்கொள்ளப்படுகிறது. CAGயின் DPC சட்டம், 1971 பிரிவு 14 (2)ன் கீழ் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் தணிக்கை நடத்தப்படுகிறது. உள்ளாட்சி அமைப்புகளின் தணிக்கைக்கு வேண்டிய தொழில்நுட்ப வழிகாட்டுதலையும் உதவியையும் CAG உள்ளாட்சி நிதித் தணிக்கைக்கு வழங்குகிறார். பல்வேறு தணிக்கைகளுக்கென கொள்கைகள் மற்றும் வழிமுறைகள் CAGயின் தணிக்கைத் தரநிலைகள் மற்றும் CAGஆல் 2007ல் வெளியிடப்பட்ட தணிக்கை மற்றும் கணக்குகள் ஒழுங்குமுறை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

1.4 திட்டமிடல் மற்றும் தணிக்கை நடத்துதல்

ஒட்டுமொத்தமாக துறைகள்/அமைப்புகளில் தவறு நிகழக்கூடிய வாய்ப்புகளின் மதிப்பீடு, அரசுத் துறைகளின் ஒவ்வொரு அலகும் மேற்கொண்ட செலவினம், அவற்றின் வகை, துறை மேற்கொண்ட நடவடிக்கைகளின் முக்கியத்தன்மை/ சிக்கலான தன்மை, நிதிசார்ந்த அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்டிருந்ததன் அளவு, உள்ளீட்டுக் கட்டுப்பாடுகளின் மதிப்பீடு மற்றும் சம்பந்தப்பட்டோரின் விசாரங்கள், அபாயநிலை ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகளின் விளைவுகள் ஆகியவற்றின் அடிப்படையில் தணிக்கை செயல்முறை துவக்கப்படுகிறது. இம்மதிப்பீடுகளில் முந்தைய ஆண்டுகளில் தணிக்கையில் கண்டறியப்பட்ட குறிப்புகளும் கருத்தில் கொள்ளப்படுகின்றன. தவறு நிகழக்கூடிய வாய்ப்புகளின் மதிப்பீட்டு அடிப்படையில், தணிக்கைக்கான காலஇடைவெளி மற்றும் தணிக்கையின் பரப்பு ஆகியவை முடிவு செய்யப்படுகின்றன. மேலும், மேற்கண்ட அடிப்படையில் தணிக்கை மேற்கொள்வதற்காக, ஆண்டு தணிக்கைத் திட்டம் வகுக்கப்படுகிறது.

தணிக்கை முடிவடைந்த பின்னர், தணிக்கைக் குறிப்புகள் அடங்கிய ஆய்வறிக்கைகள் தணிக்கை செய்யப்பட்ட அலுவலகங்களின் தலைவர்களுக்கு அனுப்பப்படுகின்றன. ஆய்வறிக்கைகள் பெறப்பட்டு ஒரு மாத காலத்திற்குள் தணிக்கைக் குறிப்புகளுக்கு பதில் அளித்திட அவ்வலுவலகங்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றன. பதில்கள் பெறப்படும் நேர்வுகளில், தணிக்கைக் குறிப்புகள் தீர்வு செய்யப்படுகின்றன அல்லது விதிகளின் படி மேல்நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்படுகின்றனர். ஆய்வறிக்கைகளில் உள்ள முக்கிய தணிக்கைக் குறிப்புகளை மாநில சட்டப் பேரவையில் சமர்ப்பிக்கும் பொருட்டு இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 151ன் கீழ், மாநில ஆளுநருக்கு அனுப்பப்படும் தணிக்கை அறிக்கைகளில் சேர்ப்பதற்கென நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

---

5 (i) மாநிலத்தின் தொகுநிதியிலிருந்து கணிசமாக மானியங்கள் அல்லது கடன்கள் மூலம் நிதியுதவி பெறும் ஒரு அமைப்பு/அதிகார அமைப்பின் அனைத்து வரவுகள் மற்றும் செலவினங்களின் தணிக்கை மற்றும் (ii) ஒரு நிதியாண்டில் மாநிலத்தின் தொகுநிதியிலிருந்து வழங்கப்படும் நிதியுதவி ₹ 1 கோடிக்கு குறையாமல் எந்தவொரு அமைப்பு/அதிகார அமைப்பு உள்ளதோ அவ்வகை அமைப்பு/அதிகார அமைப்பின் அனைத்து வரவுகள் மற்றும் செலவினங்களின் தணிக்கை.

1.5 தணிக்கைக்கான பதிற்குறிப்பு

1.5.1 வரைவு தணிக்கை பத்திகள் மற்றும் செயலாக்கத் தணிக்கைகள்

ஆறு வார காலத்திற்குள் தங்களது மறுமொழிகளை அனுப்பவேண்டும் என்ற கோரிக்கையுடன் 14 வரைவுத் தணிக்கைப் பத்திகளும் 4 வரைவு செயலாக்கத் தணிக்கைகளும் சம்பந்தப்பட்ட துறைகளின் கூடுதல் தலைமை செயலாளர்கள்/ முதன்மை செயலாளர்கள்/செயலாளர்களுக்கு நேர்முகக் கடிதங்கள் மூலம் மே முதல் நவம்பர் 2018 வரையிலான காலத்தில் அனுப்பி வைக்கப்பட்டன. அனுப்பப்பட்ட தணிக்கைப் பத்திகளுள் 13 தணிக்கைப் பத்திகளுக்கும் 2 செயலாக்கத் தணிக்கைகளுக்கும் துறையின் மறுமொழிகள் பெறப்பட்டன. பெறப்பட்ட மறுமொழிகள், இவ்வறிக்கையில் தகுந்த இடங்களில் சேர்க்கப்பட்டுள்ளன. தணிக்கைக்குப் பிந்தைய கலந்தாய்வுக் கூட்டத்தில் அரசுப் பிரதிநிதிகள் தெரிவித்த கருத்துக்களும் இவ்வறிக்கையை இறுதி செய்யும் போது கருத்தில் கொள்ளப்பட்டன.

1.5.2 ஆய்வறிக்கைகளின் நிலுவை நிலை

(அ) 31 மார்ச் 2018 அன்றுள்ளவாறு, பல்வேறு துறைகளுக்கும் மற்றும் அதனுடைய துணை அலுவலகத்திற்கும் அனுப்பப்பட்ட 18,018 பத்திகளை கொண்ட 4,798 ஆய்வறிக்கைகள் நிலுவையில் இருந்தன. இதன் விவரங்கள் **இணைப்பு 1.1**ல் கொடுக்கப்பட்டுள்ளன.

(ஆ) நகர உள்ளாட்சி அமைப்புகளை பொறுத்தவரை, 31 மார்ச் 2018 அன்றுள்ளவாறு, 2,738 பத்திகளை கொண்ட 605 ஆய்வறிக்கைகள் நிலுவையில் இருந்தன.

1.6 செயலாக்கத் தணிக்கைகளின் தணிக்கைக் குறித்துரைகள்

இவ்வறிக்கை நான்கு செயலாக்கத் தணிக்கைகளைக் கொண்டுள்ளது. அரசுத் துறையிலுள்ள நிர்வாகிகள் திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், மக்களுக்கு மேம்பட்ட சேவைகளை வழங்கவும் உதவி செய்யும் நோக்கத்துடன் குறிப்பிட்ட திட்டங்கள்/துணைத் திட்டங்களை செயலாக்கத் தணிக்கை செய்வதும், தகுந்த பரிந்துரைகளை வழங்குவதுமே தணிக்கையின் முக்கிய கவனமாக இருந்து வருகிறது. முக்கியத் தணிக்கைக் குறிப்புகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

1.6.1 தமிழ்நாட்டில் சாலை பாதுகாப்பு அமைப்பு

கடந்த ஐந்து ஆண்டுகளில், சாலை விபத்துகளின் எண்ணிக்கையில் தமிழகம், இந்திய அளவில் முதல் இடத்திலும், சாலை விபத்தினலான உயிரிழப்புகளில் இரண்டாவது இடத்திலும் இருந்தது. வாகன எண்ணிக்கை மற்றும் சாலைகளின் நீளம் ஆகியவற்றுடன் ஒப்பிட்ட விகிதாச்சார அடிப்படையில் நோக்கினால், சாலை விபத்துகளின் எண்ணிக்கையில் மாநிலத்தின் செயல்பாடு வறிதாக இருந்தது. சாலை பாதுகாப்பு கொள்கையை வகுப்பதிலும் சாலை பாதுகாப்புக்கான ஒரு நிறுவன கட்டமைப்பை ஏற்படுத்தும் முயற்சியிலும் மாநிலம் முதலாவதாக இருந்தபோதிலும், விதிக்கப்பட்ட இலக்குகள் முழுவதுமாக எய்தப்படவில்லை. வாகன எண்ணிக்கை மற்றும் சாலைகளின் நீளம் ஆகியவற்றுடன் ஒப்பிட்ட விகிதாச்சார அடிப்படையிலான சாலை விபத்துகளின் எண்ணிக்கையில் சிறிது சரிவு இருந்தபோதிலும், சாலை விபத்துகள் எண்ணிக்கை உயர்ந்து கொண்டே வந்தது. சாலை பாதுகாப்பு அமைப்பு மீதான செயலாக்க தணிக்கை, திட்டமிடல், அமலாக்கம் மற்றும் அவசரகால ஆதரவு ஆகியவற்றில் இருந்த குறைபாடுகளை பின்வருமாறு வெளிக்காட்டியது:

- முறையான சோதனை தடங்கள் (Test track) இல்லாமையும் விண்ணப்பதாரர்களை சோதிப்பதில் இருந்த வறிதான தரமும், சாலைகளில் வாகன ஓட்டிகளின் தரத்தை குறைத்து, சாலை பயனாளர்களை ஆபத்துக்கு உட்படுத்தின. போதிய அளவில் இல்லாத ஓட்டுநர் உரிமத்திற்கான சோதனை மற்றும் அறியாமை ஆகியவற்றுடன், போக்குவரத்து விதிமீறல்களும் சேர்ந்ததால் ஓட்டுநரின் தவறுகள் 77 விழுக்காடு விபத்துகளுக்கு காரணமாயின.
- தணிக்கைக்கான மாதிரி மாவட்டங்களில், உயிரிழப்பையும் சேர்த்து விபத்து பற்றிய விவரங்கள் 33 விழுக்காடு அளவிற்கு குறைந்து பதிவு செய்யப்பட்டதால், விபத்துகள் பற்றிய விவரங்கள் முழுமையற்று இருந்தன.
- ஓட்டுநர் உரிமம் இன்றி மோட்டார் வாகனங்களை ஓட்டுவதற்கு வழக்கு தொடராமை, மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டுவதற்காக ஓட்டுநர் உரிமத்தை தற்காலிகமாக இரத்து செய்ய தவறியமை, போக்குவரத்து விதிகளை மீறுவதற்கான அபராத விகிதங்களை 18 ஆண்டுகளாகியும் மாற்றியமைக்காமை மற்றும் ஸ்மார்ட் கார்டு (smart card) ஓட்டுநர் உரிமங்கள் இல்லாத நிலையில், தொடர் குற்றம் செய்வோரை அடையாளம் காண ஒரு முறைமை இல்லாமை ஆகிய காரணங்களால் விதி அமலாக்கம் பலன் தரத்தக்க வகையில் இல்லை.
- சென்னை மாநகரில் போக்குவரத்து மேலாண்மையை மேம்படுத்தும் பொருட்டு மிகுந்த எதிர்பார்ப்புடன் உருவாக்கப்பட்ட ஒருங்கிணைந்த போக்குவரத்து மேலாண்மை முறைமையில் இருந்த வறிதான ஒப்பந்த மேலாண்மை காரணமாக அத்திட்டத்தை கைவிட நேர்ந்து, அதனால் ₹ 72 கோடி செலுத்த வேண்டிய பொறுப்பும் திட்டத்தின் நோக்கங்கள் நிறைவேறாத நிலையும் ஏற்பட்டன.
- சாலைகளின் பராமரிப்பில் விதிக்கப்பட்ட தர அளவுகளை பின்பற்றாமை, சாலை பாதுகாப்பு தணிக்கைகளை நடத்துவதில் குறைவுகள் மற்றும் அடிக்கடி விபத்து நடக்கும் பகுதிகளை (black spots) சரிசெய்வதில் தவறுகள் ஆகியவற்றால் சாலை பொறியியல் பிரச்சினைகள் ஏற்பட்டு, அவையும் விபத்துகளுக்கு காரணமாயின.
- சாலை பாதுகாப்பு குழு மற்றும் மாவட்ட சாலை பாதுகாப்பு குழுவின் கூட்டங்களில் எடுக்கப்பட்ட முடிவுகளை அமல்படுத்துவதை உறுதி செய்ய தவறியதால், கண்காணிப்பு பலனுள்ளதாக இருக்கவில்லை.

(பத்தி 2.1)

1.6.2 இந்திய மருத்துவ முறைகள் மூலம் நலவாழ்வு சேவைகள் மற்றும் மருத்துவ கல்வி வழங்குதல் மீதான செயலாக்க தணிக்கை

இந்திய மருத்துவ முறைக்கு (ISM) முக்கியத்துவம் வழங்கி, அதன்மூலம் முழுமையான நலவாழ்வு வசதிகளை அளிப்பது அரசின் கொள்கை ஆகும். மாநிலத்திலுள்ள ISM நிறுவனங்களை விரிவுபடுத்துதல், மருத்துவ கல்வியின் தரத்தை உயர்த்துதல் போன்றவற்றின் மூலம் தனது நோக்கங்களை அடைய அரசு விழைகிறது. முக்கியமான தணிக்கை குறிப்புகள் பின்வருமாறு:

- கருவிகளை கொள்முதல் செய்வதில் இருந்த தாமதங்கள் காரணமாக, தமிழ்நாடு மூலிகை பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்துகள் கழகம் (டாம்ப்கால்), மாநில AYUSH சங்கம் ஆகியவற்றின் வங்கி கணக்குகளில் பெரும் தொகைகள் சேர்ந்திருந்தன. பயன்படுத்தப்படாத நிதியை துறை டாம்ப்காலில் முடக்கி வைத்திருந்தது.

- பல பணியிடங்களில் பணியாளர் பற்றாக்குறை என்பது, பொதுவான ISM பிரிவுகளில் 10 முதல் 38 விழுக்காடு வரையில், தேசிய ஊரக நலவாழ்வு திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட ISM பிரிவுகளில் 48 விழுக்காடு மற்றும் AYUSHன் கீழ் உருவாக்கப்பட்ட ISM பிரிவுகளில் 100 விழுக்காடு என்ற அளவுகளில் இருந்தது.

- மருத்துவ பணியாளர் பற்றாக்குறை காரணமாக, மாதிரி மாவட்டங்களில் இருந்த 297 ISM பிரிவுகளுள், 31 பிரிவுகள் தமது செயல்பாட்டை நிறுத்திவிட்டன; 25 பிரிவுகள் வாரத்திற்கு நான்கு அல்லது அதற்கு குறைவான நாட்கள் மட்டுமே இயங்கின.

- ISM பிரிவுகளுக்கான மருந்துகளை தயாரித்து வழங்கும் பொதுத்துறை நிறுவனமான டாம்ப்கால், மருத்துவமனைகள்/பிரிவுகள் கோரிய மொத்த மருந்துகளின் அளவில், 2016-17 மற்றும் 2017-18, முறையே 47 மற்றும் 50 விழுக்காடு அளவிற்கே மருந்துகளை வழங்கியது; போதிய அளவில் நிதி ஒதுக்கீடு இல்லாமை மற்றும் உற்பத்தி குறைவு ஆகியவை இதற்கு காரணங்கள் ஆகும். யுனானி பிரிவுகளுக்கு 2016-17ல் மருந்துகள் ஏதும் வழங்கப்படவில்லை.

- மருந்து சோதனை ஆய்வகத்தில் பணியாளர் பற்றாக்குறை காரணமாக மருந்துகளை சோதிப்பதில் ஏற்பட்ட தாமதத்தினால், 2013-18 காலகட்டத்தில், தரமற்றவை என அறியப்பட்ட 82 மருந்துகளின் விநியோகத்தை உடனடியாக நிறுத்தவோ/திரும்பபெறவோ இயலவில்லை.

- அரசின் ஆயுர்வேதா, யுனானி மற்றும் ஓமியோபதி கல்லூரிகள் முதுநிலை பட்ட வகுப்பகளை நடத்தாதது, ISM முறையின் பரப்பு விரிவடைவதை தடுத்தது .

- அரசு ₹ 12 கோடி செலவில் 2013ல் ஒப்பளித்த ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி பிரிவு ஆகஸ்ட் 2018 நிலையிலும் இயங்க துவங்கவில்லை; கருவிகளை வாங்குவதிலும் பணியாளர்களை தெரிவு செய்வதிலும் ஒருங்கிணைப்பு இல்லாததால், உருவாக்கப்பட்ட சொத்துக்கள் பயனின்றி இருந்தன.

(பத்தி 2.2)

1.6.3 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாடுகளின் கணினிமயமாக்கம் மீதான செயலாக்கத் தணிக்கை

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் தமது சேவைகளை வழங்குவதை மேம்படுத்தும் ஒரு மின்னாட்சி முறை என்ற வகையில் தமிழ்நாடு அரசு Urban Tree Information System (UTIS) என்ற திட்டத்தை துவக்கியது. சேவைகளை உரிய நேரத்தில், குறைந்த செலவில் வெளிப்படையான வகையில் வழங்குதல், அனைத்து நிலைகளிலும் தகவல்களை எளிதாக வழங்குதல் மற்றும் தகவல்களின் தடையற்ற பரிமாற்றம் ஆகியன இத்திட்டத்தின் நோக்கங்கள் ஆகும். நகர்ப்புற உள்ளாட்சி

அமைப்புகளின் செயல்பாடுகளின் கணினிமயமாக்கம் மீதான 2013-18 காலகட்டத்திற்குரிய செயலாக்க தணிக்கை, செயல்பாடுகளின் எளிமைக்காக மையப்படுத்தப்பட்ட ஒரு தகவல்தரவு இருப்பது, சேவை கோரிக்கைகளின் நிலையை நிகழ்நிலையாக அறிவது போன்ற வகைகளில் சேவை வழங்கும் முறையில் முன்னேற்றம் இருந்ததை காட்டியது. திட்டமிடல், தகவமைவின் செயலாக்கம் மற்றும் கண்காணிப்பில் குறைபாடுகள் காணப்பட்டன.

- UTIS பொதுவில் விலையின்றி கிடைக்கும் மென்பொருளுக்கு மாறாக விலையுடன் கூடிய மென்பொருளை பயன்படுத்தியதால் ஆண்டிற்கு ₹ 1.73 கோடி தவிர்த்திருக்கக் கூடிய தொடர் பொறுப்பு ஏற்பட்டது.
- பேரிடர் மீட்பு மென்பொருளுக்காக ₹ 2.62 கோடி செலவில் பெறப்பட்ட உரிமங்கள் பயன்படுத்தப்படாமலே காலாவதியாயின.
- இணையதளம் குறைந்த அளவில் சேவைகளை வழங்கியது, 'எங்கும் எப்போதும்' சேவைகளை வழங்கும் திட்டத்தின் நோக்கத்தை முறியடித்தது.
- குறை தீர்ப்பு தகவமைவு புகார்களை கட்டணமின்றி பதிவு செய்யும் வசதியை அளிக்கவில்லை. இரண்டு கட்டங்களாக ஆகஸ்ட் 2015க்குள் முடிக்கப்பட இருந்த திட்டம் முடிவடையவில்லை (டிசம்பர் 2018).
- திட்டத்தை செயல்படுத்துவதில், பல்வேறு தகவமைவுகளின் கீழ், தரவு இடப்பெயர்வில் துல்லியமின்மை, பல்வேறு தகவமைவுகளின் அட்டவணைகளிடையே கட்டாய புலன்களில் தொடர்பில்லாமை, தரவுகளின் தவறான பதிவு, மதிப்பீடுகளின் தவறான நீக்கம், விடுபட்ட கோரிக்கைகள், வருவாய்களின் கசிவு ஆகிய குறைபாடுகள் இருந்தன.

(பத்தி 2.3)

1.6.4 சென்னை பெருநகர் பகுதியில் திட்ட அனுமதி மற்றும் கட்டட உரிமம் வழங்குவதில் வளர்ச்சி விதிமுறைகளை பின்பற்றுதல்

சென்னை பெருநகர் பகுதி, 1,189 சதுர கிலோமீட்டர் பரப்பளவுடன், தமிழ்நாட்டின் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய மூன்று மாவட்டங்களின் பகுதிகளை உள்ளடக்கியதாகும். சென்னை பெருநகர் பகுதியில் அடங்கிய உள்ளாட்சி அமைப்புகளில், பெருநகர சென்னை மாநகராட்சி, எட்டு நகராட்சிகள், 11 பேரூராட்சிகள் மற்றும் 10 ஊராட்சி ஒன்றியங்களுக்கு உட்பட்ட 179 ஊராட்சிகள் ஆகியன உள்ளன. சென்னை பெருநகர் பகுதியில் கட்டிடங்கள் கட்டிட திட்ட அனுமதியும் கட்டிட உரிமமும் பெற வேண்டும். சென்னை பெருநகர் பகுதியில் திட்ட அனுமதிகள் வழங்குவது, சென்னை பெருநகர் பகுதிக்கான இரண்டாவது முழுமை திட்டத்தின் பகுதியான வளர்ச்சி விதிமுறைளின்படி முறைப்படுத்தப்பட்டுள்ளது. 2013 முதல் 2018 வரையிலான காலகட்டத்தில் சென்னை பெருநகர் பகுதியில் திட்ட அனுமதி மற்றும் கட்டட உரிமம் வழங்குவதில் வளர்ச்சி விதிமுறைகளை பின்பற்றுதல் குறித்த, ஏப்ரல்-செப்டம்பர் 2018ல் நடத்தப்பட்ட செயலாக்க தணிக்கை கீழ்கண்டவற்றை வெளிப்படுத்தியது:

- அனுமதிக்கப்பட்ட அளவைவிட அதிகமான தளபரப்பு கொண்ட சாதாரண கட்டடங்களை கட்ட திட்ட அனுமதிகள் வழங்கப்பட்டன. திட்ட அனுமதியின்றி கூடுதல் தளங்கள் கட்டப்பட்டன. உள்ளாட்சி அமைப்புகள் கட்டிடங்களின் கட்டமைப்பு உறுதித்தன்மையை உறுதி செய்யவில்லை.

- போதுமான நிதி இருந்தும் உள்ளாட்சி அமைப்புகளும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமமும் சென்னை பெருநகர பகுதிக்குள் பசுமை பரப்பை உருவாக்கும் வழிகளை ஆராயவில்லை.
- தளப்பரப்பு குறியீட்டை கணக்கிடுவதற்கு பல்வேறு வழியலகுகளை தவறாக பின்பற்றியதால், ₹ 66.94 கோடி அளவிற்கு ஊக்க தளப்பரப்பு குறியீடு கட்டணம் மதிப்பிடப்படவில்லை.
- வாகன நிறுத்த வசதிகளை போதுமான அளவிற்கு அமைக்காதது, வரையறுக்கப்பட்ட வழியலகுகளை மீறுவதாக இருந்தது. விதி மீறிய கட்டடங்களை கண்காணிக்கவும் கட்டுப்படுத்துவதற்குமான அமலாக்கப்பிரிவு வலுப்படுத்தப்படவில்லை.

(பத்தி 2.4)

1.7 இணக்கத் தணிக்கையின் தணிக்கைக் குறித்துரைகள்

அரசுத் துறைகள்/அமைப்புகள் திறம்பட செயலாற்றுவதற்கு ஊறு விளைவிக்கும் பல குறைபாடுகளை முக்கியமான செயற்களங்களில் தணிக்கை கண்டறிந்தது. இணக்கத் தணிக்கையில் கண்டறியப்பட்ட முக்கிய தணிக்கைக் குறிப்புகள் பின்வருமாறு:

ஒகேனக்கல் நீர் வழங்கல் மற்றும் புளோரோசிஸ் பாதிப்பு குறைப்பு திட்டத்தை செயல்படுத்துதல்

ஒகேனக்கல் நீர் வழங்கல் மற்றும் புளோரோசிஸ் பாதிப்பை மட்டுப்படுத்தும் திட்டத்தின் மூலம் பாதுகாப்பான நீர் குறைவான அளவில் வழங்கப்பட்டது என்பது, ஆற்று நீருடன் நிலத்தடி நீர் கலப்பது என்ற பிரச்சனையுடன் இணைந்ததால், குடிப்பதற்குரிய பாதுகாப்பான குடிநீர் வழங்குதல் என்ற நோக்கம் நிறைவேறவில்லை. வீடுவாரியான கணக்கெடுப்பின் குறைபாடுகள் மற்றும் நுண்ணூட்ட சத்துகளையும் பல் மற்றும் எலும்பியல் சிகிச்சைகளையும் போதிய அளவில் வழங்காமை காரணமாக புளோரோசிஸால் உண்டாக்கி இருந்த பாதிப்பை சரி செய்ய திட்டத்தின்கீழ் போதிய நடவடிக்கை இருக்கவில்லை. புளோரோசிஸ் பாதிப்பை மட்டுப்படுத்தும் நடவடிக்கைகளுக்கு பொது சுகாதார துறையுடன் துடிப்பான ஒருங்கிணைப்பு தேவை. கட்டுமான பணிகளில் இருந்த பிரச்சினைகள் காரணமாக ₹ 2.51 கோடி தவிர்த்திருக்கக்கூடிய செலவு ஏற்பட்டது. வருவாய்க்கும் இயக்கம் மற்றும் பராமரிப்பு செலவுக்கும் இடையே அதிகரித்து வந்த இடைவெளி, திட்டத்தின் முறையான பராமரிப்பதற்கும் நிதி வகையில் திட்டத்தின் நீடித்த பயன்பாட்டிற்கும் அச்சுறுத்தலாக இருக்கிறது.

(பத்தி 3.1)

ஏழு மாதிரி மருத்துவ கல்லூரி மருத்துவமனைகளுக்காக முறையற்ற வகையிலும் உரிய கவனமின்றியும் கொள்முதல் செய்யப்பட்ட தேவையற்ற கருவிகள் பயன்படுத்தப்படவில்லை. அக்கருவிகள் கொள்முதல் செய்யப்பட்ட வகையில் ₹ 4.29 கோடி தவிர்த்திருக்கக்கூடிய செலவு ஏற்பட்டது. இது ₹ 10.60 கோடி செலவில் செய்யப்பட்ட மொத்த கொள்முதலையும் கேள்விக்குள்ளாக்கியது.

(பத்தி 3.2.1)

புதிய விடுதிக்கான தேவையை மதிப்பீடு செய்ய சென்னை பல்கலைக்கழகம் தவறியதால், புதிதாக கட்டப்பட்ட விடுதி கட்டடத்தை மூன்றாண்டுகளுக்கும் மேலாக பயன்படுத்தாத நிலையும் அதன் விளைவாக ₹ 10.10 கோடி பயனற்ற செலவும் ஏற்பட்டன.

(பத்தி 3.2.2)

தொழிலாளர் அரசு ஈட்டுறுதி (ESI) மருத்துவமனைகளும் மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குனரும் (ESI) இரண்டு ஆயுர்வேத மருந்துகளை முறையற்ற வகையில் கொள்முதல் செய்ததால் ₹ 2.67 கோடி தவிர்த்திருக்கக்கூடிய செலவு ஏற்பட்டது.

(பத்தி 3.2.3)

இந்திய தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையத்தின் உரிய அனுமதியை பெறாமல் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் (TWAD வாரியம்) குழாய்கள் அமைத்ததனால் ₹ 2.42 கோடி தவிர்த்திருக்கக்கூடிய செலவினம் ஏற்பட்டது.

(பத்தி 3.2.4)

அடிப்படை வசதிகள் இல்லாமை, பொதுப்பணித் துறையிடமிருந்து நியாய வாடகை சான்றிதழ் பெறாமை ஆகிய காரணங்களால், ₹ 1.35 கோடி செலவில் கட்டப்பட்ட உணவகங்கள் மற்றும் பொது அறைகள் செங்கல்பட்டில் உள்ள செங்கல்பட்டு மருத்துவ கல்லூரியில் ஆறு ஆண்டுகளுக்கு மேலாகவும், சேலத்தில் உள்ள மோகன் குமாரமங்கலம் மருத்துவ கல்லூரியில் இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகவும் பயன்படுத்தப்படாமல் இருந்தன.

(பத்தி 3.2.5)

பணிபுரியும் பெண்களுக்கான விடுதி கட்டும் திட்டத்தை முடிக்க தொடர் முயற்சி இல்லாததால் ₹ 1.05 கோடி தவிர்த்திருக்கக்கூடிய செலவும் ₹ 2.48 கோடி அளவிலான மத்திய நிதியுதவி தொகை வங்கி கணக்கில் முடக்கமும் ஏற்பட்டன. ஒப்புதல் அளிக்கப்பட்டு 10 ஆண்டுகள் கடந்த பின்னரும் திட்டத்தின் நோக்கம் நிறைவேறாததால், திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு ₹ 20.54 கோடி உயர்ந்தது.

(பத்தி 3.2.6)

பொது நூலகங்களின் இயக்குநர் கணினி அமைப்புகள் மற்றும் மின்னணு சாதனங்களுக்கான ₹ 5.12 கோடி ஆண்டு பராமரிப்பு ஒப்பந்தத்தை முறையற்ற வகையில் வழங்கியது மற்றும் ஒப்பந்த மேலாண்மையில் உரிய கவனம் இல்லாதது ஆகியவை காரணமாக ₹ 0.85 கோடி தவிர்த்திருக்கக்கூடிய செலவு ஏற்பட்டது.

(பத்தி 3.2.7)

பொருந்தக்கூடிய சட்டத்தொகுப்பு நிபந்தனைகளுக்கு இணங்காதது மற்றும் நிதி ஒழுங்கு முறைமையிலிருந்து விலகல்கள் ஆகியவற்றால் மாநிலத்திலுள்ள பெண் பயனாளர்களுக்கு விலையில்லா மின்விசிறிகள், மிக்ஸி மற்றும் கிரைண்டர்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் அரசுக்கு ₹ 124.43 கோடி இழப்பு ஏற்பட்டது.

(பத்தி 3.3.1)

தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம், திட்ட வழிகாட்டு நெறிகள் மற்றும் உச்ச நீதிமன்ற உத்தரவுகளை மீறி, உடலுழைப்பு தொழிலாளர்கள் பொது நல நிதியிலிருந்து ₹ 44.24 கோடி தொகையை அரசு அலுவலகங்களுக்கு கட்டடங்கள் கட்ட பயன் மாற்றம் செய்தது.

(பத்தி 3.3.2)

குத்தகை வாடகையை திருத்தியமைப்பதிலும் தீர்மானிப்பதிலும் ஏற்பட்ட இயல்பு மீறிய தாமதம் காரணமாக அது திருத்தப்படாமையால், ₹ 4.10 கோடி வருவாய் வசூலிக்கப்படவில்லை.

(பத்தி 3.3.3)

தேவைப்படும் அளவில் மக்கும் கழிவுகள் இல்லாமையால், திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள திருத்தணி நகராட்சியில் ₹ 89.75 கோடி செலவில் உயிரி எரிவாயு மற்றும் மின் உற்பத்தி ஆலையை அமைத்ததன் நோக்கம் நிறைவேறவில்லை.

(பத்தி 3.3.4)

முறையற்ற திட்டமிடல் மற்றும் பன்னாட்டு ஹாக்கி கூட்டமைப்பின் தரநிலைகளை பின்பற்றாமை காரணமாக, ₹ 3.24 கோடி செலவில் உருவாக்கப்பட்ட செயற்கை ஹாக்கி விளையாட்டு புல்தரை பயன்படுத்தப்படவில்லை.

(பத்தி 3.3.5)

சொத்து வரி தவறாக மதிப்பிடப்பட்டதால் ₹ 40.02 இலட்சம் வருவாய் இழப்பும் ₹ 67.51 இலட்சம் குறைவான வரிவிதிப்பும் ஏற்பட்டன.

(பத்தி 3.4.1)

1.8 பரிந்துரைகள்

சிறந்த ஆட்சிமுறையையும் பொதுவாக துறைத் திட்டங்களின் செயலாக்கத்தின் மீது சிறந்த கண்காணிப்பையும் மேம்பாடு அடையச் செய்ய உதவும் நிர்ணயிக்கப்பட்ட உள்செயல்முறை மற்றும் ஒழுங்கு முறைகளை கடைபிடிக்காமை தொடர்பான உள்ளிட்ட பல விஷயங்கள் மீது குறிப்பிட்ட பரிந்துரைகளை இவ்வறிக்கை கொண்டுள்ளது. இப்பரிந்துரைகளை கணக்கில் எடுத்துக்கொண்டு செயல்படுமாறும் குறிப்பிட்ட காலவரையறைக்குள் தகுந்த நடவடிக்கை எடுப்பதை உறுதி செய்யுமாறும் மாநில அரசிடம் எடுத்துச் சொல்லப்படுகிறது.

1.9 தணிக்கை அறிக்கைகள் மீதான தொடர் நடவடிக்கை

தணிக்கை அறிக்கையில் உள்ளடங்கிய தணிக்கை பத்திகளுக்கான விளக்க குறிப்புகளை தணிக்கை அறிக்கை சட்டசபையில் வைக்கப்பட்ட நாளிலிருந்து இரண்டு மாதங்களுக்குள் அரசு துறைகள் சமர்ப்பிக்க வேண்டும் என சட்டசபைக்கான பொதுக் கணக்குக் குழு காலவரையறை நிர்ணயித்துள்ளது. இந்த விளக்க குறிப்பில் சரிசெய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் எடுக்கப்போகும் நடவடிக்கைகளை குறிப்பிட வேண்டும்.

31 டிசம்பர் 2018ல் உள்ளவாறு பத்திகள்/செயலாக்கத் தணிக்கைகளுக்கான நிலுவையிலுள்ள விளக்கக் குறிப்புகள் **அட்டவணை 1.2**ல் கொடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 1.2 : பத்திகள்/செயலாக்கத் தணிக்கைகளுக்கான விளக்கக் குறிப்புகள் பெறப்படாமை

பத்திகள்/செயலாக்கத் தணிக்கைகளுக்கு வரவேண்டிய விளக்கக்குறிப்புகளின் எண்ணிக்கை பற்றிய விவரங்கள்	தணிக்கை அறிக்கை			
	2013-14 வரை	**2014-15**	**2015-16**	**2016-17**
பொது மற்றும் சமூகப் பிரிவு	52	16	31	11
உள்ளாட்சி அமைப்புகள்	101	12	18	9

மேலும், பொதுக் கணக்குக் குழுவின் பரிந்துரைகள் மீது அரசு துறைகள் நடவடிக்கை எடுத்ததற்கான அறிக்கைகள் (Action Taken Notes - (ATNs)) சமர்ப்பிக்க வேண்டும். டிசம்பர் 2018ல் உள்ளவாறு, 1973-74 முதல் 2010-11 வரையிலான குடிமைத் துறைகள், மாநில நிதிநிலை, பொது மற்றும் சமூகப் பிரிவு மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் ஆகிய தணிக்கை அறிக்கைகளின் மீது பொதுக் கணக்குக் குழுவால் வழங்கப்பட்ட 1,656 பரிந்துரைகளுக்கு ATNகளை துறைகள் அளிக்கவில்லை.

அத்தியாயம் II

செயலாக்கத் தணிக்கை

அத்தியாயம் II

செயலாக்க தணிக்கைகள்

இந்த அத்தியாயம், (i) தமிழ்நாட்டில் சாலை பாதுகாப்பு அமைப்பு, (ii) இந்திய மருத்துவ முறைகள் மூலம் நல்வாழ்வு வசதிகள் மற்றும் மருத்துவ கல்வி அளிப்பது, (iii) நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாடுகளின் கணினிமயமாக்கம் மற்றும் (iv) சென்னை பெருநகர பகுதியில் திட்ட அனுமதி மற்றும் கட்டட உரிமம் ஆகியவற்றுக்கான வளர்ச்சி விதிகளை பின்பற்றுதல் ஆகியவற்றின் மீதான நான்கு செயலாக்க தணிக்கைகள் மூலம் கண்டறியப்பட்ட குறிப்புகளைக் கொண்டுள்ளது.

மக்கள் நல்வாழ்வு & குடும்ப நலன், நெடுஞ்சாலைகள் & சிறு துறைமுகங்கள் மற்றும் உள், மதுவிலக்கு & ஆயத்தீர்வை துறைகள்

2.1 தமிழ்நாட்டில் சாலை பாதுகாப்பு அமைப்பு

செயலாக்க சுருக்கம்

கடந்த ஐந்து ஆண்டுகளில், சாலை விபத்துகளின் எண்ணிக்கையில் தமிழகம், இந்திய அளவில் முதல் இடத்திலும், சாலை விபத்தினலான உயிரிழப்புகளில் இரண்டாவது இடத்திலும் இருந்தது. வாகன எண்ணிக்கை மற்றும் சாலைகளின் நீளம் ஆகியவற்றுடன் ஒப்பிட்ட விகிதாச்சார அடிப்படையில் நோக்கினால், சாலை விபத்துகளின் எண்ணிக்கையில் மாநிலத்தின் செயல்பாடு வறிதாக இருந்தது. சாலை பாதுகாப்பு கொள்கையை வகுப்பதிலும் சாலை பாதுகாப்புக்கான ஒரு நிறுவன கட்டமைப்பை ஏற்படுத்தும் முயற்சியிலும் மாநிலம் முதலாவதாக இருந்தபோதிலும், விதிக்கப்பட்ட இலக்குகள் முழுவதுமாக எய்தப்படவில்லை. வாகன எண்ணிக்கை மற்றும் சாலைகளின் நீளம் ஆகியவற்றுடன் ஒப்பிட்ட விகிதாச்சார அடிப்படையிலான சாலை விபத்துகளின் எண்ணிக்கையில் சிறிது சரிவு இருந்தபோதிலும், சாலை விபத்துகள் எண்ணிக்கை உயர்ந்து கொண்டே வந்தது.

சாலை பாதுகாப்பு அமைப்பு மீதான செயலாக்க தணிக்கை, திட்டமிடல், அமலாக்கம் மற்றும் அவசரகால ஆதரவு ஆகியவற்றில் இருந்த குறைபாடுகளை பின்வருமாறு வெளிக்காட்டியது:

- *முறையான சோதனை தடங்கள் (Test track) இல்லாமையும் விண்ணப்பதாரர்களை சோதிப்பதில் இருந்த வறிதான தரமும், சாலைகளில் வாகன ஓட்டிகளின் தரத்தை குறைத்து, சாலை பயனாளர்களை ஆபத்துக்கு உட்படுத்தின. போதிய அளவில் இல்லாத ஓட்டுநர் உரிமத்திற்கான சோதனை மற்றும் அறியாமை ஆகியவற்றுடன், போக்குவரத்து விதிமீறல்களும் சேர்ந்ததால் ஓட்டுநரின் தவறுகள் 77 விழுக்காடு விபத்துகளுக்கு காரணமாயின.*
- *தணிக்கைக்கான மாதிரி மாவட்டங்களில், உயிரிழப்பையும் சேர்த்து விபத்து பற்றிய விவரங்கள் 33 விழுக்காடு அளவிற்கு குறைந்து பதிவு செய்யப்பட்டதால், விபத்துகள் பற்றிய விவரங்கள் முழுமையற்று இருந்தன.*

- *ஓட்டுநர் உரிமம் இன்றி மோட்டார் வாகனங்களை ஓட்டுவதற்கு வழக்கு தொடராமை, மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டுவதற்காக ஓட்டுநர் உரிமத்தை தற்காலிகமாக இரத்து செய்ய தவறியமை, போக்குவரத்து விதிகளை மீறுவதற்கான அபராத விகிதங்களை 18 ஆண்டுகளாகியும் மாற்றியமைக்காமை மற்றும் ஸ்மார்ட் கார்டு (smart card) ஓட்டுநர் உரிமங்கள் இல்லாத நிலையில், தொடர் குற்றம் செய்வோரை அடையாளம் காண ஒரு முறைமை இல்லாமை ஆகிய காரணங்களால் விதி அமலாக்கம் பலன் தரத்தக்க வகையில் இல்லை.*
- *சென்னை மாநகரில் போக்குவரத்து மேலாண்மையை மேம்படுத்தும் பொருட்டு மிகுந்த எதிர்பார்ப்புடன் உருவாக்கப்பட்ட ஒருங்கிணைந்த போக்குவரத்து மேலாண்மை முறைமையில் இருந்த வறிதான ஒப்பந்த மேலாண்மை காரணமாக அத்திட்டத்தை கைவிட நேர்ந்து, அதனால் ₹ 72 கோடி செலுத்த வேண்டிய பொறுப்பும் திட்டத்தின் நோக்கங்கள் நிறைவேறாத நிலையும் ஏற்பட்டன.*
- *சாலைகளின் பராமரிப்பில் விதிக்கப்பட்ட தர அளவுகளை பின்பற்றாமை, சாலை பாதுகாப்பு தணிக்கைகளை நடத்துவதில் குறைவுகள் மற்றும் அடிக்கடி விபத்து நடக்கும் பகுதிகளை (black spots) சரிசெய்வதில் தவறுகள் ஆகியவற்றால் சாலை பொறியியல் பிரச்சினைகள் ஏற்பட்டு, அவையும் விபத்துகளுக்கு காரணமாயின.*
- *சாலை பாதுகாப்பு குழு மற்றும் மாவட்ட சாலை பாதுகாப்பு குழுவின் கூட்டங்களில் எடுக்கப்பட்ட முடிவுகளை அமல்படுத்துவதை உறுதி செய்ய தவறியதால், கண்காணிப்பு பலனுள்ளதாக இருக்கவில்லை.*

2.1.1 முன்னுரை

சாலை விபத்துகளின் எண்ணிக்கை, 2016 ஆண்டில் நாட்டில் ஆண்டொன்றுக்கு சுமார் ஐந்து இலட்சம் என்ற அளவிலும் தமிழ்நாட்டில் சுமார் 70,000 என்ற அளவிலும் இருந்தது. சாலை விபத்துகள், உயிரிழப்பு அல்லது குறைந்த வாழ்க்கை தரம் என்பதற்கு கூடுதலாக, உயிர் பிழைத்தோர் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு பொருளாதார மற்றும் மனோதத்துவ வகையிலான பின்விளைவுகளையும் ஏற்படுத்துகின்றன. நாட்டின் மக்கள் தொகையில் ஆறு விழுக்காட்டை உடைய தமிழ்நாட்டில், 2013-16 ஆண்டுகளில் நாட்டில் ஏற்பட்ட சாலை விபத்துகளில் 4 விழுக்காடு விபத்துகளும், சாலை விபத்துகளால் ஏற்பட்ட உயிரிழப்புகளில் 11 விழுக்காடு இழப்புகளும் ஏற்பட்டன. 2013-16 ஆண்டுகளில் அனைத்து இந்திய அளவில், தமிழ்நாட்டில் மிக அதிக எண்ணிக்கையிலான விபத்துகள் நிகழ்ந்து, உயிரிழப்பு எண்ணிக்கையில் உத்திர பிரதேச மாநிலத்திற்கு அடுத்த இரண்டாவது நிலையில் இருந்தது. விபத்துகள் தொடர்பான பிற கூறளவுகள் (parameters) கணக்கில், இந்த மாநிலம் **விளக்கப்படம் 2.1**ல் தரப்பட்டுள்ளவாறு வறிதான அளவில் இருந்தது.



(ஆதாரம்: சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகம், புது தில்லி - இந்தியாவில் சாலை விபத்துகள் மீதான அறிக்கை - 2016 மற்றும் 2017)

2.1.1.1 சாலை பாதுகாப்பு கொள்கை

தமிழ்நாடு சாலை பாதுகாப்பு கொள்கை, 2007, சாலை பாதுகாப்பு தொடர்பாக, கல்வி, பொறியியல் (சாலைகள் மற்றும் வாகனங்கள் இரண்டிற்குமானது), அமலாக்கம் மற்றும் அவசரகால ஆதரவு ஆகிய நான்கு கூறுகளை வலியுறுத்துகிறது. 2006 ஆண்டினை அடிப்படை ஆண்டாக கொண்டு, 2013 ஆண்டுக்குள் உயிரிழப்புகள் மற்றும் காயமடையும் நிகழ்வுகளில் 20 விழுக்காடு குறைத்தல் என்பது சாலை பாதுகாப்பு கொள்கையின் கீழ் வரும் இடைக்கால இலக்கு ஆகும். தமிழ்நாடு அரசு, சாலை பாதுகாப்பு கொள்கையை செயல்படுத்துவதற்கான நிறுவன கட்டமைப்பை பின்வரும் பத்திகளில் கூறப்பட்டவாறு உருவாக்கியது.

2.1.1.2 மாநில சாலை பாதுகாப்பு மன்றம்

மாநிலத்தின் சாலை போக்குவரத்தில் சாலை பாதுகாப்பை மேம்படுத்தும் நோக்கத்துடன் மோட்டார் வாகன சட்டம் 1988 பிரிவு 215ன் கீழ் அமைக்கப்பட்ட, போக்குவரத்து அமைச்சர் தலைமையிலான மாநில சாலை பாதுகாப்பு குழு (State Road Safety Council - SRSC) என்பது சாலை பாதுகாப்பு பற்றிய உயர்நிலை ஆலோசனை அமைப்பு ஆகும். வேறுபட்ட துறைகளின் பல்வேறு திட்டங்களை செயல்படுத்துவது பற்றிய சீராய்வு செய்து அரசுக்கு கொள்கை முயற்சிகள் பற்றி யோசனைகளை அளிப்பதற்கு இக்குழு பொறுப்பாகும்.

2.1.1.3 மாவட்ட சாலை பாதுகாப்பு குழு

தமிழ்நாடு அரசு, மாவட்ட ஆட்சியரின் தலைமையிலான மாவட்ட சாலை பாதுகாப்பு குழுவை (District Road Safety Committee - DRSC) ஒவ்வொரு மாவட்டத்திலும் ஏற்படுத்தியது; மாவட்டங்களில் சாலை பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான பல்வேறு நடவடிக்கைகளை எடுப்பது, விபத்துகள் அதிகம் நிகழும் பகுதிகள், சாலைகள் பராமரிப்பு, ஓட்டுநர் பயிற்சி, விபத்துகள் மீதான பகுப்பாய்வு, விளம்பர முயற்சிகள், போக்குவரத்துக்கான திட்டமிடல், நெடுஞ்சாலை ரோந்து, பயணிகளுக்கான வசதிகள், விபத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுதல் போன்றவற்றுக்கு சிறப்பு கவனம் அளித்து சாலை பாதுகாப்பு

திட்டங்களை உருவாக்குவது ஆகியன இக்குழுவின் பணிகள் ஆகும். சென்னை மாநகரில் சாலை பாதுகாப்பு தொடர்பான பல்வேறு பிரச்சினைகளை சென்னை மாநகர காவல் ஆணையர் தலைமையிலான சென்னை மாவட்டத்திற்கான DRSC தீர்க்கும். இக்குழுக்கள் மாதத்தில் ஒரு முறையாவது கூட வேண்டும்.

2.1.1.4 சாலை பாதுகாப்பு நிதி தொடர்பான துறையிடைக் குழு

மாநிலத்தில் சாலை பாதுகாப்பு நடவடிக்கைகளை செயல்படுத்தும் நோக்கத்துடன், தமிழ்நாடு அரசு சாலை பாதுகாப்பு நிதியை உருவாக்கியது (ஜூலை 2000). காவல் மற்றும் போக்குவரத்து துறைகளின் உடனடி அபராதம் மற்றும் கூட்டுக் கட்டண வசூலிப்புகள் மூலம் உருவாக்கப்பட்ட இந்த நிதியை, உள்துறை செயலாளரை தலைவராகவும், சாலை பாதுகாப்பு ஆணையரை உறுப்பினர்-செயலராகவும் மற்றும் ஒன்பது[1] உறுப்பினர்களையும் கொண்ட ஒரு துறையிடைக் குழு (Inter Departmental Committee - IDC) நிர்வகிக்கிறது.

2.1.1.5 சட்டவகையிலான ஏற்பாடுகள்

அமலாக்கத்திற்கான சட்டம் மற்றும் முறைப்படுத்தும் கட்டமைப்பினை மோட்டார் வாகன சட்டம் 1988 மற்றும் தமிழ்நாடு மோட்டார் வாகன விதிகள் 1989 அளிக்கின்றன.

சாலை பாதுகாப்பில் தொடர்புடைய துறைகள் மற்றும் சாலை பயனாளர்களுக்கு தேவையான சாலை பாதுகாப்பு தொடர்பான தரநிலைகள், முறைகள் மற்றும் பொறிமுறைகள் ஆகியவற்றை இந்திய சாலைகள் அமைப்பு (IRC) உருவாக்கியுள்ளது.

மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின் நல்ல தயாளுகுண வழிகாட்டு நெறிகளும் மற்றும் சாலை பாதுகாப்பு மீதான உச்ச நீதிமன்ற குழுவின் உத்தரவுகளும் இந்தியாவில் சாலை பாதுகாப்பு கொள்கைகள் மற்றும் வழிமுறைகளின் ஒரு பகுதி ஆகும்.

2.1.2 நிர்வாக அமைப்பு

அலுவல்ரீதியாக சாலை பாதுகாப்பு ஆணையராக உள்ள போக்குவரத்து ஆணையர், மாநிலத்தில் சாலை பாதுகாப்பு நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கிறார். போக்குவரத்துக்கான திட்டமிடல் என்பது சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் மற்றும் மாவட்டங்களில் உள்ளூர் திட்ட அதிகார அமைப்புகளின் பொறுப்பாகும். நெடுஞ்சாலைகள் துறையும் நகர்ப்புற மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகள் சாலைகளை அமைத்து பராமரிக்கின்றன. காவல் துறையின் போக்குவரத்து திட்டமிடல் மற்றும் அமலாக்க பணிகளுக்கு காவல் துறை தலைமை இயக்குனர் தலைமை ஏற்கிறார். அலுவல்ரீதியாக விபத்து சிகிச்சை ஆணையராக உள்ள மாநில நல்வாழ்வு சங்கத்தின் திட்ட இயக்குனர், விபத்துக்குள்ளானவர்களுக்கான விபத்து சிகிச்சை பணிகளை ஒருங்கிணைக்கிறார். நிர்வாக வரைபடம் **காட்சிப்படம் 2.1**ல் தரப்பட்டுள்ளது.

[1] காவல் துறை தலைவர் (சட்டம் & ஒழுங்கு), காவல் ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் உறுப்பினர்-செயலர், தலைமை பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலைகள்), தலைமை பொறியாளர் (நெடுஞ்சாலைகள் & ஊரக சாலைகள்), சென்னை மாநகர போக்குவரத்து கழகத்தின் மேலாண்மை இயக்குனர், மாநில விரைவு போக்குவரத்து கழகத்தின் மேலாண்மை இயக்குனர் மற்றும் நிதித்துறை செயலாளர்.

காட்சிப்படம் 2.1: நிர்வாக வரைபடம்



2.1.3 தணிக்கையின் நோக்கங்கள்

தணிக்கையின் நோக்கங்கள்,

- கல்வி, அவசரகால ஆதரவு, அமலாக்கம் மற்றும் பொறியியல் தொடர்புடைய சாலை பாதுகாப்பு நடவடிக்கைகளை அமல்படுத்துவதற்கும் தமிழ்நாட்டின் சாலை பாதுகாப்பு கொள்கையின் நோக்கங்களை அடைவதற்கும் ஆன திட்டமிடல் முழுமையானதாக இருந்ததா;
- சாலை பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக திட்டமிடப்பட்ட முயற்சிகள் நடப்பிலிருந்த சட்டங்கள் மற்றும் விதிகள் மற்றும் தமிழ்நாடு சாலை பாதுகாப்பு கொள்கை, 2007 ஆகியவற்றுக்கு ஏற்ப செயல்படுத்தப்பட்டனவா;
- சாலை பாதுகாப்பு நடவடிக்கைளின் கீழ் திட்டங்களை செயல்படுத்துவதற்காக போதிய நிதி ஒதுக்கப்பட்டு விடுவிக்கப்பட்டதா மற்றும் அவ்வாறு ஒதுக்கப்பட்ட நிதி கூறப்பட்ட நோக்கங்களுக்கேற்ப பயன்படுத்தப்பட்டதா; மற்றும்
- சாலை விபத்துகளில் உயிரிழப்புகளையும் காயமுறுவதையும் குறைத்தல் என்ற சாலை பாதுகாப்பு நோக்கத்தை அடைவது மற்றும் பல்வேறு நிலைகளில் சாலை பாதுகாப்பை உறுதி செய்வது என்ற வகைகளில் கண்காணிப்பு பலனுள்ளதாக இருந்ததா

என்பனவற்றை மதிப்பிடுவதாக இருந்தன.

2.1.4 தணிக்கையின் அளவுகோல்கள்

தணிக்கையில் கண்டறியப்பட்டவை பின்வருவனவற்றில் கூறப்பட்ட அளவுகோல்களுடன் ஒப்பிடப்பட்டன:

- மோட்டார் வாகன சட்டம் 1988, மத்திய மோட்டார் வாகன விதிகள் 1989 மற்றும் தமிழ்நாடு மோட்டார் வாகன விதிகள் 1989;
- 2007ல் வகுக்கப்பட்ட தமிழ்நாடு அரசின் சாலை பாதுகாப்பு கொள்கை;
- சாலை பொறியியல் தொடர்பாக இந்திய சாலைகள் அமைப்பு (IRC) விதித்த அளவீடுகள்;

- விதி தொகுப்புகள் மற்றும் தகுதியுள்ள அலுவலர்களின் ஆணைகள், சுற்றறிக்கைகள் மற்றும் அறிவுறுத்தல்கள்;
- தமிழ்நாடு சாலை பாதுகாப்பு நிதி விதிகள், 2000 மற்றும்
- தமிழ்நாடு மோட்டார் வாகன வரிவிதிப்பு சட்டம் 1974

2.1.5 தணிக்கையின் பரப்பு மற்றும் முறைமை

நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, நெடுஞ்சாலைகள் & சிறு துறைமுகங்கள் துறை மற்றும் உள், மதுவிலக்கு & ஆயத்தீர்வை துறை ஆகியவற்றிலும், 32 மாவட்டங்களுள் நான்கு மாதிரி மாவட்டங்களில்[2] உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட கள அலுவலகங்களிலும் (**இணைப்பு 2.1**) 2013-18 காலகட்டத்தில் மேற்கொண்ட சாலை பாதுகாப்பு தொடர்பான நடவடிக்கைகள் மீதான செயலாக்க தணிக்கை மார்ச் 2018 முதல் ஆகஸ்ட் 2018 வரை நடத்தப்பட்டது. தணிக்கைக்கான நுழைவு கலந்தாய்வு கூட்டம், தொடர்புடைய துறைகளுடன் 27 ஜூன் 2018 அன்று நடத்தப்பட்டு, அதில் தணிக்கையின் நோக்கங்கள், பரப்பு மற்றும் முறைமை ஆகியன விவாதிக்கப்பட்டன. தணிக்கையில் கண்டறியப்பட்டவை உள்துறை செயலாளருடன் 11 டிசம்பர் 2018 அன்று நடத்தப்பட்ட ஒரு நிறைவு கலந்தாய்வு கூட்டத்தில் விவாதிக்கப்பட்டன. தமிழ்நாடு அரசு ஒரு விரிவான பதிலை 10 டிசம்பர் 2018 அன்று அளித்தது. அரசின் பதிலும் நிறைவு கூட்டத்தில் தெரிவித்தவையும் இவ்வறிக்கையை இறுதி செய்வதில் உரிய வகையில் கவனத்தில் கொள்ளப்பட்டன.

தணிக்கைக்கு உட்பட்ட அலுவலகங்களின் பதிவுருக்களிலிருந்து எடுக்கப்பட்ட தகவல்கள், அவை அளித்த தகவல்கள் மற்றும் கணினி தகவல்தளத்திலிருந்து எடுக்கப்பட்ட தகவல்கள் ஆகியவற்றை ஆராய்வது என்பதும் தணிக்கையின் முறைமைக்குள் அடங்கும். மாதிரி மாவட்டங்களில், பல்வேறு சாலைகள், ஓட்டுநர் பயிற்சி பள்ளிகள், ஓட்டுநரின் திறமையை சோதிக்க பயன்படும் தடங்கள் மற்றும் அவசர சிகிச்சை வசதி கொண்ட மருத்துவமனைகள் ஆகியவற்றை தணிக்கை குழுவினர் துறை அலுவலர்களுடன் சேர்ந்து கூட்டுக் கள ஆய்வு நேரிடையாக சரிபார்த்தனர்.

காட்சிப்படம் 2.2 : தமிழ்நாட்டின் மாவட்ட வரைபடம்



மாதிரிகளை தேர்ந்தெடுக்கும் முறை

மாநிலத்தில் உள்ள முப்பத்தி ரெண்டு மாவட்டங்களுள் நான்கு மாவட்டங்கள் அதாவது சென்னை, கோயம்புத்தூர், கடலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள் (**காட்சிப்படம் 2.2**) தகவல் பகுப்பாய்வு முறையை பயன்படுத்தி தேர்ந்தெடுக்கப்பட்டன. மாதிரி தேர்வு செயல்முறை **இணைப்பு 2.2**ல் கொடுக்கப்பட்டுள்ளது.

---

2 சென்னை, கோயம்புத்தூர், கடலூர் மற்றும் புதுக்கோட்டை.

தணிக்கையில் கண்டறியப்பட்டவை

2.1.6 சாலை பாதுகாப்பு திட்டங்களின் விளைவுகள்

சாலை விபத்துகள் பற்றிய தகவல் தரவுகள் சாலை பாதுகாப்பு திட்டங்களின் விளைவுகள் குறித்த ஒரு குறியீடு ஆகும். சாலை பாதுகாப்பு கொள்கை, விபத்துகள் பற்றிய தரவுகளை சேகரிக்கும் முறையை மேம்படுத்துதல் மற்றும் வாகனங்கள், ஓட்டுநர்கள், சாலைகளின் நிலைகள், சுமையின் அழுத்தம், மோதல்கள் போன்றவை தொடர்பான தரவுகளை கணினிமயமாக்கி மையப்படுத்துதல் பற்றிய கொள்கையை பின்பற்றுதல் என்பனவற்றையும் வலியுறுத்துகிறது.

சாலை பாதுகாப்பு கொள்கை 2007ன் நோக்கங்களுள், 2006ஐ அடிப்படை ஆண்டாக கொண்டு 2013 ஆண்டிற்குள் சாலை விபத்துகளை 20 விழுக்காடு குறைக்க வேண்டும் என்பதும் ஒன்றாகும். 2015ஐ அடிப்படை ஆண்டாக கொண்டு 2020 ஆண்டிற்குள் சாலை விபத்துகளை 50 விழுக்காடு குறைப்பது என்ற இலக்கை அடையும் வகையில், சாலை விபத்துகளை 2017, 2018 மற்றும் 2019 ஆண்டுகளில் முறையே 15, 17 மற்றும் 18 விழுக்காடு என படிப்படியாக குறைப்பது என்ற செயல் திட்டத்தை தமிழ்நாடு அரசு சாலை பாதுகாப்பு மீதான உச்ச நீதிமன்ற குழுவுக்கு தெரிவித்தது (ஏப்ரல் 2017). 2006 ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2017ல் சாலை விபத்துகள் (19 விழுக்காடு), உயிரிழப்புகள் (47 விழுக்காடு) மற்றும் விபத்தின் தீவிரத்தன்மை[3] (5 விழுக்காடு) ஆகியவற்றில் இருந்த எண்ணிக்கை உயர்வு, மாநிலத்தில் சாலை பாதுகாப்பு பற்றிய கவலைக்குரிய நிலையை காட்டுகிறது.

2.1.6.1 சாலை விபத்துகளை குறைப்பதற்கான இலக்கு அடையப்படாமை

ஐக்கிய நாடுகள் சபை வகுத்த நிலையான வளர்ச்சி இலக்குகள் (Sustainable Development Goals - SDG) 2015ஐ அடிப்படை ஆண்டாக கொண்டு 2020 ஆண்டிற்குள் சாலை விபத்துகளால் ஏற்படும் உயிரிழப்புகளை 50 விழுக்காடு குறைப்பது என்ற இலக்கை உடையதாகும். சாலை பாதுகாப்பு கொள்கை 2007, 2006ஐ அடிப்படை ஆண்டாக கொண்டு 2013 ஆண்டிற்குள் சாலை விபத்துகளையும் உயிரிழப்புகளையும் 20 விழுக்காடு குறைக்க வேண்டும் என்ற இலக்கை கொண்டதாகும். எனினும், உள்ளபடியே சாலை விபத்துகளின் எண்ணிக்கை உயர்ந்தது என்பது காணப்பட்டது; ஆனால், வாகனங்களின் எண்ணிக்கை மற்றும் சாலைகளின் நீளம் என்பவற்றுடனான விகிதாச்சார அடிப்படையிலான ஒப்பீடு, விபத்துகளின் எண்ணிக்கை மிக சிறிய அளவில் குறைந்தது (**அட்டவணை 2.1** மற்றும் **விளக்கப்படம் 2.2**) என்பதை காட்டியது.

அட்டவணை 2.1: மாநிலத்தில் சாலை விபத்துகள் மற்றும் உயிரிழப்புகளின் எண்ணிக்கை

2006			2013க்கான இலக்கு		2017ல் உள்ளபடியானது			2006உடன் ஒப்பிட்ட உயர்வு			இலக்குடன் ஒப்பிட்ட உயர்வு	
எண்ணிக்கை	உயிர் இழப்பு	விபத்தின் தீவிரத் தன்மை (விழுக்காட்டில்)	எண்ணிக்கை	உயிர் இழப்பு	எண்ணிக்கை	உயிர் இழப்பு	விபத்தின் தீவிரத் தன்மை (விழுக்காட்டில்)	எண்ணிக்கை	உயிர் இழப்பு	விபத்தின் தீவிரத் தன்மை (விழுக்காட்டில்)	எண்ணிக்கை	உயிர் இழப்பு
55,145	11,009	*20*	44,120	8,800	65,562	16,157	*25*	10,417 *(19)*	5,148 *(47)*	5	21,442 *(49)*	7,347 *(84)*

(அடைப்புகுறிகளுக்குள் உள்ள இலக்கங்கள் விழுக்காட்டைக் குறிக்கும்);
(ஆதாரம்: மாநில குற்ற ஆவண காப்பக தரவுகள்)

[3] சாலை போக்குவரத்து விபத்துகளின் எண்ணிக்கையில் உயிரிழப்புகளின் விழுக்காடு என்பது விபத்தின் தீவிரத்தன்மை எனப்படும்.

விளக்கப்படம் 2.2: வாகன எண்ணிக்கை மற்றும் சாலை நீளம் ஆகியவற்றின் விகிதமாக சாலை விபத்துகள்



(ஆதாரம்: சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகம், புது தில்லி - இந்தியாவில் சாலை விபத்துகள் மீதான அறிக்கை - 2016 மற்றும் 2017)

அட்டவணை 2.1 மற்றும் **விளக்கப்படம் 2.2**ல் கண்டபடி, சாலை பாதுகாப்பு கொள்கையில் கூறப்பட்ட இலக்கு அடையப்படவில்லை என்பதோடு, விபத்துகள் மற்றும் உயிரிழப்புகளின் உள்ளபடியான எண்ணிக்கை உயர்ந்தது; சாலை பாதுகாப்பு நடவடிக்கைகளை செயல்படுத்துவதில் குறைபாடுகள் உள்ளதை இது சுட்டிக்காட்டியது. கடந்த கால செயல்பாட்டை கணக்கில் கொண்டால், 2020 ஆண்டுக்கு நிர்ணயிக்கப்பட்ட SDG இலக்குகளை அடைவதிலும் தவறுகள் ஏற்படக்கூடும் என்பதை தணிக்கை கண்டறிந்தது. தமிழ்நாடு அரசு, 2017க்கு தொடர்புடைய உயிர் இழப்புகளின் தரவுகளை ஒப்புக்கொண்டு (டிசம்பர் 2018), ஜனவரி முதல் அக்டோபர் 2018 வரையில் 10,378 உயிரிழப்புக்களே ஏற்பட்டுள்ளது என்பது உயிரிழப்புகளின் எண்ணிக்கை குறைந்து வருவதை சுட்டிக்காட்டுகிறது என தெரிவித்தது. 2018ன் பகுதியாண்டின் தரவுகளை 2017 முழு ஆண்டின் தரவுகளுடன் ஒப்பிட முடியாது என்பதால் இம்மறுமொழி ஏற்கத்தக்கதல்ல.

2.1.6.2 விபத்துகள் பற்றிய தரவுகள்

(அ) காரணவாரியான விபத்துகள்

தவறாக ஒட்டுதல், அதி வேகமாக ஓட்டுதல், மது அருந்திவிட்டு ஓட்டுதல், வாகன குறைபாடு, விலங்குகள் குறுக்கே வருதல், சாலை உட்கட்டமைப்பின் குறைபாடு, வாகனப் பாதையில் வாகனங்களை நிறுத்தி வைத்தல், மோசமான வானிலை, பாதசாரிகள் குறுக்கே வருதல், பயணியரின் தவறுகள் மற்றும் பிற சூழ்நிலைகள் ஆகியன நாட்டில் ஏற்படும் விபத்துகளுக்கான காரணங்கள் ஆகும் (**வரைபடம் 2.3**).

வரைபடம் 2.3: சாலைவிபத்துகள் காரணம் வாரியாக விழுக்காட்டில்



(ஆதாரம்: சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகம்)

தணிக்கை தொகுத்த, 2013-18 காலகட்டத்தில் நடந்த உயிரிழப்பு மற்றும் பெரும்/சிறு அளவில் காயம் ஏற்படுத்திய விபத்துகள் பற்றிய விவரங்கள் **அட்டவணை 2.2**ல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 2.2: தமிழ்நாட்டில் காரணவாரியான விபத்துகள்

காரண வகை	உயிரிழப்பு		பெரும் காயம்		சிறு காயம்		காயமற்றவை	மொத்தம்	விழுக்காடு
	விபத்துகளின் எண்ணிக்கை	உயிரிழந்தோர் எண்ணிக்கை	விபத்துகளின் எண்ணிக்கை	நபர்களின் எண்ணிக்கை	விபத்துகளின் எண்ணிக்கை	நபர்களின் எண்ணிக்கை	விபத்துகளின் எண்ணிக்கை	விபத்துகளின் எண்ணிக்கை	
தவறாக ஓட்டுதல்	718	840	637	559	1,800	3,904	126	3,281	77.11
அதிவேகமாக ஓட்டுதல்	53,777	59,542	41,176	39,963	1,49,766	2,66,919	6,852	2,51,571	
மது அருந்திவிட்டு ஓட்டுதல்	106	130	82	48	171	405	26	385	0.12
வாகன குறைபாடுகள்	60	79	54	55	148	426	86	348	0.11
சாலை உட்கட்டமைப்பு இன்மை#	122	138	88	75	238	441	21	469	0.14
வாகன பாதையில் வாகனங்களை நிறுத்தி வைத்தல்	43	53	35	27	128	269	23	229	0.07
பிற காரணங்கள்@	13,965	15,094	16,445	16,404	41,167	69,172	2,645	74,222	22.45
மொத்தம்	**68,791**	**75,876**	**58,517**	**57,131**	**1,93,418**	**3,41,536**	**9,779**	**3,30,505**	**100.00**

* போக்குவரத்து கட்டுப்பாடுகளை மதியாமல் வேகமாக ஓட்டுதல், சைகை காட்ட தவறுதல், கடந்து செல்ல வழி அளிக்க தவறுதல், பாதுகாப்பற்ற வகையில் தடம் மாறுதல், குறைபாடுடைய ஓட்டுதல், அதிக சுமை ஏற்றுதல், திடீரென நிறுத்துதல், பின்தொடர்வது மற்றும் ஓட்டும்போது செல்பேசியில் பேசுதல் ஆகியனவும் இதில் அடங்கும்.

\# சாலையின் நிலைமையில் குறைபாடு, ஆட்சி அமைப்புகளின் தவறுகள் மற்றும் போதிய வெளிச்சம் இன்மை.

@ மோசமான வானிலை, காரணம் அறியப்படாமை, பாறைகள் விழுதல், மிதிவண்டி ஓட்டுநரின் தவறு, தெரியாதது அல்லது பதியப்படாதது.

(ஆதாரம்: சாலை விபத்து தரவு மேலாண்மை அமைப்பிலிருந்து (RADMS) தொகுக்கப்பட்ட விவரங்கள்)

மாநிலத்தில் 2013-18 காலகட்டத்தில் நிகழ்ந்த விபத்துகளில் 77 விழுக்காடு 'எச்சரிக்கையற்ற/தவறாக' ஓட்டுதல் காரணமாக நிகழ்ந்தவை என கூறப்பட்டது. எச்சரிக்கையற்ற/தவறாக ஓட்டுதல் காரணமாக விபத்து நிகழ்ந்ததாக கூறப்பட்ட மாதிரியாக தேர்ந்தெடுக்கப்பட்ட காவல் நிலையங்களில் 265[4] முதல் தகவல் அறிக்கைகள் (FIR) அனைத்தையும் தணிக்கை சீராய்வு செய்தது; அவற்றுள், 149 விபத்துகள் எச்சரிக்கையற்ற/தவறாக ஓட்டுதல் என்ற காரணம் அல்லாது, (i) பாதசாரி தவறாக கடத்தல், (ii) விலங்கு குறுக்கே வருதல், (iii) பார்க்க இயலாத வளைவு, (iv) வாகன குறைபாடு, (v) பெரிய பள்ளத்தை தவிர்க்கும் முயற்சி ஆகிய வேறு காரணங்களினால் நிகழ்ந்தன என்பதை சீராய்வு காட்டியது. விபத்துகளுக்கு பதியப்பட்ட காரணங்கள் சரியானவை அல்ல என்பதை இது காட்டியது; எனவே, காரணத்தை எச்சரிக்கையற்ற/தவறாக ஓட்டுதல் என்பதன் கீழ் வகைப்படுத்தாமல் விபத்துக்கான காரணத்தை மேலும் துல்லியமாக பதிய வேண்டிய தேவை உள்ளது. இவ்வாறாக தவறாக பதிவது என்பது, சாலை பொறியியல் பணிகள் தேவைப்படும் நேர்வுகள் உட்பட தேவையான நடவடிக்கை எடுக்கப்படுவதை தடுக்கும்.

(ஆ) வாகனவாரியான விபத்துகள்

2013-18 காலகட்டத்தில் நிகழ்ந்த விபத்துகளை வாகன வகை கொண்டு வகைப்படுத்தியதில், **அட்டவணை 2.3**ல் கூறப்பட்டுள்ளவாறு, 45 விழுக்காடு விபத்துகள் மோட்டார் சைக்கிள்களாலும், அதற்கடுத்து 19 விழுக்காடு விபத்துகள் பாதசாரிகளாலும் நிகழ்ந்தன என்பதை காட்டியது. விபத்துகளை குறைப்பதற்கான

4 சென்னை: 146, கோயம்புத்தூர்: 55, கடலூர்: 42 மற்றும் புதுக்கோட்டை: 22.

முயற்சிகள் இரு சக்கர வாகன பயணிகள் மற்றும் பாதசாரிகளின் பாதுகாப்பில் கவனம் செலுத்த வேண்டும் என்பதை தரவுகள் காட்டுகின்றன.

அட்டவணை 2.3: வாகனவாரியாக விபத்துகள்

ஆண்டு	ஆட்டோ ரிக்ஷா	பஸ்	கார்/ஜீப்/ வேன்/டாக்ஸி	பெரும்பார வண்டி	டெம்போ/ ட்ராக்டர்	மோட்டார் சைக்கிள்	பாதசாரிகள்	மொத்தம்
2013-14	2,873	7,872	17,678	7,836	984	40,514	19,921	**97,678**
2014-15	3,164	7,342	16,448	7,647	892	43,010	18,475	**96,978**
2015-16	3,211	8,382	18,744	7,484	914	46,776	20,699	**1,06,210**
2016-17	2,940	7,184	18,047	6,885	875	47,980	19,215	**1,03,126**
2017-18	2,808	6,349	16,902	6,134	954	45,186	18,238	**96,571**
மொத்தம்	**14,996 *(3)***	**37,129 *(7)***	**87,819 *(18)***	**35,986 *(7)***	**4,619 *(1)***	**2,23,466 *(45)***	**96,548 *(19)***	**5,00,563**

அடைப்புகுறிகளுக்குள் உள்ள இலக்கங்கள் மொத்த விபத்துகளின் எண்ணிக்கையின் விழுக்காட்டைக் குறிக்கும்
(ஆதாரம்: RADMSலிருந்து தொகுக்கப்பட்ட விவரங்கள்)

(இ) விபத்து பற்றிய தரவுகளில் பிழைகள்

சாலை பாதுகாப்பு பிரச்சினைகளை தீர்ப்பதற்கு விபத்துகள் பற்றிய தரவுகள் இன்றியமையாதவை என்பதை தமிழ்நாடு அரசு ஏற்று, தனது சாலை பாதுகாப்பு கொள்கை 2007ல், தரவு சேகரிக்கும் முறையை மேம்படுத்தவும், வாகனங்கள், ஓட்டுநர்கள், சாலைகளின் நிலைமை, சுமையின் அழுத்தம், மோதல்கள் போன்றவை தொடர்பான தரவுகளை கணினிமயமாக்கி மையப்படுத்தவும் திட்டமிட்டது. வாகனங்கள் மற்றும் ஓட்டுநர்கள் தொடர்பான மையப்படுத்தப்பட்ட தரவை (பரிவாஹன்) இந்திய அரசின் சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறை பராமரிக்கிறது; சாலை விபத்துகள் பற்றிய தரவு காவல் துறையின் சாலை விபத்து தரவு மேலாண்மை அமைப்பில் (RADMS) சேகரிக்கப்படுகிறது. சாலை விபத்துகள் பற்றிய தரவுகளை கையாள்வதில் காவல் துறையின் தேவைகளுக்கேற்ப வடிவமைக்கப்பட்ட ஒரு திறனுள்ள அமைப்பாக RADMS திகழ்கிறது. இது, சாலை விபத்துக்களை குறைப்பதற்கான திட்டமிடுதல், நடைமுறைகளுக்கு, பலனுள்ள மேலாண்மை கருவியாக உள்ளது.

RADMSன் பயன்பாடு தன்மையை பாதிக்கக்கூடிய வகையில் அதிலிருந்த பின்வரும் தவறுகளை தணிக்கை கண்டது:

- விபத்துகளுக்கு பின் காவல் துறையினர் FIR பதிவு செய்கின்றனர். மாநில குற்ற ஆவண காப்பகத்தின் தகவல்தரவில் சேர்க்கப்படும் FIR விவரங்கள் RADMSல் மீண்டும் பதிவேற்றப்படுகின்றன. விபத்தில் தொடர்புடையோர் தம்மிடையே விபத்து பிரச்சினையை சுமூகமாக தீர்த்துக்கொண்டால், FIR பதியப்படாது என்பதை தணிக்கை கண்டது. அந்நேர்வுகளில், காவல் துறையினர் சமுதாய சேவை பதிவேட்டில்[5] (Community Service Register - CSR) பதிவுகள் செய்து அதன் நகலை, மூன்றாம் நபர் காப்பீடு கோரும் பொருட்டு விபத்தில் தொடர்புடையவர்களுக்கு வழங்குகின்றனர். அந்நேர்வுகளில் FIR பதியப்படமாட்டாது. மேலும், RADMS தகவல்தரவில் பதிவு செய்வதில் குறைவு இருந்தது என்பதையும் தணிக்கை கண்டது. 2013-18 காலகட்டத்தில், விவரங்கள் உள்ளீடு செய்வதில் விடுபடுதல்

---

[5] குற்றம் நடந்ததாக பொதுமக்கள் அளிக்கும் புகார்கள் அனைத்தும் CSRல் பதியப்படும். காவல் துறையினர் முதல் கட்ட விசாரணை நடத்தி, நடந்த குற்றம் நடவடிக்கை எடுக்கத்தக்க குற்றம் என தெரியவந்தால், FIR பதிவு செய்வர்.

இருந்ததன் காரணமாக RADMSல் 4,259 FIR சேர்க்கப்படவில்லை. இவ்வாறாக, CSRல் பதியப்பட்ட விபத்து விவரங்கள் RADMSல் சேர்க்கப்படாததாலும், RADMSல் FIR சேர்க்கப்படாததாலும், நிகழ்ந்த விபத்துகளின் எண்ணிக்கை சென்னை மாவட்டத்தில் 47 விழுக்காட்டு அளவிற்கும், பிற மூன்று மாதிரி மாவட்டங்களில் 3 முதல் 9 விழுக்காட்டு அளவிற்கும் குறைத்து காட்டப்பட்டது (**அட்டவணை 2.4**).

அட்டவணை 2.4: 2013-18ல் RADMSல் சேர்க்கப்படாத விபத்துகளின் விவரங்கள்

மாவட்டம்	CSRன்படி	FIRன்படி	விபத்துகளின் மொத்த எண்ணிக்கை	RADMSன்படி விபத்துகளின் மொத்த எண்ணிக்கை	RADMSல் குறைவாக காட்டப்பட்ட அளவு*
சென்னை	30,050	41,241	71,291	37,508	33,783 *(47.39)*
கோயம்புத்தூர்	948	12,221	13,169	12,193	976 *(7.41)*
கடலூர்	1,323	18,406	19,729	17,943	1,786 *(9.05)*
புதுக்கோட்டை	170	6,330	6,500	6,295	205 *(3.15)*
மொத்தம்	**32,491**	**78,198**	**1,10,689**	**73,939**	**36,750**

* அடைப்புகுறிகளுக்குள் உள்ள இலக்கம் விபத்துகளின் மொத்த எண்ணிக்கையுடன் ஒப்பிட்ட விழுக்காட்டைக் குறிக்கும்.

(ஆதாரம்: RADMS, மாநில போக்குவரத்து திட்டப் பிரிவு (STPC) மற்றும் CSRதரவுகள்)

➢ 2013-18 காலகட்டத்தில், மூன்று உயிரிழப்புகளைக்[6] கொண்ட மூன்று சாலை விபத்துகள் CSRல் உள்ளடக்கப்பட்டிருந்தது என்பதை 105 காவல் நிலையங்களுள் 45ல் செய்யப்பட்ட CSRன் மீதான கூராய்வு வெளிப்படுத்தியது. உயிரிழப்பு நேர்ந்த விபத்துகளில் கூட FIR பதிவு செய்யாதது மிகவும் கவலைக்குரிய ஒன்றாகும். இப்பொருள் குறித்து காவல் துறை மறுமொழி அளிக்கவில்லை.

RADMS தரவுகளின் துல்லியத்தன்மையை உறுதி செய்வதற்காக அனைத்து சாலை விபத்து நிகழ்வுகளிலும் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்வதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன என தமிழ்நாடு அரசு தெரிவித்தது (டிசம்பர் 2018).

2.1.7 திட்டமிடல்

தமிழ்நாடு சாலை பாதுகாப்பு கொள்கை 2007, (i) நம்பகத்தன்மை கொண்ட தகவலுக்காக தவகல் சேகரிப்பு முறையை மேம்படுத்துதல், (ii) பாதுகாப்பாக வாகனம் ஓட்டுவதையும் ஆபத்துக்கு உட்படக்கூடிய சாலை பயனாளர்களின் பாதுகாப்பையும் உறுதி செய்வதற்காக பாதுகாப்பான சாலை உட்கட்டமைப்பை அளித்தல், (iii) நிறுவன அமைப்பு மற்றும் நிதி முறைமையை வலுப்படுத்துதல் மற்றும் (iv) பலனுள்ள வகையில் அமலாக்க நடவடிக்கைகள், ஆகியவற்றுக்கு வழி வகுத்தது. கொள்கையின் நோக்கங்களை நிறைவேற்றும் பொருட்டு, நல்வாழ்வு, நெடுஞ்சாலைகள், காவல் மற்றும் போக்குவரத்து துறைகள் குறிப்பான திட்டங்களை வகுத்து தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் அக்கொள்கை கூறியது.

---

6 சென்னை மாவட்டத்தில் இராயபுரம், வண்ணாரப்பேட்டை மற்றும் செயிண்ட். தாமஸ் மவுண்ட் போக்குவரத்து புலனாய்வு காவல் நிலையங்கள்.

2.1.7.1 மாநில சாலை பாதுகாப்பு மன்றத்தின் செயல்பாடு

மாநில சாலை பாதுகாப்பு மன்றத்தின் பணிகள், (i) மாநிலத்தின் போக்குவரத்து விபத்துகள் குறித்த புள்ளி விவரங்களை சீராய்வு செய்து, அடிக்கடி விபத்து நடக்கும் பகுதிகளுடன் (black spots) தொடர்புபடுத்தி பகுப்பாய்வு செய்தல், (ii) போக்குவரத்து துறை அதிகாரிகள் எடுத்த நடவடிக்கைகளை சீராய்வு செய்தல், (iii) சாலை பொறியியல் அமைப்பை ஆய்வு செய்தல் மற்றும் (iv) மக்களுக்கான கல்வி விழிப்புணர்வு திட்டத்தை ஆய்வு செய்து, சாலை விபத்துகளை குறைக்கும் நோக்கத்தை அடையும் வகையில் பணியாற்றுதல் மற்றும் சாலை பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பான பிற பிரச்சினைகளை கவனித்தல் ஆகியன ஆகும்.

- தமிழ்நாடு அரசு சாலை பாதுகாப்பு கொள்கை ஒன்றை வகுத்து நிறுவன வகையிலான கட்டமைப்பை அமைத்தபோதிலும், மாநிலத்தின் சாலைகளை சாலை பயனாளர்களுக்கு பாதுகாப்பாக இருக்கும்படி செய்வதற்கான, இலக்குகளுடன் கூடிய ஒரு முழுமையான திட்டம் இருக்கவில்லை. சாலை பாதுகாப்பு கொள்கையில் விபத்துகளின் எண்ணிக்கையை குறைப்பதற்கு ஒரு திட்டமும், ஒரு தொலைநோக்கு பார்வை, ஒரு இலக்கு ஆகியன இருந்தன. எனினும், அமலாக்கம், கல்வி, பொறியியல் மற்றும் அவசரகால உதவி ஆகியவற்றை குறித்த குறு திட்டங்கள் வகுக்கப்படவில்லை. சாலை பாதுகாப்பு மன்றமும் மாவட்ட சாலை பாதுகாப்பு குழுக்களும் தமது கூட்டங்களை தொடர்ச்சியின்றி அவ்வப்போது நடத்தின. துறைகள் தமது அதிகார எல்லைக்குட்பட்ட பகுதிகளில் செயல்பாட்டை மேம்படுத்தும் நோக்கங்களுடன் கூடிய துணை திட்டங்களை வகுக்கவில்லை என்பது மாநில சாலை பாதுகாப்பு மன்ற கூட்ட குறிப்புகளிலிருந்து அறியப்பட்டது. துறைகளுக்கிடையே ஒருங்கிணைப்புக்கான திட்டங்கள் இருந்ததாக தெரியவில்லை. மாவட்ட குழுக்களின் கூட்டங்கள், சாலை உள்கட்டமைப்பு மேம்பாடு, விபத்துகள் மற்றும் உயிரிழப்புகளில் மிக அதிகபட்ச பங்கு உடைய இரு சக்கர வாகன பயணிகள் மற்றும் பாதசாரிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல் ஆகியவற்றுக்கு ஆண்டு அடிப்படையிலான இலக்குகளை விதிக்கவில்லை. எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் பற்றி கூட்ட குறிப்புகள் குறிப்பிட்டபோதிலும், நடவடிக்கை எடுக்கப்பட்டது தொடர்பான பொறுப்புடைமை மற்றும் அறிக்கை அளித்தல் பற்றிய விவரங்கள் அதற்கடுத்த கூட்டங்களின் குறிப்புகளில் இருக்கவில்லை. இவ்வாறாக, தமிழ்நாடு சாலை பாதுகாப்பு கொள்கையின் இலக்குகளை அடையும் பொருட்டு, துறை வாரியான மற்றும் பூகோளரீதியான கள அலுவலக நிலைகளில் சாலை பாதுகாப்பு கொள்கையுடன் ஒத்த வகையில் வளங்களுடன் கூடிய குறு திட்டங்களை கொண்ட ஒரு முழுமையான சாலை பாதுகாப்பு திட்டத்திற்கான தேவை உள்ளது.

- தமிழ்நாடு சாலை பாதுகாப்பு கொள்கையை சீராய்வு செய்வதும் மாநில சாலை பாதுகாப்பு மன்றத்தின் நோக்கங்களுள் ஒன்றாகும். 2006ஐ அடிப்படை ஆண்டாக கொண்டு 2013 ஆண்டிற்குள் சாலை விபத்துகளை 20 விழுக்காடு குறைக்க வேண்டும் என்று தமிழ்நாடு சாலை பாதுகாப்பு கொள்கையின் இலக்கு அடையப்படவில்லை. மேலும், சாலை பாதுகாப்பு மீதான உச்ச நீதிமன்ற குழுவிற்கு அளிக்கப்பட்ட (ஏப்ரல் 2017) உறுதிமொழி மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் SDG ஆகியவற்றின்படி, 2015க்கும் 2020க்கும் இடையே விபத்துகளின்

எண்ணிக்கை பாதியாக குறைக்கப்பட வேண்டும். இந்த புதிய இலக்குகளின் காரணமாக தமிழ்நாடு சாலை பாதுகாப்பு கொள்கை சீராய்வு செய்யப்பட வேண்டும். எனினும், அக்டோபர் 2018 நிலையில், 11 ஆண்டுகளாக கொள்கை சீராய்வு செய்யப்படவில்லை.

திருத்திய சாலை பாதுகாப்பு கொள்கையின் வரைவு பரிசீலிக்கப்பட்டு வருகிறது என தமிழ்நாடு அரசு மறுமொழி அளித்தது (டிசம்பர் 2018).

2.1.7.2 உள் (போக்குவரத்து) துறை

(அ) துறையிடைக்குழுவின் திட்டமிடல்

தமிழ்நாடு அரசு, உள் (காவல்), போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறைகளை சேர்ந்த அலுவலர்களை கொண்ட ஒரு துறையிடைக் குழுவை (Inter Departmental Team - IDT) அமைக்குமாறு உத்தரவிட்டது (அக்டோபர் 2007). உயிரிழப்பை ஏற்படுத்திய ஒரு சாலை விபத்து நிகழ்ந்த உடன், IDT அவ்விடத்திற்கு சென்று, பல்வேறு கோணங்களில் முழுமையாக ஆய்வு செய்து, விவரங்களை கூர்ந்து பகுப்பாய்வு செய்தபின் ஒரு விரிவான அறிக்கையை தயாரித்து, வருங்காலத்தில் அத்தகைய நிகழ்வுகள் நிகழாமல் தடுப்பதற்குரிய நடவடிக்கைகளை பரிந்துரைக்க வேண்டும். எனினும், மாவட்டங்களில் IDT அமைக்கப்படவில்லை. தமிழ்நாடு அரசு 2007ல் உத்தரவிட்டபோதிலும், சாலை பாதுகாப்பு ஆணையரும் மாவட்ட ஆட்சியர்களும் IDT அமைக்க நடவடிக்கை எடுக்கவில்லை. IDT இல்லாத நிலையில், மாநிலத்தில் 2013-18 காலகட்டத்தில் 75,876 உயிரிழப்புகள் ஏற்பட்ட சாலை போக்குவரத்து விபத்துகள், சாலை பொறியியல், சாலை குறியீடுகள், ஆக்கிரமிப்பு போன்ற குறைபாடுகளை சரிசெய்வதற்கான ஒரு குறும் அளவிலான திட்டத்தை வகுக்கும் பொருட்டு ஆராயப்படவில்லை. IDT அமைக்காததற்கான காரணம் எதையும் சாலை பாதுகாப்பு ஆணையர் தெரிவிக்கவில்லை. இது தொடர்பாக தகுந்த அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன என தமிழ்நாடு அரசு மறுமொழி அளித்தது (டிசம்பர் 2018).

(ஆ) சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பரப்புரை

பாதுகாப்பு குறித்து தீவிர பரப்புரை மேற்கொள்ளவும், அதனை தொடர்ந்து சட்டப்படியான அமலாக்க நடவடிக்கை எடுக்கவும் தமிழ்நாடு சாலை பாதுகாப்பு கொள்கை வலியுறுத்தியது. சாலை விபத்துகள் குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக சாலை பாதுகாப்பு ஆணையர் 2014-18 காலகட்டத்தில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும்தலா ₹ 4 இலட்சம் வழங்கினார். ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி முதல் வாரத்தில் சாலை பாதுகாப்பு வாரம் கடைப்பிடிக்கப்பட்டு, சாலை பாதுகாப்பு செய்திகள் பண்பலை வானொலி மூலம் பரப்பப்பட்டன. காவல் துறை, வட்டார போக்குவரத்து அலுவலர்கள், முதன்மை கல்வி அலுவலர் மற்றும் தமிழ்நாடு மாநில போக்குவரத்து கழகங்கள் சாலை பாதுகாப்பு தொடர்பான சாலையோர நிகழ்ச்சிகளை நடத்தி துண்டு பிரசுரங்களை வழங்கினர்.

சாலை பாதுகாப்பு குறித்த குறும்படங்களை மாநிலம் முழுவதும் உள்ள திரையரங்குகளில் திரையிட தமிழ்நாடு அரசும் துறையிடைக்குழுவும் (Inter Departmental Committee - IDC) முடிவு செய்தன (2015). சாலை பாதுகாப்பு குறித்த ஏழு குறும்படங்கள் தயாரிக்கப்பட்டபோதிலும், அவை மாதிரி மாவட்டங்களில் திரையரங்குகளில் திரையிடப்படவில்லை. திரையரங்குகள் திரைப்படங்களை திரையிடுவதில் வேறு ஒரு தொழில்நுட்பத்திற்கு (க்யூப்

தொழில்நுட்பம்[7]) மாறிவிட்டதால், திரையரங்குகளுக்கு குறுந்தகடு வடிவில் வழங்கப்பட்ட குறும்படங்கள் திரையிடப்படவில்லை என கடலூர் மாவட்ட ஆட்சியர் தெரிவித்தார். இது குறித்து மேல் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. சாலை பாதுகாப்பு குறித்த குறும்படங்களை திரையிட நடவடிக்கை எடுக்கப்படும் என கோயம்புத்தூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் தெரிவித்தனர். பல வகையான மற்றும் பரவலாக பயன்பாட்டில் உள்ள டிஜிட்டல் மற்றும் சமூக ஊடகங்களின் வீச்சினை பயன்படுத்தி விழிப்புணர்வை ஏற்படுத்த பலன் தரத்தக்க ஒரு முறையை ஏற்படுத்த தமிழ்நாடு அரசு தவறியது என்பதை தணிக்கை கண்டறிந்ததால் இந்த பதில் ஏற்கத்தக்கதல்ல. அதிக அளவிலான விபத்துகளும் உயிரிழப்புகளும் இரு சக்கர வாகனம் பயன்படுத்துவோர் மற்றும் 26-40 வயது பிரிவினரிடையே ஏற்பட்டன என்பதை RADMS தரவுகளும் காட்டுகின்றன. பாதுகாப்பாக ஓட்டுவதையும் தலைக்கவசம் அணிவதையும் வலியுறுத்தி இளைஞர்களை குறிவைத்தும் கல்வி நிறுவனங்களிலும் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டிய தேவையை குறைவான அளவில் உள்ள தலைக்கவசம் அணியும் பழக்கம் குறித்த தரவுகள் காட்டுகின்றன.

2.1.7.3 உள் (காவல்) துறை

(அ) மாநில போக்குவரத்து திட்டமிடல் பிரிவு

தமிழ்நாடு அரசு காவல் துறை கூடுதல் தலைமை இயக்குநர் (ADGP) தலைமையில் மாநில போக்குவரத்து திட்டமிடல் பிரிவை (State Traffic Planning Cell - STPC) அமைத்தது (2005). அதற்கான விதிகளின்படி, (i) சாலை பாதுகாப்பு நடவடிக்கைகளை திட்டமிடல், (ii) பல்வேறு அரசு சாரா நிறுவனங்கள்/பிற முகமைகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுதல், (iii) சாலை பாதுகாப்பு கருவிகளை கொள்முதல் செய்தல் மற்றும் (iv) பெரு நகரங்களில் போக்குவரத்து பிரச்சினைகளை ஆய்வு செய்தல் போன்றவற்றுக்கு STPC பொறுப்பாகும். எனினும், ADGP, STPCக்கு துணைபுரிய தொழில்நுட்ப பணியாளர்கள் இருக்கவில்லை என்பதால், சாலை பாதுகாப்பு கருவிகளை கொள்முதல் செய்தல், போக்குவரத்து பிரச்சினைகளை ஆய்வு செய்தல், ஒவ்வொரு பகுதிக்குமான போக்குவரத்து மேம்பாட்டு திட்டங்களை உருவாக்குதல், விழிப்புணர்வை ஏற்படுத்த அரசு சாரா நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து செயல்படுதல் போன்றவற்றில் STPCன் பங்கு குறைவானதாகவோ அல்லது இல்லாமலோ இருந்தது என்பதை தணிக்கை கண்டறிந்தது.

STPCக்கு கூடுதல் பணியாளரை அளிக்குமாறு தமிழ்நாடு மூன்றாவது காவல் ஆணையம் அளித்த பரிந்துரையை (2008) தமிழ்நாடு அரசு ஏற்றபோதிலும் (நவம்பர் 2008), 17 பணியிடங்கள்[8] கோரி காவல் துறை தலைமை இயக்குனர் (Director General of Police - DGP) அனுப்பிய கருத்துரு (2009) ஏற்கப்படவில்லை. பணியாளர் தேவையை குறைக்குமாறு தமிழ்நாடு அரசு DGPஐ அறிவுறுத்தியது (மார்ச் 2016) என்பதை கோப்புகளின் கூர்ந்தாய்வு காட்டியது. ஆனால், 14 பணியிடங்களுக்கான DGPன் திருத்திய கருத்துருவையும் (மார்ச் 2017) அரசு காரணம் கூறாமல் நிராகரித்தது (ஜூன் 2017). இதனால்,

---

[7] தொலைவில் அமைந்துள்ள டிஜிட்டல் சர்வரிலிருந்து திரைப்படங்களை திரையிடும் ஒரு டிஜிட்டல் தொழில்நுட்பம்; படச்சுருள், குறுந்தகடு போன்றவற்றிலிருந்து படங்களை பெற்று திரையிடும் வழக்கமான முறையிலிருந்து இது மாறுபட்டது.

[8] காவல் துணை கண்காணிப்பாளர்: ஒன்று, ஆய்வாளர்: ஒன்று, உதவி ஆய்வாளர் (தொழில்நுட்பம்): மூன்று, கண்காணிப்பாளர்: ஒன்று, உதவி ஆய்வாளர்: இரண்டு, இரண்டாம் நிலை ஓட்டுநர்: நான்கு மற்றும் அமைச்சக பணியாளர்கள்: ஐந்து.

STPCஐ உருவாக்கிய நோக்கம் நிறைவேறவில்லை; நெடுஞ்சாலை ரோந்து குழுக்களை கண்காணித்தல், போக்குவரத்து சிக்னல் மற்றும் சிசிடிவி (CCTV) காமிராக்கள் அமைக்க திட்டமிடல், ஒவ்வொரு பகுதிக்குமான போக்குவரத்து மேம்பாட்டு திட்டங்களை உருவாக்குதல் போன்ற அப்பிரிவிற்கு கூறப்பட்ட பணிகள் மேற்கொள்ளப்படவில்லை.

தமிழ்நாடு அரசு STPCக்கு தலைமையேற்ற ADGPஐ அடிக்கடி இடம் மாற்றியது என்பதை தணிக்கை கண்டது. 2005-18 என்ற 13 ஆண்டு காலத்தில், அந்த பணியிடத்தில் 12 அலுவலர்கள் இருந்தனர்; அவர்களுள் ஒருவர் மட்டுமே நான்கு ஆண்டுகளுக்கு அப்பணியிடத்தில் இருந்தார். பிற 11 அலுவலர்களின் சராசரி பணிக்காலம் 10 மாதங்கள் மட்டுமே இருந்தது. இவ்வாறாக, காவல் துறையின் போக்குவரத்து பிரிவின் செயல்பாட்டில் முக்கிய பங்காற்றுவதற்காக உருவாக்கப்பட்ட STPCன் செயல்பாட்டை தமிழ்நாடு அரசே முடக்கியது.

(ஆ) தொடர் குற்றவாளிகளை தண்டிக்கும் முறை

ஒன்பது வகையான போக்குவரத்து குற்றங்கள்/விதி மீறல்களை ஓட்டுநர் உரிமத்தில் நீதிமன்றங்கள் பதிவு செய்வதற்கு மோட்டார் வாகன சட்டம் 1988ன் பிரிவு 208 மற்றும் மத்திய மோட்டார் வாகன விதிகள் 1989ன் விதி 164 ஆகியன வழிவகை செய்கின்றன. ஸ்மார்ட் கார்டு (smart card) அடிப்படையிலான ஓட்டுநர் உரிமத்தை அறிமுகம் செய்ய போக்குவரத்து ஆணையர் செப்டம்பர் 2006ல் முன்மொழிந்தார்; தொடர் குற்றவாளிகளை அடையாளம் காணுவது அதன் நோக்கங்களுள் ஒன்றாகும். அக்டோபர் 2007ல் தமிழ்நாடு அரசு ஸ்மார்ட் கார்டு அடிப்படையிலான ஓட்டுநர் உரிமத்தையும் வாகன பதிவு சான்றிதழையும் மூன்று வட்டார போக்குவரத்து அலுவலகங்களில்[9] சோதனை அடிப்படையில் அறிமுகப்படுத்தியது. அவ்வாறான ஓட்டுநர் உரிமமும் பதிவு சான்றிதழும், ஒவ்வொரு உரிமதாரரின் உயிர்மரபணு (bio-metrics) விவரங்கள், புகைப்படம், கையொப்பம் போன்றவற்றை அழிக்க முடியாத ஆனால் நிகழ்நிலைப்படுத்தக்கூடிய (updatable) வகையில் பெறுகின்றன. அவை நிலையான தணிக்கை முறையை (trail) கொண்டதாகவும் மோசடி முறையில் திருத்தம் செய்ய முடியாதவையாகவும் உள்ளன. போக்குவரத்து துறை பராமரிக்கும் ஓட்டுநர் உரிமம் மற்றும் பதிவு சான்றிதழ் பற்றிய தகவல் தரவை எளிதில் பயன்படுத்தும் வகையில் கையடக்க கருவிகளை காவல் மற்றும் போக்குவரத்து துறை அலுவலர்களுக்கு வழங்க திட்டமிடப்பட்டது. சோதனை முயற்சியில் திருப்தியுற்ற தமிழ்நாடு அரசு, ஸ்மார்ட் கார்டு அடிப்படையிலான ஓட்டுநர் உரிமம் மற்றும் வாகன பதிவு சான்றிதழை மாநிலம் முழுவதும் வழங்க முடிவு செய்தது (மே 2010). மேற்படி பணியை சாலை பாதுகாப்பு ஆணையர் டெண்டர் முறை மூலம் ஒரு கூட்டமைப்பிற்கு[10] ₹ 293.72 கோடி தொகைக்கு வழங்கினார் (ஏப்ரல் 2013). எனினும், ஒப்பந்தப்புள்ளி அளித்து ஒப்பந்தம் கிடைக்கப்பெறாதவர்கள் தொடுத்த வழக்கு காரணமாக பணி துவங்கப்படாமல், மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றம் அதற்கு இடைக்கால தடை விதித்தது (ஜூலை 2013). ஆகஸ்ட் 2017ல் தடை நீங்கிய பின்னர், தொழில்நுட்பம் மற்றும் நிர்வாக அமைப்பில் ஏற்பட்ட முன்னேற்றத்தை கருத்தில் கொண்டு, ஒப்பந்ததாரருடன் மீண்டும் பேரம் பேச முடிவு செய்யப்பட்டது (டிசம்பர் 2017). அப்பொருள் செப்டம்பர் 2018 நிலையில் நிலுவையில் இருந்தது.

---

[9] வட்டார போக்குவரத்து அலுவலகங்கள், சென்னை (தெற்கு), கடலூர் மற்றும் சிவகங்கை.

[10] பான் டான் சாஃப்ட்வேர்ஸ் பிரைவட் லிமிடெட் மற்றும் எம் டெக் இன்னொவேஷன்ஸ் லிமிடெட் ஆகியவற்றை உள்ளடக்கியது.

இவ்வாறாக, நீண்ட சட்ட நடவடிக்கை என்பது தவிரவும், ஒப்பந்தம் அளிப்பதற்கு நீதிமன்றம் விதித்த தடை நீங்கிய பின்னரும், பலனுள்ள அமலாக்கத்தின் மூலம் சாலை பாதுகாப்பை உறுதி செய்வதற்கான தொழில்நுட்ப முன்னேற்றம் வாய்ந்த ஒரு நவீன கருவியின் பயன்பாடு இன்னமும் துவங்கவில்லை (செப்டம்பர் 2018). ஸ்மார்ட் கார்டு அடிப்படையிலான தொழில்நுட்பம் மூலம் தொடர் குற்றவாளிகளை அடையாளம் காணும் ஒரு முறைமை இல்லாத நிலையில், போக்குவரத்து தொடர்பான அனைத்து குற்றங்களும் முதல் முறை செய்த குற்றமாகவே கருதப்பட்டன என்பதை தணிக்கை கண்டறிந்தது. தணிக்கையின் குறிப்பான ஒரு கேள்விக்கு, இப்பொருள் DGPன் கவனத்திற்கு கொண்டு செல்லப்படும் என கோயம்புத்தூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மறுமொழி அளித்தார். மேலும், உரிய விவரங்கள் இல்லாத நிலையில், தொடர் விதிமீறல்களுக்காக கடுமையான தண்டிக்கப்பட வேண்டிய தொடர் குற்றவாளிகளை தணிக்கையினால் அடையாளம் காண இயலவில்லை.

தகுந்த தகவல் தரவு இருந்திருந்தால், தொடர் குற்றவாளிகளை அடையாளம் கண்டு, இரண்டாவது மற்றும் அதற்கடுத்த குற்றங்களுக்கு தகுந்த வானுயர் அளவில் அபராதம் விதிப்பது எளிதாக இருந்திருக்கும். இவ்வாறாக, அமலாக்கத்தில் குற்ற தடுப்புத் தன்மை என்பது நீர்த்துப் போனது என்பதை தணிக்கை கண்டறிந்தது.

(இ) உடனடி அபராதத் தொகை திருத்தப்படாமை மற்றும் முறைமை சார்ந்த பிரச்சினைகள்

உடனடி அபராதம் விதிக்கும் முறையை தமிழ்நாடு அரசு 1992ல் சென்னை மாநகரில் அறிமுகப்படுத்தி, அதனை மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகரங்களுக்கு 1995ல் விரிவுபடுத்தியது. பின்னர் 2000ல் அதனை திருச்சிராப்பள்ளி மாநகருக்கு விரிவு படுத்துகையில், தமிழ்நாடு அரசு உடனடி அபராத விகிதத்தை திருத்தி, இரு மடங்காக்கியது. அதன் பின்னர் அவ்விகிதம் திருத்தப்படவில்லை. ஆகஸ்ட் 2019ல், இந்திய அரசு மோட்டார் வாகன சட்டத்தை திருத்தி போக்குவரத்து விதி மீறல்களுக்கான அபராதங்களை உயர்த்தியது. எனினும் தமிழ்நாடு அரசு உடனடி அபராத தொகையை திருத்தவில்லை. டிசம்பர் 2011ல் தமிழ்நாடு அரசு போக்குவரத்து விதிமீறல்களுக்கான உடனடி அபராத முறையை மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தியது; அப்போது, முதல் முறை குற்றவாளிகளுக்கு குறைந்த விகிதம், அதற்கடுத்த குற்றங்களுக்கு உயர் விகிதம் என இரண்டு நிலை உடனடி அபராத முறையை விதித்தது. ஆணைகளின்படி,

மகாராஷ்டிரா மாநிலத்தில் போக்குவரத்து அமலாக்கம் பற்றிய ஆய்வு

மகாராஷ்டிரா மாநிலத்தில் நாட்டிலேயே அதிக எண்ணிக்கையிலான வாகனங்கள் இருந்தன (2016-17ல் 2.98 கோடி; தமிழ்நாட்டில் 2.34 கோடி). எனினும், அம்மாநிலத்தில் சாலை விபத்துகளும் உயிரிழப்புகளும் தமிழ்நாட்டில் நிகழ்ந்ததை விட குறைவாகவே நிகழ்ந்தன. உயர்ந்த விகிதத்தில் அபராதம், உடனடி அபராதம் விதிக்க காவலர்களுக்கு அதிகாரம் என்பன அமலாக்கத்தில் இருந்த முக்கிய வேறுபாடுகள் ஆகும்.

வரிசை எண்	குற்ற வகை	அபராத தொகை* (₹)	
		தமிழ்நாடு	மகாராஷ்டிரா
1	ஓட்டுநர் உரிமத்தை காட்ட தவறுதல்	100	200
2	காப்பீடு இல்லாமை	500	2,000
3	தலைக்கவசம் அணியாமை	100	500
4	ஓட்டும்போது செல்பேசியில் பேசுதல்	100	200
5	ஓட்டும்போது இருக்கை பட்டை அணியாமை	100	200
6	பந்தயமாக ஓட்டுதல்/வேக சோதனை மீறல்கள்	500	2,000
7	வேக மீறல்கள்	400	1,000
8	தகுதி சான்றிதழ் இல்லாமை	100	2,000

* முதல் தவறுக்கு

(ஆதாரம்: மஹாராஷ்டிர அரசு மற்றும் தமிழ்நாடு அரசின்

உடனடி அபராதம் வசூலிக்கும் அதிகாரம் மாநகரங்களில் காவல் உதவி ஆய்வாளர் மற்றும் அதற்கு மேற்பட்ட அதிகாரிகளுக்கும், ஊரக பகுதிகளில் காவல் ஆய்வாளர் மற்றும் அதற்கு மேற்பட்ட அதிகாரிகளுக்கும் உண்டு.

ஜனவரி 2000க்கு பிறகு, அதாவது 18 ஆண்டுகளாக உடனடி அபராதம் விதிதங்களை திருத்தாமையும் தொடர் குற்றவாளிகளை அடையாளம் காணாமையும், ஒவ்வொரு ஆண்டும் அதிக எண்ணிக்கையில் பதிவாகும் வழக்குகளிலிருந்து தெரிய வருவது போல், சாலைகளில் வாகன விபத்துகள் என்ற பிரச்சினையை தீர்க்கவும் போக்குவரத்து விதிகளை மீறுவோரை தடுக்கவும் உதவுவதில் தவறின.

தொடர் குற்றவாளிகளை அடையாளம் காணும் முறைமை இல்லாததை தமிழ்நாடு அரசு ஒப்புக் கொண்டு, இந்நிகழ்வுகளை சரி செய்வதற்கு உயிர் மரபணு வசதிகள் கொண்ட ஸ்மார்ட் கார்டு அடிப்படையிலான ஓட்டுநர் உரிமம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது எனவும் தெரிவித்தது (டிசம்பர் 2018).

2.1.7.4 நெடுஞ்சாலைகள் துறை

சாலை தடவாளங்களுக்கான விரிவான திட்டம் இல்லாமை

விபத்துகளை குறைக்கவும் போக்குவரத்து நகர்வு நிலைமைகளை மேம்படுத்தவும் சாலை தடவாளங்கள்[11] உதவுகின்றன. சிக்னல்கள் தவிரவும், சாலை குறியீடுகள், குறியீடு பலகைகள், தடுப்பு அமைப்புகள், வேகத்தடைகள் மற்றும் பிற எச்சரிக்கை பலகைகள் ஆகியவற்றை நெடுஞ்சாலைகள் துறை/உள்ளாட்சி அமைப்புகள் தமது எல்லைக்குள் அமைந்த சாலைகளில் அமைக்க வேண்டும் என IRCஅளவீடுகள் கூறுகின்றன.

மாதிரி மாவட்டங்களில் நெடுஞ்சாலைகள் துறை/உள்ளாட்சி அமைப்புகள் 2013-18 காலகட்டத்தில் மேற்கொண்ட 4,469 சாலை பணிமதிப்பீடுகளுள் சோதனை ஆய்வு செய்யப்பட்ட 67 விரிவான மதிப்பீடுகளில் எந்த ஒன்றிலும் சாலை தளவாடத்தை சேர்க்க அவை திட்டமிடவில்லை என்பதை தணிக்கை கண்டது. 2016-17 முதல் செயல்படுத்தப்படும் ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டத்தின்[12] கீழ் வரும் பணிகள் தவிர்த்து, சாலை மீள் அமைப்பு (relaying), சாலையை வலுப்படுத்துதல் போன்றவற்றுக்கான மதிப்பீடுகளில் மதிப்பீட்டு தொகையில் இரண்டு விழுக்காடு சாலை தடவாளங்களுக்காக மொத்த தொகையாக ஒதுக்கப்பட்டது. சாலை தடவாளங்களுக்காக இரண்டு விழுக்காடு மொத்த தொகையாக ஒதுக்கப்பட்ட 26 மதிப்பீடுகள் மீதான கூர்ந்தாய்வு, ஒதுக்கப்பட்ட தொகை சாலை குறியீடுகள் மீதான செலவிற்கு கூட போதவில்லை என்பதை காட்டியது. இதனை, இரண்டு விழுக்காடு மொத்த தொகை ஒதுக்கீடு போதவில்லை என்ற கடலூர், செயற்பொறியாளரின் மறுமொழி உறுதிப்படுத்தியது. தலைமை பொறியாளரின் உத்தரவின் அடிப்படையில், 2018-19 முதல் சாலை தடவாளங்களுக்காக தனி மதிப்பீடுகள் தயாரிக்கப்படும் என புதுக்கோட்டை, செயற்பொறியாளர் மறுமொழி அளித்தார். முழுமையான திட்டம் இல்லாமையால் போதுமான அளவில் சாலை தடவாளங்கள் அமைக்கப்படவில்லை.

[11] வெப்பத்தைத் தாங்கும் பிளாஸ்டிக் சாலை குறியீடுகள், பிரதிபலிக்கும் பொருள்கள், மேல்நிலை பலகைகள், உயர்த்தப்பட்ட நடைபாதை குறியீடுகள், சிக்னல்கள், வேகத் தடுப்பு அமைப்புகள், வேகத்தடைகள், சிறு சிறு தொடர் வேகத்தடைகள், சூரியஒளி டிலினியேடர், சூரியமின்கல குமிழ் (சூரிய ஒளியில் இயங்கும் பிரதிபலிக்கும் சாலை மேற்பரப்பு குறியீடு), குறியீடு பலகைகள், வழிகாட்டி கம்பங்கள் போன்றவையும் சேர்த்து.

[12] CRIDPன் கீழ் மீண்டும் அமைக்கப்பட்ட சாலைகளை பொறுத்தவரை சாலை தடவாளங்களுக்காக தனி மதிப்பீடுகள் இருந்தன.

தேசிய நெடுஞ்சாலைகளைப் பொறுத்தவரையில், சாலைத் தளவாடங்களுக்கான மதிப்பீடு இரண்டு விழுக்காடு தொகைக்கு மட்டுப்படுத்தப்படவில்லை என்றும் மற்ற சாலைகளைப் பொறுத்தவரையில், நிதி ஒதுக்கீட்டை கருத்தில் கொண்டு, சாலை தளவாடங்கள் அமைக்க தேவை உள்ள சாலைகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது என்றும் தமிழ்நாடு அரசு மறுமொழி அளித்தது (டிசம்பர் 2018).

2.1.8 போக்குவரத்து அமலாக்கம்

RADMS தரவுகளின்படி, ஓட்டுநரின் தவறு என்பது சாலை விபத்துகளுக்கான முக்கிய காரணம் ஆகும். அதனால், (i) சாலையை பயன்படுத்துவோர் அனைவரும் சாலை ஒழுங்கை கடைப்பிடிப்பதை உறுதி செய்யும் பொருட்டு போக்குவரத்து விதிகளை பலனுள்ள வகையில் அமல்படுத்துதலும் (ii) தகுந்த அமைப்புகளுடன் கூடிய வட்டார போக்குவரத்து அலுவலகங்கள்/அலகு அலுவலகங்கள்/ஓட்டுநர் பயிற்சி பள்ளிகள் ஆகியவற்றை உருவாக்குவதும் பெரும் முக்கியத்துவம் பெறுகின்றன. துல்லியமான, நம்பகத்தன்மை வாய்ந்த தகவல் உடைய ஒரு திறனுள்ள, முழுமையான போக்குவரத்து மேலாண்மை அமைப்பை போக்குவரத்து விதி அமலாக்கத்தின் முக்கியமான நோக்கங்களுக்கு பயன்படுத்த இயலும். மேலும், போதுமான பணியாளர்கள், சிக்னல், CCTV காமிரா, நெடுஞ்சாலை ரோந்து போன்ற உள்கட்டமைப்பு ஆகியன போக்குவரத்து விதி அமலாக்கத்திற்கு இன்றியமையாதவை ஆகும். இவ்வகையில் காணப்பட்ட குறைபாடுகள் பின்வரும் பத்திகளில் விவாதிக்கப்படுகின்றன.

2.1.8.1 ஓட்டுநரின் தரத்தை உறுதி செய்வதில் தவறுகள்

(அ) நேரடியான தேர்வு தளம் (Manual testing track)

மோட்டார் வாகன ஓட்டுநர்கள் சாலைகளின் முக்கிய பயனாளர்கள் ஆவர். ஓட்டுநர் உரிமம் கோருபவரின் ஓட்டும் திறமையை முறையாக மதிப்பிடுதல் சாலை பாதுகாப்பில் மிக முக்கியமானதாகும். தரமான ஓட்டுநர் பயிற்சி பள்ளிகளும் கடுமையான ஓட்டுதல் சோதனைகளும் ஓட்டுநர் உரிமம் வழங்குவதற்கு முன் ஓட்டுநர்களின் திறமையை உறுதி செய்வதற்கு முற்படு தேவைகளாகும். ஓட்டுநர் உரிமம் பெற ஒருவர் தகுதி பெறுவதற்கு, சாலை சிக்னல்கள் குறித்து கணினிவழியான ஒரு 'ஆன்லைன்' தேர்விலும் தேர்வு தளத்தில் ஒரு ஓட்டுநர் தேர்விலும் தேர்ச்சி பெற வேண்டும். தேர்வு தளங்களில் 'S' மற்றும் 'H' வளைவுகள், சரிவுப்பாதைகள், சாலை குறியீடுகள் போன்றவை இருக்க வேண்டும். முறையான ஓட்டுநர் தேர்வை நடத்த நன்கு வடிவமைக்கப்பட்டு, பராமரிக்கப்படும் தேர்வு தளம் முற்படு தேவை ஆகும்.

> பாராட்டுக்குரிய நிலை
> நியமிக்கப்பட்ட தேர்வு தளம் இருந்த நான்கு RTO/அலகு அலுவலகங்களுள், பொள்ளாச்சி மற்றும் விருத்தாச்சலத்தில் தேர்வு தளங்கள் நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டிருந்தன (காட்சிப்படம் **2.4**)

மாநிலத்தில் உள்ள 86 வட்டார போக்குவரத்து அலுவலகங்களுள் (Regional Transport Offices - RTO) 47 அலுவலகங்களில், 'S' மற்றும் 'H' வளைவுகள், சரிவுப்பாதைகள், சாலை குறியீடுகள் போன்றவற்றுடன் கூடிய முறையான தேர்வு தளம் இருக்கவில்லை என்பதை தணிக்கை கண்டது. அது போலவே, RTOக்களின் 59அலகு அலுவலகங்களுள் 53ல் முறையான தேர்வு தளம் இருக்கவில்லை.

காட்சிப்படம் 2.4: கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி RTOல் நன்கு பராமரிக்கப்பட்ட தேர்வு தளம்

(ஆதாரம்: கூட்டுக் கள ஆய்வு)

மாதிரி மாவட்டங்களில் 12 RTO மற்றும் அலகு அலுவலகங்களுள் 8[13] அலுவலகங்களில் முறையான தேர்வு தளம் இருக்கவில்லை என்பதை கூட்டுக் கள ஆய்வு காட்டியது. முறைசாராத அந்த எட்டு தேர்வு தளங்களில், 'S' மற்றும் 'H' வளைவுகள் டயர்களை வைத்து உருவாக்கப்பட்டிருந்தன; தளங்களில் சரிவுப்பாதைகள் மற்றும் சாலை குறியீடுகள் இருக்கவில்லை (**காட்சிப்படம் 2.5**). ஓட்டுநர் தேர்வை நடத்துவதில் உள்ள முறைசாரா வழக்கங்கள் ஓட்டுநர் தரத்தை உறுதி செய்யும் நோக்கத்திற்கு எதிரானவை என்பதையும் சாலை பாதுகாப்பு என்பதை அது எதிர்மறையாக பாதிக்கும் என்பதையும் தணிக்கை கண்டறிந்தது.

காட்சிப்படம் 2.5: RTO, மீனம்பாக்கத்தில் உள்ள முறைசாரா சோதனைப் பாதை, 28 மார்ச் 2018

(ஆதாரம்: கூட்டுக் கள ஆய்வு)

மாதிரி RTOக்களில், தேர்வு தளத்தை கட்டுவதற்கான திட்டம் எதுவும் பரிசீலனையில் இல்லை என்பதையும், 13 கணினிமயமாக்கப்பட்ட தேர்வு தளங்களின் கட்டுமானம் முடிக்கப்படவில்லை (**பத்தி 2.1.8.1(ஆ)**) என்பதையும் தணிக்கை கண்டது. ஓட்டுநரின் தரம்/ஓட்டுநர் தேர்வை போக்குவரத்து துறை உறுதி செய்யவில்லை என்பது ஒரு ஆபத்தான தவறு ஆகும்; இது உடனடியாக கவனிக்கப்பட வேண்டும்.

13 சென்னை: 4, கோயம்புத்தூர்: 2, கடலூர் மற்றும் புதுக்கோட்டை: தலா 1.

(ஆ) கணினிமயமாக்கப்பட்ட தேர்வு தளம்

ஓட்டுநர் தேர்வுகளை நடத்துவதில் அறிவியல் பூர்வமான முறைகளையும் அண்மைக்கால தொழில்நுட்பத்தையும் அறிமுகப்படுத்தும் நோக்கில், மாநிலத்தில் உள்ள 86 வட்டார போக்குவரத்து அலுவலகங்களுள் 14 அலுவலகங்களில் கணினிமயமாக்கப்பட்ட தேர்வு தளங்களை அமைக்க தமிழ்நாடு அரசு ₹ 10 கோடி தொகையை ஒப்பளிப்பு செய்தது (ஜனவரி 2014). கணினிமயமாக்கப்பட்ட தேர்வு தளம் தேர்வுக்கு உட்படுபவரின் செயல்பாட்டை முன்பே வகுக்கப்பட்ட அளவுகோல்களின் அடிப்படையில் தானாகவே மதிப்பிட்டு, ஒவ்வொரு தேர்வையும் காட்சிக்கோப்பில் பதிவு செய்கிறது.

ஒப்பளிப்பு செய்து நான்கு ஆண்டுகள் ஆன பின், மார்ச் 2018 நிலையில், அத்திட்டம் கரூர் RTOல் மட்டுமே முடிக்கப்பட்டு, மே 2018ல் அதன் பயன்பாடு துவக்கப்பட்டது. மாதிரி மாவட்டங்களுள், கடலூர் RTOல், கட்டட பணிகளுக்காக ₹ 13.65 இலட்சம் செலவிடப்பட்டது; பின்னர், நிதி ஒதுக்கப்படாததால் மின் பணிகளுக்கான டெண்டர் 2017ல் ரத்து செய்யப்பட்டு பணி முன்னேறவில்லை; மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) உரிமம் வழங்க கடும் தேர்வு முறை இல்லாமை

RADMS தகவல்களின்படி, அதிவேகமாக/கவனக்குறைவாக ஓட்டுதல் மூலம் 77 விழுக்காடு விபத்துகளுக்கு ஓட்டுநரின் தவறு என்பதே காரணமாகிறது. எனவே, ஓட்டுநர் உரிமம் வழங்க கடுமையான ஒரு தேர்வு முறை மூலம் ஓட்டுநர்களின் தரத்தை உறுதி செய்வதன் மூலம் விபத்துகளை குறைக்க இயலும். அதிக பலனுள்ள மற்றும் திறன் வாய்ந்த உரிமம் வழங்கும் முறையை அறிமுகப்படுத்துவது என்பது ஓட்டுநரின் திறமையை சோதிப்பதற்கு தமிழ்நாடு சாலை பாதுகாப்பு கொள்கை வகுத்த வியூகங்களுள் ஒன்றாகும். உரிமம் வழங்கும் முறை பற்றி தணிக்கையின் கூர்ந்தாய்வு கீழே விவாதிக்கப்பட்டுள்ளவாறு அதில் உள்ள குறைபாடுகளை வெளிக்காட்டியது:

- **மோட்டார் வாகன ஆய்வாளர் பற்றாக்குறை:** ஒரு மோட்டார் வாகன ஆய்வாளர் (Motor Vehicles Inspector - MVI) ஒரு நாளில் 20 விண்ணப்பதாரர்களை சோதிக்க வேண்டும் என 1992ல் போக்குவரத்து ஆணையர் நிர்ணயித்தார். உரிமம் கோருபருக்கு தள தேர்வு நடத்துவது தவிரவும், MVIன் பொறுப்புகளில், பதிவு மற்றும் பதிவு புதுப்பித்தலுக்காக மோட்டார் வாகனங்களை ஆய்வு செய்தல், தகுதி சான்றிதழ் வழக்குவதற்காக வாகனங்களை ஆய்வு செய்தல், மோட்டார் வாகன சட்டத்தை சாலை அளவில் அமல்படுத்துதல், ஓட்டுநர் பயிற்சி பள்ளிகளை ஆய்வு செய்தல் போன்றவையும் அடங்கும். மேற்படி பணி ஒதுக்கீட்டின்படி, ஒரு MVI ஓட்டுநர் தேர்வுகளை நடத்த ஒரு நாளில் தோராயமாக நான்கு மணி நேரம் செலவிட்டார் என்பதை தணிக்கை குழுவினர்கள் அலுவலகங்களுக்கு சென்றபோது கண்டறிந்தனர்; ஒரு நாளில் 20 நபர்களை சோதிக்க வேண்டும் என்ற அடிப்படையில், அவர் ஒரு நபருக்கு சராசரியாக 12 நிமிட நேரம்[14] எடுத்துக்கொண்டார் என்ற நிலை இருந்தது.

ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள் 34 என்ற நிலையில், உள்ளபடியே 26 நபர்கள் இருந்தனர். ஒரு நாளில் 20 விண்ணப்பதாரர்களை சோதிக்க

[14] (4 மணி நேரம் *60 நிமிடங்கள்)/20 நபர்கள்.

வேண்டும் என்ற அடிப்படையில் தணிக்கை குழுவினர் கணக்கிட்டு, 12 மாதிரி RTO அலுவலகங்களில் 32 MVI வேண்டும் என்ற நிலையில், மூன்று MVI உபரியாக இருந்ததை கழித்தது போக, ஆறு RTO அலுவலகங்களில் ஆறு MVI நிகர் குறைவு இருந்ததை கண்டறிந்தனர் (**அட்டவணை 2.5**).

அட்டவணை 2.5: ஒரு நாளைக்கு 20 சோதனைகள் என்ற விகிதத்தில் MVI குறைவாக/உபரியாக இருத்தல் பற்றிய கணக்கீடு

மாவட்டம்	மாதிரி RTO	MVI எண்ணிக்கை (மார்ச் 2018)		2017-18 வழங்கப்பட்ட உரிமங்களின் எண்ணிக்கை	ஒரு MVI ஒரு ஆண்டில் நடத்திய சோதனை (கலம் 5/கலம் 4)	குறைவு/உபரி (விதியின்படியான எண்ணிக்கை - கலம் 4ன்படி உள்ளபடியான எண்ணிக்கை)[15]
		SS	MIP			
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
சென்னை	தாம்பரம்	2	2	16,689	8,344	குறைவு - 1 (3-2)
	கே.கே.நகர்	6	4	36,626	9,156	குறைவு - 4 (8-4)
	வடக்கு	4	3	17,251	5,750	குறைவு - 1 (4-3)
	மீனம்பாக்கம்	2	2	20,146	10,073	குறைவு - 2 (4-2)
கோயம்புத்தூர்	வடக்கு	5	4	13,804	3,451	உபரி - 1 (3-4)
	தெற்கு	3	3	9,567	3,189	உபரி - 1 (2-3)
	பொள்ளாச்சி	3	2	6,548	3,274	உபரி - 1 (1-2)
கடலூர்	கடலூர்	4	2	9,640	4,820	0
	பண்ருட்டி அ.அ	1	1	4,013	4,013	0
	விருதாச்சலம்	1	1	7,251	7,251	0
புதுக்கோட்டை	புதுக்கோட்டை	2	1	10,869	10,869	குறைவு - 1 (2-1)
	இலுப்பூர் அ.அ	1	1	5,264	5,264	
	மொத்தம்	**34**	**26**	**1,57,668**	**-**	**குறைவு - 6**

அ.அ. அலகு அலுவலகம்; SS: ஒப்பலளிக்கப்பட்ட பணியாளர்கள்; MIP: நிலையில் உள்ள நபர்கள்
(ஆதாரம்: RTOக்கள் அளித்த விவரங்கள்)

- மேலும், MVI ஒரு நாளில் நடத்திய சோதனைகளின் எண்ணிக்கை, 12 மாதிரி RTO அலுவலகங்களுள் இரண்டில் 40க்கு மேலும், ஆறு அலுவலகங்களில் 20 முதல் 40 வரையும் இருந்தன. இது பணியாளர் எண்ணிக்கையை RTO அலுவலகங்களிடையே தேவைக்கேற்ப பிரித்து வழங்குவதில் மாற்றம் கொண்டு வருவதற்கான தேவையை காட்டுகிறது.

- **குறைக்கப்பட்ட தேர்வு நேரம்:** மார்ச் 2007ல் போக்குவரத்து ஆணையர், இரு சக்கர வாகனங்கள், இலகு ரக வாகனங்கள் மற்றும் போக்குவரத்து வாகனங்களுக்கான ஓட்டுநர் தேர்வு நேரத்தை ஒரு தேர்வுக்கு முறையே 4, 8 மற்றும் 12 நிமிடங்கள்[16] என வெகுவாக குறைத்தார். தேர்வு நேரத்தை குறைத்ததற்கு, பிறவற்றுக்கிடையே, ஓட்டுநர் உரிமத்திற்கான விண்ணப்பங்கள் நிலுவையை தீர்ப்பது என்பதும் ஒரு காரணம் என்பதை தணிக்கை கண்டறிந்தது; விண்ணப்பத்தை சரிபார்த்தல், விண்ணப்பதாரரின் அடையாளத்தை உறுதி செய்தல், குறிப்பிட்ட வகைகளில் திறம்பட இயக்குவது (manoeuvres[17]) உள்ளிட்ட விண்ணப்பதாரரின் திறமையை தேர்வு தளத்தில் சோதிப்பது என்பவை அடங்கிய தேர்வின் தரத்தில் கவலைக்குரிய வகையில் சமரசம் செய்து

---

15 தினமும் 20 சோதனை என்ற வீதத்தில், வருடத்தில் 232 வேலை நாட்களை அடிப்படையாக கொண்டு கணக்கிடப்பட்ட 4,640 சோதனைகள்.

16 இவை மீண்டும் முறையே 4, 10 மற்றும் 15 நிமிடங்களாக திருத்தப்பட்டன (அக்டோபர் 2007).

17 'H' மற்றும் 'S' வளைவு தடங்கள், சரிவுப்பாதைகள், சிக்னல்களை கடைப்பிடித்தல், பின்னோக்கி ஓட்டுதல், குறிப்பிடப்பட்ட இடத்தில் வாகனத்தை நிறுத்துதல் போன்றவை.

கொண்டதாக இந்த நேரக்குறைப்பு இருந்தது. தணிக்கை குழுவினர் இரண்டு RTOக்களுக்கு[18] சென்றபோது, அவ்வாறு சென்ற நாட்களில்[19], இரு சக்கர வாகனங்களுக்கான 57 விண்ணப்பதாரர்களை சோதிக்க MVI 29.06 நிமிடங்கள் எடுத்துக்கொண்டார் (**காணொளி 2.1**); இதன்படி, இரு சக்கர வாகனம் ஓட்டும் உரிமத்திற்கான தேர்வு ஒன்றிற்கு சராசரியாக 30 வினாடிகள் என ஆகிறது. இதனால் விண்ணப்பதாரரின் திறமையை MVI 30 வினாடிகளுக்குள் எவ்வாறு மதிப்பிட்டார் என்ற கேள்விக்கு இடமேற்பட்டு, தேர்வுகளின் நம்பகத்தன்மையை ஐயத்திற்கு உள்ளாக்குகிறது. இவ்வாறாக, விண்ணப்பங்களின் நிலுவையை தீர்ப்பதற்கு, எந்தவித நியாயமுன்றி தேர்வு நேரம் குறைக்கப்பட்டது

காணொளி 2.1: கடுமையான சோதனை செயல்முறை இல்லாத காணொளியை கண்டறிய ஸ்கேன் செய்யவும்

கணினிமயமாக்கப்பட்ட தேர்வு தளங்கள்: ஓட்டுநர் உரிமம் கோரும் தேர்வர்களை சோதிக்கும் முறையின் தரம் குறைந்த நிலை பற்றிய கூடுதல் சான்றையும் தணிக்கை கண்டது. கரூர் RTOல், கணினிமயமாக்கப்பட்ட தேர்வு தளம் அமைக்கப்பட்ட பின், விண்ணப்பதாரர்களின் தேர்ச்சி விகிதம் சராசரியாக மாதத்திற்கு 95 சதவீதம் என்பதிலிருந்து 64 சதவீதம் என்ற அளவிற்கு மிகவும் சரிந்தது (**அட்டவணை 2.6**) என்பது காணப்பட்டது.

அட்டவணை 2.6: கணினிமயமாக்கப்பட்டபின் ஓட்டுநர் சோதனை தேர்ச்சி விகிதத்தில் சரிவு

மாதம் மற்றும் ஆண்டு	விண்ணப்பதாரர் எண்ணிக்கை	தேர்ச்சி பெற்றவர் எண்ணிக்கை	தேர்ச்சி விகிதம்
கணினிமயமாக்கலுக்கு முன்			
ஜூன் 2017	540	520	96.30
ஜூலை 2017	440	410	93.19
ஆகஸ்டு 2017	360	345	95.84
செப்டம்பர் 2017	300	282	94.00
அக்டோபர் 2017	528	500	94.70
நவம்பர் 2017	545	523	96.00
கணினிமயமாக்கலுக்கு பின்			
ஜூன் 2018	202	123	60.90
ஜூலை 2018	256	163	63.68
ஆகஸ்டு 2018	247	160	64.78
செப்டம்பர் 2018	245	161	65.72
அக்டோபர் 2018	246	161	65.45
நவம்பர் 2018	237	156	65.83

(ஆதாரம்: சாலை பாதுகாப்பு ஆணையர் அளித்த விவரங்கள்)

---

18 RTO, தாம்பரம் மற்றும் RTO, மீனம்பாக்கம். இவ்விடங்களில் 57 நபர்களின் ஓட்டுனர் தேர்வுகள் தணிக்கை குழுவினரால் துறை அலுவலர்கள் முன்னிலையில் காணொளி படம் எடுக்கப்பட்டன.

19 28 மார்ச் மற்றும் 7 ஏப்ரல் 2018.

- தானியங்கி சூழலில் தேர்ச்சி விகிதத்தில் இருந்த வீழ்ச்சி, மாநிலம் முழுவதும் உள்ள RTO அலுவலகங்களில் தற்போதைய வழக்கமான முறையில் ஓட்டுனர் உரிமம் தாராள முறையில் வழங்கப்படுவதை சுட்டிக்காட்டியது. தற்போதைய வழக்கமான முறையின் மிகவும் தரக்குறைவான நிலையை அது காட்டியது. அதிக எண்ணிக்கையிலான கணினிமயமாக்கப்பட்ட தேர்வு தளங்களை அமைப்பது, ஓட்டுனர் உரிமம் வழங்கப்படும் ஓட்டுனர்கள் கடுமையான தரமுள்ள சோதனைகளுக்கு பிறகே தேர்வு பெறுவதை உறுதி செய்யும் கணினிமயமாக்கப்பட்ட தேர்வு தளங்கள் அனைத்து RTO அலுவலகங்களிலும் காலப்போக்கில் அமைக்கப்படும் என தமிழ்நாடு அரசு மறுமொழி அளித்தது (டிசம்பர் 2018).

ஓட்டுநர் தேர்வில் சிறந்த வழிமுறைகள்

நியூசிலாந்து: ஓட்டுநரை தேர்வு செய்வது மூன்று நிலைகளில் செய்யப்படுகிறது. ஒரு கோட்பாடு தேர்வில் தேர்ந்தபின், கற்போர் உரிமம் வழங்கப்படும். இரண்டாவது நிலையாகிய வரையறுக்கப்பட்ட உரிமம் பெறுவதற்கு **45** நிமிடங்கள் வாகனத்தை ஓட்டுவது அடங்கிய **60** நிமிட நடைமுறை தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் முன்றாவது நிலையாகிய முழுமையான உரிமம் பெறுவதற்கு, **20** நிமிடங்கள் வாகனத்தை ஓட்டுவது அடங்கிய **30** நிமிட நடைமுறை தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும்..

பிரிட்டன் (யு.கே): தேர்வு, இந்தியாவில் உள்ளது போன்றே, இரண்டு நிலைகளில் செய்யப்படுகிறது. கோட்பாடு பகுதி, நெடுஞ்சாலை விதிகள் மற்றும் வாகன பாதுகாப்பு மீதான பன்முக தெரிவு வினாக்களை கொண்டது. நடைமுறை ஓட்டுநர் தேர்வு **40** நிமிடங்கள் நடத்தப்படுகிறது.

- **தேர்வு உள்கட்டமைப்பு:** 145 RTO/அலகு அலுவலகங்களுள் 100 அலுவலகங்களில் தேர்வு தளங்கள் இல்லாமையால், மத்திய மோட்டார் வாகன விதிகள் 1989, விதி 15(3)ன் கீழ் கூறப்பட்ட, (i) சரிவில் ஓட்டுதல், (ii) செங்குத்தான மேல்நோக்கிய கோணத்தில் ஓட்டுதல் மற்றும் (iii) சிக்னல்களில் சரியான மற்றும் உடனடி செயல்பாடு ஆகிய சோதனைகள் செய்யப்படவில்லை.

இவ்வாறாக, சாலை விபத்துகளில் ஓட்டுநர் தவறுகளின் பங்கு பற்றி தெளிவான புள்ளி விவரங்களும் உரிமம் வழங்குவதில் மேலும் பலன் தரத்தக்க மற்றும் திறனுள்ள முறையை ஏற்படுத்துமாறு ஒரு கொள்கை சார்ந்த உத்தரவும் இருந்தபோதிலும், ஓட்டுநர் உரிமம் கோரும் விண்ணப்பதாரர்களின் திறமையை சோதிக்க போதுமான உள்கட்டமைப்பு இல்லாத நிலை மாநிலத்தில் தொடர்ந்து நீடித்தது; குறைந்த எண்ணிக்கையிலான MVI காரணமாக தேர்வு முறையில் இருந்த கடுமை நீர்க்க செய்யப்பட்டது. இதனால், ஓட்டுநர்கள் போதிய அளவு சோதிக்கப்படாததால், போக்குவரத்து விதிகள் பற்றிய அறியாமையும் கடைப்பிடிக்காமையும் பரவலாக உருவாகி சாலை விபத்துகளுக்கு மூல காரணமாயின. சரியாக நடத்தப்படும் ஓட்டுநர் தேர்வுகளில் விண்ணப்பதாரர்கள் தேர்ச்சி பெறுவதற்கு முக்கியத்துவம் அளிப்பது சாலைகளில் வாகனம் ஓட்டும் ஓட்டுநர்கள் திறமையாளர்களாகவும் ஓட்டுதல் தொடர்புடைய விதிகளை ஏட்டளவு மற்றும் நடைமுறை அளவு ஆகிய இரண்டு வகைகளிலும் முழுமையாக அறிந்தவர்களாகவும் இருப்பதை உறுதி செய்யும்.

மாநிலத்தில் ஏற்படும் சாலை போக்குவரத்து விபத்துகளுக்கும் ஓட்டுநர் உரிமங்கள் வழங்குவதற்கான பரிசோதனைகளின் தரத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என போக்குவரத்து ஆணையர் இறுதிக் கலந்தாய்வுக் கூட்டத்தில் (டிசம்பர் 2018) கருத்து தெரிவித்தார். ஓட்டுநர்களின் தவறே 77 விழுக்காடு சாலை விபத்துக்களுக்கு காரணம் என்பதால் இம்மறுமொழி ஏற்கத்தக்கதல்ல; ஓட்டுநர் உரிமம் வழங்கப்படும் நேரத்தில் ஓட்டுநர்களிடம் செய்யப்படும் போதுமான சோதனை விபத்து பற்றிய தரவுகளில் நிச்சயமாக தாக்கத்தை ஏற்படுத்தும்.

2.1.8.2 அமலாக்க நடவடிக்கையில் குறைபாடுகள்

(அ) ‘இடித்துவிட்டு விரைதல்’மோட்டார் விபத்துகளை குறைக்க தவறியமை

மோட்டார் வாகன சட்டம் 1988, பிரிவு 161, ‘இடித்துவிட்டு விரைதல் (Hit and run) வகையான மோட்டார் விபத்து’ என்பதற்கு, அடையாளம் காண்பதற்கான நியாயமான அளவு முயற்சிகளுக்கு பின்னரும் அடையாளம் காண இயலாத வாகனம் அல்லது வாகனங்களை பயன்படுத்துவதால் ஏற்படும் விபத்து என விளக்கம் அளிக்கிறது. மாநிலம்/மாதிரி மாவட்டங்களில் 2013-18 காலகட்டத்தில் நிகழ்ந்த அவ்வகையான விபத்துகள் பற்றிய விவரங்கள் **அட்டவணை 2.7**ல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 2.7: 2017-18 காலகட்டத்தில் நிகழ்ந்த இடித்துவிட்டு விரைதல் வகையான விபத்துகள் பற்றிய விவரங்கள்

மாவட்டம்/மாநகரம்	விபத்துகளின் மொத்த எண்ணிக்கை	உயிரிழப்புகளின் எண்ணிக்கை	காயமுற்றோர் எண்ணிக்கை	மொத்தம்
(1)	(2)	(3)	(4)	(3) + (4)
மாநிலம்	**23,423**	**8,281**	**15,986**	**24,267**
சென்னை	1,718	286	1,460	**1,746**
கோயம்புத்தூர்	1,577	527	1,037	**1,564**
கடலூர்	1,051	292	774	**1,066**
புதுக்கோட்டை	522	165	362	**527**

(ஆதாரம்: RADMSலிருந்து தொகுக்கப்பட்டவை)

அதிக ஆபத்து உள்ள இடங்களில் CCTV காமிராக்களை அமைக்குமாறு தமிழ்நாடு மூன்றாவது காவல் ஆணையம் தமிழ்நாடு அரசுக்கு 2008 ஆண்டிலேயே பரிந்துரை செய்தது. CCTV காமிராக்களை அமைக்க வேண்டிய அதிக ஆபத்து உள்ள இடங்களை ADGP/STPC 2013-14ல் அடையாளம் கண்டபோதிலும், அதன் மீது தொடர் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. எனினும், மூன்று மாதிரி மாவட்டங்களில் காவல் துறை தனியாரின் உதவி மற்றும் சாலை பாதுகாப்பு நிதியை பயன்படுத்தி, 86 இடங்களில் CCTV காமிராக்களை பொருத்தியது. ஆனால், மாதிரி மாவட்டங்களில் அதிக ஆபத்துள்ள இடங்கள்/அடிக்கடி விபத்து ஏற்படும் இடங்கள் எதிலும் CCTV அமைக்கப்படவில்லை என்பதை தணிக்கை கண்டது.

இடித்துவிட்டு விரைதல் வழக்குகளில் குற்றவாளிகளை அடையாளம் கண்டு பொறுப்பேற்க செய்ய CCTV மட்டுமே உதவும். எனவே, மேற்கொண்டு CCTVக்கள் பொருத்துவது தேவையானதாகும். இவ்வாறாக, தொழில்நுட்ப முன்னேற்றமடைந்த பின்னரும் இந்த தொழில்நுட்ப கருவியை பொருத்தாததால் தீர்க்கப்படாத இடித்துவிட்டு விரைதல் வகையான மோட்டார் விபத்துகளின் எண்ணிக்கை தொடர்ந்து உயர்ந்து வந்தது.

பல்வேறு திட்டங்களின் கீழ் CCTV காமிராக்களை பொருத்தும் பணி நடைபெற்று வருகிறது என தமிழ்நாடு அரசு மறுமொழி அளித்தது (டிசம்பர் 2018).

(ஆ) உரிமம் இன்றி ஓட்டி பிடிபட்ட நபர்கள் தண்டிக்கப்படாமை

தகுந்த வகையிலான வாகனத்தை ஓட்ட அனுமதி அளிக்கும் செல்லத்தக்க ஒரு ஓட்டுநர் உரிமம் இன்றி எந்த ஒரு நபரும் பொது இடத்தில் மோட்டார் வாகனம் ஓட்டக்கூடாது என்று மோட்டார் வாகன சட்டம், 1988 கூறுகிறது. சரியான ஒரு ஓட்டுநர் உரிமம் இன்றி மோட்டார் வாகனம் ஓட்டுவது சட்டப்பிரிவு 180ன் கீழ் மூன்று மாத சிறை தண்டனை அல்லது ₹ 1,000 வரையிலான அபராதம் அல்லது இவ்விரண்டும் விதித்து தண்டிக்கக்கூடிய குற்றம் ஆகும்.

RADMS தகவலின்படி 2013-18 காலகட்டத்தில் சாலை விபத்துகளில் தொடர்புடைய 2,89,074 வாகன ஓட்டுநர்கள் சரியான ஓட்டுநர் உரிமத்தை வைத்திருக்கவில்லை. ஓட்டுநர் உரிமம் இன்றி விபத்து ஏற்படுத்துவோரின் எண்ணிக்கை, இது ஒரு மிகப் பெரும் பிரச்சினை என்று காட்டுகிறது.

எனினும், சரியான ஓட்டுநர் உரிமம் இல்லாத குற்றவாளிகளுக்கு காவல் துறையினர் உடனடி அபராதம் மட்டுமே விதித்தனர் என்பதை தணிக்கை கண்டது. ஓட்டுநர் உரிமம் இல்லாமல் பிடிபட்ட ஓட்டுநர்களை மோட்டார் வாகன சட்டத்தின் கீழ் குற்றம் சாட்டுமாறு போக்குவரத்து ஆணையர் அளித்த அறிவுரைகளிலிருந்து (ஆகஸ்ட் 2017), ஒரு அறம் சார்ந்த அச்சத்தை உருவாக்கி தகுந்த உரிமம் இன்றி வாகனம் ஓட்டும் அபாயகரமான வழக்கத்தை நிறுத்தும் நோக்கில் குற்றவாளிகளை தண்டிக்க குற்றவியல் நடவடிக்கையை எடுப்பதற்கான ஒரு வழிமுறை இல்லை என்பது புலனாகிறது.

மேலும், வாகனம் ஓட்டும் தகுதி பெறாத ஒருவரை வாகனம் ஓட்ட செய்யும் அல்லது அனுமதிக்கும் நபருக்கு மூன்று மாத சிறை தண்டனை விதிக்கவும் பிரிவு 180 வகை செய்கிறது. 2013-18 காலகட்டத்தில் 869 சாலை விபத்துகள் 10-15 வயதுள்ள சிறார்களால் நிகழ்ந்தன. மேலும், சென்னை மாவட்டத்தில், இரு/நான்கு சக்கர வாகனங்களை ஓட்டிய 674 சிறார் குற்றவாளிகளிடமிருந்து போக்குவரத்து காவல் துறையினர் உடனடி அபராதம் மட்டுமே வசூலித்தனர் (2016-17). அதனால் சிறார் குற்றவாளியின் பெற்றோர்/காப்பாளரை மோட்டார் வாகன சட்டம் 1988ன் கீழ் குற்றம் சாட்ட தவறினர். கடலூர், கோயம்புத்தூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் இப்பொருள் தொடர்பான தனி விவரங்கள் இருக்கவில்லை.

ஓட்டுநர் உரிமம் இன்றி பிடிபடும் நபர்களின் எண்ணிக்கை உயர்ந்து வரும் நிலை குற்றவியல் நடவடிக்கை மூலம் கடுமையான அமலாக்க நடவடிக்கைகளை எடுப்பதில் உள்ள குறைபாட்டை காட்டியது. சட்டத்தின் குறைபாடான அமலாக்கம் போக்குவரத்து விதிகளை மீற ஓட்டுநர்களை தூண்டும்; இதனால் பிற சாலை பயனாளர்களுக்கு அச்சுறுத்தல்கள் ஏற்படும்.

(இ) மது அருந்திவிட்டு ஓட்டுதல், அதிவேகமாக ஓட்டுதல் போன்றவை மீதான நடவடிக்கையில் தளர்வு

மது அருந்திவிட்டு ஓட்டுதல்: மோட்டார் வாகன சட்டம் பிரிவு 21 உடன் இணைத்து படிக்கப்படும் பிரிவுகள் 184 மற்றும் 185ன்படி, மது அருந்திவிட்டு ஓட்டுவோரின் ஓட்டுநர் உரிமம் ஆறு மாதங்களுக்கு தற்காலிகமாக இரத்து செய்யப்பட வேண்டும். நடப்பிலுள்ள முறையின்படி, அவ்வாறான வழக்குகளை ஓட்டுநர் உரிமத்தை தற்காலிகமாக இரத்து செய்யும் பொருட்டு தொடர்புடைய RTOக்கு அனுப்ப வேண்டும்.

மது அருந்திவிட்டு ஓட்டுதல் மாநிலத்தில் பரவலாக நிகழும் குற்றம் என கூறும் வகையில் 2014-18[20] காலகட்டத்தில் 10.35 இலட்சம் வழக்குகள் பதிவாயின. மேற்படி 10.35 இலட்சம் வழக்குகளுள் 65,657 வழக்குகளில் (6.2 விழுக்காடு) மட்டுமே உரிமத்தை தற்காலிகமாக இரத்து செய்யும் பொருட்டு கோரிக்கைகளை தொடர்புடைய RTOக்கு அனுப்பப்பட்டன என்பதை தணிக்கை கண்டது. இதில், 25,133 (38 விழுக்காடு) ஓட்டுநர் உரிமங்கள் மட்டுமே உள்ளபடியே RTOக்களால் தற்காலிகமாக இரத்து செய்யப்பட்டன. மாதிரி மாவட்டங்களில் 2014-18 காலகட்டத்தில் பதியப்பட்ட வழக்குகள், தற்காலிகமாக இரத்து செய்யப்பட்ட அல்லது இரத்து செய்யப்பட்ட உரிமங்கள் பற்றிய விவரங்கள் **அட்டவணை 2.8**ல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 2.8: மது அருந்திவிட்டு ஓட்டுதல் பற்றிய விவரங்கள்

மாவட்டம்	காவல் துறை பதிவு செய்த மொத்த வழக்குகள்	த.இ. செய்வதற்காக RTOக்கு அனுப்பப்பட்ட வழக்குகள்	RTOவினால் த.இ. செய்யப்பட்ட உரிமங்கள்
சென்னை	2,35,804	14,142	10,015 (*71*)
கோயம்புத்தூர்	38,263	8,156	3,683 (*45*)
கடலூர்	22,794	25	25 (*100*)
புதுக்கோட்டை	14,424	281	281 (*100*)
மொத்தம்	**3,11,825**	**22,604**	**14,004(*70*)**

அடைப்புக்குறிக்குள் உள்ள எண்ணிலக்கங்கள் தற்காலிகமாக இரத்து செய்யப்பட்ட ஓட்டுநர் உரிமங்களின் விழுக்காட்டை சுட்டிக்காட்டுகின்றன.

த.இ.: தற்காலிகமாக இரத்து

(ஆதாரம்: காவல் துறை அளித்த விவரங்கள்)

அதிவேகமாக ஓட்டுதல், அதிக பாரம் ஏற்றுதல் மற்றும் செல்பேசி பயன்படுத்துதல்: சாலை பாதுகாப்பு மீதான உச்ச நீதிமன்ற குழுவின் பரிந்துரைகளுடன் இணைத்து படிக்கப்படும் மோட்டார் வாகன சட்டம் 1988 பிரிவு 19ன் படி, அதிவேகமாக ஓட்டுதல், அதிக பாரம் ஏற்றுதல் மற்றும் வாகனம் ஓட்டும்போது செல்பேசி பயன்படுத்துதல் ஆகியவற்றுக்காக ஓட்டுநர் உரிமம் தற்காலிகமாக இரத்து செய்யப்பட வேண்டும். மேற்படி செயல்களினால் மாநிலத்திலும் மாதிரி மாவட்டங்களிலும் 2013-18 காலகட்டத்தில் நிகழ்ந்த சாலை விபத்துகள் பற்றிய விவரங்கள் **அட்டவணை 2.9**ல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 2.9: அதிவேகமாக ஓட்டுதல், அதிக பாரம் ஏற்றுதல் மற்றும் செல்பேசி பயன்படுத்துதல்

மாவட்டம்	மொத்த விபத்துகள்			உயிரிழப்புகள்		
	அதிவேகமாக ஓட்டுதல்	அதிக பாரம் ஏற்றுதல்	செல்பேசி பயன்படுத் துதல்	அதிவேகமாக ஓட்டுதல்	அதிக பாரம் ஏற்றுதல்	செல்பேசி பயன்படுத் துதல்
மாநிலம்	**2,51,571**	**138**	**374**	**59,542**	**43**	**177**
சென்னை	10,685	2	22	1,705	0	4
கோயம்புத்தூர்	16,200	7	60	4,186	1	41
கடலூர்	16,411	2	5	2,428	1	0
புதுக்கோட்டை	2,885	0	16	732	0	6

(ஆதாரம்: RADMSலிருந்து தொகுக்கப்பட்டவை)

---

20 சாலை பாதுகாப்பு மீதான உச்ச நீதிமன்ற குழுவின் அறிவுறுத்தல்களின் (2014) அடிப்படையில் மது அருந்திவிட்டு ஓட்டுதல் பற்றிய தகவல்கள் 2014 முதல் தான் பராமரிக்கப்படுகின்றன.

காவல் துறை 2013-18 காலகட்டத்தில், அதிவேகமாக ஓட்டியதற்காக 9.22 இலட்சம் வழக்குகள், அதிக பாரம் ஏற்றியதற்காக 1.82 இலட்சம் வழக்குகள் மற்றும் வாகனம் ஓட்டும்போது செல்பேசி பயன்படுத்தியதற்காக 10.82 இலட்சம் வழக்குகளை பதிவு செய்தது. ஓட்டுநர் உரிமத்தை தற்காலிகமாக இரத்து செய்ய காவல் துறை 2013-16 காலகட்டத்தில் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதை தணிக்கை கண்டது. 2017 மற்றும் 2018ல் (மார்ச் 2018 வரை), காவல் துறை நடவடிக்கை எடுத்தாலும், **அட்டவணை 2.10**ல் கூறப்பட்டுள்ளவாறு, அந்த வழக்குகள் குறைவாகவே இருந்தது.

அட்டவணை 2.10: ஓட்டுநர் உரிமங்களை தற்காலிகமாக இரத்து செய்தல்

மாவட்டம்	காவல் துறை பதிவு செய்த மொத்த வழக்குகள்	தற்காலிகமாக இரத்து செய்வதற்காக RTOக்கு அனுப்பப்பட்ட வழக்குகள்	RTOவினால் தற்காலிகமாக இரத்து செய்யப்பட்ட உரிமங்கள்
சென்னை	6,96,589	2,986 (*0.43*)	1,628
கோயம்புத்தூர்	95,643	17,973 (*18.79*)	9,812
கடலூர்	23,436	1,902 (*8.12*)	1,902
புதுக்கோட்டை	40,649	1,593 (*3.92*)	0
மொத்தம்	**8,56,137**	**24,454 (*2.86*)**	**13,342 (*1.56* விழுக்காடு)**

அடைப்புக்குறிக்குள் உள்ள எண்ணிலக்கங்கள் பதிவு செய்யப்பட்ட மொத்த விபத்துகளின் எண்ணிக்கையுடன் ஒப்பிட்ட விழுக்காட்டைக் குறிக்கும்.

(ஆதாரம்: காவல் துறை அளித்த விவரங்கள்)

அட்டவணை 2.10ல் கண்டவாறு, காவல் துறையால் RTOக்களுக்கு அனுப்பப்பட்ட மிக குறைந்த எண்ணிக்கையிலான வழக்குகளில் கூட ஓட்டுநர் உரிமத்தை தற்காலிகமாக இரத்து செய்யும் நடவடிக்கை முழுமையாக எடுக்கப்படவில்லை; கடலூரில் மட்டுமே காவல் துறை அனுப்பிய 1,902 வழக்குகள் அனைத்திலும் RTO உரிமங்களை தற்காலிகமாக இரத்து செய்யப்பட்டது. காவல் மற்றும் போக்குவரத்து துறைகளிடையே ஒருங்கிணைப்பு இல்லாததை இது காட்டியது.

மேட்டுப்பாளையம் RTOல் 2016-18 காலகட்டத்தில் உரிமம் தற்காலிகமாக இரத்து செய்யப்பட்ட அனைத்து 269 வழக்குகள் பற்றிய விரிவான பகுப்பாய்வின் மூலம், உரிமத்தை தற்காலிகமாக இரத்து செய்வதற்கான முன்மொழிவு காவல் துறையிடமிருந்து பெறப்பட்டு 21 முதல் 364 நாட்கள் ஆன பிறகே தற்காலிகமாக இரத்துக்கான நடவடிக்கை துவக்கப்பட்டது என்பது கண்டறியப்பட்டது. மூன்று மாத காலத்திற்கான தற்காலிகமாக இரத்து முன்மொழிவு நாளிலிருந்து துவங்குவதால் 269 வழக்குகளுள் 235 வழக்குகளில் (87 விழுக்காடு) தற்காலிகமாக இரத்தினால் எந்த பாதிப்பும் இருக்கவில்லை.

புதுக்கோட்டை மாவட்ட காவல் கண்காணிப்பாளரும் கோயம்புத்தூர் மாநகர காவல் ஆணையரும் தமது மறுமொழிகளில், காவல் பணியாளர் பற்றாக்குறை காரணமாக அனைத்து வழக்குகளும் RTOக்கு அனுப்பப்படவில்லை எனவும், உரிமத்தை தற்காலிகமாக இரத்து செய்வதற்கான முன்மொழிவு அசல் உரிமத்தை ஓட்டுநர் வைத்திருந்த நேர்வுகளில் மட்டுமே அனுப்பப்பட்டது எனவும் தெரிவித்தனர் (ஜூன் 2018). உரிமதாரர் மீது நடவடிக்கை எடுப்பதற்காக ஓட்டுநர் உரிமங்களின் நகல் RTOக்கு அனுப்பப்பட்டிருக்க வேண்டும் என்பதால் இந்த பதில் ஏற்கத்தக்கதல்ல. ஓட்டுநரின் தவறு சாலை விபத்துகளின் முக்கிய காரணங்களுள் ஒன்று. காவல் துறையினரின் வறிதான தொடர் நடவடிக்கை காரணமாக ஓட்டுநர்கள் சட்டத்தை மதிக்காமல் இருப்பதும் கவனக்குறைவாக வாகனம் ஓட்டுவதும் தொடர்ந்து நிகழும்.

இவ்வாறாக, விபத்துககளுக்கு முக்கிய காரணங்களான மது அருந்திவிட்டு ஓட்டுதல், அதிவேகமாக ஓட்டுதல், அதிக பாரம் ஏற்றுதல், ஓட்டும்போது செல்பேசி பயன்படுத்துவது ஆகியவற்றை தடுப்பதற்காக உள்ள முறைமையானது, நிகழும் பெருமளவிலான குற்றங்களை எதிர்கொள்ள போதுமான பணியாளர் இல்லாத காரணத்தினால் **பத்தி 2.1.8.4(அ)**ல் விவாதிக்கப்பட்டுள்ளவாறு பெரிதும் பாதிக்கப்படுகிறது.

(ஈ) மூன்றாம் நபர் காப்பீடு இல்லாத வாகனங்கள்

மூன்றாம் நபருக்கு ஏற்படும் ஆபத்துகளுக்குரிய காப்பீடு இல்லாமல் எந்த மோட்டார் வாகனத்தையும் பொது இடத்தில் பயன்படுத்தக்கூடாது என்று மோட்டார் வாகன சட்டம் 1988 பிரிவு 146 கூறுகிறது. மூன்றாம் நபர் காப்பீடு இருப்பதை அறிய காவல் துறையினர் வாகனங்களை சோதிக்க வேண்டும் எனவும் மூன்றாம் நபர் காப்பீடு இல்லையெனில் தகுந்த காப்பீடு சான்றிதழை வாகன உரிமையாளர் காட்டும் வரை வாகனத்தை தடுத்து வைக்க (detain) வேண்டும் எனவும் சாலை பாதுகாப்பு மீதான உச்ச நீதிமன்ற குழு உத்தரவிட்டது (டிசம்பர் 2016).

மூன்றாம் நபர் காப்பீடு இல்லாத காரணத்தினால் காவல் துறையினரால் பிடிக்கப்பட்ட, தடுத்து வைக்கப்பட்ட வாகனங்கள் பற்றிய விவரங்கள் **அட்டவணை 2.11**ல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 2.11: மூன்றாம் நபர் காப்பீடு இல்லாமல் பிடிபட்ட வாகனங்கள்

மாவட்டம்	வாகனங்களின் எண்ணிக்கை			காப்பீடு செய்யப்பட்ட வாகனங்களின் விழுக்காடு [(கலம் 4 x 100)/ கலம் 2]
	மூன்றாம் நபர் காப்பீடு இல்லாமல் இருந்தவை	தடுத்து வைக்கப்பட்டவை	தடுத்து வைக்கப்பட்ட பின் காப்பீடு செய்யப்பட்டவை	
(1)	(2)	(3)	(4)	(5)
மாநிலம்	**83,528**	**21,788 (26 விழுக்காடு)**	**21,475**	***25.71***
சென்னை	7,451	466	421	*5.65*
கோயம்புத்தூர்	10,129	1,767	1,761	*17.39*
கடலூர்	10,848	969	969	*8.93*
புதுக்கோட்டை	2,560	0	0	*0*

(ஆதாரம்: காவல் துறை அளித்த விவரங்கள்)

பிடிபட்ட வாகனங்களில் 26 விழுக்காடு மட்டுமே தடுத்து வைக்கப்பட்டு, மற்றவை அபராதம் விதித்து விடப்பட்டன என்பது, அவ்வாறு விடப்பட்ட வாகனங்களுக்கு மூன்றாம் நபர் காப்பீட்டை உறுதி செய்வதற்கு வாய்ப்பு இல்லை என்ற காரணத்தினால், அமலாக்கத்தில் இருந்த குறைபாட்டை காட்டுகிறது. வாகனங்களை காப்பு பொறுப்பில் (custody) வைக்க தேவையான பணியாளர் இல்லாத காரணத்தினால் அவை தடுத்து வைக்கப்படவில்லை எனவும் மாவட்டங்களில் சாலைகள் குறுகலாக இருக்கும் நிலையில் காப்பீடு சான்றிதழ் தராமையினால் தடுத்து வைப்பது போக்குவரத்து நெரிசலை அதிகரிக்கும் என்று காவல் துறை மேலும் தெரிவித்தது. தடுத்து வைக்கப்பட்ட வாகனங்களை நிறுத்துவதற்கு தேவையான இடத்தை ஏற்பாடு செய்வது காவல் துறையின் பொறுப்பு என்பதால், அமலாக்கத்தில் உள்ள இடர்கள் அமல்படுத்தாமலே விடுவதை நியாயப்படுத்தாது என்பதை தணிக்கை கண்டறிந்தது.

(உ) தலைக்கவசம் தொடர்பான விதி மீறல்கள்

நடப்பில் உள்ள போக்குவரத்து துறை உத்தரவுகளின்படி (பிப்ரவரி 2007), தலைக்கவசம் அணிவது மாநிலத்தில் கட்டாயமாகும். எனினும், மாநிலத்தில் 2013-18 காலகட்டத்தில் நிகழ்ந்த இரு சக்கர வாகனங்கள் தொடர்பான 2,23,466 விபத்துகளுள், அவற்றில் பயணித்தவர் (rider) தலைக்கவசம் அணிந்திருந்தாரா இல்லையா என்ற தகவல் 75,094 விபத்துகளில் மட்டுமே இருந்தது என்பதை தணிக்கை கண்டது. அவற்றின், 69,804 விபத்துகளில் (93 விழுக்காடு) பயணிகள் தலைக்கவசம் அணிந்திருக்கவில்லை. தலைக்கவசம் அணியாமல் வாகனம் ஓட்டிய இரு சக்கர வாகன ஓட்டுநர்களுக்கு ஏற்பட்ட தலைக்காயம் காரணமாக ஏற்பட்ட உயிரிழப்புகளின் எண்ணிக்கையை **அட்டவணை 2.12** காட்டுகிறது.

அட்டவணை 2.12: தலைக்கவசம் அணியாத இரு சக்கர வாகன ஓட்டுநர்களுக்கு ஏற்பட்ட தலைக்காயம் காரணமாக ஏற்பட்ட உயிரிழப்புகள்

விவரங்கள்	2013-14	2014-15	2015-16	2016-17	2017-18	மொத்தம்
மாநிலம்	**1,291**	**1,105**	**1,062**	**1,130**	**988**	**5,576**
சென்னை	122	64	80	105	76	**447**
கோயம்புத்தூர்	49	68	65	107	63	**352**
கடலூர்	18	13	15	11	11	**68**
புதுக்கோட்டை	87	26	17	104	59	**293**
மொத்தம்	**276**	**171**	**177**	**327**	**209**	**1,160**
(விழுக்காட்டில்)	***21.38***	***15.48***	***16.67***	***28.94***	***21.15***	***20.80***

(ஆதாரம்: RADMSலிருந்து தொகுக்கப்பட்டவை)

மாநிலம் மற்றும் மாதிரி மாவட்டங்களில் 2013-18 காலகட்டத்தில், இரு சக்கர வாகன பயணியர் தலைக்கவசம் அணியாததால் ஏற்பட்ட உயிரிழப்புகளின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க முன்னேற்றமின்றி ஏற்ற இறக்கத்துடன் இருந்தது என்பதை **அட்டவணை 2.12**லிருந்து அறியலாம். தொடர் குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனை வழங்க வழிவகை இல்லாமையும் (**பத்தி 2.1.7.3(ஆ)**) உடனடி அபராதத்திற்கான குறைந்த தொகையும் (**பத்தி 2.1.7.3(இ)**) மீறல்களை தடுக்க தவறின.

2.1.8.3 அமலாக்க நடவடிக்கைகளுக்கு போக்குவரத்து காவல் பிரிவில் போதுமான பணியாளர் இல்லாமை

(i) மாநகரங்களில் மக்கள்தொகை மற்றும் வாகனங்களின் எண்ணிக்கையின் (2014) அடிப்படையில் போக்குவரத்து சட்டங்களை அமல்படுத்த தேவைப்படும் போக்குவரத்து காவல் பணியாளர்களின் எண்ணிக்கை பற்றி காவல் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு குழுவின் (BPRD) அளவுநிலைகள் (செப்டம்பர் 2015) குறிப்பிடுகின்றன. BPRD அளவுநிலைகளை அமல்படுத்துவதாக தமிழ்நாடு அரசு சாலை பாதுகாப்பு மீதான உச்ச நீதிமன்ற குழுவிற்கு உறுதி அளித்த போதிலும் (ஜனவரி 2016), சென்னை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இரண்டு மாதிரி மாவட்டங்களில் கூடுதல் போக்குவரத்து காவல் பணியாளர்களை ஒப்பளிக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை (மே 2018).

சென்னை மற்றும் கோயம்புத்தூர் மாநகரங்களில் BPRD அளவுநிலைகளின்படி தேவைப்பட்ட[21] போக்குவரத்து காவல் பணியாளர்[22] எண்ணிக்கை முறையே 8,250

---

21 டிசம்பர் 2017ல் இருந்த வாகன எண்ணிக்கையிலான அடிப்படையில்.

22 களநிலை, தலைமை அலுவலகம் மற்றும் மேற்பார்வை பணியாளர்கள்.

மற்றும் 1,874 என்பதற்கெதிராக, ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கை 4,174 மற்றும் 325 ஆகவும், உள்ளபடியே இருந்தவர்கள் எண்ணிக்கை 3,358 மற்றும் 217 ஆகவும் இருந்தன. குறைவு முறையே 59 மற்றும் 88 விழுக்காடு ஆகும்.

(ii) கணிசமாக வாகன போக்குவரத்து உடைய அனைத்து நகரங்களிலும் போக்குவரத்து காவல் நிலையங்கள் இருக்க வேண்டும் எனவும் போக்குவரத்தை ஒழுங்குபடுத்த ஊர்க்காவல் படையினரையும் பிற தன்னார்வ அமைப்புகளையும் அதிக அளவில் அமர்த்த வேண்டும் எனவும் தமிழ்நாடு மூன்றாவது காவல் ஆணையம் தனது அறிக்கையில் (2008) பரிந்துரைத்து இருந்தது. ஆணையத்தின் பரிந்துரைகளை ஏற்றபோதிலும் (நவம்பர் 2008), பணியாளர் பற்றாக்குறையை நீக்க உடனடி நடவடிக்கை எடுக்க கீழே விவாதிக்கப்பட்டுள்ளவாறு தமிழ்நாடு அரசு தவறியது:

- புதுக்கோட்டை மாவட்டத்தில் இருந்த குறைவு 41 விழுக்காடு ஆகும். உயர்ந்திருந்த வாகன போக்குவரத்து காரணமாக கூடுதல் போக்குவரத்து காவல் நிலையங்கள் மற்றும் 16 போக்குவரத்து காவல் பணியாளர் ஆகியனவற்றை கோரிய காவல் கண்காணிப்பாளரின் கருத்துரு (மே 2018) DGPயிடம் நிலுவையில் இருந்தது (ஜூன் 2018).
- கடலூர் மாவட்டத்தில் மூன்று இடங்களில்[23] கூடுதல் காவல் நிலையங்கள் மற்றும் 54 காவல் பணியாளர்கள் ஆகியவற்றை கோரிய காவல் கண்காணிப்பாளரின் கருத்துரு (ஜூலை 2016, பிப்ரவரி மற்றும் மார்ச் 2017) மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை.
- மாநகரங்கள் மற்றும் மாவட்டங்களில் பல்வேறு காவல் நிலையங்களுகு உட்பட்ட பகுதிகளில் போக்குவரத்தை ஒழுங்குபடுத்துவதில் போக்குவரத்து காவலர்களுக்கு உதவ ஊர்க்காவல் படையினரை பெறுவதற்கான கூடுதல் செலவாக ₹ 12.55 கோடி தொகையை கோரும் DGPன் கருத்துரு (செப்டம்பர் 2010) அரசிடம் செப்டம்பர் 2010 முதல் நிலுவையில் இருந்தது.

பணியாளர் பற்றாக்குறை குறித்த தணிக்கையின் ஒரு கேள்விக்கு, கருத்துரு அரசிடம் நிலுவையில் உள்ளதாக ADGP மறுமொழி அளித்தார் (மே 2018).

இவ்வாறாக, சாலை பாதுகாப்பு மீதான உச்ச நீதிமன்ற குழுவிற்கு உறுதி அளித்த பின்னரும் BPRD அளவுநிலைகளை பின்பற்றுவதிலும், தாம் ஏற்றுக்கொண்ட காவல் ஆணைய பரிந்துரையை அமல்படுத்துவதிலும் அரசு காட்டும் தயக்கம் காரணமாக போக்குவரத்து விதிகளை அமல்படுத்துவதில் பணியாளர் பற்றாக்குறை இருந்தது.

2.1.8.4 நெடுஞ்சாலை ரோந்து போதிய அளவில் இல்லாமை

RADMS தகவலின்படி, 2013-18 காலகட்டத்தில் மாநிலத்தில் நிகழ்ந்த 3,30,505 விபத்துகளுள் 2,66,563 விபத்துகள் தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலைகளில் நிகழ்ந்தன. மார்ச் 2018 நிலையில், மாநிலத்தில் இருந்த தேசிய/மாநில நெடுஞ்சாலைகளின் 272 பகுதிகளில் (stretch) ரோந்து பணிபுரிய 272 நெடுஞ்சாலை ரோந்து குழுக்கள் (Highway Patrol Teams - HPT), அதாவது தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலைகளுக்காக முறையே 156 மற்றும் 116 குழுக்கள், இருந்தன. HPT நகரும் அமலாக்க குழுவாக செயல்படுகிறது.

[23] காட்டுமன்னார்கோவில், நெய்வேலி மற்றும் வேப்பூர்.

கோயம்புத்தூர், கடலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் HPTன் செயல்பாடு குறித்த பதிவுருக்களின் கூர்ந்தாய்வு பின்வரும் குறைபாடுகளை வெளிக்காட்டியது.

(அ) பணியாளர் பற்றாக்குறை: இரு பிரிவுகளாக (batch) இயங்கும் HPTல் ஒவ்வொரு பிரிவிலும் ஒரு உதவி ஆய்வாளர், ஒரு ஓட்டுநர் மற்றும் நான்கு காவலர்கள் இருக்க வேண்டும். எனினும், அந்த மூன்று மாதிரி மாவட்டங்களில், தேவைப்படும் 444 பணியாளர்களுக்கு மாறாக 159 பணியாளர்கள் மட்டுமே பணிபுரிந்தனர் என்பதை தணிக்கை கண்டது. ஒட்டுமொத்த குறைவு 36 விழுக்காடாக இருக்கையில், குறைவின் அளவு புதுக்கோட்டை மாவட்டத்தில் 52 விழுக்காடு என்பது முதல் கோயம்புத்தூர் மாவட்டத்தில் 80 விழுக்காடு என்பது வரை இருந்தது.

(ஆ) எரிபொருள் பற்றாக்குறை: ஒவ்வொரு HPTக்கும் மாநில/தேசிய நெடுஞ்சாலைகளின் 20 முதல் 60 கிலோமீட்டர் நீள சாலை பகுதிகளும், ஒரு நெடுஞ்சாலை ரோந்து வாகனத்திற்கு மாதத்திற்கு 450 லிட்டர் எரிபொருளும் ஒதுக்கப்பட்டன. மாவட்ட காவல் அலுவலர்களும் மாநகர காவல் ஆணையர்களும் ஒவ்வொரு HPTக்கும் மாதத்திற்கு 160 லிட்டர் எரிபொருள் மட்டுமே வழங்கினர் என்பதை தணிக்கை கண்டது. அந்த மூன்று மாதிரி மாவட்டங்களிலும் ரோந்து வாகனங்கள் ஒதுக்கப்பட்ட பகுதிகளில் 22 முதல் 39 விழுக்காடு வரை மட்டுமே ரோந்து பணியில் ஈடுபட்டன என்பது மறுமொழியிலிருந்து தெரியவந்தது.

(இ) வாகனங்கள் வேறு பணிகளுக்கு மாற்றம்: மூன்று மாதிரி மாவட்டங்களிலும் 2013-18 காலகட்டத்தில் 37 ரோந்து வாகனங்களுள் 14 வாகனங்கள் நிலையான வகையில் வேறு பயன்பாடுகளுக்கு[24] மாற்றப்பட்டன; இதனால் ரோந்து பணிக்கு பயன்படக்கூடிய வாகனங்களின் எண்ணிக்கை நடைமுறையில் குறைந்தது.

(ஈ) ரோந்து வாகனங்களின் மோசமான நிலை: 2005-12 காலகட்டத்தில் வாங்கப்பட்ட 272 ரோந்து வாகனங்களுள் 41 வாகனங்கள் கழிவு செய்யப்பட்டு (2017), எட்டு வாகனங்கள் கழிவுக்கான நடவடிக்கைக்கு உட்பட்டிருந்தன (மே 2017 முதல்). புதியதாக 41 வாகனங்கள் வாங்குவதற்கான DGPன் கருத்துரு (2017) தமிழ்நாடு அரசிடம் நிலுவையில் இருந்ததால் (செப்டம்பர் 2018), கழிவு செய்யப்பட்ட வாகனங்களை HPTக்கள் தொடர்ந்து பயன்படுத்தி வருகின்றன என்பதை தணிக்கை கண்டறிந்தது.

(உ) கண்காணிப்பு: ரோந்து வாகனங்களின் இயக்கத்தை மாநில அளவில் ADGP/STPC மற்றும் மாவட்ட அளவில் DPOs/காவல் ஆணையர் ஆகியோர் நாள் முழுதும் தொடர்ந்து கண்காணிப்பதற்காக வாகனங்களில் GPS கருவிகள் பொருத்தப்பட்டன. எனினும், STPCல் பணியாளர் பற்றாக்குறை காரணமாக அங்கு கண்காணிப்பு பணி நடைபெறவில்லை; GPS கண்காணிப்பு கருவி பயனற்று வைக்கப்பட்டிருந்தது (செப்டம்பர் 2018). மாதிரி மாவட்டங்களில் GPS கண்காணிப்பு கருவி இருக்கவில்லை. எனவே, GPS மூலம் கண்காணிப்பது என்ற நோக்கம் நிறைவேறவில்லை. ரோந்து வாகனங்களின் இயக்கத்தை தணிக்கை குழுவினர் 14 மே 2018 அன்று நிகழ்நிலையாக (live) சரிபார்த்தபோது, GPS கருவி பொருத்தப்பட்டிருந்த 261 வாகனங்களுள் 207 வாகனங்கள் (79 விழுக்காடு) கண்காணிப்பை இயலாததாக ஆக்கும் வகையில், தமது GPS கருவியின் இயக்கத்தை நிறுத்தி வைத்திருந்தன என்பது தெரிய வந்தது.

---

[24] மாற்றம் பற்றிய விவரங்கள் தணிக்கைக்கு அளிக்கப்பட்ட பதிவுருக்களில் இருக்கவில்லை.

இவ்வாறாக, பணியாளர், வாகனம், எரிபொருள் ஆகியவற்றின் பற்றாக்குறை, வாகனங்கள் வேறு பயன்பாடுகளுக்கு மாற்றம் மற்றும் GPS கருவிகளின் இயக்க நிறுத்தம் ஆகிய காரணங்களால் மாதிரி மாவட்டங்களில் நெடுஞ்சாலை ரோந்து குழுக்களின் செயல்பாடு பாதிக்கப்பட்டிருந்தது.

2.1.8.5 சென்னை மாநகரில் ஒருங்கிணைந்த போக்குவரத்து மேலாண்மை அமைப்பு செயல்படுத்தப்படாமை

சென்னை மாநகரில் போக்குவரத்து மேலாண்மையை தரம் உயர்த்தும் நோக்கில், ஒரு ஒருங்கிணைந்த போக்குவரத்து மேலாண்மை அமைப்பை (Integrated Traffic Management System - ITMS) உருவாக்குவதற்காக தமிழ்நாடு அரசு ₹ 150 கோடி தொகையை ஒப்பளிப்பு செய்தது. போக்குவரத்து நகர்வு மீது நிகழ்நிலையான கண்காணிப்பு (real-time monitoring), விதி மீறல்களை கண்காணித்தல், அவசர ஊர்திகள் மற்றும் முக்கிய பிரமுர்களின் ஊர்திகளுக்காக தடையற்ற வழியை ஏற்படுத்துதல் போன்றவற்றுக்காக மாநகரில் 100 போக்குவரத்து சிக்னல் சந்திப்புகளை ITMSன் கீழ் வலையமைப்பாக இணைக்க திட்டமிடப்பட்டது.

ITMSஐ வடிவமைத்தல், பொருட்களை வழங்கி நிறுவுதல், இயக்கம் மற்றும் ஐந்து ஆண்டுகளுக்கு பராமரித்தல் ஆகியவற்றுக்கான ₹ 117 கோடி மதிப்புடைய பணியை சென்னை மாநகர காவல் துறை ஆணையர் ஒரு ஒப்பந்ததாரருக்கு வழங்கினார் (ஜூலை 2012). பணி ஜனவரி 2013க்குள் முடிக்கப்பட வேண்டும். எனினும், பணி செப்டம்பர் 2018ல் கூட முடிக்கப்படவில்லை.

ஒப்பந்ததாரர் நிரலின்படி ஜனவரி 2013ல் பணியை முடிக்கதவறிய காரணத்தினால் ஒப்பந்தத்தை நிறுத்துவதற்கான அறிவிப்பை கூடுதல் ஆணையர் (போக்குவரத்து) ஒப்பந்ததாரருக்கு அனுப்பினார் (மார்ச் 2013) என்பதை மாநகர காவல் ஆணையர் அலுவலக பதிவுருக்களின் கூர்ந்தாய்வு வெளிக்காட்டியது. அதை தொடர்ந்து, காவல் ஆணையர் ஏப்ரல் 2013ல் அமைத்த ஒரு குழு, ITMS பணியை மேற்கொள்ள அந்த ஒப்பந்ததாரர் சிறப்பு திறன், அனுபவம் மற்றும் போதுமான நிதி ஆதாரங்களை பெற்றிருக்கவில்லை என கண்டறிந்து, ஒப்பந்த முறிவு அறிவிப்புக்கு ஏற்பு அளித்தது (அக்டோபர் 2013). இதனால் பாதிக்கப்பட்ட ஒப்பந்ததாரர், பொருட்களை வாங்கியதற்கான செலவு, செய்யப்பட்ட பணிகள், இலாபத்தை இழந்தது, நன்மதிப்பிற்கான இழப்பீடு, வட்டி போன்றவற்றுக்காக ₹ 72 கோடி தொகை கோரி நடுவர் தீர்ப்பு நடவடிக்கையை (arbitration proceedings) துவக்கினார் (டிசம்பர் 2013); அது செப்டம்பர் 2018 நிலையில் நிலுவையில் இருந்தது.

பணியை மேற்கொள்ள ஒப்பந்ததாரரின் திறனை உறுதி செய்யாமை மற்றும் நிபுணர்களின் உதவியுடன் தகுந்த நடவடிக்கை எடுப்பதற்குரிய வழியை ஆராயாமல் ஒப்பந்தத்ததை முறிக்கும் அவசர முடிவு ஆகியவற்றின் காரணமாக, மாநகரில் போக்குவரத்து மேலாண்மையை மேம்படுத்துவதற்கான முக்கிய தொழில்நுட்ப நடவடிக்கையான ITMS ஒரு இயங்காநிலைக்கு வந்தது; தவிரவும், பணியின் முதல் கட்டத்தின் கீழ் செய்யப்பட்ட பணிக்காக தர வேண்டிய வகையில் தமிழ்நாடு அரசுக்கு ₹ 72 கோடி தொகைக்கான கடன்பொறுப்பு உள்ளது.

இப்பொருள் நடுவர் வழக்கின் கீழ் இருக்கிறது என்றும் அதன் முடிவின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தமிழ்நாடு அரசு மறுமொழி அளித்தது (டிசம்பர் 2018).

2.1.9 சாலை பொறியியல்

கல்வி, அமலாக்கம் மற்றும் அவசர கால உதவி என்பதுடன் பொறியியலும் சாலை பாதுகாப்பு என்பதன் அடிப்படை தன்மைகளுள் ஒன்றாகும். இந்திய சாலைகள் அமைப்பு (IRC) தரும் தகவலின்படி, சாலைகளும் அவற்றின் சூழல்களும் 2.5 விழுக்காடு விபத்துகளுக்கு காரணமாகின்றன; இக்காரணத்துடன் சாலை பயனாளர்களின் தவறுகள் மற்றும் வாகனங்கள் ஆகியவையும் இணைந்தால் அந்த கூட்டு 28 விழுக்காடு விபத்துகளுக்கு காரணமாகிறது (**வரைபடம் 2.3**). விபத்துகள் நிகழ்வதில் சாலைகளின் பங்கு மிக பெரிது என்பதால் சாலை பொறியியல் தொடர்பான பிரச்சினைகளை சரியாக தீர்க்க வேண்டிய தேவை உள்ளது. சாலை பாதுகாப்பு நடவடிக்கைகளில் சாலைகளின் முக்கியத்துவத்தை உணர்ந்த தமிழ்நாடு சாலை பாதுகாப்பு கொள்கை 2007, (i) திட்டமிடல், வடிவமைப்பு மற்றும் கட்டுமானம் ஆகியவற்றில் அண்மைக்கால தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துதல், (ii) சாலை பாதுகாப்பு தணிக்கையை நடத்தி, அதனை தொடர்ந்து நடத்துவதற்குரிய அமைப்பு ஏற்பாடுகளை உருவாக்குதல், (iii) அடிக்கடி விபத்து நடக்கும் இடங்களை ("black spots") தொடர்ந்து கண்டறிதல் மற்றும் (iv) சாலைகளின் முழு பயன்பாட்டை தடுக்கும் ஆக்கிரமிப்புகளையும் இடைஞ்சல்களையும் அகற்றுதல், ஆகியவற்றை பரிந்துரைத்தது. அக்கொள்கையில் கூறப்பட்ட நடவடிக்கைகள் மீதான தணிக்கையின் கூர்ந்தாய்வு தந்த முடிவுகள் பின்வரும் பத்திகளில் விவாதிக்கப்படுகின்றன.

2.1.9.1 சாலை பொறியியலில் சாலை பாதுகாப்பு நடவடிக்கைகள் பின்பற்றப்படாமை

சாலை சந்திப்புகளில் சாலை பாதுகாப்பு ஏற்பாடுகள், சாலை குறியீடுகள், வாகனப்பாதையில் வழி (lane) குறியீடுகள், பாதசாரிகளுக்கான வசதி போன்றவை இருக்க வேண்டும் என IRC கூறுகிறது. தணிக்கை குழுவினர் சென்னை மாநகரில் GST சாலை (SHU 88), GNT சாலை (SHU 87) ஆகிய இரண்டு சாலைகளில் மே மற்றும் ஜூன் 2018ல் நெடுஞ்சாலைகள் துறை அலுவலர்களுடனும், ஏழு[25] பேருந்து தட சாலைகளில் ஜூன் 2018ல் சென்னை மாநகராட்சி அலுவலர்களுடனும் இணைந்து கூட்டுக் கள ஆய்வு நடத்தினர்; அப்போது, (i) சூரிய ஒளியில் இயங்கும் பிரதிபலிக்கும் சாலை மேற்பரப்பு குறியீடுகள், (ii) சாலை குறியீடு பலகை, (iii) போதிய அளவில் நடைபாதை/சிறு கற்களைக் கொண்ட விளிம்புகள், (iv) போக்குவரத்து வழி குறியிடுகள், (v) காணக்கூடிய,

காட்சிப்படம் **2.6:** கிராண்ட் வடக்கு டிரங்க் சாலையின் நடுச்சுவரில் ஒழுங்குபடுத்தப்படாத இடைவெளிகள்

(ஆதாரம்: கூட்டுக் கள ஆய்வு)

---

25 உத்தமர் காந்தி சாலை, ஆலந்தூர் சாலை, குதிரை பந்தய சாலை, கிழக்கு ராமநாதன் சாலை, வாலாஜா சாலை, உஸ்மான் சாலை மற்றும் சர் தியாகராயர் சாலை.

கேட்கக்கூடிய மற்றும் உணரக் கூடிய வேகத்தடைகள் போன்றவை இல்லாத IRC விதிகளை பின்பற்றாத நேர்வுகள் காணப்பட்டன. சாலையின் நடுச்சுவரில் ஒழுங்குபடுத்தப்படாத இடைவெளிகள் பல இடங்களில் காணப்பட்டன (**காட்சிப்படம் 2.6**). காணப்பட்ட குறைபாடுகள் விரிவாக **இணைப்பு 2.3**ல் தரப்பட்டுள்ளன. மாதிரி சாலைகளில் எதுவும் IRC விதித்த தரத்தை எட்டவில்லை என்பதை தணிக்கை கண்டறிந்தது.

தணிக்கையால் சுட்டிக்காட்டப்பட்ட நிகழ்வுகள் உடனடியாக சரி செய்யப்பட்டன என தமிழ்நாடு அரசு மறுமொழி அளித்தது (டிசம்பர் 2018). தணிக்கையால் மறுமொழியின் உண்மைத்தன்மையை சரிபார்க்க முடியவில்லை.

2.1.9.2 சாலை பாதுகாப்பு தணிக்கையில் குறைபாடுகள்

அமைக்கப்பட்டுவரும் மற்றும் ஏற்கெனவே உள்ள சாலைகளில் விபத்து ஏற்படக்கூடிய அளவை மதிப்பிடுவதற்கு சாலை பாதுகாப்பு தணிக்கை (Road Safety Audit - RSA) முறை சார்ந்த ஒரு வழி ஆகும். புதிய நெடுஞ்சாலைகளுக்கான திட்டமிடல், கட்டுமானம் மற்றும் முடிவுறும் நிலைகளில் RSA நடத்த வேண்டும் என IRC கூறுகிறது. ஏற்கெனவே உள்ள சாலைகளில், அவற்றின் கட்டுமானம்/பராமரிப்புடன் தொடர்பில்லாத வல்லுனர்களை கொண்டு ஆண்டுதோறும் RSA நடத்தப்பட வேண்டும். சாலை பயன்பாட்டில் மாற்றம், ஆக்கிரமிப்பு, வடிவமைப்பில் சீரற்ற தன்மை, பழைமை கூடி வரும் உள்கட்டமைப்பு, சாலை மற்றும் போக்குவரத்து கட்டுப்பாடு கருவிகளின் போதிய பராமரிப்பின்மை ஆகியவை காரணமாக விபத்து ஏற்படக்கூடிய வாய்ப்பை பற்றி RSAன் கீழ் ஆய்வு செய்யப்பட வேண்டும். RSA நடத்துவதற்காக அமைப்புரீதியான ஏற்பாடு இருக்க வேண்டும் என தமிழ்நாடு சாலை பாதுகாப்பு கொள்கையும் கூறுகிறது.

தணிக்கை பின்வருவனவற்றை கண்டது;

- நான்கு மாதிரி நெடுஞ்சாலை கோட்டங்களுள் எந்த கோட்டமும் 2013-17 காலகட்டத்தில் RSA நடத்தவில்லை. 2017-18ல் நெடுஞ்சாலை துறை தலைமை பொறியாளரின் ஒரு உத்தரவின் பேரில் நான்கு கோட்டங்களும் RSA நடத்தின. கோயம்புத்தூர், கடலூர் மற்றும் புதுக்கோட்டை கோட்டங்கள் அனைத்து மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் பெரிய மாவட்ட சாலைகளில் RSA முடித்துவிட்டதாக தெரிவித்தன (அக்டோபர் 2017 முதல் மார்ச் 2018 வரை). சென்னை கோட்டத்தில் 16 மாநில நெடுஞ்சாலைகளுள் 12ல் மட்டுமே RSA முடிக்கப்பட்டது. கோயம்புத்தூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் 'பிற மாவட்ட சாலைகள்' தணிக்கைக்கு உட்படுத்தப்படவில்லை.
- 2017-18ல் மாதிரி மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட RSAல், தணிக்கை செய்யப்படும் சாலைகளுக்கு தொடர்பில்லாத நபர்களே தணிக்கையை மேற்கொள்ளவேண்டும் என்ற IRCன் முக்கிய விதி பின்பற்றப்படவில்லை. அச்சாலைகளின் பராமரிப்புக்கு பொறுப்பாக இருந்த பொறியாளர்களே RSAவை நடத்தினர். இவ்வாறாக, சாலைகளை பற்றி சார்பற்ற மதிப்பீடு நடத்தப்படவில்லை.
- RSA சாலைகளின் முழு நீளத்திற்கும் நடத்தப்படாமல், **அட்டவணை 2.13**ல் கூறப்பட்டுள்ளவாறு, பிரச்சனைகள் ஏற்படக்கூடிய தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் (selected vulnerable stretches) மட்டுமே நடத்தப்பட்டது.

அட்டவணை 2.13: சாலைகளின் அனைத்து பகுதிகளிலும் RSA நடத்துவதற்கான நிலை

மாவட்டம்	RSA நடத்தப்பட வேண்டிய பகுதிகளின் மொத்த எண்ணிக்கை			RSA நடத்தப்படாத பகுதிகளின் எண்ணிக்கை		
	மா.நெ.	MDR	பி.மா.சா.	மா.நெ.	MDR	பி.மா.சா.
சென்னை	328	28	44	320 *(98)*	21 *(75)*	39 *(88)*
கோயம்புத்தூர்	574	233	10	462 *(80)*	167 *(72)*	8 *(80)*
கடலூர்	576	96	209	504 *(88)*	69 *(72)*	150 *(72)*
புதுக்கோட்டை	556	206	18	523 *(94)*	204 *(99)*	18 *(100)*
மொத்தம்	**2,034**	**563**	**281**	**1,809**	**461**	**215**

மா.நெ.: மாநில நெடுஞ்சாலை; MDR: மாவட்ட பிராதன சாலை; பி.மா.சா.: பிற மாவட்ட சாலை
அடைப்புக்குறிகளுக்குள் உள்ள இலக்கங்கள் விழுக்காட்டைக் குறிக்கும்.
(ஆதாரம்: நெடுஞ்சாலை கோட்டங்களின் பதிவுருக்கள்)

➢ RSAல் விடுபட்ட 2,485 பகுதிகளில் நடத்தப்பட்ட கூட்டுக் கள ஆய்வு (மே முதல் ஆகஸ்ட் 2018 வரை) அவற்றின் நிலைமைகளில் இருந்த குறைபாடுகளை வெளிக்காட்டின. அச்சாலைகளில் சாலை குறியீடுகள், குறியீடு பலகைகள், வழி பிரிப்பு குறிப்பு கம்பங்கள், சிறுபாலங்கள், பாலங்கள் மற்றும் கோவில்கள் போன்றவற்றை குறிக்கும் ஆபத்து குறியீடுகள், நெடுஞ்சாலையுடன் சேரும் கிளைச்சாலைகளில் பிரதிபலிப்பான்களுடன் கூடிய வேகத்தடைகள், போதிய அளவிலான கரை விளிம்புகள் மற்றும் இடைத்தளங்கள் ஆகியன IRC விதிகளின்படி இருக்கவில்லை (**காட்சிப்படம் 2.7**).

காட்சிப்படம் 2.7: சாலை தடவாளங்களில் அடங்கும் கூறுகளை பற்றிய எடுத்துக்காட்டான படம்



➢ கடலூர் மாவட்டத்தில், RSA அறிக்கைகள் (மே முதல் ஆகஸ்ட் 2017 வரை) பல அடிப்படை சாலை பாதுகாப்பு கூறுகள்[26] இல்லாததை சுட்டிக்காட்டினாலும், பரிந்துரைக்கப்பட்ட தீர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை (ஜூலை 2018). ஜூன் 2018ல்

26 சாலை ஓரங்களுக்கான சாலைக் குமிழ்கள், சாலை குறியீடுகள், ஆபத்து குறியீடுகள், அடுத்து வரும் வளைவு, குறுகிய பாலங்கள், மற்றும் கிளை சாலைகள் குறித்த எச்சரிக்கை பலகைகள், கிடைநிலை வளைவுகளில் நடைபாதையில் கூடுதல் அகலம், சாலை குறியீடு பலகை, பிரதிபலிப்பான்களுடன் கூடிய வேகத்தடைகள், வேக கட்டுப்பாடு குறித்த பலகைகள், மற்றும் 'U' திருப்பம், பள்ளி பகுதி போன்றவற்றுக்கான குறியீடு பலகைகள்.

23 சாலைகளில் துறை அதிகாரிகளுடன் இணைந்து நடத்தப்பட்ட கூட்டுக் கள ஆய்வின் போது, சாலைக் குறியீடுகள், இடைத்தள அளவுகள், சிறு பாலங்கள் மற்றும் இடைத்தளங்களில் பிரதிபலிப்பான்கள், கரை விளிம்புகள், டிலினியேட்டர்கள் ஆகியவற்றில் குறைபாடுகள் இருந்ததை தணிக்கை கண்டது.

- 2013-18 காலகட்டத்தில் 488 பொறியாளர்களுள் 57 பொறியாளர்கள் மட்டுமே RSA நடத்துவதற்கு பயிற்றுவிக்கப்பட்டதால், RSA நடத்துவதற்கு நெடுஞ்சாலைகள் துறை போதிய திறன் மேம்பாடு இல்லை.

RSA நடத்த துவங்கியுள்ளது வரவேற்புக்குரிய நடவடிக்கை என்பது ஒரு புறம் இருக்க, நெடுஞ்சாலைகளின் அனைத்து பகுதிகளையும் IRC விதிகளின்படி தணிக்கை செய்து குறை தீர்க்கும் நடவடிக்கை எடுப்பதை உறுதி செய்யவும் வேண்டும். அவ்வாறு செய்ய தவறினால், RSAன் நோக்கமே வீணாகும்.

பிற மாவட்டச் சாலைகளைத் தவிர்த்து அனைத்து சாலைகளுக்கும் 2017-18 காலகட்டத்தில், RSA நடத்தப்பட்டது என்றும் பிற மாவட்ட சாலைகளுக்கான RSA கூடிய விரைவில் முடிக்கப்படும் என்றும் தமிழ்நாடு அரசு மறுமொழி அளித்தது (டிசம்பர் 2018). சாலைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட சில பகுதிகள் மட்டுமே RSAக்கு உட்படுத்தப்பட்டன என்பதால் இம்மறுமொழி ஏற்கத்தக்கதல்ல.

2.1.9.3 அடிக்கடி விபத்துகள் நடக்கும் பகுதிகளை சீர்படுத்துவதில் குறைபாடுகள்

அடிக்கடி விபத்துகள் நடக்கும் பகுதிகளை (black spots) சீர்படுத்த காலவரையறையுடன் கூடிய ஒரு திட்டத்தை அளிக்குமாறும் பணி முன்னேற்றம் குறித்து அவ்வப்போது அறிக்கை அளிக்குமாறும் சாலை பாதுகாப்பு மீதான உச்ச நீதிமன்ற குழு உத்தரவிட்டது (2015). அடையாளம் காணப்பட்ட விபத்துகள் நடக்கும் பகுதிகளை ஆய்வு செய்து மேற்கொள்ள வேண்டிய தகுந்த குறுகிய கால பொறியியல் தீர்வு நடவடிக்கைகளை குறிப்பிடுமாறும், மாநில சாலை பாதுகாப்பு மன்றத்தின் ஒப்புதலை பெற வேண்டிய நீண்ட கால தீர்வு நடவடிக்கைகளை பரிந்துரைக்குமாறும் அனைத்து கோட்ட பொறியாளர்களுக்கும் தலைமை பொறியாளர் (நெடுஞ்சாலை), கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்டம் உத்தரவிட்டார் (நவம்பர் 2016). மாதிரி மாவட்டங்களில் அடையாளம் காணப்பட்டு சீர்படுத்தப்பட்ட black spots தொடர்பான விவரங்கள் **அட்டவணை 2.14ல்** தரப்பட்டுள்ளன.

அட்டவணை 2.14: நெடுஞ்சாலை துறை அடையாளம் கண்டு சீர்படுத்திய black spots பற்றிய விவரங்கள்

கோட்டம்	அடையாளம் காணப்பட்ட black spots எண்ணிக்கை				சீர்படுத்தப்பட்டவை				சீர்படுத்த வேண்டியவை			
	2013-15[அ]	2014-15[ஆ]	2016[இ]	மொத்தம்	2013-15	2014-15	2016	மொத்தம்	2013-15	2014-15	2016	மொத்தம்
சென்னை	3	-	-	**3**	-	-	-	**-**	3	-	-	**3**
கோயம்புத்தூர்	5	1	5	**11**	4	1	-	**5**	1	-	5	**6**
கடலூர்	-	9	-	**9**	-	2	-	**2**	-	7	-	**7**
புதுக்கோட்டை	3	4	2	**9**	1	1	-	**2**	2	3	2	**7**
மொத்தம்	**11**	**14**	**7**	**32**	**5**	**4**	**-**	**9**	**6**	**10**	**7**	**23**

அ ஒரு இடத்தில் ஐந்து உயிரிழப்பு நேர்ந்த சாலை *விபத்துகளுக்கு* மேல் ஏற்பட்டதன் அடிப்படையில்

ஆ ஒரு இடத்தில் உயிரிழப்புடன் கூடிய மூன்றுக்கு மேற்பட்ட சாலை விபத்துகள் நிகழ்ந்ததன் அடிப்படையில்

இ 500 மீட்டர் நீள பகுதிக்குள் உயிரிழப்புடன் கூடிய இரண்டுக்கு மேற்பட்ட சாலை விபத்துகள் நிகழ்ந்ததன் அடிப்படையில்

(ஆதாரம்: நெடுஞ்சாலை கோட்டங்கள் அளித்த விவரங்கள்)

தணிக்கையில் பதிவுருக்களின் கூர்ந்தாய்வும், தணிக்கை குழுவினர் நெடுஞ்சாலைகள் துறை அலுவலர்களுடன் இணைந்து நடத்திய கூட்டுக் கள ஆய்வும் (ஜூலை/ஆகஸ்ட் 2018) **அட்டவணை 2.15**ல் குறிப்பிட்டுள்ளவாறு குறைபாடுகளை வெளிக்காட்டின.

அட்டவணை 2.15: அடிக்கடி விபத்துகள் நடக்கும் இடங்கள் மீதான கூட்டுக் களஆய்வின் சரிபார்ப்பின்போது காணப்பட்ட குறைபாடுகள்

மாவட்டம்	சீர்படுத்தப்பட்ட விபத்துகள் நடக்கும் பகுதி	தேவையான சீர்திருத்த நடவடிக்கை செய்ய வேண்டியிருந்த விபத்துகள் நடக்கும் பகுதி			
		ஆபத்து குறியீடுகள்	வேகத்தடை	எச்சரிக்கை குறியீடு பலகை	இடைஞ்சல் நீக்கம்
கோயம்புத்தூர்	5	3	2	8	4
கடலூர்	2	0	1	4	1
புதுக்கோட்டை	2	1	6	7	3
மொத்தம்	**9**	**4**	**9**	**19**	**8**

(ஆதாரம்: கூட்டுக் களஆய்வு)

நெடுஞ்சாலைகள் துறை அடையாளம் கண்ட black spots தவிரவும், காவல் துறை 2013-14 மாநிலத்தில் 765 அடிக்கடி விபத்துகள் நடக்கும் இடங்களை அடையாளம் கண்டது; இதில், (i) கடலூர் மாவட்டத்தில் 33, (ii) புதுக்கோட்டை மாவட்டத்தில் 21 மற்றும் (iii) கோயம்புத்தூர் மாவட்டத்தில் 21 black spots அடங்கும். சென்னை மாவட்டத்தில் black spot எதுவும் அடையாளம் காணப்படவில்லை. கடலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கடலூர் - விருத்தாச்சலம் - சேலம் சாலையில் (தேசிய நெடுஞ்சாலை 532) நான்கு black spot இடங்களை அடையாளம் கண்டிருந்தார். காவல் துறை இந்த பகுதிகளில் வேகத்தடைகள் மற்றும் எச்சரிக்கை பலகை அமைப்பதை தேவைப்பட்ட நடவடிக்கையாக அடையாளம் கண்டிருந்தனர். தணிக்கை குழுவினர் நெடுஞ்சாலை துறை அலுவலர்களுடன் இணைந்து அந்த நான்கு black spot இடங்களில் கூட்டுக் கள ஆய்வு நடத்தி (ஜூலை 2018) IRC விதிகளுடன் ஒப்பிட்டவாறு கீழ்கண்ட குறைபாடுகளை கண்டறிந்தனர்:

- 10,000 Passenger Car Units (சாலைகளில் வாகன போக்குவரத்தை அளவிடும் முறையில் பயன்படும் ஒரு குறியீடு) என்ற அளவிற்கு மேற்பட்ட போக்குவரத்து அளவிற்கு ஏற்ப போதிய அளவில் விளிம்புகளை அமைக்காமை,
- கட்சி கொடி நடுதல், அடித்தளக் கம்பங்கள், தேநீர் கடை, உணவகத்தின் உணவு பட்டியல் ஆகியவற்றால் சாலை ஆக்கிரமிப்பின் காரணமாக வாகன பயனாளர்களுக்கு இடைஞ்சல் ஏற்படுதல்,
- தடுப்பு சுவர்களுடன் கூடிய பாதசாரி நடைபாதை, பேருந்து தடம், பாதசாரிகள் கடக்குமிடம், பேருந்து நிறுத்தத்தில் நடைபாதை குறியீடுகள் ஆகியன இல்லாமை
- சாலை ஓரங்களில் இருந்து மின் கம்பிகள் அகற்றப்படாமை மற்றும்
- பெரிய சாலையுடன் சிறிய சாலை இணையும் இடத்தில் ('T' சந்திப்பு) வாகனங்களை ஒழுங்குபடுத்த போக்குவரத்து தீவு, கட்டுப்பாடு அற்ற சந்திப்புகள் மற்றும் வாகனங்கள் அதிவேகமாக செல்லக்கூடிய இடங்களில் வேகத்தடை மற்றும் சிறு பாலங்களில் பிரதிபலிப்பான் மற்றும் ஆபத்து குறியீடு ஆகியவற்றை அமைக்காமை.

Black spots சரிசெய்யப்பட்டு வருவதாக தமிழ்நாடு அரசு மறுமொழி அளித்தது (டிசம்பர் 2018).

2.1.9.4 சாலை ஆக்கிரமிப்புகளும் இடைஞ்சல்களும்

சாலை ஓரங்களில் இடைஞ்சல் ஏற்படுத்தும் ஆக்கிரமிப்புகள் பொதுவான நிகழ்வுகளாகும். மாதிரி மாவட்டங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட சாலைகளில் தணிக்கை குழுவினர் நடத்திய கூட்டுக் கள ஆய்வு (ஜூலை/ஆகஸ்ட் 2018), 505 கிலோமீட்டர் நீள சாலை பகுதிகளில் 378 ஆக்கிரமிப்புகள் இருந்ததை சுட்டிக்காட்டியது. அதன் விவரங்கள் **அட்டவணை 2.16**ல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 2.16: கூட்டுக் களஆய்வின் போது சாலைகளில் காணப்பட்ட ஆக்கிரமிப்புகளும் இடைஞ்சல்களும்

மாவட்டம்	நெடுஞ்சாலை வகையை சார்ந்த சாலைகளின் எண்ணிக்கை	நீளம் (கிமீ)	கூட்டுக் களஆய்வு செய்யப்பட்ட சாலைகளின் நீளம் (கிமீ)	காணப்பட்ட ஆக்கிரமிப்புகளின் எண்ணிக்கை
சென்னை	9	80	80	50
கடலூர்	23	184	174	134
கோயம்புத்தூர்	10	163	94	134
புதுக்கோட்டை	6	216	157	60
மொத்தம்	**48**	**643**	**505**	**378**

(ஆதாரம்: கூட்டுக் களஆய்வு)

சாலை ஓரங்களில் வாகனங்கள் நிறுத்துதல், சாலை/நடைபாதையில் கடைகள் ஆக்கிரமிப்பு, மரம், மின் பெட்டி, விளக்கு தூண் போன்ற ஆக்கிரமிப்புகள் மற்றும் இடைஞ்சல்களை கண்டறிய மாநில சாலை பாதுகாப்பு மன்றமும் காவல் துறையும் செயல் திட்டம் எதையும் வகுக்கவில்லை. நகர்ப்புற தெரு வணிகர் சட்டம், 2014ன்படி, தொடர்புடைய உள்ளாட்சி அமைப்பு, தகுதியுள்ள தெரு வணிகர்களை அடையாளம் கண்டு வணிகம் செய்வதற்கான சான்றிதழை அளிப்பதற்காக ஒரு நகர வணிகர் குழுவை அமைக்க வேண்டும். பிற வணிகர்கள் அகற்றப்படுவர். மாதிரி மாவட்டங்களில் அவ்வாறான குழு அமைக்கப்பட்டு தெரு வணிகர்களுக்கு உயிர்மரபணு (bio-metric) அடையாளம் வழங்கப்பட்டாலும், வணிகம் செய்வதற்கான சான்றிதழ் எந்த வணிகருக்கும் வழங்கப்படவில்லை என்பன தணிக்கை கண்டறிந்தது. எனினும், தகுதியற்ற வணிகர்களை அகற்றவும் தகுதியுள்ள வணிகர்களை இடமாற்றம் செய்ய ஒரு இடத்தை கண்டறியவும் உள்ளாட்சி அமைப்புகள் நடவடிக்கை எடுக்கவில்லை.

உள்ளூர் அதிகாரிகள் ஆக்கிரமிப்புகளை அகற்றாததினால் அவற்றால் சாலையின் அகலம் குறைந்த காரணத்தினால் பாதசாரிகள் மற்றும் வாகன பயனாளர்களின் சாலை பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்படுகிறது.

2.1.10 அவசர மருத்துவ உதவி

அவசர மருத்துவ உதவி என்பது சாலை பாதுகாப்பு கட்டமைப்பில் உள்ளடங்கிய ஒரு கூறு ஆகும். அவசர மருத்துவ உதவியை வலுப்படுத்துவதற்காக, தமிழ்நாடு சாலை பாதுகாப்பு கொள்கை 2007, (i) அரசு மருத்துவமனைகளின் அவசர மருத்துவ உதவி அளிக்கும் திறனை மேம்படுத்துதல், (ii) தனியார் மருத்துவர்கள் மற்றும் மருத்துவமனைகளை அவசர மருத்துவ உதவி அளிப்பதில் ஈடுபடுத்துதல் மற்றும் (iii) விபத்து உதவி முறையை மேம்படுத்தி அது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல் ஆகியவை செய்யப்பட வேண்டும் என கூறியது.

மேலும், ஐக்கிய நாடுகள் சபையின் SDGயும், 2020க்குள் உலகம் முழுவதிலும் சாலை போக்குவரத்து விபத்துகளால் ஏற்படும் உயிரிழப்புகளையும் காயமுறுவதையும் பாதியாக குறைக்க வேண்டும் என இலக்கை விதித்துள்ளது.

சாலை போக்குவரத்து விபத்துகளில் பாதிக்கப்பட்டோருக்கான அவசர சிகிச்சை ஊர்தி சேவைகளை விரிவுபடுத்துவதில் மாநிலம் பெரும் முன்னேற்றத்தை கண்டுள்ளது. எனினும், அவசர மருத்துவ உதவி முறையில் பிற வகைகளில் பின்வரும் பத்திகளில் விவாதிக்கப்பட்டுள்ளவாறு குறைபாடுகள் இருப்பதை தணிக்கை கண்டது

2.1.10.1 மருத்துவமனைக்கு முந்தைய நிலை சிகிச்சை

(அ) அவசர ஆம்புலன்ஸ் சேவைகள்

> பாராட்டுக்குரிய செயல்
>
> **2013-18**ல் சாலை விபத்துகளில் பாதிக்கப்பட்டவர்களில் மாநில அளவில் **79** விழுக்காடு மற்றும் மாதிரி மாவட்டங்களில் **80** விழுக்காடு பாதிக்கப்பட்டவர்கள் பொன்னான நேரத்திற்குள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர் என்பதை அவசர சிகிச்சைக்கான ஆணையர் அளித்த விவரங்கள் காட்டின.

ஜூன் 2018 நிலையில் தமிழ்நாடு அரசு 932 ஆம்புலன்ஸ்கள் உள்ள ஊர்தி தொகுப்பு கொண்ட 24 x 7 ஆம்புலன்ஸ் சேவையை அமைத்துள்ளது. ஆம்புலன்ஸ் சேவை கட்டணமின்றியும் கட்டணமற்ற தொலைபேசி எண் (108 ஆம்புலன்ஸ் சேவை) கொண்டும் இயங்குகிறது. தமிழ்நாடு நல்வாழ்வு அமைப்பு திட்டத்தின் (Tamil Nadu Health System Project - TNHSP) திட்ட இயக்குனர் அளித்த விவரங்களின் படி, மாதிரி மாவட்டங்களில் 2013-18 காலகட்டத்தில் 108 ஆம்புலன்ஸ் சேவை சாலை விபத்துக்குள்ளான 1.03 இலட்சம் நபர்களை கொண்டு சென்றது. மாநில அளவில், இக்காலகட்டத்தில் கொண்டு செல்லப்பட்ட மொத்த நோயாளிகளின் எண்ணிக்கையில் சாலை விபத்துக்குள்ளானோரின் எண்ணிக்கை 21 விழுக்காடு ஆகும். இந்த ஆம்புலன்ஸ்கள் விபத்து நிகழ்ந்த இடத்திலும் உரிய மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியிலும், மருத்துவமனைக்கு முந்தைய நிலை சிகிச்சையை அளிக்கின்றன.

விபத்து நிகழ்வுக்கு பிந்தைய ஒரு மணி நேரம் பொன்னான நேரம் (Golden Hour) எனப்படும். விபத்துக்குள்ளானோருக்கு பொன்னான நேரத்திற்குள் சிகிச்சை அளிக்கப்பட்டால் உயிர் பிழைப்பதற்கான வாய்ப்பு அதிகமாக இருக்கும். பொன்னான நேரத்திற்கு பின் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டது பற்றிய மாதிரி மாவட்ட வாரியான விவரங்களை **அட்டவணை 2.17** அளிக்கிறது.

அட்டவணை 2.17: சாலை விபத்துக்குள்ளானோர் பொன்னான நேரத்திற்கு பின் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டமை

மாவட்டம்	**2013-18**ல் சாலை விபத்துக்குள்ளானோரின் மொத்த எண்ணிக்கை	பொன்னான நேரத்திற்கு பின் சேர்க்கப்பட்டோரின் எண்ணிக்கை	பொன்னான நேரத்திற்கு பின் சேர்க்கப்பட்டோரின் விழுக்காடு
சென்னை	28,805	3,042	*10.56*
கோயம்புத்தூர்	31,790	4,835	*15.21*
கடலூர்	26,613	8,560	*32.16*
புதுக்கோட்டை	15,642	3,900	*24.93*
மொத்தம்	**1,02,850**	**20,337**	***19.77***

(ஆதாரம்: TNHSP அளித்த விவரங்கள்)

நகர்ப்புற பகுதிகள் அதிக அளவில் உள்ள சென்னை மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்கள், கடலூர் மற்றும் புதுக்கோட்டை ஆகிய ஊரக மாவட்டங்களை விட சிறப்பாக செயல்படுவதை காட்டும் **அட்டவணை 2.17**ல் உள்ள தரவுகள், இப்பொருளில் உள்ள நகர்ப்புற ஊரகப் பகுதிகளிடையே உள்ள இடைவெளியை காட்டுகிறது. தமிழ்நாடு நல்வாழ்வு அமைப்பு திட்டத்தின் திட்ட இயக்குநர் (i) போக்குவரத்து நெரிசல்கள், (ii) அருகாமையில் மருத்துவமனைகள் இல்லாதது மற்றும் (iii) அருகிலுள்ள மருத்துவ ஊர்தி பணியில் ஈடுபட்டுள்ளது ஆகிய காரணங்களால் சாலை போக்குவரத்து விபத்துகளில் பாதிக்கப்பட்டவர்கள் தாமதமாக அனுப்பப்பட்டனர் என தெரிவித்தார்.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் 91.17 விழுக்காடு நேர்வுகளில் மருத்துவ ஊர்தியை ஒதுக்கீடு செய்ய 10 நிமிடங்களுக்கு குறைவான நேரம் எடுத்துக் கொள்ளப்பட்டது என்பதை மார்ச் 2018ல் மருத்துவ ஊர்திகளின் செயல்பாடு மீதான பகுப்பாய்வு வெளிப்படுத்தியது. ஆனால், மற்ற மாவட்டங்களில் மருத்துவ ஊர்தியை ஒதுக்கீடு செய்ய 10 நிமிடங்களுக்கு குறைவான நேரம் 84.45 முதல் 85.83 விழுக்காடு வரையான நேர்வுகளில் மட்டுமே எடுத்துக் கொள்ளப்பட்டது. மருத்துவ ஊர்தியை ஒதுக்கீடு செய்ய எடுத்துக் கொள்ளும் காலம் என்பது முக்கியமான காரணக்கூறாகையால் ஊர்தியை ஒதுக்கீடு செய்வதில் மேலும் சிறப்பான மேலாண்மை தேவைப்படுகிறது. அவசரகால உதவி கட்டமைப்பை வலுப்படுத்துவதற்காக நெடுஞ்சாலைகளின் அருகே அமைந்துள்ள 76 புதிய நிறுவனங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன என்றும் மருத்துவ ஊர்தி சேவைகளின் தரநிலையை மேம்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் தமிழ்நாடு அரசு மறுமொழி அளித்தது (டிசம்பர் 2018).

(ஆ) அவசர விபத்து நிவாரண சிகிச்சை மையங்கள்

அவசர மருத்துவ உதவி அளிப்பதில் தனியார் மருத்துவர்கள் மற்றும் மருத்துவமனைகளை ஈடுபடுத்த வேண்டும் என தமிழ்நாடு சாலை பாதுகாப்பு கொள்கை 2007 கூறியதற்கேற்ப தமிழ்நாடு அரசு 2001-06 காலகட்டத்தில், தனியார் மருத்துவமனைகளுடன் இணைந்து மாநிலம் முழுவதும் நெடுஞ்சாலைகளை ஒட்டி 100 அவசர விபத்து நிவாரண சிகிச்சை மையங்களை (EARC) அமைத்தது. EARC என்பது, விபத்துக்குள்ளானவர்களை அருகில் உள்ள அவசர கால சிகிச்சை மையத்திற்கு (TCC) அனுப்புமுன் அவர்களுக்கு முதல் உதவி அளிக்கும் மருத்துவம் சார்ந்த பணியாளர்களை கொண்டு நெடுஞ்சாலைகளில் அமைந்த ஒரு வசதி ஆகும். சாலை விபத்துக்குள்ளானோரை தகுந்த மருத்துவமனைகளுக்கு அனுப்புமுன் அவர்களை நிலைப்படுத்த உதவுவதற்காக EARC அமைக்கப்பட்டன. நூறு EARCக்களுள், 66 EARCக்கள் முழுவதுமாக தனியார் மருத்துவமனைகளாலும், 34 EARCக்கள் தமிழ்நாடு அரசு பகுதி அளவில் நிதி அளித்தும் நடத்தப்பட்டன. நாளடைவில் பல EARCக்கள் தமது செயல்பாட்டை நிறுத்தின என்பதால் மருத்துவமனைக்கு முந்தைய சிகிச்சை அளிக்கும் இந்த முறை திட்டமிட்டபடி செயல்படவில்லை என்பதை தணிக்கை கண்டது. ஆகஸ்ட் 2018 நிலையில் 18 EARCக்கள்[27] மட்டுமே இயங்கின; அவசர மருத்துவ உதவி அளிக்கும் பணியில் தனியார் மருத்துவமனைகளை ஈடுபடுத்துவதில் இருந்த தளர்வை இது காட்டுகிறது.

நிர்வாக அமைப்பை பொறுத்தவரை, ஆம்புலன்ஸ் சேவைகளை மற்றும் TCCகளையும் விபத்து சிகிச்சை ஆணையர் (Commissioner of Trauma Care)

[27] முழுவதுமாக நிதியளிக்கப்பட்டவை: 12; பகுதி அளவில் நிதியளிக்கப்பட்டவை: 6.

ஒருங்கிணைக்கையில், EARC சாலை பாதுகாப்பு ஆணையரின் பொறுப்பில் உள்ளது என்பதை தணிக்கை கண்டது. EARCக்களை விபத்து சிகிச்சை ஆணையரின் வரம்பிற்குள் கொண்டு வருவது அவை மேலும் பயனுள்ள வகையில் செயல்பட உதவும்.

108 மருத்துவ ஊர்தி சேவைகள் அறிமுகப்படுத்தப்பட்டபின் EARC செயல்பாடுகள் படிப்படியாக குறைந்துவிட்டன என்று தமிழ்நாடு அரசு மறுமொழி அளித்தது (டிசம்பர் 2018). எனினும், 108 மருத்துவ ஊர்தி சேவை அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர், EARCஐ இயக்குவதற்கான அரசின் கொள்கை குறித்து இம்மறுமொழி எதனையும் தெரிவிக்கவில்லை.

2.1.10.2 அவசர கால சிகிச்சை மையம்

பதினோராவது (2007-12) மற்றும் பனிரெண்டாவது (2012-17) ஐந்தாண்டு திட்ட காலத்தில், தேசிய நெடுஞ்சாலைகளை ஒட்டி அமைந்திருந்த 14 அரசு மருத்துவமனைகளில்[28] TCC அமைக்க இந்திய அரசு நிதி அளித்தது. TCC என்பவை சாலை விபத்துகளில் விபத்துக்குள்ளானோருக்கு சிகிச்சை அளிக்க 24 மணி நேரமும் இயங்கும் சிறப்பு அமைப்புகளாகும். தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலைகளில் 50-60 கிமீ நீள பகுதி ஒன்றிற்கு ஒரு TCC இருக்க வேண்டும் என்பது தமிழ்நாடு அரசின் கொள்கை ஆகும். TCCல் இருக்க வேண்டிய வசதிகளின் அளவையும் தமிழ்நாடு அரசு வகுத்தது (அக்டோபர் 2014). நெடுஞ்சாலைகள் ஒன்றுக்கொன்று குறுக்காக செல்வதால், TCCக்களை பொருத்தமான இடத்தில் அமைக்கும் பொருட்டு, 50 - 60 கிமீ நீள பகுதி ஒன்றிற்கு ஒரு TCC இருக்க வேண்டும் என்ற அளவின்படி தேவையான எண்ணிக்கையை தகுந்த ஆய்வின் மூலம் கணக்கிட வேண்டும். எனினும், அவ்வாறான ஆய்வு நடத்தப்படவில்லை; மார்ச் 2018 நிலையில் மாநிலத்தில் உள்ள தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலைகளின் மொத்த 17,154 கிமீ நீளத்திற்கும் 59 TCC மட்டுமே இருந்தன.

அந்த 59 TCCகளில் அடங்கிய 2014ல் துவக்கப்பட்ட 45 TCCகளில்[29] வசதிகள் முழுமையாக அமைக்கப்படவில்லை என்பதை தணிக்கை கண்டது. மாதிரி மாவட்டங்களில் 10 TCCகளில் செய்யப்பட்ட தணிக்கையின் கூர்ந்தாய்வு, பின்பவரும் பத்திகளில் விவாதிக்கப்பட்டுள்ளவாறு, பலனுள்ள சேவை அளிக்கும் வகையில் போதிய பணியாளர்களும் கருவிகளும் அவற்றில் இருக்கவில்லை என்பதை காட்டியது.

(அ) கருவிகள் பற்றாக்குறை

ஒரு TCCல் அறுவை அரங்கு, குருதி வங்கி போன்றவையும், சி-ஆர்ம் இமேஜ் இன்டென்ஸிவெயர், CT ஸ்கேன், அல்ட்ராசோனாகிராபி, வென்டிலேட்டர் போன்ற பெரிய வகை கருவிகள் உள்ளிட்ட 39 வகை மருத்துவ கருவிகளும் இருக்க வேண்டும். எனினும், சோதனை ஆய்வு செய்யப்பட்ட TCCக்கள் எதுவும் இவற்றை முழுமையாக பெற்றிருக்கவில்லை. நான்கு TCCக்கள்[30] தனியான அவசரகால அறுவை அரங்கு இருக்கவில்லை. கருவிகளின் எண்ணிக்கையின் அடிப்படையில், பற்றாக்குறை 51 முதல் 100 விழுக்காடு வரை இருந்தது (**இணைப்பு 2.4**).

---

[28] 11வது திட்டம்: 9; 12வது திட்டம்: 5.

[29] 11வது மற்றும் 12வது ஐந்தாண்டு திட்டங்களின் கீழ் அமைக்கப்பட்ட 14 TCC நீங்கலாக.

[30] அறந்தாங்கி, கடலூர் மற்றும் விருத்தாச்சலம் ஆகிய இடங்களில் அரசு மருத்துவமனைகள் மற்றும் சென்னையில் கீழ்ப்பாக்கம் மருத்துவ கல்லூரி மருத்துவமனை.

பரிந்துரைக்கப்பட்ட அளவுகளின்படி TCCக்களுக்கு கருவிகளை வழங்க விபத்து சிகிச்சை ஆணையர் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதை தணிக்கை கண்டது. இது தொடர்பான காரணம் தணிக்கைக்கு தெரிவிக்கப்படவில்லை.

(ஆ) பணியாளர் பற்றாக்குறை

ஒவ்வொரு TCCலும் 13 மருத்துவர்கள் உள்ளிட்ட 61 மருத்துவ பணியாளர்களும் மற்றும் மருத்துவம் சார்ந்த பணியாளர்களும் (paramedical staff) இருக்க வேண்டும். சோதனை ஆய்வு செய்யப்பட்ட 10 TCCகளில் மருத்துவ மற்றும் மருத்துவம் சார்ந்த பணியாளர்களின் பற்றாக்குறை 59 முதல் 100 விழுக்காடு வரை இருந்தது. TCC வாரியான பற்றாக்குறை விவரம் **இணைப்பு 2.5**ல் தரப்பட்டுள்ளது.

அக்டோபர் 2014ல் 45 புதிய TCCகளை அமைக்கும்போது தமிழ்நாடு அரசு அவற்றுக்காக புதிய பணியிடங்களை உருவாக்காமல், ஏற்கெனவே இருந்த பணியிடங்களை மறுபரவலமர்த்தம் (redeployment) செய்ய உத்தரவிட்டது. தோராயமாக 3,000 மருத்துவ மற்றும் மருத்துவம் சார்ந்த பணியாளர்களை மறுபரவலமர்த்தம் செய்வதற்கான சாத்தியக்கூற்றை தமிழ்நாடு அரசு ஆராயவில்லை என்பதையும் TCC உடைய மாதிரி மருத்துவமனைகளின் தலைவர்கள் பணியாளர்களை மறுபரவலமர்த்தம் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கவில்லை என்பதையும் தணிக்கை கண்டறிந்தது.

(இ) சேவை வழங்குவதில் குறைபாடு

மாதிரி TCCகளில் தணிக்கை மேற்கொண்ட பதிவுருக்களின் கூர்ந்தாய்வு, 2013-18 காலகட்டத்தில் சாலை விபத்துக்குள்ளான 5,988 நபர்கள் அந்த TCCகளில் உயிரிழந்தனர் என்பதை காட்டியது. மேலும், அதே காலகட்டத்தில் சாலை விபத்துக்குள்ளாகி அந்த TCCகளுக்கு கொண்டுவரப்பட்ட 1,57,377 நபர்களுள் 12,276 நபர்கள் அங்கு வசதிகள் இல்லாததால் பிற மருத்துவமனைகளுக்கு அனுப்பப்பட்டனர்.

- 10 மாதிரி TCCகளுள் 7ல், அனைத்து வசதிகளுடன் கூடிய அறுவை அரங்கு, மையப்படுத்தப்பட்ட உயிர்வளி வழங்கல் அமைப்பு, அறுவை அரங்கில் தடையில்லா மின் வசதி போன்ற அடிப்படை உள்கட்டமைப்புகள் இல்லாத காரணத்தினால் விபத்துக்குள்ளானவர்களுக்கு முதலுதவி மட்டும் அளிக்கப்பட்டு மேற்கொண்டு சிகிச்சைக்காக பிற மருத்துவமனைகளுக்கு அனுப்பப்பட்டனர்.
- பொள்ளாச்சி அரசு மருத்துவமனையில் TCCல் போதிய பணியாளர்கள் இல்லாததால் TCC ஒரு நேரம் (ஷிப்ட் - காலை 7.30 முதல் பகல் 1.30 வரை) மட்டும் இயங்கியது. பகல் 1.30க்கு பிறகு வந்த காயமுற்ற நபர்கள் நிலைப்படுத்தப்பட்ட பின், மறுநாள்தான் விபத்து சிகிச்சைக்கான அறுவை அரங்கிற்கு கொண்டு செல்லப்பட்டனர்.

(ஈ) இந்திய அரசு உதவியுடனான TCC

சென்னையில் கீழ்ப்பாக்கம் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் (Kilpauk Medical College Hospital - KMCH) ஒரு TCC அமைக்க புதிய கட்டடம் கட்ட ₹ 80 இலட்சம் மற்றும் கருவிகள் வாங்க ₹ 5 கோடி தொகைகளை 11வது ஐந்தாண்டு திட்டத்தின் கீழ் இந்திய அரசு நிதி உதவி செய்து ஒப்பளிப்பு (ஜனவரி 2018) செய்தது. கட்டி முடிக்கப்பட்ட கட்டடத்தை பொதுப்பணித்துறை மருத்துவமனையிடம் மே 2011ல் ஒப்படைத்தது. செப்டம்பர் 2018 நிலையில்,

கருவிகள் வாங்குவதற்கான ₹ 5 கோடி தொகை விடுவிக்கப்பட்டு (பிப்ரவரி 2016) இரண்டரை ஆண்டுகள் ஆன பின்னரும் பயன்படுத்தப்படவில்லை; கருவிகளுக்கான தொழில்நுட்ப விவரங்களை KMCH இறுதி செய்யாததால் அவற்றை வாங்கும் பணி ஒப்பந்தப்புள்ளி கோர வேண்டிய நிலையிலேயே இருந்தது. அதற்காக வழங்கப்பட்ட நிதி தமிழ்நாடு மருத்துவ பணிகள் கழகத்திடம் பிப்ரவரி 2016 முதல் இருந்து வந்தது. பணி மெதுவாக நடந்தது என்பது தமிழ்நாடு அரசு மற்றும் KMCH போதிய முக்கியத்துவத்தை அளிக்கவில்லை என்பதை காட்டியது. **இணைப்பு 2.4**ல் கூறப்பட்டுள்ளவாறு கருவிகளின் பற்றாக்குறை இருந்தது என்பதை தணிக்கை கண்டது. இந்திய அரசு திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட பெரிய அளவிலான TCCஆக இருந்தபோதும், 2013-18 காலகட்டத்தில் சாலை விபத்துக்குள்ளான 5,046 நபர்களுள் 348 நபர்களை KMCH பிற மருத்துவமனைகளுக்கு சிகிச்சைக்காக அனுப்பியது; அம்மையம் செயல்பட வேண்டிய அளவைக்காட்டிலும் குறைவான அளவிலேயே செயல்படுவதை இது காட்டுகிறது.

2.1.11 சாலை பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கான நிதி அளித்தல்

சாலை பாதுகாப்பை மேம்படுத்த சிறு பணிகள், பொருட்கள் வாங்குதல் போன்றவற்றுக்காக தமிழ்நாடு அரசு தனது வரவு-செலவு திட்டத்தின் மூலம் சாலை பாதுகாப்பு நிதிக்கு[31] (Road Safety Fund) நிதி அளிக்கிறது; உள் துறைக்கான அரசு செயலாளர் தலைவராகவும் சாலை பாதுகாப்பு ஆணையரை உறுப்பினர்-செயலராகவும் உள்ள ஒரு துறையிடைக் குழு இந்த நிதியை நிர்வகிக்கிறது. சாலை பாதுகாப்பை மேம்படுத்த மூலதன பணிகளை மேற்கொள்ள தமிழ்நாடு அரசு நெடுஞ்சாலைகள் துறைக்கும் நிதி அளிக்கிறது[32] (**அட்டவணை 2.18**).

அட்டவணை 2.18: சாலை பாதுகாப்பு நடவடிக்கை மீதான செலவு

(₹ கோடியில்)

ஆண்டு	செலவு		மொத்தம்
	சாலை பாதுகாப்பு ஆணையரிடம் உள்ள சாலை பாதுகாப்பு நிதி	நெடுஞ்சாலைகள் துறையின் மூலதன செலவு	
2013-14	7.50	0	**7.50**
2014-15	34.59	20.51	**55.10**
2015-16	10.04	99.58	**109.62**
2016-17	61.55	183.26	**244.81**
2017-18	51.69	154.21	**205.90**
மொத்தம்	**165.37**	**457.56**	**622.93**

தொடர்புடைய முகமைகளின் பணியாளர் அமைப்பு மீதான செலவு இதில் சேராது

(ஆதாரம்: மேற்படி ஆண்டுகளுக்கான நிதியொதுக்க கணக்குகள் மற்றும் தணிக்கை செய்யப்பட்ட அலுவலகங்கள் அளித்த விவரங்கள்)

சாலை பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக அளிக்கப்பட்ட நிதிகளின் மேலாண்மை பின்வரும் பத்திகளில் விவாதிக்கப்பட்டுள்ளன.

2.1.11.1 சாலை பாதுகாப்பு நிதியின் அமைப்பு

சாலை பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக நிதி அளிக்கும் முறையை ஒழுங்குபடுத்தும் நோக்குடன், போக்குவரத்து துறையும் காவல் துறையும் வசூலித்த கூட்டுக் கட்டணம் மற்றும் உடனடி அபராத தொகைகளை கொண்டு ஒரு சாலை

[31] 2041-00-800-AG - சாலை பாதுகாப்பு திட்டங்களை செயல்படுத்துதல்.

[32] 5054-80-800-KO - சாலை பாதுகாப்புக்காக சிறப்பு திட்டங்கள்.

பாதுகாப்பு நிதியை அமைக்க தமிழ்நாடு அரசு ஜூலை 2000ல் முடிவு செய்தது. எனினும், அத்தகைய நிதி தனியாக அமைக்கப்படாமல், சாலை பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கான வரவு-செலவு திட்ட ஒதுக்கீடு சாலை பாதுகாப்பு நிதிக்கான ஒதுக்கீடாக கருதப்பட்டது என்பதை தணிக்கை கண்டது. வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு என்ற காரணத்தினால் இந்த நிதி நிதியாண்டின் முடிவில் காலாவதியாகிறது. எனவே, உள்ளபடியே, இது ஒரு 'நிதி' என்ற வகையில் இருக்கவில்லை. 2013-18 காலகட்டத்தில் கூட்டுக் கட்டணம் மற்றும் உடனடி அபராதம் வசூலிக்கப்பட்ட தொகை மற்றும் வரவு-செலவு திட்டத்தில் சாலை பாதுகாப்பு நிதிக்கான ஒதுக்கப்பட்ட நிதி பற்றிய விவரங்கள் **அட்டவணை 2.19**ல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 2.19: சாலை பாதுகாப்பு நிதிக்கு வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு

(₹ கோடியில்)

ஆண்டு	கூட்டுக் கட்டணம்	உடனடி அபராதம்	மொத்தம்	வரவு-செலவு திட்ட ஒதுக்கீடு	மறு ஒதுக்கம்	செலவு
2013-14	63.69	81.39	**145.08**	65.00	(-) 54.58	7.50
2014-15	78.12	91.02	**169.14**	65.00	(-) 30.40	34.59
2015-16	76.14	104.64	**180.78**	65.00	(-) 52.39	10.04
2016-17	81.85	101.02	**182.87**	65.00	0	61.55
2017-18	79.21	189.11	**268.32**	65.00	(-) 12.88	51.69
மொத்தம்	**379.01**	**567.18**	**946.19**	**325.00**	**(-) 150.25**	**165.37**

(ஆதாரம்: சாலை பாதுகாப்பு ஆணையர் அளித்த விவரங்கள்)

அட்டவணை 2.19ல் காணப்பட்டவாறு, கூட்டுக் கட்டணமாகவும் உடனடி அபராதமாகவும் ₹ 946.19 கோடி வசூலிக்கப்பட்டதற்கு எதிராக, சாலை பாதுகாப்பு நிதிக்கு ₹ 325 கோடி மட்டுமே (34 சதவீதம்) ஒதுக்கப்பட்டு, அதில் **பத்தி 2.1.11.2**ல் கூறப்பட்டுள்ளவாறு ₹ 165.37 கோடி (17 விழுக்காடு) மட்டுமே உள்ளபடியே பயன்படுத்தப்பட்டது.

கூட்டுக் கட்டணமாகவும் உடனடி அபராதமாகவும் பெறப்படும் தொகைகளை கொண்டு சாலை பாதுகாப்பு நிதியை அமைக்க ஜூலை 2000ல் தமிழ்நாடு அரசு உத்தரவிட்ட போதிலும், அவ்வாறு பெறப்பட்ட தொகைகளிலிருந்து சாலை பாதுகாப்பு நிதிக்கு மாற்றப்பட வேண்டிய விழுக்காடு பற்றி அரசு குறிப்பிடவில்லை. 2013-18 காலகட்டத்தில் ஒவ்வொரு ஆண்டும் சாலை பாதுகாப்பு நிதிக்காக வரவு செலவு திட்டத்தில் ₹ 65 கோடி மொத்த ஒதுக்கீடு செய்யப்பட்டது. சாலை பாதுகாப்பு மீதான உச்ச நீதிமன்ற குழு தலையிட்ட பின் (நவம்பர் 2016), ஒவ்வொரு ஆண்டும் பெறப்படும் கூட்டுக் கட்டணம் மற்றும் உடனடி அபராத தொகைகளில் 50 விழுக்காட்டைக் கொண்டு காலாவதியாகாத சாலை பாதுகாப்பு நிதியை தமிழ்நாடு அரசு அமைத்தது (மார்ச் 2018).

பெறப்பட்ட தொகைகளில் சாலை பாதுகாப்பு நிதிக்கு மாற்ற வேண்டிய விழுக்காடு குறித்து முடிவு செய்வதில் இருந்த தாமதம் காரணமாக அந்நிதிக்கு 2013-18 காலகட்டத்தில் ₹ 148.10 கோடி[33] குறைவாக ஒதுக்கீடு செய்யப்பட்டது; இது தவிரவும், அந்நிதியை மாநிலத்தின் தொகுப்பு நிதிக்கு (Consolidated Fund) வெளியே அமைப்பதில் இருந்த தாமதம் காரணமாக 2013-18 காலகட்டத்தில் செலவிடப்படாத ₹ 150.25 கோடி தொகை ஒப்படைக்கப்பட்டது.

---

[33] 2013-18 காலகட்டத்தின் மொத்த வரவில் 50 விழுக்காடு மற்றும் பட்ஜெட் ஒதுக்கீடு ஆகியவற்றின் அடிப்படையில் கணக்கிடப்பட்டது அதாவது (₹ 946.19 கோடி ÷ 2) - ₹ 325 கோடி.

2.1.11.2 சாலை பாதுகாப்பு நிதி பயன்பாட்டில் குறைபாடுகள்

சாலை பாதுகாப்பு நிதியின் பயன்பாட்டை முறைப்படுத்துவதற்காக தமிழ்நாடு அரசு வகுத்த தமிழ்நாடு சாலை பாதுகாப்பு நிதி விதிகள், 2000, சாலை பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக நிதி ஒப்பளிப்பு செய்வதற்கு உள்துறை செயலாளர் தலைமையிலான ஒரு துறையிடை குழு இருக்க வேண்டும் என கூறுகிறது. தொடர்புடைய துறைகள் சாலை பாதுகாப்பு நடவடிக்கைகளுக்குரிய நிதிக்கான தமது கோரிக்கைகளை, மாவட்ட சாலை பாதுகாப்பு குழுவின் தலைவரான மாவட்ட ஆட்சியர் மூலம் அனுப்புகின்றன. IDC ஒப்புதல் அளித்த முன்மொழிவுகளை செயல்படுத்துவதற்கான நிதியை சாலை பாதுகாப்பு ஆணையர் தொடர்புடைய துறை/மாவட்டத்திற்கு வழங்குகிறார். 2013-18 காலகட்டத்தில் வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு, IDCயால் ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு மற்றும் செய்யப்பட்ட செலவினம் குறித்த விவரங்கள் **அட்டவணை 2.20**ல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 2.20: சாலை பாதுகாப்பு நிதியின் பயன்பாடு

(₹ கோடியில்)

ஆண்டு	வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு	துறைகள் கோரிய நிதி	IDC ஒப்புதல் அளித்த அளவு	செலவு
2013-14	65.00	117.19	14.17	7.50
2014-15	65.00	87.24	61.90	34.59
2015-16	65.00	173.77	13.33	10.04
2016-17	65.00	102.58	65.45	61.55
2017-18	65.00	314.25	65.12	51.69
மொத்தம்	**325.00**	**795.03**	**219.97**	**165.37**

(ஆதாரம்: சாலை பாதுகாப்பு ஆணையர் அளித்த விவரங்கள்)

போதிய அளவில் இல்லாத ஒதுக்கீடு, நிதி பயன்படுத்தப்படாமை மற்றும் பிற நோக்கங்களுக்கு மாற்றப்பட்டமை ஆகியன பின்வரும் பத்திகளில் விவாதிக்கப்பட்டுள்ளன.

(அ) போதிய நிதி ஒதுக்கப்படாமை

ஆட்டோ ரிக்ஷாக்களில் GPS அடிப்படையிலான டிஜிட்டல் கட்டண மீட்டர்களை பொருத்த அவற்றை வாங்கி விலையில்லாமல் வழங்கும் திட்டத்திற்காக சாலை பாதுகாப்பு நிதியிலிருந்து ₹ 54.58 கோடி தொகையை பயன்படுத்தும் நோக்கத்துடன் 2013-14ல் IDC அந்நிதியின் கீழ் குறைவான பணிகளுக்கே ஒப்பளிப்பு செய்தது. டிஜிட்டல் கட்டண மீட்டர்களுக்கான செலவு சாலை பாதுகாப்புடன் எவ்வகையிலும் தொடர்பற்றது மற்றும் அந்நிதியின் கீழ் அனுமதிக்கப்பட்ட இனங்களில் அது அடங்காது ஆகிய காரணங்களால், அதற்காக ₹ 54.58 கோடி தொகையை பயன்படுத்துவதென்ற தமிழ்நாடு அரசின் முடிவு (ஆகஸ்ட் 2013) முறையற்றது என்பதை தணிக்கை கண்டறிந்தது. ஆட்டோ ரிக்ஷாக்களில் பொருத்த GPS அடிப்படையிலான டிஜிட்டல் கட்டண மீட்டர்களை வாங்குவதற்கு நிதி அளிக்கும் பொருட்டு, சாலை பாதுகாப்பு பணிகளுக்கு குறைவாக நிதி ஒதுக்குவதை 2014-15 மற்றும் 2015-16ல் IDC தொடர்ந்தது. எனினும், டிஜிட்டல் மீட்டர்கள் வாங்கப்படாமல், அதற்காக ஒதுக்கப்பட்ட நிதி சாலை பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படவும் இல்லாமல், ஆண்டு முடிவில் ஒப்படைக்கப்பட்டது. IDC 2014-15ல் ₹ 61.90 கோடி தொகையில் ₹ 31.96 கோடி தொகையை பிப்ரவரி 2015ல் தான் ஒப்பளிப்பு செய்ததால் குறைந்த

அளவே செலவிடப்பட்டது என்பதும் காணப்பட்டது. அது போலவே, 2016-17 மற்றும் 2017-18 ஆண்டுகளிலும் நிதி முறையே மார்ச் 2017 மற்றும் பிப்ரவரி 2018ல் விடுவிக்கப்பட்டதால் குறைந்த அளவே செலவிடப்பட்டது (**அட்டவணை 2.20**).

இவ்வாறாக, வரவு செலவுத் திட்டத்தில் குறைவான நிதி ஒதுக்கீடு, சாலை பாதுகாப்பு நிதியை கொண்டு GPS அடிப்படையிலான டிஜிட்டல் கட்டண மீட்டர்களை வாங்குவதற்காக சாலை பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு நிதியை குறைப்பதென்ற முடிவு மற்றும் ஆண்டு இறுதியில் நிதி விடுவித்தது ஆகியவற்றின் காரணமாக, 2013-18 காலகட்டத்தில் சாலை பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக நிதி பற்றாக்குறை ஏற்பட்டது. **அட்டவணை 2.20**ல் காணப்பட்டவாறு, 2013-18 காலகட்டத்தில் சாலை பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக தொடர்புடைய துறைகள் கோரிய தொகையில் IDC 27.67 விழுக்காடு மட்டுமே ஒப்பளிப்பு செய்தது.

(ஆ) நிதி பயன்படுத்தப்படாமை

IDC சாலை பாதுகாப்பு நிதியிலிருந்து விடுவித்த நிதி உடனுக்குடன் பயன்படுத்தப்படவில்லை என்பதையும் தணிக்கை கண்டது. ஐந்து நடமாடும் விபத்து சிகிச்சை வாகனங்கள் மற்றும் நான்கு மருத்துவமனைகளில் விபத்து சிகிச்சை மையங்களுக்கு தேவையான கருவிகள் வாங்க, விபத்து சிகிச்சை ஆணையரின் கருத்துருவின் அடிப்படையில் சாலை பாதுகாப்பு ஆணையர் ₹ 15.50 கோடி தொகையை விடுவித்தார் (ஆகஸ்ட் 2017). விபத்து சிகிச்சை வாகனங்களுக்கான தொழில்நுட்ப விவரங்களை விபத்து சிகிச்சை ஆணையர் அளிக்காததால், ஆகஸ்ட் 2017ல் விடுவிக்கப்பட்ட அத்தொகை, அவ்வாகனங்களை வாங்க வேண்டிய தமிழ்நாடு மருத்துவ பணிகள் கழகத்திடம் பயனற்று இருந்தது (செப்டம்பர் 2018).

(இ) நிதி வேறு பயன்பாடுகளுக்கு மாற்றம்

(i) திருவள்ளூர் மாவட்டம் பெத்திகுப்பத்தில் உள்ள நவீன ஒருங்கிணைந்த தணிக்கை சாவடியில், மென்பொருளை மேம்படுத்தவும் தற்போதுள்ள மென்பொருளையும் வன்பொருள் கட்டமைப்பையும் ஒருங்கிணைக்கவும் 2016-17 மற்றும் 2017-18 ஆண்டுகளில் IDC ₹ 5.63 கோடி தொகையை ஒப்பளிப்பு செய்தது. இந்த தணிக்கை சாவடி அடிப்படையில் வணிக வரி துறையுடன் தொடர்புடையது என்பதால் அதற்காக சாலை பாதுகாப்பு நிதியை பயன்படுத்தியது முறையற்றது என்பதை தணிக்கை கண்டறிந்தது.

(ii) ரோந்து வாகனங்கள் மற்றும் குறிப்பாக சாலை பாதுகாப்பு பணிக்காக வடிவமைக்கப்பட்ட பிற வாகனங்களை வாங்குவது தமிழ்நாடு சாலை பாதுகாப்பு நிதி விதிகள் 2000ன் கீழ் அனுமதிக்கப்பட்டதாகும். காவல் துறைக்காக 135 மாருதி ஜிப்சி ரோந்து வாகனங்கள் மற்றும் 466 இரு சக்கர ரோந்து வாகனங்களை ₹ 11.10 கோடி செலவில் வாங்குவதற்கு சென்னை மாநகர காவல் ஆணையரின் கருத்துருவின் அடிப்படையில் IDC ஒப்புதல் அளித்தது (செப்டம்பர் 2014). சாலை பாதுகாப்பு ஆணையர் அத்தொகையை செப்டம்பர் 2014ல் விடுவித்தார். மாநகர காவல் ஆணையர் மேற்படி 135 மற்றும் 466 வாகனங்களை ₹ 10.75கோடி செலவில் வாங்கினார் (ஏப்ரல் - ஜூலை 2015). காவல் துறை அவ்வாகனங்கள் அனைத்தையும் சாலை பாதுகாப்புடன் நேரடி தொடர்பில்லாத சட்ட ஒழுங்கு பயன்பாட்டிற்காக மட்டும் ஈடுபடுத்தியது என்பதை தணிக்கை கண்டறிந்தது. இவ்வாறாக, சாலை பாதுகாப்பு நிதியிலிருந்து ₹ 11.10 கோடி சாலை பாதுகாப்புடன் நேரடி தொடர்பில்லாத பணிகளுக்கு மாற்றப்பட்டது.

2.1.11.3 நெடுஞ்சாலைகள் துறையின் மூலதன செலவு

2012-13 வரை சாலை பொறியியல் தொடர்புடைய பணிகளுக்காக சாலை பாதுகாப்பு ஆணையர் நெடுஞ்சாலைகள் துறைக்கு சாலை பாதுகாப்பு நிதியிலிருந்து நிதி விடுவித்து வந்தார். சாலைகளில் இருந்த அடிக்கடி விபத்து ஏற்படும் இடங்களை ₹ 1,130 கோடி மதிப்பிடப்பட்ட செலவில் சீர்படுத்துவதற்கான ஒரு முழுமையான கருத்துருவை நெடுஞ்சாலைகள் துறை தலைமை பொறியாளர் 2014ல் தயாரித்தார். நெடுஞ்சாலைகள் துறைக்கான 2014-15க்குரிய வரவு செலவு திட்டத்தை விவாதிக்கையில், தமிழ்நாடு அரசு அப்பணிகளை ₹ 900 கோடி செலவில் 2014-16 ஆண்டுகளில் படிப்படியாக செயல்படுத்த முடிவெடுத்தது.

நெடுஞ்சாலைகள் துறையின் சாலை பாதுகாப்புக்கான வரவு செலவு திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாடு திட்டம் (CRIDP) ஆகியவற்றின் கோரப்பட்ட, ஒதுக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட நிதி பற்றிய விவரங்கள் **அட்டவணை 2.21**ல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 2.21: சாலை பாதுகாப்பு மீதான மூலதன செலவு

(₹ கோடியில்)

ஆண்டு	கோரப்பட்ட நிதி		வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதி		பயன்படுத்தப்பட்ட நிதி	
	சாலை பாதுகாப்பு	CRIDP	சாலை பாதுகாப்பு	CRIDP	சாலை பாதுகாப்பு	CRIDP
2014-15	150.00	250.00	100.00	0.00	20.51	0.00
2015-16	150.00	350.00	100.00	0.00	99.58	0.00
2016-17	0.00	0.00	100.00	159.75	130.90	52.36
2017-18	0.00	0.00	139.96	156.51	102.86	51.35
மொத்தம்	900.00		756.22		457.56	

(ஆதாரம்: கொள்கை விளக்க குறிப்பு, வரவு செலவு திட்டம் மற்றும் நிதிக் கணக்குகள்)

2014-16 ஆண்டுகளில் பயன்படுத்துவதாக கூறப்பட்ட ₹ 900 கோடி, 2014-18 ஆண்டுகளில் உள்ளபடியே வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கப்பட்ட ₹ 756.22 கோடி ஆகியவற்றுக்கெதிராக, ₹ 457.56 கோடி மட்டுமே பயன்படுத்தப்பட்டது. போதுமான நிதி ஒதுக்கப்படாமை மற்றும் **பத்திகள் 2.1.11.1 மற்றும் 2.1.11.2**ல் விவாதிக்கப்பட்டுள்ளவாறு, நெடுஞ்சாலைகள் துறை சாலை பாதுகாப்பு பணிகளை செயல்படுத்துவதில் இருந்த குறைபாடுகள் ஆகியவற்றின் காரணமாக, தமிழ்நாடு அரசு திட்டமிட்டபடி விபத்து ஏற்படும் இடங்களை சீர்படுத்தும் பணி முடிக்கப்படவில்லை.

சாலை பாதுகாப்பு நிதி மற்றும் CRIDPயின் கீழ் ஒதுக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட நிதிகள் **அட்டவணை 2.21**ல் கொடுக்கப்பட்டுள்ள இலக்கங்களை விட அதிகமாக இருந்தது என தமிழ்நாடு அரசு மறுமொழி அளித்தது (டிசம்பர் 2018). நிதிக் கணக்குகளின் இலக்கங்கள் மற்றும் துறை அதிகாரிகளிடமிருந்து பெறப்பட்ட தரவுகளிலுள்ள இலக்கங்கள் ஆகியவற்றை தணிக்கை மறுஆய்வு செய்து, அரசின் மறுமொழியில் குறிப்பிடப்பட்ட தொகை உள்ளபடியான செலவினத்தை குறிப்பிடவில்லை என தணிக்கை கண்டறிந்தது.

2.1.11.4 சாலை பாதுகாப்பு செலவினத்தைத் தடுக்க அமைப்புமுறை

தமிழ்நாடு அரசு 2009ல் தமிழ்நாடு மோட்டார் வாகன வரிவிதிப்பு சட்டம் 1974ஐ திருத்தியது; "பல்வேறு சாலை பாதுகாப்பு நடவடிக்கைகளை செயல்படுத்துவதற்காக" மோட்டார் வாகனங்களை புதிதாக பதிவு செய்வதில்

‘சாலை பாதுகாப்பு வரி’ என்ற ஒரு கூடுதல் வரியை வசூலிக்க பிரிவு 3-Bஐ அறிமுகப்படுத்தியது.

தமிழ்நாடு அரசு இப்புதிய வரி மூலம் 2013-18 காலகட்டத்தில் ₹ 423.22 கோடி பெற்றது. எனினும், பல்வேறு சாலை பாதுகாப்பு நடவடிக்கைகளை செயல்படுத்துவதற்காக ஒரு புது வரி அறிமுகப்படுத்தப்பட்ட போதிலும், வரவு செலவுத் திட்டத்தில் சாலை பாதுகாப்புக்கு நிதி ஒதுக்கும்போது புது வரியின் மூலம் பெற்ற வருவாயை தமிழ்நாடு அரசு கணக்கில் கொள்ளவில்லை என்பதை தணிக்கை கண்டறிந்தது.

இவ்வாறாக, ஒரு புதிய வரியை அறிமுகப்படுத்தி கூடுதல் நிதி பெற்று சாலை பாதுகாப்பு செலவுகளை அதிகரிப்பது என்ற சட்டமன்றத்தின் நோக்கம் நிறைவேறவில்லை.

2.1.12 கண்காணிப்பு

2.1.12.1 மாநில சாலை பாதுகாப்பு மன்றம்

சாலை பாதுகாப்பு மீதான உச்ச நிலை ஆலோசனை அமைப்பாகிய, போக்குவரத்து அமைச்சர் தலைமையிலான மாநில சாலை பாதுகாப்பு மன்றம் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூட வேண்டும். மன்றம் அமைக்கப்பட்ட ஜூலை 2007 முதல் மார்ச் 2018 வரை 43 கூட்டங்கள் நடத்தப்பட்டிருக்க வேண்டிய நிலையில் 10 கூட்டங்கள் மட்டுமே நடத்தப்பட்டன. மன்றத்தின் கூட்டங்கள் அவ்வப்போது நடத்தப்படாததால், அதன் பரிந்துரைகளுள் பலவற்றில் தொடர் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

மன்றத்தின் பரிந்துரைகள் செயல்படுத்தப்படாத நேர்வுகள் **அட்டவணை 2.22**ல் விவாதிக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 2.22: மாநில சாலை பாதுகாப்பு மன்றத்தின் பரிந்துரைகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை

வ. எண்	மாநில சாலை பாதுகாப்பு மன்றத்தின் பரிந்துரைகள்	எடுக்கப்பட்ட நடவடிக்கை
1	**உரிமம் வழங்குதல்:** ஒரு காவல் துறை அலுவலரை உறுப்பினராக உடைய ஒரு குழுவின் மூலம் ஓட்டுநர் உரிமங்களை சோதனை ஆய்வு அடிப்படையில் சோதிப்பதற்கான முறைமையை உருவாக்குதல் (பிப்ரவரி 2008).	நடவடிக்கை எடுக்கப்பட்டதாக பதிவு இல்லை. காரணம் கோரப்பட்டு எதிர்நோக்கப்படுகிறது (செப்டம்பர் 2018).
2	**ஈடுசெய்யும் செலவு:** பொது சொத்துகளை சேதப்படுத்திய வாகன ஓட்டுநர்களிடமிருந்து அதனை ஈடு செய்யும் செலவை வசூலிப்பதற்கான சாத்தியக்கூற்றை ஆராய்தல் (பிப்ரவரி 2008).	நடவடிக்கை எடுக்கப்பட்டதாக பதிவு இல்லை. காரணம் கோரப்பட்டு எதிர்நோக்கப்படுகிறது (செப்டம்பர் 2018).
3	**விளம்பரங்களில் விழிப்புணர்வு:** கார் தயாரிப்பாளர்கள் மற்றும் பிற உபயதாரர்கள் (sponsors) தமது விளம்பரங்களில் சாலை பாதுகாப்பு மீதான வாக்கியங்களை சேர்த்தல் (ஜனவரி 2015).	நடவடிக்கை எடுக்கப்பட்டதாக பதிவு இல்லை. காரணம் கோரப்பட்டு எதிர்நோக்கப்படுகிறது (செப்டம்பர் 2018).
4	**பயிற்சி மையங்கள்:** தலைக்கவசம் அணியாமல் பிடிபட்ட இரு சக்கர வாகன ஓட்டுநர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் பயிற்சி மையங்களாக அனைத்து காவல் நிலையங்கள் மற்றும் வட்டார போக்குவரத்து அலுவலகங்களை (RTO) அறிவித்தல் (ஜூன் 2017).	மாநிலத்தில் உள்ள RTO/அலகு அலுவலகங்கள் அனைத்தையும் போக்குவரத்து பயிற்சி மையங்களாக சாலை பாதுகாப்பு ஆணையர் அறிவித்தாலும் (ஜூன் 2017), காவல் துறை அவ்வாறான நடவடிக்கை எடுக்கவில்லை. காரணங்கள் கோரப்பட்டுள்ளன மற்றும் மறுமொழி பெறப்படவில்லை (செப்டம்பர் 2018).
5	**தொழில்நுட்பம்:** சாலை பாதுகாப்பில் புதிய தொழில்நுட்ப அடிப்படையிலான தீர்வுகளை ஆராய்தல். கேரள மாநிலத்தில் KELTRON நிறுவனம் எடுத்த நடவடிக்கைகளை சோதனை முறையில் முயற்சி செய்தல் (ஜூன் 2017).	நடவடிக்கை எடுக்கப்பட்டதாக பதிவு இல்லை. காரணம் கோரப்பட்டு எதிர்நோக்கப்படுகிறது (செப்டம்பர் 2018).

(ஆதாரம்: DRSC கூட்டங்களின் நடவடிக்கை குறிப்புகளிலிருந்து எடுக்கப்பட்ட விவரங்கள்)

மாநில சாலை பாதுகாப்பு மன்றத்தின் முடிவுகளை செயல்படுத்துவதற்கான ஒரு செயல் திட்டம் இல்லாத நிலையில், பரிந்துரைகளை தொடர்புடைய துறைகள் செயல்படுத்துவதை சாலை பாதுகாப்பு ஆணையர் கண்காணிக்கவோ தொடர் நடவடிக்கை எடுக்கவோ இல்லை என்பதை தணிக்கை கண்டறிந்தது. இவ்வாறாக, சாலை பாதுகாப்பில் ஈடுபட்டுள்ள துறைகளிடையே பலன் தரத்தக்க ஒருங்கிணைப்பு ஏற்படுத்துதல், மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை கண்காணித்தல் ஆகிய மன்றம் அமைக்கப்பட்டதன் நோக்கங்கள் அடையப்பெறவில்லை.

2.1.12.2 மாவட்ட சாலை பாதுகாப்பு குழு

மாவட்ட சாலை பாதுகாப்பு குழு[34] மாதம் ஒரு முறை கூடி, போக்குவரத்து விபத்து புள்ளிவிவரங்களை சீராய்வு மற்றும் பகுப்பாய்வு செய்தல், சாலை பாதுகாப்பை மேம்படுத்த தேவையான நடவடிக்கைகளை ஆராய்தல், தொடர்புடைய துறைகள் எடுத்த நடவடிக்கைகளை சீராய்வு செய்தல் ஆகிய பணிகளை செய்ய வேண்டும். ஜனவரி 2014 முதல் மார்ச் 2018 வரை 51 கூட்டங்கள் நடத்தப்பட்டிருக்க வேண்டும் என்பதற்கெதிராக, சென்னையில் 2, கோயம்புத்தூரில் 16, கடலூரில் 28 மற்றும் புதுக்கோட்டையில் 37 கூட்டங்கள் மட்டுமே நடத்தப்பட்டன. விதிக்கப்பட்ட எண்ணிக்கையிலான கூட்டங்களை நடத்தாமையால் கண்காணிப்பில் தளர்வு ஏற்பட்டது.

மாவட்ட குழுவின் பரிந்துரைகளை செயல்படுத்துவது பற்றி மாவட்ட ஆட்சியர்கள் மீண்டும் மீண்டும் சீராய்வு செய்தபோதிலும், தொடர்புடைய துறைகள் உரிய காலத்தில் நடவடிக்கை எடுக்கவில்லை. கூட்டங்களை காலமுறையில் நடத்தாததும் கள அலுவலர்கள் முக்கியத்துவம் அளிக்காத போக்கும் சீர்படுத்தும் நடவடிக்கையில் இருந்த தவறுகளுக்கு காரணமாக இருந்தன. கள அலுவலர்களின் செயலின்மை (**காட்சிப்படம் 2.8**) பற்றிய நேர்வுகள் **இணைப்பு 2.6**ல் விவாதிக்கப்பட்டுள்ளன.

காட்சிப்படம் 2.8: புதுக்கோட்டை மாவட்ட சாலை பாதுகாப்பு குழுவின் அறிவுரை (நவம்பர் 2015) இருந்தும், IRC அளவுநிலைகளின்படி, அறந்தாங்கி அரசு மருத்துவமனையின் முன்பு வேகத்தடைகள் அமைக்கப்படவில்லை (ஜூலை 2018)

(ஆதாரம்: கூட்டுக் கள ஆய்வு)

---

34 அந்தந்த மாவட்ட ஆட்சியர் தலைமையிலானது. சென்னையில் மாநகர காவல் ஆணையர் தலைமையில் அமைந்தது.

2.1.13 முடிவுரை

தமிழ்நாட்டில் உள்ள சாலை பாதுகாப்பு பிரச்சினைகளை ஒரு முழுமையான திட்டத்தின் மூலம் தீர்க்க வேண்டும்; அத்திட்டம், சாலை விபத்துகள் மற்றும் உயிரிழப்புகளின் நிகழ்வை குறைப்பதற்கான வியூகங்கள் மற்றும் இலக்குகளுடன் கூடிய தொடர்புடைய துறைகளின் விரிவான குறு திட்டங்களின் அடிப்படையில் அமைய வேண்டும். கண்மூடித்தனமான மற்றும் கவனக்குறைவான ஓட்டுதல் காரணமாகவே 77 விழுக்காடு சாலை விபத்துகள் நிகழ்ந்தன என்பது ஓட்டுநர்கள் போதிய அளவில் சோதிக்கப்படவில்லை என்பதையும் அதனால் போக்குவரத்து விதிகளை பற்றிய அறியாமையும் பின்பற்றாமையும் பரவலாக இருந்தன என்பதையும் சுட்டிக்காட்டியது. ஓட்டுநர் உரிமம் வழங்குவதற்காக விண்ணப்பதாரர்களின் ஓட்டும் திறமையை சோதிப்பது அதற்குரிய உள்கட்டமைப்பு மற்றும் பணியாளர்கள் போதிய அளவில் இல்லாததால் பாதிக்கப்பட்டது. சாலை பொறியியல், அடிக்கடி விபத்து ஏற்படும் இடங்களை சீர்படுத்துதல், IRC அளவு நிலைகளை ஒட்டி தேவையான சாலை தடவாளங்களை அமைத்தல் ஆகியவற்றை முக்கியமாக கருத வேண்டும். போக்குவரத்து சட்டங்களை மீறுவதை தடுப்பதற்காக ஓட்டுநர் உரிமத்தை தற்காலிகமாக இரத்து செய்வது மற்றும் அதிக அளவிலான அபராதம் விதிப்பது போன்ற கடுமையான நடவடிக்கைகளை எடுத்தால் அமலாக்கம் மேலும் பலன் தரத்தக்கதாக இருக்கும். சாலை பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் பற்றிய விழிப்புணர்வு ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் மேலும் பரவலாகவும், சாலை பயனாளர்களில் அதிக பாதிப்புக்கு உட்படக்கூடிய பிரிவான இளைஞர்களை இலக்காக கொண்டும் இருக்க வேண்டும். சாலை விபத்துகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்க அவசர விபத்து சிகிச்சை மையங்கள் பணியாளர்கள் மற்றும் கருவிகளை கொண்டு வலுப்படுத்தப்பட வேண்டும். ஐக்கிய நாடுகள் சபையின் நிலையான வளர்ச்சி இலக்குகளை எட்டுமாறு சாலை விபத்துகள் மற்றும் உயிரிழப்புகள் குறைக்கப்பட வேண்டும். சாலை பாதுகாப்பு தொடர்பான பணிகளுக்கான நிதியை அதிகரிக்கவும் அவற்றை பலன் தரத்தக்க வகையில் கண்காணிக்கவும் வேண்டிய தேவை உள்ளதை தணிக்கை கண்டது.

2.1.14 பரிந்துரைகள்

- வட்டார போக்குவரத்து அலுவலகங்கள் மற்றும் அலகு அலுவலகங்கள் அனைத்திலும் ஓட்டுநர் தேர்விற்கு கணினிமயமாக்கப்பட்ட தடங்கள் இருப்பது விதியாக வைக்கப்பட வேண்டும். ஓட்டுநர் உரிமம் கோரும் விண்ணப்பதாரர்கள் விதிகளின்படி சோதிக்கப்படுவதை போக்குவரத்து துறை உறுதி செய்ய வேண்டும்.
- மாநிலத்தில் போக்குவரத்து விதிகளை கடுமையாக அமல்படுத்துவதை உறுதி செய்ய பணியாளர் தொடர்பான காவல்துறை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு செயலகம் (BPRD) கூறும் அளவுநிலைகளை அரசு பின்பற்ற வேண்டும்.
- ஸ்மார்ட் கார்டு அடிப்படையிலான ஓட்டுநர் உரிமங்கள் மற்றும் பதிவு சான்றிதழ் முறையை செயல்படுத்துவதை போக்குவரத்து ஆணையர் விரைவுபடுத்த வேண்டும்.

- வாகன ஓட்டுநர்கள் விதிகளை மீறுவதை தடுக்க உடனடி அபராத விகிதங்களை சீராய்வு செய்ய வேண்டும்.
- சமுதாய சேவை பதிவேடுகளில் பதிவு செய்யப்படும் சாலை விபத்துகள் அனைத்தையும் சாலை விபத்து தரவு மேலாண்மை அமைப்பில் (RADMS) சேர்க்க வேண்டும்.
- ஓட்டுநர் உரிமத்தை தற்காலிகமாக இரத்து செய்ய வேண்டிய தேவை உள்ள அனைத்து நேர்வுகளிலும் அந்த நடவடிக்கையை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.
- பணியாளர்களை அமர்த்துதல் மற்றும் வாகனங்கள், கருவிகள், எரிபொருள் ஆகியவற்றை வாங்குதல் மூலம் நெடுஞ்சாலை ரோந்து பணியை மேலும் பலனுள்ளதாக ஆக்க வேண்டும்.
- சென்னை மாநகரில் போக்குவரத்து சிக்னல்களை தானியங்கி அமைப்பாக மாற்ற ஒருங்கிணைந்த போக்குவரத்து மேலாண்மை அமைப்பை மீள கொண்டு வர மாநகர காவல் ஆணையர் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- நெடுஞ்சாலைகள் துறை, சாலை பாதுகாப்பு தணிக்கைக்கான அமைப்புரீதியான கட்டமைப்பை உருவாக்கவும் விபத்து ஏற்படும் இடங்களை சீர்படுத்தும் பணிகளை கண்காணிக்கவும் வேண்டும்.

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை

2.2 இந்திய மருத்துவ முறைகள் மூலம் நல்வாழ்வு சேவைகள் மற்றும் மருத்துவ கல்வி வழங்குதல் மீதான செயலாக்க தணிக்கை

செயலாக்க சுருக்கம்

இந்திய மருத்துவ முறைக்கு (ISM) முக்கியத்துவம் வழங்கி, அதன் மூலம் முழுமையான நல்வாழ்வு வசதிகளை அளிப்பது அரசின் கொள்கை ஆகும். மாநிலத்திலுள்ள ISM நிறுவனங்களை விரிவுபடுத்துதல், மருத்துவ கல்வியின் தரத்தை உயர்த்துதல் போன்றவற்றின் மூலம் தனது நோக்கங்களை அடைய அரசு விழைகிறது. தற்போது மேற்கொள்ளப்பட்ட செயலாக்க தணிக்கை, மத்திய மற்றும் மாநில அரசுகள் அளித்த திட்ட நிதியை மேலாண்மை செய்வதில் ஒரு முறைமை இல்லாதது, மருத்துவ அமைப்புகளில் பொருள் மற்றும் பணியாளர் வகையில் கடும் பற்றாக்குறை, ISMல் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சியை மேம்படுத்த முயற்சிகள் இல்லாமை ஆகியவற்றை வெளிக்காட்டியது.

- *கருவிகளை கொள்முதல் செய்வதில் இருந்த தாமதங்கள் காரணமாக, தமிழ்நாடு மூலிகை பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்துகள் கழகம் (டாம்ப்கால்), மாநில AYUSH சங்கம் ஆகியவற்றின் வங்கி கணக்குகளில் பெரும் தொகைகள் சேர்ந்திருந்தன. பயன்படுத்தப்படாத நிதியை துறை டாம்ப்காலில் முடக்கி வைத்திருந்தது.*
- *பல பணியிடங்களில் பணியாளர் பற்றாக்குறை என்பது, பொதுவான ISM பிரிவுகளில் 10 முதல் 38 விழுக்காடு வரையில், தேசிய ஊரக நல்வாழ்வு திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட ISM பிரிவுகளில் 48 விழுக்காடு மற்றும் AYUSHன் கீழ் உருவாக்கப்பட்ட ISM பிரிவுகளில் 100 விழுக்காடு என்ற அளவுகளில் இருந்தது.*
- *மருத்துவ பணியாளர் பற்றாக்குறை காரணமாக, மாதிரி மாவட்டங்களில் இருந்த 297 ISM பிரிவுகளுள், 31 பிரிவுகள் தமது செயல்பாட்டை நிறுத்திவிட்டன; 25 பிரிவுகள் வாரத்திற்கு நான்கு அல்லது அதற்கு குறைவான நாட்கள் மட்டுமே இயங்கின.*
- *ISM பிரிவுகளுக்கான மருந்துகளை தயாரித்து வழங்கும் பொதுத்துறை நிறுவனமான டாம்ப்கால், மருத்துவமனைகள்/பிரிவுகள் கோரிய மொத்த மருந்துகளின் அளவில், 2016-17 மற்றும் 2017-18, முறையே 47 மற்றும் 50 விழுக்காடு அளவிற்கே மருந்துகளை வழங்கியது; போதிய அளவில் நிதி ஒதுக்கீடு இல்லாமை மற்றும் குறைவான உற்பத்தி ஆகியவை இதற்கு காரணங்கள் ஆகும். யுனானி பிரிவுகளுக்கு 2016-17ல் மருந்துகள் ஏதும் வழங்கப்படவில்லை.*
- *மருந்து சோதனை ஆய்வகத்தில் பணியாளர் பற்றாக்குறை காரணமாக மருந்துகளை சோதிப்பதில் ஏற்பட்ட தாமதத்தினால், 2013-18 காலகட்டத்தில், தரமற்றவை என அறியப்பட்ட 82 மருந்துகளின் விநியோகத்தை உடனடியாக நிறுத்தவோ/திரும்பபெறவோ இயலவில்லை.*
- *அரசின் ஆயுர்வேதா, யுனானி மற்றும் ஓமியோபதி கல்லூரிகள் முதுநிலை பட்ட வகுப்பகளை நடத்தாதது, ISM முறையின் பரப்பு விரிவடைவதை தடுத்தது.*

> ➢ ***அரசு ₹ 12 கோடி செலவில் 2013ல் ஒப்பளித்த ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி பிரிவு ஆகஸ்ட் 2018 நிலையிலும் இயங்க துவங்கவில்லை; கருவிகளை வாங்குவதிலும் பணியாளர்களை தெரிவு செய்வதிலும் ஒருங்கிணைப்பு இல்லாததால், உருவாக்கப்பட்ட சொத்துக்கள் பயனின்றி இருந்தன.***

2.2.1 முன்னுரை

இந்தியாவில் நல்வாழ்வு சேவைகள் வழங்குவதில் இந்திய மருத்துவ முறைகள் (Indian Systems of Medicine - ISM) ஒரு உள்ளார்ந்த பகுதி ஆகும். அதில், சித்தா, ஆயுர்வேதம், யோகா & இயற்கை மருத்துவம் மற்றும் யுனானி ஆகியன அடங்கும். இந்திய மருத்துவ முறைகளுடன் ஓமியோபதியும் மேம்படுத்தப்படுகிறது. மேற்கூறிய ஐந்து முறைகளுள், தமிழ்நாட்டிற்கே உரியது என்பதால் சித்தா முறை அதிக ஆதரவை பெறுகிறது. ஆங்கில மருத்துவ முறைக்கு மாற்றாகவும் அவை உள்ளன. இந்திய மருத்துவ முறைகள் தொடர்பான அனைத்து பொருட்கூறுகளையும் கவனித்து அம்முறைகளை முழுமையாக மேம்படுத்தும் பொருட்டு, தமிழ்நாடு அரசு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின் நிர்வாக கட்டுப்பாட்டின் கீழ் இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்குனரகத்தை (Director/Directorate of Indian Medicine and Homoeopathy-DIMH) அமைத்தது (மே 1970). மத்திய மற்றும் மாநில அரசுகள் இரண்டும் இந்திய மருத்துவ முறைகளை ஊக்குவிக்கின்றன. இம்மாநிலத்தில் ஆறு ISM கல்லூரிகளும், எட்டு ISM மருத்துவமனைகளும், ஆங்கில முறை மருத்துவமனைகள், மருந்தகங்கள், ஆரம்ப சுகாதார மையங்கள் ஆகியவற்றில் உடன் அமைந்த 1,477 ISM பிரிவுகளும் உள்ளன. இந்திய அரசு, AYUSH மருந்தகங்களாக அறிவிக்கப்பட்ட 475 ISM பிரிவுகளுக்கு தேசிய ஊரக நல்வாழ்வு திட்டத்தின் (National Rural Health Mission - NRHM) கீழும், AYUSH நல மையங்களாக அறிவிக்கப்பட்ட மேலும் 31 ISM பிரிவுகளுக்கு தேசிய AYUSH திட்டத்தின் (National AYUSH Mission) கீழும் நிதி அளிக்கிறது.

2.2.2 நிர்வாக அமைப்பு

மாநிலத்தில் ISM நிறுவனங்கள் கீழ்கண்டவாறு அமைக்கப்பட்டுள்ளன.



TAMPCOL - தமிழ்நாடு மூலிகைப்பண்ணை மற்றும் மூலிகை மருந்துக் கழகம்; DSMO - மாவட்ட சித்தா மருத்துவ அதிகாரி

2.2.3 தணிக்கையின் நோக்கங்கள்

தணிக்கையின் நோக்கங்கள்:

- பொருள் மற்றும் மனிதவள உள்கட்டமைப்புகளின் நியாயமான தேவைகளை நிறைவு செய்ய போதுமான நிதிகள் மற்றும் அவைகளின் பயன்பாடு உள்ளதா;
- இருக்கக்கூடிய பொருள் மற்றும் மனிதவள உள்கட்டமைப்புகள் சுகாதார சேவைகள் மற்றும் கல்வி ஆகியவற்றை வழங்கியதா;
- மருத்துவ சேவைகளை வழங்குவதற்கு ஒரு திறமையான அமைப்புமுறை ISM மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்களில் நடைமுறையில் உள்ளதா மற்றும்
- ISM மருத்துவக் கல்லூரிகள் தரமான கல்வியை வழங்கி ISM ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளின் மூலம் சுகாதார சேவைகளை உயர்த்தியதா

என்பனவற்றை மதிப்பீடு செய்வது ஆகும்.

2.2.4 தணிக்கையின் அளவுகோல்கள்

தணிக்கையில் கண்டறியப்பட்டவை பின்வருவனவற்றில் கூறப்பட்ட அளவுகோல்களுடன் ஒப்பிடப்பட்டன:

- இந்திய மருத்துவ மத்திய கவுன்சில் சட்டம், 1970;
- ஓமியோபதி மத்திய கவுன்சில் சட்டம், 1973;
- சென்னை, தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகத்தின் இணைப்பு விதிகள்;
- இந்திய மருத்துவ முறைகள் மற்றும் ஓமியோபதி குறித்த தேசிய மற்றும் மாநில கொள்கைகள்;
- தேசிய AYUSH திட்ட வழிகாட்டு நெறிகள்;
- கையெழுத்துப்படிகளுக்கான தேசிய திட்டத்தின் வழிகாட்டு நெறிகள்;
- மருந்துகள் மற்றும் அழகு சாதன பொருட்கள் சட்டம் 1940 மற்றும் விதிகள் 1945;
- மூலிகை செடிகளின் பாதுகாப்பு, மேம்பாடு மற்றும் நீடித்த மேலாண்மைக்கான மத்திய அரசு திட்டத்திற்கான செயலாக்க வழிகாட்டு நெறிகள்;
- தமிழ்நாடு மருத்துவ நடைமுறை நூல் மற்றும் தமிழ்நாடு அரசின் உத்தரவுகள்;
- உயிரி மருத்துவ கழிவு மேலாண்மை விதிகள், 2016;
- தமிழ்நாடு அரசு வெளியிட்ட நடைமுறை நூல்கள் மற்றும் ஆணைகள்/வழிகாட்டு நெறிகள்; மற்றும்
- NRHMன் நிதி மேலாண்மைக்கான செயல்பாட்டு வழிகாட்டு நெறிகள்.

2.2.5 தணிக்கையின் பரப்பு மற்றும் முறைமை

செயலாக்க தணிக்கையின் பரப்பில் 2013-18 காலகட்டத்தை சார்ந்த நடவடிக்கைகள் அடங்கின. ஒவ்வொரு மருத்துவ முறையிலிருந்தும் தலா ஒரு கல்லூரியும் அதனை சார்ந்த மருத்துவமனைகளும் மாதிரியாக கொள்ளப்பட்டன. இந்திய மருத்துவ முறை அமைப்புகள் இருந்த 22 மாவட்டங்களுள் ஆறு[35] மற்றும் 47 அரசு மருத்துவமனைகள் மற்றும் 53 ஆரம்ப சுகாதார மையங்களில் (Primary Health Centre - PHC) அமைந்திருந்த 1,485 ISM பிரிவுகளில் 100 பிரிவுகள் சீரற்ற மாதிரி முறையில் (random selection) அதற்கான ஒரு மென்பொருள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டன. அவற்றின் பட்டியல் **இணைப்பு 2.7**ல் தரப்பட்டுள்ளன. மேலும், தலைமை செயலகத்தில் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, DIMH, மாநில AYUSH சங்கம்[36], மாநில மூலிகை தாவரங்கள் வாரியம், இந்திய மருத்துவ முறைகள் மற்றும் ஓமியோபதிக்கான மாநில மன்றங்கள் (Councils), டாம்ப்கால் என்ற தமிழ்நாடு மூலிகை பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்துகள் கழகம் (மருந்துகள், கருவிகள் போன்றவற்றை வாங்குவதில் DIMHன் ஒப்பளிப்பு முகமையாக செயல்படும் பங்கு மட்டும்) ஆகியனவும் தணிக்கையின் பரப்பில் இருந்தன.

தணிக்கை மார்ச் முதல் ஜூலை 2018 வரை நடத்தப்பட்டது. தணிக்கையின் நோக்கங்களும் செயல்பாட்டை மதிப்பிடுவதற்கு பின்பற்றப்பட்ட அளவுகோல்களும் 14 மே 2018 அன்று மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை முதன்மை செயலாளருடன் நடத்தப்பட்ட ஆரம்பக் கலந்தாய்வுக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டன. தணிக்கை கண்டறிந்தவற்றை விவாதிக்க 10 டிசம்பர் 2018 அன்று ஒரு நிறைவு கலந்தாய்வு கூட்டம் நடத்தப்பட்டது. பதிவுருக்களின் கூர்ந்தாய்வு, எழுத்து மூலமான தணிக்கை விசாரணைகள் மூலம் தகவல்கள்/கருத்துகள் பெறுதல், அமைப்புகளின் தலைவர்களுடன் விவாதங்கள், கூட்டுக் கள ஆய்வுகள், பட்டம் பெற்றதன் பயன் மதிப்பிடுவதற்காக மருத்துவ பட்டதாரிகளிடம் அஞ்சல் மூலம் நடத்தப்பட்ட ஆய்வு (postal survey) ஆகியன தணிக்கையின் முறைமையில் அடங்கும்.

2.2.6 கொள்கையும் விளைபயன்களும்

தமிழ்நாடு அரசு இந்திய மருத்துவ முறைகளின் முக்கியத்துவத்தை உணர்ந்து, பின்வருவனவற்றுக்காக முயல்கிறது:

(அ) ISMஐ பலரும் ஏற்றுக்கொள்ளும் மருத்துவ முறையாக்குதல்

(ஆ) ISM கல்வியின் தரத்தை உயர்த்தி புதிய ISM கல்லூரிகள் துவக்குதல் மற்றும்

(இ) ISM மற்றும் ஓமியோபதி மருந்துகள் தயாரிப்பை ஊக்குவித்தல், ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி செயல்பாடுகளை ஊக்குவித்தல்

மாநிலம் ISM தொடர்பான நோக்கங்களை நிறைவேற்றுவதில் குறிப்பிடத்தகுந்த வெற்றி பெற்றிருந்தாலும், விளைபயன்களில் ஏற்பட்ட கீழ்கண்ட பெரும் குறைபாடுகள் தொடர்ந்து வரும் பத்திகளில் விவாதிக்கப்பட்டுள்ளன.

---

35 திண்டுக்கல், ஈரோடு, தஞ்சாவூர், நீலகிரி, சிவகங்கை மற்றும் வேலூர்.

36 மத்திய அரசின் AYUSH திட்டத்தை செயல்படுத்துவதற்காக அமைக்கப்பட்டது.

(i) ISMல் பல்வேறு திட்டங்களின் வழியாக செய்யப்பட்ட உள்ளீடுகளின் விளைபயன்களுக்கு, சிகிச்சை அளிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை ஒரு அளவிடக்கூடிய குறியீடு ஆகும். அந்த எண்ணிக்கையில் கணிசமான மாற்றம் இல்லாதது, ISMஐ முதன்மையான மருத்துவ முறையுடன் ஒருங்கிணைக்கும் முயற்சியில் ஏற்பட்ட தேக்கத்தை சுட்டிக்காட்டியது (**பத்தி 2.2.10.1**).

(ii) ISM பட்டப்படிப்பின் பலனை வேலைவாய்ப்பை பெற்றுத்தரும் திறத்தின் அடிப்படையிலும் (**பத்தி 2.2.11.3**), கல்வியின் தரத்தை நேரடியாக பாதிக்கக்கூடிய பொருள் மற்றும் பணியாளர் பற்றாக்குறை (**பத்திகள் 2.2.8 மற்றும் 2.2.9**) என்பதையும் நோக்கினால், ISM கல்வியின் தரத்தை உயர்த்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விளைவு பாராட்டத்தக்கதாக இல்லை.

(iii) அதே போல், **பத்திகள் 2.2.10.3, 2.2.10.4** மற்றும் **2.2.11.5**ல் கூறப்பட்டுள்ளவாறு, ISM மருந்து தயாரிப்பு மற்றும் ஆராய்ச்சி என்பனவற்றின் பலனை மேம்படுத்த மேலும் முயற்சிகள் தேவை.

தணிக்கை கண்டறிந்தவை

2.2.7 நிதி மேலாண்மை

தமிழ்நாடு அரசு தனது வரவு செலவுத் திட்ட மூலம் துறையின் வழக்கமான செயல்பாடுகளுக்கும் வளர்ச்சி நடவடிக்கைகளுக்கும் நிதி அளிக்கிறது. இது தவிரவும், NRHM மற்றும் தேசிய AYUSH திட்டம் (NAM) ஆகியவற்றின் கீழ் இந்திய அரசும் நிதி அளிக்கிறது. NRHMன் கீழ் ISMக்கான நிதியை இந்திய அரசு மாநில நல்வாழ்வு குழுமத்திற்கு (State Health Society) அளித்து, அக்குழுமம் அந்நிதியை DIMHக்கு அளிக்கிறது. NAMன் கீழ் ISMக்கான நிதியை இந்திய அரசு மாநில அரசுக்கு அளித்து, மாநில அரசு அந்நிதியுடன் தனது பங்கையும் (40 விழுக்காடு) சேர்த்து DIMH தலைமையிலான மாநில AYUSH குழுமத்திற்கு அளித்தது.

ISM நடவடிக்கைகளுக்காக 2013-18 காலகட்டத்தில் விடுவிக்கப்பட்ட நிதி மற்றும் அதன் பயன்பாடு பற்றிய விவரங்கள் **அட்டவணை 2.23**ல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 2.23: நிதி விடுவிப்பு மற்றும் பயன்பாடு

(₹ கோடியில்)

ஆண்டு	தமிழ்நாடு அரசு நிதி		NAM நிதி		NRHM மானியம்	
	வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு	செலவு	விடுவித்த நிதி	செலவு	விடுவித்த நிதி	செலவு
ஆரம்ப இருப்பு					25.13	
2013-14	177.01	171.51	இல்லை	இல்லை	3.75	20.89
2014-15	218.17	204.74	இல்லை	இல்லை	9.12	9.38
2015-16	220.16	215.10	11.45	25.88	19.92	15.17
2016-17	262.55	261.82	34.43		12.79	16.91
2017-18	292.74	273.27	17.87		17.26	18.76
2013-18ல் வங்கி இருப்பின் மீது பெறப்பட்ட வட்டி மற்றும் இதர வரவுகள்					2.84	
மொத்தம்	**1,170.63**	**1,126.44**	**63.75**	**25.88**	**90.81**	**81.11**

(ஆதாரம்: DIMH அளித்த விவரங்கள் மற்றும் நிதி கணக்குகள்)

அட்டவணை 2.23ல் கூறப்பட்ட செலவில், பல்வேறு கொள்முதல்களுக்காக ஒப்புதல், முகமைக்கு அளிக்கப்பட்டு முழுமையாக பயன்படுத்தப்படாத தொகையும் அடங்கும். பின்வரும் பத்திகளில் கூறப்பட்டவாறு, பயன்படுத்தப்படாத NRHM மற்றும் AYUSH நிதி பெருமளவில் இருந்தது.

2.2.7.1 NRHM நிதி வங்கி கணக்கில் முடக்கம்

முன்னர் இருந்த AYUSHக்கான மத்திய அரசு திட்டத்தின் கீழ் பெறப்பட்ட நிதிக்காக DIMH ஒரு வங்கி கணக்கை வைத்திருந்தார். NRHM துவக்கப்பட்ட பின், DIMH மாநில நல்வாழ்வு குழுமத்திடமிருந்து நிதி பெற துவங்கினார்; இதற்கான ஒரு தனி வங்கி கணக்கு 2009ல் துவக்கப்பட்டது.

AYUSH திட்டத்திற்கான வங்கி கணக்கில் இருந்த தொகை 2014-15 வரை படிப்படியாக பயன்படுத்தப்பட்டது. ஏப்ரல் 2015 நிலையில், ₹ 1.55 கோடி தொகை இருப்பு இருந்த அந்த கணக்கு இயக்கமற்று போனது. மார்ச் 2018 நிலையில், 2015-18 காலகட்டத்தில் பெற்ற வட்டி தொகையையும் சேர்த்து அக்கணக்கில் ₹ 1.74 கோடி இருப்பு இருந்தது. DIMH இந்நிதிக்கான கணக்குப் பதிவேடு எதையும் பராமரிக்கவில்லை; வங்கி இருப்பை கூறுவாரியான மற்றும் ஆண்டு வாரியான செலவுடன் ஒத்திசைவு செய்வதற்கான ஒரு முறைமையும் இருக்கவில்லை. இதனால், திட்டத்தின் எந்த கூறுகளுக்காக அந்த நிதி பெறப்பட்டது என்பது தெரியவில்லை; ₹ 1.74 கோடி வங்கி கணக்கில் பயனின்றி வைக்கப்பட்டிருந்தது.

மாநில நல்வாழ்வு குழுமம் 2009ல் NRHM நிதியை DIMHக்கு விடுவிக்க தொடங்கியது. PHCக்கள் மற்றும் மருத்துவமனைகளில் 300 ISM பிரிவுகளை அமைத்து செயல்படுத்துவதற்காக அக்குழுமம் NRHMன் கீழ் ₹ 54.90 கோடி தொகையை DIMHக்கு விடுவித்தது (2010). அத்தொகை, கட்டடங்கள், மருந்துகள், கருவிகள் போன்ற பல்வேறு கூறுகளுக்கானதாகும். எட்டு ஆண்டுகளுக்கு முன் 2010ல் பெற்ற ₹ 54.90 கோடி தொகையில், மார்ச் 2018 நிலையில் DIMH ₹ 9.12 கோடி தொகையை வங்கி கணக்கில் வைத்திருந்தார். அதில், **பத்தி 2.2.8.2(ஆ)**ல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு PHCக்களில் 17 ISM பிரிவுகளுக்காக திட்டமிடப்பட்ட கட்டடங்களை கட்டுவது தொடர்பான செலவிடப்படாத தொகையான ₹ 2.06 கோடி, பெறப்பட்ட வட்டி போன்றவை அடங்கும். இத்தொகைக்கு DIMH கணக்குகளை பராமரிக்கவும், NRHMன் 'நிதி மேலாண்மைக்கான செயல்பாட்டு வழிகாட்டு நெறிகள்' கூறியவாறு மாதாந்திர ஒத்திசைவை மேற்கொள்ளவும் இல்லை.

முறைப்படியான கணக்குவைப்பு இல்லாததால், மோசடி நடவடிக்கைகள் ஏற்படக்கூடிய அபாயத்தை DIMH உருவாக்கினார். மேலும், அரசு நிதியை வங்கி கணக்குகளில் முடக்கி வைத்தது என்பது அந்நிதியை வழங்கியதன் நோக்கத்தை சிதைத்தது.

தமிழ்நாடு அரசு தனது மறுமொழியில் (நவம்பர் 2018), கணக்குகளை தயாரிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட பட்டய கணக்கர்கள் இவை குறித்து கவனித்தனர் எனவும், வங்கி கணக்குகள் ஒத்திசைவும் கணக்குகள் முறையாக பராமரிக்கப்படுவதும் வருங்காலத்தில் உறுதி செய்யப்படும் எனவும் தெரிவித்தது.

2.2.7.2 டாம்ப்கால் நிறுவனத்தில் நிதி முடக்கம்

மருந்துகள், கருவிகள் போன்றவற்றை கொள்முதல் செய்வதற்கான முகமையாக (nodal agency) டாம்ப்கால் நிறுவனத்தை தமிழ்நாடு அரசு அமர்த்தியது

(டிசம்பர் 2013). தமிழ்நாடு அரசு வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதி, மாநில நல்வாழ்வு குழுமத்திடமிருந்து பெற்ற NRHM நிதி, மாநில AYUSH குழுமத்திடமிருந்து பெற்ற AYUSH நிதி ஆகியன டாம்ப்கால் நிறுவனத்திடம் வழங்கப்பட்டன. மருந்துகள், கருவிகள் போன்றவற்றை கொள்முதல் செய்வதற்காக டாம்ப்கால் நிறுவனத்திற்கு மாற்றப்பட்ட தொகை, பயன்படுத்தப்பட்டது மற்றும் மீதம் பற்றிய விவரங்கள் **அட்டவணை 2.24**ல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 2.24: டாம்ப்கால் நிறுவனத்திடம் பயனற்று இருந்த நிதி

ஆண்டு	டாம்ப்கால் வைத்திருந்த நிதி (₹ கோடியில்)			
	துவக்க இருப்பு	DIMH விடுவித்தது	பயன்படுத்தப்பட்டது	இறுதி இருப்பு
2013-14	0.90	12.14	00.93*	12.11
2014-15	12.11	32.56	23.87	20.80
2015-16	20.80	28.81	29.06	20.55
2016-17	20.55	30.13	28.30	22.38
2017-18	22.38	23.71	23.41	22.68
மொத்தம்		**127.35**	**105.57**	

* அரசு கணக்கில் மீள செலுத்தப்பட்ட ₹ 0.55கோடியையும் சேர்த்து.

(ஆதாரம்: டாம்ப்கால் அளித்த விவரங்கள்)

டாம்ப்கால் நிறுவனத்திடம் நிதி பயனற்று இருந்தமைக்கான முக்கிய காரணங்கள் ஆவன:

- கருவிகளின் தாமதமான/செய்யப்படாத கொள்முதல், வெளி பணியாளர்களை அமர்த்துதல், **பத்தி 2.2.8.2(இ)**ல் கூறப்பட்டவை ஆகிய கூறுகளில் ₹ 12.56 கோடி நிதி பயன்படுத்தாமை.
- NAMன் கீழ் ₹ 4.82 கோடி மற்றும் மாநில வரவு செலவுத் திட்டத்தின் கீழ் ₹ 5.30 கோடி ஆகிய தொகைகளுக்கு மருந்துகளின் தாமதமான/ செய்யப்படாத கொள்முதல் (**பத்தி 2.2.10.3**ல் கூறப்பட்டவையும் சேர்த்து)

செலவிடாத நிதியை ஆண்டு முடிவில் ஒப்படைப்பதை தவிர்க்கும் நோக்கத்துடன் நிதியை டாம்ப்கால் நிறுவனத்தில் முடக்கி வைக்க DIMH முகமை முறையை பயன்படுத்தியது என்பதை தணிக்கை கண்டறிந்தது. நிதியாண்டின் முடிவில் நிதி ஒப்படைப்பை தவிர்க்கும் நோக்கத்துடன் செய்யப்பட்டது என தெரியவருவது போல, 2014, 2015 மற்றும் 2018 ஆண்டுகளில் மார்ச் மாத இறுதியில் முறையே ₹ 3.37 கோடி, ₹ 2.50 கோடி, ₹ 11.07 கோடி ஆகிய பல்வேறு திட்டங்களின் நிதியை DIMH டாம்ப்கால் நிறுவனத்துக்கு மாற்றினார்.

2.2.7.3 தேசிய AYUSH குழும நிதி பயன்பாட்டில் குறைபாடுகள்

மத்திய அரசின் AYUSH திட்டத்தின் கீழ் இந்திய அரசு ஒவ்வொரு ஆண்டும் நிதியை ஒதுக்கீடு செய்து, செயல்பாட்டு திட்டம் (Project Implementation Plan - PIP) என்ற வடிவில் கருத்துருக்களை கோருகிறது. இந்திய அரசு ஒப்புதல் அளித்த PIPன் கூறுகளுக்கு இந்திய அரசும் தமிழ்நாடு அரசும் 60:40[37] என்ற விகிதத்தில் நிதி வழங்கும். இந்திய அரசு தமிழ்நாடு அரசுக்கு நிதி வழங்கி, ஒப்புதல் அளிக்கப்பட்ட கூறுகளை செயல்படுத்த தமிழ்நாடு அரசு தனது வரவு செலவுத்

[37] இவ்விகிதம் 2013-14 வரை 75:25 என இருந்தது.

திட்டம் மூலம் அந்நிதியை வழங்கும். DIMH உறுப்பினர் செயலராக உள்ள மாநில AYUSH குழுமம், AYUSH திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் செயல்பாடுகளை ஒருங்கிணைக்கிறது. AYUSH திட்ட நிதி பெறப்பட்டது மற்றும் பயன்பாடு பற்றிய விவரங்கள் **அட்டவணை 2.25**ல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 2.25: மாநில AYUSH குழுமத்திடம் பயனற்று இருந்த நிதி

(₹ கோடியில்)

ஆண்டு	இந்திய அரசு ஒதுக்கிய நிதி	PIP அடிப்படையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்ட அளவு	இந்திய அரசு ஒப்பளிப்பு செய்த பங்கு	ஒப்பளிக்கப்பட்ட மாநில அரசு பங்கு	மாநில அரசுக்கு விடுவிக்கப்பட்ட இந்திய அரசு பங்கு	AYUSH குழுமத்திடம் இருந்த நிதி			
						துவக்க இருப்பு	தமிழ்நாடு அரசு குழுமத்திற்கு விடுவித்தது	குழுமம் பயன்படுத்தியது	இறுதி இருப்பு
2013-14	வி.இ.	18.82	14.12	4.70	0	0	0	0	0
2014-15	13.84	0	0	0	0	0	0	0	0
2015-16	12.63	11.45	6.87	4.58	6.87		1.46	1.20	
2016-17	22.10	34.43	20.66	13.77	20.66	0	29.97	20.00	38.13
2017-18	25.07	35.07	21.04	14.03	21.04		32.32	4.42	

வி.இ.: விவரங்கள் இல்லை

(ஆதாரம்: மாநில AYUSH குழுமம் அளித்த விவரங்கள்)

AYUSH திட்ட நிதியை பெறுவதிலும் பயன்படுத்துவதிலும் இருந்த குறைபாடுகள் கீழே விவாதிக்கப்பட்டுள்ளன:

- மாநிலத்தில் AYUSH நடவடிக்கைகளுக்கான தனது உதவியாக 2014-15ல் இந்திய அரசு ₹ 8.30 கோடி[38] ஒதுக்கியது. எனினும், மாநில AYUSH குழுமத்தை அமைப்பதில் இருந்த தாமதம் காரணமாக, அந்த தொகையை பெறும் பொருட்டு மாநில அரசினால் PIPஐ அளிக்க இயலவில்லை. இதனால் மாநிலத்தில் 2014-15ல் AYUSH சேவைகளை விரிவுபடுத்த இயலவில்லை.

- 2016-17 மற்றும் 2017-18 ஆண்டுகளின் ஒப்புதல் அளிக்கப்பட்ட PIPன் அடிப்படையில், இந்திய அரசு தனது பங்காக முறையே ₹ 20.66 கோடி மற்றும் ₹ 21.04 கோடி தொகைகளை தமிழ்நாடு அரசுக்கு அந்தந்த ஆண்டுகளில் விடுவித்தது. எனினும், தமிழ்நாடு அரசு அத்தொகைகளை மாநில AYUSH குழுமத்திற்கு உரிய காலத்தில் விடுவிக்கவில்லை. அது, 2016-17 ஆண்டுக்குரிய ₹ 14.44 கோடி தொகையை பிப்ரவரி 2018ல் விடுவித்தது; 2017-18 ஆண்டுக்குரிய ₹ 17.19 கோடி தொகையை ஜூலை 2018 வரை விடுவிக்கவில்லை. மாநில AYUSH குழுமத்திற்கு நிதி விடுவிக்காமை/தாமதமான விடுவிப்பு காரணமாக, (அ) இரண்டு மாவட்ட மருத்துவமனைகளில் ISM பிரிவுகளை தரம் உயர்த்துதல், (ஆ) ஆஷா பணியாளர்/துணை செவிலியர்/கிராம சுகாதார செவிலியர்களுக்கு பயிற்சி அளித்தல் போன்ற முறையே 2016-17 மற்றும் 2017-18 ஆண்டுகளுக்கான மாநில ஆண்டு செயல்திட்டத்தில்

[38] ஒதுக்கப்பட்ட ஆண்டு திட்ட மதிப்பான ₹ 13.84 கோடி தொகையில் 60 விழுக்காடு.

ஒப்பளிக்கப்பட்ட பல திட்டங்களை துவக்க இயலவில்லை. இதனால், நோயாளிகளுக்கு ISM சேவைகளை அளிப்பது பாதிக்கப்பட்டது.

மேலும், இந்திய அரசு மற்றும் தமிழ்நாடு அரசு அளித்த நிதியை முழுவதுமாக பயன்படுத்த மாநில நல்வாழ்வு குழுமம் கீழ்கண்ட காரணங்களால் தவறியது:

- மாநில திட்ட மேலாண்மை அமைப்புக்கு NAM நிதி அளிக்கிறது. அவ்வமைப்புக்கு பணியாளரை அமர்த்த 2015-18 காலகட்டத்தில் NAM ₹ 1.07 கோடி விடுவித்தது. ஒப்பளிக்கப்பட்ட முக்கிய பணியிடங்களும் (திட்ட மேலாளர், நிதி மேலாளர், கணக்கு மேலாளர், மேலாண்மை தகவல் அமைப்பு மேலாளர் போன்றவை) மற்றும் ஒரு ஆலோசகர் பணியிடமும் நிரப்பப்படாததால், ஊதியத்திற்காக ஏப்ரல் 2018 வரை ₹ 0.14 கோடி மட்டும் செலவிடப்பட்டு, ₹ 0.93 கோடி பயன்படுத்தப்படவில்லை. நிதி இருந்தும் மேலாண்மை அமைப்பு வலுப்படுத்தாததால் AYUSH திட்ட பணிகளில் பின்வரும் பத்திகளில் கூறப்பட்டவாறு குறைபாடுகள் இருந்தன என்பதை தணிக்கை கண்டறிந்தது.

- சித்தா, ஆயுர்வேதம், ஓமியோபதி, யோகா & இயற்கை மருத்துவம் மற்றும் யுனானி முறைகளுக்கான, தகவல், கல்வி மற்றும் தொடர்பு நடவடிக்கைகளுக்காக 2015-16ல் NAM ₹ 0.61 கோடி ஒப்புதல் அளித்தது. DIMH மேற்படி வகையில் ₹ 0.06 கோடி மட்டுமே செலவிட்டு, மீதமுள்ள ₹ 0.55 கோடி தொகையை பயன்படுத்தவில்லை. நிதியை முழுவதுமாய் செலவிட DIMH தவறியதால் அந்த நடவடிக்கைகள் புறக்கணிக்கப்பட்டன.

- காணொளிப் படங்கள், பவர்பாய்ண்ட் விளக்கக் காட்சி (PowerPoint presentation) போன்றவை மூலம் நல்வாழ்வு கல்வி வகுப்புகள் நடத்துதல் போன்ற பொதுமக்களுக்கான நல்வாழ்வு முகாம் நடவடிக்கைகளை மேற்கொள்ள NAM 2016-17ல் ₹ 1.55 கோடி தொகைக்கு ஒப்புதல் அளித்தது. அதில் ₹ 0.58 கோடி தொகையை மின்னணு பொருட்களை கொள்முதல் செய்வதற்காக அதற்குரிய ஒப்புதல் முகமையான எல்காட் நிறுவனத்திடம் அளித்ததை தவிர துறை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. செப்டம்பர் 2018 வரை முகாம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. ஒப்பளிக்கப்பட்ட தொகையான ₹ 1.55 கோடியில், மீதமுள்ள ₹ 0.97 கோடி, எல்காட்டிற்கு முன்பணம் கொடுக்கப்பட்டதையடுத்து பயன்படுத்தப்படவில்லை.

இந்திய அரசு 2016-17 மற்றும் 2017-18 ஆண்டுகளில் தனது பங்கை விடுவித்தபோதிலும், மாநில AYUSH குழுமத்திற்கு அதனை விடுவிக்க இயலவில்லை என்பதை தமிழ்நாடு அரசு தனது மறுமொழியில் (நவம்பர் 2018) ஏற்றுக்கொண்டது. அதற்கான காரணம் தெரிவிக்கப்படவில்லை.

2.2.8 பொருள் சார்ந்த உள்கட்டமைப்பு

இந்திய மருத்துவ முறை மத்திய கவுன்சில் (Central Council of Indian Medicine - CCIM) சட்டம் 1970ன் கீழ் அமைக்கப்பட்ட புதுதில்லியில் உள்ள CCIM, ஆயுர்வேதம், சித்தா மற்றும் யுனானி முறைகளில் கல்வி மற்றும் மருத்துவம் பயில்வதில் வழிகாட்டி மேம்படுத்தும் ஒழுங்காற்று அமைப்பாகும்.

ஓமியோபதி முறைக்கு அவ்வாறான அமைப்பு, மத்திய ஓமியோபதி கவுன்சில் (Central Council of Homeopathy - CCH) சட்டம் 1973ன் கீழ் அமைக்கப்பட்ட புதுதில்லியில் உள்ள CCH ஆகும். கல்லூரிகள் மற்றும் அவற்றுடன் இணைந்த மருத்துவமனைகளுக்கான பொருள் மற்றும் மனிதவள உள்கட்டமைப்புக்கான குறைந்தபட்ச தேவைக்கான அளவுநிலைகளை (norms) மேற்படி அமைப்புகள் வகுத்துள்ளன. யோகா & இயற்கை மருத்துவ கல்லூரிகளுக்கான அத்தகைய அளவுநிலைகளை சென்னை, தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகம் வகுத்துள்ளது. அரசு மருத்துவமனைகள் மற்றும் PHCக்களில் உள்ள ISM பிரிவுகளுக்கு அத்தகைய வழிகாட்டுநெறிகள்/அளவுநிலைகள் விதிக்கப்படவில்லை.

2.2.8.1 ISM கல்லூரிகளில் பொருள் சார்ந்த உள்கட்டமைப்பில் குறைபாடுகள்

கல்லூரிகளின் அங்கீகாரத்தை புதுப்பிக்க CCIM மற்றும் CCH ஆண்டுதோறும் அவற்றை ஆய்வு செய்கின்றன. ஆய்வுக்குழு குறைபாடுகளை சுட்டிக்காட்டியபோது, உள்கட்டமைப்பு முழுவதையும் அமைப்பதாக கல்லூரிகளின் முதல்வர்கள் CCIM மற்றும் CCHக்கு எழுத்து மூலம் உறுதி அளித்தனர். எனினும், அவ்வாறு உறுதி அளித்தபோதிலும், பின்வரும் துணை பத்திகளில் கூறப்பட்டுள்ளவாறு அக்குறைபாடுகள் இதுநாள் வரை (ஜூன் 2018) நீடித்தன.

(அ) அரசு சித்த மருத்துவ கல்லூரி, சென்னை

(i) சித்த மருத்துவ கல்லூரிகளில் பிறவற்றுக்கிடையே, ஒரு நோய்க்குறியியல் (Pathology) ஆய்வகமும் ஒரு அருங்காட்சியகமும் இருக்க வேண்டும் என CCIM கூறுகிறது. சென்னை, சித்த மருத்துவ கல்லூரியில் ₹ 75 இலட்சம் செலவில் ஒரு அரங்கை (auditorium) கட்ட தமிழ்நாடு அரசு மே 2013ல் நிர்வாக அனுமதி அளித்தது. ஏற்கெனவே உள்ள ஒரு கட்டடத்தின் முதல் தளத்தில் அந்த அரங்கினை கட்டுவது தொழில்நுட்ப வகையில் இயலாது என பொதுப்பணித்துறை தெரிவித்தது (அக்டோபர் 2016). அந்த அரங்கிற்கு மாற்றாக ₹ 1.43 கோடி செலவில் ஒரு நோய்க்குறியியல் ஆய்வகம், அருங்காட்சியகம் மற்றும் வகுப்பறைகள் ஆகியன கட்டுவதாக DIMH கருத்துருவை திருத்தி (நவம்பர் 2016) அரசின் ஒப்புதலை கோரினார். அது DIMH மற்றும் அரசுக்கு இடையேயான கடித தொடர்புக்கு உட்பட்டிருந்து, ஜூன் 2018 நிலையிலும் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. கட்டாயமான உள்கட்டமைப்பு பற்றிய ஒரு முழுமையான கருத்துருவை உரிய காலத்தில் அளிக்க DIMH தவறியது மற்றும் அரசு அளவில் இயல்பு மீறிய நிர்வாக வகையிலான தாமதங்கள் ஆகிய முக்கிய காரணங்களால், CCIM விதித்த நோய்க்குறியியல் ஆய்வகமும் அருங்காட்சியகமும் இன்றியே கல்லூரி தொடர்ந்து இயங்கியது. அக்கல்லூரியில் நோய்க்குறியியல் பிரிவுக்கான முதுநிலை பட்டப்படிப்பை அளிக்கிறது என்பதும், சித்த மருத்துவத்தில் இளநிலை பட்டப்படிப்பில் நோய்க்குறியியலில் இரண்டு பாடங்களும் மாணவர்களுக்கு இரண்டு மாத கால மருந்தக செயல்முறை பயிற்சியும் உண்டு என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கவை. எனவே, முழு அளவிலான நோய்க்குறியியல் ஆய்வகத்தில் செய்யப்படும் கட்டாயமான செயல்முறை பயிற்சி வகுப்புகளை அக்கல்லூரியில் நடத்த இயலாது என்பதால், அத்தகைய ஆய்வகம் இல்லாமல் அளிக்கப்பட்ட கல்வி முழுமையற்றதாக இருந்தது என்பதை தணிக்கை கண்டறிந்தது.

(ii) பாடம் நடத்துவதில் பயன்படுத்தப்படும் ஆய்வக விலங்குகளை வைக்க சித்த மருத்துவ கல்லூரிகளில் ஒரு விலங்கு அறை இருக்க வேண்டும் என CCIM விதிகள் கூறுகின்றன. இக்கல்லூரியில் ஒரு விலங்கு அறை கட்ட தமிழ்நாடு அரசு

டிசம்பர் 2013ல் ₹ 1.60 கோடி ஒப்பளிப்பு செய்தது; கட்டுமான பணி ஆகஸ்ட் 2016ல் முடிவுற்றது. அந்த அறையை பயன்படுத்துவதற்குரிய பணியாளர்கள் இல்லாததால் இரண்டு ஆண்டுகள் பயனற்று இருந்தது (ஜூன் 2018). கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு 19 மாதங்கள் கடந்த பின், ஒரு கால்நடை மருத்துவர் மற்றும் பிற பணியாளர்களை ஒப்பந்த முறையில் பணியமர்த்துவதற்கான ஒரு கருத்துருவை கல்லூரி முதல்வர் அனுப்பினார் (மார்ச் 2018) என்பதை தணிக்கை கண்டது. கட்டுமான பணியின் துவக்க நிலையிலேயே பணியாளர் தேவை குறித்து கருத்துரு அனுப்ப முதல்வர் தவறியதால் விலங்கு அறையை பயன்படுத்துவதற்குரிய பணியாளர்கள் இல்லாத நிலை ஏற்பட்டது. இதன் விளைவாக, ₹ 1.60 கோடி செலவில் உருவான கட்டாயமான ஒரு வசதி இரண்டு ஆண்டுகள் பயனற்று வைக்கப்பட்டுள்ளது. விலங்கு அறை இல்லாத நிலையில், செயல்முறை வகுப்புகளுக்காக மாணவர்கள் வேறு பல கல்லூரிகளுக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

(ஆ) அரசு ஓமியோபதி கல்லூரி, திருமங்கலம்

(i) நோயின் அறிகுறிகள், அவற்றை உண்டாக்குவதாக அறியப்படும் பொருட்கள், அவற்றை குணமாக்கும் பொருட்கள் ஆகியவற்றை கொண்ட பட்டியல் ஓமியோபதி கிடங்கு (Repertory) எனப்படும். CCH அளவுநிலைகளின்படி, கிடங்கு துறையில், வெவ்வேறு கிடங்குகளிலும் மென்பொருளுடன் கூடிய ஐந்து கணினிகள் இருக்க வேண்டும். திருமங்கலம், அரசு ஓமியோபதி கல்லூரிக்காக பல்வேறு கருவிகள் வாங்க தமிழ்நாடு அரசு டிசம்பர் 2013ல் ₹ 50 இலட்சம் ஒப்பளிப்பு செய்தது. DIMH அத்தொகையை கருவிகள் வாங்குவதற்காக டாம்ப்கால் நிறுவனத்திற்கு அளித்தார் (ஜூன் 2014). கருவிகளை விற்பனை செய்பவராக கல்லூரி முதல்வர் இரு நிறுவனங்களை கண்டறிந்து அதற்கான ஒப்புதல் கோரி DIMHக்கு அவர் அனுப்பிய கருத்துருக்கு ஒப்புதல் அளிக்கப்படாததால், கருவிகள் வாங்கப்படவில்லை. அங்கீகரிக்கப்பட்ட கிடங்கு இல்லாத நிலையில், பாடம் நடத்துவதற்கு இணையதளத்தில் உள்ளவற்றை சார்ந்திருப்பது அபாயகரமானது ஆகும்.

(ii) ஓமியோபதி முதுநிலை படிப்புப் பிரிவுகளை துவக்குவதற்கு, கலோரிமீட்டர், எலக்டிரிக் பொட்டன்டைசர், எலக்டிரிக் டிரிடியுரேட்டர், ஸ்பெக்ட்ரோஸ்கோப் ஆகியன CCH அளவுநிலைகளின்படி கட்டாயமாக இருக்க வேண்டிய கருவிகள் ஆகும். மேற்படி கல்லூரியில் மூன்று முதுநிலை படிப்புப் பிரிவுகளை துவக்கும் திட்டத்தின் அடிப்படையில், டாம்ப்கால் நிறுவனம் டிசம்பர் 2013ல் ஒப்பளிக்கப்பட்ட ₹ 50 இலட்சம் தொகையை கொண்டு ₹ 12.05 இலட்சம் செலவில் மேற்கூறிய நான்கு கருவிகளையும் ஜனவரி 2016ல் வாங்கி கல்லூரிக்கு அளித்தது. மேற்படி கொள்முதல் முதுநிலை படிப்புப்பிரிவுகளை துவக்கும் நேரத்துடன் பொருந்தி வரும் வகையில் செய்யப்படாததால், அக்கருவிகள் பயன்படுத்தப்படவில்லை. முதுநிலை படிப்புப் பிரிவுகளை துவக்குவதில் இருந்த தாமதம் காரணமாக கருவிகள் பயனற்று இருந்தன.

இக்கல்லூரியில் முதுநிலை படிப்புப் பிரிவுகளை துவக்குவது குறித்து தற்போதைய சூழலில் புதிதாக ஆய்வு செய்யப்படும் என தமிழ்நாடு அரசு மறுமொழி அளித்தது (நவம்பர் 2018).

2.2.8.2 ISM மருத்துவமனைகள் மற்றும் பிரிவுகளில் பொருள்சார்ந்த உள்கட்டமைப்பில் குறைபாடுகள்

(அ) ஆங்கில முறை மருத்துவமனைகளில் ISM பிரிவுகளுக்கு போதிய கட்டடங்கள் இல்லாமை

டிசம்பர் 1995ல் வெளியிடப்பட்ட அரசாணையின்படி, ISM பிரிவு உள்ள மாவட்ட தலைமை (District Headquarters - DHQ) மருத்துவமனை ஒவ்வொன்றிலும் 10 படுக்கைகள் கொண்ட உள் நோயாளிகள் பிரிவும், ISM பிரிவு உடைய பிற மருத்துவமனைகளில் ஐந்து படுக்கைகள் கொண்ட உள் நோயாளிகள் பிரிவும் இருக்க வேண்டும். மாதிரியாக கொள்ளப்பட்ட 19 வட்ட/வட்டம் அல்லாத பிற (taluk/non-taluk) மருத்துவமனைகளுள், எட்டு மருத்துவமனைகள் மட்டுமே உள் நோயாளி சேவைகளை அளித்தன; மற்ற 11 மருத்துவமனைகள் வெளி நோயாளி சேவைகளை மட்டும் அளித்தன (**இணைப்பு 2.8**). உள் நோயாளி சேவைகள் இல்லாத காரணத்தினால், **பத்தி 2.2.10.1**ல் கூறப்பட்டுள்ளவாறு, ISM பிரிவுகள்/ மருத்துவமனைகளில் உள் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பது குறைந்து கொண்டு வந்தது.

இந்த மருத்துவமனைகளில் உள்நோயாளி சிகிச்சைக்கான வசதிகளை உருவாக்க DIMH ஒரு முழுமையான திட்டத்தை வைத்திருக்கவில்லை. அதன் விளைவாக, அரசாணை வெளியிடப்பட்டபோதிலும், உள் நோயாளி சிகிச்சைக்கான வசதியுடன் கூடிய ISM பிரிவுகள் அனைத்து மருத்துவமனைகளுக்கும் விரிவுபடுத்தப்படவில்லை; இது, அத்தகைய விரிவாக்கத்திற்கான நோக்கத்தை சிதைத்தது. பின்வரும் துணை பத்திகளில் விவாதிக்கப்பட்டுள்ளவாறு, ஆறு மாதிரி மாவட்டங்களுள் இரண்டில் DHQ மருத்துவமனைகளில் இருந்த உள் நோயாளிகள் பிரிவு கூட அதன் முழு அளவில் இயங்கவில்லை என்பதும் காணப்பட்டது:

(i) சிவகங்கை DHQ மருத்துவமனையில் 16 படுக்கைகள் கொண்ட சித்தா பிரிவு மே 1998 முதல் இயங்கி வந்தது. 2015ல், அம்மருத்துவமனையின் ஆங்கில மருத்துவ பிரிவு சிவகங்கையில் புதிதாக கட்டப்பட்ட மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டு, காரைக்குடியில் இருந்த அரசு மருத்துவமனை DHQ மருத்துவமனையாக ஆக்கப்பட்டது. புதிதாக கட்டப்பட்ட மருத்துவ கல்லூரி மருத்துவமனையிலோ காரைக்குடி DHQ மருத்துவமனையிலோ ISM பிரிவுகளை இடப்பற்றாக்குறை காரணமாக அமைக்க இயலாததால், சித்தா மற்றும் ஓமியோபதி பிரிவுகள் முந்தைய DHQ மருத்துவமனை கட்டடத்திலேயே தொடர்ந்து இயங்கின. கட்டடத்தின் சிதிலமடைந்த நிலை மற்றும் உணவு வசதிகள் இல்லாமை காரணமாக, உள் நோயாளிகள் பிரிவு 2015க்கு பின் இயங்கவில்லை. 2015க்கு முன் 2012-15 காலகட்டத்தில் 1,149 உள் நோயாளிகள் சிகிச்சை பெற்றனர். புதிய கட்டடத்திற்காக திட்டமிடும் நிலையில், அம்மருத்துவமனையின் சித்த மற்றும் ஓமியோபதி பிரிவுகளுக்கு மருத்துவ கல்வி இயக்ககம் இடம் ஒதுக்கவில்லை. இது குறித்து DSMO DIMHக்கு தெரிவித்தபோதிலும் (அக்டோபர் 2017), சித்தா முறைக்கான உள் நோயாளிகள் பிரிவுக்கு தேவையான இடம் இருப்பதை உறுதி செய்யும் பொருட்டு அதனை மருத்துவ கல்வி இயக்குனரின் கவனத்திற்கு கொண்டு செல்லவில்லை; இதனால், உள் நோயாளி சேவைகள் தொடர்ந்து பாதிக்கப்பட்டன.

(ii) திண்டுக்கல் DHQ மருத்துவமனையில் 25 படுக்கைகள் கொண்ட ISM பிரிவு 1984 முதல் இயங்கி வந்தது. கட்டடத்தின் சிதிலமடைந்த நிலை காரணமாக, உள் நோயாளிகள் பிரிவை மூன்று முறை ஆங்கில மருத்துவ பிரிவு

கட்டடத்திற்கு மாற்ற நேரிட்டது; இதனால் படுக்கைகளின் எண்ணிக்கை படிப்படியாக குறைந்து ஜூன் 2018 நிலையில் ஆறை எட்டியது. படுக்கை எண்ணிக்கை குறைந்ததால், 2005-06ல் 5,548 என இருந்த உள் நோயாளிகள் எண்ணிக்கை 2017-18ல் 1,636க்கு குறைந்தது. இட பற்றாக்குறை பிரச்சினை 2010-11 முதலே இருந்தபோதிலும், தேசிய AYUSH திட்ட நிதியை கொண்டு ISM உள் நோயாளிகள் பிரிவுக்கு ஒரு புதிய கட்டடத்திற்கான கருத்துருவை DSMO 2017-18ல் தான் அளித்தார். அது DIMHன் பரிசீலனையில் இன்னமும் இருந்தது (ஆகஸ்ட் 2018).

தமிழ்நாடு அரசு தனது மறுமொழியில் (நவம்பர் 2018), புதிய DHQ மற்றும் பிற மருத்துவமனைகளுக்கான கட்டடங்களுக்கான மாதிரி வடிவமைப்பில் (type design) ISM பிரிவுகளுக்கு போதிய இடம் ஒதுக்குவது என்பது பரிசீலனையில் உள்ளதாக தெரிவித்தது.

(ஆ) PHCக்களில் ISM பிரிவுகளுக்கு போதிய இடம் இல்லாமை

(i) PHCக்களில் ISM பிரிவுகளுக்காக பொதுப்பணித்துறை பின்பற்றிய மாதிரி வடிவமைப்பின்படி, ஒரு பிரிவுக்கு 76 சதுர மீட்டர் இடம் இருக்க வேண்டும். எனினும், 43 மாதிரி PHCக்களுள் 32ல் இருந்த இடம் விதிக்கப்பட்ட அளவைவிட குறைவாக இருந்தது என்பதை தணிக்கை கண்டறிந்தது.

மார்ச் 2018 நிலையில், மாநிலத்தில் 1,806 PHCக்கள் இருந்தன. அவற்றுள், 927ல் ISM பிரிவுகள் இருந்தன. 2009-10ல் ₹ 54.90 கோடி செலவில் 300 PHCக்களில் ISM பிரிவுகளை அமைக்க தமிழ்நாடு அரசு செப்டம்பர் 2009ல் ஒப்புதல் அளித்தது. அத்தொகையில் ₹ 33.75 கோடி ISM பிரிவுகளுக்கு கட்டடங்கள் கட்டுவதற்கும் மீத தொகை கருவிகள், பணியாளர் செலவு, மருந்துகள் ஆகியவற்றுக்கும் ஆகும். கட்டும் இடம் கிடைக்காமை, சாதகமற்ற மண் நிலை, மலைப்பாங்கான பகுதிகளில் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படாமை போன்ற காரணங்களால் ஜூன் 2018 நிலையில் 17 PHCக்களில் கட்டுமான பணி துவங்கவில்லை. இதனால், கட்டுமான பணிகளுக்காக விடுவிக்கப்பட்ட ₹ 33.75 கோடி தொகையில் ₹ 31.69 கோடி மட்டும் செலவிடப்பட்டு மீதம் ₹ 2.06 கோடி DIMHயிடம் இருந்தது.

தமிழ்நாடு அரசு தனது மறுமொழியில் (நவம்பர் 2018), 17 இடங்களில் பல்வேறு காரணங்களால் கட்டடங்களை கட்ட இயலவில்லை எனவும், புதிய இடங்களில் கட்டுவது பற்றி ஆராயப்பட்டு, விலையேற்றம் காரணமாக கட்டும் பணி மேற்கொள்ளப்படவில்லை எனவும் தெரிவித்தது. மேலும், இந்த இடங்களுக்குரிய மத்திய அரசின் பங்கான ₹ 1.63 கோடி இந்திய அரசுக்கு மீள செலுத்தப்படும் எனவும் அரசு தெரிவித்தது.

(ii) அதுபோலவே, தணிக்கை மாதிரியாக தேர்ந்தெடுத்த ஒன்பது யோகா & இயற்கை மருத்துவ நல மையங்களுள் இரண்டு மையங்களில்[39] இடம், விதிக்கப்பட்ட 1,500 சதுர அடிக்கும் குறைவாக இருந்தது. இதனால், தஞ்சாவூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் பணியாளர்கள் முழு அளவில் இருந்தும், பன்மடங்கு நோயாளிகளுக்கு ஒரே நேரத்தில் நோய் தீர்வியல் (therapeutic) யோகா பயிற்சிகளை அளிக்கப்படவில்லை. மேலும், உடற்பயிற்சிகளுக்கான அனைத்து கருவிகளும் நெருக்கமாக நிறுவப்பட்டன;

---

39 தஞ்சாவூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை, தஞ்சாவூர் மற்றும் DHQ, காரைக்குடி ஆகியவற்றில் உள்ள வாழ்வியல் மையங்கள்.

நீராவி குளியல் போன்ற நீர்வழி நோய் தீர்வியல் கருவிகள் இட பற்றாக்குறை காரணமாக ஓராண்டுக்கும் மேலாக நிறுவப்படவில்லை. காரைக்குடி DHQ மருத்துவமனையில் நல மையம் 252 சதுர அடி கொண்ட நெரிசலான இடத்தில் இயங்கியது; வழங்கப்பட்ட அனைத்து கருவிகளும் அதிலேயே வைக்கப்பட்டன. செப்டம்பர் 2015ல் வாங்கப்பட்ட முதுகுதண்டு தெளிப்பானுடன் கூடிய இடுப்பு குளியல் மற்றும் ஜூன் 2017ல் வாங்கப்பட்ட சுழலும் நாற்காலியுடன் கூடிய நீராவி குளியல் அறை ஆகிய இரண்டு பெரிய கருவிகள் அவை வாங்கப்பட்ட நாளிலிருந்து பயன்படுத்தப்படவில்லை; ட்ரெட்மில், உடற்பயிற்சி மிதிவண்டி போன்ற பிற கருவிகள் இடமின்மை காரணமாக ஆலோசனை அறையிலேயே வைக்கப்பட்டு உரிய பயன்பாடின்றி இருந்தன.

(இ) இன்றியமையா கருவிகள் வழங்குவதிலும் பராமரிப்பிலும் இருந்த குறைபாடுகள்

மாதிரி மாவட்டங்களில் சித்தா, ஆயுர்வேதா மற்றும் யுனானி அலகுகளுடன் இணைந்து அமைந்திருந்த 250 அலகுகளுள் 69ல், **அட்டவணை 2.26**ல் கூறப்பட்டவாறு, ட்ரெட்மில், டிக்டாக்ஷன் இயந்திரம், நீராவிக் குளியல், உடற்பயிற்சி மிதிவண்டி போன்ற பல இன்றியமையா கருவிகள் குறைவாகவோ/பழுதடைந்தோ இருந்தன என தணிக்கையில் தெரியவந்ததன் விவரங்கள் **இணைப்பு 2.9**ல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 2.26: மாதிரி அலகுகளின் ISM பிரிவுகளில் குறைவாகவோ/பழுதடைந்தோ இருந்த கருவிகள்

கருவியின் பெயர்	மாதிரி அலகு எண்ணிக்கை	கருவிகள் இல்லாத அலகுகளின் எண்ணிக்கை	கருவிகள் இல்லாத அலகுகளின் விழுக்காடு
ட்ரெட்மில்	69	41	59
நீராவி குளியல்	69	31	45
டிக்டாக்ஷன் இயந்திரம்	69	43	62
உடற்பயிற்சி மிதிவண்டி	69	48	70

(ஆதாரம்: ISM பிரிவுகளிலிருந்து பெறப்பட்ட தகவல்கள்)

மருத்துவ கருவிகள் மற்றும் அலுவலக தளவாடங்கள் கொள்முதல் செய்வதற்கான நடவடிக்கை மீதான கூர்ந்தாய்வு, பின்வரும் பத்திகளில் கூறப்பட்டுள்ளவாறு, தேவையை மதிப்பிடாதது, கருவிகளின் தேவை பற்றி மருத்துவ அலுவலர்கள் தெரிவிக்காதது, கள அலகுகளின் கோரிக்கைகளை ஆய்வு செய்வதில் அதிக தாமதம், கொள்முதல் செய்வதில் இருந்த தவிர்க்கக்கூடிய தாமதம் ஆகியவற்றை வெளிக்காட்டியது.

(i) மாநிலத்தில் 300 PHCக்களில் ISM பிரிவுகளை அமைக்க தளவாடங்கள் மற்றும் பல்வேறு கருவிகள் கொள்முதல் செய்ய தமிழ்நாடு அரசு டிசம்பர் 2010ல் ₹ 11.25 கோடி நிதி ஒப்பளிப்பு செய்தது. DIMH அத்தொகையை அரசு கணக்கிலிருந்து பெற்று, வங்கி கணக்கில் வைத்து, ஜனவரி 2014 வரை அதிலிருந்து ₹ 2.06 கோடி மட்டுமே தளவாடங்கள் மற்றும் கருவிகள் கொள்முதல் செய்ய பயன்படுத்தினார். கொள்முதலுக்கான ஒப்புதல் முகமையாக டாம்ப்கால் நிறுவனம் நியமிக்கப்பட்டபின் (டிசம்பர் 2013), மீதமுள்ள ₹ 9.19 கோடி தொகையில் ₹ 7.50 கோடி தொகையை அவர் தளவாடங்கள் பட்டியலுடன் டாம்ப்கால் நிறுவனத்திடம் அளித்தார் (ஜனவரி 2014). மீதமுள்ள ₹ 1.69 கோடி அவர் வங்கி கணக்கில் வைத்திருந்தார்; அது **பத்தி 2.2.7.1**ல் கூறப்பட்ட மீதத் தொகையான ₹ 9.12 கோடி என்பதில் அடங்கும். அடுத்த நான்கு ஆண்டுகளில் டாம்ப்கால் நிறுவனம் DIMH குறிப்பிட்ட தளவாடங்கள் மற்றும்

கருவிகள் கொள்முதல் செய்ய ₹ 5.57 கோடி பயன்படுத்திவிட்டு, மீதம் ₹ 1.93 கோடி தொகையை வைத்திருந்தது (மார்ச் 2018). அந்த ₹ 1.93 கோடி தொகையை பயன்படுத்தும் வகையில் கூடுதல் தேவை பட்டியலை DIMH செப்டம்பர் 2017ல் அளித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக டாம்ப்கால் நிறுவனம் தெரிவித்தது (ஜூன் 2018). கொள்முதல் செய்வதில் DIMH மற்றும் டாம்ப்கால் நிறுவனம் செய்த தாமதங்களால் ISM பிரிவுகளில் தேவையான கருவிகள் இருக்கவில்லை. ஜூன் 2018 நிலையிலும், தேவையான கருவிகளை கொள்முதல் செய்ய டாம்ப்கால் நிறுவனம் ஒப்பந்தப்புள்ளிகளை கோரவில்லை.

(ii) அரசு மருத்துவமனைகள் மற்றும் PHCகளில் இருந்த சோதனை ஆய்வு செய்யப்பட்ட ISM பிரிவுகளில் 2009-15 காலகட்டத்தில் வழங்கப்பட்ட பல கருவிகள் **அட்டவணை 2.27**ல் கூறப்பட்டுள்ளவாறு, பயனற்றும் பழுதுபட்டும் இருந்தன.

அட்டவணை 2.27: கருவிகள் பயன்படுத்தாமை மற்றும் இயங்காமை

கருவியின் பெயர்	வழங்கப்பட்ட எண்ணிக்கை	இயங்காத கருவிகள்	சரிப்படுத்த இயலாத/இயங்காத கருவிகளின்விழுக்காடு
செக்குருளை	28	18	*64*
நீராவி குளியல்	38	19	*50*
டிக்டாக்ஷன் இயந்திரம்	26	14	*54*
உடற்பயிற்சி மிதிவண்டி	21	4	*19*
மொத்தம்	**113**	**55**	***49***

(ஆதாரம்: ISM பிரிவுகளிலிருந்து பெறப்பட்ட தகவல்கள்)

அட்டவணை 2.27ல் காணப்பட்டவாறு, வழங்கப்பட்ட கருவிகளில் தோராயமாக 50 விழுக்காடு பயன்பாட்டுக்கு வரவோ இயங்கும் நிலையிலோ இருக்கவில்லை; இதற்கு, தேவையான இடமும் உதவும் பணியாளர்களும் இல்லாமையால் பல கருவிகளை பயன்பாட்டுக்கு கொண்டுவர, பயனுள்ள நடவடிக்கையை தொடர்புடைய மருத்துவ அலுவலர்கள் எடுக்கவில்லை என்பதும், பழுதுற்ற கருவிகள் ஆண்டு பராமரிப்பு ஒப்பந்தம் இல்லாததால் உரிய நேரத்தில் பழுது நீக்கம் செய்யப்படவில்லை என்பதும் காரணங்கள் ஆகும். இயங்காத கருவிகள் பற்றிய மாவட்டவாரியான விவரங்கள் **இணைப்பு 2.9**ல் தரப்பட்டுள்ளன.

(iii) DIMH அளித்த தேவைப்பட்டியல்களின் அடிப்படையில் டாம்ப்கால் நிறுவனம் நீலகிரி மாவட்டத்தில் PHCக்களில் இருந்த 12 ISM பிரிவுகளுக்கு தொக்கண மேசை, ஆய்வு மேசை, நீராவி குளியல், ட்ரெட்மில் போன்ற 13 வகை கருவிகளை வழங்கியது (2014 முதல் 2017 வரை). மருத்துவர்கள் இல்லாததால் அவற்றுள் ஒன்பது பிரிவுகளின் செயல்பாடு மார்ச் 2011 முதல் செப்டம்பர் 2013 வரையிலான காலகட்டத்தில் நின்றுவிட்டது என்பதை தணிக்கை கண்டது. ISM பிரிவு இயங்கிய PHCக்களுக்கு அவற்றை இடமாற்றம் செய்ய மாவட்ட DSMO நடவடிக்கை எடுக்கவில்லை. ISM பிரிவு இயங்காத PHCக்களில் அக்கருவிகள் பயனற்று நிலையில் தொடர்ந்து வைக்கப்பட்டிருந்தன. பயனற்று வைக்கப்பட்டிருந்த கருவிகளின் மதிப்பு, **இணைப்பு 2.10**ல் கூறப்பட்டவாறு, ₹ 15.48 இலட்சம் ஆகும்.

(ஈ) மருத்துவமனை மேலாண்மைக்கான கணினி அமைப்பு இயங்காமை

CCIM மற்றும் CCH விதிகளின்படி, ISM மருத்துவ கல்லூரி மருத்துவனைகள் தமது புற நோயாளிகள் மற்றும் உள் நோயாளிகள் பற்றிய

மருத்துவ தகவல் ஆவணங்களை பராமரிக்க இணைய அடிப்படையிலான அமைப்பை வைத்திருக்க வேண்டும். எனினும், அத்தகைய மாதிரி கல்லூரிகள் நான்கினுள் எந்த கல்லூரியும் இயங்கும் நிலையிலுள்ள கணினி அமைப்பை கொண்டிருக்கவில்லை.

- சென்னை, இந்திய மருத்துவத்திற்கான அறிஞர் அண்ணா அரசு மருத்துவமனையில் (அறிஞர் அண்ணா மருத்துவமனை) கணினிமாக்கத்திற்காக 24 கணினிகள் மற்றும் தொடர்பான வலையமைப்பு உள்கட்டமைப்பு ஆகியன NRHM நிதி கொண்டு வாங்கப்பட்டன (2015). உரிய மென்பொருளை உருவாக்க பயனுள்ள நடவடிக்கை எடுக்கப்படாததால் நோயாளிகள் பதிவு மற்றும் மருத்துவ ஆவணங்கள் பராமரிப்பிற்கான கணினி அமைப்பு இயங்கவில்லை.

- மருத்துவமனை பணி மேலாண்மை அமைப்பிற்கான மென்பொருளை கொள்முதல் செய்ய சென்னை, அரசு யுனானி மருத்துவ கல்லூரி டாம்ப்கால் நிறுவனத்தை ஜூலை 2016ல் அமர்த்தியது. இரண்டு ஆண்டு தாமதத்திற்கு பிறகு, டாம்ப்கால் நிறுவனம் மென்பொருளை ₹ 0.95 இலட்சம் செலவில் வாங்கி அதை ஜூன் 2018ல் வழங்கியது. கணினிகளுக்கான உள்ளூர் பகுதி வலையமைப்பு தயாராக இல்லாததால் மென்பொருள் பயன்படுத்தபடவில்லை (ஆகஸ்ட் 2018).

- நாகர்கோவில், அரசு ஆயுர்வேத மருத்துவ கல்லூரியில் ₹ 10.13 இலட்சம் செலவில் வாங்கப்பட்ட (ஆகஸ்ட் 2016) கணினிகள் மற்றும் மென்பொருள் நோயாளிகளை பதிவு செய்வதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டன; நோயாளிகளின் மருத்துவ நிகழ்வுகள், பரிந்துரைக்கப்பட்டு வழங்கப்பட்ட மருந்துகள் போன்றவை குறித்த தகவல்கள் பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் பராமரிக்கப்படவில்லை.

இவ்வாறாக, நிதி இருந்தும், மூன்று ISM கல்லூரிகளின் முதல்வர்கள் மத்திய கவுன்சில் விதித்த தர நிலைகளுக்கு ஏற்ப வசதிகளை மேம்படுத்தவில்லை. திருமங்கலம், அரசு ஓமியோபதி மருத்துவ கல்லூரி முதல்வர் இது தொடர்பான கருத்துரு எதையும் அளிக்கவில்லை.

தமிழ்நாடு அரசு தனது மறுமொழியில் (நவம்பர் 2018), ஒவ்வொரு ISM கல்லூரிக்குமான மென்பொருளை NAM நிதி கொண்டு வாங்குவதற்கான சாத்தியக்கூறு ஆராயப்படும் எனவும், நிதி பெறப்பட்டதும் சந்தையில் கிடைக்கும் மென்பொருள் பயன்படுத்தப்படும் எனவும் தெரிவித்தது.

2.2.9 மனித வள உள்கட்டமைப்பு

ISM மருத்துவ கல்லூரிகள், அவற்றுடன் இணைந்த பயிற்றுவிக்கும் மருத்துவமனைகள் ஆகியவற்றில் இருக்க வேண்டிய பணியாளர்கள் குறித்த விதிகளை CCIM மற்றும் CCH வகுத்துள்ளன. ஆங்கில முறை மருத்துவ அலகுகளுடன் இணைந்து அமைந்த ISM பிரிவுகளுக்கான பணியாளர்கள் குறித்த அளவுநிலைகளை DIMH மற்றும் தமிழ்நாடு அரசு வகுத்துள்ளன.அந்த அளவுநிலைகளை எட்டுவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றிய தணிக்கையின் கூர்ந்தாய்வு, பின்வரும் பத்திகளில் கூறப்பட்டுள்ளவாறு பல குறைபாடுகளை வெளிக்காட்டியது.

2.2.9.1 ISM மருத்துவ கல்லூரிகள் மற்றும் அவற்றுடன் இணைந்த பயிற்றுவிக்கும் மருத்துவமனைகளில் பணியாளர் பற்றாக்குறை

மாதிரி மருத்துவ கல்லூரிகளில் CCIM மற்றும் CCH விதித்த அளவுநிலைகளுடன் ஒப்பிடுகையில் பயிற்றுவிக்கும் பணியாளர் வகையில் **அட்டவணை 2.28**ல் கூறப்பட்டவாறு பற்றாக்குறை இருந்தது.

அட்டவணை 2.28: பயிற்றுவிக்கும் பணியாளர் பற்றாக்குறை

வ. எண்	அரசு மருத்துவ கல்லூரி	அளவுநிலைகளின்-படியான தேவை	உள்ளபடி-யானது	பற்றாக்குறை	பற்றாக்குறை விழுக்காடு
1	ஓமியோபதி, திருமங்கலம்	32	23	9	*28*
2	சித்தா,சென்னை	50	69	இல்லை	-
3	யோ & இ,சென்னை	68	13	55	*81*
4	யுனானி, சென்னை	30	29	1	*3.3*
5	ஆயுர்வேதம், நாகர்கோவில்	40*	27	13	*32.5*

* 10தற்காலத்திய / ஆங்கில முறை மருத்துவத்திற்கான பயிற்றுவிக்கும் பணியாளர் உட்பட

யோ & இ. : யோகா மற்றும் இயற்கை மருத்துவம்

(ஆதாரம்: தொடர்புடைய கல்லூரிகள் அளித்த விவரங்கள்)

பயிற்றுவிக்கும் பணியாளர் பற்றாக்குறை சென்னை, யோகா மற்றும் இயற்கை மருத்துவ கல்லூரி (81 விழுக்காடு), நாகர்கோவில், ஆயுர்வேத கல்லூரி (33 விழுக்காடு), திருமங்கலம், ஓமியோபதி கல்லூரி (28 விழுக்காடு) ஆகியவற்றில் அதிக அளவில் இருந்தது. தணிக்கை பின்வருவனவற்றை கண்டறிந்தது:

- சென்னை, யோகா மற்றும் இயற்கை மருத்துவ கல்லூரி 2000 ஆண்டில் இயங்க தொடங்கியது. மார்ச் 2018 நிலையில், 68 பயிற்றுவிக்கும் பணியாளர் பணியிடங்களுள் 55 நிரப்பப்படாமல் இருந்தன. அவற்றை நிரப்ப உரிய காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. நுழைவு நிலை பணியிடமான உதவி விரிவுரையாளருக்கான தேர்வு விதிகளுக்கு ஜனவரி 2015ல் தான் ஒப்புதல் அளிக்கப்பட்டது. ஒப்புதல் அளிக்கப்பட்ட பின்னும், உதவி விரிவுரையாளர்களை தேர்வு செய்யும் பணியை துவக்குமாறு தமிழ்நாடு மருத்துவ பணியாளர் தேர்வு வாரியத்தை கோர DIMH இரண்டு ஆண்டுகள் எடுத்துக் கொண்டார். ஜூன் 2018 நிலையில் தேர்வு பணி முடிக்கப்படவில்லை. எனவே, தேர்வு விதிகளை வகுப்பதில் இருந்த தாமதம் மற்றும் பணியிடங்களை நிரப்புவதில் உறுதியான நடவடிக்கை இல்லாமை ஆகிய காரணங்களால் பெருமளவு காலி பணியிடங்களுடன் கல்லூரி இயங்கியது.

- ஒரு செம்மையான சூழலில், ஏற்கெனவே உள்ள காலி பணியிடங்களும் உருவாகக்கூடிய காலி பணியிடங்களும் கணக்கிடப்பட்டு, அவற்றுக்கான தேர்வு பணி காலமுறையில் மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும், 2013-18 காலகட்டத்தில் நீதித்துறை உத்தரவுகள் மற்றும் தேர்வு விதிகள் வகுக்கப்படாதது ஆகிய காரணங்களால் 401 பணியிடங்களுக்கான தேர்வு தடைபட்டது. மேற்கண்ட காரணங்களால் இந்த மருத்துவ கல்லூரிகளில் காலி பணியிடங்கள் ஏற்பட்டு கல்வியின் தரம் பாதிக்கப்பட்டது.

தமிழ்நாடு அரசு தனது மறுமொழியில் (நவம்பர் 2018), ஒழுங்குமுறை/இணைப்பு அமைப்புகளின் அளவுநிலைகளை பின்பற்றும் பொருட்டு, காலி பணியிடங்களை நிரப்புவதற்கான அனைத்து முயற்சிகளும் செய்யப்பட்டு வருவதாக தெரிவித்தது.

2.2.9.2 CCH மற்றும் CCIM அளவுநிலைகளை பின்பற்றுவதற்காக செய்யப்பட்ட பணியாளர்களின் தற்காலிக மாற்றம்

CCH/CCIM விதிகளின்படி, ISM மருத்துவ கல்லூரிகளின் தொடர் அங்கீகாரத்திற்கு, விதிக்கப்பட்டவாறு பணியாளர் இருக்க வேண்டும். திருமங்கலம் ஓமியோபதி கல்லூரி மற்றும் நாகர்கோவில் ஆயுர்வேத கல்லூரியில் CCH/CCIM நடத்திய ஆய்வின்போது, அளவுநிலைகளை பின்பற்றும் பொருட்டு, DIMH பிற மருத்துவமனைகளிலிருந்து பணியாளர்களை ஒரு நாள் முதல் மூன்று வாரம் வரையிலான காலத்திற்கு மாற்றுப்பணி அடிப்படையில் தற்காலிகமாக பணியமர்த்தினார்.

திருமங்கலம் ஓமியோபதி கல்லூரியில் CCH ஆய்வின்போது ISM மருத்துவமனை தரப்பிலிருந்து பணியாளர்களை ஒரு நாள் முதல் மூன்று வாரம் வரையிலான காலத்திற்கு DIMH தற்காலிகமாக மாற்றினார். நாகர்கோவில் ஆயுர்வேத கல்லூரியில், அரசு ஆங்கில முறை மருத்துவ கல்லூரியை சேர்ந்த நவீன மருத்துவ பணியாளர்கள் தற்காலிக அடிப்படையில் பகுதி நேர பணிக்காக அமர்த்தப்பட்டனர். ஆங்கில முறை மருத்துவ பிரிவை சார்ந்த பகுதி நேர பயிற்றுவிக்கும் பணியாளர்களை (நவீன மருத்துவம்) மாற்றுப்பணி முறையில் அமர்த்த DIMH அரசுக்கு அனுப்பிய (ஜூன் 2017) கருத்துரு அரசின் பரிசீலனையில் இருந்தது (ஜூன் 2018).

ஆய்வின்போது மத்திய கவுன்சில் அளவுநிலைகளை பின்பற்றும் நோக்கில் பிற அமைப்புகளிலிருந்து பகுதி நேர ஆசிரியர்களை தற்காலிகமாக மாற்றியது என்பது, பணியிடங்கள் காலியாக இருப்பதை மறைத்து, அக்கல்லூரிகளை மத்திய கவுன்சில் தகுதி நீக்கம் செய்வதிலிருந்து காப்பாற்றியது.

தமிழ்நாடு அரசு தனது மறுமொழியில் (நவம்பர் 2018), பகுதி நேர அடிப்படையில் பணிபுரிவதற்காக 10 தற்கால மருத்துவர் பணியிடங்களை உருவாக்குவதற்கான DIMHன் கருத்துரு தனது பரிசீலனையில் இருப்பதாக தெரிவித்தது.

2.2.9.3 ISM மருத்துவமனைகள் மற்றும் பிரிவுகளில் மனிதவள உள்கட்டமைப்பில் குறைபாடுகள்

பணியாளர் பற்றாக்குறை, **இணைப்பு 2.11**ல் கூறப்பட்டுள்ளபடி, பொதுவான ISM பிரிவுகளில் 10 முதல் 38 விழுக்காடு வரை, NRHM கீழ் அமைக்கப்பட்ட ISM பிரிவுகளில் 48 விழுக்காடு மற்றும் AYUSH திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட ISM பிரிவுகளில் 100 விழுக்காடு என்ற அளவில் இருந்தது.

மருந்தாளுநர்கள்: மருத்துவம் சார்ந்த பணியாளர்களுள் (paramedical staff) மருந்தாளுநர் வகையில் காலி பணியிடங்கள் 22 விழுக்காடு (சித்தா மருந்தாளுநர்) முதல் 72 விழுக்காடு (ஆயுர்வேத மருந்தாளுநர்) வரை இருந்தது. இவற்றை நிரப்புவதற்கு தமிழ்நாடு அரசு மற்றும் மருத்துவ பணியாளர் தேர்வு வாரியம் ஆகியவற்றுடன் DIMH 2007 முதலே தொடர்பில் இருந்தார். தேர்வு முடிவுறவில்லை (ஜூலை 2018).

AYUSH ஆலோசகர்கள்: PHCக்களில் NRHMன் கீழ், ஒரு நாளில் ஆறு மணி நேரம் கொண்ட ஒரு அமர்வுக்கு ₹ 1,000 என்ற கட்டண விகிதத்தில் ஒப்பந்த அடிப்படையில் 475 AYUSH ஆலோசகர்களை பணியமர்த்துவதற்கு தமிழ்நாடு

அரசு ஒப்புதல் அளித்தது (செப்டம்பர் 2009 மற்றும் டிசம்பர் 2010). DIMH 99 பணியிடங்களுக்கு தேர்வு நடத்துவதற்கான அறிவிப்பை வெளியிட்டார் (செப்டம்பர் 2016). எனினும், தேர்வு முறையினால் பாதிக்கப்பட்ட நபர்கள் தொடர்ந்த ஒரு வழக்கில் மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றம் தேர்வு நடைமுறைக்கு இடைக்கால தடை விதித்தது (நவம்பர் 2016). இடைக்கால தடையை நீக்குவதற்கான எதிர் மனுவை DIMH நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. பாதிக்கப்பட்ட நபர்களின் மனுவின் அடிப்படையில், ஓமியோபதி ஆலோசகர் தொடர்பான தேர்வுக்கு மட்டும் இடைக்கால தடை நீக்கப்பட்டது (பிப்ரவரி 2018). ஜூலை 2018 நிலையில் தேர்வு நடத்தப்படவில்லை.

மருந்தளிப்பவர், நோய் தீர்வியல் உதவியாளர் மற்றும் பல்நோக்கு பணியாளர்: ISM பிரிவுகளுக்காக NRHM திட்டத்தின் கீழ் 424 AYUSH மருந்து அளிப்பவர், 71நோய் தீர்வியல் உதவியாளர்கள், 475 பல்நோக்கு பணியாளர்கள் ஆகியோரை ஒப்பந்த அடிப்படையில் DIMH அமர்த்துவதற்கு தமிழ்நாடு அரசு அனுமதி அளித்தது (செப்டம்பர் 2009 மற்றும் டிசம்பர் 2010). வேலைவாய்ப்பக பதிவு மூப்பு அடிப்படையில் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் (2009 மற்றும் 2011). ஒப்பந்த பணியாளர்களின் பணி விலகல்/நிறுத்தம் காரணமாக உருவான காலியிடங்கள், தேர்வு செய்வதற்கான வழிமுறைகள் வெளியிடப்படாததால் பிந்தைய ஆண்டுகளில் நிரப்பப்படவில்லை; இதனால், ஆகஸ்ட் 2018 நிலையில், மருந்தளிப்பவர், நோய் தீர்வியல் உதவியாளர் மற்றும் பல்நோக்கு பணியாளர் பணியிடங்களில் முறையே 68, 94 மற்றும் 46 விழுக்காடு நிரப்பப்படாமல் இருந்தன.

2.2.9.4 ISM பிரிவுகள் இயங்காமை அல்லது பகுதி அளவில் இயங்கியமை

ஆறு மாதிரி மாவட்டங்களில், 297 ISM பிரிவுகளுள் 31 பிரிவுகள் மருத்துவர்கள் பற்றாக்குறை காரணமாக 2009 முதல் 2017 வரையிலான காலகட்டத்தில் செயல்படுவது நின்று போனது (**இணைப்பு 2.12**). மேலும், ISM மருத்துவர்கள் பற்றாக்குறை காரணமாக, பணிபுரிந்த மருத்துவர்கள் ஒன்றிற்கு மேற்பட்ட ISM பிரிவுகளுக்கு பொறுப்பாக்கப்பட்டனர். மருத்துவர்களை இவ்வாறு மாற்றியதன் விளைவாக, ISM மருத்துவர்கள் பணிபுரியும் காலம் வாரத்தில் ஆறு நாட்கள் என்பதற்கெதிராக, **அட்டவணை 2.29**ல் கூறப்பட்டவாறு, இரண்டு முதல் நான்கு நாட்கள் என குறைந்தது.

அட்டவணை 2.29: ISM பிரிவுகள் பகுதி அளவில் இயங்கியமை

மாவட்டம்	பணியில் இருக்கக்கூடிய மருத்துவர்கள்		பகுதி அளவில் இயங்கிய பிரிவுகள் மொத்த எண்ணிகை
	வாரம் இரு நாட்கள் இயங்கியவை	வாரம் 3-4 நாட்கள் இயங்கியவை	
நீலகிரி	5	5	**10**
தஞ்சாவூர்	2	6	**8**
வேலூர்	3	0	**3**
சிவகங்கை	1	0	**1**
திண்டுக்கல்	2	1	**3**
மொத்தம்	**13**	**12**	**25**

(ஆதாரம்: தொடர்புடைய ISM பிரிவுகள் அளித்த விவரங்கள்)

ISM பிரிவுகள் இயங்காமை அல்லது பகுதி அளவில் இயங்கியமை காரணமாக சிகிச்சை தேவைப்பட்ட மக்களுக்கு அதனை அளிப்பது குறைந்தது.

2.2.10 ISM மருத்துவமனைகள் மற்றும் பிரிவுகள் மூலம் அளிக்கப்பட்ட மருத்துவ சிகிச்சை

2.2.10.1 ISM மருத்துவமனைகள்/பிரிவுகளின் செயல்பாடு

2013 முதல் 2018 வரையான காலகட்டத்தில் ISM மருத்துவ அமைப்புகள் அளித்த மருத்துவ சிகிச்சை குறித்த விவரங்கள் **அட்டவணை 2.30**ல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 2.30: ISM மருத்துவமனைகள் மற்றும் பிரிவுகளில் சிகிச்சை அளிக்கப்பட்ட உள்/வெளி நோயாளிகள்

ஆண்டு	உள்/வெளி நோயாளி	சித்தா	ஆயுர்வேதம்	யுனானி	ஓமியோபதி	யோகா & இயற்கை மருத்துவம்	மொத்தம்
2013*	வெளி	2,59,81,919	16,23,834	4,08,040	22,86,531	6,02,073	**3,09,02,397**
	உள்	2,28,781	36,420	14,050	19,761	0	**2,99,012**
	மொத்தம்	**2,62,10,700**	**16,60,254**	**4,22,090**	**23,06,292**	**6,02,073**	**3,12,01,409**
2014*	வெளி	2,66,28,167	17,30,393	4,57,457	6,96,534	22,28,813	**3,17,41,364**
	உள்	2,16,803	40,779	10,994	15,246	0	**2,83,822**
	மொத்தம்	**2,68,44,970**	**17,71,172**	**4,68,451**	**7,11,780**	**22,28,813**	**3,20,25,186**
2015-16	வெளி	2,74,34,621	18,49,742	6,33,840	22,93,760	19,65,251	**3,41,77,214**
	உள்	1,81,133	34,895	15,964	11,396	0	**2,43,388**
	மொத்தம்	**2,76,15,754**	**18,84,637**	**6,49,804**	**23,05,156**	**19,65,251**	**3,44,20,602**
2016-17	வெளி	2,81,42,899	20,08,905	7,68,385	25,05,386	24,14,410	**3,58,39,985**
	உள்	1,91,589	46,938	16,885	18,179	8,156	**2,81,747**
	மொத்தம்	**2,83,34,488**	**20,55,843**	**7,85,270**	**25,23,565**	**24,22,566**	**3,61,21,732**
2017-18	வெளி	2,83,06,427	20,16,471	8,06,228	25,72,081	28,72,349	**3,65,73,556**
	உள்	2,09,447	50,191	17,023	17,570	17,575	**3,11,806**
	மொத்தம்	**2,85,15,874**	**20,66,662**	**8,23,251**	**25,89,651**	**28,89,924**	**3,68,85,362**

* ஆங்கில ஆண்டு

(ஆதாரம்: DIMH அளித்த விவரங்கள்)

சிகிச்சை பெற்ற வெளி நோயாளிகள் எண்ணிக்கை **அட்டவணை 2.30**ல் காணப்பட்டவாறு தொடர்ந்து உயர்ந்தது. எனினும், உள் நோயாளிகள் எண்ணிக்கை 2013ல் 2.99 இலட்சம் என்பதிலிருந்து 2015-16ல் 2.43 இலட்சம் அளவிற்கு 19 விழுக்காடு குறைந்து, பிந்தைய ஆண்டுகளில் கூடியது. பிற முறைகளைவிட அதிக ஆதரவு கொண்ட சித்தா பிரிவில் உள் நோயாளிகள் எண்ணிக்கை 2013ல் 2.28 இலட்சம் என்பதிலிருந்து 2017-18ல் 2.09 இலட்சம் அளவிற்கு குறைந்தது. **பத்தி 2.2.8**ல் கூறப்பட்டவாறு பொருள் மற்றும் மனித வள உள்கட்டமைப்பு பற்றாக்குறை காரணமாக சேவைகள் அளிக்கப்படாமை, உள் நோயாளிகள் பிரிவுகள் இயங்காமை போன்றவற்றை இக்குறைவிற்கு காரணமாக கூறலாம்.

2.2.10.2 மருத்துவ சிகிச்சை அளிப்பதில் குறைபாடுகள்

(அ) எக்ஸ்ரே சேவைகள்

CCIM அளவு நிலைகளின்படி, ISM மருத்துவ கல்லூரியுடன் இணைந்த ISM மருத்துவமனையில் எக்ஸ்ரே (X-ray) கருவிகளையும் தொடர்புடைய துணை

பொருட்களையும் கொண்ட ஒரு கதிரியக்கவியல் (radiology) பிரிவு இருக்க வேண்டும். எக்ஸ்ரே அலகுகள் இயங்காமையினால் சிகிச்சையில் தடை ஏற்பட்டது என்பதை தணிக்கை கண்டறிந்தது.

- நாகர்கோவில், அரசு ஆயுர்வேத கல்லூரியில் கதிர்படப் பதிவாளர் மற்றும் இருட்டறை உதவியாளர் பணியிடங்கள் காலியாக இருந்ததால் கதிரியக்கவியல் பிரிவு இயங்கவில்லை. இதன் விளைவாக, ஜனவரி - மார்ச் 2016ல் ₹ 5.90 இலட்சம் செலவில் வாங்கப்பட்ட எக்ஸ்ரே கருவிகளும் துணை பொருட்களும் இது நாள் வரை (ஜூன் 2018) பயன்படுத்தப்படவில்லை; நோயாளிகள் அச்சேவைகளுக்காக 5 கிமீ தொலைவிலுள்ள அரசு ஆங்கில முறை மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு செல்ல நேர்ந்து இன்னல் பட்டனர். எக்ஸ்ரே கருவி வாங்குவதை தேவையான பணியாளர்களை அமர்த்துவதுடன் இணைத்து செய்யவில்லை என்பதை தணிக்கை கண்டறிந்தது. டிசம்பர் 2015ல் தமிழ்நாடு அரசு ஒப்பளிப்பு செய்த எக்ஸ்ரே வல்லுனர் மற்றும் கதிர்படப் பதிவாளர் பணியிடங்களை நிரப்புமாறு கல்லூரி முதல்வர் அவ்வப்போது DIMHஐ வேண்டிய போதும், நடவடிக்கை எடுக்கப்படவில்லை (ஜூன் 2018).

- அணுசக்தி (கதிரியக்க பாதுகாப்பு) விதிகள் 2004ன்படி, மருத்துவமனைகளில் எக்ஸ்ரே கருவிகளை இயக்க அணுசக்தி ஒழுங்குமுறை ஆணையத்தின் அனுமதியை பெறுவது கட்டாயமாகும். திருமங்கலம் ஓமியோபதி கல்லூரியும் அதனுடன் இணைந்த மருத்துவ கல்லூரி மருத்துவமனையும் மார்ச் 1997ல் ₹ 4.25 இலட்சம் செலவில் வாங்கப்பட்ட ஒரு எக்ஸ்ரே கருவியை வைத்திருந்தன. அக்கருவி நிறுவப்பட்ட நாள் முதற்கொண்டே ஆணையத்தின் அனுமதியை பெறாமல் இயக்கப்பட்டு வந்தது. ஆணைய அனுமதியை பெறும் பொருட்டு, எக்ஸ்ரே கருவிக்காக ஆணைய விதிகளை பின்பற்றி ஒரு புதிய அறை கட்டுவதற்குரிய கருத்துரு அனுப்பப்பட உள்ளதாக கல்லூரி முதல்வர் மறுமொழி அளித்தார். ஆணையத்தின் சான்றிதழ் இல்லாத நிலையில் அக்கருவியை இயக்குபவர் மற்றும் அதனை கொண்டு சோதிக்கப்பட்ட 1,596 நோயாளிகள் ஆகியோரின் பாதுகாப்பு உறுதிசெய்யப்பட்டது என தணிக்கையினால் அறுதியிட்டு கூற இயலவில்லை.

- சென்னை, அறிஞர் அண்ணா மருத்துவமனையில், கதிரியக்க மருத்துவர் பணியிடம் நிரப்பப்படாதது மற்றும் எக்ஸ்ரே ஃபிலிம் வழங்கப்படாதது காரணமாக மார்ச் 2017 முதல் மே 2018 வரை எக்ஸ்ரே சேவைகள் இயங்கவில்லை.

(ஆ) சேவைகள் குறைக்கப்பட்டமை

(i) தொக்கண/பஞ்சகர்ம சேவைகள் (மூலிகை எண்ணெய் மசாஜ்) சித்த/ஆயுர்வேத சிகிச்சை முறைகளின் இன்றியமையாத பகுதி ஆகும். மருத்துவம் சார்ந்த பணியாளர் (மசாஜ் செய்வோர்) நோயாளிகளுக்கு இப்பணியை செய்கின்றனர். மாதிரி சித்தா/ஆயுர்வேத 64 பிரிவுகளுள் 63ல் இப்பணியை செய்ய மசாஜ் செய்வோர் இருக்கவில்லை.

அவற்றுள் 61 பிரிவுகளில் அப்பணியிடங்கள் ஒப்பளிக்கப்படவில்லை; இரு பிரிவுகளில் ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள் நிரப்பப்படவில்லை. மசாஜ் செய்வோர்

இல்லாத நிலையில் மருத்துவர்களே அப்பணியை செய்ததாக கூறப்பட்டது. வழக்கமாக மருத்துவம் சார்ந்த பணியாளர் செய்யும் பணியை மருத்துவர் மேற்கொள்வது நடைமுறையில் இயலாத வகையில் ஒவ்வொரு மருத்துவரும் கவனிக்க வேண்டிய நோயாளிகள் எண்ணிக்கை மிக அதிகமாக இருந்தது என்பதை தணிக்கை கண்டறிந்தது. நாகர்கோவில், ஆயுர்வேத கல்லூரியில் மசாஜ் செய்வோர் பற்றாக்குறையினால் புற நோயாளிகளுக்கு பஞ்சகர்மா சிகிச்சை நிறுத்தப்பட்டது.

(ii) CCIM அளவு நிலைகளின்படி, ஆயுர்வேத மருத்துவ கல்லூரியில் ஒரு இயன்முறை சிகிச்சையாளருடன் (physiotherapist) கூடிய ஒரு இயன்முறை சிகிச்சை (Physiotherapy) பிரிவு இருக்க வேண்டும். நாகர்கோவில், ஆயுர்வேத கல்லூரியில், இயன்முறை சிகிச்சையாளர் இல்லாததால் 2009 முதல் இதுநாள் வரை (ஜூன் 2018) வரை இயன்முறை சிகிச்சை சேவைகள் அளிக்கப்படவில்லை.

(iii) ISM சிகிச்சை முறையில், பரிந்துரைக்கப்பட்ட உணவு முறையை (diet) கடுமையாக பின்பற்ற வேண்டும். அறிஞர் அண்ணா மருத்துவமனையின் மருத்துவ கண்காணிப்பாளர் அளித்த (மே 2014) ஒரு கருத்துருவின்படி, முறையான உணவு முறையை பின்பற்றுவது ISM சிகிச்சை முறையின் ஒரு பகுதி ஆகும். தமிழ்நாடு மருத்துவ நடைமுறை நூலில் (TN Medical Code) கூறப்பட்ட தரப்படுத்தப்பட்ட உணவு முறை ஆங்கில முறை நோயாளிகளுக்காக வகுக்கப்பட்டது என்பதால், அது ISM நோயாளிகளுக்கு பொருத்தமாக இல்லை என கருதப்பட்டது. எனவே, அவர் தாம் அமைத்த (மார்ச் 2014) ஒரு குழு அளித்த (ஜூன் 2014) பரிந்துரையின் பேரில், ISM முறைகளுக்கு பொருத்தமான பல கூழ் மற்றும் குழம்பு வகைகள் அடங்கிய மாறுபட்ட, மேம்படுத்தப்பட்ட உணவு முறைக்கான ஒரு கருத்துருவை DIMHக்கு ஜூன் 2014ல் அனுப்பினார். வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டிற்குள் செலவை மேற்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையுடன் DIMH அந்த புதிய உணவு முறைக்கு ஒப்புதல் அளித்தார் (செப்டம்பர் 2014). போதுமான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு இல்லாத காரணத்தினால், அப்புதிய முறை உணவை வழங்க இயலாமல் இதுநாள் (ஜூன் 2018) வரை முந்தைய தரப்படுத்தப்பட்ட உணவே வழங்கப்பட்டு வருவதாக மருத்துவ கண்காணிப்பாளர் தணிக்கைக்கு மறுமொழி அளித்தார் (ஏப்ரல் 2018).

2.2.10.3 மருந்துகளை கொள்முதல் செய்து வழங்குவதில் குறைபாடுகள்

ISM மருத்துவமனைகளின் மருந்து தேவைகள் பொதுவாக டாம்ப்கால் நிறுவனம் மூலம் பெறப்படுகின்றன. சென்னை, அறிஞர் அண்ணா மருத்துவமனையுடன் இணைந்த மருந்தகமும் மருந்துகளை வழங்குகிறது. டாம்ப்கால் நிறுவனம் தானே தயாரித்த சித்தா, ஆயுர்வேத மற்றும் யுனானி மருந்துகளை ISM அமைப்புகளுக்கு வழங்குவதுடன், டெண்டர் மூலம் வெளிச்சந்தையிலிருந்து வாங்கியும் வழங்குகிறது. ஓமியோபதி மருந்துகளை பொறுத்தவரை, டாம்ப்கால் நிறுவனம் அவற்றை தயாரிக்காததால், மொத்த தேவையும் டெண்டர் மூலம் வெளிச்சந்தையிலிருந்து வாங்கப்படுகிறது. அறிஞர் அண்ணா மருத்துவமனையுடன் இணைந்த மருந்தகம் அம்மருத்துவமனையின் சொந்த தேவைக்காக மருந்துகளை குறைந்த அளவில் தயாரிக்கிறது. யுனானி பிரிவுகளுக்கு வழங்கும் பொருட்டு, யுனானி மருந்துகளையும் அது தயாரிக்கிறது. டாம்ப்கால் நிறுவனம் தான் உற்பத்தி செய்த மற்றும் வெளிச்சந்தையில் வாங்கிய மருந்துகளை வழங்குவதில் இருந்த குறைபாடுகள் பின்வரும் பத்திகளில் விவாதிக்கப்பட்டுள்ளன.

ISM பிரிவுகளின் மருந்து தேவைகளை DSMOக்கள் தொகுத்து டாம்ப்கால் நிறுவனத்துற்கு தெரிவிக்கின்றனர். 2016-18 காலகட்டத்தில் பெறப்பட்ட தேவை பட்டியல்கள் (indent) மற்றும் டாம்ப்கால் நிறுவனம் தயாரித்து வழங்கிய அளவு மீதான கூர்ந்தாய்வு கோரப்பட்ட அளவை வழங்க டாம்ப்கால் நிறுவனம் **அட்டவணை 2.31**ல் விவரிக்கப்பட்டுள்ளவாறு தவறியது என்பதை காட்டியது.

அட்டவணை 2.31: டாம்ப்கால் நிறுவனம் வழங்கிய மருந்துகள் பற்றிய விவரங்கள்

(₹ கோடியில்)

ஆண்டு	தேவையின் மதிப்பு	டாம்ப்கால் நிறுவனம் வழங்கியது
2016-17	25.88	12.14 (47 விழுக்காடு)
2017-18	21.90	11.05 (50 விழுக்காடு)

(ஆதாரம்: டாம்ப்கால் நிறுவனம் அளித்த விவரங்கள்)

கள அலகுகள் அளித்த தேவை பட்டியல்களின் அடிப்படையில் மருந்து உற்பத்தி திட்டம் அமையவில்லை என்பதால், டாம்ப்கால் நிறுவனம் தேவையான அளவு மருந்துகளை வழங்க இயலவில்லை என்பதை **அட்டவணை 2.30** காட்டியது. தேவை பட்டியல்களுக்கேற்ப போதுமான நிதி அளிக்கப்படவில்லை என டாம்ப்கால் நிறுவன பொது மேலாளர் தெரிவித்தார் (செப்டம்பர் 2018). எனினும், டாம்ப்கால் நிறுவனம் மருந்துகளை வழங்குவதை மேம்படுத்த DIMH பலன் தரத்தக்க நடவடிக்கை எடுக்கவில்லை.

வெளிச்சந்தையிலிருந்து மருந்துகள் வாங்க 2016-17ல் அரசு வரவு செலவுத் திட்டத்தின் கீழ் ₹ 2 கோடி மற்றும் NRHMன் கீழ் ₹ 7.11 கோடி என மொத்தம் ₹ 9.11 கோடி தொகையை DIMH டாம்ப்கால் நிறுவனத்திற்கு அளித்தார். பொது ISM பிரிவுகள் மற்றும் NRHMன் கீழுள்ள ISM பிரிவுகள் ஆகியவற்றுக்கு சித்தா, ஆயுர்வேத மற்றும் ஓமியோபதி மருந்துகளை கொள்முதல் செய்ய திறந்த டெண்டர்களை டாம்ப்கால் நிறுவனம் கோரியது (நவம்பர் 2016). மருந்துகள கொள்முதல் செய்வதற்கான விலை விகிதங்களும் இறுதி செய்யப்பட்டன. எனினும், ஓமியோபதி மருந்துகளை மட்டும் கொள்முதல் செய்வது என டாம்ப்கால் நிறுவனம் முடிவு செய்து (மார்ச் 2017), சித்தா மற்றும் ஆயுர்வேத மருந்துகளுக்கான டெண்டர்கள் குறிப்பான காரணம் ஏதுமின்றி ஒத்தி வைக்கப்பட்டன. யுனானி மருந்துகள் பொறுத்தவரை, டாம்ப்கால் நிறுவனத்திடமிருந்து பெறும் வழக்கமான முறைக்கு மாறாக, அறிஞர் அண்ணா மருத்துவமனையுடன் இணைந்த மருந்தகம் மூலம் உற்பத்தி செய்து வழங்குவது என DIMH முடிவு செய்தார்.

டாம்ப்கால் நிறுவனம் 2016-17ல் வெளிச்சந்தையிலிருந்து மருந்துகளை கொள்முதல் செய்யாததன் விளைவாக, சித்தா மற்றும் ஆயுர்வேத பிரிவுகள் டாம்ப்கால் நிறுவனம் உற்பத்தி செய்து வழங்கிய குறைந்த அளவிலான மருந்துகளை மட்டுமே பெற்றன. வெளிச்சந்தை மருந்துகளை அவை பெறவில்லை. மாநிலம் முழுவதும் மருத்துவமனைகள்/PHCக்களில் இருந்த யுனானி பிரிவுகள் 2016-17ல் டாம்ப்கால் நிறுவனத்திடமிருந்து மருந்துகளை பெறவில்லை. மாதிரி பிரிவான ஆமூர் PHCல் இருந்த யுனானி பிரிவு ஜூலை 2017 முதல் மே 2018 வரையான 11 மாதங்களில் மருந்துகள் ஏதுமின்றி இயங்கியது என்பதையும், பிற மாதிரி பிரிவுகள் அந்த ஆண்டில் அறிஞர் அண்ணா மருத்துவமனையிலிருந்து குறைந்த அளவிலான மருந்துகளை பெற்றன என்பதையும் தணிக்கை கண்டது. யுனானி மருத்துவர் மருத்துவ ஆலோசனைகளை மட்டும் அளித்தார். ஒவ்வொரு நாளும் யுனானி பிரிவிக்கு வந்த தோராயமாக 90 நோயாளிகளுக்கு மருந்துகள்

வழங்கப்படவில்லை. மருந்துகளை பெற்று வழங்கும் முறையில் இருந்த தடைகளை இது காட்டியது.

யுனானி மருத்துவர்கள் ஆலோசனைகளை மட்டுமே வழங்க முடிந்தது என்பதால், தேவையான மருந்துகளை கொள்முதல் செய்வதில் டாம்ப்கால் நிறுவனம் மற்றும் DIMH தவறினர் என்பது சேவைகளின் தரத்தை மிகவும் பாதித்தது.

ஓமியோபதி முறையிலும் மருந்து தட்டுப்பாடு இருந்தது; திருமங்கலம் ஓமியோபதி மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு இருந்தபோதிலும், 2014-15 மற்றும் 2015-16 ஆண்டுகளில் தேவைப்பட்ட மருந்துகளில் பற்றாக்குறையின் அளவு முறையே 84 மற்றும் 96 விழுக்காடு ஆகும்.

தமிழ்நாடு அரசு தனது மறுமொழியில் (நவம்பர் 2018), நிதி பற்றாக்குறை காரணமாக, DSMOக்கள் தெரிவித்த தேவைகளை எப்போதுமே நிறைவேற்றுவது என்பது இயலவில்லை எனவும், ISM பிரிவுகள் அனைத்தும் நியாயமான அளவில் மருந்துகள் பெறுவதை உறுதி செய்வதற்காக தேவை அளவுகளை டாம்ப்கால் நிறுவனம் குறைக்க நேரிட்டது எனவும் தெரிவித்தது. மருந்துகள் பற்றாக்குறை பற்றிய குறிப்பு தொடர்பாக இந்த மறுமொழி எதையும் கூறவில்லை.

2.2.10.4 மருந்து பரிசோதனை ஆய்வகத்தின் செயல்பாடு

மருந்துகள் மற்றும் அழகு சாதன பொருட்கள் சட்டம் 1940 மற்றும் விதிகள் 1945ன் கீழ் மருந்து ஆய்வாளர்களாக DSMOக்களை அறிவித்து தமிழ்நாடு அரசு அறிவிக்கை வெளியிட்டது (நவம்பர் 2007). DSMOக்கள் மருந்து உற்பத்தியாளர்கள் மற்றும் சில்லரை வணிகர்களிடமிருந்து மருந்துகளின் மாதிரிகளை எடுத்து மருந்து பரிசோதனை ஆய்வகத்திற்கு அனுப்புவர். DSMOக்கள் எடுத்து அனுப்பிய சட்டரீதியான அம்மாதிரிகளின் தரத்தை சோதிப்பதற்காக சென்னை, அறிஞர் அண்ணா மருத்துவமனை வளாகத்தில், சட்டரீதியான அதிகாரம் கொண்ட ஒரு மருந்து பரிசோதனை ஆய்வகம் (இந்திய மருத்துவம்) செயல்படுகிறது.

சித்த, ஆயுர்வேத மற்றும் யுனானி மருந்தியல் முறைநூல்களில் கூறப்பட்ட அடையாளம், தூய்மை மற்றும் வீரியம் ஆகிய கூறுகளில் மருந்துகளின் தரத்தை உறுதி செய்வது அந்த ஆய்வகத்தின் பணி ஆகும்.

மாதிரிகளை சோதிப்பதில் DIMH விதித்த இலக்குடன் ஒப்பிட்டதில் தணிக்கை கண்ட குறைவு **அட்டவணை 2.32**லும் அது பற்றிய விவரங்கள் **இணைப்பு 2.13**லும் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 2.32: சோதனையில் குறைவு

ஆண்டு	மருந்து ஆய்வாளர்கள் எண்ணிக்கை	மாதிரி மருந்துகளின் இலக்கு	சோதனைக்காக எடுக்கப்பட்ட மாதிரிகள்	குறைவு
2013-14	23	966	783	183
2014-15	23	1,449	1,376	73
2015-16	23	2,208	1,800	408
2016-17	23	2,208	1,806	402
2017-18	23	2,208	1,906	302

(ஆதாரம்: ஆய்வகம் அளித்த விவரங்கள்)

மேற்படி சட்டத்தின் பிரிவு 23ன்படி, ஒரு மருந்தின் மாதிரியை மருந்து ஆய்வாளர் எடுத்தால் அதற்குரிய நியாயமான விலையை அவர் தர வேண்டும். சிவகங்கை மற்றும் வேலூர் ஆகிய இரு மாதிரி மாவட்டங்களின் மருந்து ஆய்வாளர்கள், தாம்

எடுக்கவிருந்த மருந்து மாதிரிகளுக்கான விலையை கொடுப்பதற்குரிய நிதி இல்லாத காரணத்தால் இலக்கை அடைவதில் குறைவு ஏற்பட்டது என தெரிவித்தனர். இலக்கு நிர்ணயிக்கப்பட்ட போதிலும், அது அடையப்படுவதை கண்காணிக்க DIMH தவறினார்; தேவையான வசதிகள்/நிதியை அளித்து இலக்கை அடைய உதவுவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

மருந்து பகுப்பாய்வு அறிக்கையை அளிப்பதில் தாமதம்

போலி மருந்துகள் மக்களிடையே புழங்குவதை தடுப்பதற்கு மருந்து மாதிரிகளை உரிய நேரத்தில் பரிசோதனை செய்வது தேவையான ஒன்றாகும். மருந்து பரிசோதனை ஆய்வகம் மருந்துகளை பரிசோதித்து பகுப்பாய்வு அறிக்கையை அளிக்க ஆறு மாதம் முதல் ஒரு ஆண்டு காலம் எடுத்துக்கொண்டது தணிக்கை கண்டது. 2013-18 காலகட்டத்தில் சோதிக்கப்பட்ட 6,702 மாதிரிகளுள் 372 மாதிரிகள் 'தரமற்றவை' என கண்டறியப்பட்டன. அவற்றுள் 82 மருந்துகளுக்கான பகுப்பாய்வு அறிக்கைகள் ஆறு மாதங்கள் முதல் ஒரு ஆண்டு வரையிலான காலத்திற்கு பின் அளிக்கப்பட்டன என்பதை தணிக்கை கண்டது. அறிக்கை அளிப்பதில் இருந்த தாமதத்தால், மருந்து ஆய்வாளர்கள் தரமற்ற மருந்துகளை சந்தையிலிருந்து உடனடியாக அகற்ற இயலவில்லை.

ஆய்வகத்தில் பணியாளர் பற்றாக்குறை காரணமாக பகுப்பாய்வு அறிக்கைகளை அளிப்பதில் தாமதம் ஏற்பட்டது என மறுமொழி அளிக்கப்பட்டது. ஆய்வகத்திற்கு ஒப்பளிப்பு அளிக்கப்பட்டிருந்த அறிவியல் அலுவலர் பணியிடங்கள் இரண்டும் ஜூன் 2013 முதல் நிரப்பப்படாமல் இருந்த நிலையில், நான்கு உதவி அறிவியல் அலுவலர் பணியிடங்களை கொண்டு ஆய்வகம் இயங்கியது. மேலும், "உரிய நேரத்தில் பகுப்பாய்வை முடித்து அறிக்கையை அளிக்கும் பொருட்டு" கூடுதலாக 10 அறிவியல் அலுவலர் பணியிடங்களை அளிக்க கோரி ஆய்வகத்தின் அரசு பகுப்பாய்வாளர் அளித்த (ஏப்ரல் 2017) கருத்துருவை DIMH ஏற்கவில்லை.

மருந்து மாதிரிகளை எடுக்க போதுமான நிதி அளிப்பதும் ஆய்வகத்திற்கு போதிய பணியாளர்கள் அளிப்பதும், போலி மருந்துகளை ஒழிப்பதற்கு மிகவும் தேவையானவை ஆகும்.

2.2.10.5 NABH அங்கீகாரம் பெறப்படாமை

புது தில்லியில் உள்ள தேசிய மருத்துவமனை அங்கீகரிப்பு குழு (National Accreditation Board for Hospitals and Healthcare - NABH); மருத்துவமனைகளுக்கு தர அங்கீகாரம் அளிக்கிறது. மருத்துவ துறையில் உள்ள சிறந்த நிறுவனங்களை அளவுகோல்களாக எடுத்துக்கொண்டு மருத்துவமனைகள் தமது மருத்துவ சேவைகளின் தரத்தை உயர்த்த அந்த அங்கீகாரம் உதவுகிறது.

சென்னை, அறிஞர் அண்ணா மருத்துவமனைக்கு NABHன் தர அங்கீகாரத்தை பெறும் பொருட்டு, DIMHன் கருத்துருக்களின் அடிப்படையில், ஒரு புதிய கட்டட தொகுப்பு கட்டுதல், சாலை அமைத்தல் போன்றவை (₹ 7 கோடி), கூடுதல் பணியாளர்கள் (₹ 1.50 கோடி), எந்திரங்கள் மற்றும் கருவிகள் (₹ 1 கோடி), ஆலோசகரை அமர்த்துதல் மற்றும் பிறவற்றுக்கு (₹ 0.50 கோடி) என மொத்தம் ₹ 10 கோடி தொகையை தமிழ்நாடு அரசு ஒப்பளிப்பு செய்தது (அக்டோபர் 2013). கட்டடம் மற்றும் தொடர்புடைய பிற உள்கட்டமைப்பு ஆகியவற்றுக்காக அளிக்கப்பட்ட ₹ 7 கோடி தொகையை கொண்டு 2014-16ல் ஒரு மூன்று மாடி கட்டடம் கட்டப்பட்டு, கழிவுநீர் அமைப்புக்கு மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. கருவிகளுக்காக அளிக்கப்பட்ட ₹ 1 கோடி தொகையை

கொண்டு, ஒரு கொதிகலனும் (மருத்துவமனையின் மருந்தகத்திற்காக) பிற கருவிகளும் ₹ 82.74 இலட்சம் செலவில் வாங்கப்பட்டன (2014-16); மீதமுள்ள தொகை டாம்ப்கால் நிறுவனத்திடம் பயனற்று இருந்தது (ஜூலை 2018). தணிக்கை பின்வருவனவற்றை கண்டது:

- கட்டடம் 2016ல் கட்டி முடிக்கப்பட்டபோதிலும், ஜூலை 2018 நிலையில் அதன் தரைத்தளம் மட்டுமே பயன்படுத்தப்பட்டது. முதல் மற்றும் இரண்டாம் தளங்களில் அமைக்க திட்டமிடப்பட்ட உள் நோயாளி பிரிவுகள் ஜூலை 2018 வரை துவக்கப்படவில்லை. மேம்பாட்டு திட்டத்தின் கீழ் உருவாக்க கோரப்பட்ட 113 புதிய பணியிடங்களின் எண்ணிக்கை மிக அதிகமானது என தமிழ்நாடு அரசு கருதியதால் (ஜூலை 2017), அவற்றுள் ஒரு பணியிடமும் ஒப்பளிக்கப்படவில்லை. கருத்துருவை திருத்தியமைக்க DIMH நடவடிக்கை எடுக்கவில்லை.

- சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் வாரியம் ₹ 1.71 கோடி செலவில் கட்டிய கழிவுநீர் அமைப்பை சரியாக அமைக்காததால், அவ்வமைப்பு சரிவர இயங்காமல் மருத்துவமனையின் உள் நோயாளி பிரிவுகளுக்கு அருகே நீர் தேங்கியிருந்தது கூட்டுக் கள ஆய்வின்போது (மே 2018) காணப்பட்டது. இது குறித்து அவ்வாரியத்திடம் தெரிவிக்கப்படாததால், கழிவுநீர் அகற்றம் குறித்த அப்பிரச்சினை தீர்க்கப்படவில்லை (மே 2018).

- ஒப்பளிக்கப்பட்ட இனங்களுள், மருந்தகத்திற்கான கொதிகலன் ₹ 38.51 இலட்சம் செலவில் வாங்கப்பட்டு நிறுவப்பட்டது (2017); ஆனால் அது பயன்படுத்தப்படவில்லை (ஜூலை 2018). அதை இயக்குவதற்கான பணியாளர்கள் மருத்துவமனையில் இருக்கவில்லை; அவர்களை தேர்ந்தெடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. தர கட்டுப்பாடு ஆய்வகத்திற்கு ₹ 15 இலட்சம் செலவில் வாங்க திட்டமிடப்பட்ட கருவிகள் ஜூலை 2018 வரை முழுவதுமாக வாங்கப்படவில்லை; அதனால், அந்த ஆய்வகம் துவக்கப்படவில்லை (ஜூலை 2018).

- அங்கீகாரம் பெறுவது குறித்து தொழில்நுட்ப அறிவுரை கூற ஒரு ஆலோசகரை அமர்த்துவதற்கென்றே ₹ 0.50 கோடி ஒப்பளிக்கப்பட்டிருந்தும், DIMH ஒரு ஆலோசகரை அமர்த்தாமல், அங்கீகாரத்தை பெறுவதற்கான வழிமுறைகளை தெரிவிக்குமாறு NABHஐ கோரினார் (ஏப்ரல் 2014). NABH மறுமொழி அளிக்காததால், அங்கீகாரம் கோரி விண்ணப்பிப்பதற்கு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இவ்வாறாக, (அ) கூடுதல் பணியாளர்களை அமர்த்தாதது, (ஆ) ஆலோசகரை அமர்த்தாதது மற்றும் (இ) கருவிகளை வாங்குவதில் தாமதம் ஆகிய காரணங்களால் (i) உள் நோயாளி பிரிவுகள், (ii) மேம்படுத்தப்பட்ட மருந்தகம் மற்றும் (iii) தர கட்டுப்பாடு ஆய்வகம் ஆகியவற்றை துவக்காததால், ₹ 10 கோடி செலவில் NABHன் அங்கீகாரத்தை பெறும் திட்டம், அத்தொகையை செலவிட்ட பின்னரும், வெற்றி பெறவில்லை.

2.2.10.6 உயிரி மருத்துவ கழிவுகள் அகற்றப்படாமை

உயிரி மருத்துவ கழிவுகள் மேலாண்மை விதிகள், 2016ன்படி, உயிரி மருத்துவ கழிவுகளை உருவாக்கும் நிறுவனம், அக்கழிவுகள் மனிதர்களின் நலனுக்கும் சுற்றுச்சூழலுக்கும் கேடு விளைவிக்காத வகையில் கையாளப்படுவதை உறுதி செய்ய தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும். நாகர்கோவில், அரசு ஆயுர்வேத மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் 25 மே 2018 அன்று நடத்தப்பட்ட கூட்டுக் கள ஆய்வின்போது, ஊசிகள், ஆய்வகத்தில் பயன்படுத்தப்பட்ட களைந்து விடக்கூடிய வடிகுழல்கள் போன்றவை அட்டை பெட்டிகளில் குவிக்கப்பட்டு ஒரு தனி அறையில் வைக்கப்பட்டிருந்தது காணப்பட்டது. அக்கழிவுகளை அகற்றும் முகமைகளுடன் அம்மருத்துவமனை ஒரு ஏற்பாட்டினை செய்து கொண்டிராததால், அவை அகற்றப்படவில்லை.

உயிரி மருத்துவ கழிவுகளை அகற்றும் முகமையை அமர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக முதல்வர், GAMCH தெரிவித்தார் (ஜூலை 2018). முகமையை அமர்த்தாததற்கு போதிய நிதி ஒதுக்காமை காரணம் என அவர் தெரிவித்தார். உயிரி மருத்துவ கழிவுகளை அகற்ற ஏற்பாடு செய்வதற்காக நிதி ஒதுக்குமாறு அவர் DIMHஐ கோரவில்லை என்பதால் இந்த பதில் ஏற்கத்தக்கதல்ல.

2.2.11 ISM கல்வி மற்றும் ஆராய்ச்சி

ISM நல்வாழ்வு சேவைகள் மற்றும் ISM கல்வி என்பவை ஒன்றோடொன்று இணைந்தவை ஆகும்; ஒன்றில் உள்ள குறைபாடு மற்றொன்றையும் பாதிக்கும். ISM மருத்துவமனைகள் மற்றும் ISM பிரிவுகள் தவிரவும், மாநிலத்தில் அரசு துறையில் ஆறு ISM கல்லூரிகளும் தனியார் துறையில் 22 கல்லூரிகளும் செயல்படுகின்றன.

2.2.11.1 ISM கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை

தமிழ்நாடு அரசின் ISM கல்லூரிகளில் 2013-18 காலகட்டத்தில் ஆண்டுவாரியான மாணவர் சேர்க்கை விவரங்கள் **அட்டவணை 2.33**ல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 2.33: ISM கல்லூரிகளில் சேர்க்கை இடங்கள் மற்றும் சேர்க்கை எண்ணிக்கை விவரங்கள்

முறை	சேர்க்கை இடங்கள்		சேர்க்கை எண்ணிக்கை				
			2013-14	2014-15	2015-16	2016-17	2017-18
சித்தா	இக	2014-15 வரை -**150** 2015-16 முதல் -**160**	148	133	155	160	159
	முக	**94**	93	93	90	93	94
யோகா & இயற்கை மருத்துவம்	இக	2013-14 வரை -**20** 2014-15 முதல் -**60**	20	59	60	60	60
	முக	**15** (2014-15ல் துவக்கப்பட்டது)	-	15	15	15	15
ஆயுர்வேதம்*	இக	2014-15 வரை -**50** 2015-16 முதல் -**60**	49	50	60	60	60
யுனானி *	இக	2015-16 வரை -**26** 2016-17 முதல் - **60**	26	26	26	60	60
ஓமியோபதி*	இக	**50**	50	50	50	50	50

* முதுகலை படிப்பு இல்லை. இக: இளங்கலை முக: முதுகலை

(ஆதாரம்: DIMH அளித்த விவரங்கள்)

அட்டவணை 2.33ல் காணப்பட்டவாறு, ஆயுர்வேதம், யுனானி மற்றும் ஓமியோபதி முறைகளில் முதுகலை பட்டப்படிப்பு வழங்கப்படவில்லை; சித்தா மற்றும் யோகா & இயற்கை மருத்துவ முறையில் முதுகலை படிப்பு நிலையில் சேர்க்கை இடங்களின் எண்ணிக்கை நிலையாக இருந்தது. ISMல் ஆராய்ச்சி என்பது தமிழ்நாடு அரசின் கொள்கையாக இருந்தபோதிலும், ஆராய்ச்சி பட்டப்படிப்பை எந்த கல்லூரியும் வழங்கவில்லை என்பதால் அது உரிய முக்கியத்துவத்தை பெறவில்லை. இளங்கலை பட்டப்படிப்பு நிலையில், ஓமியோபதி தவிர்த்து பிற முறைகளில் சேர்க்கை இடங்களின் எண்ணிக்கையில் உயர்வு இருந்தது.

2.2.11.2 தேர்ச்சி விகிதம்

தேர்ச்சி விகிதம் என்பது கல்வி நிறுவனங்களின் செயல்பாடு தொடர்பான ஒரு அளவீடு ஆகும். சோதனை சரிபார்ப்பு செய்யப்பட்ட ISM கல்லூரிகளில் இளங்கலை பட்டப்படிப்புக்காக விதிக்கப்பட்ட காலவரையறைக்குள் படிப்பை முடித்து பட்டம் பெறும் மாணவர்களின் எண்ணிக்கை 2013-18 காலகட்டத்தில், சித்தா, ஆயுர்வேதம், ஓமியோபதி, யுனானி மற்றும் யோகா & இயற்கை மருத்துவம் ஆகிய முறைகளில் முறையே 82 விழுக்காடு, 69 விழுக்காடு, 74 விழுக்காடு, 67 விழுக்காடு மற்றும் 88 விழுக்காடு என இருந்தது.

பத்திகள் 2.2.8 மற்றும் 2.2.9ல் கூறப்பட்ட, ISM மருத்துவ கல்லூரிகளில் இருந்த உள்கட்டமைப்பு மற்றும் பணியாளர் பற்றாக்குறை தவிரவும், கல்வியின் தரத்தை பாதித்த பிற பிரச்சினைகள் பின்வரும் பத்திகளில் விவாதிக்கப்பட்டுள்ளன.

2.2.11.3 பட்டம் பெறுவதன் விளைபயன்கள்

ISM பட்டதாரிகள் அவ்வாறு பட்டம் பெற்றதன் பயன்களை, வேலை வாய்ப்பை பெறுவது, வேலையில் மனநிறைவு போன்ற வகைகளில் மதிப்பிடுவதற்காக, 2015 முதல் 2017 வரை பட்டம் பெற்ற 352 பட்டதாரிகளிடம் அஞ்சல் வழியிலான ஒரு ஆய்வை தணிக்கை நடத்தியது. அந்த 352 பட்டதாரிகளுள் 65 பட்டதாரிகள் (18 விழுக்காடு) ஆய்வில் பங்கு பெற்றனர். அதன் மூலம் தெரிய வந்தவை பின்வருமாறு:

- 65 பட்டதாரிகளுள் 34 பட்டதாரிகள் (52 விழுக்காடு) பட்டம் பெற்று ஓராண்டுக்கு மேலாகியும் வேலைவாய்ப்பின்றி இருந்தனர்.
- வேலை வாய்ப்பு பெற்ற 31 பட்டதாரிகளுள் 19 பட்டதாரிகள் (61 விழுக்காடு) மாதம் ₹ 15,000க்கு குறைவாக வருமானம் பெற்றனர்.
- 35 பட்டதாரிகள் (54 விழுக்காடு) நிதி பிரச்சினைகள் காரணமாக மருத்துவ தொழிலை துவக்க இயலவில்லை என தெரிவித்தனர்.
- 15 பட்டதாரிகள் (23 விழுக்காடு) தமது படிப்பு வேலை வாய்ப்பை பெறுவளவுக்கு போதிய அளவில் தம்மை உருவாக்கவில்லை எனவும், 28 பட்டதாரிகள் (43 விழுக்காடு) அப்படிப்பு தங்களது எதிர்பார்ப்புகளை நிறைவேற்றவில்லை எனவும் தமது கருத்தை தெரிவித்தனர்.
- படிப்பு மனநிறைவை அளிக்கவில்லை என தெரிவித்தவர்களுள் 22 பட்டதாரிகள் (34 விழுக்காடு), வேலை வாய்ப்பின்மையை அதற்கான காரணமாக கூறினர்.

மேலே விவரிக்கப்பட்டுள்ளவாறு இருந்த பட்டப்படிப்பின் பயன்கள், ஐந்து ஆண்டுகள் படித்த பின்னரும் ISM பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு குறைவாக இருந்ததை காட்டுகிறது. ISM மருத்துவர்கள் தேவைப்படும்

எண்ணிக்கை, அவர்களுக்கான வேலை வாய்ப்புகள் மற்றும் சுய வேலைவாய்ப்புகள் ஆகியவற்றை அரசு மதிப்பிடவில்லை என்பதையும் தணிக்கை கண்டறிந்தது.

2.2.11.4 முதுகலை பட்டப்படிப்பு துவக்கப்படாமை

தமிழ்நாடு அரசு முதுகலை பட்டப்படிப்பை சித்தா பிரிவில் 1998-99லும் யோகா & இயற்கை மருத்துவம் பிரிவில் 2014-15லும் துவக்கியது. ஓமியோபதி பிரிவில் முதுகலை பட்டப்படிப்பை துவக்க செய்யப்பட்ட (2008) முயற்சி வெற்றி பெறவில்லை.

ஓமியோபதி முறையின் கீழ் மூன்று சிறப்பு பிரிவுகளில் ஒன்பது மாணவர் சேர்க்கை எண்ணிக்கையுடன் கூடிய MD முதுகலை பட்டப்படிப்பை துவக்குவதற்கான முன்மொழிவை திருமங்கலம், அரசு ஓமியோபதி கல்லூரி முதல்வர் 2008ல் அளித்தார். தமிழ்நாடு அரசு அதற்கு ஒப்புதல் அளித்து, புதுதில்லி, CCHக்கு கட்டணம் செலுத்த ₹ 6 இலட்சம் ஒப்பளிப்பு செய்தது (மே 2008). CCH அளவுநிலைகளை பின்பற்றும் பொருட்டு 23 கூடுதல் பணியிடங்களை உருவாக்குவதற்கும் தமிழ்நாடு அரசு ஒப்புதல் அளித்தது (செப்டம்பர் 2008). நிர்வாக காரணங்களால் அப்பணியிடங்களை நிரப்ப இயலவில்லை என தமிழ்நாடு அரசு தணிக்கைக்கு மறுமொழி அளித்தது (செப்டம்பர் 2018). ஆண்டு சேர்க்கை எண்ணிக்கை தலா மூன்று என MD பிரிவுகளை துவக்குவதற்குரிய இணைப்புக்கான ஒப்புதல் கடிதத்தை (Letter of Consent of Affiliation) சென்னை, தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகம் அளித்தது (நவம்பர் 2008). CCH நவம்பர் 2009ல் கல்லூரியில் ஆய்வை நடத்தியது; ஆனால் முதுகலை பட்டப்படிப்பை துவக்குவதற்கான ஒப்புதலை அளிக்கவில்லை. முதுகலை பட்டப்படிப்பை துவக்குவதற்குரிய பயிற்றுவிக்கும் பணியாளர்கள் போதிய அளவில் இல்லை என்பதை ஆய்வுக்குழு சுட்டிக்காட்டியது.

முதுகலை பட்டப்படிப்பை துவக்குவதற்கான ஒரு விரிவான கருத்துரு DIMHக்கு மீண்டும் ஜூன் 2014ல் அனுப்பப்பட்டதாக கல்லூரி முதல்வர் தனது மறுமொழியில் தெரிவித்தார். முதுகலை பட்டப்படிப்பை துவக்குவதற்காக CCH அளவுநிலைகளை ஒட்டி காலி பணியிடங்களை நிரப்புமாறும் அவர் DIMHஐ கேட்டுக்கொண்டார். அதன் மீது DIMH எடுத்த நடவடிக்கை குறித்து பதிவுருக்களில் ஏதும் இருக்கவில்லை. இவ்வாறாக, ஓமியோபதி பிரிவில் முதுகலை பட்டப்படிப்பை துவக்குவதற்காக 2008ல் துவங்கிய முயற்சி திட்டம் வெற்றி பெறவில்லை (ஜூலை 2018).

2.2.11.5 ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி பிரிவு அமைக்கப்படாமை

சித்தா, ஆயுர்வேத மற்றும் யுனானி முறைகளில் இயற்கை மருந்துகள் (raw drugs) மற்றும் தயாரிக்கப்பட்ட மருந்துகளுக்கான மருந்தியல் முறை நூல்களின் விவரக் குறிப்பீடுகளை இந்திய அரசு வெளியிட்டது (2011-16). இம்மருந்துகளுக்கான தரப்படுத்தப்பட்ட தயாரிப்பு முறைகளை அமல்படுத்துதல், மருந்துகளை தரப்படுத்துதல் மற்றும் மூலிகை செடிகள் பற்றி மேற்கொண்டு ஆராய்ச்சி செய்தல் ஆகியவற்றின் பொருட்டு, சென்னை, அறிஞர் அண்ணா மருத்துவமனை வளாகத்தில் ஒரு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி (R&D) பிரிவை அமைக்க தமிழ்நாடு அரசு ₹ 12 கோடி தொகையை ஒப்பளிப்பு செய்தது (டிசம்பர் 2013) (காட்சிப்படம் 2.9). அத்தொகையில், கட்டடங்களுக்காக ₹ 6 கோடி, கருவிகளுக்காக ₹ 4.02 கோடி, பணியாளர் ஊதியம் மற்றும் பிறவற்றுக்காக ₹ 1.69 கோடி ஆகியன அடங்கும்.

காட்சிப்படம் 2.9: R&D பிரிவின் புதிய கட்டடம் பயனற்று இருந்தமை

R&D பிரிவு கட்டடத்தின் வெளித்தோற்றம்

R&D பிரிவு கட்டடத்திற்காக வாங்கப்பட்ட தளவாடங்கள்

(ஆதாரம்:04 ஜூலை 2018 அன்று நடத்தப்பட்ட கூட்டுக் கள ஆய்வின்போது தணிக்கை குழுவினர் எடுத்த படம்)

பொதுப்பணித்துறை புதிய கட்டடத்தை கட்டி முடித்து அதனை DIMH இடம் ஜூன் 2017ல் ஒப்படைத்தது. எனினும், பின்வரும் காரணங்களினால் ஜூன் 2018 நிலையிலும் R&D பணிகள் துவங்கவில்லை என்பதை தணிக்கை கண்டது.

கருவிகள் வாங்குவதற்காக அளிக்கப்பட்ட ₹ 4.02 கோடி தொகை முழுவதையும் DIMH டாம்ப்கால் நிறுவனத்திடம் அளித்தார் (ஜூலை 2014). எனினும், வாங்கப்பட வேண்டிய கருவிகள் பற்றிய விவரங்களை அவர் ஒப்பளிப்புக்கு பின் மூன்று ஆண்டுகள் கழிந்த பின் மே 2017ல்தான் டாம்ப்கால் நிறுவனத்துக்கு தெரிவித்தார். கருவிகளை வாங்குவதற்கான டெண்டர்களை டாம்ப்கால் நிறுவனம் 1 ஆகஸ்ட் 2017 அன்று கோரி, கருவிகளுக்கான செலவு ஒப்பளிக்கப்பட்ட தொகையைவிட ₹ 0.56 கோடி அதிகம் ஆகும் என அறிந்தது. கூடுதல் தொகைக்கான டாம்ப்கால் நிறுவனத்தின் கோரிக்கை (பிப்ரவரி 2018) மீது DIMH நடவடிக்கை எடுக்கவில்லை (ஜூன் 2018). எனவே, அக்கருவிகள் வாங்கப்படவில்லை. பணியாளர்களை பொறுத்தவரை, ஒப்பளிக்கப்பட்ட 49 பணியிடங்களுள் இரண்டு மட்டுமே நிரப்பப்பட்டன. பணியாளர்களை தேர்ந்தெடுக்க DIMH நடவடிக்கை எடுக்கவில்லை. இவ்வாறாக, கருவிகள் வாங்குவதை, கட்டடம் கட்டுதல் மற்றும் தேவையான பணியாளர்களை தேர்ந்தெடுத்தல் ஆகியவற்றின் காலத்துடன் பொருத்தாததால், ₹ 6 கோடி செலவில் கட்டப்பட்ட R&D பிரிவு கட்டடம் ஓராண்டுக்கு மேலாக பயனற்று வைக்கப்பட்டது; R&D முன்னெடுத்து செல்லும் நோக்கம் நிறைவேறவில்லை.

2.2.11.6 சித்த மருத்துவத்தில் பண்டைய அறிவுத்திறனின் பலன்களை பெறாமை

DIMH நெடுங்காலமாக 1,068 கையெழுத்துப்படிகளை (manuscripts) பல்வேறு இடங்களிலிருந்து சேகரித்தார். பல காலத்திற்கு முன் பனை ஓலைகள் மற்றும் பிற வகைகளில் எழுதப்பட்ட அந்த கையெழுத்துப்படிகளில் உள்ளவற்றுக்கான பொருட்களை, பண்டைய தமிழ் எழுத்து வடிவம் மற்றும் மொழியில் புலமை பெற்ற எழுத்து வடிவமாக்குபவர்கள் (transcribers) கொண்டு அறியப்பட வேண்டும். துறை சேகரித்த 1,068 கையெழுத்துப்படிகளுள் 450 படிகளுக்கு (45 விழுக்காடு) மட்டுமே இதுவரை பொருள் அறியப்பட்டு, அதன் அடிப்படையில் 20 நூல்கள் வெளியிடப்பட்டன. சென்னையில் உள்ள DIMH அலுவலகத்தின்

கையெழுத்துப்படி பிரிவில் தமிழ் பண்டிதர்[40] பணியிடங்களும் மற்றும் ஐந்து எழுத்து வடிவமாக்குபவர் பணியிடங்களுள் நான்கு பணியிடங்களும் மூன்று முதல் பத்து ஆண்டுகள் வரை நிரப்பப்படாமல் இருந்தன என்பதை தணிக்கை கண்டது. பணியிலிருந்த ஒரு எழுத்து வடிவமாக்குபவர் மைய நூலகத்திற்கு மாற்றப்பட்டு, ஐந்து பணியிடங்களும் காலியாக இருந்தன (ஜூலை 2018). இதன் விளைவாக, சித்த மருத்துவ முறையின் பண்டைய அறிவுத்திறனை பெறும் நோக்கில் பனை ஓலை கையெழுத்துப்படிகளில் உள்ளவற்றின் பொருளை அறிந்து எழுத்து வடிவமாக்கும் பணி நடைபெறவில்லை.

கையெழுத்துப்படிகளுக்கான தேசிய திட்டம் கையெழுத்துப்படிகளை பாதுகாப்பதற்கான குறைந்தபட்ச தேவைகளை விதித்தது; அவற்றுள், கையெழுத்துப்படிகள் சிதைந்து போகாமல் தடுப்பதற்காக தட்பவெப்ப கட்டுப்பாடு மற்றும் பிற முறைகள் அடங்கும். எனினும், 05 ஜூன் 2018 அன்று நடத்தப்பட்ட கூட்டுக் கள ஆய்வின்போது, பனை ஓலை கையெழுத்துப்படிகள் அலுவலகத்தின் பிற ஆவணங்கள் மற்றும் பதிவுருக்களுடன் சேர்த்து தூசு நிறைந்த, காற்று மற்றும் வெளிச்சம் இல்லாத ஒரு அறையில் கொட்டி வைக்கப்பட்டிருந்ததை தணிக்கை கண்டது (**காட்சிப்படம் 2.10**). அறையில் இருந்த குளிர்சாதன கருவி இயங்கும் நிலையில் இருக்கவில்லை; கையெழுத்துப்படிகளை மற்றவற்றிலிருந்து பிரித்து தனியே வைப்பதற்காக தேசிய கொள்கையில் கூறப்பட்ட ஒரு தனி அறை இருக்கவில்லை.

காட்சிப்படம் 2.10: கையெழுத்துப்படிகளை வைத்திருந்த நிலை

(ஆதாரம்: 05 ஜூன் 2018 அன்று நடத்தப்பட்ட கூட்டுக் கள ஆய்வின்போது தணிக்கை குழுவினர் எடுத்த படம்)

பனை ஓலையிலிருந்து எழுத்து வடிவமாக்கல் மூலம் சித்த மருத்துவத்தின் பண்டைய அறிவுத்திறனை பெற துறை தவறியதோடு, அவ்வோலைகள் சிதைந்து போகக்கூடிய வகையில் அவற்றை உகந்த சூழல் இல்லாத அறையில் கொட்டி வைத்தது.

தமிழ்நாடு அரசு தனது மறுமொழியில் (நவம்பர் 2018), சென்னை, தமிழ் ஆராய்ச்சிக்கான பன்னாட்டு மையம், கையெழுத்துப்படிகளின் டிஜிடலைசேசன் பணி முடிந்த பின் அவற்றை தனது இடத்தில் வைத்துக்கொள்ள வேண்டும் என்ற DIMHன் கோரிக்கையை ஏற்றுக்கொண்டுள்ளது எனவும், கையெழுத்துப்படிகளின் உடைமையாளர் உரிமை DIMHஇடம் தொடர்ந்து இருக்கும் எனவும் தெரிவித்தது.

[40] வல்லுனர்.

2.2.11.7 போலி மருத்துவர்களை கண்டுபிடிக்க போதிய முறைமை இல்லாமை

மாநிலத்தில் உள்ள மருத்துவ அமைப்புகளை ஒழுங்குபடுத்துவதற்காக, தமிழ்நாடு அரசு தமிழ்நாடு தனியார் மருத்துவ அமைப்புகள் (ஒழுங்குபடுத்துதல்) சட்டம் 1997ஐ இயற்றியது. ISM தொடர்பான மருத்துவ அமைப்புகள் பற்றிய தகவல் தரவை DIMH பராமரிக்க வேண்டும் என அச்சட்டம் கூறுகிறது. எனினும், அச்சட்டத்தின் கீழ் விதிகள் மார்ச் 2018ல் தான் வகுக்கப்பட்டன என்பதால், ISM மருத்துவ அமைப்புகள் பற்றிய தகவல் தரவை DIMH உருவாக்கவும், ISM துறையில் போலி மருத்துவர்களாக உள்ளவர்களை கண்டுபிடிப்பதற்கான வழிகாட்டு நெறிகளை வெளியிடவும் இல்லை.

புகார்கள் பெறப்பட்டதும் அவற்றின் மீது போலி மருத்துவரை களையும் குழு நடவடிக்கை எடுத்தது என மறுமொழி அளிக்கப்பட்டது. போலி மருந்துகள் மற்றும் சிகிச்சை மூலம் போலி மருத்துவர்கள் பொது மக்களை ஏமாற்றுவதை தடுப்பதற்கான ஒரு முழுமையான நடைமுறையை DIMH வைத்திருக்கவில்லை.

2..2.12 தவறுகள்/குறைபாடுகளை கண்டுபிடித்து தடுக்கும் முறை

சுட்டிக்காட்டப்பட்ட தவறுகள்/குறைபாடுகள் சோதனை ஆய்வின் அடிப்படையில் கண்டறியப்பட்டவை ஆகும். எனவே, அதே போன்ற தவறுகள்/குறைபாடுகள் வேறு எங்கும் நிகழ்ந்துள்ளனவா என கண்டறிந்து, அவ்வாறு இருந்தால் அவற்றை சரிசெய்யும் பொருட்டும், அவ்வாறான தவறுகள்/குறைபாடுகள் நிகழாமல் தடுக்க ஒரு முறைமையை அமைக்கும் பொருட்டும், துறை/அரசு அனைத்து அமைப்புகளிலும் ஒரு முழுமையான ஆய்வை மேற்கொள்ளலாம்.

2.2.13 முடிவுரை

மற்ற மருத்துவ முறைகளுக்கு இணையாக ISM முறைகளை கொண்டு வருவது என்ற தமிழ்நாடு அரசின் முக்கிய நோக்கம் நிறைவேறவில்லை. பொருள்வள மற்றும் மனித வள உள்கட்டமைப்பில் இருந்த பெருமளவிலான பற்றாக்குறையினால் ISM அமைப்புகளின் செயல்பாடுகள் தடைபட்டன. PHCக்கள் மற்றும் மாவட்ட மருத்துவமனைகளில் இருந்த ISM பிரிவுகளின் சேவைகள், இடம் மற்றும் இயங்கக்கூடிய கருவிகள் பற்றாக்குறையினால் பாதிக்கப்பட்டன. DSMOக்கள், DIMH மற்றும் மருத்துவ பணியாளர் தேர்வு வாரியம் ஆகியவற்றுக்கிடையே ஒருங்கிணைந்த செயல்பாடு இல்லாததால், காலி பணியிடங்கள் நிரப்பப்படவில்லை. கட்டடங்களின் கட்டுமானம், கருவிகளின் கொள்முதல், பணியாளர்களை அமர்த்துதல் ஆகியவற்றை ஒருங்கிணைத்து செயல்படுத்தாததால் பல திட்டங்களில் செய்யப்பட்ட முதலீடு பயனற்றதாக இருந்தது. மருந்துகளின் உற்பத்தி மற்றும் கொள்முதலை அவற்றுக்கான தேவைப்பட்டியல்களுக்கு ஏற்றபடி செய்ய டாம்ப்கால் நிறுவனம் தவறியதால், ISM அமைப்புகளில் மருந்துகளின் பற்றாக்குறை பெருமளவில் இருந்தது. மருந்துகளின் தர சோதனை முடிவுகளை வெளியிடுவதில் இருந்த தாமதம் காரணமாக, தரம் குறைந்த ISM மருந்துகள் என்ற பிரச்சினையை தீர்க்க DIMH தவறினார். ISM கல்லூரிகளுக்கான தர நிலைகளை வகுக்கும் அமைப்புகள் விதித்த கட்டாயமான குறைந்தபட்ச தேவைகளில் பலவற்றை ISM கல்லூரிகள் எட்டவில்லை. திட்டமிடல் மற்றும் தொடர் முயற்சிகள் இல்லாததால், மூன்று மருத்துவ கல்லூரிகளில் முதுகலை பட்டப்படிப்பு பிரிவுகள் துவக்கப்படவில்லை. கொள்முதல்களில் இருந்த தாமதங்கள் காரணமாக DIMH, டாம்ப்கால் நிறுவனம்

மற்றும் மாநில AYUSH குழுமத்தின் வங்கி கணக்குகளில் பெரும் தொகைகள் மீதம் இருந்தன. வங்கி கணக்கு மூலம் கையாளப்படும் திட்ட நிதிகளுக்கு முறையான கணக்கு வைப்பு இல்லாத காரணத்தினால், மோசடி நடவடிக்கைகள் நிகழக்கூடிய நிலையில் நிதி மேலாண்மை இருந்தது. ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிக்கு உரிய முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை. சித்த மருத்துவ முறை தொடர்பான நூற்றாண்டுகள் பழமையான பனை ஓலை கையெழுத்துப்படிகளை உரிய கவனமின்றி கையாள்வது அம்முறையில் உள்ள அறிவுத்திறனை தற்கால பயன்பாட்டுக்கு கொண்டுவரும் நோக்கத்தை சிதைக்கிறது.

2.2.14 பரிந்துரைகள்

- நிதியின் முறையான பயன்பாட்டை உறுதி செய்ய, வங்கி கணக்கு மூலம் கையாளப்படும் நிதிக்கான கணக்கு வைப்பு நடைமுறையை ஒழுங்குபடுத்த வேண்டும்.
- முறையான திட்டமிடல் மற்றும் வள ஆதார பயன்பாட்டின் பொருட்டு, பொருள்வள மற்றும் மனித வள உள்கட்டமைப்பு பற்றிய கணினிமயமாக்கப்பட்ட தகவல் தரவை DIMH உருவாக்கி, காலமுறையில் அதனை நிகழ்நிலைப்படுத்த வேண்டும்.
- ISM அமைப்புகள் அளிக்கும் மருந்துகளுக்கான தேவைப்பட்டியல்களை, மருந்துகளுக்கான DIMHன் நிதி விடுவிப்பு மற்றும் மருந்துகள் உற்பத்திக்கான டாம்ப்கால் நிறுவனத்தின் திட்டமிடல் ஆகியவற்றுடன் தொடர்புபடுத்தும் ஒரு முறைமை உருவாக்கப்பட வேண்டும்.
- ஆயுர்வேதம், ஓமியோபதி மற்றும் யுனானி முறைகளில் முதுநிலை பட்டப்படிப்பு பிரிவுகளை துவக்குவதில் அரசு கவனம் செலுத்த வேண்டும்.
- தேவையான பொருள் சார்ந்த மற்றும் மனித வள உட்கட்டமைப்பை அளித்து, தேசிய AYUSH திட்டத்தின் கீழ் செயல்பாடுகளை விரைவுபடுத்த வேண்டும்.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

2.3 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாடுகளின் கணினிமயமாக்கம் மீதான செயலாக்கத் தணிக்கை

செயலாக்க சுருக்கம்

*நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் தமது சேவைகளை வழங்குவதை மேம்படுத்தும் ஒரு மின்னாட்சி முறை என்ற வகையில் தமிழ்நாடு அரசு **Urban Tree Information System (UTIS)** என்ற திட்டத்தை துவக்கியது. சேவைகளை உரிய நேரத்தில், குறைந்த செலவில் வெளிப்படையான வகையில் வழங்குதல், அனைத்து நிலைகளிலும் தகவல்களை எளிதாக பெறுதல் மற்றும் தகவல்களின் தடையற்ற பரிமாற்றம் ஆகியன இத்திட்டத்தின் நோக்கங்கள் ஆகும். நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாடுகளின் கணினிமயமாக்கம் மீதான 2013-18 காலகட்டத்திற்குரிய செயலாக்க தணிக்கை, செயல்பாடுகளின் எளிமைக்காக மையப்படுத்தப்பட்ட ஒரு தகவல்தரவு இருப்பது, சேவை கோரிக்கைகளின் நிலையை நிகழ்நிலையாக அறிவது போன்ற வகைகளில் சேவை வழங்கும் முறையில் முன்னேற்றம் இருந்ததை காட்டியது. திட்டமிடல், தகவமைவின் செயலாக்கம் மற்றும் கண்காணிப்பில் குறைபாடுகள் காணப்பட்டன.*

- *UTIS பொதுவில் விலையின்றி கிடைக்கும் மென்பொருளுக்கு மாறாக விலையுடன் கூடிய மென்பொருளை பயன்படுத்தியதால் ஆண்டிற்கு ₹ 1.73 கோடி தவிர்த்திருக்கக் கூடிய தொடர் பொறுப்பு ஏற்பட்டது.*
- *பேரிடர் மீட்பு மென்பொருளுக்காக ₹ 2.62 கோடி செலவில் பெறப்பட்ட உரிமங்கள் பயன்படுத்தப்படாமலே காலாவதியாயின.*
- *இணையதளம் குறைந்த அளவில் சேவைகளை வழங்கியது, 'எங்கும் எப்போதும்' சேவைகளை வழங்கும் திட்டத்தின் நோக்கத்தை முறியடித்தது.*
- *குறை தீர்ப்புதகவமைவு புகார்களை கட்டணமின்றி பதிவு செய்யும் வசதியை அளிக்கவில்லை.*
- *இரண்டு கட்டங்களாக ஆகஸ்ட் 2015க்குள் முடிக்கப்பட இருந்த திட்டம் முடிவடையவில்லை (டிசம்பர் 2018).*
- *திட்டத்தை செயல்படுத்துவதில், பல்வேறு தகவமைவுகளின் கீழ்,தரவு இடப்பெயர்வில் துல்லியமின்மை, பல்வேறு தகவமைவுகளின் அட்டவணைகளிடையே கட்டாய புலன்களில் தொடர்பில்லாமை, தரவுகளின் தவறான பதிவு, மதிப்பீடுகளின் தவறான நீக்கம், விடுபட்ட கோரிக்கைகள், வருவாய்களின் கசிவு ஆகிய குறைபாடுகள் இருந்தன.*

2.3.1 முன்னுரை

தமிழ்நாட்டில் உள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (ULBக்கள்) மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன. ULBக்கள் 2002 முதல் தமது பணிகளை கணினிமயமாக்கி, பிறப்பு மற்றும் இறப்பு, சொத்து வரி, குடிநீர் கட்டணம், தொழில் வரி, கட்டட திட்டம் மற்றும் ஊழியர் சம்பளப் பட்டியல் போன்றவற்றிற்கான தகவமைவுகளை (module) உருவாக்கின. குடிமக்களுக்கு தகவல் மற்றும் தொடர்பு

தொழில்நுட்ப அடிப்படையிலான நகர்ப்புற சேவைகளை வழங்க அமைப்பை விரிவுபடுத்தும் நோக்கில், சேவை வழங்கும் கிளைகள் மூலம் மின் ஆளுமை மேம்பாட்டிற்காக தமிழ்நாடு அரசு மாநிலத்திலுள்ள ULBக்களுக்கு ₹ 14.21 கோடி ஒப்பளிப்பு செய்தது (டிசம்பர் 2009). மாநிலத்திலுள்ள ULBக்களுக்காக[41] ₹ 18.32 கோடி செலவில் மையப்படுத்திய Urban Tree Information System (UTIS) என்ற மின் ஆளுமை மென்பொருளை வடிவமைத்து, உருவாக்கி செயல்படுத்துதல் மற்றும் பராமரித்தல்என்பதற்காக, இந்திய அரசின் நிதியை எதிர்பார்த்து ஒரு கணினி ஒருங்கிணைப்பாளர் ஒப்பந்தம் செய்யப்பட்டார் (பிப்ரவரி 2014). பராமரிப்புடன் சேர்த்து திட்டம் 18 மாதங்களில் முடிக்கப்பட வேண்டும். ஒப்பந்தத்தில், இறுதி நிலை பயனாளருக்கான பயிற்சி, தரவு இடப்பெயர்வு, தரவு மையம்/பேரிடர் மீட்புக்கான உள்கட்டமைப்பை உருவாக்குதல் ஆகியனஇருந்தன.

தமிழ்நாடு அரசு, ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் UTIS செயல்படுத்துவதற்கான நிர்வாக ஒப்புதலை வழங்கியது (ஆகஸ்ட் 2014); சேவைகளை அளிப்பதில் காலம், செலவு, அணுகுதன்மை ஆகிய வகைகளில் மேம்பாடு,சேவைக்கான செயல்பாடுகளில் வெளிப்படைத்தன்மையை அதிகரித்தல், பணியாளர்களின் பணித்திறனை உயர்த்துதல், அனைத்து நிலை அலுவலகங்களிலும் தகவல்களின் தடையற்ற ஓட்டத்தை உறுதி செய்தல் ஆகியன இதன் நோக்கங்களாகும். இந்திய அரசின் நிதி பெறப்படாததால், தமிழ்நாடு அரசு உலக வங்கியை நாடியது (செப்டம்பர் 2014); உலக வங்கி, தாம் நிதியுதவி அளித்த தமிழ்நாடு நீடித்த நகர்ப்புற வளர்ச்சி திட்டத்தின் (TNSUDP) கீழ் UTISஐ அங்கீகரித்த (மே 2015) உலகவங்கியை நாடியது.

MS WindowS 2012 Enterprise பதிப்பை இயக்கு தளமாகவும், Microsoft SQL Server 2014 Enterprise பதிப்பை தரவு தளமாகவும், Microsoft Visual Studio 2013ஐ மென்பொருள் உருவாக்கும் கருவியாகவும் பயன்படுத்தி, இணைய அடிப்படையிலான மென்பொருளாக UTIS உருவாக்கப்பட்டது. அது, கட்டம் Iல் 12 தகவமைவுகள்[42] மற்றும் கட்டம் IIல் 17 தகவமைவுகள்[43] என இரண்டு கட்டங்களாக செயல்படுத்தப்பட்டது. கட்டம் Iன்தகவமைவுகள் செய்து முடிக்கப்பட்டு, செப்டம்பர் 2015 முதல் ஆகஸ்ட் 2017 வரையிலும், கோயம்புத்தூர் மாநகராட்சி நீங்கலாக, அனைத்து 134 ULBக்களிலும் படிப்படியாக செயல்படுத்தப்பட்டது. கட்டம் IIல்உள்ள தகவமைவுகள் தொடர்பான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன (டிசம்பர் 2018).

2.3.2 நிர்வாக அமைப்பு

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MAWS) துறையின் முதன்மை செயலர் அரசு அளவில் துறைத் தலைவராக உள்ளார். நகராட்சி நிர்வாக ஆணையர்

[41] பதினோரு மாநகராட்சிகள் (பெருநகர சென்னை மாநகராட்சி தவிர்த்து) மற்றும் 124 நகராட்சிகள்.

[42] பிறப்பு மற்றும் இறப்பு பதிவு, குடிமக்கள் வசதி மையம், குடிமக்கள் இணையதளம், நிதி கணக்குவைப்பு, குறை தீர்ப்ப, வரி அல்லாத இனங்கள், தொழில் வரி, சொத்து வரி, கணினி நிர்வாகம், வர்த்தக உரிமம், நிலத்தடி வடிகால் மற்றும் குடிநீர் வழங்கல்.

[43] நிகழ்ச்சி நிரல், சட்டமன்ற கேள்வி பதில்கள், சொத்து பதிவு, சொத்து மேலாண்மை, தணிக்கை, கட்டட அனுமதி, பணியாளர் சுய சேவை, மின்அலுவலகம், மருத்துவமனை மேலாண்மை, ஒருங்கிணைந்த பணியாளர் மேலாண்மை அமைப்பு முறை, சட்டம், கொள்முதல், பள்ளி மேலாண்மை, திடக்கழிவு மேலாண்மை, பொருள் இருப்பு, வாகன மேலாண்மை மற்றும் தொகுதிப் பணிகள்.

(CMA), பெருநகர சென்னை மாநகராட்சி நீங்கலாக, அனைத்து மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள் மீது நிர்வாக கட்டுப்பாட்டை கொண்டுள்ளார். அவருக்கு உதவியாக ஏழு[44] நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்கள் (RDMA) உள்ளனர்; ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாவட்டங்களிலுள்ள நகராட்சிகள் அவர்களது அதிகார வரம்பிற்குள் உள்ளன. ஒவ்வொரு நகராட்சிக்கும் ஒரு ஆணையர் தலைமையேற்கிறார். CMA அலுவலகத்தில் உள்ள தகவல் தொழில்நுட்பப் பிரிவு ஒரு கணினி பகுப்பாய்வாளர் மற்றும் இரண்டு உதவி செயல்முறையாளர்கள் தலைமைஏற்கின்றனர்; நகராட்சிகளில் அப்பிரிவை உதவி நிரலர்கள் மற்றும் தகவல் உள்ளீட்டாளர்கள் நிர்வகிக்கின்றனர்.

2.3.3 தணிக்கையின் நோக்கங்கள்

தணிக்கையின் நோக்கங்கள்:

- செயல்திறன், வெளிப்படைத்தன்மை மற்றும் நம்பகத்தன்மை ஆகியவற்றை உறுதி செய்யும் வகையில், ULBக்களின் அனைத்து சேவைகளையும் குடிமக்கள் எங்கிருந்தும் எந்நேரத்திலும் சேவை நிலையங்கள் மூலம் பெறக்கூடியதாக ஆக்குவது என்ற ULBக்களுக்கான ஒருங்கிணைந்த மின்னணு தீர்வின் குறிக்கோள் அடையப்பட்டதா;
- தரவு இடப்பெயர்வு, தனிப் பயனாக்கம் மற்றும் செயல் விதி இணைப்பு ஆகியவை சரியான முறையில் மேற்கொள்ளப்பட்டனவா; மற்றும்
- வன்பொருள் மற்றும் மென்பொருள்களின் கொள்முதல் தேவை அடிப்படையில் அமைந்ததா மற்றும் குடிமக்களுக்கு சேவைகள் தடையின்றி வழங்கப்படுகின்றனவா

என்பனவற்றை மதிப்பீடு செய்வதாகும்.

2.3.4 தணிக்கையின் அளவுகோல்கள்

தணிக்கையில் கண்டறியப்பட்டவை பின்வரும் ஆதாரங்களில் இருந்து பெறப்பட்ட அளவுகோல்களுடன் ஒப்பிடப்பட்டன:

- தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920;
- தமிழ்நாடு அரசின் நகராட்சிகள் கையேடு, பாகம் I&II;
- நகராட்சி கணக்குவைப்பு கையேடு;
- பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் (தொழில், வணிகம், பணி மற்றும் வேலை மீதான வரி வசூலிப்பு) விதிகள், 1999
- நகராட்சி திடக்கழிவு (மேலாண்மை மற்றும கையாளுதல்) விதிகள், 2000;
- தமிழ்நாடு அரசின் மின்னணு பாதுகாப்புக் கொள்கை, 2010;
- தகவல் தொழில்நுட்ப தேசியக் கொள்கை, 2012;

---

[44] செங்கல்பட்டு, மதுரை, சேலம், தஞ்சாவூர், திருநெல்வேலி, திருப்பூர் மற்றும் வேலூர்.

- CMA/RDMA வழங்கிய வழிகாட்டு நெறிமுறைகள்/சுற்றறிக்கைகள்/ அறிவுறுத்தல்கள்;
- அரசிதழில் வெளியிட்ட அறிவிப்புகள் மற்றும் நகராட்சிகளில் மன்ற தீர்மானங்கள்; மற்றும்
- கணினிக்குத் தேவையான விவரக்குறிப்பு (System Requirement Specification - SRS) மற்றும் செயற்பாட்டு கையேடுகள்.

2.3.5 தணிக்கையின் பரப்பு மற்றும் முறைமை

2013-18 காலகட்டத்திற்கான செயலாக்கத் தணிக்கை மார்ச் முதல் ஜூலை 2018 வரை நடத்தப்பட்டது. கட்டம் Iன் தகவமைவுகளை ஆய்வு செய்யும் பொருட்டு CMA மற்றும் தெரிவு செய்யப்பட்ட நகராட்சிகளில் ஆவணங்களின் ஆய்வு, துறை அளித்த UTISன் தரவுத்தளத்தில் (மார்ச் 2018 வரையானது) SQL வினாக்கள் மற்றும் தரவு பகுப்பாய்வு மென்பொருள் (Data Analysis Software - IDEA)[45] மூலம் செய்யப்பட்ட பகுப்பாய்வு ஆகியன தணிக்கையின் முறைமையில் அடங்கும். தரவுப் பகுப்பாய்விலிருந்து தணிக்கை கண்டறிந்தவற்றுக்கான தணிக்கை சான்றுகளை சேகரிப்பதற்காக அனைத்து 124 நகராட்சிகளிலிருந்தும் மாதிரிகள் தேர்ந்தெடுக்கப்பட்டன. சென்னை நீங்கலாக உள்ள 31 மாவட்டங்களுள் 25 விழுக்காடான எட்டு மாவட்டங்கள்[46], நான்கு மண்டலங்களிருந்தும் தலா இரண்டு மாவட்டங்கள் என்ற கணக்கில், IDEA மென்பொருளைக் கொண்டு தொடர்பற்ற மாதிரி (random sample) முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டன. தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் இருந்த மொத்தம் 42 நகராட்சிகளில் 33 விழுக்காடான 16 நகராட்சிகளில்[47] கையேட்டு ஆவணங்கள் ஆய்வு செய்யபட்டன. அனைத்து 124 நகராட்சிகளிலும் UTIS தரவுத்தளம் பகுப்பாய்வு செய்யப்பட்டது. 17 மே 2018ல் MAWS துறையின் அரசு முதன்மை செயலருடன் நடத்தப்பட்ட ஒரு நுழைவு கலந்தாய்வுக் கூட்டத்தில் தணிக்கையின் நோக்கங்கள், பரப்பு மற்றும் முறைமைகள் விவாதிக்கப்பட்டன. MAWS துறையின் முதன்மைச் செயலருடன் 26 அக்டோபர் 2018ல் ஒரு நிறைவு கலந்தாய்வு கூட்டம் நடத்தப்பட்டது. முதன்மைச் செயலர் தணிக்கை கண்டறிந்தவை அனைத்தையும் ஏற்றுக் கொண்டு, தணிக்கை சுட்டிக்காட்டிய குறைபாடுகளுக்கான தீர்வு நடவடிக்கைகளை எடுக்குமாறு CMAவிற்கு உத்தரவிட்டார்.

ஒப்புகை

தணிக்கை நடத்துவதில் CMA மற்றும் ULBக்களின் அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் அளித்த ஒத்துழைப்பை தணிக்கை பதிவு செய்கிறது.

---

45 உள்ளீட்டு தரவு பிரித்தெடுத்தல் மற்றும் பகுப்பாய்தல் (IDEA) என்ற தணிக்கையின் பயன்பாட்டு மென்பொருள்.

46 ஈரோடு, காஞ்சிபுரம், மதுரை, தஞ்சாவூர், நீலகிரி, திருவாரூர், சிவகங்கை மற்றும் வேலூர்.

47 அனகாபுத்தூர், அரக்கோணம், ஆற்காடு, பவானி, குன்னூர், கோபிசெட்டிப்பாளையம், காரைக்குடி, கும்பகோணம், மன்னார்குடி, பல்லவபுரம், பம்மல், திருமங்கலம், திருப்பத்தூர், திருவாரூர், உதகமண்டலம் மற்றும் வாலாஜாப்பேட்டை.

தணிக்கை கண்டறிந்தவை

2.3.6 திட்டத்தின் விளைவு

மையப்படுத்தப்பட்ட மின்ஆளுகை பயன்பாடுகள் மூலம் குடிமக்கள் சேவை வழங்கலை மேம்படுத்துவதே ULBக்களில் மின்ஆளுகை மேம்பாட்டின் நோக்கமாகும். UTIS, (i) நகராட்சிகளின் தனித்தனி தரவுத்தளங்களை மையப்படுத்தப்பட்ட ஒற்றை தரவுத்தளமாக ஒருங்கிணைத்தல், (ii) இந்த நகர்ப்புற திரட்சிகளில் வாழும் மக்கள் தகவல் பெறுதல் மற்றும் வரி/வரிஅல்லாத பணம்செலுத்துதல் ஆகியவற்றை எளிதாக்குதல் மற்றும் (iii) சேவைகளுக்கான கோரிக்கைகளின் தற்போதைய நிலையை அறிய உதவுதல் ஆகிய விளைவுகளை தந்தது. ULBக்களின் அனைத்து நிலை அலுவலகங்களிலும் தகவல்களின் தடையற்ற பரிமாற்றத்திற்கு UTISல் வசதிகள் இருந்தாலும், அவை பயன்படுத்தப்படாததன் விளைவாக, குடிமக்களுக்கு நகராட்சி சேவைகளை வழங்குவதில் தாமதம் ஏற்படுகிறது என்பதை தணிக்கையின் பகுப்பாய்வு வெளிப்படுத்தியது. மேலும், இணைய வழியாக மட்டுமே வசூலிப்பதற்கான அறிவுறுத்தல்கள் இருந்தபோதிலும், தொழில் வரியில் இரண்டு விழுக்காடு, வர்த்தக உரிமக் கட்டணத்தில் ஒரு விழுக்காட்டிற்கும் குறைவு என்ற அளவில் மட்டுமே இணையதளம் மூலமாக பெறப்பட்டது. ‘எங்கும் எப்பொழுதும்’ கட்டணம் செலுத்துலாம் என்பதற்கான பரந்த விளம்பரம் இல்லாததை இது சுட்டிக்காட்டுகிறது.

திட்டமிடல், தகவமைவுகளின் செயல்பாடுகள் மற்றும் சேவைகள் வழங்கப்படுவதன் மீதுபல்வேறு அதிகார படிநிலைகளில் கண்காணிப்பு ஆகியவற்றில் காணப்பட்ட குறைபாடுகள் பின்வரும் பத்திகளில் விவாதிக்கப்படுகின்றன.

2.3.7 திட்டமிடல்

2.3.7.1 பொதுவில் விலையின்றி கிடைக்கும் மென்பொருளுக்கு மாறாக விலையுடன் கூடிய மென்பொருளை (தனியுரிம மென்பொருள்) பயன்படுத்தியமை

விலையுடன் கூடிய மென்பொருள் (Closed Source Software) (CSS) என்பது ஒரு நபர்/நிறுவனத்துக்கு சொந்தமான, உரிம ஒப்பந்தத்தின்படி அனுமதிக்கப்பட்ட பயனாளர்களுக்கு வழங்கப்படும் ஒரு மென்பொருள் ஆகும். அது இயக்கு தள சார்பும் உரிமத்தை புதுப்பிப்பதற்கான தொடர் செலவையும் கொண்டது. பொதுவில் கிடைக்கும் விலையில்லா மென்பொருள் (Open Source Software) (OSS) உரிமத் தொகை அற்றது; விற்பனையாளரின் கால வரையறையை தடுப்பதற்கும், பயனாளர் உரிமம் என்ற தேவையற்ற செலவு மற்றும் தொடர் பொறுப்புகள் ஆகியன அதில் இல்லை.

மாநில அரசுக்கு மின் ஆளுகையில் துணைபுரியும் தேசிய தகவல் மையம் (NIC), மையப்படுத்தப்பட்ட வலை அடிப்படையிலான பயன்பாட்டு மென்பொருளை உருவாக்குவதற்கு உரிமத்தொகையற்ற OSSஐ பயன்படுத்துமாறு CMAவிற்கு அறிவுறுத்தியது (நவம்பர் 2010). மேலும், தேசியதகவல் தொழில்நுட்ப கொள்கை 2012, பொதுவாக உள்ள தரங்களை ஏற்றுக் கொள்வது மற்றும் பொதுவில் கிடைக்கும், பொதுவான தொழில்நுட்பங்களை பின்பற்ற வேண்டும்என கூறுகிறது.

மென்பொருளை வாங்குவது தொடர்பான முன்மொழிவிற்கான கோரிக்கை (RFP) (அக்டோபர் 2013), தமிழ்நாடு அரசு மற்றும் இந்திய அரசு அவ்வப்போது வெளியிட்ட வழிகாட்டுநெறிகள் கூறும் பயன்பாட்டு மென்பொருள் மற்றும்

தரவுகளுக்கான மின்ஆளுமை தரங்கள் அனைத்தையும் விற்பனையாளர் பின்பற்றவேண்டும் என தெரிவித்தது. இதற்கு முரணாக, CMA (அ) பயன்படுத்தி இரண்டு ஆண்டு உரிமம் கொண்ட CSSஐ[48] ₹ 2.96 கோடி செலவில் கொள்முதல் செய்து (ஏப்ரல் 2014) UTISஐ செயல்படுத்தினார்; (ஆ) ஏப்ரல் 2016 முதல் உரிமத்தை புதுப்பிக்காமலே CSSஐ பயன்படுத்தி வருகிறார். OSSக்கு மாறாக CSSஐ பயன்படுத்தியது RFP மற்றும் தேசிய கொள்கைக்கு முரணானது. இதனால், ₹ 2.96 கோடி தவிர்த்திருக்கக்கூடிய செலவு ஏற்பட்டது. மேலும், உரிமத்தை புதுப்பிக்காமல் முக்கியமான கணினி அமைப்பை பராமரிப்பது செயல்பாட்டு தொடர்ச்சிக்கு இடையூறு விளைவிக்கக்கூடிய சட்டச்சிக்கல்களையும் உருவாக்கும். ஏப்ரல் 2018லிருந்து ஆண்டுக்கு ₹ 1.73 கோடி செலவில் உரிமத்தை புதுப்பிக்க கணினி ஒருங்கிணைப்பாளர் கோரினார் (ஜூலை 2018); இது, CMAவிற்கு தவிர்த்திருக்கக்கூடிய தொடர் பொறுப்புகளை உருவாக்கியது.

திட்டத்தின் இரண்டு கட்டங்களும் முடிக்கப்பட்ட பிறகு CSSலிருந்து OSSக்கு மாறுவதற்கு ஒரு விரிவான ஆய்வு மேற்கொள்ளப்படும் என CMA மறுமொழி அளித்தார் (டிசம்பர் 2018). NICயிடமிருந்தும், தேசிய கொள்கையிலும், OSSஐ பின்பற்ற வேண்டும் என தெளிவான வழிகாட்டுநெறிகள் இருந்த போதிலும் CSSஐ தேர்ந்தெடுத்தது, உரிமங்களை புதுப்பிப்பது தொடர்பாக தொடர் பொறுப்பை உருவாக்கியது.

2.3.7.2 பேரிடர் மீட்பு

தமிழ்நாடு அரசின் மின்னணு பாதுகாப்பு கொள்கை 2010ன்படி, இயற்கை அல்லது மனிதனால் உருவாக்கப்பட்ட பேரழிவுகளிலிருந்து அரசின் முக்கிய செயல்பாடுகளுக்கு இடையூறு ஏற்படுவதை தடுக்கவும், இயல்பான செயல்பாடுகளை ஒரு காலவரையறைக்குள் மீட்டெடுக்கவும், எதிர்பாரா நிலைக்கான திட்டமிடல் பயன்படுத்தப்படுகிறது. முக்கிய தகவல்கள், ஏற்படக்கூடிய அபாயங்கள், கட்டுப்பாடுகள், கணினி அமைப்பு இயங்கும் சூழல், பங்கு மற்றும் பொறுப்புகள் ஆகியவற்றை வரையறுத்தல், முக்கிய தகவல் காப்புகளை ஏற்படுத்துதல், தடுப்பு நோக்கத்துடனான பராமரிப்பையும் சரியான மீட்பு உத்திகளையும் தீர்மானித்தல் என்பன அத்திட்டத்தில் அடங்கும். எந்த ஒரு தவறான நிகழ்விலும் சேவைகள் இடைவெளி இன்றி மீண்டும் தொடங்கப்படுவதற்கு உதவும் வகையில், செயல்பாட்டு தொடர்ச்சி கொள்கையும் பேரிடர் மீட்பு திட்டமும் பயனுள்ளதாக இருக்கவேண்டும்.

மாநில தரவு மையத்திலுள்ள தரவுகளை அவ்வப்போது காப்புப்பிரதிகள் எடுத்து அவற்றை புரவலர் கணினிகளில் சேமிப்பதை தவிர பேரிடர் மீட்புக்காக வேறு ஒரு வகுக்கப்பட்ட திட்டம் இருக்கவில்லை என்பதை தணிக்கை செய்த கூர்ந்தாய்வு வெளிப்படுத்தியது. பேரிடர் மீட்பு தளத்தை அடையாளம் காணாததால் இது ஏற்பட்டது. அதன்படி, பேரிடர் மீட்பு நடவடிக்கைகளுக்காக ₹ 5.42 கோடி செலவில் கொள்முதல் செய்யப்பட்ட (ஏப்ரல் 2014) சர்வர்கள், மென்பொருள் மற்றும் உட்கட்டமைப்புகள் நான்கு ஆண்டுகளுக்கு மேல் பயன்படுத்தப்படாமல் இருந்தன. பேரிடர் மீட்பு நடவடிக்கைகளுக்காக ₹ 2.62 கோடி செலவில் கொள்முதல் செய்யப்பட்ட உரிமம் பயன்படுத்தப்படாமல் ஏப்ரல் 2016ல் காலாவதி ஆகி, அச்செலவு பயனற்றதாக ஆனது.

திருச்சியில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ள பேரிடர் மீட்பு தளத்தில் அனைத்து வன்பொருட்களும் நிறுவப்படும் என CMA மறுமொழி அளித்தார் (டிசம்பர் 2018).

48 MS SQL 2014-தொடர்புடைய தரவுத் தள மேலாண்மை அமைப்புமுறை.

எனினும், ஒரு தவறான நிகழ்வின்போது UTISன் செயல்பாட்டு தொடர்ச்சி பேரிடர் மீட்பு திட்டத்தையே சார்ந்திருப்பதால், வன்பொருட்களை கொள்முதல் செய்வதற்கு முன்னர் பேரிடர் மீட்பு தளத்தை முடிவு செய்திருக்க வேண்டும். வன்பொருட்களை அமைக்காதது மின்னணு பாதுகாப்பு கொள்கை பின்பற்றப்படவில்லை என்பதை காட்டியது.

2.3.7.3 தொழில் வரி தகவமைவு மற்றும் வணிக உரிம தகவமைவு இணைக்கப்படாமை

தொழில் வரி ULBக்களின் வருமானத்திற்கான ஒரு முக்கிய வருவாய் ஆதாரமாகும் (12 விழுக்காடு). தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920ன்படி, நிறுவனங்கள் தங்கள் தொழில்களை தொடர்புடைய ULBக்களிடம் பதிவு செய்ய வேண்டும். ஒரு நிறுவனம்/நபர் பதிவு செய்யப்படாத நிலையில், அதற்குண்டான தொழில் வரி கோரிக்கையை கணினி அமைப்பு உருவாக்க இயலாது. தொழில் வரி மற்றும் வணிக உரிமதகவமைவுகளை ஒருங்கிணைப்பதன் மூலம், அனைத்து வணிக உரிமதாரர்களும் தொழில் வரி செலுத்துவதை உறுதி செய்யமுடியும்.

சோதனை ஆய்வு செய்யப்பட்ட 16 நகராட்சிகளுள் ஏழு நகராட்சிகளில், வணிக உரிமங்கள் வழங்கப்பட்ட வணிகர்கள் தொழில் வரி செலுத்தவில்லை. இவ்வாறு, குறைந்தபட்ச வீதத்தின் அடிப்படையில் தணிக்கை கணக்கிட்ட ₹ 28.34 இலட்சம் வருவாய் ஈட்டப்படாமல் இருந்தது (**இணைப்பு 2.14**).

ஒருங்கிணைப்பு மார்ச் 2019க்குள் முடிக்கப்படும் என CMA தெரிவித்தார் (டிசம்பர் 2018).

2.3.7.4 திட்டத்தை முடிப்பதில் காலதாமதம்

ஒப்பந்த விதிமுறைகளின்படி (பிப்ரவரி 2014), UTISஐ ஆகஸ்ட் 2015க்குள் நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டது. எனினும், மாநில தரவு மையத்தில் இடம் கிடைக்காதது, 2016 சட்டமன்ற தேர்தல், பயிற்சி மையங்கள் கிடைக்காதது, வார்தா புயல் போன்றவற்றை காரணம் காட்டி, கணினி ஒருங்கிணைப்பாளர் கால நீட்டிப்பு கோரினார். அதன்படி, ஓராண்டு உத்தரவாத காலம் உட்பட ஜூலை 2019 வரை திட்டகாலம் நீட்டிக்கப்பட்டது (ஜூலை 2018). திட்டத்தை முடிப்பதற்கென குறிப்பிடப்பட்ட தேதிக்குப் பிறகு, சேவை வரி விகிதத்தை ஜூன்/நவம்பர் 2015 முதல் 12.36 விழுக்காட்டிலிருந்து 14.50 விழுக்காடு என உயர்த்தியதால் எழும் வித்தியாச தொகை மற்றும் ஜூலை 2017ல் அறிமுகமான சரக்கு மற்றும் சேவைகள் வரி (GST) என்ற வகைகளில் ₹ 57.94 இலட்சம் தொகையை கணினி ஒருங்கிணைப்பாளர் கோரினார். இதில், செப்டம்பர் 2018 அன்றுள்ளவாறு, ₹ 14.95 இலட்சம் கொடுக்கப்பட்டது; மீதமுள்ள ₹ 42.99 இலட்சம் கொடுக்கப்பட வேண்டியுள்ளது.

பாராளுமன்ற/உள்ளாட்சி தேர்தல்களுக்கு பணியாளர்கள் மாற்றம் செய்யப்பட்டது, தமிழ்நாடு மாநில தரவு மையத்தில் (TNSDC) சர்வர்களை அமைக்க இடம் ஒதுக்குவதில் தாமதம் மற்றும் டிசம்பர் 2015ல் ஏற்பட்ட வெள்ளம் ஆகியவற்றை தாமதத்திற்கு காரணமாக CMA கூறினார் (டிசம்பர் 2018). சர்வர்களை அமைக்கும் இடம் ஒப்பந்தம் வழங்கும் நேரத்தில் அடையாளம் காணப்பட்டிருக்க வேண்டும் மற்றும் டிசம்பர் 2015ல் ஏற்பட்ட வெள்ளம், வார்தா புயல், தேர்தல்கள் போன்றவை திட்டத்தை முடிப்பதற்கென குறிப்பிடப்பட்ட நாளுக்குப் பிறகே ஏற்பட்டன என்பதால் இம்மறுமொழி ஏற்கத்தக்கதல்ல. மேலும், பணியாளர்கள் மாற்றம் செய்யப்பட்டது என்பது ஒரு நேர நிகழ்வு மட்டுமே என்ற நிலையில்,திட்டத்தில் ஏற்பட்ட தாமதம் மூன்றாண்டுகளுக்கும் மேல் இருந்தது.

2.3.7.5 குடிமக்களுக்கானதளத்தில் எங்கும் எப்போதும் சேவைகள்' வழங்கப்படாமை

துறையினருடன் குறைவான தொடர்பு, பிற துறைகளுடன் இடை முகப்பை உருவாக்குதல், துறைசார் நடைமுறைகளை எளிதாக்குதல் மற்றும் சேவைகளை எங்கும் எப்போதும் பொதுமக்களுக்கு வழங்குதல் ஆகிய தன்மைகளுடன், சேவைகளை குடிமக்களுக்கு விரைந்து வழங்குவது UTISன் குறிக்கோள் ஆகும். இதனை அடைவதற்காக, குறைகளை உட்பட பொதுமக்களின் கோரிக்கைகளை பெறுவதற்கு UTISல் குடிமக்கள் இணையதளம் (CWP) உருவாக்கப்பட்டது. வரி செலுத்தல், வரி கணக்கீடு, பிறப்பு/இறப்பு சான்றிதழ்களை அச்சிடுதல் போன்ற பொது சேவைகளை வழங்குவதற்கான ஒரு தளமாக CWP செயல்பட்டது.

பொதுவான சேவைகளை மட்டுமே CWP வழங்கியது என்பதை தணிக்கை கண்டது. கட்டாய ஆவணங்களை மேலேற்றுவதன் மூலம் புதிய சொத்துக்களுக்கான சொத்து வரியை மதிப்பீடு செய்தல், சொத்துக்களில் பெயர் மாற்றம், புதிய குடிநீர் இணைப்புகள், வணிக உரிமங்கள் போன்றவற்றுக்கான விண்ணப்பத்தை தாக்கல் செய்தல் போன்றமுக்கிய சேவைகளை UTISன் CWP தகவமைவில் சேர்க்க திட்டமிடப்படவில்லை என்பதால், அதற்கான வசதிகள் குடிமக்களுக்கு வழங்கப்படவில்லை. CWP குறைவான சேவைகளையே வழங்கியதால், குடிமக்கள் சேவைகளைப் பெறநகராட்சியை நாடிச் செல்ல வேண்டியிருந்தது. இவ்வாறு, ‘எங்கும் எப்போதும் சேவைகள்’ என்ற குறிக்கோள் எய்தப்படவில்லை.

CMA, ‘செயல்பாட்டில் எளிமை’ என்பது CWPயில் இணைக்கப்பட்டுள்ளது என்றும், அதனால் ‘எங்கும் எப்போதும் சேவை’ என்ற நிலை உருவாக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார் (டிசம்பர் 2018). எனினும், cwpவின் மீதான கூர்ந்தாய்வு (ஜனவரி 2019), அது தொடர்ந்து பொதுவான சேவைகளை மட்டுமே வழங்கி வந்ததை வெளிப்படுத்தியது.

2.3.7.6 குறை தீர்ப்பு முறைமையில் பயனாளர்க்கு எளிதான இடைமுகப்பு இல்லாமை

CWP மற்றும் குடிமக்கள் வசதி மையங்கள் (Citizen Facilitation Centres) (CFC) மூலம் குடிமக்கள் தங்கள் குறைகளை பதிவு செய்ய வசதியாக, குறை தீர்ப்பு முறைமையை (Grievance Redressal System) (GRS) UTIS அறிமுகப்படுத்தியது. ULBல் குறைகளை கவனிப்போர் குடிமக்கள் சாசனத்தில் CMA வரையறுத்துள்ள காலக்கெடுவிற்குள் புகார் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும். GRS, குடிமக்கள் குறைகளைப் பதிவு செய்யவும், குறைகளின் நிலைமையை அறியவும் உதவி செய்து, குறைகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை மின்னணு ஊடகம் வழியாக தெரிவிக்கிறது.

UTIS பல்லவபுரம் நகராட்சியில் சோதனை முறையில் செயல்படுத்தப்பட்டு, செப்டம்பர் 2015ல் முழு அளவிலான பயன்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டது. மூன்றாம் நபரால் உருவாக்கப்பட்ட மென்பொருளில், தொலைபேசி வழியாக பெறப்பட்ட பொதுமக்களின் புகார்களை பதிவு செய்வதற்காக, ஒரு கட்டணமில்லா புகார் பிரிவு இருந்தது. செப்டம்பர் 2015 முதல் மார்ச் 2018 வரையிலான காலகட்டத்தில், UTISன் GRSல் 97 புகார்கள் பதிவு செய்யப்பட்டதற்கு எதிராக, புகார் பிரிவில் மொத்தம் 27,152 புகார்கள் பதிவு செய்யப்பட்டன. புகார் பிரிவு மற்றும் GRS மூலமாக பெறப்பட்ட புகார்கள், ஒவ்வொரு நாளும் துறைவாரியாக பிரித்தெடுக்கப்பட்டு, அச்சுப்பிரதிகள் ULBக்களின் தொடர்புடைய பிரிவுகளுக்கு

நடவடிக்கைக்காக ஒப்படைக்கப்பட்டன. புகார்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரங்களை கணினி அமைப்பில் சேர்ப்பதற்காக அவை புகார் பிரிவுக்கு தெரிவிக்கப்பட்டன. நீண்ட காலமாக நிலுவையிலுள்ள புகார்கள் தீர்வுக்காக தொடர்புடைய துறைகளுக்கு குறிப்பிட்ட கால இடைவெளியில் அனுப்பப்படுகின்றன. GRS தகவமைவுக்கான கணினிக்குத் தேவையான விவரக்குறிப்புகளில் (SRS) கட்டணமின்றி புகார் பதிவு செய்யும் வசதி இல்லாததால், புகார்களை பதிவு செய்யும் ஒரு பயனாளர்கு எளிதான இடைமுகப்பு குடிமக்களுக்கு இல்லாமல் போனது. UTISன் GRS தகவமைவில் கட்டணமில்லா புகார் வசதியை சேர்த்திருந்தால், புகார் பிரிவை பராமரிப்பதற்கு செய்யப்பட்ட ஆண்டுக்கு ₹ 15 இலட்சம் என்ற அளவிலான தொடர் செலவினை நகராட்சி தவிர்த்திருக்க முடியும்.

CWPக்குக் கூடுதலாக, மின்னஞ்சல், குறுஞ்செய்தி சேவைகள் மற்றும் கட்டணமில்லா புகார் வசதி மூலம் குறை தீர்ப்பு முறைமை செயல்படுத்தப்படும் என CMA தெரிவித்தார் (டிசம்பர் 2018).

2.3.7.7 தாமதமாக பணம் செலுத்துவதற்கான வட்டியை வசூலிக்க வழிவகை இல்லாமை

தொழில், வணிகம், பணி, வேலை ஆகியவற்றின் மீது அரையாண்டு அடிப்படையில் வரி விதிக்கவும், பணம் செலுத்தவேண்டிய கெடுநாட்களுக்கு பிறகும் செலுத்தப்படாத வரித்தொகை மீது, அது நிலுவையாக இருந்த மொத்த காலத்திற்கும் மாதத்திற்கு ஒரு விழுக்காடு என்ற அளவிற்கு மிகாமல் வட்டி விதிக்கவும் ULBக்களுக்கு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920ன் பிரிவு 124 அதிகாரம் அளிக்கிறது. தொழில் வரியை தாமதமாக செலுத்துவதற்கான வட்டியை தானியங்கி முறையில் கணக்கிட்டு விதிப்பதற்கான ஏற்பாடு செயல்பாட்டு விதியாக UTIS பயன்பாட்டு மென்பொருளில் சேர்க்கப்படவில்லை.

சோதனை ஆய்வு செய்யப்பட்ட 16 நகராட்சிகளுள் ஒன்பதில்[49] உள்ள 22 நிறுவனங்கள் தொழில் வரியை இரண்டு முதல் ஆறு மாத தாமதத்துக்கு பின் செலுத்தின. இதற்கு வட்டி வசூலிக்கப்பட வேண்டியிருந்தாலும், அது விதிக்கப்படவில்லை; 2016-17ஆண்டில், தொழில் வரி நிலுவையான ₹ 8.45 கோடி தொகை மீது ஒரு விழுக்காடு என்று கணக்கில் மாநிலத்திலுள்ள நகராட்சிகள் ஈட்டத்தவறிய வட்டி தொகை ₹ 8.45 இலட்சம் ஆகும்.

வட்டி விதிப்பிற்கான ஏற்பாடு கணினி அமைப்பில் இணைக்கப்படும் என CMA தெரிவித்தார் (டிசம்பர் 2018).

2.3.7.8 UTISல் ஒப்பந்த விவரங்கள் கைப்பற்றப்படாமை

வரி அல்லாத வருவாய் என்பது ULBக்களின் சொத்துக்களின் குத்தகை/வாடகை மூலம் கிடைக்கும் வருவாய் ஆகும். வரி அல்லாத வருவாய்க்கான தகவமைவு, குத்தகைதாரரின் பெயர், செலுத்த வேண்டிய, வசூலிக்கப்பட்ட மற்றும் மீத தொகைகள், குத்தகைக் காலம் ஆகிய விவரங்களை பெறுகிறது. ஒப்பந்த தேதி, அபராதத்திற்கான நிபந்தனைகள் ஆகியவற்றை அது பெறவில்லை. தமிழ்நாடு அரசின் நகராட்சி கையேடு பாகம் IIன் பத்தி 4.100 மற்றும் அரசு ஆணைகள் (ஜனவரி 1994) ஆகியவற்றின்படி, ULBக்கள் குத்தகை உறுதியானவுடன் குத்தகைதாரர்களுடன் ஒரு பத்திரம்/ஒப்பந்தத்தை உருவாக்கவும், குத்தகை

[49] குன்னூர், கோபிசெட்டிப்பாளையம், கும்பகோணம், பல்லவபுரம், பம்மல், திருமங்கலம், திருப்பத்தூர், உதகமண்டலம் மற்றும் வாலாஜாப்பேட்டை.

வாடகையை தாமதமாக செலுத்தினால் ஆண்டுக்கு 18 விழுக்காடு அபராத வட்டி வசூலிக்கவும் வேண்டும்.

சோதனை ஆய்வு செய்யப்பட்ட 16 நகராட்சிகளில் இருந்த 6,857 குத்தகை கோப்புகளுள் 1,074 கோப்புகள் மீதான கூர்ந்தாய்வு, 900 நேர்வுகளில் ஒப்பந்தங்கள்/பத்திரங்கள் உருவாக்கப்படாதது, 136 பத்திரங்கள் இரு தரப்பினராலும் ஒப்பமிடப்படாதது, 17 பத்திரங்களில் குத்தகைதாரர் வெறுமையான நீதித்துறை சாராத முத்திரைத்தாளில் கையொப்பம் இட்டிருந்தது மற்றும் ஒரு நேர்வில் நீதித்துறை சாராத முத்திரைத்தாளில் ஒப்பந்தம் அங்கீகாரம் இன்றி எழுதப்பட்டு இருந்தது ஆகியவற்றை வெளிப்படுத்தியது. அபராதம் உள்ளிட்ட ஒப்பந்த விவரங்களை கட்டாயமாக UTISல் சேர்த்தால், தாமதமான தொகை செலுத்த நேர்வில் அது தானாகவே அபராதத்தை விதிக்கும்; அது மேலும், ஒப்பந்தங்கள் இன்றி சொத்துக்களை குத்தகைக்கு விடுவதையும் ஒப்பந்தங்களில் விவரங்கள் விடுபடுவதையும் தடுக்கும்.

ஒப்பந்த விவரங்களை கணினி அமைப்பில் பெறும் வசதி ஏப்ரல் 2019 முதல் அமைப்பில் இணைக்கப்படும் என CMA தெரிவித்தார் (டிசம்பர் 2018).

2.3.8 நடைமுறைப்படுத்துதல்

2.3.8.1 பொதுவானவை

UTISன் கட்டம் Iன் தகவமைவுகள் செப்டம்பர் 2015 முதல் ஜூலை 2017 வரையிலான காலகட்டத்தில் அனைத்து நகராட்சிகளிலும் படிப்படியாக பயன்பாட்டுக்கு வந்தன. பயன்பாட்டு மென்பொருள் மற்றும் தரவுத்தளத்தில் காணப்பட்ட முரண்பாடுகள் மற்றும் குறைபாடுகள் பின்வரும் பத்திகளில் விவாதிக்கப்படுகின்றன.

(i) குடிமக்கள் வசதி மையங்களில் கிடைக்கும் குறைந்த அளவிலான சேவைகள்

ULBக்கள், தமது நிர்வாகத்திற்கும் பொதுமக்களுக்கும் இடையே ஒரு இடைமுகப்பாக பல சேவைமுகப்புகளுடன் கூடிய குடிமக்கள் வசதி மையங்களை (CFC) நிறுவின. நகராட்சி சேவைகளை பெறுவதற்காக குடிமக்களின் அனைத்து வகையான கோரிக்கைகளையும் ஏற்க இது ஒரு வழியாக கருதப்பட்டது. சோதனை ஆய்வு செய்யப்பட்ட 16 நகராட்சிகளில் அமைக்கப்பட்ட 49 சேவைமுகப்புகளில்[50] 38 நகராட்சி அலுவலக வளாகத்திலும், 11 வளாகத்திற்கு வெளியிலும் அமைக்கப்பட்டன.

அவற்றுள், 19 சேவைமுகப்புகளில் அனைத்து சேவைகளும் வழங்கப்பட்டன; மீதமுள்ள 30 சேவைமுகப்புகள்[51] சொத்து வரி, குடிநீர் கட்டணங்கள், பாதாள சாக்கடை கட்டணங்கள் போன்றவற்றுக்கான தொகைகளை பெறும் வசூலிப்பு மையங்களாக மட்டுமே செயல்பட்டன. அனைத்து சேவைகளையும்

[50] அனகாபுத்தூர் (2), அரக்கோணம் (2), ஆற்காடு (2), பவானி (3), குன்னூர் (2), கோபிசெட்டிப்பாளையம் (3), காரைக்குடி (4), கும்பகோணம் (6), மன்னார்குடி (3), பல்லவபுரம் (7), பம்மல் (2), திருமங்கலம் (2), திருவாரூர் (3), திருப்பத்தூர் (2), உதகமண்டலம் (4) மற்றும் வாலாஜாப்பேட்டை (2).

[51] அனகாபுத்தூர் (1), அரக்கோணம் (1), ஆற்காடு (1), பவானி(2), குன்னூர்(1), கோபிசெட்டிப்பாளையம் (2), காரைக்குடி (3), கும்பகோணம் (4), மன்னார்குடி (2), பல்லவபுரம் (4), பம்மல் (1), திருமங்கலம் (1), திருவாரூர் (2), திருப்பத்தூர் (1), உதகமண்டலம் (3) மற்றும் வாலாஜாப்பேட்டை (1).

வழங்குவதற்கான ஒரே மென்பொருள் அனைத்து சேவைமுகப்புகளிலும் இருந்தபோதிலும், 30 சேவை முகப்புகள் குறைந்த அளவிலான சேவைகளை மட்டுமே வழங்கின. இது UTIS அமைப்புமுறையின் குறிக்கோளுக்கு எதிரானதாகும்.

தணிக்கை கண்டறிந்தவற்றை உரிய காலத்தில் நடைமுறைப்படுத்தும் பொருட்டு கருத்தில் கொள்ளப்படும் என CMA மறுமொழி அளித்தார் (டிசம்பர் 2018).

(ii) *ஆவணங்கள் கணினிமயமாக்கப்படாமை*

ஸ்கேன் செய்து கணினி அமைப்பு முறையில் பதிவேற்ற வேண்டிய ஆவணங்களை CFC தகவமைவு காட்ட வேண்டும் என SRS கூறியது. மைய களஞ்சியத்தில் சேகரித்து வைத்து எதிர்காலத்தில் எந்நேரத்திலும் சரிபார்க்கும் பொருட்டு, ஸ்கேன் செய்யப்பட்ட ஆவணங்கள் கணினிமயமாக்கப்படுகின்றன.

ஸ்கேன் கருவிகள் மற்றும் தேவையான மென்பொருள் ULBக்களுக்கு வழங்கப்பட்டிருந்தும், கட்டாய ஆவணங்கள் ஸ்கேன் செய்யப்படவும் கணினியில் பதிவேற்றப்படவும் இல்லை. மேலும், சோதனை சரிபார்ப்பு செய்யப்பட்ட நகராட்சிகளில், 2017-18 ஆண்டுக்குரிய 272 விண்ணப்பங்களின் மீதான தொடர்பற்ற சோதனை, அவற்றில் கட்டாய விவரங்கள் அதாவது, தளவாரியான பரப்பு (134 விண்ணப்பங்கள்), கட்டடத்தின் பயன்பாடு (119 விண்ணப்பங்கள்), கட்டடத்தின் தன்மை (131 விண்ணப்பங்கள்), கட்டடம் கட்டப்பட்ட ஆண்டு (235 விண்ணப்பங்கள்), நிரப்பப்படவில்லை என்பதை காட்டியது. மேலும், சரிபார்ப்பு பட்டியலின்படியான தொடர்புடைய ஆவணங்கள், அதாவது, வரி நிலுவையை செலுத்தியதற்கான ரசீது (147 விண்ணப்பங்கள்) மற்றும் விற்பனை பத்திரங்கள் (122 விண்ணப்பங்கள்), இணைக்கப்படவில்லை. மேலும், 21 விண்ணப்பங்களில் விண்ணப்பதாரர்களின் கையொப்பம் இருக்கவில்லை. தகவல் உள்ளீட்டு கட்டுப்பாடுகளை அமைக்க தவறியதால், ஸ்கேன் செய்யப்பட்ட ஆவணங்கள் பதிவேற்றப்படாமல் விண்ணப்பங்கள் பெறப்பட்டன. இது, நடைமுறைகளை நெறிப்படுத்துதல், பணிப்பாய்வு தரவுத்தளத்தில் உள்ள தரவுகளின் சரித்தன்மையை சோதித்தல் மற்றும் வருங்கால பார்வைக்காக கட்டாய ஆவணங்களை கணினிமயமாக்கல் எனும் குறிக்கோள்களை முறியடித்தது.

ஆவணங்களை ஸ்கேன் செய்து பதிவேற்ற ULBக்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன CMA மறுமொழி அளித்தார் (டிசம்பர் 2018).

(iii) *குறை தீர்ப்பு தகவமைவு பயன்படுத்தப்படாமை*

சோதனை ஆய்வு செய்யப்பட்ட 16 நகராட்சிகளுள் நான்கில்[52], பல்வேறு சேவைகளுக்காக குடிமக்களிடமிருந்து பெறப்பட்ட புகார்கள் தொடர்பான பதிவுகள் UTISன் தரவுத்தளத்தில் கிடைக்கவில்லை என்பது GRSதகவமைவு மூலம் புகார்கள் பதிவு செய்யப்படவில்லை என்பதை காட்டியது. மீதமுள்ள 11 நகராட்சிகளில் (பல்லவபுரம் நகராட்சி நீங்கலாக), ஜனவரி 2018 முதல் மார்ச் 2018 வரையான காலகட்டத்தில், கைமுறையாக 360 புகார்கள் பதிவு செய்யப்பட்ட நிலையில், GRS தொகுதியில் சராசரியாக மாதத்திற்கு இரண்டு புகார்கள் மட்டுமே பதிவு செய்யப்பட்டன. இதன் விளைவாக, தெரு விளக்குகள் செயல்படாதது, குப்பை அகற்றுதல், வடிகால் நிரம்பி வழிதல், நாய்கள் தொந்தரவு போன்ற புகார்கள் நான்கு நகராட்சிகளில் (ஆற்காடு, மன்னார்குடி, திருவாரூர்

---

52 அரக்கோணம், குன்னூர், காரைக்குடி மற்றும் வாலாஜாப்பேட்டை.

மற்றும் வாலாஜாப்பேட்டை) தொடர்ந்து கையேட்டு பதிவேடுகளில் பதிவு செய்யப்பட்டன. கைமுறையாக பதிவு செய்யப்பட்ட 360 புகார்களின் கூர்ந்தாய்வு, புகார்களை பெற்றதற்கு ஒப்புகை வழங்காமை, எடுத்த நடவடிக்கைகளின் விவரங்களை பதிவு செய்யாமை, தொலைபேசி மூலம் பெறப்பட்ட புகார்கள் பதிவு செய்யாமை போன்ற குறைபாடுகள் இருந்ததை வெளிப்படுத்தியது.

குடிமக்கள் சேவை மையங்கள் உள்ளிட்ட முக்கிய இடங்களில் விளம்பரப்படுத்த வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் UTISல் உள்ள தகவமைவுகள் செயல்படுத்தப்படும் என்றும் நகராட்சிகள் மறுமொழி அளித்தன (ஆகஸ்ட் 2018).

(iv) தரவுகள் இடப்பெயர்வு செயல்முறை

கணினி ஒருங்கிணைப்பாளருடனான ஒப்பந்தத்தின்படி, அவர் தரவு இடப்பெயர்விற்கான ஒரு சரியான முறைமையை வகுத்து, செயல்படுத்த வேண்டும். தரவுகளில் இழப்பு மற்றும் தரவு மாதிரிகள் பொருந்தாமை ஆகியவை இன்றி தரவு இடப்பெயர்வை உறுதிப்படுத்த, மரபு தரவுத்தளம் என்னும் UTIS திட்டத்திற்கு முந்தைய தரவு தளத்துடன் புதிதாக உருவாக்கப்பட்ட தரவு தளத்தை ULBக்களின் ஒப்புதலைப் பெற்று தொடர்புபடுத்த வேண்டும். சோதனை ஆய்வு செய்யப்பட்ட நகராட்சிகளில், ஒப்பந்தத்தில் வரையறுக்கப்பட்டுள்ள படி, கணினி ஒருங்கிணைப்பாளர் செய்த தரவு இடப்பெயர்வின் துல்லியத்தன்மைக்கு ULBக்கள் சான்றளிக்கவில்லை. காணப்பட்ட குறைபாடுகள் கீழே விளக்கப்பட்டுள்ளன.

(அ) பிறப்பு மற்றும் இறப்பு பதிவுகள்

சோதனை ஆய்வு செய்யப்பட்ட நகராட்சிகளில், மரபு தரவுகளில் உள்ள பிறப்பு மற்றும் இறப்பு விவரங்கள் முழுவதுமாக இடப்பெயர்வு செய்யப்படவில்லை. இடப்பெயர்வு செய்யப்பட்ட 22,02,797 பிறப்பு பதிவுகள் பற்றிய தரவுகளில், தந்தையின் (79 விழுக்காடு) மற்றும் தாயின் (76 விழுக்காடு) படிப்பறிவு மற்றும் அவர்களின் தொழில்கள் (முறையே 90 விழுக்காடு மற்றும் 46 விழுக்காடு) பற்றிய விவரங்கள் காணப்படவில்லை. மரபுத் தரவுத் தளம் மரணத்திற்கான காரணங்களை, மூப்பு, முதுமை, இதய நோய் மற்றும் மாரடைப்பு போன்ற தனித்தனியான குறியீடுகளில் பெற்றிருந்தாலும், அவை பணிப்பாய்வு தரவுத்தளத்தில் வகைப்பாடு இல்லாமல் ஒரே குறியீட்டில் விவரங்கள் பெறப்பட்டன. இதனால், 96 விழுக்காடு இறப்பு பதிவுகளுக்கு (3,98,264 இறப்பு பதிவுகளில்) மரபு தரவுத்தளத்தில் இருக்கக்கூடிய சரியான வகைப்பாடு பணிப்பாய்வு தரவுத்தளத்தில் இல்லை. மேலும், ஏழு[53] நகராட்சிகளில் பிறப்பு பதிவிற்கான 735 தரவுகள் மற்றும் இறப்பு பதிவிற்கான 3,437 தரவுகள், இடப்பெயர்வு செய்யப்பட்ட தரவுகளில் காணப்படவில்லை.

காணப்படாத தரவுகளை மரபு தரவுத்தளத்திலிருந்து UTISக்கு இடப்பெயர்வு செய்வது படிப்படியாக எடுத்து முடிக்கப்படும் என CMA மறுமொழி அளித்தார் (டிசம்பர் 2018).

---

53 ஆற்காடு (22 பிறப்பு பதிவுகள்), பவானி (1,742 இறப்பு பதிவுகள்), கோபிசெட்டிபாளையம் (7 இறப்பு பதிவுகள்), கும்பகோணம் (509 பிறப்பு பதிவுகள்), பல்லவபுரம் (120 பிறப்பு பதிவுகள் மற்றும் 29 இறப்பு பதிவுகள்), உதகமண்டலம் (1,659 இறப்பு பதிவுகள்) மற்றும் வாலாஜாப்பேட்டை (84 பிறப்பு பதிவுகள்).

(ஆ) சொத்து வரி அமைப்பு

ஆண்டு மதிப்பு[54] (Annual Value) (AV) மற்றும் செலுத்துனர் மீது விதிக்கப்பட்ட சொத்து வரி ஆகியவை உட்பட மதிப்பீடுகளின் விவரங்களை சொத்து வரி (Property Tax) (PT) மதிப்பீட்டு மூல அட்டவணையில் இருந்தன. சோதனை ஆய்வு செய்யப்பட்ட நகராட்சிகளில் 25,065 AV ஆவணங்கள் மற்றும் 3,366 PT ஆவணங்களில் இடப்பெயர்வு ஆன தரவுகளில் இருந்த AV மற்றும் PT தொகைகள் மரபு தரவுகளிலுள்ள தொகைகளிலிருந்து மாறுபட்டன; தொகை மாற்றம் செய்யப்பட்டதற்கு உரிய தணிக்கை தடம் இருக்கவில்லை.

இப்பிரச்சினை கணினி ஒருங்கிணைப்பாளருக்கு தெரிவிக்கப்படும் என நகராட்சிகள் மறுமொழி அளித்தன (ஆகஸ்ட் 2018).

(இ) கட்டடங்களின் பயன்பாடு

மரபு தரவுத்தளத்தில் கட்டடங்களின் பயன்பாட்டிற்கான குறியீடு, 'குடியிருப்பு', 'வாடகை', 'வணிகம்' மற்றும் 'தொழில்' ஆகியவற்றுக்கு முறையே 'A', 'B', 'C' மற்றும் 'D' என வழங்கப்பட்டது. பணிப்பாய்வு தரவுத்தளத்தில், 'குடியிருப்பு', 'தொழில்' மற்றும் 'வணிகம்' ஆகியவற்றிற்கு முறையே '1', '2' மற்றும் '3' என வழங்கப்பட்டது. சோதனை ஆய்வு செய்யப்பட்ட 16 நகராட்சிகளுள் 11ல்[55], மரபுதரவுகளில் வணிகம் மற்றும் தொழில் குறியீடுகளை கொண்ட 13,597 ஆவணங்கள், பணிப்பாய்வு தரவுத்தளத்தில் குடியிருப்புக்கான குறியீட்டின் கீழ் இடப்பெயர்வு செய்யப்பட்டன. அதேபோல், ஒன்பது[56] நகராட்சிகளில் மரபுத் தரவுகளில் குடியிருப்புக் குறியீட்டினை கொண்ட 2,933 ஆவணங்கள், பணிப்பாய்வு தரவுத்தளத்தில் வணிக குறியீட்டின் கீழ் இடப்பெயர்வு செய்யப்பட்டது.

முந்தைய திருத்தத்தின்போது (ஏப்ரல் 2008), கட்டடத்தின் பலவகையான பயன்பாட்டின் காரணமாக பயன்பாட்டு குறியீடு மரபு தரவுத்தளத்தில் சரியாக புதுப்பிக்கப்படவில்லை என்றும் புதுப்பிக்கும் பொருட்டு, பட்டியல் கணினி ஒருங்கிணைப்பாளருக்கு அனுப்பப்படும் என்றும் நகராட்சிகள் மறுமொழி அளித்தன (ஆகஸ்ட் 2018). CMA, இப்பணி படிப்படியாக மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்படும் என தெரிவித்தார் (டிசம்பர் 2018).

(v) சொத்து வரி மற்றும் குடிநீர் கட்டண தகவமைவுகளிடையே தொடர்பு இல்லாமை

புதிய குடிநீர் இணைப்பு பெறுதல் மற்றும் குடிநீர் வழங்கல் (WS) இணைப்புகளில் பெயர் மாற்றம் ஆகிய சேவைகளை பெற சொத்து வரி மதிப்பீடு எண் கட்டாயம் ஆகும். UTISல், PT மதிப்பீடு அட்டவணைக்கும் குடிநீர் இணைப்பு அட்டவணைக்கும் இடையிலான தொடர்பு, "மதிப்பீட்டு ID" மூலமாக அமைக்கப்படுகிறது.

---

54 தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம், 1920வின் பிரிவு 82 (2)ன் படி, நிலங்கள் மற்றும் கட்டடங்கள், மாதாமாதம் பெறக்கூடும் என்ற நியாயமாக எதிர்பார்க்கப்படும் மொத்த ஆண்டு வாடகை, அவற்றின் ஆண்டு மதிப்பாக கருதப்படும்.

55 அனகாபுத்தூர் (21), ஆற்காடு (1,281), பவானி (335), குன்னூர் (185), கோபிசெட்டிப்பாளையம் (808), காரைக்குடி (2,409), கும்பகோணம் (3,530), மன்னார்குடி (6), பல்லவபுரம் (1,512), திருமங்கலம் (2,151) மற்றும் உதகமண்டலம் (1,359).

56 ஆற்காடு (11), பவானி (701), குன்னூர் (176), கோபிசெட்டிப்பாளையம் (327), காரைக்குடி (1,612), கும்பகோணம் (37), மன்னார்குடி (7), பல்லவபுரம் (52) மற்றும் உதகமண்டலம் (10).

மதிப்பீடு ID இணைக்கப்பட்டிருந்த போதிலும், 7,276 WS இணைப்புகளுக்குண்டான கட்டட பயன்பாடு (குடியிருப்பு/வணிகம்) தொடர்பில்லாமல் இருந்தன; அதாவது, 61 நகராட்சிகளில், 4,796 வணிக வகை WS இணைப்புகள் குடியிருப்பு என்பதாக வகைப்படுத்தப்பட்டிருந்தன; 44 நகராட்சிகளில் 2,.480 குடியிருப்பு வகை WS இணைப்புகள் வணிகம் என்பதாக வகைப்படுத்தப்பட்டிருந்தன. பயன்பாட்டு மென்பொருளில் உள்ளீட்டுக் கட்டுப்பாடு இல்லாததை இது சுட்டிக்காட்டுகிறது. இதன் விளைவாக, பயன்பாட்டில் பொருந்தாமை, நகராட்சிகளின் எதிர்பார்க்கப்பட்ட வருவாயில் மாறுபாடு ஆகியவை ஏற்பட்டன.

மேற்படி தொடர்பு 2018 ஆண்டுக்குரிய சொத்து வரி திருத்தத்தின் போது செய்து முடிக்கப்படும் என CMA தெரிவித்தார் (டிசம்பர் 2018).

2.3.8.2 சொத்து வரி

கட்டடங்கள், கட்டடம் அமைந்த நிலங்கள், கட்டடத்திற்கு அருகிலுள்ள நிலங்கள், அல்லது இரண்டிற்கும் PT விதிப்பதற்கு, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920ன் (சட்டம்) பிரிவுகள் 78 மற்றும் 81 நகராட்சிகளுக்கு அதிகாரம் அளிக்கின்றன. PT மதிப்பிடுவதற்கு கட்டடங்களின் பயன்பாடு என்பது, குடியிருப்பு, வணிகம் மற்றும் தொழில் என பரவலாக வகைப்படுத்தப்படுகின்றன. PTயின் கணக்கீடு, கட்டடத்தின் பரப்பளவு, பயன்பாடு, அமைவிடம், கட்டுமான வகை மற்றும் கட்டடத்தின் வயது ஆகியவற்றை அடிப்படையாக கொண்டது. பொது நோக்கத்திற்கான வரி, கல்வி வரி மற்றும் நூலகத் தீர்வை ஆகியன PTல் அடங்கும். தணிக்கையில் காணப்பட்ட குறைபாடுகள் பின்வரும் துணைப்பத்திகளில் விவாதிக்கப்பட்டுள்ளன.

(i) தவறாக பெறப்பட்ட தரவுகள்

சொத்து மீது PT விதிப்பதற்கு சொத்துக்களின் விவரங்களை அளிக்கும் வகையில், மதிப்பீடு அட்டவணை மற்றும் மதிப்பீடு தள அட்டவணை ஆகியவற்றை PT தகவமைவு கொண்டிருந்தது. மதிப்பீடு அட்டவணை என்ற மூல அட்டவணை, ஒவ்வொரு மதிப்பீட்டிற்கும், அமைவிடம், மனையின் பரப்பளவு, கட்டுமான பரப்பளவு, கட்டடத்தின் வகை, கட்டடத்தின் வயது, திட்டத்தின்படி அனுமதிக்கப்பட்ட கட்டுமான பரப்பளவு, கட்டடம் கட்டி முடிக்கப்பட்ட தேதி, மதிப்பீட்டு நாள், PT விதிக்கப்பட்ட நாள் ஆகிய விவரங்களை பெறுகிறது. மதிப்பீடு தள அட்டவணை ஒவ்வொரு மதிப்பீட்டிற்கும் கட்டப்பட்ட பகுதி மற்றும் பயன்பாடு ஆகியவற்றின் தளவாரியான விவரங்களை வழங்குகிறது.

கட்டட திட்டத்திற்கான ஒப்புதல்

தளங்களின் எண்ணிக்கை மற்றும் கட்டப்படும் பரப்பளவின் அடிப்படையில், குடியிருப்பு கட்டடங்கள் மற்றும் வணிக கட்டடங்களுக்கு திட்ட ஒப்புதல் வழங்க நகராட்சிகளுக்கும் நகர் மற்றும் ஊரமைப்பு இயக்குநருக்கும் அதிகாரம் உள்ளது. கட்டட திட்ட ஒப்புதல் எண், நாள் மற்றும் ஒப்புதல் அளிக்கப்பட்ட கட்டட பரப்பளவு ஆகியவை சொத்துக்களின் புதிய மதிப்பீட்டுக்கான விண்ணப்பங்களிலிருந்து CFC பணியாளர் பெற வேண்டிய கட்டாய விவரங்கள் ஆகும்.

மாநிலத்திலுள்ள நகராட்சிகளின் மதிப்பீடு அட்டவணையில் இருக்கும் 27,14,510 மதிப்பீடுகளுள், 26,19,288 PT தொடர்பானவை; 95,222 காலி நில வரி (Vacant Land Tax) (VLT) தொடர்பானவை. மொத்த PT மதிப்பீடுகளுள்,

26,11,704 (99.71 விழுக்காடு) மதிப்பீடுகளில், கட்டட திட்ட ஒப்புதல் மற்றும் அனுமதிக்கப்பட்ட பரப்பளவு ஆகிய விவரங்கள் காணப்படவில்லை. இதில், 13,558 மதிப்பீடுகள், இரண்டாவது முதல் பனிரெண்டாவது மாடி வரை உள்ள, குடியிருப்பு (10,412), வணிகம் (3,107) மற்றும் தொழில் (39) ஆகிய வகைகள் தொடர்பானவை. கட்டட அனுமதிக்கான தகவமைவு சேர்க்கப்பட்ட திட்டத்தின் கட்டம் II செயல்படுத்தப்படாததால், ஒப்புதலில் இருந்து விலகல்கள் மற்றும் அங்கீகரிக்கப்படாத கட்டுமானங்கள் கண்டறியப்படவில்லை; இது, கட்டட திட்ட ஒப்புதல் தொடர்பாக தொகை செலுத்துவதை பாதித்தது.

கட்டட திட்ட ஒப்புதல் குறித்த விவரங்களை தெரிவிக்குமாறு செலுத்துனருக்கு தேவையான அறிவிப்புகள் வழங்கப்பட்டுள்ளதாகவும், அவை பெறப்பட்டவுடன் தரவுத்தளத்தில் சேர்க்கப்படும் என சோதனை ஆய்வு செய்யப்பட்ட நகராட்சிகள் மறுமொழி அளித்தன (ஆகஸ்ட் 2018). உள்ளீடு கட்டுப்பாடுகள் இல்லாதது மற்றும் PT மதிப்பீடு அட்டவணையுடன் கட்டட திட்ட ஒப்புதல் தகவமைவு இணைக்கப்படாதது ஆகியவை காரணமாக, முக்கிய தரவுகள் முழுமையாக பெறப்படவில்லை.

மனையின் பரப்பளவு மற்றும் கட்டடப்பட்ட பரப்பளவு

மனையின் பரப்பளவு என்பது காலியாக உள்ள அல்லது ஒரு கட்டடம் அமைந்த நிலத்தின் பரப்பளவாகும். கட்டடப்பட்ட பரப்பளவு என்பது அந்நிலத்தில் கட்டப்பட்ட கட்டடத்தின் பரப்பளவு ஆகும். VLT மற்றும் PTஐ கணக்கிடுவதற்கு, மதிப்பீடு அட்டவணையில் மனையின் பரப்பளவு மற்றும் கட்டப்பட்ட பரப்பளவு பற்றிய விவரங்கள் கட்டாயமானதாகும். மதிப்பீடு தள அட்டவணை தளவாரியாககட்டப்பட்ட பரப்பளவு விவரங்களை கொண்டிருக்கும்.

(அ) 99,864 மதிப்பீடுகளில், மனையின் பரப்பளவு மதிப்பீடு அட்டவணையில் சேர்க்கப்படவில்லை. அதே போல், 1,37,557 மதிப்பீடுகளில், கட்டப்பட்ட பரப்பளவு மதிப்பீடு தள அட்டவணையில் சேர்க்கப்படவில்லை. பணிப்பாய்வு தரவுத்தளத்தில் தேவையான கட்டாய புலன்கள் இருந்தும், அவற்றில் தரவுகள் இல்லாதது இடம் பெயர்ந்த தரவுகளில் தரவுகளின் சுத்திகரிப்பு மற்றும் உள்ளீடு கட்டுப்பாடுகள் இல்லாததை காட்டுகிறது.

கட்டாய புலன்களுக்குரிய விவரங்களை சேர்ப்பதற்கு பணியாளர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்படும் என சோதனை ஆய்வு செய்யப்பட்ட நகராட்சிகள் மறுமொழி அளித்தன (ஆகஸ்ட் 2018). உள்ளீடு கட்டுப்பாடுகள் இல்லாமையால் கட்டாய புலன்கள் விவரங்கள் இன்றி இருந்தன; விவரங்கள் இல்லாத நிலையிலும் PT மதிப்பீடு செய்ய முடிந்தது.

(ஆ) மதிப்பீடு அட்டவணை மற்றும் மதிப்பீடு தள அட்டவணையின் ஒரு ஒப்பீடு, 10,000 சதுர அடிக்கு மேல் மனை/கட்டுமான பரப்பளவு கொண்ட 7,980 மதிப்பீடுகள் மதிப்பீடு அட்டவணையில் உள்ள பரப்பளவுக்கேற்ற அரையாண்டு வரியை கணக்கிடவில்லை என்பதை வெளிப்படுத்தியது. தவிர, மதிப்பீடு தள அட்டவணை 10.000 சதுர அடிக்கு மேல் கட்டுமான பரப்புளவு கொண்ட 4,707 மதிப்பீடுகள் செயல்பாட்டில் உள்ளதை காட்டியது; ஆனால், மேற்படி அட்டவணைகளை ஒருங்கிணைக்காததன் காரணமாக அந்த மதிப்பீடுகள் மதிப்பீடு அட்டவணையிலிருந்து நீக்கப்பட்டது என காணப்பட்டது.

மேலும், மதிப்பீடு அட்டவணையில் பெறப்பட்ட கட்டுமான பரப்பளவு, மதிப்பீடு தள அட்டவணையில் உள்ள தளவாரியான கட்டுமான பரப்பளவுகளின்

கூட்டுத்தொகையுடன் ஒத்திருக்கவேண்டும். 26,19,288 PT மதிப்பீடுகளுள் 3,39,058 மதிப்பீடுகளில், மதிப்பீடு அட்டவணையின் படியான கட்டுமான பரப்பளவு, மதிப்பீட்டு தள அட்டவணையில் இருந்த தளவாரியான கட்டுமான பரப்பளவின் கூட்டுத்தொகைக்கு சமமாக இல்லை; இதற்கு, புதிய கட்டுமானங்கள் மதிப்பீடு அட்டவணையில் சேர்க்கப்படாதது காரணம் ஆகும். இது, தரவு கட்டமைப்பிலுள்ள குறைபாடு, தரவுகளில் துல்லியமின்மை, இடப்பெயர்வின்போது தரவுகளில் சுத்திகரிப்பு இல்லாமை மற்றும் செயலாக்க கட்டுப்பாடுகள் இல்லாமை ஆகியவற்றை காட்டியது.

கணினி ஒருங்கிணைப்பாளர் மூலம் நேர்வுகளின் பட்டியலை சரிபார்த்த பிறகு, உள்ளபடியான பரப்பளவு கணினியில் புதுப்பிக்கப்படும் என சோதனை ஆய்வு செய்யப்பட்ட நகராட்சிகள் மறுமொழி அளித்தன (ஆகஸ்ட் 2018).

(இ) சட்டத்தின் பிரிவு 81(3)(அ)ன் அடிப்படையில், கட்டடத்தின் கட்டுமான பரப்பளவின் மூன்று மடங்கு அளவிற்கு மேற்பட்டு உள்ள காலியான நிலப்பரப்பிற்கு VLT விதிக்கவேண்டும் என அனைத்து நகராட்சிகளையும் CMAஅ றிவுறுத்தினார் (ஜூலை 1998). மதிப்பீட்டு அட்டவணையின் 'மனை பரப்பளவு' என்ற புலத்தில், VLT மதிப்பீடுகளில் மனையின் பரப்பளவும் PT மதிப்பீடுகளில் கட்டுமான பரப்பளவும் பதிவாகிறது என்பதை தணிக்கை கண்டது.

காலியான மனைக்கு அதன் பரப்பளவும் கட்டடங்களுக்கு தளவாரியான கட்டுமான பரப்பளவும் மனை பரப்பளவு என்பதன் கீழ் சேகரிக்கப்படுகிறது என்பதை சோதனை ஆய்வு செய்யப்பட்ட நகராட்சிகள் ஒப்புக்கொண்டன (ஆகஸ்ட் 2018). மதிப்பீட்டு அட்டவணையில் மனை பரப்பளவுக்கும் கட்டுமான பரப்பளவுக்கும் தனித்தனி புலன்கள் இல்லாத காரணத்தினால், கட்டடத்திற்கான PT உடன், கட்டடத்திற்கு அருகாமையிலுள்ள அதிகப்படியான காலி நிலத்திற்குரிய VLTஐ கணக்கிட இயலவில்லை.

(ii) இரத்து செய்யப்பட்ட மதிப்பீடுகளுக்கான கோரிக்கையை உருவாக்கம்

சொத்து நபர் மாற்றம் அல்லது இடிக்கப்படும் நேர்வில், நிலுவை வரி தொகையை செலுத்திய பின்னர், பெயர் மாற்றத்திற்கோ அல்லது மதிப்பீட்டை இரத்து செய்வதற்கோ செலுத்துனர் விண்ணப்பிக்கலாம். உரிய ஒப்புதலுக்கு பின்னர், மதிப்பீட்டு எண் கணினி மூலம் செயலிழக்க செய்யப்படுகிறது. இரத்து செய்யப்பட்ட மதிப்பீடுகளின் விவரங்கள் கணினி அமைப்பு உருவாக்கும் மதிப்பீடு இரத்து பதிவேட்டில் சேர்கின்றன. 57 நகராட்சிகளில் இரத்து செய்யப்பட்ட 33,617 மதிப்பீடுகளுள், 223 மதிப்பீடுகளில் ₹ 0.72 இலட்சம் மதிப்புடைய கோரிக்கைகள் இரத்து நாட்களுக்கு பிறகு உருவாக்கப்பட்டு, நிலுவையில் இருந்தன. இரத்து அட்டவணையை, கேட்பு, வசூல் மற்றும் நிலுவை (Demand, Collection andBalance - DCB) அட்டவணையுடன் ஒருங்கிணைக்க மென்பொருளில் கட்டுப்பாடு இல்லாததால் முரண்பாடுகள் எழுந்தன.

சோதனை ஆய்வு செய்யப்பட்ட நகராட்சிகளுள் அனகாபுத்தூர், பல்லவபுரம் மற்றும் பம்மல் நகராட்சிகள், சரிபார்ப்பு சிக்கல்களால் முரண்பாடுகள் ஏற்பட்டன என்றும் அவை அடையாளம் காணப்பட்டு சீர் செய்யப்பட்டன என்றும் மறுமொழி அளித்தன (ஆகஸ்ட் 2018). இந்நேர்வுகள் சீர் செய்யும்பொருட்டு கணினி ஒருங்கிணைப்பாளருக்கு தெரிவிக்கப்படும் என ஆற்காடு, கும்பகோணம் மற்றும் மன்னார்குடி நகராட்சிகள் தெரிவித்தன.

நிறைவு கலந்தாய்வு கூட்டத்தில் (அக்டோபர் 2018), தணிக்கை தடமற்ற பின்னிலை செய்முறைகளை தடுக்குமாறு MAWS துறை முதன்மை செயலாளர் CMAக்கு அறிவுறுத்தினார். அனைத்து நகராட்சிகளிலும் இப்பிரச்சனையைத் தீர்க்க, மதிப்பீடு, கேட்பு மற்றும் இரத்து அட்டவணைகளை பயன்பாட்டு மென்பொருளை பொருத்தமாக மாற்றியமைப்பதன் மூலம் ஒருங்கிணைக்க வேண்டும். இது தவறுகள் மீண்டும் நிகழ்வதை தடுக்கும்.

(iii) நிலுவை தொகை உள்ள மதிப்பீடுகள் இரத்து செய்யப்பட்டமை

(அ) காலி நில வரி

சொத்தின் மீது PT மதிப்பிடப்பட்ட நாளிலிருந்து, VLT விதிப்பு, நிலுவை தொகை செலுத்தப்பட்ட பிறகு, இரத்து செய்யப்படவேண்டும். மாநிலத்திலுள்ள அனைத்து நகராட்சிகளிலும் 79,191 VLT மதிப்பீடுகளில் ₹ 46.98 கோடி நிலுவையில் இருந்தது. இதில், மார்ச் 2018நிலையில், 6,229 மதிப்பீடுகளில் ₹ 3.41 கோடி தொகைக்கான கேட்புகள் நிலுவை தொகை செலுத்தப்படாமல் இரத்து செய்யப்பட்டன.

(ஆ) சொத்து வரி

கட்டடம் இடிக்கப்படுவது அல்லது அழிக்கப்படுவது காரணமாக மதிப்பீட்டை இரத்து செய்வதற்கு முன்னர் நிலுவையிலுள்ள PT செலுத்தப்படவேண்டும் என தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920ன் பிரிவு 89 (2) கூறுகிறது. மார்ச் 2018 நிலையில் ₹ 338.20 கோடி நிலுவை இருந்த 7,94,243 மதிப்பீடுகளுள் ₹ 3.67 கோடி நிலுவை இருந்த 9,633 மதிப்பீடுகள் நிலுவை தொகை செலுத்தப்படாமலே இரத்து செய்யப்பட்டன.

(இ) திடக்கழிவு மேலாண்மை பயனாளர் கட்டணங்கள்

நகராட்சி திடக்கழிவு (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகள், 2000ன் படி, வீடுகள், கடைகள், உணவகங்கள், சிற்றுண்டி சாலைகள், அலுவலக கட்டடங்கள் வணிக வளாகங்கள் ஆகியவற்றின் உரிமையாளர்கள்/வசிப்போர் நகராட்சிகள் அறிவித்த வீதங்களில் திடக்கழிவு மேலாண்மை பயனாளர் கட்டணங்களை (Solid Waste Management User Charges - SUC) செலுத்தவேண்டும். SUC சொத்து வரியின் ஒரு பகுதியாக அமைந்து, PTக்கான கேட்பில் SUCக்கான கேட்பும் கூடுதலாக அனுப்பப்படுகிறது. 2017-18 ஆண்டில், ₹ 17.03 கோடி கோரப்பட்ட 9,10,830 மதிப்பீடுகளுள், ₹ 0.53 கோடி நிலுவையில் இருந்த 3,668 மதிப்பீடுகள் நிலுவை செலுத்தப்படாமலே இரத்து செய்யப்பட்டன.

இரத்து செய்யப்பட்ட கோரிக்கைகள் தேதி சரிபார்க்கப்பட்டு மீண்டும் சேர்க்கப்பட்டன என்றும் நிலுவைகளை வசூலிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் சோதனை ஆய்வு செய்யப்பட்ட நகராட்சிகள் மறுமொழி அளித்தன (ஆகஸ்ட் 2018). இரத்து செய்யப்பட்டு மீண்டும் சேர்க்கப்பட்ட கோரிக்கைகள் மற்றும் நிலுவைகளை வசூலித்தல் பற்றி தணிக்கை கோரிய விவரங்கள் வழங்கப்படவில்லை. நிலுவை தொகை செலுத்தப்படாமலே கோரிக்கைகளை இரத்து செய்ய மென்பொருள் வகை செய்கிறது என்பது, அதில் உள்ளீடு கட்டுப்பாடுகளும் செயல்பாடு கட்டுப்பாடுகளும் இல்லை என்பதை காட்டுகிறது.

(iv) மதிப்பீடுகளை நீக்குதல்

கணினிமயமாக்கப்பட்ட பணிப்பாய்வு அமைப்பில், மதிப்பீடுகளை இரத்து செய்வதற்கான மதிப்பீடு இரத்து தகவமைவு, குறிப்புகள் மற்றும் காரணங்களை

பதிவதற்கான வசதியுடன் முன்முனையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் நகராட்சிகள் மதிப்பீடுகளை தணிக்கை தடத்துடன் கூடிய வகையில் இரத்து செய்ய இயலும். எனினும், சோதனை ஆய்வு செய்யப்பட்ட நகராட்சிகள் தொடர்பான 33,501 மதிப்பீடுகளுக்கான கோரிக்கைகள் மரபு தரவுத்தளத்தில் உருவாக்கப்படவில்லை என்பதால், கணினி ஒருங்கிணைப்பாளர் தணிக்கை தடம் இல்லாமல் இந்த மதிப்பீடுகளை பின்முனையில் நீக்கினார். செல்லத்தக்கவையான 4,035 மதிப்பீடுகளை புதுப்பிக்குமாறு நகராட்சிகள் கோரினாலும், கணினி ஒருங்கிணைப்பாளர் இன்னமும் அவற்றை கணினி அமைப்பில் மீண்டும் சேர்க்கவில்லை (ஆகஸ்ட் 2018). மதிப்பீடு இரத்து அட்டவணையை தொடர்புபடுத்தாமல் மதிப்பீடு அட்டவணையின் பின் முனையில் தரவுகளை நீக்கியதால் நீக்கத்திற்கு தணிக்கை தடம் இல்லாமல் போனது.

இந்த நிகழ்வை சரிசெய்ய கணினி ஒருங்கிணைப்பாளருக்கு தெரிவிக்கப்பட்டது என சோதனை ஆய்வு செய்யப்பட்ட நகராட்சிகள் மறுமொழி அளித்தன (ஆகஸ்ட் 2018). மதிப்பீடு இரத்து தகவமைவை பயன்படுத்தாமல் தரவுகளை நீக்க கணினி அமைப்பு அனுமதித்தது என்பது, வெளிப்படைத்தன்மை, செயலாக்க கட்டுப்பாடுகள் மற்றும் பயனுள்ள கண்காணிப்பு ஆகியவை இல்லாததை காட்டியது; செல்லத்தக்க மதிப்பீடுகளுக்குரிய வரி கேட்புகள் உருவாக்கப்படாததற்கும் அது வழி வகுக்கும்.

(v) வெவ்வேறு கணக்கு தலைப்புகளின் கீழ் பெறப்பட்ட தொகைகள்

VLT மற்றும் PTக்கான கேட்புகள் DCB அட்டவணையில் முறையே ValueID-1 மற்றும் ValueID-2ன் கீழ் பதிவாகின்றன. கேட்புக்கு எதிராக வசூலிக்கப்பட்ட தொகைகள் பணக்கொடுப்பு அட்டவணையில், தவறான வகைப்பாட்டினை தவிர்ப்பதற்காக, ஒரே ValueID ன் கீழ் பதிவாகின்றன. பல வகைப்பாடுகள் தொடர்பாக பெறப்பட்ட PT/VLT தொகைகள் பணம் பெறப்பட்டதன் தன்மையின் அடிப்படையில் (i) PT/VLT, (ii) நிலுவைத்தொகை, (iii) நடப்பு மற்றும் (iv) வரி ரத்து மற்றும் பணத்தை மீள அளித்தல் ஆகிய பல்வேறு தலைப்புகளின் கீழ் கணக்கு வைக்கப்படுகின்றன. அக்டோபர் 1998 முதல் மார்ச் 2018 வரையிலான காலகட்டத்திற்காக 5,549 செலுத்துனர் VLTன்கீழ் பெறப்பட்ட ₹ 3.62 கோடி தொகை செலுத்த அட்டவணையில் PTன் கீழும், ஏப்ரல் 2010 முதல் மார்ச் 2018 வரையிலான காலகட்டத்திற்காக 679 செலுத்துனர் PTன்கீழ் பெறப்பட்ட ₹ 14.15 இலட்சம் VLTன் கீழும் தவறுதலாக வரவு வைக்கப்பட்டது என்பதை DCB அட்டவணை வெளிப்படுத்தியது. பணிப்பாய்வுத் தரவுத்தளம் தவறான வகைப்பாட்டினை அனுமதித்ததால் கணக்குகளை ஒத்திசைவு செய்ய இயலவில்லை. இது பயன்பாட்டு மென்பொருளில் உள்ள குறைபாடுகளை காட்டியது.

மதிப்பீடு அட்டவணையின் அடிப்படையில் DCB அட்டவணையிலும் தொகை செலுத்த அட்டவணையிலும் ValueID சரிசெய்யப்பட்டது என சோதனை ஆய்வு செய்யப்பட்ட நகராட்சிகள் மறுமொழி அளித்தன (ஆகஸ்ட் 2018). எதிர்காலத்தில் இது போன்ற பிழைகள் ஏற்படுவதை தவிர்க்க மென்பொருளில் கட்டுப்பாடுகளை அமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதால் இம்மறுமொழி ஏற்கததக்கதல்ல.

(vi) திடக்கழிவு மேலாண்மை பயனாளர் கட்டணங்களுக்கான கோரிக்கை

ஏப்ரல் 2017 முதல் ஆகஸ்ட் 2017 வரையிலான காலகட்டத்தில் SUC வீதங்களை நகராட்சிகள் அறிவித்தன. SUC சொத்து வரியின் ஒரு பகுதியாக அமைந்து,

PTக்கான கேட்பில் SUCக்கான கேட்பும் கூடுதலாக சேர்க்கப்படுகிறது. 2017-18ல் (இரண்டாம் அரையாண்டு), மாநிலத்திலுள்ள நகராட்சிகள் 3,11,783 மதிப்பீடுகள், அதாவது 43,835 குடியிருப்பு மதிப்பீடுகள் மற்றும் 2,67,948 குடியிருப்பு அல்லாத மதிப்பீடுகள், மீது முறையே ₹ 10 மற்றும் ₹ 50 என்ற மாத குறைந்தபட்ச வீதத்தில், ₹ 8.30 கோடி தொகைக்கான SUC கேட்புகளை உருவாக்கவில்லை.

மேலும், 2017-18ல் ஒரு குறிப்பிடப்பட்ட நாள் (ஒவ்வொரு நகராட்சிக்கும் மாறுபடக்கூடியது) முதல் விதிக்கப்பட வேண்டிய SUCக்கான கேட்புகளை சோதனை ஆய்வு செய்யப்பட்ட நகராட்சிகள் 2017-18 ஆண்டில் தாமதமாகவோ, குறைவான வீதத்தை பின்பற்றி உருவாக்கியதால், 1,32,331 குடியிருப்பு மதிப்பீடுகளில் ₹ 97.98 இலட்சம் அளவுக்கு SUCகேட்பு குறைவாக இருந்தது. வணிக/தொழில் வகை கழிவு உற்பத்தியாளர்களின் பல்வேறு வகைகளை கணினி அமைப்பில் பதிவதற்கான வழிவகை இல்லாத நிலையில், செலுத்தப்பட வேண்டிய SUC தொகை தானியங்கி முறையில் இல்லாமல், கைமுறையாக உள்ளீடு செய்யப்பட்டது. பயன்பாட்டு மென்பொருளின் இந்தக் குறைபாடு, ஒவ்வொரு வகைக்குரிய விகிதத்தை உள்ளீடு செய்வதில் வெளிப்படைத்தன்மை இல்லாததை காட்டியது; இதனால், நகராட்சிகளின் எதிர்பாக்கப்பட்ட வருமானத்தில் வேறுபாடு ஏற்பட்டது.

ULBக்களின் துணைச்சட்டத்தின் அடிப்படையில் SUC கேட்பின் உருவாக்கம் தானியங்கி முறையில் செய்யப்படும் என CMA தெரிவித்தார் (டிசம்பர் 2018).

(vii) கேட்பு உருவாக்கப்படாமை

PT மதிப்பீடு அட்டவணையில் ‘isdeleted’ மற்றும் ‘isactive’ எனும் குறியீடுகள் மூலம் மதிப்பீடுகள் செல்லுபடித்தன்மை உள்ளவை என காட்டினாலும், கணினி அமைப்பு 8,017 மதிப்பீடுகளுக்கு VLT/PTயை கணக்கிட்டு கேட்புகளை உருவாக்கவில்லை. இதற்கு, பயன்பாட்டு மென்பொருளில் செயல்முறை கட்டுப்பாடுகள் இல்லாததே காரணமாகும்.

இவை, இடப்பெயர்வு ஆகி பின்னர் தள்ளுபடி செய்யப்பட்ட பதிவுகள் என்றும் அதனால் PT மற்றும் ஆண்டு மதிப்பு ‘0’ என பதிவாயின என்றும், UTIS தரவுத்தளத்தில் இந்த சரியான பதிவுகள் செயலற்றாக்கப்படும் என்றும் சோதனை ஆய்வு செய்யப்பட்ட நகராட்சிகள் மறுமொழி அளித்தன (ஆகஸ்ட் 2018). .

தள்ளுபடி செய்யப்பட்டதால் மதிப்பீடுகள் செயலற்றதாகாது மற்றும் காலமுறையில் கேட்புகள் உருவாக்கப்படவேண்டும் என்பதால் இம்மறுமொழி ஏற்கத்தக்கதல்ல. தரவுத்தளத்தில் பின் முனை வழியாக மாறுதல்கள் செய்யப்பட்டதை இம்மறுமொழி காட்டியது; இது, தரவுகளின் முரண்பாடுகளுக்கும் தணிக்கை தடம் இல்லாமல் போவதற்கும் வழிவகுக்கும்.

(viii) தள்ளுபடி செய்யப்பட்ட மதிப்பீடுகள்

மதிப்பீடுகள் மீதான நீண்டநாள் நிலுவை தொகைகள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மன்றத்தின் தீர்மானங்களின் அடிப்படையில் தள்ளுபடி செய்யப்பட்டு, அக்காலம் முடிவடைந்த பிறகு, கேட்புகள் கால முறையில் உருவாக்கப்படுகின்றன. மாநில தரவுத்தளம் 7,204 மதிப்பீடுகள், மன்ற தீர்மான எண், தள்ளுபடி தொகை, புதிய மதிப்பீடுகள் உருவாக்கம், இரத்து, கேட்பு நீக்கம் போன்ற குறிப்புரைகளுடன் “தள்ளுபடி செய்யப்பட்டன”என்பதை காட்டியது.

பம்மல் நகராட்சி 'தகர்க்கப்பட்டது' மற்றும் 'இரட்டைப் பதிவு இரத்து செய்யப்பட்டது' போன்ற குறிப்புரைகளுடன் 139 மதிப்பீடுகளை தள்ளுபடி செய்தது. மதிப்பீடு இரத்துக்கான வசதி பிப்ரவரி 2018 முதல் முடக்கப்பட்டதால், இந்த நேர்வுகள் கணினியில் இரத்து செய்யப்படுவதற்கு மாறாக தள்ளுபடி செய்யப்பட்டன என நகராட்சி மறுமொழி அளித்தது (ஜூன் 2018 மற்றும் ஆகஸ்ட் 2018). அதேபோல், கோபிசெட்டிப்பாளையம் நகராட்சி, 'மாதாந்திர பட்டியலில் இரத்து செய்யப்பட்டது', 'தவறான கேட்பு உருவாக்கப்பட்டது' என்ற குறிப்புரைகளுடன் ஐந்து மதிப்பீடுகளை தள்ளுபடி செய்தது. இந்த கோரிக்கைகள் தள்ளுபடி செய்வதற்கு மாறாக இரத்து செய்யப்பட வேண்டியவை என நகராட்சி மறுமொழி அளித்தது (ஆகஸ்ட் 2018).

இரத்து மற்றும் தள்ளுபடி என்பன வெவ்வேறு நடைமுறைகள் ஆகும்; இரத்து செய்யப்பட்ட மதிப்பீடுகளை தள்ளுபடி அட்டவணையில் சேர்ப்பது தரவுத்தளத்தில் தவறான நிலையைகாட்டும்.

நிறைவு கலந்தாய்வு கூட்டத்தில், PTக்கான கேட்புகளை உருவாக்காதது மற்றும் PT மதிப்பீடுகளை தள்ளுபடி செய்தது குறித்து தேவையான நடவடிக்கை எடுக்குமாறு MAWS துறை முதன்மை செயலாளர் CMAக்கு அறிவுறுத்தினார் (அக்டோபர் 2018).

2.3.8.3 தொழில் வரி

குடிமகன்/நிறுவனத்தின்தொழில், வணிகம், பணி, வேலை ஆகியவற்றின் மீது அரையாண்டு அடிப்படையில் வரி விதிக்க தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920ன் அத்தியாயம் VI-A ULBக்களுக்கு அதிகாரம் அளிக்கிறது. ஒரு நபர் அரையாண்டிற்கு அதிகபட்சமாக செலுத்த வேண்டிய தொழில்வரி ₹ 1,250 என இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் பிரிவு 276 (2) குறிப்பிடுகிறது.

(i) விடுபட்ட கோரிக்கைகள்

ஒவ்வொரு நகராட்சியும் ஒவ்வொரு ஆண்டும் தொழில் வரி செலுத்த வேண்டிய குடிமக்கள்/நிறுவனங்களை கணக்கெடுத்து, அவர்களது பட்டியலை கொண்ட ஒரு கேட்பு பதிவேட்டை பராமரிக்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசின் நகராட்சி கையேடு - பாகம் IIன் பத்திகள் 4.13, 4.15, 4.30 மற்றும் 4.31 கூறுகின்றன. CFC அல்லது CWP போன்ற சேவை வழங்கும் நிலையங்கள் மூலம் உரிய தொழில் வரியை செலுத்த ஏதுவாக, ஒரு தனி மதிப்பீடு எண்ணை (உறுப்பினர்கள் உட்பட ஒரு நிறுவனத்திற்கு ஒரு மதிப்பீட்டு எண்) உருவாக்கும் பொருட்டு, குடிமக்கள்/நிறுவனங்கள் அளித்த பட்டியலுடன் பதிவேட்டிலுள்ள பெயர்கள் ஒத்திசைவு செய்யப்பட வேண்டும். பதிவுகளை நிகழ்நிலைப்படுத்தவும் கேட்புகள் விடுபடுவதை தடுக்கவும் மேற்கொள்ளப்படும் மாதாந்திர சீராய்வுகள் மூலம் சேர்த்தல் மற்றும் மாற்றங்கள் செய்யப்படுகின்றன. குடிமக்களின் விவரங்கள் மற்றும் தொழில் வரி தகவல்கள் உள்ளன என்ற அடிப்படையில், அரையாண்டு கேட்பை தானாக உருவாக்கவும் SRS வழிவகை செய்தது.

மாநிலத்தில் உள்ள நகரட்சிகளின் பணிப்பாய்வு அமைப்பில், 2015-18 காலகட்டத்தை சார்ந்த 76,131 மதிப்பீடுகளுக்குரிய ₹ 31.77 கோடி அளவிற்கான தொழில் வரி கேட்புகள் விடுபட்டிருந்தன. தணிக்கை இந்த விடுபாடுகளை, இரத்து செய்யப்பட்ட கேட்புகளை கணக்கில் கொண்டு, ஒரு ஆண்டில் உருவாக்கப்பட்ட கேட்புகளின் பட்டியலோடு பிந்தைய ஆண்டுகளின் கேட்பு பட்டியலை ஒப்பிட்டதன் மூலம் கண்டறிந்தது. குடிமக்கள்/நிறுவனங்களின்

விவரங்களை அவ்வப்போது கணினி அமைப்பில் நிகழ்நிலப்படுத்த நகராட்சிகள் தவறியதால் கேட்புகள் காணப்படவில்லை என்பதை இது காட்டியது.

கேட்புகளை தவறாமல் உருவாக்க ULBக்களுக்கு தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்படும் என்றும், கேட்புகள் விடுபடுவதை குறித்து எச்சரிக்க உரிய சரிபார்ப்பு UTISல் அமைக்கப்படும் என்றும் CMA மறுமொழி அளித்தார் (டிசம்பர் 2018).

(ii) தொழில் வரி செலுத்தப்படாமை

அஞ்சல் துறை, தமிழ்நாடு அரசுக்கு சொந்தமான தமிழ்நாடு மாநில வாணிப கழகம் ஆகியவற்றின் பணியாளர்களுக்கு முறையே ஆறு[57] மற்றும் ஐந்து[58] சோதனை ஆய்வு செய்யப்பட்ட நகராட்சிகளில் தொழில் வரி மதிப்பீடு செய்யப்படவில்லை.

இது தொடர்பாக தலைமை அஞ்சல் அதிகாரி மற்றும் மேற்படி நிறுவனத்தின் மாவட்ட தலைமை மேலாளரிடம் தொடர்பு கொள்ளப்படும் என சோதனை ஆய்வு செய்யப்பட்ட நகராட்சிகள் மறுமொழி அளித்தன (ஆகஸ்ட் 2018).

(iii) குறைவாக செலுத்தப்பட்டமை

செலுத்தப்படும் தொழில் வரிதொகையின் சரித்தன்மையை உறுதி செய்வதற்காக, தொழில் வரி சட்டத்தில் விதிக்கப்பட்ட ஒவ்வொரு படிநிலை வீதத்தின் கீழும் பதிவாகும் வரி அறிக்கைகளின் மொத்த எண்ணிக்கையில் சீரற்ற முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட 10 விழுக்காடு அறிக்கைகளை தொடர்புடைய ஆவணங்களுடன் தொடர்புபடுத்தி ஆணையர்கள் சரிபார்க்கவேண்டும் என பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் (தொழில்கள், வணிகங்கள், பணிகள் மற்றும் வேலைகள் மீதான வரி வசூலிப்பு) விதிகள் 1999ன் விதி 8 கூறுகிறது. 2016-18 காலகட்டத்தில், சோதனை ஆய்வு செய்யப்பட்ட நகராட்சிகளுள் இரண்டு நகராட்சிகளில், அதாவது பம்பல் நகராட்சியில் தெரிவு செய்யப்பட்ட 10 நிறுவனங்களில் ₹ 0.92 இலட்சம் மற்றும் குன்னூர் நகராட்சியில் தெரிவு செய்யப்பட்ட ஆறு நிறுவனங்களில் ₹ 0.06 இலட்சம் என, ₹ 0.98 இலட்சம் வரி குறைவாக செலுத்தப்பட்டிருந்தது. நிறுவனங்கள், ஊழியர்களின் விவரங்களுடன் தொழில் வரி தொகையை செலுத்தியிருந்தாலும், நகராட்சிகள் ஆவணங்களை சரிபார்க்கவில்லை.

சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் எதிர்கால வழிகாட்டுதல்களுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்றும் ULBக்களுக்கு தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்படும் என்றும் CMA மறுமொழி அளித்தார் (டிசம்பர் 2018).

(iv) மிகையாக செலுத்தப்பட்டவை

ஒரு அரையாண்டிற்கு அதிகபட்சமாக ஒரு நபர் செலுத்த வேண்டிய தொழில்வரி ₹ 1,250 என நிர்ணயிக்கப்பட்டிருந்தது. சோதனை ஆய்வு செய்யப்பட்ட மூன்று நகராட்சிகளில்[59], சோதனை ஆய்வு செய்யப்பட்ட நிறுவனங்கள், அரசியல் அமைப்பு சட்டத்தின் பிரிவு 276 (2) விதித்த உச்சவரம்பை விட மிகையாக ஊழியர்களின் தொழில் வரியை செலுத்தியிருந்தன. இது, நகராட்சிகள் ஆவணங்களை சரிபார்க்கவில்லை என்பதை காட்டியது.

---

[57] கோபிசெட்டிப்பாளையம், காரைக்குடி, மன்னார்குடி, திருமங்கலம், திருவாரூர் மற்றும் உதகமண்டலம்.

[58] கோபிசெட்டிப்பாளையம், காரைக்குடி, மன்னார்குடி, திருமங்கலம் மற்றும் திருவாரூர்.

[59] கோபிசெட்டிப்பாளையம் - ₹ 31,468 (எட்டு நிறுவனங்களில் 476 பணியாளர்கள்), கும்பகோணம் - ₹ 26,880 (10 நிறுவனங்களில் 384 பணியாளர்கள்) மற்றும் பம்மல் - ₹ 8,403 (ஐந்து நிறுவனங்களில் 74 பணியாளர்கள்).

2018-19ம் ஆண்டின் இரண்டாம் அரையாண்டு முதல் UTISல் அரையாண்டு வரி ₹ 1,250 என வரையறை விதிக்கப்பட்டுள்ளது என CMA மறுமொழி அளித்தார் (டிசம்பர் 2018).

(v) சான்று ஆவணங்கள் இன்றி விவர அறிக்கைகளை ஏற்றமை

பணியாளர்களின் தொழில்வரியை செலுத்தும் நிறுவனங்கள், ULBக்களுக்கு அளித்த விவர அறிக்கைகளில், ஒவ்வொரு பணியாளரும் முந்தைய அரையாண்டில் பெற்ற மொத்த சம்பளத்தையும் குறிப்பிடவேண்டும்.

சோதனை ஆய்வு செய்யப்பட்ட நகராட்சிகளுள் நான்கு நகராட்சிகளில் நிறுவனங்கள் (குன்னூரில் எட்டு நேர்வுகள், பல்லவபுரத்தில் 12 நேர்வுகள், உதகமண்டலத்தில் ஐந்து நேர்வுகள் மற்றும் பம்மலில் இரண்டு நேர்வுகள்), செலுத்திய தொகையின் சரித்தன்மையை சரிபார்க்க உதவும் மொத்த வருமான விவரங்களை வரி விவர அறிக்கைகளில் குறிப்பிடவும் வருமான வரி விவர அறிக்கைகள் போன்ற சான்று ஆவணங்களை இணைக்காமலும் தொழில் வரி விவர அறிக்கைகளை சமர்ப்பித்தன. சான்று ஆவணங்கள் இல்லாமல் தொகை செலுத்தப்பட்டதை ஏற்றுக்கொண்டது, விதிகளில் கூறப்பட்டவற்றை நகராட்சிகள் பின்பற்றவில்லை என்பதை காட்டியது.

பணம் செலுத்துகையில், நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் பணியாளர்களின் பட்டியலையும் முந்தைய ஆறு மாத காலத்திற்கான அவர்களின் மொத்த வருமானத்தையும் சரிபார்க்குமாறு அனைத்து ULBக்களுக்கும் தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன என CMA மறுமொழி அளித்தார் (டிசம்பர் 2018).

(vi) தொழில் வரிதகவமைவில் இருந்த முரண்பாடுகள்

தரவுத்தளத்தின் முழுமைத்தன்மை மற்றும் நம்பகத்தன்மை ஆகியவை ஒரு கணினிமயமாக்கப்பட்ட அமைப்பு முறையின் அடிப்படை தேவைகளாகும். காரைக்குடி நகராட்சியில், தொழில் வரி செலுத்துனர் பட்டியலுடன் கூடிய தொழில் வரி மூல தரவில், வணிகத்தின் பெயர் புலத்தில் பெயர் பதியப்படாமலும், முதல் பெயர் புலத்தில் செலுத்துனர் பெயருக்கு மாறாக 'உரிமையாளர்' என பதியப்பட்டும் இருந்த 290 பதிவுகள் இருந்தன. திருமங்கலம் நகராட்சியில், தொழில் வரி கோரிக்கை அட்டவணையில் மதிப்பீடு எண் இல்லாமல் 20 பதிவுகள் இருந்தன.

தொடர்புடைய தவகல்கள் இல்லாத நிலையில், உருவாக்கப்பட்ட கேட்புகளுக்கு உரிய வரி செலுத்துனர்களை அறிய இயலாத காரணத்தால், கேட்புகள் தீர்க்கப்படவில்லை. பதிவு செய்வதற்கான விண்ணப்பங்களில் இருந்த தகவல்கள் அனைத்தையும் பதிவு செய்வதை உறுதி செய்ய தரவு பதிவு செய்வோர் தவறியதையும் கண்காணிப்பு இல்லாமையையும் இது காட்டியது.

ஆவணங்களின் உண்மைத்தன்மையை அடையாளம் காணுமாறு தொடர்புடைய ULBக்களையும் இது போன்ற சிக்கல்களை தாமே கண்டு சரி செய்யுமாறு அனைத்து ULBக்களையும் அறிவுறுத்தியுள்ளதாக CMA மறுமொழி அளித்தார் (டிசம்பர் 2018).

2.3.8.4 குடிநீர் மற்றும் கழிவுநீர் வடிகால் கட்டணங்கள்

குடிநீர் வழங்கல் (WS) மற்றும் கழிவுநீர் வடிகால் (UGD) இணைப்புகளுக்கான துவக்க வைப்பு மற்றும் பயனாளர் கட்டணங்களை ULBக்கள் தமது துணை விதிகளில் நிர்ணயித்து அவற்றை மாவட்ட அரசிதழில் அறிவித்தபின், புதிய

இணைப்புகளை வழங்குவதற்காக நுகர்வோரிடமிருந்து விண்ணப்பங்களை கோருகின்றன. விதிக்கப்பட்ட கெடுவிற்குள் பயனாளர் கட்டணங்களை செலுத்த நுகர்வோர்கள் தவறினால், WS இணைப்புகளை துண்டிக்க நகராட்சிகளுக்கு துணை விதிகள் அதிகாரம் அளிக்கின்றன.

மார்ச் 2018 நிலையில், மாநிலத்திலுள்ள நகராட்சிகள் அளித்திருந்த 11.25 இலட்சம் WS இணைப்புகள் மற்றும் 1.80 இலட்சம் UGD இணைப்புகள் தரவுத்தளத்தில் இருந்தன. அவற்றுள், 0.51 இலட்சம் WS இணைப்புகள் மற்றும் 0.32 இலட்சம் UGD இணைப்புகள் UTIS நடைமுறைபடுத்தப்பட்ட பிறகு செயலாக்கப்பட்டன. தகவமைவில் காணப்பட்ட குறைபாடுகள் பின்வரும் பத்திகளில் விவாதிக்கப்பட்டுள்ளன.

(i) பயனாளர் கட்டண கேட்பை உருவாக்க தரவுகள் இல்லாமை

இயக்கக் கையேடு மற்றும் SRS ஆகியவற்றின்படி, பயனாளர் கட்டணங்களுக்கான கேட்பு அறிக்கையை உருவாக்க, WS/UGD இணைப்புகளை அமைத்த நாள் குறித்த தகவல்களை கணினி அமைப்பில் ஒரு கட்டாய புலமாக பதிய வேண்டும். தரவுத்தளத்தில் அமைக்கப்பட்ட கட்டாய புலமான நிறுவப்பட்ட நாள் என்பதற்குரிய விவரம் பதியப்படாமல், மாநிலத்தின் நகராட்சிகளில் 2,166 WS இணைப்புகளுக்கும் 5,993 UGD இணைப்புகளுக்கும் உரிய அக்டோபர் 2015 முதல் மார்ச் 2018 வரையான காலகட்டத்திற்கான பயனாளர் கட்டண கேட்புகள் UTIS மூலமாக உருவாக்கப்பட்டன. அவற்றுள், 709 WS இணைப்புகள் 10 சோதனை ஆய்வு செய்யப்பட்ட நகராட்சிகளிலும்[60], 1,268 UGD இணைப்புகள்நான்கு[61] சோதனை ஆய்வு செய்யப்பட்ட நகராட்சிகளிலும் இருந்தன. அமைத்த நாள் என்பதுஒரு கட்டாய புலமாக இருந்தாலும், செல்லாத தரவுகளை ஏற்கும்படியாக கணினி ஒருங்கிணைப்பாளர் அப்புலத்தை வடிவமைத்தார்; இதனால், பயன்பாட்டு மென்பொருளில் உள்ளீடு கட்டுப்பாடுகள் இல்லாமல் போயிற்று.

நிறைவு கலந்தாய்வு கூட்டத்தின்போது, கணினி ஒருங்கிணைப்பாளருடன் கலந்தாலோசித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக CMA தெரிவித்தார் (அக்டோபர் 2018).

(ii) கேட்புகள் உருவாக்கப்படாமை

பயனாளர் கட்டண கேட்புகள் காலாண்டு அடிப்படையில் உருவாக்கப்படுகின்றன. தரவுத்தளத்தில், 'WUConnection' அட்டவணை நுகர்வோர்-வாரியாக WS/UGD இணைப்புகள் வழங்கப்பட்ட விவரங்களை கொண்டுள்ளது; 'WSUDemand' அட்டவணை பயனாளர் கட்டணங்களுக்கான கேட்புகளை உருவாக்குகிறது. இணைப்பின் 'Slab ID'என்ற புல விவரத்தை பயன்படுத்தி கணினி அமைப்பு கேட்பை உருவாக்குகிறது.கணினி அமைப்பு 35 நகராட்சிகளில் 339 WS இணைப்புகளுக்குரிய ₹ 1.13 இலட்சம் அளவிலான கேட்புகளை, இணைப்பு அமைக்கப்பட்ட மாதத்திலிருந்து, அதாவது ஆகஸ்ட் 2015 முதல் மார்ச் 2018 வரை, உருவாக்கவில்லை. 'IsActive' எனும் குறியீடு, அந்த இணைப்புகள் நடப்பில் இருந்தது என்பதை காட்டியது. அந்த இணைப்புகளுக்கான 'Slab ID' விவரம்

---

60 அனகாபுத்தூர், ஆற்காடு, காரைக்குடி, கும்பகோணம், மன்னார்குடி, பல்லவபுரம், பம்மல், திருமங்கலம், திருவாரூர் மற்றும் திருப்பத்தூர்.

61 கும்பகோணம், பல்லவபுரம், திருவாரூர் மற்றும் உதகமண்டலம்.

பதியப்படாததால், கேட்புகள் உருவாக்கப்படவில்லை. மென்பொருளில் உள்ளீடு சரிபார்ப்பு கட்டுப்பாடு இல்லாததை இது காட்டியது.

UTIS பயன்பாட்டு மென்பொருளில் குறைபாடுகள் சீர்செய்யப்பட்டன எனவும் தற்போதுள்ள தரவுகள் சரிசெய்யப்பட்டன எனவும் CMA மறுமொழி அளித்தார் (டிசம்பர் 2018). எனினும், மறுமொழிக்கு ஆதாரமாக ஆவணச் சான்றுகள் ஏதும் வழங்கப்படவில்லை.

(iii) WS இணைப்புகளுக்கான துவக்க வைப்பின் திருத்திய வீதங்களை வசூலிக்காமை

பல்லவபுரம் நகராட்சி, WS இணைப்புக்களுக்கான துவக்க வைப்பு தொகையை குடியிருப்பு இணைப்புக்கு ₹ 5,000லிருந்து ₹ 7,500 மற்றும் வணிக/தொழில் இணைப்புக்கு ₹ 10,000லிருந்து ₹ 15,000 எனவும், மாதாந்திர பயனாளர் கட்டணத்தை குடியிருப்பு இணைப்புக்கு ₹ 50.50லிருந்து ₹ 285 மற்றும் வணிக/தொழில் இணைப்புக்கு ₹ 151.50லிருந்து ₹ 855 எனவும், அக்டோபர் 2017 முதல் திருத்தி அமைத்தது. துணைவிதியின்படி, தற்போதுள்ள நுகர்வோர்களிடமிருந்து துவக்க வைப்பு தொகையின் வித்தியாச தொகையை ஆறு மாத காலத்திற்குள் இரண்டு தவணைகளில் வசூலிக்க வேண்டும். மார்ச் 2018 நிலையில், 21,081 குடியிருப்பு மற்றும் 192 வணிக/தொழில் இணைப்புகள் என 21,273 WS இணைப்புகளை நகராட்சி வழங்கி இருந்தது.

நகராட்சி, தற்போதுள்ள நுகர்வோர்களிடமிருந்து துவக்க வைப்பின் வித்தியாச வசூலிக்காமல், புதிய நுகர்வோர்களுக்கு துவக்க வைப்பு தொகையையும் பயனாளர் கட்டணங்களையும் முந்தைய வீதங்களிலேயே விதித்தது. வசூலிக்கப்படாத துவக்க வைப்பின் வித்தியாச தொகை ₹ 5.37 கோடி ஆகும். அக்டோபர் 2017 முதல் மார்ச் 2018 வரையிலான காலகட்டத்திற்கு விதிக்கப்படாத மாதாந்திர பயனாளர் கட்டணங்களின் வித்தியாச தொகை ₹ 2.89 கோடி ஆகும். துணைவிதிகளில் குறிப்பிடப்பட்ட திருத்திய வீதங்களை பயன்பாட்டு மென்பொருளில் இணைக்க தவறியதால், முறையே ₹ 5.37 கோடி மற்றும் ₹ 2.89 கோடி அளவிலான துவக்க வைப்பு மற்றும் மாதாந்திர பயனாளர் கட்டணங்களின் வித்தியாச தொகைகளை வசூலிக்க இயலவில்லை.

நிறைவு கலந்தாய்வு கூட்டத்தின்போது, திருத்தப்பட்ட வீதங்களை UTISல் இணைக்குமாறு CMAக்கு தமிழ்நாடு அரசு அறிவுறுத்தியது (அக்டோபர் 2018).

(iv) UGD மற்றும் சொத்து வரி தகவமைவுகள் இணைக்கப்படாமை

CFC, PT மற்றும் கணக்கு தகவமைவுகளுடன் UGD தகவமைவை ஒருங்கிணைக்க வேண்டும் என SRS கூறியது. குடிமக்கள் UGD இணைப்புக்கான விண்ணப்பத்தை கட்டாய ஆவணங்களுடன் CFCல் அளிக்கின்றனர். PT மதிப்பீடு அட்டவணையில் பதிவாகியுள்ள சொத்தின் பரப்பளவு மற்றும் பயன்பாட்டு விவரங்களின் அடிப்படையில் குடிமக்கள் செலுத்த வேண்டிய UGD வைப்புத் தொகையின் துவக்க தொகையை தானியங்கி முறையில் கணக்கிடுதற்காக UGD இணைப்புக்கான கோரிக்கையுடன் PT மதிப்பீட்டு எண்ணை கணினி ஒருங்கிணைக்கவேண்டும். UGD மற்றும் PT தகவமைவுகளை ஒருங்கிணைக்காததால், கீழே விவாதிக்கப்பட்டுள்ளபடி, முரண்பாடுகளும் அவற்றின் காரணமாக கைமுறை தலையீடுகள் மூலமான மாறுதல்களும் உருவாயின.

(அ) பல்லவபுரம் மற்றும் கும்பகோணம் நகராட்சிகள்

குடியிருப்பு மற்றும் வணிகப் பிரிவுகளுக்கு UGD இணைப்புகளை வழங்குவதற்கான துவக்க வைப்புத் தொகையை, பல்லவபுரம் நகராட்சி முறையே ₹ 0.10 இலட்சம் மற்றும் ₹ 0.20 இலட்சம் என்றும், கும்பகோணம் நகராட்சி முறையே ₹ 0.05 இலட்சம் மற்றும் ₹ 0.10 இலட்சம் என்றும் நிர்ணயித்தன. அந்த நகராட்சிகள் துவக்க வைப்பு தொகை தொடர்பாக (i) பல்லவபுரத்தில் 103 இணைப்புகள் மற்றும் கும்பகோணத்தில் 29 இணைப்புகளில் குடியிருப்பு இணைப்புகளுக்கு வணிக வீதத்தில் கணக்கிட்டு ₹ 11.75 இலட்சம் மிகையாகவும் (ii) பல்லவபுரத்தில் 10 இணைப்புகள் மற்றும் கும்பகோணத்தில் ஒன்பது இணைப்புகளில் வணிக இணைப்புகளுக்கு குடியிருப்பு வீதத்தில் கணக்கிட்டு ₹ 1.45 இலட்சம் குறைவாகவும் வசூலித்தன.

நிலுவை தொகையை செலுத்துமாறு நுகர்வோருக்கு தெரிவிக்கப்பட்டதாக பல்லவபுரம் நகராட்சியும், நேர்வுகள் சரிபார்க்கப்படும் என கும்பகோணம் நகராட்சியும் தெரிவித்தன (ஆகஸ்ட் 2018).

(ஆ) திருவாரூர் நகராட்சி

நுகர்வோருடைய சொத்தின் பரப்பளவு மற்றும் பயன்பாட்டின் அடிப்படையில் UGD இணைப்பிற்கான துவக்கை வைப்பு தொகையை நகராட்சி நிர்ணயித்தது.

மார்ச் 2018 நிலையில் வழங்கப்பட்ட 4,235 குடியிருப்பு மற்றும் 196 வணிக இணைப்புகள் என மொத்தம் 4,431 UGD இணைப்புகளுள், 3,168 இணைப்புகளில் PTக்கான 'AssessmentId' என்ற குறியீடு எண் வழங்கப்படவில்லை; இது, துவக்க வைப்பு மற்றும் பயனாளர் கட்டணங்களின் தானியங்கி கணக்கீடுகளுக்கான UGD மற்றும் PT தகவமைவுகள் ஒருங்கிணைக்கப்படாததை காட்டியது. மேலும், UGD இணைப்புகளுக்கான துவக்க வைப்பு, 259 இணைப்புகளில் ₹ 7.70 இலட்சம் மிகையாகவும், 150 இணைப்புகளில் ₹ 4.31 இலட்சம் குறைவாகவும் வசூலிக்கப்பட்டிருந்தது. இது தவிர, 2016-18 காலகட்டத்தில், UGD இணைப்புகளுக்கான பயனாளர் கட்டணம், 258 இணைப்புகளில் ₹ 1.03 இலட்சம் மிகையாகவும், 1,069 இணைப்புகளில் ₹ 1.55 இலட்சம் குறைவாகவும் வசூலிக்கப்பட்டிருந்தது. வைப்பு தொகையை தானியங்கி முறையில் பதிவாவதற்கும், சொத்தின் பரப்பளவு மற்றும் பயன்பாட்டின் அடிப்படையில் கேட்பு தொகையை கணக்கிடும் வகையிலும் பயன்பாட்டு மென்பொருள் வடிவமைக்கப்படவில்லை என்பதாலும், பணிப்பாய்வு அமைப்புமுறையில் அளவுநிலை வீதங்கள் கையீட்டு முறையில் பதியப்பட்டன என்பதாலும் இந்த முரண்பாடுகள் எழுந்தன.

நிறைவு கலந்தாய்வு கூட்டத்தில், தகவமைவுகளை ஒருங்கிணைக்கும் பொருட்டு, தணிக்கை கண்டறிந்தவற்றை கருத்தில் கொள்ளுமாறு MAWS துறைமுதன்மை செயலாளர் CMAக்கு அறிவுறுத்தினார் (அக்டோபர் 2018).

2.3.8.5 வணிக உரிமம்

தானியங்கி அபராதத்திற்கான வசதியை பயன்படுத்தாமை

நகராட்சி எல்லைக்குள் மேற்கொள்ளக்கூடிய வணிகங்களின் பட்டியலை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920ன் பிரிவு 249ம் அட்டவணை Vம் கூறின. ULBக்கள், மாவட்ட அரசிதழில் அறிவிக்கப்பட்ட உரிம கட்டணத்தை வசூலித்து

வணிக உரிமங்களை வழங்குகின்றன. உரிமம் ஒரு நிதியாண்டிற்கு செல்லுபடியாகும்; காலாவதியான பிறகு அதனை புதுப்பிக்க வேண்டும்.

நகராட்சிகள், வணிகப் பட்டியல் மற்றும் வணிக உரிம கட்டணங்கள் ஆகியவற்றில் மூல பதிவுகளை உருவாக்கிய பின், வணிக உரிம விண்ணப்பங்களின் மீது நடவடிக்கை எடுக்கின்றன. UTISன் வணிக உரிமத் தகவமைவு, குடிமக்கள் வசதி மையத்தை முன் முனை திரையில் கொண்டது; அதை செயல்படுத்த, பயன்பாட்டு முறை, பல்வகை வரவுகள் (Miscellaneous Receipts) (MR) முறை மற்றும் புகார் முறை என மூன்று முறைகள் உள்ளன. உரிய நாளுக்குள் உரிமங்களை புதுப்பிக்காததற்கு உரிம கட்டணத்தில் 25 விழுக்காடு அளவு அபராதத்திற்கு தானியங்கி முறையாக கேட்பை உருவாக்க பயன்பாட்டு முறையில் வசதி உண்டு. விண்ணப்பங்களின் மீது நடவடிக்கை எடுக்க MR முறை கைமுறை வழியை பயன்படுத்துகிறது.

உரிய காலத்திற்குள் வணிக உரிமத்தை புதுப்பிக்காததற்கான அபராதத்தை ஒவ்வொரு ULBயும் மாவட்ட அரசிதழில் அறிவிப்பு செய்கிறது. அதன்படி, ஒவ்வொரு நகராட்சியிலும் அபராதத்தின் வீதம் மாறுபடும். UTIS அதன் பணிப்பாய்வு தரவுத்தளத்தில், ஒவ்வொரு நகராட்சியும் தமக்கேற்றவாறு வீதத்தை மாற்றுவதற்கான வசதி இல்லாமல், இயல்புநிலையாக 25 விழுக்காடு அபராதம் விதிக்க வசதி செய்தது.

அபராதத்தின் வீதத்தை, குன்னூர் மற்றும் உதகமண்டலம் நகராட்சிகள் உரிய கட்டணங்களில் 100 விழுக்காடு எனவும், கோபிசெட்டிப்பாளையம் நகராட்சி 50 விழுக்காடு எனவும் நிர்ணயித்திருந்தன. நகராட்சிகள் நிர்ணயித்த வீதங்கள் பணிப்பாய்வு தரவுத்தளத்தில் பதியப்படாததால், நகராட்சிகள் தாம் விதித்த அபராதத்தை வசூலிக்க, கைமுறை தலையீட்டின் மூலமான MR முறையை கையாண்டன .

நிறைவு கலந்தாய்வு கூட்டத்தில், MR முறை மூலம் தரவுகளின் உள்ளீட்டை நிறுத்தவும் அபராத தொகை வசூலிப்பை கணினி முறையில் வழமைப்படுத்தவும் MAWS துறை முதன்மை செயலாளர் ஒப்புக்கொண்டார் (அக்டோபர் 2018).

2.3.8.6 நிதி கணக்குவைப்பு

(i) பணிப்பாய்வு தரவுத்தளத்தில் ஆண்டு கணக்குகளை அளிப்பதற்குரிய நாட்களை பின்பற்றாமை

புதுப்பிக்கப்பட்ட நகராட்சி கணக்குவைப்பு கையேடு மற்றும் மையப்படுத்தப்பட்ட மின் ஆளுமை மென்பொருளின் பகுதியாக கட்டங்கள் I மற்றும் IIன் அனைத்து தகவமைவுகளையும் ஒருங்கிணைக்கும் நோக்கில் திட்டமிடப்பட்ட பயன்பாட்டு மென்பொருள் ஆகியவற்றுக்கேற்ப UTISல் ULBக்களுக்கான நிதி கணக்குவைப்பு (FA) தகவமைவு வடிவமைக்கப்பட்டுள்ளது. நிதி மேலாண்மையின் முன்னேற்றம், பொறுப்புடைமை, மேலாண்மை மற்றும் நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மை, தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கைகளை உரிய நேரத்தில் வெளியிடுதல், வளங்கள் மற்றும் இடர்களின் சிறப்பான மேலாண்மை ஆகியவை பிறவற்றிற்கிடையே FA தகவமைவின் நோக்கங்கள் ஆகும்.

கட்டம் Iன் தொகுதிகள் மாநிலத்தின் அனைத்து நகராட்சிகளிலும், செப்டம்பர் 2015 முதல் ஜூலை 2017 வரை பல கட்டங்களாக பயன்பாட்டுக்கு வந்திருந்தாலும், 2017-18ம் ஆண்டிற்கான ஆண்டு கணக்குகளை தயாரிக்கும் பணி வெவ்வேறு நிலைகளில் இருந்தன (ஆகஸ்ட் 2018). உள்ளூர் நிதி தணிக்கை

இயக்குநரகத்திற்கு (DLFA) கணக்குகளை அளிக்க வேண்டிய நாள், நிதி ஆண்டு முடிவிலிருந்து மூன்று மாதம் ஆகும். சோதனை ஆய்வு செய்யப்பட்ட நகராட்சிகளுள் ஐந்து நகராட்சிகள் ஆண்டு கணக்குகளை UTIS பயன்பாட்டு மென்பொருளில் தயாரித்து DLFAன் ஒப்புதலுக்கு அளித்தன. மீதமுள்ள 11 நகராட்சிகளில்[62], கணக்குகளை தயாரிக்கும் பணி நடைபெற்று வந்தது என்பது, FA தகவமைவை செயல்படுத்துவதன் முக்கிய நோக்கங்கள் இன்னும் நிறைவேறவில்லை என்பதை காட்டியது.

கணக்குகளை முடித்து உரிய நேரத்தில் DLFAவிற்கு அளிக்குமாறு ULBக்களுக்கு அறிவுறுத்தி உள்ளதாக CMA மறுமொழி அளித்தார் (டிசம்பர் 2018).

(ii) பெறப்பட்ட காசோலை/வரைவோலைகளை தாமதமாக செலுத்தியமை

பெறப்படும் அனைத்து பணமும், வேறுவிதமாக குறிப்பிட்டால் தவிர, அவை பெறப்பட்டவுடன், நகராட்சி நிதி கணக்கில் செலுத்தப்பட வேண்டும் என்பதை தமிழ்நாடு அரசு நகராட்சி கையேடு பகுதி II வலியுறுத்துகிறது. 2017-18 காலகட்டத்தில், சோதனை ஆய்வு செய்யப்பட்ட பதினாறு நகராட்சிகளுள் ஒன்பது[63] நகராட்சிகள் பெற்ற 12,363 காசோலைகள்/வரைவோலைகளுள், ₹ 6.33 கோடி மதிப்புள்ள 4,550 காசோலைகள்/வரைவோலைகள் 8 முதல் 90 நாட்கள் வரையிலான தாமதத்திற்கு பிறகு வங்கிகளில் செலுத்தப்பட்டன; அதாவது, ₹ 2.81 கோடி மதிப்புடைய 2,219 நேர்வுகள் 8 - 15 நாட்கள், ₹ 1.76 கோடி மதிப்புடைய 1,235 நேர்வுகள் 16 - 30 நாட்கள், ₹ 1.76 கோடி மதிப்புடைய 1,096 நேர்வுகள் 30 - 90 நாட்கள் கடந்த பின்னர் செலுத்தப்பட்டன.

மேற்படி தாமதத்தை தவிர்ப்பதற்காக, பெறப்படும் காசோலை/வரைவோலைகளை அதே நாளில் செலுத்துமாறு, அவற்றை பெறும் ஊழியர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்படும் என CMA மறுமொழி அளித்தார் (டிசம்பர் 2018).

(iii) நிதி கணக்குவைப்பு தகவமைவில் சமமற்ற உள்ளீடுகள் ஏற்பு

நகராட்சிகள் இயல்பாக சேர்த்தல் (accrual) அடிப்படையில் கணக்குவைப்பு முறையை பின்பற்றுகின்றன. இதில், வரவுக்கான ஒரு பதிவிற்கு தொடர்பாக ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பற்று பதிவுகளையும், இதற்கு எதிர்வகையான பதிவுகளையும் செய்ய UTISன் FA தகவமைவு வழி செய்து, பற்றுகளின் மொத்த மதிப்பும் வரவுகளின் மொத்த மதிப்பும் ஒத்திருப்பதை உறுதி செய்கிறது. 2017-18 காலகட்டத்தில் 50 நகராட்சிகளில், 4,002 செலவு சீட்டுகளில், பற்று பதிவுகளுக்கும் அவற்றுக்கு தொடர்பான வரவு பதிவுகளுக்கும் இடையில் வேறுபாடுகள் இருந்தன. சமமற்ற உள்ளீடுகள் மென் பொருளில் பதியப்பட்டது உள்ளீடு கட்டுப்பாடுகள் இல்லாததை காட்டியது.

இத்தவறுக்கான காரணம் அடையாளம் காணப்பட்டு சீர்செய்யப்படும் என CMA மறுமொழி அளித்தார் (டிசம்பர் 2018).

2.3.8.7 பொறுப்பு மேலாண்மை மற்றும் பயன்பாட்டு உரிமைகள்

பணிப்பாய்வு அமைப்புமுறையில் பணிபுரியும் அலுவலர்களுக்கு, நிர்வாகத்தில் அவர்களின் பங்கு மற்றும் பொறுப்பின் அடிப்படையில் வழங்குவதற்கென அணுகு

[62] ஆற்காடு, பவானி, குன்னூர், கோபிசெட்டிப்பாளையம், கும்பகோணம், மன்னார்குடி, திருமங்கலம், திருவாரூர், திருப்பத்தூர், உதகமண்டலம் மற்றும் வாலாஜாப்பேட்டை.

[63] அரக்கோணம், ஆற்காடு, பவானி, குன்னூர், கோபிசெட்டிப்பாளையம், திருமங்கலம், திருப்பத்தூர், உதகமண்டலம் மற்றும் வாலாஜாப்பேட்டை.

கட்டுப்பாடுகளை நிர்வாக தகவமைவு கொண்டுள்ளது; இது, கணினி அமைப்பை பயன்படுத்தும் உரிமைகளை சரியான பகிர்ந்தளித்தல், உள்ளமைந்த அமைப்புகளிடையே சரியான இணைப்பு ஆகிவற்றை உறுதி செய்கிறது. பயனாளாகள் பணிப்பாய்வு அமைப்பு முறையில் செயல்பாடுகளை நிறைவேற்ற அவர்களின் தகுதி நிலையை பொறுத்து, உள்நுழைவு ஆதார சான்றுகளையும் பயன்பாட்டு உரிமைகளையும் அமைப்பு நிர்வாகி ஒதுக்குகிறார். இந்த அணுகு கட்டுப்பாடுகள், தரவுகளை பாதுகாத்து, தணிக்கை தடத்தை உருவாக்கி, கணினி அமைப்பின் தவறான பயன்பாட்டை தடுக்கின்றன. பதினொரு நகராட்சிகளில்[64], வரி மற்றும் கட்டணங்களை செலுத்துவதற்கான குடிமக்களின் சேவை கோரிக்கைகள், வழக்கமான CFC பணியாளர்கள் அல்லாத, பணியில் இருக்கும் வேறு நபர்களுக்கு கடவுச்சொற்களை தெரிவித்து, அவர்கள் மூலம் அமைப்பில் பதியப்பட்டன. அணுகு கட்டுப்பாடுகளில் உள்ள பாதுகாப்பு அமைப்புகளை நகராட்சிகள் பயன்படுத்தவில்லை என்பதை இது காட்டியது.

பயனாளர் அடையாளம்/கடவுச்சொல்லை பகிரக்கூடாது என்றும் வழக்கமான ஊழியர்கள் விடுப்பில் இருக்கும்போது CFC இயக்குபவருக்கு முன்கூட்டியே பணியை ஒப்படைக்குமாறு ULBக்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளது என்றும் CMA மறுமொழி அளித்தார் (டிசம்பர் 2018).

2.3.8.8 கடவுச்சொல் கொள்கை

கடவுச்சொல் என்பது ஒரு தகவல் அமைப்பு அல்லது சேவையை அணுகுவதற்கான பயனாளர் அடையாளமாகும். அரசுத்துறையின் வள ஆதாரங்களை அணுகும் அங்கீகரிக்கப்பட்ட நபர்கள் கடவுச்சொல் மேலாண்மை நடைமுறைகளை பின்பற்றுவதை உறுதி செய்ய கடவுச்சொல் தொடர்பான தரங்களை செயல்படுத்த வேண்டும் என்று தமிழ்நாடு அரசின் ‘மின்-பாதுகாப்பு கொள்கை 2010’ கூறுகிறது. மார்ச் 2018 நிலையில், மாநிலத்தின் நகராட்சிகளில் செயல்பாட்டில் இருந்த 5,110 பயனாளர்களுள், 2,740 பயனாளர்கள் 180 நாட்களுக்குப் பிறகும் கடவுச்சொல்லை மாற்றவில்லை. கணினி அமைப்பில் குறிக்கப்பட்ட நாட்களுக்குள் பயனாளர்கள் கட்டாயமாக கடவுச்சொல்லை மாற்றவேண்டும் என்ற பயன்பாட்டு மென்பொருளிலுள்ள வழிவகையை நகராட்சியிலுள்ள கணினி நிர்வாகிகள் பின்பற்றவில்லை.

தணிக்கை சுட்டிக்காட்டியதன் பேரில், 60 நாட்களுக்கு ஒரு முறை கடவுச்சொல்லை மாற்றியமைக்கும் விதத்தில் பயன்பாட்டு மென்பொருள் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது என CMA மறுமொழி அளித்தார் (டிசம்பர் 2018).

2.3.9 கண்காணிப்பு

2.3.9.1 நகராட்சி சேவைகளை வழங்குவதில் நிலுவை மற்றும் தாமதம்

UTIS கட்டம் Iன் கீழ் அடங்கிய, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு, சொத்து வரி, தொழில் வரி, குடிநீர் மற்றும் கழிவுநீர் வடிகால், வரி அல்லாத வருவாய், வணிக உரிமங்கள், குறை தீர்த்தல் போன்றவை தொடர்பான அனைத்து நகராட்சி சேவைகளும் இணைய அடிப்படையிலான பணிப்பாய்வு அமைப்புமுறை மூலம்

---

64 அனகாபுத்தூர் (511 நேர்வுகள்), ஆற்காடு (384 நேர்வுகள்), பவானி (599 நேர்வுகள்), குன்னூர் (153 நேர்வுகள்), கோபிசெட்டிப்பாளையம் (25 நேர்வுகள்), மன்னார்குடி (363 நேர்வுகள்), பல்லவபுரம் (1,082 நேர்வுகள்), திருமங்கலம் (61 நேர்வுகள்), திருவாரூர் (142 நேர்வுகள்), உதகமண்டலம் (939 நேர்வுகள்) மற்றும் வாலாஜாப்பேட்டை (397 நேர்வுகள்).

குடிமக்களுக்கு வழங்கப்படுகின்றன. ஒரு சேவைக்காக உருவாக்கப்பட்ட ஒரு சேவை கோரிக்கை அடையாளம், அந்த சேவை கோரிக்கை நிறைவேற்றப்பட்டு CFC முகப்பு பெட்டியிலிருந்து அகற்றப்படும் வரை பணிப்பாய்வு அமைப்பில் உயிர்ப்புடன் இருக்கும். சேவை கோரிக்கையின் மீதான நடவடிக்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் பணிப்பாய்வு அடையாளம் உருவாக்கப்படுகிறது. முகப்புப் பெட்டி, நிலுவையிலுள்ள நேர்வுகளை வெளிக்காட்டுகிறது; CFC/சேவை பயனாளர்களின் மடல்பெட்டியில் (inbox) நிலுவையிலுள்ள நேர்வுகளின் நிலையை ஒவ்வொரு கட்டத்திலும் கண்காணிக்கிறது. இது, நகராட்சியின் அனைத்து நிலை அலுவலர்களும் தனது கட்டுப்பாட்டில் இயங்கும் அலுவலர்களின் செயல்திறனை மதிப்பிடும் வகையில், நிலுவையிலுள்ள வழக்குகளின் எண்ணிக்கை மற்றும் கால அளவை அறிய உதவுகிறது. விண்ணப்பங்கள் பெறப்பட்ட தேதியிலிருந்து, வணிக உரிமங்கள் வழங்க 45 நாட்கள், PT மதிப்பீடு செய்ய 30 நாட்கள், குடிநீர் இணைப்புக்கு 15 நாட்கள், பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ்கள் வழங்க ஒன்று முதல் ஏழு நாட்கள் வரை என நகராட்சிகளின் குடிமக்கள் சாசனத்தில் நகராட்சி சேவைகளை வழங்க ஒன்று முதல் 45 நாட்கள் அவகாசம் விதிக்கப்பட்டுள்ளது.

(i) குடிமக்களின் சேவை கோரிக்கைகள் பணிப்பாய்வு அமைப்புமுறையில் நீண்ட காலம் நிலுவையில் இருந்தமை

ஜனவரி 2018 நிலையில், பிறப்பு சான்றிதழ்கள், PT மதிப்பீடுகள், பெயர் மாற்றம் போன்றவற்றிற்கான 91,63,399 சேவை கோரிக்கைகள் மாநிலத்தின் நகராட்சிகளில் பெறப்பட்டன. இதில், மார்ச் 2018ன் இறுதியில், 2,87,742 சேவை கோரிக்கைகள் தரவுத்தளத்தில் நிலுவையில் இருந்ததாக காட்டப்பட்டது. நிலுவையில் இருந்த கோரிக்கைகளில், 41,557 கோரிக்கைகள் சோதனை ஆய்வு செய்யப்பட்ட நகராட்சிகளில் பெறப்பட்டவை ஆகும் (**இணைப்பு 2.15**).

(ii) குடிமக்கள் சேவை மையங்களின் மூலம் நகராட்சி சேவைகள் வழங்குவதில் இயல்பு மீறிய தாமதம்

விண்ணப்ப படிவங்களை பெற்று அளிப்பது, சேவைகளின் நிலையை அறிவது, PT, தொழில் வரி, குடிநீர் மற்றும் கழிவுநீர் பயனாளர் கட்டணங்கள், வணிக உரிமங்கள் ஆகியவற்றுக்கான தொகைகளை செலுத்துவது, நகராட்சி சேவைகளில் உள்ள குறைபாடுகளுக்கான புகார்களை பதிவு செய்வது போன்றவற்றில் திறமையான, வெளிப்படையான மற்றும் நம்பகமான நகராட்சி சேவைகளை வழங்குவதற்காக ULBக்கள் CFCக்களை நிறுவின. சோதனை ஆய்வு செய்யப்பட்ட நகராட்சிகளில் 2015-18 காலகட்டத்தில் புதிய சொத்துக்களுக்கான PTயை மதிப்பீடு செய்வதற்கு பெறப்பட்ட 17,109 விண்ணப்பங்களுள், 9,284 நேர்வுகள் ஒன்று முதல் 785 நாட்கள் காலதாமதத்திற்குப் பிறகு மதிப்பிடப்பட்டன. அதே போல், குடியிருப்பு குடிநீர் இணைப்புகளுக்காக பெறப்பட்ட 4,789 விண்ணப்பங்களுள், 2,854 நேர்வுகளில் நகராட்சிகள் ஒன்று முதல் 713 நாட்கள் காலதாமத்திற்குப் பிறகு இணைப்புகளை வழங்கின (**இணைப்பு 2.16**).

இது நிர்வாகத்தின் பல்வேறு படிநிலைகளின் முகப்புப் பெட்டியில் இருந்த மேலாண்மை தகவல் அமைப்பின் (MIS) அறிக்கைகள் கண்காணிக்கப்படாததை காட்டியது.

நிலுவையிலுள்ள சேவை கோரிக்கைகளை நிர்ணயிக்கப்பட்ட கால அளவிற்குள் தீர்த்திட ULBக்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாக CMA மறுமொழி அளித்தார் (டிசம்பர் 2018). முதுநிலை அதிகாரிகள் சேவை வழங்கலின்

முன்னேற்றத்தை கண்காணிக்க தற்போதுள்ள முகப்புப்பெட்டி மேம்படுத்தப்பட்டுள்ளது என CMA மேலும் கூறினார்.

2.3.9.2 வரி மற்றும் வரி அல்லாத நிலுவைகளை வசூலிப்பதில் தொடர் நடவடிக்கை இல்லாமை

வரி மற்றும் வரி அல்லாத நிலுவைதொகைகளை வசூலிப்பதிலுள்ள நிலுவைகளை ULB மற்றும் துறை அதிகாரிகள் அறிந்து கொள்வதற்கு UTIS ஒரு முகப்புப்பெட்டியை கொண்டுள்ளது.

(i) தொழில் வரி

நகராட்சிகள் நிலுவை கேட்பு பதிவேட்டை பராமரித்து, வசூலிக்க இயலாத கேட்புகளை தள்ளுபடி செய்வதற்கு முன், நிலுவை தொகையை வசூலிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசின் நகராட்சி கையேடு, பாகம் IIன் பத்திகள் 4.36 மற்றும் 4.38 கூறுகின்றன. **இணைப்பு 2.17**ல் விவரிக்கப்பட்டுள்ளவாறு, சோதனை ஆய்வு செய்யப்பட்ட நகராட்சிகளில் 2013-18 காலகட்டத்தை சார்ந்த 26,228 மதிப்பீடுகளுக்குரிய ₹ 6.84 கோடி நிலுவையில் இருந்தது.

(ii) குடிநீர் வழங்கல் பயனாளர் கட்டணங்கள்

நகராட்சியின் WS துணைவிதிகள் குறிப்பிட்டுள்ள படி, கேட்பு நாளில் இருந்து 15 நாட்களுக்கு மேல் பயனாளர் கட்டணங்கள் நிலுவையில் இருந்தால் WS இணைப்பை துண்டித்து, அதனை தரவுத்தளத்தில் பதியுமாறு இயக்கக் கையேடு குறிப்பிடுகிறது. மாநிலத்திலுள்ள நகராட்சிகள் 1996-2018 காலகட்டத்தில் நுகர்வோருக்கு வழங்கிய 3,59,346 WS இணைப்புகள் தொடர்பாக ₹ 96.33 கோடி நிலுவையில் இருந்தது. இதில், ₹ 11.84 கோடி சோதனை சரிபார்ப்பு செய்யப்பட்ட நகராட்சிகளின் 55,227 நுகர்வோர்கள் தொடர்பானது ஆகும்.

(iii) கழிவுநீர் கால்வாய் பயனாளர் கட்டணங்கள்

மாநிலத்திலுள்ள நகராட்சிகள் 1999-2018 காலகட்டத்தில் நுகர்வோருக்கு வழங்கிய 1,11,772 UGD இணைப்புகள் தொடர்பாக பயனாளர் கட்டணங்கள் ₹ 38.28 கோடி நிலுவையில் இருந்தது. இதில், ₹ 13.77 கோடி சோதனை ஆய்வு செய்யப்பட்ட கும்பகோணம், பல்லவபுரம், திருவாரூர் மற்றும் உதகமண்டலம் ஆகிய நான்கு நகராட்சிகளின் 35,254 UGD இணைப்புகள் தொடர்பானது ஆகும்.

(iv) வரி அல்லாத வருவாய்

சோதனை ஆய்வு செய்யப்பட்ட நகராட்சிகளுள் 15 நகராட்சிகளில், 2013-18 காலகட்டத்தில், **இணைப்பு 2.18**ல் விவரிக்கப்பட்டுள்ளவாறு, குத்தகை வாடகை வசூலில் ₹ 27.93 கோடி நிலுவையில் இருந்தது.

சோதனை ஆய்வு செய்யப்பட்ட நகராட்சிகளுள் திருமங்கலம் தவிர்த்த எந்த நகராட்சியும், ULB நிர்வாகி உள்நுழைவு மூலம் தானாக அபராத வட்டியை கணக்கிடுவதை உருவாக்கக்கூடிய வசதியை பயன்படுத்தவில்லை. இதன் காரணமாக, UTIS அமைப்பு அபராத வட்டிக்கான கேட்பை உருவாக்கவில்லை.

நிலுவை தொகைகளை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என நகராட்சிகள் மறுமொழி அளித்தன (ஆகஸ்ட் 2018). மேலாண்மை தகவல் அமைப்பின் (MIS) அறிக்கைகள் மூலம் வருவாய் வசூல் முன்னேற்றம் குறித்து கண்காணிக்க நிர்வாகத்தின் பல்வேறு படிநிலைகளின் முகப்புப்பெட்டியில் வழிவகை இருந்தபோதிலும், 1996-97 முதல் 2017-18 வரையிலான காலகட்டத்தில், தொழில்

வரி, WS பயனாளர் கட்டணங்கள், UGD பயனாளர் கட்டணங்கள் மற்றும் வரி அல்லாதவைகள் தொடர்பாக ₹ 60.38 கோடி சோதனை ஆய்வு செய்யப்பட்ட நகராட்சிகளால் வசூலிக்கப்படாமல் இருந்தது.

வரி மற்றும் வரி அல்லாத நிலுவைகளின் வசூலிப்பின் முன்னேற்றத்தை கண்காணிக்க நிர்வாகபடி நிலைகளின் முகப்புப் பெட்டியில் உள்ள வழிவகைகள் பயன்படுத்தப்படும் என CMA மறுமொழி அளித்தார் (டிசம்பர் 2018).

2.3.9.3 இணைய தள வழி மூலம் செலுத்தப்பட்ட தொழில் வரி மற்றும் வணிக உரிமங்கள் பெறப்படாமை

பதிவு செய்தல், பணம் பெறுதல், விவர அறிக்கைகளை தாக்கல் செய்தல், உரிமங்களை வழங்குதல் மற்றும் புதுப்பித்தல் ஆகிய தொழில் வரி மற்றும் வணிக உரிமங்கள் தொடர்பான அனைத்து சேவைகளும், அவைகள் விரைவாக வழங்கப்படுவதை உறுதிப்படுத்த, இணையதள வழி மூலம் வழங்கப்படவேண்டும் என CMA உத்தரவிட்டார் (ஆகஸ்ட் 2017).

மாநிலத்தில் அக்டோபர் 2017 முதல் மார்ச் 2018 வரையான காலகட்டத்திற்குரிய, 63,978 தொழில் வரி செலுத்தங்களுள் 62,454 (98 விழுக்காடு) செலுத்தங்கள் மற்றும் 18,437 வணிக உரிம கட்டண வசூல் நேர்வுகளுள் 18,425 நேர்வுகள் பணம்/காசோலை/வரைவோலைகளாக பெறப்பட்டன. குறிப்பான அறிவுறுத்தல்கள் இருந்தபோதிலும், ‘எங்கும் எப்பொழுதும்’ செலுத்தலாம் என்பதற்கான தடையற்ற செயல்பாட்டுக்கு பரந்த விளம்பரம் இருக்கவில்லை என்பதை இது காட்டியது.

இப்பொருள் பற்றி விளம்பரப்படுத்திவிட்டு உத்தரவுகளை அமல்படுத்துமாறு ULBக்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன என CMA மறுமொழி அளித்தார் (டிசம்பர் 2018).

2.3.10 முடிவுரை

(அ) சேவை கோரிக்கைகளின் தற்போதைய நிலையை அறிய குடிமக்களுக்கு உதவுவது, நகராட்சிகளின் தனித்தனி தரவுத்தளங்களை மையப்படுத்தப்பட்ட ஒற்றை தரவுத்தளமாக ஒருங்கிணைப்பது போன்ற கணினியமைப்பில் மேம்பாடுகள் மற்றும் (ஆ) திட்டமிடுதல், தகவமைவுகளின் செயலாக்கம், கண்காணிப்பு ஆகியவற்றில் குறைபாடுகளும் இருந்ததை தணிக்கை வெளிக்காட்டியது. Urban Tree Information System பொதுவில் விலையின்றி கிடைக்கும் மென்பொருளுக்கு மாறாக விலையுடன் கூடிய மென்பொருளை பயன்படுத்தியது. குடிமக்கள் இணையதளம், 'எங்கும் எப்போதும்' சேவைகளை வழங்கும் நோக்கத்தை முறியடிக்கும் வகையில் பொதுமக்களுக்கு குறைந்த அளவிலான சேவைகளையே வழங்கியது. குறை தீர்ப்பு தகவமைவு புகார்களை கட்டணமின்றி பதிவு செய்யும் வசதியை அளிக்கவில்லை**.** குடிமக்கள் வசதி மையங்களில் கட்டாய ஆவணங்கள் கணினிமயமாக்கப்படவில்லை. இரண்டு கட்டங்களாக ஆகஸ்ட் 2015க்குள் முடிக்கப்படவிருந்த திட்டம் முடிவடையாமல் இருந்தது. தரவுகளின் இடப்பெயர்வில் துல்லியமின்மை, பல்வேறு தகவமைவுகளின் அட்டவணைகளின் கட்டாய புலன்களிடையே தொடர்பின்மை தரவுகளின் தவறான பதிவுகள், ஒரே சொத்திற்கு காலி நில வரி மற்றும் சொத்து வரி கேட்பு உருவாக்கல், மதிப்பீடுகளை தவறாக இரத்து செய்தல், விடுபட்ட கேட்புகள், வருவாய் கசிவு, கண்காணிப்பு இல்லாமை ஆகியவை கணினி அமைப்பில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க பிற குறைபாடுகளாகும்.

2.3.11 பரிந்துரைகள்

தமிழ்நாடு அரசு பின்வருவனவற்றை பரிசீலிக்கலாம்:

- குடிமக்கள் இணையதளம் மற்றும் குடிமக்கள் வசதி மையங்களில் அனைத்து சேவைகளும் கிடைக்குமாறு செய்ய வேண்டும்,
- குறை தீர்ப்பு முறைமையில் கட்டணமில்லா புகார்கள் பதிவாவதற்கு ஏற்பாடு செய்யப்படவேண்டும்,
- கணினிமயமாக்கப்பட்ட ஆவணங்கள் பணிப்பாய்வு செயல்முறையில் பயன்பாட்டிற்கு கிடைக்குமாறுசெய்யப்பட வேண்டும்,
- தகவமைவுகளுக்கு உள்ளேயும் பல்வேறு தகவமைவுகளிலும் அமைந்த அட்டவணைகளின் ஒருங்கிணைப்பு உறுதி செய்யப்படவேண்டும்; தகவமைவுகளில் அனைத்து கணக்கீடுகளும் தானியங்கி முறையில் நடக்குமாறு செய்யப்படவேண்டும்,
- திறனுள்ள கண்காணிப்பின் பொருட்டு, பயன்பாட்டு மென்பொருளிலுள்ள அறிக்கை தொடர்பான அம்சங்களை பயன்படுத்தலாம்; விழிப்பூட்டல்களுடன் கூடிய குறைபாடுகளை மேலெடுத்துச் செல்லும் அமைவுரு கணினி அமைப்பில்சேர்க்க வேண்டும்.
- பின்முனை செயல்பாடுகள் மூலம் தரவுத்தளத்தில் மாற்றங்கள்/ நீக்குதல்கள் மேற்கொள்ளக்கூடாது மற்றும்
- சோதனை ஆய்வு செய்யப்பட்ட 16 நகராட்சிகள் தொடர்பாக தணிக்கை கண்டறிந்தவற்றை மற்ற 108 நகராட்சிகளிலும் கவனிக்க வேண்டும்.

இப்பொருள் அரசுக்கு அக்டோபர் 2018ல் தெரிவிக்கப்பட்டது; மறுமொழி பெறப்படவில்லை (ஜனவரி 2020).

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் மற்றும் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறைகள்

2.4 சென்னை பெருநகர் பகுதியில் திட்ட அனுமதி மற்றும் கட்டட உரிமம் வழங்குவதில் வளர்ச்சி விதிமுறைகளை பின்பற்றுதல்

செயலாக்க சுருக்கம்

சென்னை பெருநகர் பகுதி, 1,189 சதுர கிலோமீட்டர் பரப்பளவுடன், தமிழ்நாட்டின் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய மூன்று மாவட்டங்களின் பகுதிகளை உள்ளடக்கியதாகும். சென்னை பெருநகர் பகுதியில் அடங்கிய உள்ளாட்சி அமைப்புகளில், பெருநகர சென்னை மாநகராட்சி, எட்டு நகராட்சிகள், 11 பேரூராட்சிகள் மற்றும் 10 ஊராட்சி ஒன்றியங்களுக்கு உட்பட்ட 179 ஊராட்சிகள் ஆகியன உள்ளன. சென்னை பெருநகர் பகுதியில் கட்டடங்கள் கட்டட திட்ட அனுமதியும் கட்டட உரிமமும் பெற வேண்டும். சென்னை பெருநகர் பகுதியில் திட்ட அனுமதிகள் வழங்குவது, சென்னை பெருநகர் பகுதிக்கான இரண்டாவது முழுமை திட்டத்தின் பகுதியான வளர்ச்சி விதிமுறைளின் படி முறைப்படுத்தப்பட்டுள்ளது. 2013 முதல் 2018 வரையிலான காலகட்டத்தில் சென்னை பெருநகர் பகுதியில் திட்ட அனுமதி மற்றும் கட்டட உரிமம் வழங்குவதில் வளர்ச்சி விதிமுறைகளை பின்பற்றுதல் குறித்த, ஏப்ரல்-செப்டம்பர் 2018ல் நடத்தப்பட்ட செயலாக்க தணிக்கை கீழ்கண்டவற்றை வெளிப்படுத்தியது:

- *அனுமதிக்கப்பட்ட அளவை விட அதிகமான தளபரப்பு கொண்ட சாதாரண கட்டடங்களை கட்ட திட்ட அனுமதிகள் வழங்கப்பட்டன. திட்ட அனுமதியின்றி கூடுதல் தளங்கள் கட்டப்பட்டன. உள்ளாட்சி அமைப்புகள் கட்டடங்களின் கட்டமைப்பு உறுதித்தன்மையை உறுதி செய்யவில்லை.*
- *போதுமான நிதி இருந்தும் உள்ளாட்சி அமைப்புகளும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமமும் சென்னை பெருநகர பகுதிக்குள் பசுமை பரப்பை உருவாக்கும் வழிகளை ஆராயவில்லை.*
- *தளப்பரப்பு குறியீட்டை கணக்கிடுவதற்கு பல்வேறு வழியலகுகளை தவறாக பின்பற்றியதால், ₹ 66.94 கோடி அளவிற்கு ஊக்க தளப்பரப்பு குறியீடு கட்டணம் மதிப்பிடப்படவில்லை.*
- *வாகன நிறுத்த வசதிகளை போதுமான அளவிற்கு அமைக்காதது, வரையறுக்கப்பட்ட வழியலகுகளை மீறுவதாக இருந்தது. விதி மீறிய கட்டடங்களை கண்காணிக்கவும் கட்டுப்படுத்துவதற்குமான அமலாக்கப்பிரிவு வலுப்படுத்தப்படவில்லை.*

2.4.1 முன்னுரை

சென்னை பெருநகர் பகுதி (Chennai Metropolitan Area - Ch. MA),1,189 சதுர கிலோமீட்டர் பரப்பளவுடன், தமிழ்நாட்டின் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய மூன்று மாவட்டங்களின் பகுதிகளை உள்ளடக்கியதாகும். Ch.MAல் அடங்கிய உள்ளாட்சி அமைப்புகளில், பெருநகர சென்னை மாநகராட்சி (Greater

Chennai Corporation - GCC), எட்டு நகராட்சிகள், 11 பேரூராட்சிகள் மற்றும் 10 ஊராட்சி ஒன்றியங்களுக்கு[65] உட்பட்ட 179 ஊராட்சிகள் ஆகியன உள்ளன.

தமிழ்நாடு அரசு, 125.82 இலட்சம் மக்கள்தொகை இருக்கக்கூடிய 2026 ஆண்டு வரையிலான காலத்திற்கு Ch.MAக்கான ஒரு பரந்த திட்டமாக இரண்டாவது முழுமைத் திட்டத்தை (Second Master Plan - SMP) செப்டம்பர் 2008ல் அறிவித்தது. SMP, மேலும் சிறப்பாக வாழக்கூடிய, பொருளாதாரத்தில் துடிப்பான, சுற்றுச்சூழல் வகையில் உகந்த மாநகரமாக சென்னை பெருநகரத்தை உருவாக்குவதற்கு தொலைநோக்குடன் கூடிய ஒரு முழுமையான திட்டம் ஆகும். SMP, பெருநகர போக்குவரத்து, தங்குமிடம், குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்று வசதி, திடக்கழிவு மேலாண்மை, சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகியன உள்ளிட்ட பிற இயல் மற்றும் சமூக உள்கட்டமைப்பு என்பவற்றை மேம்படுத்துவதற்கான கொள்கைகள் மற்றும் உத்திகளை கொண்டதாகும். இவ்வகையில், அந்த முழுமைத் திட்டம், பொது அமைப்புகள் தமது துறைசார் திட்டங்களை இத்திட்டத்திற்கேற்ப அமைக்கவும், அவ்வாறே தனியார் முதலீடுகளுக்கு வசதி செய்யவும் உதவுகிறது. சமச்சீரான, திட்டமிட்ட வளர்ச்சிக்காக, நில பயன்பாடு மூலமான வளர்ச்சியை ஒழுங்குபடுத்துதல் என்பது உள்ளிட்ட பல்நோக்கு அணுகுமுறை உருவாக்கப்பட்டது.

Ch.MA எல்லைக்குள் அனைத்து வகை கட்டுமானங்களுக்கும், கட்டுமானம் துவங்குமுன் திட்ட அனுமதி (**இணைப்பு 2.19**) மற்றும் கட்டட உரிமம் பெறுதல் வேண்டும். திட்ட அனுமதியை வழங்குவது, Ch.MAக்குரிய SMPன் பகுதியான வளர்ச்சி விதிமுறைகளை[66] (Development Regulations- DR) ஒட்டி முறைப்படுத்தப்பட வேண்டும். DR 3(1)ன்படி, சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம்[67] (CMDA) அல்லது CMDA அதிகாரம் வழங்கிய உள்ளாட்சி அமைப்பு/முகமையின் செயல் அலுவலர் அல்லது நபர் ஒருவருடைய எழுத்து மூலமான அனுமதி அல்லாமல் எந்த வளர்ச்சி பணியையும் எவரும் மேற்கொள்ளக்கூடாது. பல்வேறு வகையான கட்டடங்களுக்குரிய திட்ட அனுமதியை வழங்குவதற்கான பொது மற்றும் குறிப்பான வழியலகுகள் **அட்டவணை 2.34**ல் விவரிக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 2.34: பல்வேறு வகையான கட்டடங்களுக்கான திட்ட அனுமதி

வ. எண்	கட்டட வகை	வளர்ச்சி விதிமுறைகளின்படி கட்டடத்தின் வரையறை	திட்ட அனுமதி அளிக்கும் அமைப்பு
1	சிறப்பு கட்டடம்	இரண்டுக்கு மேற்பட்ட தளங்கள் கொண்ட குடியிருப்பு/வணிக கட்டடம் மற்றும்/அல்லது 300 சதுர மீட்டருக்கு கூடுதலான தளப்பரப்பு கொண்ட கட்டடம்	CMDA
2	அடுக்குமாடி கட்டடம்	நான்குக்கு மேற்பட்ட தளங்கள் கொண்ட கட்டடம் மற்றும்/அல்லது 15.25 மீட்டருக்கு மேற்பட்ட உயரம் கொண்ட கட்டடம்	CMDA
3	சாதாரண கட்டடம்	சிறப்பு அல்லது அடுக்குமாடி கட்டடத்திற்கான வரையறைக்குள் வராத ஒரு குடியிருப்பு அல்லது வணிக கட்டடம்	CMDA உள்ளாட்சி அமைப்புகளுக்கு அளித்த அதிகாரம் (ஜூன் 2009)

(ஆதாரம்: வளர்ச்சி விதிமுறைகள்)

---

[65] மூன்று அடுக்குகள் கொண்ட ஊராட்சிகள் அமைப்பில் இடைநிலை அடுக்கு.

[66] தமிழ்நாடு அரசு செப்டம்பர் 2008ல் ஒப்புதல் அளித்தது.

[67] தமிழ்நாடு நகர மற்றும் ஊரமைப்பு சட்டம் 1971ன் கீழ் 1974ல் அமைக்கப்பட்ட ஒரு சட்டவகையிலான அமைப்பு.

திட்ட அனுமதி வழங்கப்பட்டபின், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் கட்டட விதிகள் 1972, சென்னை மாநகர கட்டட விதிகள் 1972, தமிழ்நாடு ஊராட்சி கட்டட விதிகள் 1997 ஆகியவற்றின்படி, சிறப்பு கட்டடம், அடுக்குமாடி கட்டடம், மற்றும் குழு மேம்பாடு[68] உட்பட அனைத்து வகை கட்டடங்களுக்கும் கட்டட உரிமம் வழங்குவதற்கு தொடர்புடைய உள்ளாட்சி அமைப்பு பொறுப்பாகும்.

2.4.2 நிர்வாக அமைப்பு

அரசு அளவில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறைக்கான அரசின் முதன்மை செயலாளர், திட்ட அனுமதி உட்பட கட்டடங்களின் முறைப்படுத்துவதற்கான ஒட்டுமொத்த வகையிலான கட்டுப்பாட்டை கொண்டுள்ளார். கட்டட முறைப்படுத்துதல் மற்றும் மேம்பாட்டில் அவருக்கு, Ch.MAஐ பொறுத்தவரை CMDA, இதர மாவட்டங்களை பொறுத்தவரை நகர ஊரமைப்பு இயக்குனர் (Director of Town & Country Planning-DTCP) ஆகியோர் உதவுகின்றனர். CMDAக்கு தலைவராக உறுப்பினர்-செயலர் உள்ளார்; அவருக்கு தொழில்நுட்ப வகையில் தலைமை திட்ட அமைப்பாளர், முதுநிலை திட்ட அமைப்பாளர், துணைதிட்ட அமைப்பாளர் ஆகியோரும், கணக்கு மற்றும் நிதி வகையில் நிதி ஆலோசகரும் உதவுகின்றனர். நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MAWS) துறை முதன்மைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறை முதன்மை செயலாளர் முறையே நகர்ப்புற மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகள் மீதான ஒட்டுமொத்த கட்டுப்பாட்டை கொண்டுள்ளனர். GCCன் தலைவராக ஆணையர் உள்ளார்; நகரமைப்பு தொடர்பான பணிகளில் அவருக்கு கண்காணிப்பு பொறியாளர் (பணிகள்) மற்றும் மண்டல அதிகாரிகள் உதவுகின்றனர். நகராட்சிகளுக்கு தலைவர்களாக ஆணையர்களும், அவர்களுக்கு உதவியாக நகரமைப்பு அலுவலர்களும் உள்ளனர். பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு தலைவர்களாக முறையே செயல் அலுவலர்கள் மற்றும் ஆணையாளர்கள் உள்ளனர்; திட்ட அனுமதி வழங்குவதில் அவர்களுக்கு CMDAன் உதவித் திட்ட அமைப்பாளர்கள் உதவுகின்றனர்.

2.4.3 தணிக்கையின் நோக்கங்கள்

தணிக்கையின் நோக்கங்கள்

- திட்ட அனுமதிகள், கட்டட உரிமங்கள், முடிவு அறிக்கைகள் ஆகியன, சட்டம், விதிகள், முறைப்படுத்தும் விதிகள் ஆகியவற்றின்படியும் தொடர்புடைய நபர்கள்/துறைகளுடன் ஒருங்கிணைந்தும் தரப்பட்டனவா,
- விதிகள், முறைப்படுத்தும் விதிகள் ஆகியவற்றில் கூறப்பட்டவாறு ஆய்வுகளும் தண்டனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டனவா,
- வளர்ச்சி விதிமுறைகளின் படி வளர்ச்சி செயல்பாடுகள் கண்காணிக்கப்பட்டனவா

என்பனவற்றை மதிப்பிடுவதாக இருந்தன.

---

68 ஒரு குறிப்பிட்ட இடத்தில், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட, ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட அல்லது இணைக்கப்படாத தொகுதிகளில் அமைந்த குடியிருப்பு அல்லது வணிக வகை அல்லது இரண்டு வகைகளும் இணைந்த இருப்பிடம்.

2.4.4 தணிக்கையின் அளவுகோல்கள்

தணிக்கையில் கண்டறியப்பட்டவை பின்வரும் அளவுகோல்களுடன் ஒப்பிடப்பட்டன:

- தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம் 1971;
- இந்திய தேசிய கட்டடவிதிகள் தொகுப்பு (The National Building Code of India);
- வளர்ச்சி விதிமுறைகள் 2008 மற்றும் அதன் பிந்தைய திருத்தங்கள்;
- சென்னை மாநகர கட்டட விதிகள் 1972;
- சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம் 1986;
- தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் கட்டட விதிகள் 1972;
- தமிழ்நாடு ஊராட்சி கட்டட விதிகள் 1997 மற்றும்
- அரசு ஆணைகள், விதிகள் அவ்வப்போது வெளியிடப்படும் நிர்வாக அறிவுறுத்தல்கள் மற்றும் சுற்றறிக்கைகள்.

2.4.5 தணிக்கையின் பரப்பு மற்றும் முறைமை

2013 - 2018 ஆண்டுகள் காலகட்டத்தை கொண்ட செயலாக்க தணிக்கை, ஏப்ரல்-செப்டம்பர் 2018ல் மேற்கொள்ளப்பட்டது. MAWS துறை மற்றும் H&UD துறை முதன்மை செயலாளர்களுடன் 17 மே 2018 அன்று தணிக்கைக்கான நுழைவு கலந்தாய்வு கூட்டம் நடத்தப்பட்டு, அதில் தணிக்கையின் நோக்கங்கள், அளவுகோல்கள், பரப்பு, முறைமை மற்றும் மாதிரிகள் தேர்ந்தெடுத்தல் ஆகியவை விவாதிக்கப்பட்டன. தணிக்கை கண்டறிந்தவை 18 டிசம்பர் 2018 அன்று நடத்தப்பட்ட நிறைவு கலந்தாய்வு கூட்டத்தில் தொடர்புடைய துறைகளுடன் விவாதிக்கப்பட்டன.

இச்செயலாக்க தணிக்கை, திட்ட அனுமதி, கட்டட உரிமம், முடிவு அறிக்கை, CMDA மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் அமலாக்க நடவடிக்கைகள் ஆகியவற்றை அடக்கியதாக இருந்தது; வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை (H&UD) மற்றும் MAWS துறைகள், CMDA, GCCயின் தலைமை அலுவலகம் ஆகியவற்றின் பதிவுருக்களும் மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்பு துறை இயக்குநரகத்தின் (Directorate of Fire & Rescue Service - DF&RS) ஆய்வறிக்கைகளும் ஆய்வு செய்யப்பட்டன. தேவையான நேர்வுகளில் கூட்டு நேரடி சரிபார்ப்புகளும் மேற்கொள்ளப்பட்டன. GCCயின் 15 மண்டலங்களுள் நான்கு மண்டலங்கள்[69], எட்டு நகராட்சிகளுள் இரண்டு நகராட்சிகள்[70], 11 பேரூராட்சிகளுள் மூன்று பேரூராட்சிகள்[71] மற்றும் 10 ஊராட்சி

69 மண்டலம் V -இராயபுரம், மண்டலம் X - கோடம்பாக்கம், மண்டலம் XI - வளசரவாக்கம் மற்றும் மண்டலம் XV - சோழிங்கநல்லூர்.

70 காஞ்சிபுரம் மாவட்டத்தில் பல்லவபுரம் நகராட்சி மற்றும் திருவள்ளூர் மாவட்டத்தில் பூவிருந்தவல்லி நகராட்சி.

71 காஞ்சிபுரம் மாவட்டத்தில் மாடம்பாக்கம் மற்றும் பெருங்களத்தூர் பேரூராட்சிகள் மற்றும் திருவள்ளூர் மாவட்டத்தில் திருநின்றவூர் பேரூராட்சி.

ஒன்றியங்களுள் மூன்று ஊராட்சி ஒன்றியங்கள்[72] ஆகியவற்றின் பதிவுருக்கள் சோதனை ஆய்வு செய்யப்பட்டன. Ch.MAல் இருந்த மாதிரி உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் CMDA ஜனவரி 2013 முதல் டிசம்பர் 2017 வரை வழங்கிய திட்ட அனுமதிகள் பற்றிய விவரங்கள் **அட்டவணை 2.35**ல் கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 2.35: மாதிரி உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் CMDA வழங்கிய திட்ட அனுமதிகள்

ஆண்டு	GCC	பிற உள்ளாட்சி அமைப்புகள்	மொத்தம்	CMDA		
	சாதாரண கட்டடங்கள்			சிறப்பு கட்டடங்கள்	அடுக்குமாடி கட்டடங்கள்	மொத்தம்
2013	2,770	4,169	6,939	554	64	618
2014	1,644	3,766	5,410	319	36	355
2015	1,425	2,633	4,058	338	54	392
2016	1,616	2,664	4,280	310	53	363
2017	1,664	2,939	4,603	331	32	363
மொத்தம்	**9,119**	**16,171**	**25,290**	**1,852**	**239**	**2,091**

(ஆதாரம்: உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் CMDA அளித்த விவரங்கள்)

மாதிரி உள்ளாட்சி அமைப்புகள் வழங்கிய திட்ட அனுமதிகளில் 10 சதவீதம் தொடர்பற்ற மாதிரி (Random sampling) முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டன. CMDAஐ பொறுத்தவரை, 2013 முதல் 2017 வரையான ஆண்டுகளில் அது வழங்கிய திட்ட அனுமதிகளுக்கு வசூலித்த வளர்ச்சி கட்டணத்தின்[73] அடிப்படையில் மாதிரிகள் தேர்வு செய்யப்பட்டன. மொத்த எண்ணிக்கையான 2,091 திட்ட அனுமதிகளுள் ₹ 5 இலட்சம் மற்றும் அதற்கு மேலான வளர்ச்சி கட்டணம் கொண்ட 141 திட்ட அனுமதிகள் அனைத்தும் ஆய்வு செய்யப்பட்டன. மீதமுள்ள 1,950 திட்ட அனுமதிகளுள் 25 விழுக்காடு, அதாவது 488 திட்ட அனுமதிகள் தொடர்பற்ற மாதிரி முறையில் தெரிவு செய்யப்பட்டன. மாதிரிகள் மொத்த எண்ணிக்கையான 629 திட்ட அனுமதிகள், மொத்த அனுமதிகளில் 30 விழுக்காடு ஆகும்.

ஒப்புகை

H&UD மற்றும் MA&WS துறைகள், DF&RS, CMDA, GCC மற்றும் பிற உள்ளாட்சி அமைப்புகளின் அதிகாரிகள் மற்றும் அலுவலர்களின் ஒத்துழைப்பை தணிக்கை ஒப்புகை செய்கிறது.

தணிக்கை கண்டறிந்தவை

2.4.6 திட்ட அனுமதிகள்

2.4.6.1 திட்ட அனுமதியின்றி வளர்ச்சி பணிகள்

இரண்டு தளங்களுக்கு மேல் உள்ள குடியிருப்பு மற்றும் வணிக கட்டடங்களை வளர்ச்சி விதிகள் 26 மற்றும் 28 முறையே சிறப்பு கட்டடம் மற்றும் அடுக்குமாடி

72 காஞ்சிபுரம் மாவட்டத்தில் புனித தாமஸ் மலை ஊராட்சி ஒன்றியம் மற்றும் திருவள்ளூர் மாவட்டத்தில் புழல் மற்றும் திருவள்ளூர் ஊராட்சி ஒன்றியங்கள்.

73 கட்டடத்தை கட்டுவதன் மீதான கட்டணம், தளப்பரப்பில் ஒரு சதுர மீட்டர் அளவிற்கான வீதத்தில் விதிக்கப்படும்.

கட்டடம் என்றும் வகைப்படுத்துகின்றன; இவற்றுக்கான திட்ட அனுமதியை CMDA வழங்குகிறது. தணிக்கை, GCC மற்றும் Ch.MAல் உள்ள நகராட்சிகளின் சொத்து வரி தகவல்களை CMDAவின் திட்ட அனுமதி தகவல்களுடன்[74], 'தெருவின் பெயர்' என்பதை பொதுவான புலமாக வைத்து ஒப்பீடு செய்தது. கட்டடங்கள் CMDA வழங்கிய திட்ட அனுமதியுடன் கட்டப்பட்டனவா என்பதை சரிபார்ப்பதற்காக இவ்வகை ஒப்பீடு செய்யப்பட்டது.

GCCல் 1,15,633 புதிய சொத்துவரி மதிப்பீடுகளும் Ch.MAல் உள்ள நகராட்சிகளில் 51,232 புதிய சொத்துவரி மதிப்பீடுகளும் இருந்ததை தணிக்கை கண்டது. இவற்றுள் முறையே 5,893 மற்றும் 246 மதிப்பீடுகள் மூன்று முதல் ஐந்து தளங்கள் கொண்ட 'தனிகட்டடங்கள்'[75] ஆகும்; இதில், 2,437 மதிப்பீடுகள் GCCன் மாதிரி மண்டலங்களிலும், 198 மதிப்பீடுகள் இரண்டு மாதிரி நகராட்சிகளிலும் இருந்தன. **இணைப்பு 2.20**ல் குறிப்பிடப்பட்டவாறு 1,110 தெருக்களில் அமைந்த 1,893 தனிகட்டடங்களுக்கு CMDA திட்ட அனுமதி அளிக்கவில்லை என்பதை தகவல்கள் காட்டின. மேலும், 2007-17 காலகட்டத்தில் இத்தெருக்களில் CMDA திட்ட அனுமதி வழங்கவில்லை என்பதையும் தணிக்கை கண்டறிந்தது. மேலும், GCCல் நான்கு மாதிரி மண்டலங்களில் 252 தெருக்களில் இருந்த 380 கட்டடங்கள், வளர்ச்சி விதிமுறைகளில் விதிக்கப்பட்டுள்ள சாலை அகலத்திற்கு குறைவாக உள்ள காரணத்தினால் இரண்டு தளங்களுக்கு மேல் கட்ட தகுதி பெறவில்லை.

திட்ட அனுமதியின் அடிப்படையில் உள்ளாட்சி அமைப்புகள் கட்டட உரிமம் வழங்கியிருந்தாலும், சொத்துவரி மதிப்பீடு செய்கையில் இரண்டு தளங்களுக்கு மேலான அங்கீகாரமில்லாத கட்டுமானங்களை கண்டறிய உள்ளாட்சி அமைப்புகள் தவறின என்பது இதனால் புலனாகிறது. உள்ளாட்சி அமைப்புகளின் வருவாய் மற்றும் நகரமைப்பு பிரிவுகள் இடையேயும், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் CMDAக்கு இடையேயும் ஒருங்கிணைப்பு இல்லாததை இது காட்டுகிறது.

தணிக்கை, மேற்சொன்ன 2,635 தனி கட்டடங்களின் சொத்துவரி மதிப்பீடுகளை மட்டுமே ஆய்வு செய்து அனுமதியற்ற கட்டுமானத்தை கண்டறிந்தது. மீதமுள்ள அனைத்து வகையான கட்டடங்களின் சொத்துவரி மதிப்பீடுகளையும் ஆய்வு செய்து பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அதிகார ஒப்படைப்பில் மீறல்கள் இருப்பின், அவற்றை ஆய்வு செய்வதற்கான அடிப்படையை தணிக்கை குறிப்பு அளிக்கக்கூடும் என நிறைவு கூட்டத்தில் H&UD துறை முதன்மை செயலாளர் கூறினார் (டிசம்பர் 2018); மேலும், அங்கீகாரமற்ற கட்டுமானங்கள் தொடர்பாக தொடர்புடைய நபர்களுக்கு அறிவிப்பு அனுப்புமாரு அலுவலர்களுக்கு அவர் உத்தரவிட்டார். அங்கீகாரமற்ற கட்டுமானங்களை கண்காணிக்க ஒரு சிறப்பு பணிக்குழு அமைக்கப்பட்டுள்ளதாகவும், உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் கூறப்பட்டது.

---

[74] திட்ட அனுமதி மூன்று ஆண்டுகளுக்கு செல்லுபடி ஆகும். இந்த மூன்று ஆண்டு காலத்திற்கு பின், அனுமதி புதுப்பிக்கப்படும் நாளிலிருந்து மூன்று ஆண்டுகள் என மொத்தம் ஆறு ஆண்டுகள் என்பதால் 2007 முதல் வழங்கப்பட்ட அனுமதிகள் ஒப்பிடுவதற்காக எடுத்துக்கொள்ளப்பட்டன.

[75] சொத்து வரி விதிப்பதற்காக GCC வகைப்படுத்தும் ஒற்றை உரிமையாளர் கொண்ட ஒரு வகை கட்டடம்.

2.4.6.2 சாதாரண கட்டடங்களுக்கு வழங்கப்பட்ட திட்ட அனுமதிகளின் மீறல்கள்

ஒன்பது மீட்டர் வரையிலான உயரம், 300 சதுரமீட்டருக்கு (ச.மீ.) குறைவான தளப்பரப்பு[76] கொண்ட தரை மற்றும் முதல் தளங்கள், அல்லது தூண்கள் தளம் (stilt floor) மற்றும் இரண்டு தளங்கள் கொண்ட குடியிருப்பு மற்றும் வணிக கட்டடங்கள் என்பதை சாதாரண கட்டடங்களுக்கான திட்ட வரையறையாக DR 2(29) மற்றும் 25 விதிக்கின்றன. 2013-17 காலகட்டத்தில் Ch.MAல் 25,290 கட்டடங்களுக்கு திட்ட அனுமதிகளை உள்ளாட்சி அமைப்புகள் வழங்கின; அவற்றுள், 2,535 கட்டடங்களுக்கான பதிவுருக்களை தணிக்கை சோதனை ஆய்வு செய்து, **இணைப்பு 2.21**ல் விவரிக்கப்பட்டுள்ள விதிமீறல்களை கண்டறிந்தது.

(i) DR 25ன் கீழ் கூறப்பட்ட திட்ட அளவான 300 ச.மீ.க்கு மிகையான தளப்பரப்பு கொண்ட 204 திட்டங்களை உள்ளாட்சி அமைப்புகள் திட்ட அனுமதி வழங்குவதில் தமக்கு விதிக்கப்பட்ட வரையறையை மீறி அனுமதித்தன.

தளப்பரப்பிற்கான 300 ச.மீ. வரையறை குடியிருப்பு கட்டடங்களுக்கு பொருந்தாது என நிறைவு கூட்டத்தில் H&UD துறை முதன்மை செயலாளர் மறுமொழி அளித்தார். தள பரப்புக்கான வரையறை குடியிருப்பு மற்றும் வணிகம் என்ற இரு வகை கட்டடங்களுக்கும் பொருந்தும் என DR கூறுவதால், அந்த மறுமொழி ஏற்கத்தக்கதல்ல. கட்டடங்களின் வகையை பொறுத்து DRல் வேறுபாடு கூறப்படவில்லை. அந்த மறுமொழி, DRல் விதித்தவற்றுக்கு அப்பாற்பட்ட ஒரு விளக்கமாகும்.

(ii) தூண்களின் மேல் அமைந்த கட்டடத்தில், தரைமட்டத்தில் அமைந்த தளத்தின் ஒரு பகுதி அல்லது அந்த தளம் முழுவதையும் தூண்கள் தளம் (stilt floor) என DR 2(41) வரையறை செய்கிறது; தரைப்பரப்பு குறியீட்டை[77] (Floor Space Index - FSI) கணக்கிடுவதில் விலக்கு அளிப்பதற்குரிய[78] தரநிலையை கொண்டிருந்தால், அத்தளம் சிறப்பு கட்டடம் அல்லது அடுக்குமாடி கட்டடம் என வரையறுக்கும் நோக்கில் ஒரு தளமாக எடுத்துக்கொள்ளப்படாது எனவும் அவ்விதி கூறுகிறது. இதன்படி, FSI கணக்கீட்டிற்கு எடுத்துக்கொள்ளும் வகையில் தூண்தளத்தில் செய்யப்படும் கட்டுமானம், இரண்டாம் தளத்தில் கட்டுமானம் செய்யக்கூடிய பரப்பினை, தூண்தளத்தில் உள்ள FSI-அல்லாத பரப்பின் அளவுக்கு குறைக்கும்.

தூண்தளத்தில் குடியிருப்புகளுடன் கூடிய, தூண்தளம் மற்றும் இரண்டு தளங்கள் கொண்ட 231 திட்டங்களுக்கு, உள்ளாட்சி அமைப்புகள் திட்ட அனுமதிகள் வழங்கின; ஆனால், இரண்டாவது தளத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட பரப்பு, DRக்கு முரணான வகையில், தூண்தளத்தின் FSI-அல்லாத பரப்பைவிட அதிகமாக இருந்தது.

இப்பிரச்சினை குறித்து ஆய்வு செய்யுமாறு நிறைவு கூட்டத்தில் தமிழ்நாடு அரசு உள்ளாட்சி அமைப்புகளை அறிவுறுத்தியது.

---

76 இந்திய தேசிய கட்டட விதிகள் தொகுப்பின்படி, ஒரு கட்டடத்தின் தளத்தின் புறச்சுவர்களின் உள் சுற்றளவில் அடங்கிய தரையின் பரப்பளவு. இதில், தாழ்வாரம், நடைவழி, படிக்கட்டுகள், தனியறை, உட்சுவர்களின் பருமன், தூண்கள், மின் தூக்கிகள், கட்டட ஷாஃப்ட் மற்றும் பிற கூறுகள் இதில் கழிக்கப்படாது.

77 அனைத்து தளங்களிலும் உள்ள மொத்த அடிப்பீட பரப்பளவை மனையின் பரப்பளவை கொண்டு வகுத்தால் கிடைக்கும் அளவு.

78 DRன் இணைப்பு XVIII.

2.4.6.3 பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவுகளுக்காக ஒதுக்கப்பட்ட மனைகளில் சாதாரண கட்டடங்கள் கட்ட திட்ட அனுமதி வழங்கியமை

DR 29(9)ன்படி, ஒரு குடியிருப்புக்கான மனைப்பிரிவின் பரப்பளவு 10,000 ச.மீ.க்கு மேல் இருப்பின், மனைப்பிரிவின் பரப்பளவில் 10 சதவீத பரப்பை பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவுகளுக்கான (Economically Weaker Section - EWS) மனைகளாக மேம்படுத்தப்பட்டு, அம்மனைகளை அப்பயன்பாட்டிற்காக மட்டுமே, மனைப்பிரிவின் உரிமையாளர்/மேம்பாட்டாளர் விற்க வேண்டும்.

EWS மனையாக குறிக்கப்பட்ட மனைகளில், 83.82 ச.மீ. முதல் 144.59 ச.மீ. தரைப்பரப்பு கொண்ட, ஒரு குடியிருப்பு உள்ள சாதாரண கட்டடங்கள் கட்ட ஒன்பது திட்ட அனுமதிகளை GCC வழங்கியது. DR 28(17)ன்படி, குறைந்த வருவாய் பிரிவினருக்காக கட்டப்படும் குடியிருப்புகள் 45 ச.மீ. தளப்பரப்பளவுக்கு மிகாததாக இருக்க வேண்டும். தணிக்கையில், (i) மேற்கூறிய அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களில் இருந்த குறைந்தபட்ச தளப்பரப்பே குறைந்த வருவாய் பிரிவு குடியிருப்புக்குரிய அதிகபட்ச வரம்பை விட அதிகமாக இருந்தது என்பதும் (ii) அனுமதிக்கான மனுவை EWS நபர் அல்லாமல், மனை மேம்படுத்துபவரே அளித்தார் என்பதும் காணப்பட்டன.

EWS மனைகளை மனைகளாகவே விற்க வேண்டும் என்றோ அம்மனைகளில் கட்டட அனுமதிக்கான மனுவை மேம்பாட்டாளர் அளிக்கக்கூடாது எனவோ அவர்களை வற்புறுத்த முடியாது என GCC மறுமொழி அளித்தது (நவம்பர் 2018). மேலும், இந்த திட்ட அனுமதிகள், EWS மனைகளை வாங்கியவர்கள் சார்பாக மேம்பாட்டாளர்களுக்கு வழங்கப்பட்டன எனவும் கூறியது (டிசம்பர் 2018). தணிக்கை இந்த மறுமொழியை ஏற்றாலும், பெரும் அளவிலான தொகுப்பு மேம்பாடுகள்/அடுக்குமாடி கட்டடங்களின் தனியார் மேம்பாட்டாளர்கள் சமூக வீட்டுவசதி ஏற்படுத்துவதை ஊக்குவிக்கும் வகையில் EWSக்கான மனைகளை ஒதுக்குதல் என்ற SMPன் நோக்கம் பயனுள்ளவாறு நிறைவேறும் வகையில் ஒரு கண்காணிப்பு முறைமையை GCC உருவாக்க வேண்டும் என கருதுகிறது.

2.4.6.4 கட்டடங்களின் கட்டமைப்பு உறுதித்தன்மை உறுதி செய்யப்படாமை

CMDA உரிய கட்டணத்தை செலுத்தும்படி கோரும்போது, அனுமதிக்கப்பட்ட திட்டத்தின்படி நடைபெற வேண்டிய கட்டுமானத்தின் பல்வேறு நிலைகள் பற்றிய கட்டமைப்பு பொறியாளர்/உரிமம் பெற்ற அளவையர்/கட்டட கலைஞரின் அறிக்கையை அளிக்குமாறு வற்புறுத்துகிறது. கட்டுமானத்தின் ஒவ்வொரு நிலைக்குமான தொழில்நுட்ப விவரங்களை குறிப்பிடும் அத்தகைய அறிக்கைகள் தணிக்கைக்கு வழங்கப்பட்ட பதிவுருக்களில் இருக்கவில்லை. 2013-17 காலகட்டத்தில் CMDA வழங்கிய 2,091 திட்ட அனுமதிகளுள் 629 அனுமதிகள் சோதனை ஆய்வு செய்யப்பட்டன. இத்திட்ட அனுமதிகளை கட்டட உரிமம் வழங்கும் பொருட்டு CMDA தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகளுக்கு அனுப்புகையில், கட்டுமானத்தின் போது பாதுகாப்பு என்பது உள்ளிட்ட கட்டமைப்பு உறுதித்தன்மை என்ற கூறு திட்ட அனுமதியில் அடங்காது என குறிப்பிட்டது.

கட்டட விதிகளின்படி, உள்ளாட்சி அமைப்புகள் உரிமம் வழங்குவதற்கு முன்பாக, கட்டடத்தின் பாதுகாப்பு மற்றும் கட்டமைப்பு உறுதித்தன்மைக்கு வழிவகை செய்யப்பட்டுள்ளதை உறுதி செய்து கொள்ளவேண்டும். எனினும், உள்ளாட்சி அமைப்புகள் தணிக்கை வினாவுக்கு அளித்த (ஜூன் 2018 - டிசம்பர் 2018) மறுமொழியில், (அ) கட்டட உரிமம் வழங்கப்படும் சிறப்பு/அடுக்குமாடி கட்டடங்கள்

அனைத்திலும் கட்டமைப்பு உறுதித்தன்மையை கண்காணிக்க தொழில்நுட்ப/ நிர்வாக திறனுள்ள ஊழியர்கள் போதிய எண்ணிக்கையில் இல்லை, (ஆ) கட்டமைப்பு உறுதித்தன்மைக்கான பொறுப்பு தொடர்புடைய நில உரிமையாளர்/மேம்பாட்டாளர்/உரிமம் பெற்ற அளவையர்/கட்டடக் கலைஞருக்கு உள்ளது, மற்றும் (இ) கட்டடங்களின் கட்டமைப்பு உறுதித்தன்மை மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வது CMDAன் பொறுப்பு என்றும் கூறின. கட்டடங்களின் கட்டமைப்பு உறுதித்தன்மையை உள்ளாட்சி அமைப்பு கண்காணித்து உறுதி செய்ய வேண்டும் எனகட்டட விதிகள் கூறுவதற்கு இந்த மறுமொழி முரணாக உள்ளதால், அது ஏற்கத்தக்கதல்ல.

CMDA, 60 மீட்டர் உயரத்திற்கு மேற்பட்ட கட்டடங்களின் கட்டுமான வடிவமைப்பு இந்திய தொழில்நுட்ப நிறுவனத்திடமிருந்து (IIT Madras) பெறப்பட்டு பொதுப்பணித்துறையால் சரிபார்க்கப்படுகிறது என கூறியது (டிசம்பர் 2018). அத்துறை வடிவமைப்பு வரைபடங்களுக்கான கட்டமைப்பு அனுமதியை வழங்கி, அதனை கட்டுமான தளத்தில் செயல்படுத்த கட்டமைப்பு பொறியாளரை பொறுப்பாளராக்குகிறது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இது, 60 மீட்டருக்கு குறைவான உயரமுள்ள கட்டடங்களின் கட்டமைப்பு உறுதித்தன்மையை உறுதி செய்ய CMDA அல்லது உள்ளாட்சி அமைப்புகளிடம் கண்காணிப்பு ஏற்பாடு ஏதும் இருக்கவில்லை என்பதை காட்டியது.

2.4.7 வளர்ச்சி கட்டணங்கள் மற்றும் திறந்தவெளி ஒதுக்கீடு கட்டணங்கள்

2.4.7.1 வளர்ச்சி கட்டணங்கள்

கட்டடங்களை கட்டுவதற்கு தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 59ன் கீழ் CMDA வளர்ச்சி கட்டணங்களை வசூலிக்கிறது. நிலத்தின் பரப்பளவு, கட்டவிருக்கும் கட்டடத்தின் தளப் பரப்பு ஆகியவற்றின் அடிப்படையில் வளர்ச்சி கட்டணத்தை அரசு நிர்ணயிக்கிறது.

CMDA 2013-18 காலகட்டத்தில், Ch.MA எல்லைக்குள் கட்ட திட்டமிடப்பட்ட கட்டடங்கள் மீது ₹ 64.59 கோடி கட்டணம் வசூலித்தது. தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகளுக்கு வளர்ச்சி கட்டணத்தில் 75 விழுக்காடு தொகையை விடுவிக்குமாறு CMDAக்கு தமிழ்நாடு அரசு அறிவுறுத்தியது (ஜூன் 2010). எனினும், CMDA **இணைப்பு 2.22**ல் உள்ளபடி, ₹ 48.44 கோடி தொகைக்கு மாறாக ₹ 34.62 கோடி (54 விழுக்காடு) மட்டுமே உள்ளாட்சி அமைப்புகளுக்கு விடுவித்தது.

ஊரக பகுதிகளில் 2013-16 காலகட்டத்தில் ₹ 4.08 கோடி வசூலித்த போதிலும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு உரித்தான ₹ 3.05 கோடி தொகையை CMDA விடுவிக்கவில்லை. நகர்ப்புற பகுதிகளில், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு ₹ 10.77 கோடி நிலுவையில் இருந்தது (செப்டம்பர் 2018).

2.4.7.2 திறந்தவெளி ஒதுக்கீட்டு கட்டணங்கள்

சென்னை மாநகரில் இரண்டு சதவீத பரப்பில் மட்டுமே அறிவிக்கப்பட்ட பூங்காக்கள் இருப்பதாகவும், Ch.MAல் அறிவிக்கப்பட்ட வனப்பரப்பு ஏறத்தாழ 24 சதுர கிலோமீட்டர், அதாவது இரண்டு சதவீத அளவே உள்ளதாகவும் SMP கூறியது. Ch.MAல், குறிப்பாக சாலையோரங்கள், கால்வாய் ஓரங்கள், ஆற்றின் கரைகள் போன்றவற்றில் பசுமைபரப்பை மேலும் உருவாக்க போதிய வாய்ப்புள்ளதாகவும் SMP கூறியது.

DRன் இணைப்பு XXன்படி, சிறப்பு கட்டடங்கள், தொகுப்பு மேம்பாடுகள், அடுக்குமாடி கட்டடங்கள் ஆகியவற்றுக்கு திட்ட அனுமதி வழங்கும் முன்பாக, சமூக பொழுதுபோக்கு பயன்பாடுகளுக்கு நிலம் ஒதுக்கப்பட வேண்டும். கட்டடம் கட்டப்படவுள்ள மனையின் பரப்பு 3,000 ச.மீ. முதல் 10,000 ச.மீ. வரை இருந்தால், மேம்பாட்டாளர் சாலைகள் நீங்கலாக உள்ள பரப்பில் 10 விழுக்காடு பரப்பினை பொது பூங்காக்கள்/விளையாட்டு மைதானங்களுக்கு ஒதுக்கி, அந்நிலத்தை பதிவு செய்யப்பட்ட தானப்பத்திரம்[79] வாயிலாக உள்ளூர் அதிகார அமைப்பு அல்லது குறிப்பிடப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளிடம் வழங்கவேண்டும்; நிலத்தின் அமைப்பு காரணமாக திறந்தவெளி நிலத்தை அளிக்க நடைமுறையில் இயலாது என்ற நிலை இருந்தால், அதற்கு ஈடான நிலத்தின் (முதல் 3,000 ச.மீ. நீங்கலாக உள்ள பரப்பில் 10 விழுக்காடு) சந்தை மதிப்பை செலுத்தவேண்டும். மனைப்பரப்பு 10,000 ச.மீ.க்கு மேல் உள்ள நேர்வுகளில், சாலைகள் நீங்கலாக உள்ள மொத்த பரப்பில் 10 விழுக்காடு இடத்தை ஒதுக்குவது மேம்பாட்டளரின் கடமையாகும்.

CMDA 2013-18 காலகட்டத்தில், மேம்பாட்டுக்கென ஒதுக்கீடு செய்யப்பட வேண்டிய 10 சதவீத இடத்திற்கு நிகரான சந்தை மதிப்பாக ₹ 484.92 கோடி தொகையை திறந்தவெளி ஒதுக்கீடு (OSR) கட்டணமாக பெற்றது. தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகளுக்கு 75 விழுக்காடு OSR கட்டணத்தை விடுவிக்குமாறு CMDAக்கு தமிழ்நாடு அரசு அறிவுறுத்தியது (ஜூன் 2010). எனினும், CMDA தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகளுக்கு **இணைப்பு 2.22**ல் கண்டவாறு ₹ 363.68 கோடிக்கு மாறாக ₹ 270.56 கோடி (56 விழுக்காடு) மட்டுமே விடுவித்தது.

ஊரக பகுதிகளில் 2013-16 காலகட்டத்தில், ₹ 58.87 கோடி வசூலித்த போதிலும், செப்டம்பர் 2018 நிலையில் ஊராட்சி ஒன்றியங்களுக்கு ₹ 44.15 கோடி நிலுவை தொகையை CMDA விடுவிக்கவில்லை. நகர்ப்புற பகுதியில் ₹ 48.97 கோடி (15 விழுக்காடு) நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு விடுவிக்கப்படாமல் இருந்தது.

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு 75 விழுக்காடு வளர்ச்சி கட்டணம் மற்றும் OSR கட்டணங்களை அனுப்ப விரைவான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக CMDA தெரிவித்தது (டிசம்பர் 2018).

(i) திறந்த வெளி ஒதுக்கீட்டு நிலத்திற்கு மாறாக கட்டணங்கள் வசூலித்தல்

DR 26(11), 28(8) மற்றும் இணைப்பு XXன்படி, நிலத்தின் அமைப்பு காரணமாக திறந்த வெளி நிலத்தை அளிக்க நடைமுறையில் இயலாது என்ற நிலை இருந்தால் மட்டுமே மனைப்பரப்பில் 10 சதவீத பரப்பிற்கு நிகரான தொகையினை மேம்பாட்டாளர் செலுத்த வேண்டும். அவ்வாறு ஒதுக்கீடு செய்யப்படும் பரப்பானது 100 ச.மீ.க்கு குறைவில்லாமலும், பரிமாணம் 10 மீட்டருக்கு குறையாமலும் இருக்க வேண்டும்.

எனினும், 2013-17 காலகட்டத்தில் வழங்கப்பட்ட மாதிரி 629 திட்ட அனுமதிகளுள் 80 அனுமதிகளில், 10 விழுக்காடு இடத்திற்கு நிகரான OSR கட்டணங்கள் நிலம் ஒதுக்க இயலாமைக்கான காரணத்தை பதிவு செய்யாமலேயே பெறப்பட்டன. இவற்றுள் 13 நேர்வுகளில், **இணைப்பு 2.23**ல் விவரித்துள்ள படி, OSR நிலத்தை ஒதுக்காததற்கு பதியப்பட்ட இடையூறுகள் இல்லாவிடினும், OSR

[79] கைமாறாக எதையும் எதிர்பாராமல் சொத்தை சொந்த விருப்பத்தின் பேரில் மாற்றுவதற்கு தேவைப்படும் பதிவு செய்யப்பட்ட ஆவணம்.

கட்டணமாக ₹ 31.45 கோடி பெறப்பட்டது; இந்த 13 மனைகளின் முகப்பு பகுதி 42.91 மீட்டர் முதல் 102.95 மீட்டர் வரை இருந்ததால், OSR ஒதுக்கீடு செய்வதில் இடையூறு ஏதும் இருக்க வாய்ப்பில்லை. வாயிலுக்காக அதிகபட்சமாக 20 மீட்டர் ஒதுக்கினாலும் நிகர மீதமாக நிலம் 22.91 மீட்டர் முதல் 82.95 மீட்டர் வரை கொண்ட நிலம் இருந்திருக்கும் எனவும் அதனை கொண்டு OSR நிலத்தை ஒதுக்கி ஒப்படைத்திருக்கலாம் என தணிக்கை கருதுகிறது.

(ii) திறந்தவெளி பகுதியை உருவாக்காமை

OSR கட்டண தொகையை பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்களை உருவாக்கவும், அல்லது ஏற்கெனவே உள்ளவற்றை மேம்படுத்தவும் மட்டுமே பயன்படுத்த வேண்டும் எனவும், அத்தகைய இடம் இல்லாத நிலையில், விரிவான வளர்ச்சி திட்டம்/முழுமை திட்டத்தினை செயல்படுத்த பயன்படுத்த வேண்டும் எனவும் CMDA அறிவுறுத்தியது (அக்டோபர் 2010).

2013-17 காலகட்டத்தில் CMDAவிடமிருந்து OSR கட்டணமாக பெற்ற ₹ 234.50 கோடி தொகையில், GCC ₹ 188.06 கோடி தொகையை ஏற்கனவே இருந்த பூங்காக்கள், தோட்டங்கள் மற்றும் விளையாட்டு மைதானங்களுக்கு செலவிட்டது. இந்நிதியை தனது பொது நிதி கணக்கில் செலுத்திவிட்டதாகவும், இந்த காலகட்டத்தில் பூங்காக்கள்/விளையாட்டு மைதானங்கள் அமைக்க இடம் கையகப்படுத்தப்படவில்லை எனவும் GCC கூறியது (செப்டம்பர் 2018).

Ch.MAல், குறிப்பாக சாலைகள், கால்வாய்கள் மற்றும் ஆற்றங்ககரை ஆகியவற்றை ஒட்டி பசுமைப்பரப்பை மேலும் உருவாக்க கணிசமான அளவு வாய்ப்பிருப்பதாக SMPல் கூறப்பட்டது; ஆனால் இது குறித்து ஆராயப்படவில்லை. **பத்தி 2.4.7.2 (i)ல்** கூறப்பட்டது போல், OSR இடத்தை ஒதுக்க இயலாததற்கான காரணத்தை பதிவு செய்யாமலேயே அதற்கு நிகராக OSR கட்டணங்களை பெற்றது அவ்விதியின் நோக்கத்தை முறியடித்தது.

(iii) OSR இடங்களை உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாற்றம் செய்யாமை

2013-18 காலகட்டத்தில் CMDA, சமூக பொழுது போக்கு பயன்பாட்டிற்காக நிலத்தை ஒதுக்குவது தொடர்பான 164 தானப்பத்திரங்களை மேம்பாட்டாளர்களிடமிருந்து பெற்றது. இவற்றுள், 88 தானப்பத்திரங்கள் உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாற்றம் செய்யப்பட்டு, மீதமுள்ள 76 தானப்பத்திரங்களின் மாற்றம் நிலுவையில் இருந்தது (செப்டம்பர் 2018). சோதனை ஆய்வு செய்யப்பட்ட 629 திட்ட அனுமதிகளில், CMDA 48 தானப்பத்திரங்களை CMDA வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவற்றுள், **இணைப்பு 2.24**ல் கண்டுள்ளவாறு 14 தானப்பத்திரங்கள் (மூன்று நேர்வுகள் நான்கு ஆண்டுகளுக்கு மேற்பட்டவை) உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாற்றப்படவில்லை.

இது குறித்து உள்ளாட்சி அமைப்புகளுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாக CMDA கூறியது (டிசம்பர் 2018). தானப்பத்திரங்களை உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாற்றாததற்கு குறிப்பான காரணங்கள் கூறப்படவில்லை.

2.4.8 ஊக்க FSI

அமையப்பெற்ற உள்கட்டமைப்பு மற்றும் வசதிகளின் அடிப்படையில், மேம்பாட்டின் நெருக்கத்தை முறைப்படுத்துவதற்கான முக்கிய வழிகளில் ஒன்றாக FSI கருதப்பட்டது. மேம்பாட்டு நெருக்கம் என்பது நிலத்தின் தாங்கும் திறன் மற்றும் உள்கட்டமைப்பு என்பவற்றுடன் மட்டுமல்லாமல், பல்வேறு சமூக அளவுருக்கள்,

குறிப்பாக குறைந்த வருவாய் பிரிவினருக்கான அளவுருக்களுடன், இணைத்து நோக்கப்படவேண்டிய ஒன்றாகும். FSI, ஊக்க FSI என்பவற்றுக்கு DRல் குறிப்பிடப்பட்டுள்ள அளவுருக்கள் **இணைப்பு 2.25**ல் விவரிக்கப்பட்டுள்ளன.

பத்திரப்பதிவு துறையின் வழிகாட்டு மதிப்பின்படியான கட்டணத்தை பெற்றுக்கொண்டு, ஊக்க FSI என்ற கூடுதல் பயனை வழங்கப்பட்டது; அத்தொகை, கூடுதலாக கட்டப்படும் பரப்பளவிற்கு நிகரான அளவு நிலத்தின் மதிப்பு ஆகும். 2013-18 காலகட்டத்தில் ஊக்க FSI கட்டணமாக CMDA ₹ 1,467 கோடி பெற்று அரசு கணக்கில் செலுத்தியது. ஊக்க FSI கட்டணத்தின் கணக்கீட்டில் காணப்பட்ட குறைபாடுகள் பின்வரும் துணை பத்திகளில் விவாதிக்கப்பட்டுளன.

FSI கணக்கீட்டில் அளவுருக்கள் தவறாக கடைப்பிடித்தமை

(i) சாலையை அகலப்படுத்துவதற்காக தானம் கொடுக்கப்பட்ட மனையின் பரப்பை சேர்த்து கணக்கிடல்

DR 28 அடுக்குமாடி கட்டடங்களுக்கான சிறப்பு விதிகளை விதித்துள்ளது; மனையை ஒட்டி 500 மீட்டர் நீளத்திற்கு, குறைந்தது 18 மீட்டர் அகலம் கொண்ட சாலை இருக்க வேண்டும், அனுமதிக்கக்கூடிய அதிகபட்ச FSI 2.50ஆக இருக்க வேண்டும் என்பவை அதில் அடங்கும். மேலும், DRன் இணைப்பு XXIன் படி, முழுமைதிட்டம்/விரிவான மேம்பாட்டுதிட்டம் ஆகியவற்றில் திட்டமிடப்பட்ட சாலை விரிவாக்கம்/புதிய சாலை அமைத்தல் என்பதற்கு தேவையான நிலத்தை மாற்றம் செய்தால் மட்டும் FSI பயனை அளிக்கலாம்.

வரைபடம் 2.1(அ): மனை, திட்ட அனுமதிக்கு முன்



(ஆதாரம்: CMDAன் திட்ட அனுமதி பதிவுருக்கள்)

வரைபடம் 2.1(ஆ): மனை, திட்ட அனுமதிக்கு பின்



(ஆதாரம்: CMDAன் திட்ட அனுமதி பதிவுருக்கள்)

(அ) GCC எல்லைக்குள் அமைந்த ஒரு இடத்தில் அடுக்குமாடி கட்டடங்களின் தொகுப்பு மேம்பாட்டிற்கு திட்ட அனுமதிக்கான ஒரு கோரிக்கையை CMDA பெற்றது. மனையின் மொத்த பரப்பு 56,429.71 ச.மீ. என்பதையும், மனையை அடுத்து மேற்கு பக்கம், 13 மீட்டர் முதல் 16.85 மீட்டர் அகலம் கொண்ட சாலை இருந்தது என்பதையும் CMDAவின் மனை ஆய்வு அறிக்கை (மார்ச் 2015) குறிப்பிட்டது. மேலும், 10.40 மீட்டர் முதல் 14.60 மீட்டர் வரையிலான அகலம் கொண்ட மற்றொரு சாலை வடக்கு பக்கம் இருந்தது. இதனிடையே, SMPல் கூறப்பட்டபடி சாலையை விரிவாக்கும் பொருட்டு, மனையின் வடப்புற சாலையில் இருந்த

2,704.01 ச.மீ. பரப்புடைய சாலையோர பூங்காவை (**வரைபடம் 2.1(அ)**) அகற்றி அதே பகுதியில் வேறொரு இடத்தில் அமைக்குமாறு GCCக்கு தமிழ்நாடு அரசு உத்தரவிட்டது (பிப்ரவரி 2015). வடபுறம் உள்ள சாலையில் இருந்த பூங்காவை இடம் மாற்றி, சாலையின் அகலத்தை ஒன்பது மீட்டர் அதிகப்படுத்தி, அம்மனையை அடுக்குமாடி கட்டடம் எழுப்ப தகுதியுள்ளதாக ஆக்கும் நோக்கில், அடுக்குமாடி கட்டடத்தின் மேம்பாட்டாளர் பூங்காவின் பரப்பளவுக்கு நிகராக மனையின் ஒரு பகுதியை பூங்காவை மாற்றியப்பதற்காக தர இணங்கி, 2,704.01 ச.மீ. பரப்புள்ள நிலத்தை GCCக்கு தானமாக அளித்தார் (டிசம்பர் 2015). இதன் அடிப்படையில், CMDA, அம்மனையில் 2.48 FSI உடன், 1,39,872.79 ச.மீ. தளப்பரப்பு கொண்ட 1,188 குடியிருப்புகளை உள்ள அடுக்குமாடி கட்டடங்களை கட்ட திட்ட அனுமதியை[80] வழங்கியது (**வரைபடம் 2.1 (ஆ)**). திட்டமிடப்பட்ட மனையை தகுதி பெற செய்யும் நோக்கில் சாலையை விரிவுபடுத்துவதற்காக தானமாக வழங்கப்படும் இடத்திற்கு FSI பயன் பொருந்தாது. எனவே, FSI கணக்கிட, பூங்காவை மாற்றியமைக்கும் பொருட்டு தானமாக வழங்கப்பட்ட இடத்தின் பரப்பை கழித்து, மீதமுள்ள 53,725.70 ச.மீ.[81] பரப்பை கணக்கில் கொண்டிருக்க வேண்டும்.

மனைப்பரப்பின் இந்த வேறுபாடு, FSIயை 2.48 என்பதிலிருந்து 2.60ஆக உயர்த்தியதால், ஊக்க FSI 0.10 என ஆனது (அதாவது, சாதாரண FSI ஆன 2.50 என்பதற்கு மேலாக). இவ்வாறாக, பூங்காவை இடம் மாற்ற வழங்கப்பட்ட இடத்தினை கழிக்க CMDA தவறியதால், கூடுதல் FSI பரப்பு அளிக்கப்பட்டது. வழிகாட்டு மதிப்பான ₹ 6,500/சதுர அடி என்ற கணக்கில், அதிகப்படி FSI பகுதிக்குரிய மதிப்பு ₹ 15.04 கோடி (**இணைப்பு 2.26 - வ.எண் 5**) ஆகும்; இது செலுத்தப்பட வேண்டிய ஊக்க FSI கட்டணமாக இருந்திருக்கும்.

வரைபடம் 2.2: இணைப்பு சாலை அமைத்தல்



(ஆதாரம்: CMDAன் திட்ட அனுமதி பதிவுருக்கள்)

(ஆ) CMDA, 62,628 ச.மீ. பரப்புள்ள ஒரு மனையில் 1,56,458.44 ச.மீ. தளப்பரப்பில் FSI 2.50 கொண்டு அடுக்குமாடி தொகுப்பு கட்டடங்கள் கட்ட திட்ட அனுமதியை[82] வழங்கியது. OSR இடத்தை (**வரைபடம் 2.2**) அணுகும் இணைப்பு சாலையாக அமையவும், DR 28(2)ன்படி மனையின் முகப்புக்கு விதிக்கப்பட்ட அளவுருவை நிறைவு செய்யும் வகையிலும் 3,600 ச.மீ. மனைப்பரப்பை மேம்பாட்டாளர் தானமாக வழங்கினார். இதன்படி, 59,028 ச.மீ.[83] என்ற குறைக்கப்பட்ட மனைப்பரப்புக்கு தணிக்கை கணக்கிட்ட FSI 2.65 ஆகும். இணைப்பு சாலைக்கென வழங்கப்பட்ட பரப்பை கழிக்காமல் கணக்கிட்டதால், வழங்கப்பட வேண்டிய FSI பரப்பளவைவிட 0.15 மிகையான FSI பரப்பளவை CMDA அனுமதித்தது. வழிகாட்டு மதிப்பான

80 திட்ட அனுமதி எண் 9094 நாள் 30 ஆகஸ்ட் 2016.
81 56,429.71 ச.மீ. *கழிக்க* 2,704.01 ச.மீ.
82 திட்ட அனுமதி எண் 9020 நாள் 10 ஜூலை 2015.
83 62,628 ச.மீ. *கழிக்க* 3,600 ச.மீ.

₹ 2,000/சதுர அடி என்ற கணக்கில், அதிகப்படி FSI பகுதிக்குரிய மதிப்பு ₹ 7.62 கோடி (**இணைப்பு 2.26 - வ.எண் 3**) ஆகும்; இது செலுத்தப்பட வேண்டிய ஊக்க FSI கட்டணம் ஆகும்.

(ii) OSR இடத்திற்கு இணைப்பு சாலை அமைப்பதற்காக தானமாக வழங்கப்பட்ட பகுதியின் பரப்பை சேர்த்தல்

DR 28(8) மற்றும் இணைப்பு XXன்படி, OSR நிலம், பொது சாலையை ஒட்டி, தரை மட்டத்தில், குறிப்பிட்ட வடிவம் மற்றும் இடத்தில் அமைந்திருக்க வேண்டும். மேலும், DR 28(2)(19)ன்படி, ஒரு இடத்தின் வளர்ச்சிக்காக அனுமதி கோரும்போது, அருகில் உள்ள நிலப்பகுதிகளுக்கு இணைப்பு வசதி அளிப்பதற்காக, அந்த இடத்தின் வழியாக இணைப்பு சாலை அமைக்குமாறு CMDA, மேம்பாட்டாளரை வலியுறுத்தலாம். எனினும், DRன் இணைப்பு XXIன்படி, முழுமைதிட்டம்/விரிவான மேம்பாட்டுதிட்டம் ஆகியவற்றில் திட்டமிடப்பட்டபடி புதிய சாலை அமைப்பதற்கு தேவையான நிலத்தை மாற்றம் செய்தால் மட்டும் FSI பயனை அளிக்கலாம்.

(அ) CMDA, 61 மீட்டர் அகலமுள்ள சாலையை ஒட்டிய நிலத்தில் 913 குடியிருப்புக்களை கொண்ட தொகுப்பு அடுக்குமாடி கட்டடங்கள் கட்ட திட்ட அனுமதி[84] வழங்கியது. மனையின் பரப்பு 35,893.13 ச.மீ. மற்றும் FSI பரப்பு 89,545.43 ச.மீ. ஆகும். மனையின் பின் பகுதியில் இருந்த OSR நிலத்திற்கான இணைப்பு சாலைக்காக 3,810.47 ச.மீ. இடத்தை மேம்பாட்டாளர் தானமாகக் அளித்தார் (**வரைபடம் 2.3**).

வரைபடம் **2.3: OSR பகுதிக்கு இணைப்பு சாலை அமைத்தல்**



(ஆதாரம்: CMDAன் திட்ட அனுமதி பதிவுருக்கள்)

CMDA, DR கூறியதற்கு முரணாக, 3,810.47 ச.மீ. என்ற இணைப்பு சாலையின் மொத்த பரப்பையும் கணக்கில் கொண்டது மற்றும் அனுமதிக்கப்பட்ட FSI 2.50 ஆக இருந்தது. இணைப்பு சாலை அமைக்க தானமாக அளிக்கப்பட்ட இடத்தின் பரப்பை கழிக்க CMDA தவறியதால் FSI 2.79 அதாவது 0.29 மிகையாக அனுமதிக்கப்பட்டது. வழிகாட்டு மதிப்பான ₹ 4,000/சதுர அடி என்ற கணக்கில், அதிகப்படி FSI பகுதிக்குரிய மதிப்பு ₹ 16.02 கோடி (**இணைப்பு 2.26 - வ.எண் 6**) ஆகும்; இது செலுத்தப்பட வேண்டிய ஊக்க FSI கட்டணம் ஆகும்.

---

[84] திட்ட அனுமதி எண் 9097 நாள் 09 செப்டம்பர் 2016.

(ஆ) CMDA, 18 மீட்டர் அகலமுள்ள ஒரு சாலையை ஒட்டிய, 39,860.80 ச.மீ. பரப்பும், FSI 2.50 என்ற கணக்கில் 99,542.64 ச.மீ. FSI பரப்பும் உடைய நிலத்தில் அடுக்குமாடி கட்டடங்கள் கட்ட திட்ட அனுமதி[85] வழங்கியது. மனைக்கு அப்பால் எந்த பொது சாலையையும் இணைக்காத OSR நிலத்தை அணுகும் சாலைக்கென 7,705 ச.மீ. பரப்புள்ள நிலத்தை மேம்பாட்டாளர் தானமாக வழங்கினார் (**வரைபடம் 2.4**). எனினும், தானமாக அளித்த இணைப்பு சாலையின் பரப்பையும் கணக்கில் கொண்டு FSI 2.50 கணக்கிடப்பட்டது என்பதை தணிக்கை கண்டறிந்து. தணிக்கை, இணைப்பு சாலையின் பரப்பை கழித்துவிட்டு கணக்கிட்ட FSI 3.10 ஆகும். தானமாக அளித்த இணைப்பு சாலை பரப்பை தவறாக சேர்த்து கணக்கிட்டதால் FSI 0.60 கூடுதலாக வழங்கப்பட்டது. வழிகாட்டு மதிப்பான ₹ 2,750/சதுர அடி என்ற கணக்கில், அதிகப்படி FSI பகுதிக்குரிய மதிப்பு ₹ 22.84 கோடி (**இணைப்பு 2.26 - வ.எண் 1**) ஆகும்; இது செலுத்தப்பட வேண்டிய ஊக்க FSI கட்டணம் ஆகும்.

வரைபடம் 2.4: OSR பகுதிக்கு இணைப்பு சாலை அமைத்தல்



(ஆதாரம்: CMDAன் திட்ட அனுமதி பதிவுருக்கள்)

(இ) 16.20 மீட்டர் அகலமுள்ள சாலையை ஒட்டியிருந்த 22,014.72 ச.மீ. பரப்பு கொண்ட மனையில் FSI 1.50 உடன் 32,919.74 ச.மீ. FSI பரப்புடைய சிறப்பு கட்டடங்கள் கட்ட திட்ட அனுமதி[86] வழங்கப்பட்டது. மனைக்கு அப்பால் எந்த பொது சாலையையும் இணைக்காத OSR நிலத்தை அணுகும் சாலைக்கென 1,487.36 ச.மீ. பரப்புள்ள நிலத்தை மேம்பாட்டாளர் தானமாக வழங்கினார் (**வரைபடம் 2.5**). எனினும், FSI 1.50 என்று கணக்கிட தானமாக அளிக்கப்பட்ட இணைப்பு சாலையின் பரப்பும் எடுத்துக்கொண்டது தணிக்கையில் கண்டறியப்பட்டது. தணிக்கை, இணைப்பு சாலைக்கான பரப்பை கழித்து கணக்கிட்ட FSI 1.60 ஆகும்.

வரைபடம் 2.5: OSR பகுதிக்கு இணைப்பு சாலை



(ஆதாரம்: CMDAன் திட்ட அனுமதி பதிவுருக்கள்)

எனவே, OSR நிலத்திற்கான இணைப்பு சாலையின் பரப்பையும் சேர்த்து FSI கணக்கிட்டதால் FSI 0.10 மிகையானது. வழிகாட்டி மதிப்பான ₹ 2,200/சதுர அடி என்ற அடிப்படையில், அதிகப்படி FSI பகுதிக்குரிய மதிப்பு ₹ 3.24 கோடி (**இணைப்பு 2.26 - வ.எண் 4**) ஆகும்; இது செலுத்தப்பட வேண்டிய ஊக்க FSI கட்டணம் ஆகும்.

85 திட்ட அனுமதி எண் 7200 நாள் 28 ஜூன் 2013.

86 திட்ட அனுமதி எண் 9413 நாள் 20 நவம்பர் 2015.

வரைபடம் 2.6: OSR நிலத்திற்கு இணைப்பு சாலை



(ஆதாரம்: CMDAன் திட்ட அனுமதி பதிவுருக்கள்)

(ஈ) 12 மீட்டர் அகலமுள்ள சாலையை ஒட்டி அமைந்து, சாலையின் முடிவில் தனது நுழைவாயிலாக கொண்ட 35,126 ச.மீ. பரப்புள்ள மனையில், FSI 1.50 உடன் 52,643.69 ச.மீ. FSI பரப்புடைய தூண்கள் தளம் மற்றும் ஏழு தளங்கள் கொண்ட அடுக்குமாடி கட்டட கட்டுமானத்திற்காக திட்ட அனுமதி[87] வழங்கப்பட்டது. OSR நிலத்தை இணைக்கும் சாலைக்கென 1,430 ச.மீ. பரப்புள்ள நிலத்தை மேம்பாட்டாளர் தானமாகக் கொடுத்தார் (**வரைபடம் 2.6**). CMDA, தானமாக அளிக்கப்பட்ட இணைப்பு சாலை பரப்பை கழிக்காமல், FSI 1.50 என கணக்கிட்டதை தணிக்கை கண்டறிந்தது. இணைப்பு சாலைக்கான பரப்பை கழித்து, தணிக்கை கணக்கிட்ட FSI 1.56 ஆகும். தானமாக அளிக்கப்பட்ட இணைப்பு சாலை பரப்பை தவிர்க்கத் தவறியதால், வழிகாட்டி மதிப்பான ₹ 1,500/சதுர அடி என்ற அடிப்படையில் அதிகப்படியான பரப்பிற்கு ஊக்க FSI கட்டணம் ₹ 2.18 கோடி (**இணைப்பு 2.26 - வ.எண்.2**) வசூலிக்க வேண்டியுள்ளது.

பெறப்படும் ஊக்க FSI கட்டண தொகை தொடர்புடைய பகுதியின் உள்கட்டமைப்பு மேம்பாட்டுக்கு பயன்படுத்தப்படுவதால், முந்தைய பத்திகளில் விவரிக்கப்பட்டுள்ளவாறு ₹ 66.94 கோடி (**இணைப்பு 2.26**) அளவிற்கு ஊக்க FSI கணக்கிடப்படாதது உள்கட்டமைப்பு மேம்பாடு பணிகளை பாதிக்கும். CMDA, தாம் மே 2015ல் வழங்கிய தெளிவுரையின் அடிப்படையிலேயே FSI பயன்கள் அளிக்கப்பட்டதாக தெரிவித்தது (டிசம்பர் 2018). முழுமை திட்டம்/விரிவான வளர்ச்சி திட்டத்தில் கூறப்பட்ட சாலை விரிவாக்கம்/புதிய சாலை ஏதேனும் அமைத்தல் வேண்டி நில மாற்றம் செய்யும் நேர்வுகளில் மட்டுமே FSI பயன்களை அளிக்கலாம் என DR கூறுகிறது மற்றும் CMDA அளித்த தெளிவுரை DR கூறுவதற்கு முரணாக உள்ளது என்ற காரணங்களால், CMDAன் இம்மறுமொழி ஏற்கத்தக்கதல்ல.

(iii) தகுதியற்ற கூடுதல் FSI வழங்கியமை

DR 26ன்படி, குடியிருப்பு வகை அல்லது பெரும்பாலும் குடியிருப்பு வகையை சார்ந்த கட்டடங்களில், குறைந்த வருவாய் பிரிவினருக்கான குடியிருப்புகளில் ஒவ்வொரு குடியிருப்பின் தரைபரப்பு 50 ச.மீ. அளவுக்கு மிகாமல் இருந்தால், பொதுவாக அனுமதிக்கப்படும் FSIல் 30 விழுக்காடுவரை கூடுதலாக, அதாவது 1.50க்கு மாறாக 1.95 வரை அனுமதிக்கலாம். குறைந்த வருவாய் பிரிவினருக்காக 36 குடியிருப்புகள் கொண்ட, தூண்கள் தளம் மற்றும் நான்கு தளங்களை உடைய கட்டடம் கட்டுவதற்கு 30 விழுக்காடு கூடுதல் FSI உடன், அதாவது 1.85 FSI உடன், CMDA திட்ட அனுமதி[88] வழங்கியது. மனையின் பரப்பு 1,040.40 ச.மீ.

[87] திட்ட அனுமதி எண் 8121 நாள் 26 செப்டம்பர் 2013.

[88] திட்ட அனுமதி எண் 8297 நாள் 10 செப்டம்பர் 2013.

மற்றும் FSI பரப்பு 1,919.16 ச.மீ. ஆகும். எனினும், ஒவ்வொரு குடியிருப்புக்குமான தரைபரப்பு அனுமதிக்கப்பட்ட அளவான 50 ச.மீ.க்கு மாறாக 69.54 ச.மீ.[89] என இருந்ததை திட்ட ஆவணங்களிருந்து தணிக்கை கண்டறிந்தது. இதன்படி, மனுதாரர் 0.35 கூடுதல் FSI பெற தகுதியற்றவர் ஆவார். வழிகாட்டி மதிப்பான ₹ 11,000/சதுர அடி என்ற அடிப்படையில், நிகரான நிலத்தின் மதிப்பு, ₹ 2.87 கோடி ஆகும். ஒரு குடியிருப்பின் தரைபரப்பு 50 ச.மீ.க்கு மிகாமல் இருப்பதை உறுதி செய்ய CMDA தவறியதால், தகுதியற்ற கூடுதல் FSI பயனை மனுதாரருக்கு வழங்க நேர்ந்தது.

பொதுப்பகுதிகளான நடைவழி, தாழ்வாரம், படிக்கட்டுகள், மின்தூக்கி ஆகியவற்றை கழித்தால், ஒவ்வொரு குடியிருப்பின் பரப்பும் 50 ச.மீ.க்கு மிகாமல் இருந்தது என CMDA கூறியது (டிசம்பர் 2018). குடியிருப்புக்கான 50 ச.மீ. என்ற வரையறை, பொது பகுதிகளயும் உள்ளடக்கியே DRல் குறிப்பிட்டுள்ளதால், இம்மறுமொழி ஏற்கத்தக்கதல்ல.

2.4.9 DRல் கூறப்பட்ட பல்வேறு அளவுருக்களை மீறி திட்ட அனுமதி அளித்தமை

2.4.9.1 வாகன நிறுத்துமிடத்திற்கான குறைவான ஏற்பாடு

சிறப்பு கட்டடம்/தொகுதி மேம்பாடு/அடுக்குமாடி கட்டடங்களில் குடியிருப்போரும் ஏதாவது காரணத்தினால் அங்கு வருவோரும் தமது வாகனங்களை நிறுத்துமிடம் மற்றும் நிறுத்த வசதிகள் குறித்த தர நிலைகளை[90] DR வரையறுக்கிறது.

தணிக்கை, 629 மாதிரி நேர்வுகளுள் 18 நேர்வுகளில் **அட்டவணை 2.36**ல் உள்ளபடி, நான்கு மற்றும் இரு சக்கர வாகன நிறுத்துமிடம் தொடர்பான பற்றாக்குறையுடன் திட்ட அனுமதி வழங்கப்பட்டதை கண்டறிந்தது.

அட்டவணை 2.36: வாகன நிறுத்துமிடம் அமைப்பதில் பற்றாக்குறை

வாகன வகை	தேவையான நிறுத்துமிடம்	அமைக்கப்பட்ட நிறுத்துமிடம்	பற்றாக்குறை
கார்	13,905	11,141	2,764 (19.88 சதவிகிதம்)
இரு சக்கர வாகனம்	21,251	17,005	4,246 (19.98 சதவிகிதம்)

(ஆதாரம்: CMDAன் திட்ட அனுமதி ஆவணங்கள்)

நிறுத்துமிட பற்றாக்குறை கார் வகையில் 11 முதல் 710 ஆகவும், இரு சக்கர வாகன வகையில் 29 முதல் 1,686 (**இணைப்பு 2.27**) உள்ளது. வாகன நிறுத்துமிடம் தொடர்பாக DR கூறிய அளவுருக்களை மீறியது, எளிதான, தடங்கலற்ற வாகன நகர்வை பாதிக்கும்.

DR விதிகளை ஒட்டியே வாகன நிறுத்துமிடங்கள் கணக்கிடப்பட்டதாக CMDA கூறியது. எனினும், CMDA வாகன நிறுத்துமிட எண்ணிக்கையை DRல் குறிப்பிட்டவாறு தரைபரப்பு அடிப்படையில் அல்லாமல், FSI பரப்பின் அடிப்படையில் கணக்கிட்டது.

---

89 ஒரு குடியிருப்பின் தரைபரப்பு = மொத்த தரைபரப்பு (FSI (1,919.16 ச.மீ.) + பால்கனி பகுதி (83.72 ச.மீ.) + தூண்தள வாகன நிறுத்த பகுதி (500.72 ச.மீ.)) / குடியிருப்புகளின் எண்ணிக்கை (36).

90 DR 26 (7) (அ), 27 (6) (அ) மற்றும் 28 (4) (அ), மற்றும் இணைப்பு XVI.

2.4.9.2 சாலை அகலத்தில் பற்றாக்குறை

(i) DR 28 அடுக்குமாடி கட்டடங்களுக்கான சிறப்பு விதிகளை விதித்தது; அதன்படி, மனையை ஒட்டி தொடர்ச்சியாக 500 மீட்டர் நீளத்திற்கு, குறைந்தது 18 மீட்டர் அகலம் கொண்ட சாலை இருக்க வேண்டும், அல்லது அத்தகைய சாலையில் இருந்து மனையின் ஒரு பகுதியை அணுகும்படி இருக்க வேண்டும். மேலும், இந்திய தேசிய கட்டடவிதிகள் தொகுப்பின்படி மனையை ஒட்டியுள்ள பிரதான தெருவின் அகலம் குறைந்தபட்சம் 12 மீட்டர் இருக்க வேண்டும்; இத்தெருவின் ஒரு முனை குறைந்தபட்சம 12 மீட்டர் அகலம் கொண்ட வேறொரு தெருவுடன்சேர வேண்டும். தீயணைப்பு நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக தீயணைப்பு வாகனங்களின் போக்குவரத்தை கருத்தில் கொண்டு இந்த விதி உருவாக்கப்பட்டது.

CMDA, 45,716.01 ச.மீ. பரப்புள்ள கொண்ட ஒரு மனையில் அடுக்குமாடி கட்டடம் கட்டுவதற்கான ஒரு திட்டத்திற்குரிய கருத்துருவை தமிழ்நாடு அரசுக்கு அனுப்பியது (அக்டோபர் 2013). மனையை ஒட்டியிருந்த சாலையின் அகலம் மனைக்கு எதிரே 18.10 மீட்டர் இருந்தாலும், அச்சாலையின் முழுநீளத்திற்கும் அந்த அகலம் 18 மீட்டருக்கு குறைவாக இருந்து, சாலையின் துவக்கத்தில் ஆறு மீட்டர் அளவிற்கு சுருங்கியது (**வரைபடம் 2.7**). எனினும், கருத்துரு சாலையின் துவக்கத்தில் இருந்த குறைவான அகலத்தை குறிப்பிடவில்லை. தமிழ்நாடு அரசு அளித்த (நவம்பர் 2013) ஒப்புதலின் அடிப்படையில், CMDA திட்ட அனுமதியை[91] வழங்கியது (மார்ச் 2014). இது தேசிய கட்டட விதிகள் தொகுப்பு கூறியதற்கு முரணானதாகும்.

வரைபடம் 2.7: சாலையின் துவக்கப்பகுதி அகலம்



(ஆதாரம்: CMDAன் திட்ட அனுமதி பதிவுருக்கள்)

மனையை ஒட்டிய சாலையின் அகலத்தின் அடிப்படையில் திட்ட அனுமதி வழங்கப்பட்டதாக CMDA கூறியது (டிசம்பர் 2018). எனினும், தணிக்கை குறிப்பு, சாலையின் துவக்கத்தில் அதன் அகலம் குறைவானது மற்றும் திட்ட அனுமதி அளிப்பதில் CMDA அதனை கருத்தில் கொள்ளவில்லை என்பவை தொடர்பானது ஆகும். மேலும், CMDA அலுவலர்களுடன் இணைந்து நடத்தப்பட்ட இணை சரிபார்ப்பு (டிசம்பர் 2018), மனையை ஒட்டிய சாலையில் வாகனப்பாதை (7.9 மீட்டர்), இருபுறமும் இருந்த நடைபாதை (2.2 மீட்டர் மற்றும் 2.9 மீட்டர்), சிமெண்ட் கான்கிரீட் பாதை (3.1 மீட்டர்) சாலை நடுவே சிமெண்ட் கான்கிரீட் தடுப்பு (2.3 மீட்டர்) ஆகியன இருந்ததை காட்டியது. இதன்படி, சாலையின் உண்மையான அகலம், தேவையான 18 மீட்டர் என்பதற்கு மாறாக 7.9 மீட்டர் மட்டுமே இருந்தது.

(ii) DR 27ன்படி, தொகுப்பு மேம்பாடு என்பது, 250 மீட்டர் நீளத்துக்கு 10 மீட்டர் குறைந்தபட்ச அகலம் கொண்ட சாலையை ஒட்டி அமைந்த ஒரு

---

[91] திட்ட அனுமதி எண் 8153 நாள் 13 மார்ச் 2014.

மனையில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கட்டட தொகுதிகள் அமைந்த ஒரு இருப்பிடம் ஆகும்.

ஒன்பது மீட்டர் அகலம் கொண்ட சாலையிலிருந்து அணுகக்கூடிய ஒரு மனையில், இரண்டு கட்டடங்களில் தூண்தளம் மற்றும் நான்கு தளங்களில் அமைந்த 75 குடியிருப்புகள் உடைய சிறப்பு கட்டட தொகுப்பு மேம்பாட்டிற்கு CMDA திட்ட அனுமதி[92] வழங்கியது. மனையின் பரப்பு 3,592 ச.மீ. மற்றும் FSI பரப்பு 6,338.40 ச.மீ. ஆகும். சாலையின் அகலம் 10 மீட்டருக்கு குறைவு என்பதால், தொகுதி மேம்பாடு அனுமதிக்கத் தக்கதல்ல. CMDA அளித்த திட்ட அனுமதி DRக்கு முரணானது ஆகும்.

CMDA, சாலையின் அகலம் ஒன்பது மீட்டராக இருந்த போதிலும், இம்மனையின் மேற்குப்புறத்தை அணுக 7.2 மீட்டர் அகலம் கொண்ட ஒரு இணைப்பு சாலையை மனுதாரர் அமைத்ததால், இத்திட்ட அனுமதி முறையான ஒன்று என கூறியது (டிசம்பர் 2018). DR மனையை ஒட்டிய சாலையின் அகலம் குறைந்தது 10 மீட்டர் இருக்கவேண்டும் என கூறுவதால், இம்மறுமொழி ஏற்கத்தக்கதல்ல.

(iii) DR 28(1)(ஆ)ன் கீழ் உள்ள விளக்கத்தின்படி, அடுக்குமாடி கட்டடத்தை அனுமதிக்கத்தக்க அளவில் உள்ள சாலை அகலம், மனையை ஒட்டிய சாலைப்பகுதியில் குறைந்தது 500 மீட்டர் நீளத்திற்கு இருக்கவேண்டும்; அந்த சாலைப்பகுதி சாலை சந்திப்பிலிருந்து நேராக, வளைவாக, வளைந்து வளைந்து, அல்லது இவையெல்லாம் கலந்த அமைப்பில் இருக்கலாம். மேலும், இந்திய தேசிய கட்டட விதிகள் தொகுப்பு, பகுதி III (4.6(அ))ன்படி, உயரமான கட்டடங்கள், மற்றும் சிறப்பு கட்டடங்களை அமைந்துள்ள தெருவின் அகலம் குறைந்தபட்சம் 12 மீட்டராக இருக்கவேண்டும்; அத்தெருவின் ஒரு முனை குறைந்தபட்சம் 12 மீட்டர் அகலம் கொண்ட இன்னொரு தெருவுடன் சேர வேண்டும்.எனினும், 500 மீட்டர் நீளத்திற்கு தொடர்ச்சியாக 12 மீட்டர் அகலம் கொண்டிராத ஒரு சாலையை[93] ஒட்டி அமைந்திருந்த 14,430 ச.மீ. பரப்பும், 21,631.94 ச.மீ. FSI பரப்பும் கொண்ட ஒரு மனையில் அடுக்குமாடி கட்டடங்கள் கொண்ட தொகுப்பு மேம்பாட்டிற்கு திட்ட அனுமதி[94] வழங்கப்பட்டது; இது, DR மற்றும் இந்திய தேசிய கட்டடவிதிகள் தொகுப்பு கூறியவற்றுக்கு முரணாக இருந்தது.

CMDA, ஒட்டியிருந்த சாலையின் அகலம் 12 மீட்டர் என்று கருதியே திட்ட அனுமதி வழங்கப்பட்டது எனகூறியது (டிசம்பர் 2018). எனினும், CMDAன் ஆய்வு அறிக்கைகளில், ஒட்டியிருந்த சாலையின் அகலம் 500 மீட்டர் நீளத்திற்கு தொடச்சியாக 12 மீட்டர் இல்லை என்பதால் அடுக்குமாடி கட்டடங்கள் கட்ட அனுமதிக்க இயலாது என பதிவாகி இருந்தது. CMDA அளித்த மறுமொழி ஆய்வறிக்கைகளுக்கு முரணாக இருந்தது.

(iv) DR 26ன்படி, தூண்தளம் மற்றும் நான்கு தளங்கள் கொண்ட, குடியிருப்புகள்/பெரும்பாலும் குடியிருப்புகள் கொண்ட சிறப்பு கட்டடங்கள் அமைந்துள்ள பொது சாலையின் அகலம் குறைந்தபட்சம் 10 மீட்டர் இருக்கவேண்டும். DR மேலும், மனையின் பரப்பு 1,100 ச.மீ.க்கு மேற்பட்டு இருந்தால், மனையை ஒட்டியுள்ள சாலை அல்லது மனையை அணுகும் சாலையின்

92 திட்ட அனுமதி எண் 8864 நாள் 25 நவம்பர் 2014.

93 சாலையின் அகலம் சந்திப்பில் 8.20 மீட்டர் முதல், பல்வேறு பகுதிகளில் 9.30, 10.70, 12.85 மற்றும் 13.90 மீட்டர் என்பது வரை மாறுபட்டு இருந்தது.

94 திட்ட அனுமதி எண் 11163 நாள் 23 ஆகஸ்ட் 2017.

அகலம் 9 மீட்டர் இருந்தால், குடியிருப்புக்களுக்கான சிறப்பு கட்டடங்களை அனுமதிக்கலாம் என கூறியது. ஒரு சாலையின் பொதுவான அகலம் 10 மீட்டருக்கு குறைவாக இருந்து, மனையின் உரிமையாளர் தன் மனையின் எதிரில் மட்டும் அகலம் 10 மீட்டர் இருக்குமாறு செய்யும் நோக்கில் போதுமான இடத்தை காலியாக விட்டுவைக்க முன்வந்தால், அது ஏற்கத்தக்கதல்ல. DR 36ன்படி, மனை அமைந்துள்ள சாலையின் அகலம் (மீட்டரில்) ஒன்பது முதல் 12க்கு கீழ்,12 முதல் 18க்கு கீழ், 18 மற்றும் அதற்கு மேலாக இருந்தால், 1.5 என்ற வழக்கமான FSIல் முறையே 20, 30 மற்றும் 40 விழுக்காடு அளவிற்கு ஊக்க FSI அனுமதிக்கலாம்.

ஒரு தூண்தளம் மற்றும் நான்கு தளங்களுடன், ஒரு தொகுதி வடிவில் அமைந்த ஒன்பது தொகுதிகள் உடைய குடியிருப்பு சிறப்பு கட்டடத்தை 9.45 மீட்டர் அகலம் கொண்ட சாலையை ஒட்டி அமைந்த ஒரு மனையில் கட்ட CMDA திட்ட அனுமதி[95] வழங்கியது. சாலை அகலத்தின் அடிப்படையில் இந்நேர்வு 20 விழுக்காடு ஊக்க FSI பெற தகுதியுடையது. வழக்கமாக FSIல் 30 விழுக்காடு ஊக்க FSI கூடிய சிறப்பு கட்டடத்தை அம்மனையில் கட்டும் நோக்கத்தில், மனையின் முன்பாக சாலையை அகலப்படுத்துவதற்காக மனுதாரர் 6.10 மீட்டர் அகல நிலத்தை தானமாக அளித்தார். அதன்படி, 7,805.37 ச.மீ. மனைப்பரப்பில், 30 விழுக்காடு ஊக்க FSI கணக்கில் 15,215.74 ச.மீ. FSI பரப்பு அனுமதிக்கப்பட்டது; இது, FSI 1.80க்கு (1.50க்கு மேல் 20 விழுக்காடு) மாறாக 1.95 ஆகும். சாலையின் முழு நீளத்திற்கும் சீராக அல்லாமல், மனைக்கு முன்பாக இருந்த பகுதியில் மட்டும் சாலை அகலப்படுத்தப்பட்டது என்பதால், அனுமதி வழங்கியது DRக்கு முரணானதாகும். திட்ட அனுமதி வழங்கியது சரியே என்று CMDA அதற்குரிய காரணங்களை குறிப்பிடாமல் தெரிவித்தது (டிசம்பர் 2018). எனவே, தணிக்கை குறிப்பு வலியுறுத்தப்படுகிறது.

2.4.10 திட்ட அனுமதி மற்றும் கட்டட உரிமத்திற்கான விண்ணப்பங்கள் மீதான நடவடிக்கையில் தாமதம்

CMDA/தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகள், விண்ணப்பங்களை பெற்ற 30 நாட்களுக்குள், மேலும் தேவையான தகவல்களை கோரிப்பெற்று, கட்டுமானத்தின் நோக்கம், கட்டும் இடத்தின் பொருத்தம், எதிர்கால மேம்பாடுகள், அப்பகுதியின் பராமரிப்பு போன்ற காரணிகளை கருத்தில் கொண்டு, அனுமதியை வழங்கவோ, மறுக்கவோ வேண்டும். தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம் 1971, பிரிவு 49ன்கீழ் வழங்கப்படும் அனுமதி, உரிய திட்ட அமைப்பு அதன் செல்லுபடி காலத்தை நீட்டிக்காவிடில், வழங்கப்பட்ட நாள் முதல் மூன்று ஆண்டுகளுக்கு[96] அமலில் இருக்கும்; அந்த நீட்டிப்பு விதிக்கப்பட்ட கால வரையறைக்கு மேற்படக்கூடாது.

திட்ட அனுமதி, கட்டட உரிமம் மற்றும் முடிவு சான்றிதழ் வழங்குவதில் ஏற்பட்ட தாமதங்கள் பற்றி பின்வரும் பத்திகளில் விவாதிக்கப்பட்டுள்ளது.

---

95 திட்ட அனுமதி நாள் 9193 நாள் 20 ஜூலை 2015.

96 31 மார்ச் 2017 அன்று அல்லது அதற்கு பின் அளிக்கப்பட்ட திட்ட அனுமதிகளுக்கு இது ஐந்து ஆண்டுகள் என நீட்டிக்கப்பட்டது.

2.4.10.1 திட்ட அனுமதி வழங்குவதில் தாமதம்

சிறப்பு, தொழில் மற்று நிறுவன வகைக் கட்டடங்களுக்கு திட்ட அனுமதி கோரி முழுமையான வகையில் பெறப்பட்ட விண்ணப்பங்கள் மீது, அவை பெறப்பட்ட நாளிலிருந்து 45 நாட்களுக்குள் முடிவு எடுக்கப்பட வேண்டும் என CMDAன் மக்கள் சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், முழுமையற்ற விண்ணப்பங்களை குறை நீக்கம் செய்யும் பொருட்டு 21 நாட்களுக்குள் திருப்பி அனுப்பவேண்டும். ஜனவரி 2013 முதல் டிசம்பர் 2017 வரையிலான காலத்திற்குரிய 'திட்ட அனுமதி விண்ணப்பங்கள்' மற்றும் 'ஒப்புதல் அளிக்கப்பட்ட விண்ணப்பங்கள்' என்ற தகவல் தரவுகளை பகுப்பாய்வு செய்ததில், சிறப்பு, தொழில் மற்றும் நிறுவன வகை கட்டடங்கள் தொடர்பான 1,852 விண்ணப்பங்களுள் 937 விண்ணப்பங்கள் (51 விழுக்காடு) மீது, ஒரு மாதத்திற்கு மேலான காலதாமதத்துடன் (விதிக்கப்பட்ட 45 நாட்களுக்கு மேல்), **அட்டவணை 2.37**ல் விவரிக்கப்பட்டுள்ளவாறு, CMDA முடிவு செய்தது. மேலும், விண்ணப்பம் எதையும் மனுதாரருக்கு திருப்பி அனுப்பவில்லை என்பதையும் தகவல் தரவுகள் காட்டின.

அட்டவணை 2.37: திட்ட அனுமதி வழங்குவதில் தாமதம்

தாமதம் (வேலை நாட்கள்)	விண்ணப்பங்களின் எண்ணிக்கை
31 - 60	151
61 - 365	715
365க்கு மேல்	71
மொத்தம்	**937**

(ஆதாரம்: CMDA தகவல்தரவுகள்)

ஒற்றைச்சாளர இணையதளம் செயல்படுத்தப்பட்டவுடன், காலதாமதமின்றி திட்ட அனுமதி வழங்கப்படும் என்று நிறைவு கூட்டத்தில் CMDA தெரிவித்தது.

2.4.10.2 GCC கட்டட உரிமம் வழங்குவதில் தாமதம்

CMDA திட்ட அனுமதி வழங்கும் சிறப்பு கட்டடங்கள், அடுக்குமாடி கட்டடங்கள் மற்றும் தொகுப்பு மேம்பாடுகள் உட்பட அனைத்து வகையான கட்டங்களுக்கும், சென்னை மாநகர கட்டட விதிகள் 1972ன் கீழ் கட்டட உரிமம் வழங்கும் பொறுப்பு GCCக்கு உண்டு. திட்ட அனுமதி மற்றும் கட்டட உரிமம் பெற உரிமம் பெற்ற அளவையர் மூலமாக இணைய சேவை வழியில் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பத்தை பெற்ற ஏழு நாட்களுக்குள் இடத்தை ஆய்வு செய்து கட்டட உரிமத்தை வழங்க வேண்டும். கட்டட உரிமம் தொடர்பான GCCன் தரவுத் தளம், நான்கு மாதிரி மண்டலங்களில் பெறப்பட்ட முழுமையான 6,101 விண்ணப்பங்களுள் 2,235 விண்ணப்பங்களுக்கான (37 விழுக்காடு) கள ஆய்வு ஒன்று முதல் 339 நாட்கள் தாமதமாக நடத்தப்பட்டது என்பதை காட்டியது. இதன் விளைவாக, **இணைப்பு 2.28**ல் கண்டுள்ளவாறு கட்டட உரிமம் வழங்குவதில் 16 முதல் 620 நாட்கள் காலதாமதம் ஏற்பட்டது.

சாதாரண கட்டடங்களுக்கான திட்ட அனுமதி விண்ணப்பங்களை இணைய வழியில் அளிக்கும் முறையை செயல்படுத்தியதாக GCC நிறைவு கூட்டத்தில் தெரிவித்தது. எனினும், கள ஆய்வு செய்வது மற்றும் பின்னர் கட்டட உரிமம் வழங்குவதில் இருந்த தாமதத்திற்கான காரணங்களை அது குறிப்பிடவில்லை.

2.4.10.3 சுற்றுச்சூழல் அனுமதிக்கு முன்பாக திட்ட அனுமதி வழங்கியமை

சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம், 1986ன்கீழ், 20,000 ச.மீ. அல்லது அதற்கு மேல் கட்டுமான பரப்புள்ள கட்டடங்கள்/கட்டுமான திட்டங்கள், 50 ஹெக்டேர் அளவுக்கு மேற்பட்ட பரப்பு கொண்ட மற்றும் (அல்லது) 1,50,000 ச.மீ.க்கு மேற்பட்ட கட்டுமான பரப்பு கொண்ட நகரிய/பகுதி மேம்பாட்டு திட்டங்கள் ஆகியவற்றுக்கு திட்ட அனுமதிக்கு முன்பாக மாநில சுற்றுச்சூழல் பாதிப்பு மதிப்பீட்டு ஆணையத்தின் சுற்றுச்சூழல் அனுமதி பெற வேண்டும் என இந்திய அரசு விதித்தது (செப்டம்பர் 2006). 2013-18 காலத்தில் 108 திட்ட அனுமதிகள் சுற்றுச்சூழல் அனுமதியுடன் வழங்கப்பட்டன; அவற்றுள், **இணைப்பு 2.29**ல் விவரித்துள்ளவாறு 31 தொகுப்பு மேம்பாடுகளுக்கான திட்ட அனுமதிகளை CMDA சுற்றுச்சூழல் அனுமதியை பெறுவதற்கு முன்பே வழங்கியது.

தற்பொழுது சுற்றுச்சூழல் அனுமதி பெறப்பட்டதை உறுதி செய்த பின்பே திட்ட அனுமதி வழங்கப்படுகிறது என்று CMDA தெரிவித்தது (டிசம்பர் 2018).

2.4.10.4 திட்ட அனுமதி வழங்க இணைய வழியிலான ஒற்றை சாளர முறையை செயல்படுத்தாமை

திட்ட அனுமதி வழங்குவதில் தடங்கல் அற்ற நடைமுறை, கட்டுமான காலத்தில் கட்டுமானத்தின் மீதான கண்காணிப்பு, முடிவு சான்றிதழ் வழங்குதல் ஆகியவற்றை மையமாக கட்டமைக்கப்பட்ட வகையில் மேற்கொள்ள பொதுவான, இணையம் சார்ந்த ஒருங்கிணைந்த மென்பொருள்[97] ஒன்றை உருவாக்குமாறு தமிழ்நாடு அரசு CMDAக்கு உத்தரவிட்டது (மே 2015). CMDA, மென்பொருளை ஆய்வை செய்யும் பணியை சென்னை, IITக்கு வழங்கியது (பிப்ரவரி 2016). திட்ட அனுமதிக்கான விண்ணப்பத்தை இணையதளம் மூலம் அளித்தல், CMDAல் நடவடிக்கை முறைகளை கணினிமயமாக்குதல், தடையில்லா சான்று மற்றும் அனுமதி வழங்கும் பொருட்டு பிற துறைகளுடனும் அனுமதி வழங்கியபின் கோப்புகளை அனுப்பும் பொருட்டு உள்ளாட்சி அமைப்புகளுடனும் இணைப்பை உருவாக்குதல் ஆகியன இத்திட்டத்தில் அடங்கும். இந்த ஆய்வை ₹ 65.28 இலட்சம் செலவு கொண்ட இரண்டு கட்டங்களை உடையதாகும். முதல் கட்டம் மற்றும் இரண்டாம் கட்டத்திற்கு மார்ச் 2016 முதல் பிப்ரவரி 2018 என 96 வார கால அளவு நிர்ணயிக்கப்பட்டது.

IIT, சென்னை தயாரித்த (ஜூன் 2016) கணினி முறைமைகளின் தேவைகள் குறித்த விவரங்களின் (System Requirements Specification) அடிப்படையில், இணைய முறையிலான மென்பொருளை உருவாக்குமாறு CMDA தமிழ்நாடு மின் ஆளுமை முகமையை (Tamil Nadu e-Governance Agency -TNeGA) கேட்டுக் கொண்டது (மார்ச் 2017). மேலும், ஒன்பது மாத காலத்திற்குள் மென்பொருளை உருவாக்குமாறு TNeGA கேட்டுக் கொள்ளப்பட்டது (மே 2017). எனினும், இணைய வழியிலான ஒற்றை சாளர முறைக்கான மென்பொருள் உருவாக்கப்படவில்லை (செப்டம்பர் 2018) என்பதை தணிக்கை கண்டறிந்தது. இதனால், தொடர்புடைய அமைப்புகளிடையே ஒருங்கிணைப்பு ஏற்படவில்லை.

இத்திட்டத்திற்கான மென்பொருள் விரைவில் உருவாக்கப்படும் என CMDA மறுமொழி அளித்தது (டிசம்பர் 2018).

---

[97] DTCP, CMDA மற்றும் GCC தொடர்பானது.

2.4.11 கண்காணிப்பு

2.4.11.1 அனுமதிக்கப்பட்ட திட்டங்களின் மீது பலனுள்ள கண்காணிப்பு இல்லாமை

(i) DR 4(5)ன்படி, கட்டடங்களை கட்ட இருக்கும் விண்ணப்பதாரர்/ உரிமையாளர்/கட்டடம் கட்டுபவர்/வளர்ச்சியாளர்/செயலுரிமை பெற்றவர் மற்றும் கட்டடத்தின் பயனை பெறும் வேறு எந்த நபராக இருந்தாலும், CMDAவிடமிருந்து பணி நிறைவு சான்றிதழ் (Completion Certificate - CC) பெறாமல் கட்டடத்தை பயன்படுத்தக்கூடாது.

திட்ட அனுமதி மற்றும் CC வழங்கும் செயல்முறைக்கான தனது அன்றாட நடவடிக்கைகளைக் கண்காணிக்க, CMDA இரண்டு தரவுதளங்களை[98] வைத்துள்ளது. மேம்பாட்டு அனுமதிகள் மீதான தொடர் நடவடிக்கை எடுக்கும் பொருட்டு, CC வழங்கும் பொறுப்பு, CMDAன் அமலாக்கப் பிரிவுக்கு வழங்கப்பட்டது. தணிக்கைக்கான மாதிரியாக தேர்ந்தெடுக்கப்பட்ட 629 திட்ட அனுமதி ஆவணங்களுள், 324 ஆவணங்கள் ஜனவரி 2013 முதல் ஜூன் 2015 வரையிலான காலகட்டத்தை சார்ந்தவை; திட்ட அனுமதியின் செல்லுபடி காலம் மூன்று ஆண்டுகள் என்பதால், அனுமதி மேற்கொண்டு புதுப்பிக்கப்படாமல் இருந்தால், இந்நேர்வுகளில் கட்டுமானம் முடிந்திருக்கக்கூடும். இந்த 324 திட்ட அனுமதி ஆவணங்களை CC தரவுத்தளத்துடன் ஒப்பிட்டதில், 125 கட்டடங்களுக்கு (39 விழுக்காடு) மட்டும் CC வழங்கப்பட்டது என கண்டறியப்பட்டது. மீதமுள்ள கட்டடங்களின் முடிக்கப்பட்டது பற்றிய தகவல் இருக்கவில்லை; அனுமதிக்கப்பட்ட திட்டங்களின்படி கட்டுமானங்கள் மேற்கொள்ளப்பட்டதை CMDA சரிபார்க்கவில்லை என்பதை இது காட்டியது.

CMDA, தாம் விரைவில் செயல்படுத்த உள்ள, இணைய சேவை மூலம் CC வழங்கும் முறையில், தணிக்கை சுட்டிக்காட்டிய குறைபாடுகள் களையப்படும் என தெரிவித்தது (டிசம்பர் 2018).

(ii) DR 24(4(அ))ன்படி, போக்குவரத்து தொடர்பான நடவடிக்கைகளயும் மக்கள்தொகை நெருக்கத்தையும் ஊக்குவிக்கும் வகையில், திருமயிலை முதல் வேளச்சேரி வரை பெருந்திரள் துரித இரயில் திட்டத்தை (Mass Rapid Transit System - MRTS) சுற்றியுள்ள இடங்கள் MRTSன் தாக்கம் உள்ள பகுதிகள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த பகுதிகளில், தளப்பரப்பு தலா 75 ச.மீ.க்கு மிகாத குடியிருப்புகள் கொண்ட அடுக்குமாடி வகையல்லாத குடியிருப்பு கட்டடங்கள் கட்ட FSI அதிகபட்சமாக இரண்டு வரை வழங்கலாம்.

MRTSன் தாக்கம் உள்ள பகுதியில், தூண்தளம் மற்றும் நான்கு தளங்களில் 71 குடியிருப்புக்கள்[99] கொண்ட ஒரு சிறப்பு கட்டடம் கட்ட CMDA திட்ட அனுமதி[100] வழங்கியது. மனையில் பரப்பு 2,757.99 ச.மீ. மற்றும் FSI பரப்பு 5,468.26 ச.மீ. இருந்த இக்கட்டுமானத்தின் FSI 1.98 ஆகும். GCCன் சொத்து வரி தகவல்கள் மீதான தணிக்கையின் பகுப்பாய்வு, 71 குடியிருப்புகளுள் 57 குடியிருப்புகளின் தளப்பரப்பு உச்சவரம்பான 75 ச.மீ.க்கு மிகையாக (15 முதல் 22 விழுக்காடு வரை) இருந்ததைக் காட்டியது. அனுமதிக்கப்பட்ட 5,468.26 ச.மீ.

---

98 திட்ட அனுமதி கோருபவர் பற்றிய விவரங்களை பதிவதற்காக ஒன்று; CC வழங்குதல் தொடர்பாக மற்றொன்று.

99 60 குடியிருப்புகள் தலா அதிகபட்சம் 75 ச.மீ. வரை, மற்றும் 11 குடியிருப்புகள் தலா அதிகபட்சம் 50 ச.மீ. வரை.

100 திட்ட அனுமதி எண் 8586 நாள் 31 டிசம்பர் 2013.

பரப்பைவிட 77.08 ச.மீ. கூடுதலாக இருந்த உள்ளபடியான 5,545.34 ச.மீ. FSI பரப்பிற்கு CMDA CC வழங்கியது. இக்கூடுதல் பரப்பானது, அதற்குரிய உச்சவரம்பாக கண்காணிப்புக் குழு பரிந்துரைத்த 0.03 விழுக்காட்டிற்குள் இருந்தது. எனினும், CMDA ஒவ்வொரு குடியிருப்புக்குமான உச்சபட்ச தளப்பரப்பை கருத்தில் கொள்ளாமல், ஒட்டுமொத்த அளவில் இருந்த கூடுதல் பரப்பையே கருத்தில் கொண்டது. முடிக்கப்பட்ட கட்டடங்களின் கள ஆய்வின்போது, MRTSன் தாக்கம் உள்ள பகுதிகளுக்கான அளவுருக்கள் பின்பற்றப்படுவதை CMDA உறுதி செய்யவில்லை; CMDAன் இந்த தவறு காரணமாக DR விதிகள் மீறப்பட்டன.

தாம் வழங்கிய திட்ட அனுமதி முறையானதே என CMDA கூறியது (டிசம்பர் 2018). திட்ட அனுமதியிலிருந்து விலகிய வகையில் கட்டடத்தை கட்டியது, முடிவு சான்றிதழ் வழங்குகையில், திட்ட அனுமதி குறியீடுகள் பின்பற்றப்படுவது குறித்து கண்காணிக்கவில்லை என்பதை காட்டுவதாக தணிக்கை கருதுகிறது. விதிமீறல்கள் நிகழாமல் இருப்பதை உறுதி செய்ய, CMDA, போதிய தடுப்பு அமைப்புகளை கொண்டு கண்காணிப்பு மற்றும் அமலாக்க முறையை வலுப்படுத்த வேண்டியுள்ளது.

2.4.11.2 அனுமதியற்ற கட்டுமானங்களை கண்காணிக்க மற்றும் கட்டுப்படுத்த அமலாக்கப் பிரிவினை வலுப்படுத்தாமை

CMDA வழங்கும் அனுமதிகள் முறையாக பின்பற்றப்படுவதை கண்காணிக்க 1985ம் ஆண்டு CMDAல் அமலாக்க பிரிவு ஏற்படுத்தப்பட்டது. அதன் பணிகள், பிறவற்றுக்கிடையே, கட்டுமானங்களை ஆய்வு செய்தல், CC வழங்குதல், மேம்பாடுகள் மீதான தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுதல் ஆகியன. Ch.MAன் பரந்த பகுதியை கண்காணிக்கவும், கட்டட விதிமீறல்கள் மீது அமலாக்க நடவடிக்கை மேற்கொள்ளவும், அப்பிரிவின் பணியாளர் எண்ணிக்கையை அதிகரிக்கும் கருத்துரு ஒன்றை CMDA தமிழ்நாடு அரசுக்கு அனுப்பியது (பிப்ரவரி 2015). எனினும், ஒப்பந்த ஊழியர்கள், தொழில்நுட்பம்ஆகியவற்றை கருத்தில் கொண்டு, திருத்தப்பட்ட கருத்துருவை அளிக்குமாறு CMDA க்கு தமிழ்நாடு அரசு உத்தரவிட்டது (ஏப்ரல் 2015). அதன்படி, 37 கூடுதல் அலுவலர்கள்/ஊழியர்கள் மற்றும் 45 ஒப்பந்த பணியாளர்கள் கொண்ட திருத்திய கருத்துருவை CMDA அனுப்பியது (செப்டம்பர் 2015). திருத்தப்பட்ட பட்டியலின்படி நேரும் கூடுதல் நிதி தேவைகுறித்து தமிழ்நாடு அரசு அறிக்கை கோரியதன் (அக்டோபர் 2015) பேரில், கூடுதல் அலுவலர்கள்/ஊழியர்கள் தொடர்பான அறிக்கையை மட்டும் ஜனவரி 2018ல் CMDA அளித்தது. தமிழ்நாடு அரசு பின்னர் கோரிய (ஏப்ரல் 2018) தெளிவுரைகளை இதுவரை (செப்டம்பர் 2018) CMDA அளிக்கவில்லை. இவ்வாறாக, தமிழ்நாடு அரசு கோரிய நிதி தேவை பற்றிய அறிக்கையை இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக CMDA அளிக்காததால் அமலாக்க பிரிவு வலுப்படுத்தப்படவில்லை; நவம்பர் 2018 நிலையில், ஒப்பளிப்பு செய்யப்பட்ட 66 பணியிடங்களுள் 32 பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருந்தன.

அமலாக்க பிரிவை வலுப்படுத்தாததற்கான காரணங்களை CMDA அளிக்கவில்லை (டிசம்பர் 2018).

2.4.11.3 உள்ளாட்சி அமைப்புகள் வழங்கிய திட்ட அனுமதிகளை CMDA ஆய்வு செய்வதில் குறைபாடு

Ch.MAல் உள்ள 29 உள்ளாட்சி அமைப்புகள் வழங்கும் திட்ட அனுமதிகளை சீராய்வு செய்யும் பொருட்டு அவற்றின் நகரமைப்பு பிரிவுகளை ஆண்டுதோறும்

செய்யும் அமைப்பாக CMDAஐ தமிழ்நாடு அரசு அமர்த்தியது (டிசம்பர் 1983). 2013 முதல் 2017 வரை 145 ஆய்வுகள் நடத்த வேண்டிய நிலையில் CMDA 49 ஆய்வுகள் மட்டும் நடத்தியது; 2016 ஆண்டில் ஒரு ஆய்வும் நடத்தவில்லை. ஆவணங்களில் கையெழுத்து இல்லாதது, திட்ட அனுமதி இரத்து செய்யப்பட்டதை திட்ட அனுமதி பதிவேட்டில் குறிப்பிடாதது, மனைப்பிரிவு மற்றும் தான பத்திர எண்களில் உள்ள வேறுபாடு போன்ற சிறு குறைபாடுகள் மட்டுமே ஆய்வில் சுட்டிக்காட்டிப்பட்டன என்பதும் மேலே உள்ள பத்திகளில் கூறப்பட்ட பிரச்சினைகளை CMDA எழுப்பவில்லை என்பதும் காணப்பட்டன.

போதிய பணியாளர்கள் இல்லாததால் உள்ளாட்சி அமைப்புகளை ஆய்வு செய்வதில் குறைபாடு ஏற்பட்டது என்றும் சிறப்பு குழுக்கள் ஏற்படுத்தி அனைத்து ஆய்வுகளும் முடிக்கப்படும் என்றும் CMDA கூறியது (டிசம்பர் 2018).

2.4.11.4 அங்கீகரிப்பபடாத மேம்பாடுகள் மற்றும் பாதுகாப்பற்ற கட்டடங்களை கண்காணித்தல்

கட்டமைப்பு மற்றும் கட்டுமான வகையில் பாதுகாப்பற்ற அல்லது சுகாதாரமற்ற அல்லது போதிய அளவு வெளியேறும் வழி இல்லாத அல்லது தீ விபத்து ஏற்படுத்தக்கூடிய அல்லது மனித உயிருக்கு ஆபத்தான அல்லது தற்போதைய பயன்பாட்டின் அடிப்படையில் போதுமான பராமரிப்பின்மை, பாழடைந்த நிலை, கைவிடப்பட்ட நிலை காரணமாக பாதுகாப்பு, சுகாதாரம் அல்லது பொது நலத்திற்கு ஊறு விளைவிக்கும் கட்டடங்களை பாதுகாப்பற்ற கட்டடங்கள் என இந்திய தேசிய கட்டட விதிகள் தொகுப்பு வரையறுக்கிறது.

மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தின் உத்தரவின் (ஆகஸ்டு 2006) பேரில், அனுமதியற்ற கட்டடங்களின் மீது எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை மேற்பார்வையிட ஒரு கண்காணிப்புக்குழு உருவாக்கப்பட்டது (நவம்பர் 2006). இக்குழுவின் வழிகாட்டுதலின்படி (நவம்பர் 2011), GCC எல்லைக்குள் உள்ள தியாகராயநகரில் உள்ள தனி கட்டடங்களின் தீ பாதுகாப்பு நிலை, வணிக நிறுவனங்களாக செயல்பட தீ பாதுகாப்பு நோக்கில் அவற்றின் தகுதி ஆகியவை குறித்து ஆராய, DF&RS ஒரு ஆய்வை நடத்தியது (நவம்பர் 2011). உயர்நீதிமன்றத்தின் தடையாணைகள் காரணமாக, ஆய்வறிக்கையின் அடிப்படையில் அங்கீகாரமில்லாத/பாதுகாப்பற்ற கட்டுமானங்கள் மீது அமலாக்க நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்பதை தணிக்கை கண்டறிந்தது. அதன்பின், அப்பகுதியில் அமைந்துள்ள குறிப்பிட்ட 11 வணிக கட்டடங்களை ஆய்வு செய்யுமாறு DF&RSக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது (அக்டோபர் 2014). அதன்படி, DF&RS உயர் நீதிமன்றத்திற்கு அளித்த (மார்ச் 2015) ஆய்வறிக்கை அந்த கட்டடங்களில் தீ பாதுகாப்பு தொடர்பான குறைபாடுகள் இருந்ததை காட்டியது. இந்நிலையில், மே 2017ல் அந்த 11 கட்டடங்களுள் இரண்டு கட்டடங்கள் தீ விபத்து காரணமாக இடிக்கப்பட்டன. மேலும், DF&RS அதே பகுதியில் நடத்திய (ஜூலை 2017), 45 கட்டடங்களின்[101] மீதான ஆய்வு, **அட்டவணை 2.38**ல் உள்ளவாறு விதிமீறல்கள் இருந்ததை காட்டியது.

[101] அடுக்குமாடி கட்டடங்கள் (41) மற்றும் சிறப்பு கட்டடங்கள் (4).

அட்டவணை 2.38 ஆய்வின் போது கண்டறியப்பட்ட விதி மீறல்கள்

மதிப்பிடப்பட்ட அளவுரு	தேவைகளை நிறைவு செய்த கட்டடங்களின் எண்ணிக்கை	தேவைகளை நிறைவுசெய்யாத கட்டடங்களின் எண்ணிக்கை
FSI	16	29
பக்க இடைவெளி	0	45
மாடிப்படி	14	31
நிலத்தடி நீர்த்தொட்டி	11	34
தீயணைப்பான்கள்	9	36
தீயணைப்பு குழாய்கள்	8	37

(ஆதாரம்: DF&RSன் ஆய்வறிக்கை)

அட்டவணை 2.38ல் காணப்பட்டவாறு, 45 கட்டடங்களும் DRல் விதிக்கப்பட்ட பக்க இடைவெளி[102] தொடர்பான விதிகளை கீழ்கண்டவாறு பின்பற்றவில்லை:

- 21 கட்டடங்களில் நான்கு புறமும் பக்க இடைவெளி இருக்கவில்லை.
- ஐந்து கட்டடங்களில் மூன்று புறமும், ஒரு கட்டடத்தில் இரண்டு புறமும் மேலும் ஐந்து கட்டடங்களில் ஒரு புறமும் பக்க இடைவெளி இருக்கவில்லை.
- ஒன்பது கட்டடங்களில் நான்கு புறமும் பக்க இடைவெளி விதிப்படியான தேவைக்கு குறைவாக இருந்தது. அவற்றுள் ஏழு கட்டடங்களில் கான்க்ரீட் கட்டமைப்புகள், மின்மாற்றிகள், ஜெனரேட்டர் ஆகியன இருந்ததால் பக்க இடைவெளி பகுதி முழுமையாக இருக்கவில்லை.
- நான்கு சிறப்பு கட்டடங்களிலும் பக்க இடைவெளி பகுதியின் அகலம் விதிக்கப்பட்ட குறைந்தபட்ச அளவைவிட குறைவாக இருந்தது.

பக்க இடைவெளி குறைவாக அல்லது இல்லாமல் இருப்பது அவசரகாலங்களில் தீயணைப்பு மற்றும் மீட்பு துறையின் வான் நோக்கிய ஏணி மேடை ஊர்தியின் (Aerial ladder platform vehicle) நகர்வு மற்றும் இயக்கத்திற்கு இடையூறாக இருக்கும்.

மேலும், அந்த 45 கட்டடங்களுள் 29 கட்டடங்கள் அனுமதிக்கப்பட்ட அதிகபட்ச FSI 3.5க்கு மிகையாக 3.6 முதல் 10 வரையிலான FSI உடன் கட்டப்பட்டன. அனுமதிக்கப்பட்ட FSIஐ விட அதிகமான FSI உடன் கட்டப்படும் கட்டடங்கள், உள்ளாட்சி அமைப்புகளின் உள்கட்டமைப்புகளுக்கு பாரமாகின்றன.

தீ பாதுகாப்பு விதிமுறைகளை பின்பற்றாத கட்டடங்கள் மீது நடவடிக்கை எடுக்கும் பொருட்டு, DF&RS ஆய்வறிக்கையை, உள் துறை, H&UD துறை மற்றும் CMDAக்கு அனுப்பியது (ஆகஸ்ட் 2017). எனினும், தொடர் நடவடிக்கை மேற்கொள்ள உள்துறையிடமிருந்து தகவலை எதிர்நோக்கி இருப்பதாக H&UD துறை கூறியது (ஜூன் 2018). தமிழ்நாடு அரசின் துறைகளுக்கிடையே ஒருங்கிணைப்பு இல்லாமை, தீ விபத்து, கூட்ட நெரிசல் போன்ற அவசர நேர்வுகளில் பொது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையில் அங்கீகாரமில்லாத மேம்பாடுகள் உருவாக காரணமாக உள்ளது.

102 ஒரு மனையில் கட்டடத்தை சுற்றி உள்ள திறந்தவெளி.

அங்கீகாரமற்ற கட்டுமானங்களை கண்டறிந்து அவற்றின் மீது நடவடிக்கை எடுக்கும் முறையை உருவாக்க ஒரு பணிக்குழுவை அமைக்க முடிவு செய்திருப்பதாக CMDA தெரிவித்தது (டிசம்பர் 2018). 2017ம் ஆண்டில் ஒரு பெரும் தீ விபத்து ஏற்பட்ட பிறகும், 20 மாதங்கள் காலம் தாழ்த்தி பணிக்குழுவை அமைப்பதற்கான முடிவை எடுத்தது, தீ பாதுகாப்பு விதிமுறைகளை பின்பற்றுவதற்கு போதிய முக்கியத்துவத்தை அரசு அளிக்காததை காட்டுகிறது.

2.4.11.5 கட்டுமானம் முடிந்த/துவங்கிய பின்பு திட்ட அனுமதி வழங்கியமை

தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம் 1971, பிரிவு 47ன்படி ஒரு பகுதியில் மேம்பாட்டு திட்டம் நடைமுறைக்கு வந்தபின், மாநில அரசு, மத்திய அரசு, உள்ளாட்சி அமைப்புகள் தவிர வேறு எந்த நபரும், மேம்பாட்டு திட்டத்துக்கு பொருந்தாத வகையில் அப்பகுதியில் உள்ள எந்த நிலத்தையும் பயன்படுத்தவோ அல்லது பயன்படுத்தும்படி செய்வதோ, மேம்பாடு செய்வதோ கூடாது. இச்சட்டத்தின் பிரிவு 56ன்படி, ஏதேனும் கட்டடமோ நிலமோ அனுமதியின்றி மேம்பாடு செய்யப்பட்டால், உரிய அதிகார அமைப்பு, உரிய அறிவிப்பை கொடுத்துவிட்டு, அவ்விடத்தை மேம்பாட்டிற்கு முந்தைய நிலைக்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும் DR 3(1)ன்படி, CMDAன் அல்லது CMDA அதிகாரம் அளித்த உள்ளாட்சி அமைப்பின் செயல் அதிகாரம் கொண்ட அலுவலர், முகமை அல்லது நபரின் எழுத்து மூலமான அனுமதியின்றி யாரும், ஒரு இடத்தை உட்பிரிவு/மனைப்பிரிவு செய்தல், மறு நிர்ணயம் செய்தல், இணைத்தல் உட்பட எந்த மேம்பாட்டு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளக்கூடாது. எனினும், **இணைப்பு 2.30**ல் கண்டுள்ளவாறு, திட்ட அனுமதி வழங்கிய நாளில் விண்ணப்பதாரர்கள் கட்டுமானத்தை முழுமையாகவோ பகுதி அளவிலோ முடித்திருந்ததை தணிக்கை CMDAன் ஆய்வறிக்கைகள் மூலம் அறிந்தது.

உள்ளாட்சி அமைப்புகளின் கட்டட விதிகளின்படி, கட்டடங்களின் கட்டுமான உறுதித்தன்மையை, அவ்வமைப்புகள் உறுதி செய்ய வேண்டும். மேலே கூறப்பட்ட கட்டுமானங்களுள் ஐந்து, ஆயிரக்கணக்கான குடியிருப்புகள் கொண்ட பெரிய கட்டுமானங்கள் என்பதை தணிக்கை கண்டறிந்தது. அவை திட்ட அனுமதி மற்றும் கட்டட உரிமம் பெறுவதற்கு முன்பாகவே துவக்கப்பட்டவை அல்லது முடிக்கப்பட்டவை ஆகும். அவற்றை சட்டத்தில் உள்ளவாறு கண்காணிக்க உள்ளாட்சி அமைப்புகள் தவறியதை இது காட்டியது.

கட்டடத்தின் திட்டம் DRக்கு உட்பட்டு இருந்தால், துவங்கிவிட்ட அல்லது முடிந்துவிட்ட கட்டுமானங்களுக்கு திட்ட அனுமதி வழங்கலாம் என்றும், வழக்கமான அபராதத்துடன் சேர்த்து கூடுதல் அபராதம் விதிக்கலாம் என்றும் நிறைவு கூட்டத்தில் CMDA தெரிவித்தது. துவங்கப்பட்ட அல்லது முடிக்கப்பட்ட மேம்பாடுகளுக்கு திட்ட அனுமதி வழங்குவதை சட்டம் மற்றும் DR அனுமதிக்கவில்லை என்பதாலும் அத்தகைய விதிமீறல்களுக்கான அபராதம் கூறப்படவில்லை என்பதாலும் இம்மறுமொழி ஏற்கத்தக்கதல்ல.

2.4.11.6 கடலோர ஒழுங்குமுறை மண்டலத்தில் அங்கீகாரமற்ற அல்லது விதிமீறல் கட்டுமானங்கள்

கடற்கரை ஓரம் செய்யப்படும் மேம்பாடுகள், சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம் 1986, பிரிவு 3ன்கீழ் இந்திய அரசு அவ்வப்போது வெளியிடும் அறிவிக்கைகளின்படி அமையும், கடலோர ஒழுங்குமுறை மண்டலத்தின் (Coastal Regulation Zone -

CRZ) வகைப்பாடுகளாகிய CRZ-I, II, III மற்றும் IV என்பவற்றுடன் தொடர்புபடுத்தி முறைப்படுத்தப்படுகின்றன. CRZ III என்பது ஒப்பீட்டளவில் குறைவான பயன்பாட்டுடன் குறைந்த மேம்பாடுகளைக் கொண்ட பகுதியாகும்; அதில், உயர் அலைக் கோட்டிலிருந்து 200 மீட்டருக்கு உட்பட்ட பகுதிகள் மேம்பாடு தடை செய்யப்பட்ட பகுதிகள் என வகைப்படுத்தப்படும். கடற்கரையை ஒட்டி அல்லது கடற்கரை வரை ஏற்கெனவே மேம்பாடு அடைந்த பகுதி CRZ II ஆகும்.

CRZ பகுதியில் விதிமீறல்கள்/அனுமதியற்ற கட்டடங்கள் தொடர்பான ஒரு வழக்கில் மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றம் அளித்த உத்தரவின்படி (செப்டம்பர் 2017), CMDA மற்றும் GCC அலுவலர்கள் கடற்கரையோர பகுதிகளில் அமைந்த நான்கு கிராமங்களில்[103] அங்கீகாரமற்ற அல்லது விதிமீறல் கட்டுமானங்கள் (குறிப்பாக மாளிகைகள், உல்லாச விடுதிகள், விருந்தினர் இல்லங்கள், அரண்மனை போன்ற வீடுகள் மற்றும் பண்ணை வீடுகள்) மீதான ஒரு ஆய்வை நடத்தினர் (ஜூன் 2018). GCC 798 கட்டடங்களுக்கு அறிவிப்புகளை அனுப்பியது (ஜனவரி 2018 முதல் ஏப்ரல் 2018 வரை). அதில் 48 உரிமையாளர்கள் மட்டுமே கோரப்பட்ட ஆவணங்களை இணைத்து மறுமொழி அளித்தனர். GCC அந்த ஆவணங்களை ஆய்வு செய்ததில், 31 கட்டடங்கள் உரிய அலுவலரின் அனுமதியை பெறாமலும் 17 கட்டடங்கள் அனுமதிக்கப்பட்ட திட்டத்தை மீறியும் கட்டப்பட்டிருந்தது தெரிய வந்தது. மொத்தத்தில், 48 கட்டடங்களுமே விதிகளை மீறி கட்டப்பட்டதாகவே இருந்தன. GCCன் அறிவிப்புக்கு மீதமுள்ள 750 கட்டட உரிமையாளர்கள் மறுமொழி அளிக்கவில்லை.

இதனிடையே, இந்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம், வரைவு CRZ அறிவிக்கை 2018ஐ வெளியிட்டு (ஏப்ரல் 2018), தொடர்புடையோரின் குறிப்புரைளை கோரியது. CRZ வரைவு அறிக்கை 2011ன்கீழ் அம்மூன்று கிராமங்களையும்[104] CRZII என மறுவகைப்பாடு செய்ய சுற்றுச்சூழல் இயக்குனருக்கு கருத்துரு ஏற்கெனவே அனுப்பப்பட்டது எனவும், சுற்றுச்சூழல் இயக்குனரின் ஒப்புதலை பெற்றபின், தற்சமயம் Ch.MAல் CRZIIIல் அமைந்த கிராமம் ஏதும் இல்லை எனவும் CMDA தெரிவித்தது (மே 2018). CMDA அளித்த குறிப்புரை, அப்பகுதிகளை CRZIIIல் இருந்து CRZIIக்கு மாற்றும் மறுவகைப்பாடு இந்திய அரசின் அனுமதி பெறாமல் வரைவு நிலையிலேயே இருப்பதை தெளிவாக காட்டுகிறது. எனவே அம்மூன்று கிராமங்களும் விதிகளை மீறி பெருகி வரும் அங்கீகாரமற்ற மேம்பாடுகளுடன் CRZIIIல் தொடர்ந்து உள்ளன. இந்தப் பகுதியில் இயல்பு மீறிய வளர்ச்சி ஏற்பட்டுள்ளது; CRZ விதிகளுக்கான சட்டத்தை மீறி பெருமளவில் நிகழும் விதிமீறல்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க GCC தவறியது. மேலும், இப்பகுதிகளை மறுவகைப்பாடு செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கை என்பது விதிமீறல்களை முறைப்படுத்த எடுக்கப்பட்டதே ஆகும்.

2.4.11.7 புகார் மற்றும் குறை தீர்ப்பு முறைமை

சிறப்பு கட்டடம் மற்றும் அடுக்குமாடிக் கட்டடங்கள் தொடர்பான புகார்கள் மற்றும் முறையீடுகள் மீது 30 வேலை நாட்களுக்குள் நடவைக்கை எடுக்க வேண்டும் என்பது CMDAன் நோக்கங்களுள் ஒன்று. சாதாரண கட்டடங்கள் மற்றும் அங்கீகாரமற்ற/விதி மீறிய கட்டுமானங்கள் பற்றி பெறப்படும் புகார்கள் தேவையான

---

103 CRZ IIIல் அமைந்த ஈஞ்சம்பாக்கம், சோழிங்கநல்லூர் மற்றும் உத்தண்டி; CRZ IIல் அமைந்த நீலாங்கரை.

104 ஈஞ்சம்பாக்கம், சோழிங்கநல்லூர் மற்றும் உத்தண்டி.

நடவடிக்கைக்காக தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புக்கு அனுப்பப்பட்டன. புகார் அளிப்பவரின் பெயர், முகவரி, புகாருக்குரிய இடம் போன்ற விவரங்கள் "அமலாக்கப்பிரிவு நடவடிக்கை" என்ற பணி மென்பொருளில் பதியப்படுகின்றன.

2013-18 காலகட்டத்தில் தகவல் தரவில் விவரங்கள் பதிவான 2,264 புகார்களுள் 2,247 புகார்கள் உள்ளாட்சி அமைப்புகள் தொடர்பானதாக இருந்ததால், CMDA அவற்றை 30 நட்களுக்குள் நடவடிக்கையின் பொருட்டு உள்ளாட்சி அமைப்புகளுக்கு அனுப்பி இருக்க வேண்டும். ஆனால் 2,257 நேர்வுகளில் பதிவேற்றும் நிலையிலேயே 2 முதல் 1,669 நட்கள் தாமதம் காணப்பட்டது. மேலும், 227 புகார்கள் உரிய காலத்தில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு அனுப்பப்பட்டாலும், 1,504 புகார்கள் 31 முதல் 1,512 நாட்கள் தாமதத்துடன் அனுப்பப்பட்டும், 516 புகார்கள் செப்டம்பர் 2018 நிலையில் அனுப்பப்படாமலும் இருந்தன.

மேலும், CMDA பயன்படுத்தும் மென்பொருளில் புகாரின் விரிவான விவரங்கள், புகார் மீது எடுக்கப்பட்ட தொடர் நடவடிக்கை ஆகிய முக்கிய தகவல்களை பதிவு செய்ய வழிவகை செய்யப்படாமல் இருக்கிறது.

CMDAன் மென்பொருள் உருவாக்கத்தில் உரிய திட்டமிடல் இல்லாதது, முழுமையற்ற தகவல் உள்ளீடு, புகார்களை உள்ளாட்சி அமைப்புகளுக்கு தொடர் நடவடிக்கைக்காக அனுப்பியதில் தாமதம் ஆகிய காரணங்களால், CMDAன் புகார் மற்றும் குறை தீர்ப்பு அமைப்பின் மீதான கண்காணிப்பு முறை பலனுள்ள வகையில் செயல்படுத்தப்படவில்லை.

அமலாக்கப்பிரிவின் புகார்கள் மற்றும் குறை தீர்ப்பு முறைமைக்காக உருவாக்கப்பட்ட அமைப்பை விரைவில் செயல்படுத்த உள்ளதாக நிறைவு கூட்டத்தில் CMDA தெரிவித்தது.

2.4.11.8 திட்ட அனுமதி தொடர்பான பகிந்தளிக்கப்பட்ட செயல்பாட்டை செயல்படுத்துதல்

'நகர திட்டமிடல் உட்பட நகர்ப்புற திட்டமிடல்' என்னும் செயல்பாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட போதிலும், அது சாதாரண கட்டடங்களுக்கு திட்ட அனுமதி வழங்குவது என்ற அளவிற்கு மட்டுமே உள்ளது. Ch.MA எல்லைக்குள் சாதாரண கட்டடங்கள் அல்லாத இதர கட்டடங்களுக்கு, அரசின் கட்டுப்பாட்டில் இயங்கும் CMDA அரசு நிர்ணயித்த மேம்பாட்டு கட்டணம் மற்றும் OSR கட்டணங்களை பெற்றுக்கொண்டு திட்ட அனுமதி வழங்குகிறது. இக்கட்டணங்களில் 75 விழுக்காடு தொகையை தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகளுக்கு அளிக்க வேண்டும். எனினும், தணிக்கைக்குரிய 2013-18 காலகட்டத்தில், CMDA தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகளுக்கு மேற்படி கட்டணங்களில் முறையே 54 மற்றும் 56 சதவிகிதம் மட்டுமே அளித்தது. பகிர்ந்தளிக்கப்பட்ட செயல்பாட்டை நடைமுறைப்படுத்த பணியாளர்களை பணியமர்த்த உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரம் உண்டு; பணியாளர்களை நியமிப்பது அரசின் ஆணைகளுக்கு உட்பட்டதாகும்.

உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்த வருவாய் இருப்பினும், அவற்றின் வருவாய் ஆதாரத்துக்கான பெரும் பகுதி, மாநில/மத்திய நிதிக்குழு மானியங்கள், மாநில/மத்திய அரசுகளின் பிற மானியங்கள் மற்றும் ஒதுக்கப்பட்ட வருவாய் ஆகிய வகைகளில் உள்ளது. மேலே கூறிய பகிர்ந்தளிக்கப்பட்ட செயல்பாடு, உரிய

நடவடிக்கைகளை சுதந்திரமாக மேற்கொள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரம் வழங்கவில்லை.

2.4.12 தவறுகள்/குறைபாடுகளை கண்டுபிடித்து தடுக்கும் முறை

சுட்டிக்காட்டப்பட்ட தவறுகள்/குறைபாடுகள் சோதனை ஆய்வின் அடிப்படையில் கண்டறியப்பட்டவை ஆகும். எனவே, அதே போன்ற தவறுகள்/குறைபாடுகள் வேறு எங்கும் நிகழ்ந்துள்ளனவா என கண்டறிந்து, அவ்வாறு இருந்தால் அவற்றை சரிசெய்யும் பொருட்டும், அவ்வாறான தவறுகள்/குறைபாடுகள் நிகழாமல் தடுக்க ஒரு முறைமையை அமைக்கும் பொருட்டும், துறை/அரசு அனைத்து அமைப்புகளிலும் ஒரு முழுமையான ஆய்வை மேற்கொள்ளலாம்.

2.4.13 முடிவுரை

திட்ட அனுமதிகள் வழங்குதல் மற்றும் கண்காணிப்பில் இருந்த குறைபாடுகளை செயலாக்க தணிக்கை வெளிப்படுத்தியது. அனுமதியற்ற கட்டுமானங்களை இனம் கண்டு கட்டுப்படுத்துவதில் உள்ளாட்சி அமைப்புகளின் வருவாய் மற்றும் நகரமைப்பு பிரிவுகள் இடையேயும், CMDA மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு இடையேயும் ஒருங்கிணைப்பு இருக்கவில்லை. போதிய நிதி இருந்தும், சென்னை பெருநகர் பகுதியில் பசுமை பரப்பை உருவாக்க உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் CMDA அதற்கான வழிகளை ஆராயவில்லை. சாலையை அகலப்படுத்துவதற்கும் திறந்தவெளி ஒதுக்கீட்டு பகுதிக்கு இணைப்புச் சாலை அமைப்பதற்கும் தானமாக வழங்கப்பட்ட பரப்பினையும் சேர்த்து தரை பரப்பு குறியீட்டை கணக்கிட்டதால், ஊக்க தரை பரப்பு குறியீட்டு கட்டணங்கள் குறைவாக கணக்கிடப்பட்டது. போதுமான அளவில் வாகன நிறுத்துமிடம் அமைக்கப்படாதது விதிக்கப்பட்ட அளவுருக்களை மீறியதாக இருந்தது. கட்டுமானம் தொடங்கப்பட்டு அல்லது முடிக்கப்பட்ட பிறகு திட்ட அனுமதிகள் வழங்கப்பட்டன. அங்கீகாரமற்ற/விதிமீறல் கட்டுமானங்களை நீக்கும்/கட்டுப்படுத்தும் பொருட்டு அமலாக்கப் பிரிவை வலுப்படுத்தவில்லை.

2.4.14 பரிந்துரைகள்

தமிழ்நாடு அரசு பின்வருவனவற்றை பரிசீலிக்கலாம்:

- அனுமதியற்ற மேம்பாடுகளை கண்காணித்து, கட்டுப்படுத்தும் பொருட்டு, சொத்து வரி மதிப்பீடு மற்றும் திட்ட அனுமதி தொடர்பான தகவல்களை சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளிடையே பகிர்ந்து கொள்ள தகுந்த அமைப்பை நிறுவலாம்.
- திறந்த வெளி ஒதுக்கீட்டு நிலத்திற்கு பதிலாக, அதற்கு நிகரான தொகை பெறுவதற்கு காரணங்களை ஆவணப்படுத்த வேண்டும். கூடுமானவரையில் திறந்த வெளி பகுதிகளையே உருவாக்க வேண்டும்.
- அனுமதியற்ற மேம்பாடுகளை கண்காணிக்கவும் கட்டுப்படுத்தவும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் அமலாக்கப்பிரிவை வலுப்படுத்துவதோடு, உள்ளாட்சி அமைப்புகளிலும் அமலாக்கப் பிரிவுகளை உருவாக்க வேண்டும்.

மேற்கண்டவை அரசுக்கு நவம்பர் 2018ல் தெரிவிக்கப்பட்டன; மறுமொழி பெறப்படவில்லை (ஜனவரி 2020).

அத்தியாயம் III
இணக்கத் தணிக்கை

அத்தியாயம் III

இணக்கத் தணிக்கை

அரசுத் துறைகள், அவற்றின் கள அமைப்புகள், தன்னாட்சி அமைப்புகள் ஆகியவற்றின் மீதான இணக்கத் தணிக்கை, அவற்றின் வள ஆதாரங்களின் மேலாண்மையில் பல குறைபாடுகளையும், வரைமுறை, ஒழுங்குமுறைமை மற்றும் சிக்கனம் ஆகிய நெறிகளை கடைப்பிடிப்பதில் ஏற்பட்ட தவறுகளையும் வெளிப்படுத்தியது. இவை பின்வரும் பத்திகளில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

3.1 ஒகேனக்கல் நீர் வழங்கல் மற்றும் புளோரோசிஸ் பாதிப்பு குறைப்பு திட்டத்தை செயல்படுத்துதல்

3.1.1 முன்னுரை

தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் உள்ள நகரங்களும் கிராமங்களும் வறட்சி பாங்கானவை என்பதால், அவை குடிநீர் தேவைக்கு நிலத்தடி நீரை பெரிதும் சார்ந்திருந்தன. நிலத்தடி நீரில் ஃப்ளோரைடின் அளவு, 1.5 மில்லிகிராம்/லிட்டர்[1] (mg/l) என்ற அனுமதிக்கப்பட்ட அளவுக்கெதிராக 1.5 முதல் 12.4 mg/l ஆக இருந்தது. இதன் விளைவாக, இந்த இரண்டு மாவட்டங்களில் இருந்த 33.87 இலட்சம் மொத்த மக்கட்தொகையில் (2011 மக்கட்தொகை கணக்கெடுப்பு) 11.94 இலட்சம் மக்கள் பல், எலும்பு சார்ந்த மற்றும் எலும்பு சாரா[2] திசுக்களில் புளோரோசிஸ் (fluorosis) நோயால் பாதிக்கப்பட்டனர். இரண்டு மாவட்டங்களிலும் மக்களிடையே புளோரோசிஸ் நோய் தாக்கத்தின் பாதிப்பைக் குறைக்கவும், நீடித்த வகையில் பாதுகாப்பான குடிநீர் வழங்கவும், ₹ 1,334 கோடி மதிப்பீட்டில் "ஒகேனக்கல் நீர் வழங்கல் மற்றும் புளோரோசிஸ் பாதிப்பு குறைப்பு திட்டம்" என்ற திட்டத்திற்கு தமிழ்நாடு அரசு ஒப்புதல் அளித்தது (பிப்ரவரி 2008); இது பின்னர், (ஜனவரி 2010) ₹ 1,928.80 கோடி என திருத்தியமைக்கப்பட்டது.

இத்திட்டம், தருமபுரி மாவட்டத்தில் ஒகேனக்கலுக்கு அருகில் காவேரி ஆற்றிலிருந்து மேற்பரப்பு நீரை எடுப்பதை அடிப்படையாக கொண்டது; சுத்திகரிப்பு நிலையம், முதன்மை நீர்த்தேக்கங்கள் (561), ஈர்ப்பு மற்றும் உந்து நீரேற்றுக் குழாய்கள் மற்றும் விநியோக குழாய்களை அமைப்பது (10,169 கிமீ), மேல்நிலை தண்ணீர் தொட்டிகள் (overhead tank - OHT) மற்றும் கீழ்மட்ட தொட்டிகளை (1,067) கட்டுவது ஆகியவற்றை கொண்டிருந்தது. இத்திட்டம், மூன்று நகராட்சிகள், 17 பேரூராட்சிகள் மற்றும் 7,639 ஊரக குடியிருப்புகளுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை எடுத்துச் சென்றது (**காட்சிப்படம் 3.1**).

---

[1] இது, குடிநீரின் தரத்திற்கு உலக சுகாதார நிறுவனத்தின் (WHO) வழிகாட்டு நெறிகளின்படியான மதிப்பாகும். இந்திய தர ஆணையத்தின்படி புளோரைடின் விரும்பத்தக்க அளவு 1 mg/l ஆகும்.

[2] புளோரோசிஸ் நோய், இரைப்பை குடல், தசை மற்றும் நரம்பியல் சார்ந்த வடிவங்களில் வரும்; இவை பல் மற்றும் எலும்புகளில் நோய் ஏற்படுவதற்கு முன் ஏற்படும்.



காட்சிப்படம் 3.1: திட்ட வரைபடம்

(ஆதாரம்: TWAD வாரியம்)

திட்டத்தை செயல்படுத்துவதற்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் (TWAD வாரியம்) திட்ட முதன்மை பொறியாளர் (Project Chief Engineer - PCE) தலைமையேற்றார். அவருக்கு, திட்ட மேலாண்மை பிரிவின் கண்காணிப்பு பொறியாளர் துணைபுரிந்தார். இத்திட்டத்தை TWAD வாரியம் ஜூலை 2013 முதல் ஜனவரி 2014 வரை மேற்கொண்டு ₹ 1,846.86 கோடி மொத்த செலவில் முடித்தது. ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையின் (Japan International Co-operation Agency - JICA) கடன் உதவி, தமிழ்நாடு அரசின் நிதி உதவி மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பங்களிப்பு[3] ஆகியவற்றின் மூலம் திட்டத்திற்கான நிதி பெறப்பட்டது.

திட்டத்தின் நோக்கங்கள் நிறைவேறினவா என்பதை அறியும் பொருட்டு, டிசம்பர் 2010 முதல் ஜூலை 2018 வரையான காலகட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட பணிகளை தனது பரப்பில் கொண்ட தணிக்கை ஏப்ரல் - ஜூலை 2018ல் நடத்தப்பட்டது. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கான முதன்மைச் செயலாளருடன் ஒரு நுழைவு கலந்தாய்வு கூட்டம் 28 ஜூன் 2018 அன்று நடத்தப்பட்டு அதில் தணிக்கையில் பரப்பு மற்றும் முறைமை விவாதிக்கப்பட்டன. தலைமை செயலகம் மற்றும் TWAD வாரியத்தில் திட்ட ஆவணங்கள் மீதான கூர்ந்தாய்வு என்பதும் தணிக்கை முறைமையில் அடங்கும். திட்ட செயலாக்க அலுவலகங்கள் மற்றும் மாதிரிகளை தேர்ந்தெடுப்பதற்கான ஒரு மென்பொருள் மூலம் தொடர்பற்ற மாதிரி முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு நகராட்சி, ஐந்து பேரூராட்சிகள், ஐந்து ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் அவற்றிலுள்ள

17 கிராம ஊராட்சிள் (**இணைப்பு 3.1**) ஆகியவற்றின் ஆவணங்களை தணிக்கை சோதனை சரிபார்ப்பு செய்தது. தணிக்கை கண்டறிந்தவற்றை விவாதிக்க ஒரு

---

3 JICAவின் கடன் - ₹ 1,444.27 கோடி; தமிழ்நாடு அரசின் மானியம் - ₹ 366.87 கோடி (கட்டுமான காலத்தில் JICAக்கு செலுத்திய வட்டி, நிதி உறுதி கட்டணம் ஆகியவற்றுக்கான ₹ 94.23 கோடி உட்பட) மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பங்களிப்பு - ₹ 35.72 கோடி.

நிறைவு கலந்தாய்வு கூட்டம் (Exit Conference) 05 அக்டோபர் 2018 அன்று நடத்தப்பட்டது. அரசின் மறுமொழி இவ்வறிக்கையை இறுதி செய்கையில் கருத்தில் கொள்ளப்பட்டது.

தணிக்கை காண்புரைகள்

3.1.2 நிதி மேலாண்மை

பல்வேறு அமைப்புகள் அளிக்க ஒப்புக்கொண்ட தொகை மற்றும் திட்டத்தை செயல்படுத்தும் முகமை (TWAD வாரியம்) பயன்படுத்திய தொகை பற்றிய விவரங்கள் **அட்டவணை 3.1**ல் அளிக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 3.1: திட்ட நிதிகள்

(₹ கோடியில்)

நிதி ஆதாரம்	அளிக்க ஒப்புக்கொண்ட தொகை	TWAD வாரியம் பெற்ற தொகை	TWAD வாரியம் கூடுதலாக (+)/ குறைவாக (-) பெற்ற தொகை	திட்டத்திற்கு பயன்படுத்திய தொகை
JICAவின் கடன்	1,585.60	1,444.27	(-) 141.33	1,444.27
தமிழ்நாடு அரசு மானியம்	307.48	378.12	(+) 70.64	272.64
நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பங்களிப்பு	35.72	35.72	0.00	35.72
மொத்தம்	**1,928.80**	**1,858.11**		**1,752.63**

(ஆதாரம்: TWAD வாரியம் அளித்த விவரங்கள்)

புளோரோசிஸ் பாதிப்பு குறைப்பு திட்டத்தை பகுதியளவு செயல்படுத்தியது மற்றும் திறன் மேம்பாடு (capacity building) கூறுகளை செயல்படுத்தாமை ஆகிய முக்கிய காரணங்களால், மதிப்பிடப்பட்ட தொகையை விட குறைவான செலவில் திட்டம் முடிக்கப்பட்டது.

திட்டத்திற்காக தமிழ்நாடு அரசு விடுவித்த நிதியில் ₹ 105.48 கோடி செலவிடப்படாத தொகை TWAD வாரியத்திடம் இருந்தது. அது, **பத்தி 3.1.6**ல் கூறப்பட்டுள்ளபடி, 2015-18 காலகட்டத்தில் செயல்பாடு மற்றும் பராமரிப்பு (operation & maintenance - O&M) செலவு அதிகமாக இருந்ததால் அதற்கென பயன்படுத்தப்பட்டது.

3.1.3 குடிநீர் வழங்கல்

3.1.3.1 திட்டத்தின் பலன்

நகராட்சி பகுதிகளில் உயர் வருவாய் பிரிவினருக்கு (High Income Group - HIG[4]) ஒரு நபருக்கு நாளொன்றுக்கு 90 லிட்டர் (litres per capita per day - LPCD) மற்றும் குறைந்த வருவாய் பிரிவினருக்கு (Low Income Group - LIG[5]) 40 LPCD, பேரூராட்சி பகுதிகளில் HIGக்கு 70 LPCD மற்றும் LIGக்கு 40 LPCD, ஊரக குடியிருப்புகளில் 30 LPCD என்ற அளவில் குடிநீர் வழங்குவது திட்டத்தின் நோக்கம் ஆகும். ஒரு நபருக்கான மேற்படி அளவுநிலை மற்றும் 2011 கணக்கெடுப்பின்படியான மக்கட்தொகையின் அடிப்படையில், திட்டப் பகுதியின் மொத்த குடிநீர் தேவை ஒரு நாளுக்கு 167.21 மில்லியன் லிட்டர் (million litres per day - MLD) (மில்லியன் = 10 இலட்சம்) என கணக்கிடப்பட்டது.

4 மக்கள் தொகையில் 70 சதவீதம் உயர் வருவாய் பிரிவில் இருப்பதாக கருதப்பட்டது.

5 மக்கள் தொகையில் 30 சதவீதம் குறைந்த வருவாய் பிரிவில் இருப்பதாக கருதப்பட்டது.

எனினும், 126.54 MLD (76 விழுக்காடு) மட்டுமே இத்திட்டத்தின் மூலம் பெறுவது எனவும், மீதமுள்ள 40.67 MLD (24 விழுக்காடு) நீரை நிலத்தடி நீர் உள்ளிட்ட உள்ளூர் ஆதாரங்களிருந்து கிடைக்கும் நீரை கலப்பதன் மூலம் பெறுவது எனவும் முடிவு செய்யப்பட்டது; இந்த உள்ளூர் ஆதாரங்கள் நகராட்சி பகுதிகளில் 12 முதல் 50 LPCD மற்றும் கிராமங்களில் சராசரியாக 10 LPCD என்ற அளவிற்கு நீரை வழங்கி வந்தன.

ஆனால், 126.54 MLD வழங்க வேண்டும் என்ற இலக்கிற்கு எதிராக, வழங்கப்பட்ட நீரின் சராசரி அளவு 2015-16, 2016-17 மற்றும் 2017-18 ஆண்டுகளில் முறையே 116.86 MLD, 118.54 MLD மற்றும் 103.32 MLD மட்டுமே ஆகும்; இது, தேவையான அளவில் 92, 94 மற்றும் 82 விழுக்காடு ஆகும். மக்கட்தொகை வளர்ச்சி வீதத்தைக் கணக்கில் கொண்டால், 2015-16, 2016-17 மற்றும் 2017-18 ஆண்டுகளில், திட்டத்திலிருந்து கிடைத்த நீரின் சராசரி அளவு, தேவை மதிப்பீட்டில் முறையே 81, 80 மற்றும் 68 விழுக்காடாக இருக்கும் என்பதும் காணப்பட்டது. அளவுமானிகள் பொருத்தப்படாததால், வழங்குவதற்கு இருந்த நீரின் அளவை மட்டுமே அறிந்து ஒப்பிட முடியும் என்பதும் காணப்பட்டது. குடிநீர் வழங்குவதில் வெவ்வேறு நகரங்கள் மற்றும் கிராமங்களுக்கு இடையில் **அட்டவணை 3.2**ல் கொடுக்கப்பட்டுள்ளவாறு இருந்த ஏற்றத்தாழ்வுகளை தணிக்கை கண்டறிந்தது.

அட்டவணை 3.2: குடிநீர் வழங்கலின் நிலை

உள்ளாட்சி அமைப்புகள்	அதிகமாக/குறைவாக குடிநீர் வழங்கப்பட்ட உள்ளாட்rசி அமைப்புகளின் எண்ணிக்கை											
	2015 - 16				2016 - 17				2017 - 18			
	அதிகமாக வழங்கப்பட்டவை	குறைவாக வழங்கப்பட்டவை			அதிகமாக வழங்கப்பட்டவை	குறைவாக வழங்கப்பட்டவை			அதிகமாக வழங்கப்பட்டவை	குறைவாக வழங்கப்பட்டவை		
		25 சதவீதம் வரை	25 - 50 சதவீதம்	50 சதவீதத்திற்கு மேல்		25 சதவீதம் வரை	25 - 50 சதவீதம்	50 சதவீதத்திற்கு மேல்		25 சதவீதம் வரை	25 - 50 சதவீதம்	50 சதவீதத்திற்கு மேல்
நகராட்சிகள் (3)	2	0	1	0	2	0	1	0	1	0	2	0
பேரூராட்சிகள் (16)	9	5	1	1	10	4	2	0	6	7	3	0
ஊராட்சி ஒன்றியங்கள் (18)	4	11	1	2	6	8	4	0	1	11	6	0
மொத்தம் (37)	**15**	**16**	**3**	**3**	**18**	**12**	**7**	**0**	**8**	**18**	**11**	**0**

* தரவுகள் ஒகேனக்கல் நீருக்கானது மட்டுமே. நகரங்களும் கிராமங்களும் தம்மிடம் இருந்த நிலத்தடி நீர் மற்றும் பிற ஆதாரங்களிலிருந்து ஓரளவு நீரை பெற்றன.

(ஆதாரம்: TWAD வாரியம் அளித்த விவரங்கள்)

2015-16ல், ஒரு நகராட்சி, இரண்டு பேரூராட்சிகள் மற்றும் மூன்று ஊராட்சி ஒன்றியங்கள் 25 சதவீதத்திற்கு மேற்பட்ட குறைவுடன் நீரை பெற்றன; இந்த எண்ணிக்கை 2017-18ல், இரண்டு நகராட்சிகள், மூன்று பேரூராட்சிகள் மற்றும் ஆறு ஊராட்சி ஒன்றியங்கள் என உயர்ந்தது.

திட்டமிடப்பட்ட குடியிருப்பு பகுதிகள் எண்ணிக்கையை (7,639) பொறுத்தமட்டில் திட்டம் வெற்றி பெற்றிருந்தாலும், வழங்கப்பட்ட நீரின் அளவை 2011 மக்கட்தொகையின் அடிப்படையில் காணும்போது, 2015-18 காலகட்டத்தில் 6.32 முதல் 18.36 சதவீதம் வரை ஒட்டுமொத்த பற்றாக்குறை இருந்தது. பற்றாக்குறையின் உச்சபட்ச அளவு (78.31 சதவீதம்) பர்கூர் பேரூராட்சியில் இருந்தது. காரணங்களின் பகுப்பாய்வு பின்வருவனவற்றை வெளிப்படுத்தியது:

- 2015-18 காலகட்டத்தில் பிரதான உந்து நீரேற்று குழாய்கள் மூலம் நீர் பெற்ற உள்ளாட்சி அமைப்புகளில்[6] நீர் வழங்குவதில் சராசரி பற்றாக்குறை அளவு 23.48 சதவீதம் என இருந்தபோதிலும், பிரதான ஈர்ப்பு குழாய்கள் மூலம் நீர் பெற்ற உள்ளாட்சி அமைப்புகளில்[7] நீர் வழங்குவதில் ஆண்டு சராசரி பற்றாக்குறை அளவு 5.41 சதவீதம் இருந்தது (**இணைப்பு 3.2**). உந்து நீரேற்று நிலையங்களில் குறைந்த மின் அழுத்தம் காரணமாக நீரை ஏற்றுவதில் ஏற்பட்ட பிரச்சினைகளினால் குறைவான நீர் வழங்கப்பட்டது என தருமபுரி, SE, PMC தெரிவித்தார் (ஜூலை 2018). ஒவ்வொரு உந்து நீரேற்று நிலையத்திற்கும் அமைப்பதாக திட்டமிடப்பட்ட தனித்தனி மின்சார வழங்கல் ஏற்பாடுகள் செய்யப்படவில்லை; இதனால், மின்தடைகள் ஏற்பட்டன என தணிக்கை கண்டறிந்தது.
- பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் துறை, மின்சார வாரியம் போன்ற பிற துறைகள் குழாய்களை சேதப்படுத்தியதன் காரணமாக, 412 குடியிருப்பு பகுதிகளில் ஒன்று முதல் 25 மாதங்கள் வரையிலான காலத்திற்கு ஒகேனக்கல் நீர் வழங்கப்படவில்லை. பள்ளங்களை தோண்ட துவங்குமுன் அத்துறைகள் TWAD வாரியத்துடன் ஒருங்கிணைந்து செயல்பட தவறியதே இதற்கு காரணம் என தணிக்கை கண்டறிந்தது.
- நீர் ஆதாரத்தில் ஏற்பட்ட நீரின் பற்றாக்குறையால் 2017-18ல் வழங்கப்பட்ட நீரின் அளவில் குறிப்பிடத்தக்க சரிவு ஏற்பட்டது. முந்தைய ஆண்டின் சராசரி நீரேற்ற அளவான 118.54 MLDக்கு மாறாக, ஏப்ரல், மே மற்றும் ஜூன் 2017 மாதங்களில், ஒகேனக்கலுக்கு அருகிலுள்ள நீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து செலுத்தப்பட்ட நீரின் அளவு முறையே 69.74 MLD, 85.30 MLD மற்றும் 79.84 MLD என குறைந்தது.

ஒகேனக்கல் குடிநீர் திட்டத்தின் கீழ் நீர் குறைவாக கிடைப்பது தொடர்பாக தமிழ்நாடு அரசு, தருமபுரி நகராட்சி வேறொரு நீர் ஆதாரத்தை கொண்டுள்ளதாகவும் நீரை பெறுவதற்கு ஒசூர் நகராட்சியில் போதிய உள்கட்டமைப்பு இல்லாததாலும் நீர் குறைவாக வழங்கப்பட்டது என்றும் மறுமொழி அளித்தது (நவம்பர் 2018). ‘புத்துணர்வு மற்றும் நகர்ப்புற மாற்றங்களுக்கான அட்டல் திட்டம்’ (AMRUT) என்பதன் கீழ் ஒசூர் நகராட்சியின் உள்கட்டமைப்பு விரிவுபடுத்தப்பட்டு வருவதாகவும் அரசு மேலும் தெரிவித்தது. மேலும், மின்சாரம் வழங்குவதிலுள்ள சிக்கல்களால் நீரேற்றத்தில் ஏற்படும் தடைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றும், ஆதார நிலையில் நீரின் பற்றாக்குறை என்பது ‘*தடுக்க முடியாத வலுக்கட்டாயமான ஒரு நிலை*’ (*Force Majeure*) என்றும் அரசு தெரிவித்தது.

3.1.3.2 மாசுபட்ட நீர் வழங்கலுக்கு வழிவகுத்த குறைபாடுள்ள திட்டமிடல்

ஊரக குடியிருப்புகளுக்கு 40 LPCD நீர் வழங்க வேண்டும் என இந்திய அரசு வகுத்த அளவு நிலைகள் இருந்த நிலையில், இத்திட்டத்தின் கீழ் 30 LPCD நீர் வழங்க திட்டமிடப்பட்டது. மீதமுள்ள 10 LPCD தேவையை நிலத்தடி நீர் ஆதாரங்களின் மூலம் பெற திட்டமிடப்பட்டது. இந்த மாவட்டங்களில் நிலத்தடி நீர் மாசுபட்டுள்ள அளவை கருத்தில் கொள்ளும்போது, ஆற்று நீருடன் ப்ளோரைடு

[6] இரண்டு நகராட்சிகள், எட்டு பேரூராட்சிகள் மற்றும் 10 ஊராட்சி ஒன்றியங்கள்.

[7] ஒரு நகராட்சி, எட்டு பேரூராட்சிகள் மற்றும் எட்டு ஊராட்சி ஒன்றியங்கள்.

அதிகம் கலந்துள்ள நிலத்தடி நீரை கலப்பது என்பது, புளோரோசிஸ் நோய் பாதிப்பை குறைப்பது எனும் திட்டத்தின் நோக்கத்திற்கு எதிரானது. ஒகேனக்கல் நீர் **பத்தி 3.1.3.1**ல் கூறப்பட்டவாறு குறைவாக வழங்கப்பட்டதால், திட்டத்தின் மூலமாக பெறப்படும் நீருடன் உள்ளூர் ஆதாரத்திலிருந்து எடுக்கப்பட்ட நீரை திட்டமிட்ட 10 LPCD அளவைவிட அதிகமாக கலந்து குடியிருப்புகளுக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகள் வழங்கி வந்தது என்பது மாதிரி குடியிருப்புக்களில் களஆய்வின் போது காணப்பட்டது.

மாதிரி ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள 195 குடியிருப்புகளுள் 66[8] குடியிருப்புகளுக்கு வழங்கப்பட்ட நீரில் புளோரைடு அளவு WHO பரிந்துரைத்த வரம்பான 1.5 mg/lக்கும் அதிகமாக இருந்தது என்பது காணப்பட்டது. நிலத்தடி நீர் ஆற்று நீருடன் கலப்பதை தடுக்கும் பொருட்டு, ஜனவரி 2015 முதல் ஏப்ரல் 2017 வரையிலான காலகட்டத்தில் தருமபுரி மாவட்டத்திலுள்ள 3,245 குடியிருப்புகளுள் 156 குடியிருப்புகளில் ஒவ்வொன்றிலும் 5,000 லிட்டர் கொள்ளளவு உடைய ஒரு கூடுதல் OHTயை TWAD வாரியம் அமைத்தது. எனினும், பொது குழாய்கள் OHTயின் அருகே மட்டுமே அமைக்கப்பட்டு, OHTயிலிருந்து தொலைவில் வாழும் மக்களுக்கு அதன் பயன்கள் மறுக்கப்பட்டன என்பது காணப்பட்டது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில், நீர் கலப்பை தவிர்க்க தனி OHT அமைக்க எந்த முயற்சியும் எடுக்கப்படவில்லை. மேலும், கலப்பதன் காரணமாக மாசுபடும் பிரச்சனைகளை உடைய 999 குடியிருப்புகளுக்கு கூடுதலாக 2.76 MLD குடிநீரை வழங்குவதற்கு தருமபுரி, SE, PMC ஜனவரி 2018ல் முன்மொழிந்தார். அதற்கு TWAD வாரிய இணை மேலாண்மை இயக்குநர் மார்ச் 2018ல் ஒப்புதல் அளித்தார். ஆனால், ஜூன் 2018 வரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இவ்வாறு, திட்டம் செயல்படுத்தப்பட்டபோதிலும், இரண்டு மாவட்டங்களில் 7,639 குடியிருப்புகளுள் 999 குடியிருப்புகளில், குடிநீரில் ப்ளோரைடின் அளவு அதிகமாக உள்ள பிரச்சினையை தொடர்ந்து நீடித்தது.

நீர் மாதிரிகளை கொண்டு செய்யப்பட்ட பிந்தைய சோதனைகள், அவற்றில் புளோரைடு அளவுகள் அனுமதிக்கப்பட்ட வரையறைக்குள் இருப்பதை காட்டின என்றும், தணிக்கை சுட்டிக்காட்டிய 999 குடியிருப்புகளில் எலும்பு சாரா திசுக்களில் புளோரோசிஸ் நோய் பாதித்த நபர்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறது என்றும் தமிழ்நாடு அரசு தெரிவித்தது (நவம்பர் 2018).

தணிக்கை தனிபட்டு அரசின் மறுமொழியை சரிபார்க்க இயலவில்லை, ஆனால், ஒகேனக்கல் குடிநீர் திட்டத்திலிருந்து கிடைக்கும் நீரின் அளவு குறைவாக இருப்பதாலும், அது அதிக அளவு புளோரைட் உள்ள குடிநீருடன் கலப்பதாலும், புளோரோசிஸ் நோய் உள்ளது என்ற அபாய நிலை இருக்கக்கூடும்.

3.1.3.3 வீடுகள் மற்றும் பள்ளிகளுக்கு குடிநீர் இணைப்புகள் வழங்கப்படாமை

(i) இத்திட்டத்தின் கீழ் நகர்ப்புற குடும்பங்களுக்கு 100 சதவீதம் மற்றும் கிராமப்புற குடும்பங்களுக்கு 70 சதவீதம் குடிநீர் இணைப்பு வழங்க திட்டமிடப்பட்டது. எனினும், மூன்று நகராட்சிகள் மற்றும் 17 பேரூராட்சிகளில் 1,86,360 குடும்பங்களுள் 66,167 குடும்பங்களுக்கு

8 புளோரின் அளவும் குடியிருப்புகளின் எண்ணிக்கையும் - 1.51 முதல் 2.00 mg/l வரை - 37 குடியிருப்புகள்; 2.01 முதல் 3.00 mg/l வரை - 21 குடியிருப்புகள் மற்றும் 3.00 mg/lக்கு மேல் - எட்டு குடியிருப்புகள்.

(35.50 சதவீதம்) மட்டும் வீட்டு இணைப்புகள் வழங்கப்பட்டன என்பது காணப்பட்டது. ஊரக பகுதிகளை பொறுத்தவரை, 18 ஊராட்சி ஒன்றியங்களுள் 13 ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள 4,54,229 குடும்பங்களுள் எதற்கும் வீட்டு இணைப்பு வழங்கப்படவில்லை; மீதமுள்ள ஐந்து ஊராட்சி ஒன்றியங்களில் மொத்தமுள்ள 1,32,099 குடும்பங்களுள் 9,285 குடும்பங்களுக்கு (7.02 சதவீதம்) மட்டும் வீட்டு இணைப்புகள் வழங்கப்பட்டன. திட்ட நிதியை பயன்படுத்தி ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு பேரூராட்சியிலுள்ள அனைத்து வீடுகளுக்கும் வீட்டு இணைப்புகள் வழங்க TWAD வாரியம் பிப்ரவரி 2016ல் முடிவு செய்தது. எனினும், திட்ட காலம் ஜூலை 2017ல் முடிவடைந்ததால் இக்கருத்துரு கைவிடப்பட்டது; 100 சதவீதம் வீட்டு இணைப்புகள் வழங்கும் இலக்கு எட்டப்படவில்லை.

போதுமான நீர் இல்லாமை, போதுமான எண்ணிக்கையில் பொது குழாய்கள் அளிக்கப்பட்டமை மற்றும் நீர் கட்டணம் செலுத்த மக்கள் விரும்பாமை ஆகியவற்றை வீட்டு இணைப்புகள் வழங்கப்படாததற்கான பொதுவான காரணங்களாக மாதிரி ஊராட்சி ஒன்றியங்களின் ஆணையர்கள் கூறினார். எனினும், வீட்டு இணைப்புகளை வழங்குவதற்கு எந்த நடவடிக்கையையும் மாதிரி ஊராட்சி ஒன்றியங்கள் எடுக்கவில்லை என்பதை தணிக்கை கண்டறிந்தது.

தமிழ்நாடு அரசு, ஊரக பகுதிகளில் மக்களின் இருப்பிடத்திலிருந்து 50 மீட்டர் பகுதிக்குள் பொது குழாய்கள் உள்ளன என மறுமொழி அளித்தது (நவம்பர் 2018).

சுத்திகரிக்கப்பட்ட நீர் பொது குழாய்களில் மட்டுமே கிடைக்கும் என்பது வீடுகளில் மாசுபட்ட நீரை பயன்படுத்துவதற்கு வழி வகுக்கும். திட்டத்தின் நீரை வீடு வரை கொண்டு செல்வது என்ற திட்டத்தின் குறிக்கோள் நிறைவேறவில்லை.

(ii) திட்டத்தில் அடங்கிய இரண்டு மாவட்டங்களில் உள்ள 3,409 பள்ளிகள் அனைத்திற்கும் ₹ 3.84 கோடி செலவில் நீர் வழங்குவதற்காக திட்டத்தின் II முதல் V வரையலான சிப்பங்களுக்கான (package) ஒப்பந்தத்தில் ஒரு ஒட்டுமொத்த (lumpsum) தொகை ஒதுக்கப்பட்டது. இந்த ஒதுக்கீட்டிலிருந்து ஜூலை 2018 வரை, எந்த செலவும் செய்யப்படவில்லை.

திட்டம் தொடங்கப்பட்டு மூன்றாண்டுகளுக்கு பின்னர், 1,096 பள்ளிகளுக்கு குடிநீர் வழங்கும் நடவடிக்கையை TWAD வாரியம் துவக்கியது (டிசம்பர் 2016) என தணிக்கையின் கூர்ந்தாய்வு வெளிப்படுத்தியது. அந்த 1,096 பள்ளிகளுக்கு ஒகேனக்கல் நீரை வழங்குவதற்கான விரிவான மதிப்பீடுகளை தயாரிக்குமாறும் நிர்வாக ஒப்புதலை அளிக்குமாறும் இரண்டு மாவட்டங்களின் மாவட்ட ஆட்சியர்களை PCE கோரினார் (டிசம்பர் 2016). இரண்டு மாவட்டங்களிலும் உள்ள பள்ளிகளுக்கு குடிநீர் வழங்க இரண்டு தனித்தனியான மதிப்பீடுகள் (தருமபுரி: ₹ 1.06 கோடி மற்றும் கிருஷ்ணகிரி: ₹ 8.41 கோடி) ஏப்ரல் 2017ல் தயாரிக்கப்பட்டன. விரிவான ஆய்வு மேற்கொள்ளப்படாத நிலையில் தொழில்நுட்ப ஒப்புதல் அளிக்கப்படாததால் ஜூன் 2018ல் கூட பணிகள் துவங்கப்படவில்லை.

தமிழ்நாடு அரசு, பள்ளிகளுக்கு ஒகேனக்கல் திட்ட நீருக்கான நேரடி இணைப்பை வழங்குவது மொத்த அமைப்பையும் சிக்கலாக்கி பராமரிப்பு சிக்கல்களை உருவாக்கும் என்பதால் அத்திட்டத்தை முன்னேடுத்து செல்லவில்லை என்றும் மறுமொழி அளித்தது (நவம்பர் 2018).

மக்களுக்கு மேம்பட்ட வாழ்க்கை தரத்தையும் நல்வாழ்வையும் உறுதி செய்வதற்காக, நகர்ப்புறங்களுக்கு 100 சதவீதம் குடிநீர் இணைப்புகள்,

கிராமப்புறங்களுக்கு 70 சதவீதம் மற்றும் பள்ளிகளுக்கு நேரடி இணைப்புகள் வழங்குதல் ஆகியவை திட்டத்தின் நோக்கங்களாக இருந்ததால், இம்மறுமொழி ஏற்கத்தக்கதல்ல.

3.1.4 புளோரோசிஸ் பாதிப்பு குறைப்பு

புளோரோசிஸ் பாதிப்பு குறைப்பு என்ற கூறு (i) சமூகம் சார்ந்த அணுகுமுறை (ii) பள்ளி சார்ந்த அணுகுமுறை மற்றும் (iii) மருத்துவமனை சார்ந்த அணுகுமுறை என்ற மூன்று அணுகுமுறைகள் மூலம் செயல்படுத்தப்பட்டது. **அட்டவணை 3.3**ல் விவரிக்கப்பட்டுள்ளபடி, இந்த நடவடிக்கைகளுக்காக மே 2010 முதல் மார்ச் 2015 வரையிலான காலகட்டத்தில் ஒதுக்கப்பட்ட தொகை முழு அளவில் பயன்படுத்தப்படவில்லை.

அட்டவணை 3.3: புளோரோசிஸ் பாதிப்பு குறைப்பு மீதான செலவு

(₹ கோடியில்)

விவரம்	ஒதுக்கீடு	செலவு	செலவிடப்படாத தொகை
சமூகம் சார்ந்த அணுகுமுறை	8.47	5.33	3.14
பள்ளி சார்ந்த அணுகுமுறை	1.40	0.74	0.66
மருத்துவமனை சார்ந்த அணுகுமுறை	12.50	2.69	9.81
தொழில்நுட்ப ஆதரவு	3.42	2.90	0.52
எதிர்பாரா செலவு மற்றும் நூற்று மேனி (centage)	2.64	1.52	1.12
மொத்தம்	**28.43**	**13.18**	**15.25**

(ஆதாரம்: TWAD வாரியம் அளித்த விவரங்கள்)

திட்டத்தின் நோக்கங்களை பாதிக்கும்படி இருந்த குறைவான நிதி பயன்பாட்டுக்கான காரணங்கள் பின்வரும் துணைப்பத்திகளில் விவாதிக்கப்பட்டுள்ளன:

(i) புளோரோசிஸ் நோய் பரவியுள்ள அளவை மதிப்பிடுவதற்காக அனைத்து குடும்பங்களுக்கும் 100 சதவீத ஆய்வு நடத்துதல், புளோரோசிஸ் நோய் தாக்கியுள்ள நபர்களுக்கு ஆலோசனை வழங்கி, நோயை கட்டுப்படுத்த மருத்துவ மற்றும் அறுவை சிகிச்சை மேற்கொள்ளுதல், அவர்களுக்கு மறுவாழ்வு அளித்தல் ஆகியவற்றை இத்திட்டத்தின் கீழ் செயல்படுத்த திட்டமிடப்பட்டது. எனினும், திட்டப் பகுதியில் வாழும் 33.87 இலட்சம் மொத்த மக்கள் தொகையில் 26.62 இலட்சம் மக்கள் (78.6 சதவீதம்) மட்டுமே ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டனர் என்பதை தணிக்கை கண்டது. ஆய்வு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கையில் இருந்த குறைவிற்கு குறிப்பான காரணங்கள் தெரிவிக்கப்படவில்லை.

(ii) இரண்டு மாவட்டங்களிலும், 1.69 இலட்சம் பள்ளி மாணவர்கள் உட்பட 11.94 இலட்சம் நபர்கள் புளோரோசிஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்கள் என ஆய்வு அடையாளம் கண்டது. கடுமையான மற்றும் மிதமாக பாதிக்கப்பட்டு, நுண்ணூட்டச் சத்துடன் கூடிய சிகிச்சை தேவைப்படும் நபர்கள் 2.05 இலட்சம் என PCE கணக்கிட்டார் (ஜனவரி 2013). பாதிக்கப்பட்டவர்களுக்கு கால்சியம், வைட்டமின்-சி, ஃபோலிக் அமிலம் போன்றவற்றை 90 நாட்களுக்கு வழங்க திட்டமிடப்பட்டது. நுண்ணூட்ட சத்து வழங்குவதற்கு அடையாளம் காணப்பட்ட 2.05 இலட்சம் நபர்களுள், 0.36 இலட்சம் நபர்கள் மட்டுமே பயனடைந்தனர் என்பதை தணிக்கை கண்டறிந்தது. 0.36 இலட்சம் நபர்களுக்கு மட்டுமே நுண்ணூட்ட சத்து வாங்குவதற்கு வரவு-செலவுத் திட்டத்தில் நிதி

கிடைக்கப்பெற்றது என SE/PEC பதிலளித்தார் (ஜூலை 2018). புளோரோசிஸ் பாதிப்பு குறைப்பு என்பதில் ₹ 15.25 கோடி சேமிப்பு இருந்ததை கருதினால், திறனுள்ள நிதி ஒதுக்கீடும் செயல்படுத்துதலும் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நுண்ணூட்ட சத்துகள் வழங்குவதற்குரிய நிதி கிடைக்குமாறு செய்திருக்கும் என்பதை தணிக்கை கண்டறிந்தது.

இவ்வாறு, புளோரைட் அதிகம் கலந்த நீரை உட்கொள்வதால் உண்டான சேதத்தை சரிசெய்வதற்கான சிகிச்சை, கடுமையாக மற்றும் மிதமாக பாதிக்கப்பட்ட 2.05 இலட்சம் நபர்களுள் 1.69 இலட்சம் நபர்களுக்கு (82 விழுக்காடு) கிடைக்கவில்லை.

(iii) அடையாளம் காணப்பட்ட நோயாளிகளுக்கு மருத்துவ சிகிச்சை அளிக்க திட்டமிடப்பட்டது. திட்டம் 2012ல் துவங்கி இருந்தாலும், மருத்துவ சிகிச்சை தேவைப்படும் பள்ளி மாணவர்களை அடையாளம் காணும் பணி திட்டத்தின் நான்காம் ஆண்டில்தான் (2016-17) துவங்கப்பட்டது. இரு பாலாரும் அடங்கிய ஆய்வின் மூலம், பல் புளோரோசிஸ் நோயால் பாதிக்கப்பட்டிருந்த 1,68,617 பள்ளி மாணவ/மாணவிகள் கண்டறியப்பட்டனர். அவர்களுள் VIII முதல் XII வகுப்புகளில் பயின்ற 13,469 மாணவிகள் மட்டுமே பல் அறுவை முறை சிகிச்சைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டனர். எனினும், முன்னோடி ஆய்வின் மூலம் கண்டுபிடிக்கப்பட்ட 65 மாணவிகளுக்கு மட்டுமே பல் புளோரோசிஸால் ஏற்பட்ட விளைவுகளை சரி செய்ய அறுவை சிகிச்சை செய்யப்பட்டது என்பதையும், திட்டம் முடிவுக்கு வந்ததால் மேலும் அறுவை சிகிச்சை செய்யப்படவில்லை என்பதையும் தணிக்கை கண்டது. இப்பணியை மேற்கொள்ள நல்வாழ்வு துறையுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை உருவாக்க செய்யப்பட்ட முயற்சிகள் பலனளிக்கவில்லை என SE, PMC மறுமொழி அளித்தார் (ஜூலை 2018). இவ்வாறு, புளோரோசிஸால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு மருத்துவ சிகிச்சை வழங்குவதில் தாமதங்களும் விடுபாடுகளும் இருந்தன.

காட்சிப்படம் 3.2: புளோரோசிஸ் பாதித்த குழந்தைகளின் புகைப்படங்கள்

பல் சார்ந்த புளோரோசிஸ்　　　　எலும்பு சார்ந்த புளோரோசிஸ்

(ஆதாரம்: TWAD வாரியம் - புளோரோசிஸ் பாதிப்பு குறைப்பு என்ற கூறு பற்றிய நிறைவு அறிக்கை)

(iv) ‘அயனி மானிகள்’ (Ion Meters) என்பன, இரத்தம் மற்றும் சிறுநீர் மாதிரிகள் மூலம் புளோரோசிஸ் நோயை அறிவதற்கு பயன்படுத்தப்படும் சிறப்பு கருவிகளாகும். திட்டப் பகுதியிலுள்ள 10 அரசு மருத்துவமனைகளுக்கு ₹ 48,05,600 செலவில் 10 அயனி மானிகளும் பயன்படு பொருட்களும் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டன (ஜூலை 2011). கருவிகளின் வழக்கமான பயன்பாட்டிற்காக நிதியும் வழங்கப்பட்டது. திட்ட காலத்தின் போது, அம்மருத்துவமனைகள் கருவிகளை பயன்படுத்தி நோய் அறியும் பணியை

மேற்கொண்டன. திட்டம் முடிவடைந்த உடன், மருத்துவமனைகளிலிருந்து கருவிகளை TWAD வாரியம் திரும்ப எடுத்துக்கொண்டது (மார்ச் 2017). மருத்துவமனை சார்ந்த அணுகுமுறை என்ற கூறின் கீழ் நிதி இருந்தும், திட்ட காலத்திற்குப் பிறகு இந்த நடவடிக்கையை தொடர்ந்து செய்ய மருத்துவமனைகளுக்கு நிதி வழங்க எந்த முயற்சியும் எடுக்கப்படவில்லை.

(v) குறிப்பிட்ட நல்வாழ்வு மையங்களில் பல் சிகிச்சை வழங்குவதற்கு இரண்டு மாவட்டங்களின் சுகாதார பணிகள் துணை இயக்குநரும் இணை இயக்குநரும் அளித்த கருத்துருக்களின் அடிப்படையில், PCE 17 பல் சிகிச்சைகளை நாற்காலிகளை ₹ 22.20 இலட்சம் செலவில் தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் மூலம் கொள்முதல் செய்தார் (மே 2015). ஜூன் 2015ல் மூன்று பல் சிகிச்சை நாற்காலிகள் வழங்கப்பட்ட மூன்று மாதிரி மருத்துவமனைகளுள் இரண்டு[9] மருத்துவமனைகளில் பல் மருத்துவர்கள் இல்லாத காரணத்தால் இரண்டு நாற்காலிகள் பெறப்பட்ட முதலே பயன்படுத்தப்படவில்லை. பல் மருத்துவர்கள் இல்லாத மருத்துவமனைகளுக்கு நாற்காலிகளை வழங்கியதால், ₹ 2.61 இலட்சம் மதிப்புள்ள கருவிகள் பயனற்று இருந்து, திட்டத்தின் நோக்கம் நிறைவேறவும் இல்லை.

(vi) எலும்பு சார்ந்த புளோரோசிஸ் பாதித்த நோயாளிகளுக்கு அறுவை சிகிச்சை செய்ய சி-ஆர்ம் மொபைல் இமேஜ் இன்டென்சிபையர்[10] எனும் கருவியை கொள்முதல் செய்ய பிப்ரவரி 2012ல் முடிவு செய்யப்பட்டது. ஐந்தாண்டுகளுக்குப் பிறகு ஏப்ரல் 2017ல், அதாவது திட்ட காலம் முடியும் தருவாயில், ₹ 15.43 இலட்சம் செலவில் அக்கருவி கொள்முதல் செய்யப்பட்டு அரசு தர்மபுரி மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு வழங்கப்பட்டது. ஜூலை 2018 வரை அக்கருவி எந்த அறுவை சிகிச்சைக்கும் பயன்படுத்தப்படவில்லை. இவ்வாறு, கருவியை கொள்முதல் செய்வதில் இயல்பு மீறிய தாமதம் இருந்தது என்பதுடன், அதனை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவும் இல்லை.

தமிழ்நாடு அரசு தனது மறுமொழியில் (நவம்பர் 2018), 98.5 சதவீத குடும்பங்கள் ஆய்வு செய்யப்பட்டதாக தெரிவித்தது. நுண்ணூட்டச் சத்துக்கள் அவற்றின் தாக்கத்தை மதிப்பீடு செய்வதற்காக மட்டுமே வழங்கப்பட்டன என்றும் தமிழ்நாடு அரசு தெரிவித்தது. அயனி மானிகள், பல் சிகிச்சை நாற்காலிகள் மற்றும் 'சி-ஆர்ம் மொபைல் இமேஜ் இன்டென்சிபையர்' ஆகியன பயன்படுத்தப்படாமை பற்றிய குறிப்பிற்கு, அவற்றை தகுந்த முறையில் பயன்படுத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக அரசு தெரிவித்தது.

பாதிக்கப்பட்ட நபர்களின் மொத்த எண்ணிக்கையான 33.87 இலட்சம் என்பதில் 78.6 விழுக்காடு நபர்களை மட்டுமே ஆய்வு செய்திருந்ததால், ஆய்வின் சாதனைகள் குறித்த மறுமொழி ஏற்கத்தக்கதல்ல. நுண்ணூட்ட சத்து வழங்குவதற்கு அடையாளம் காணப்பட்டவர்களுள் 17.5 விழுக்காடு நபர்கள் மட்டுமே பயனடைந்தனர் என்பதால் நுண்ணூட்ட சத்து வழங்கியது குறித்த மறுமொழியும் ஏற்கத்தக்கதல்ல. புளோரோசிஸ் நோயை கட்டுப்படுத்தவும், அந்நோய் பாதித்த நபர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் நோக்கிலும் மருத்துவ மற்றும் அறுவை சிகிச்சை உதவி வழங்குவதென்ற நோக்கம் நிறைவேறவில்லை; அதற்காக ஒதுக்கப்பட்ட நிதியும் தீர்ந்தது. மேற்படி உதவிகளை அடையாளம் காணப்பட்ட பயனாளிகளுக்கு அளிக்க தேவைப்பட்ட நிதியை பெற துறை முயலவில்லை.

---

9 அரூர் மற்றும் பெண்ணாகரம் அரசு மருத்துவமனைகளில் தலா ஒன்று

10 எலும்பு மூட்டு அறுவை சிகிச்சைகளில் பயன்படுத்தப்படும் ஒரு கருவி

3.1.5 திட்ட செயலாக்கம்

திட்டம் ஐந்து சிப்பங்களாக பிரிக்கப்பட்டு, அவற்றுக்கான ஐந்து வெவ்வேறு ஒப்பந்ததாரர்களை TWAD வாரியம் பன்னாட்டு ஏலம் மூலம் தேர்ந்தெடுத்தது. ஒப்பந்த மேலாண்மை மீதான தணிக்கையின் கூர்ந்தாய்வு பின்வருவனவற்றை வெளிப்படுத்தியது.

3.1.5.1 அதிகமான விலைவிகிதங்களை பின்பற்றியதால் ₹ 1.39 கோடி கூடுதலாக வழங்கப்பட்டமை

ஒரு அடிப்படை கோட்பாடாக, ஒப்பந்தத்தில் கூறப்பட்ட விலைவிகிதங்களின் அடிப்படையிலேயே பணிகளுக்குரிய தொகை வழங்கப்பட வேண்டும். ஒப்பந்ததாரருடனான ஒப்பந்தத்தின் பிரிவு 52.2ன்படி, ஒரு இனத்திற்கான (item of work) விலை ஒப்பந்த மதிப்பில் இரண்டு சதவீதத்திற்கு மேற்பட்டு இருந்து, அந்த இனத்தின் கீழ் உள்ளபடியாக செய்யப்பட்ட பணியின் அளவு ஒப்பந்தப்படியான அளவைவிட 25 சதவீதத்திற்கு மேற்பட்ட அளவில் கூடுதலாக அல்லது குறைவாக இருக்கும் நேர்வை தவிர, செய்யப்பட்ட பணிகளின் அளவில் மாற்றம் உள்ளதாக கருதி, ஒப்பந்தத்தில் உள்ள அந்த இனத்திற்கான விலைவிகிதத்தில் மாற்றம் செய்யக்கூடாது.

சிப்பம் Vல் (₹ 366.80 கோடி) குழாய் அமைப்பு பணிகளை ஒப்பந்ததாரர் கூடுதல் அளவில் செய்த நேர்வில், ஒப்பந்தத்தில் கூறப்பட்டதைவிட அதிகமான விலைவிகிதங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு (ஜூலை 2012) தொகை வழங்கப்பட்டது. தவறான விலைவிகிதங்கள் பின்பற்றியதால், **இணைப்பு 3.3**ல் விவரிக்கப்பட்டுள்ளபடி ₹ 1.39 கோடி கூடுதல் தொகை வழங்கப்பட்டது.

இதனை சுட்டிக்காட்டியபோது, சிப்பம் Vக்கான ஒப்பந்தத்தின் துணைப் பிரிவுகள் 52.1 மற்றும் 52.2ன் அடிப்படையில் தொகை வழங்கப்பட்டது என கிருஷ்ணகிரி, திட்ட பராமரிப்பு கோட்டத்தின் செயற்பொறியாளர் தெரிவித்தார் (ஜூன் 2018). பிரிவு 52.1 ஒப்பந்தத்தில் சேராத பணிகளை செய்வது தொடர்பானது, பிரிவு 52.2, செய்யப்பட்ட பணியின் அளவு, ஒப்பந்தப்படியான அளவைவிட 25 சதவீதத்திற்கு மேற்பட்ட அளவில் கூடுதலாக அல்லது குறைவாக இருப்பது தொடர்பானது என்பதால் இம்மறுமொழி ஏற்கத்தக்கதல்ல.

செய்யப்பட்ட பணியின் அளவு, ஒப்பந்தப்படியான அளவைவிட 25 சதவீதத்திற்கு மேற்பட்ட அளவில் கூடுதலாகவோ குறைவாகவோ இல்லாததால், ஒப்பந்தப்படியான விலைவிகிதத்தைவிட அதிகமான ஒரு விலைவிகிதத்தில் ₹ 1.39 கோடி கூடுதலாக கொடுக்கப்பட்டது முறையற்றது ஆகும்.

3.1.5.2 நீள் இரும்புக் குழாய்களை இணைப்பதற்காக தனி இனம் வழங்கப்பட்டதால் ஏற்பட்ட ₹ 1.13 கோடி தவிர்த்திருக்கக்கூடிய செலவு

நீர் பரிமாற்றி குழாய்கள், நீர் ஊட்டி குழாய்கள் மற்றும் நீர் விநியோக குழாய்கள் ஆகியவற்றிற்கு வெவ்வேறு அளவிலான நீள் இரும்பு (Ductile Iron - DI) குழாய்கள் பயன்படுத்தப்பட்டன. DI குழாய்கள் பதிப்பு என்பதில், அவற்றை குழி வரை கொண்டு செல்லுதல், குழியில் இறக்குதல், பதித்தல் மற்றும் இணைத்தல் என்ற நான்கு கூறுகள் அடங்கும்.

சிப்பங்கள் III, IV மற்றும் Vல், நீர் பரிமாற்றி குழாய்கள் மற்றும் நீர் ஊட்டி குழாய்களுக்கு, தொடர்பான பணிகளுக்கு கொண்டு செல்லுதல், இறக்குதல், பதித்தல் மற்றும் இணைத்தல் ஆகிய நான்கு கூறுகளை ஒரே இனமாக கருதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஆனால், நீர் விநியோக குழாய் பணிகளுக்கு

இரண்டு இனமாக, அதாவது (அ) கொண்டு செல்லுதல், இறக்குதல் மற்றும் பதித்தல் (ஆ) இணைத்தல் என இரண்டு இனமாக கருதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.நீர் விநியோக குழாய்கள் பணிகளில் முதல் மூன்று கூறுகள் மற்றும் நான்காவது கூறுக்கான விகிதங்களின் மொத்த தொகை, நீர் பரிமாற்றி குழாய்கள், நீர் ஊட்டி குழாய்கள் பணிகளில் அதே அளவிலான குழாய்களை கொண்டு செய்ய வேண்டிய நான்கு கூறுகளையும் ஒரே இனமாக கருதியபோது அவற்றுக்காக கூறப்பட்ட விகிதத்தைவிட அதிகமாக இருந்ததை தணிக்கை கண்டது.

DI குழாய்கள் பதிப்பது தொடர்பான நான்கு கூறுகளையும் ஒரே இனமாக கருதி ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு மாறாக, (அ) முதல் மூன்று கூறுகள் (அதாவது கொண்டு செலுத்தல், இறக்குதல் மற்றும் பதித்தல்) மற்றும் (ஆ) இணைத்தல்' என்ற நான்காவது கூறு (அதாவது கொண்டு செலுத்தல், இறக்குதல், பதித்தல் மற்றும் இணைத்தல்) என பிரித்து ஒப்பந்தப்புள்ளி கோரி_தன் காரணமாக ₹ 1.13 கோடி தவிர்த்திருக்கக்கூடிய செலவு (**இணைப்பு 3.4**) ஏற்பட்டது என தணிக்கை கணக்கிட்டது.

கிருஷ்ணகிரி, திட்ட பராமரிப்பு கோட்டத்தின் செயற்பொறியாளர் தனது மறுமொழியில், ஒப்புக் கொண்ட விகிதத்திலேயே ஒப்பந்ததாரர்களுக்கு தொகை வழங்கப்பட்டது என்றும் கூடுதல் தொகை வழங்கப்படவில்லை என்றும் தெரிவித்தார் (ஜூன் 2018). நீர் பரிமாற்றி குழாய்கள் மற்றும் நீர் ஊட்டி குழாய்கள் தொடர்பான பணிகளில் DI குழாய்களை இணைத்தல் என்ற கூறை மற்ற மூன்று கூறுகளுடன் சேர்த்து விலைவிகிதம் கோரப்பட்டது போல் அல்லாமல், நீர் விநியோக குழாய்கள் பணிகளில் DI குழாய்களை இணைத்தல் என்ற கூறுக்கு தனி விலைவிகிதம் கோரியதால் ஒப்பந்ததாரர்கள் கூடுதல் விலையை குறிப்பிடவும் அவை ஏற்கப்படவும் நேரிட்டு, அதன் விளைவாக தவிர்த்திருக்கக்கூடிய வகையில் தொகை வழங்கப்பட்டது என்ற தணிக்கை குறிப்பிற்கு பொருத்தமாக அந்த மறுமொழி இருக்கவில்லை.

3.1.5.3 திட்ட மேலாண்மை ஆலோசகரின் பணியில் குறைபாடுகள்

(i) மத்திய ஆயத்தீர்வை வரி (CED) செலுத்துவதில் இருந்து திட்டம் விலக்கு பெற்றிருந்தபோதும், ஆலோசகர் CEDஐ சேர்த்தே மதிப்பட்டை தயாரித்தார். அவ்வாறு CEDஐ சேர்த்ததால், மதிப்பீட்டின் தொகை ₹ 37.81 கோடி உயர்ந்தது.

(ii) விட்டம் 63 மிமீக்கு மேற்படாத HDPE குழாய்கள் 100 மீட்டர் நீள சுருள்களாக கிடைக்கின்றன. எனினும், ஒவ்வொரு ஆறு மீட்டர் நீள குழாய்களின் விலைமதிப்பை கொண்டு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டன. ஒவ்வொரு ஆறு மீட்டர் நீளத்திற்கும் குழாய்களை இணைக்கும் தேவை ஏற்பட்டதால், மதிப்பீடுகள் ₹ 7.05 கோடி உயர்ந்தன.

(iii) சிப்பம் Vக்கான விரிவான திட்ட அறிக்கையை போதிய அளவு சீராய்வு செய்யாத காரணத்தால், இருந்த குறைபாடுகள் காரணமாக, தொலைபேசி கம்பிகள், உள்ளாட்சி அமைப்புகளின் குழாய்வழிகள் மற்றும் பிற பயன்பாடுகளை இடம் மாற்றி அமைத்தல், இரயில்வே மற்றும் NH பாதைகள் குறுக்கிடும் 50 இடங்களில் குழியற்ற துளையிடுதல் ஆகிய பணிகளை செய்யும் தேவை ஏற்பட்டு, கால நீட்டிப்பு வழங்கப்பட்ட காலகட்டத்தில் பணியாளர் செலவு போன்ற வகைகளில் ₹ 2.69 கோடி ஒப்பந்ததாரருக்கு வழங்க வேண்டிய தவிர்த்திருக்கக்கூடிய செலவு ஏற்பட்டது.

(iv) **பத்தி 3.1.5.2**ல் சுட்டிக்காட்டியபடி, DI குழாய்களை அமைப்பது தொடர்பான டெண்டரில் சீர்த்தன்மை உறுதி செய்யப்படவில்லை.

ஆலோசகர் தரப்பில் இருந்த மேற்படி குறைபாடுகள் செலவு மற்றும் பணியின் பரப்பு ஆகிய வகைகளில் திட்டத்தை பாதித்தன. எனினும், இதற்காக அபராதம் விதிக்க ஒப்பந்த விதிகளில் இடமில்லை என்பதால், அவர் மீது அபராதம் ஏதும் விதிக்கப்படவில்லை என்பதை தணிக்கை கண்டறிந்தது. அபராதம்/இழப்பீடுக்கான வழிவகை இல்லாத நிலையில், திட்ட மேலாண்மையில் ஆலோசகரின் பொறுப்புடமையை உறுதி செய்ய இயலாது. ஆலோசகரின் செயல்பாடு மீதான கண்காணிப்பும் தளர்வாக இருந்தது; இது திட்டத்தை பாதித்தது.

திட்டத்தை செயல்முறைப்படுத்துதல் தொடர்பாக தணிக்கை கண்டறிந்தவற்றின் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என தமிழ்நாடு அரசு மறுமொழி அளித்தது (நவம்பர் 2018). தவறுகளுக்கு காரணமானவர்கள் மீது அவற்றுக்கான பொறுப்பை அரசு நிர்ணயிக்க வேண்டும்.

3.1.6 மீட்டெடுக்கப்படாத இயக்க மற்றும் பராமரிப்பு செலவு

2013-18 காலகட்டத்தின் போது திட்டத்தின் இயக்க மற்றும் பராமரிப்பு (operation & maintenance - O&M) செலவு, உள்ளாட்சி அமைப்புகளுக்கு நீரின் மொத்த விற்பனை மூலம் TWAD வாரியம் திரட்டிய வருவாய் மற்றும் தமிழ்நாடு அரசு ஏற்றுக்கொண்ட பற்றாக்குறை ஆகிய விவரங்கள் **அட்டவணை 3.4**ல் அளிக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 3.4: திட்டத்தின் O&M செலவு

O&M செலவு	TWAD வாரியம் திரட்டிய வருவாய்	தமிழ்நாடு அரசு ஏற்றுக்கொண்ட பற்றாக்குறை
₹ 310.86 கோடி	₹ 120.62 கோடி	₹ 190.24 கோடி

(ஆதாரம்: TWAD வாரியம் அளித்த விவரங்கள்)

திட்டம் நிலையாக பயனளிப்பதை உறுதி செய்யும் பொருட்டு, O&M செலவு தொகையை 100 சதவீதம் மீட்டெடுக்க திட்டத்திற்கான கருத்துரு நிலையில் திட்டமிடப்பட்டது. தமிழ்நாடு அரசின் கொள்கையும் O&M செலவை 100 சதவீதம் மீட்டெடுப்பதற்கு ஆதரவாக இருந்தது. இதனை கருத்தில் கொண்டு, நகர்ப்புற மற்றும் கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு நீரின் மொத்த விநியோகத்திற்கு ஒரு கிலோலிட்டருக்கு 2008ல் ₹ 4.50 மற்றும் ₹ 3 என இருந்த கட்டணத்தை, 2012ல் ₹ 7.88 மற்றும் ₹ 5.25 ஆக உயர்த்த வேண்டும் எனவும் O&M செலவை 2022ல் முழுமையாக ஈடுகட்டும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஐந்து சதவீதம் உயர்த்த செய்யவேண்டும் என்றும் திட்ட ஆலோசகர் தெரிவித்தார் (2008). திட்ட ஆலோசகர் தெரிவித்தபடி, உள்ளாட்சி அமைப்புகளுக்கான நீர் கட்டணத்தை தமிழ்நாடு அரசின் ஒப்புதலுடன் TWAD வாரியம் உயர்த்தியது. இருப்பினும், O&M செலவை படிப்படியாக குறைத்து 2022ம் ஆண்டில் நிகர செலவு இல்லாத நிலையை எட்ட வேண்டும் என்ற இலக்கிற்கு மாறாக, நிகர செலவு உயர்ந்து கொண்டு வந்தது. O&M செலவினத்தில் திட்டமிடப்பட்ட மற்றும் உள்ளபடியான நிகர செலவு **காட்சிப்படம் 3.3**ல் காட்டப்பட்டவாறு இருந்தது.

காட்சிப்படம் 3.3: O&M செலவினத்தில் திட்டமிடப்பட்ட மற்றும் உள்ளபடியான பற்றாக்குறை

(₹ கோடியில்)



(ஆதாரம்: TWAD வாரியம் அளித்த விவரங்கள்)

பகுப்பாய்வின் மூலம் பின்வருவன கண்டறியப்பட்டன:

- **பத்தி 3.1.3.1**ல் கூறப்பட்டவாறு, திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட நீரின் அளவு திட்டமிடப்பட்ட அளவைவிட கணிசமான அளவு குறைவாக இருந்தது, இதனால், வேறுபடும் செலவில் (variable cost) உயர்வும், அதன் விளைவாக O&Mக்கான நிகர செலவு தொடர்ந்து உயர்வதும் ஏற்பட்டன.
- உள்ளாட்சி அமைப்புகள் செலுத்த வேண்டிய கட்டணங்களை TWAD வாரியம் உரிய நேரத்தில் கணக்கிடவில்லை. அமைக்கப்பட்ட நீர்மானிகள் செயல்படாமல், அவற்றை பழுது பார்க்க முயற்சி செய்யப்படாததால், உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்பட்ட நீரின் அளவை கணக்கெடுக்க ஒரு முறையான அமைப்பை TWAD வாரியம் பெற்றிருக்கவும் இல்லை என தணிக்கை கண்டறிந்தது. நீர்மானிகள் இல்லாததால், தோராய முறையிலான கட்டணங்கள் விதிக்கப்பட்டன. நீர் வழங்கியதற்கான TWAD வாரிய பட்டிகளுக்கு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் உடனுக்குடன் தொகை செலுத்தவில்லை என்பதும் காணப்பட்டது. செப்டம்பர் 2018 நிலையில், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் செலுத்த வேண்டிய மொத்த நிலுவை தொகை ₹ 11.73 கோடி ஆகும்.
- O&M செலவில் இருந்த பற்றாக்குறை அரசின் மானியத்தை கொண்டு சரிசெய்யப்பட்டது.

வருவாய்க்கும் O&M செலவிற்கும் இடையே உயர்ந்து வரும் இடைவெளிக்கு மின்சார கட்டண உயர்வே முக்கிய காரணம் என தமிழ்நாடு அரசு மறுமொழி அளித்தது (நவம்பர் 2018). இயங்கும் நீர் மானிகள் அமைப்பதையும் கட்டணம் விதிக்கப்படுவதையும் உறுதி செய்வதன் மூலம் வருவாயை பெருக்குவதில் TWAD வாரியம் கவனம் செலுத்த வேண்டும் என தணிக்கை பரிந்துரைக்கிறது. இது நிதி வகையில் திட்டத்தின் நீடித்த பயன்பாட்டை உறுதி செய்து, அரசு மானியங்களை சார்ந்திருப்பதை குறைக்கும்.

3.1.7 தவறுகள்/விடுபாடுகளை கண்டுபிடித்து தடுப்பதற்கான முறை

சுட்டிக்காட்டப்பட்ட தவறுகள்/விடுபாடுகள் சோதனை ஆய்வின் அடிப்படையில் கண்டறியப்பட்டவை ஆகும். எனவே, அதே போன்ற தவறுகள்/விடுபாடுகள் வேறு எங்கும் நிகழ்ந்துள்ளனவா என கண்டறிந்து, அவ்வாறு இருந்தால் அவற்றை சரிசெய்யும் பொருட்டும், அவ்வாறான தவறுகள்/விடுபாடுகள் நிகழாமல் தடுக்க ஒரு முறைமையை அமைக்கும் பொருட்டும், துறை/அரசு அனைத்து அமைப்புகளிலும் ஒரு முழுமையான ஆய்வை மேற்கொள்ளலாம்.

3.1.8 முடிவுரை

ஒகேனக்கல் நீர் வழங்கல் மற்றும் புளோரோசிஸ் பாதிப்பை மட்டுப்படுத்தும் திட்டத்தின் மூலம் பாதுகாப்பான நீர் குறைவான அளவில் வழங்கப்பட்டது என்பது, ஆற்று நீருடன் நிலத்தடி நீர் கலப்பது என்ற பிரச்சனையுடன் இணைந்ததால், குடிப்பதற்குரிய பாதுகாப்பான குடிநீர் வழங்குதல் என்ற நோக்கம் நிறைவேறவில்லை. வீடுவாரியான கணக்கெடுப்பின் குறைபாடுகள் மற்றும் நுண்ணூட்ட சத்துகளையும் பல் மற்றும் எலும்பியல் சிகிச்சைகளையும் போதிய அளவில் வழங்காமை காரணமாக புளோரோசிஸால் உண்டாக்கி இருந்த பாதிப்பை சரி செய்ய திட்டத்தின்கீழ் போதிய நடவடிக்கை இருக்கவில்லை. புளோரோசிஸ் பாதிப்பை மட்டுப்படுத்தும் நடவடிக்கைகளுக்கு பொது சுகாதார துறையுடன் துடிப்பான ஒருங்கிணைப்பு தேவை. கட்டுமான பணிகளில் இருந்த பிரச்சினைகள் காரணமாக ₹ 2.51 கோடி தவிர்த்திருக்கக்கூடிய செலவு ஏற்பட்டது. வருவாய்க்கும் இயக்கம் மற்றும் பராமரிப்பு செலவுக்கும் இடையே அதிகரித்து வந்த இடைவெளி, திட்டத்தின் முறையான பராமரிப்பதற்கும் நிதி வகையில் திட்டத்தின் நீடித்த பயன்பாட்டிற்கும் அச்சுறுத்தலாக இருக்கிறது.

3.2 தவிர்த்திருக்கக்கூடிய/பயனற்ற செலவு

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை

3.2.1 மருத்துவ கருவிகளின் முறையற்ற கொள்முதல் மற்றும் அவற்றின் பயனற்ற நிலை

ஏழு மாதிரி மருத்துவ கல்லூரி மருத்துவமனைகளுக்காக முறையற்ற வகையிலும் உரிய கவனமின்றியும் கொள்முதல் செய்யப்பட்ட தேவையற்ற கருவிகள் பயன்படுத்தப்படவில்லை. அக்கருவிகள் கொள்முதல் செய்யப்பட்ட வகையில் ₹ 4.29 கோடி தவிர்த்திருக்கக்கூடிய செலவு ஏற்பட்டது. இது ₹ 10.60 கோடி செலவில் செய்யப்பட்ட மொத்த கொள்முதலையும் கேள்விக்குள்ளாக்கியது.

மருத்துவ கல்வி இயக்குநர் (Director of Medical Education - (DME)) மருத்துவ கருவிகள் மற்றும் இயந்திரங்கள் வாங்குவதற்கு ஆண்டு ஒன்றுக்கு தோராயமாக ₹ 78 கோடியை செலவு செய்கிறார். கருவிகள் மற்றும் இயந்திரங்கள் வாங்கியதை 2017-18ல் DME மற்றும் 21 மருத்துவ கல்லூரி மருத்துவமனைகளில் ஏழு மருத்துவமனைகளில் மேற்கொண்ட தணிக்கை பின்வருவனவற்றை வெளிப்படுத்தியது.

டெங்கு, H1N1, எபோலோ போன்ற தொற்று நோய்கள் பரவும் காலங்களில் திறம்பட மற்றும் தடுப்பு சிகிச்சை அளிப்பதற்கு DME ஐந்து வகையான எடுத்துச் செல்ல வசதியுடைய ஆய்வுகூட கருவிகளை ₹ 10.60 கோடி செலவில் (பிப்ரவரி 2015) வாங்கி விநியோகித்தார்.

அதிகார பகிர்வின்படி (அக்டோபர் 1994), மருத்துவ கருவிகள் மற்றும் இயந்திரங்கள் கொள்முதல் செய்வதில், ஒவ்வொரு முறையும் ₹ 10 இலட்சம் தொகைக்கு மிகாமல் செலவிடுவதற்கான நிதி அதிகாரம் DMEக்கு உள்ளது. ₹ 10 இலட்சம் தொகைக்கு மேற்பட்டு, ஆனால் ₹ 50 இலட்சம் தொகைக்குள் உள்ள கொள்முதலுக்கான அதிகாரம் மத்திய கொள்முதல் குழு/உயர் அதிகாரக் குழுவிற்கு உள்ளது. ₹ 50 இலட்சம் தொகைக்கு மேற்பட்ட கொள்முதலுக்கு தமிழ்நாடு அரசு ஒப்புதல் அளிக்க வேண்டும். கருவிகள் மற்றும் மருந்துகள் கொள்முதலின் போது, கொள்முதல் அளவை தீர்மானிப்பதற்கு முன் மருத்துவ கல்லூரி மருத்துவமனைகளிலிருந்து (மருத்துவமனை) தேவையின் அளவை கோரிப் பெறுவது DME மேற்கொண்ட வழக்கமான நடைமுறை ஆகும்.

ஸ்வீடனில் தயாரிக்கப்படும் விரைவு சோதனை கருவிகளான (i) இரத்த குளுகோஸ் பகுப்பாய்வு கருவி, (ii) HbA1c பகுப்பாய்வு கருவி, (iii) சிறுநீர் கருப்புரத பகுப்பாய்வு கருவி, (iv) இரத்த புரத மானி மற்றும் (v) இரத்த வெள்ளை அணு பகுப்பாய்வு கருவி ஆகியவற்றை இறக்குமதி செய்யும் ஹைதராபாத்தை சார்ந்த ஒரு நிறுவனத்துடன் தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம்[11] (Tamil Nadu Medical Services Corporation - TNMSC), நவம்பர் 2014ல், ஒரு விலை ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டது. இதனைத் தொடர்ந்து, தேவையின் அடிப்படையிலும் உள்ள நிதி அளவுக்கு உட்பட்டும் இந்த மருத்துவ கருவிகளை கொள்முதல் செய்து கொள்ளுமாறு அனைத்து மருத்துவமனைகளுக்கும் DME தெரிவித்தார் (ஜனவரி 2015); அதே சமயத்தில், தானியங்கி/பகுதி அளவு தானியங்கி பகுப்பாய்வு கருவிகளை (**காட்சிப்படம் 3.4**) உடைய மருத்துவமனைகள் தேவையின் அடிப்படையில் மட்டுமே தங்கள் கூடுதல் தேவைக்கான கொள்முதலை செய்ய வேண்டும் எனவும் எச்சரித்தார்.

காட்சிப்படம் 3.4: மருத்துவ உயிர்வேதியியல் ஆய்வுக்கூட கருவிகள் (எடுத்துக்காட்டு)

விரைவு சோதனை கருவிகள் என்பவை, இயக்க செலவு அதிகம் கொண்ட, உயிர் வேதியியல் சோதனை முடிவுகளை விரைவாக பெறுவதற்கு பயன்படும், எடுத்துச்செல்லக் கூடிய கருவிகள் ஆகும். ஒவ்வொரு வகையான சோதனைக்கும் தனி கருவி தேவை.

முழு அளவு/பகுதி அளவு தானியங்கி பகுப்பாய்வு கருவிகள் என்பவை, ஆய்வகங்களில் பொருத்தப்படுபவை. ஒன்றிற்கு மேற்பட்ட உயிர் வேதியியல் சோதனைகளை ஒரே நேரத்தில் செய்யக்கூடியவை. இயக்க செலவு குறைவாகவும் சோதிக்கும் அளவு அதிகமாகவும் உடையவை. இதை இந்திய மருத்துவ குழுமம் மருத்துவ கல்லூரி மருத்துவமனைகள் அனைத்திலும் உள்ள உயிர் வேதியியல் ஆய்வுக்கூடங்களுக்கு கட்டாயமாக்கியுள்ளது.

---

[11] மாநிலத்தில் உள்ள அரசு மருத்துவமனைகளுக்கு மருந்துகள் மற்றும் கருவிகளை கொள்முதல் செய்யும் முகமையாக TNMSC செயல்படுகிறது.

மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர், அத்துறையின் செயலர் மற்றும் DME ஆகியோரால் பிப்ரவரி 2015ல் ஒரு கள ஆய்வு நடத்தப்பட்டது. களஆய்விற்கு பிறகு *"டெங்கு, H1N1 மற்றும் எபோலா ஆகிய தொற்றுநோய்கள் பரவும் பருவத்தின்போது, காலதாமதத்தை தடுக்கும் பொருட்டு கொள்முதல் ஆணை இயக்குநரக நிலையில் வழங்கப்பட வேண்டும்"* என DME உத்தரவிட்டார். விரைவு சோதனை கருவிகளுக்கான தேவை பற்றி எந்த மருத்துவமனையும் தெரிவிக்காத போதிலும், *"நோயாளிகளுக்கு பயனுள்ள மற்றும் தடுப்பு சிகிச்சைக்காக"* விரைவு சோதனை கருவிகளின் *"தேவை அதிகமாக உள்ளது"* என்ற குறிப்பை DME பதிவு செய்தார் (6 பிப்ரவரி 2015) என்பதை தணிக்கை கண்டது. ₹ 10.60 கோடி மதிப்புள்ள 235[12] *ஹீமோக்யூ* (Hemocue) விரைவு சோதனை கருவிகளுக்கான கொள்முதல் ஆணை அதே நாளில் வழங்கப்பட்டது. அனைத்து 19 மருத்துவமனைகளுக்கும் விற்பனையாளர் கருவிகளை வழங்கினார் (பிப்ரவரி 2015). அந்த 19 மருத்துவமனைகளுள் தொடர்பற்ற மாதிரி முறையில் (random selection) தேர்ந்தெடுக்கப்பட்ட (i) அரசு கீழ்ப்பாக்கம் மருத்துவ கல்லூரி மருத்துவமனை, சென்னை, (ii) அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவ கல்லூரி மருத்துவமனை, சேலம், (iii) அரசு இராஜாஜி மருத்துவ கல்லூரி மருத்துவமனை, மதுரை, (iv) அரசு தர்மபுரி மருத்துவ கல்லூரி மருத்துவமனை, (v) அரசு தேனி மருத்துவ கல்லூரி மருத்துவமனை, (vi) திருநெல்வேலி மருத்துவ கல்லூரி மருத்துவமனை மற்றும் (vii) அரசு ஸ்டான்லி மருத்துவமனை, சென்னை ஆகிய ஏழு மருத்துவமனைகளில் செய்யப்பட்ட சோதனை ஆய்வு, ஜூன் 2018 நிலையில் மூன்றாண்டுகளுக்கு மேல் கடந்த பின்னரும் அந்த கருவிகள் பயன்படுத்தப்படவில்லை என்பதை வெளிப்படுத்தியது. சேலம், அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவமனையில் விரைவு சோதனை கருவி பயன்படுத்தப்படாத நிலையை **காட்சிப்படம் 3.5** காட்டுகிறது.

காட்சிப்படம் 3.5: பயன்படுத்தாமல் வைக்கப்பட்டிருந்த கருவிகள்

சேலம் மருத்துவமனையில் திறக்கப்படாத சோதனை பொதியுறை

(மே 2018ல் நடத்தப்பட்ட கூட்டுக் கள ஆய்வு)

சேலம் மருத்துவமனையில் திறக்கப்படாத கருவிகள் அடங்கிய பெட்டிகள்

(மே 2018ல் நடத்தப்பட்ட கூட்டுக் கள ஆய்வு)

தணிக்கை பின்வருவனவற்றை கண்டறிந்தது:

---

12 ₹ 4.51 இலட்சம் விலை கொண்ட ஒரு தொகுதியில் (set) ஐந்து சோதனைகளுக்கான கருவிகள் இருக்கும்; 9 மருத்துவமனைகளுக்கு தலா 15 தொகுதிகளும் 10 மருத்துவமனைகளுக்கு தலா 10 தொகுதிகளும் வழங்கப்பட்டன.

(i) விரைவு சோதனை கருவிகளை வாங்குவது என்ற முடிவு, நிறுவப்பட்ட நடைமுறை மற்றும் DME தாமே ஜனவரி 2015ல் அளித்த உத்தரவு ஆகியவற்றிலிருந்து ஒரு தெளிவான பிறழ்வு ஆகும். தொடர்புடைய மருத்துவமனைகளின் தலைவர்கள் தேவைப்பாட்டினை மதிப்பிடுதல், கொள்முதலின் நன்மைகளை நிதி ஒதுக்கீட்டு நிலையுடன் உரிய முறையில் ஒப்பிட்டு அரசு அளிக்கும் நிர்வாக ஒப்புதல் மற்றும் நிதி ஒதுக்கீட்டை பெறுதல் என்ற நிறுவப்பட்ட நடைமுறைகளை DME பின்பற்றவில்லை. மாதிரி மருத்துவமனைகளுள் எதுவும் இந்த கருவிகள் வேண்டும் என கோரவில்லை. மருத்துவமனைகளில் தானியங்கி / பகுதியளவு தானியங்கி பகுப்பாய்வு கருவிகள் இருப்பதை புறக்கணித்து விரைவு சோதனை கருவிகள் கொள்முதலுக்கான முடிவு எடுக்கப்பட்டது என்பதை தணிக்கை கண்டறிந்தது. இரத்தப் பரிசோதனைகள் செய்வதில் அன்றாட தேவைகளையும் கொள்ளை நோய்கள் ஏற்படுவதால் உருவாகும் கூடுதல் தேவைகளையும் கையாளுதற்கேற்ப மேலும் அதிக திறன் கொண்ட தானியங்கி / பகுதியளவு தானியங்கி பகுப்பாய்வு கருவிகள் மாதிரி மருத்துவமனைகள் அனைத்திலும் இருந்தன என்பது சேலம் மற்றும் தர்மபுரி மருத்துவமனைகளில் செய்யப்பட்ட இரத்த பரிசோதனைகள் தொடர்பான தரவுகளிலிருந்து தெரிகிறது என்பதை தணிக்கை கண்டறிந்தது (**இணைப்பு 3.5**).

(ii) கொள்முதலுக்கான ஒப்புதல் ₹ 10 இலட்சம் வரை அளிப்பதற்கு மட்டுமே DMEக்கு நிதி அதிகாரம் அளிக்கப்பட்டிருந்தாலும், ₹ 10.60 கோடி மதிப்புள்ள கருவிகளின் கொள்முதலுக்கு ஒப்புதல் வழங்கியதன் மூலம் அவர் தனக்கு அளிக்கப்பட்ட நிதி அதிகாரத்தை மீறினார்.

(iii) *"டெங்கு, H1N1 மற்றும் இபோலா ஆகிய தொற்றுநோய்கள் பரவும் பருவத்தின்போது காலதாமதத்தை தடுக்கும் பொருட்டு"* என்ற காரணத்தை காட்டி DME உரிய நடைமுறையை பின்பற்றாமல் கருவிகளை வழங்குவதற்கான உத்தரவை அளித்தார். முன்னதாக (2014), தொற்றாத நோய்களை கண்டறியும் பொருட்டு இக்கருவிகளை வாங்க தமிழ்நாடு நலவாழ்வு சங்கம் திட்டமிட்டது. டெங்கு, H1N1 மற்றும் இபோலா ஆகிய தொற்றுநோய்களுக்கு WHOவின் சிகிச்சை முறைகளில் கூறப்பட்ட சோதனைகளுக்கு எதிராக, கொள்முதல் செய்யப்பட்ட ஐந்து வகையான கருவிகளில் நான்கு வகை கருவிகள் தொற்றுநோய்களை கண்டறிவதுடன் தொடர்புடையவை அல்ல என்பதையும் மீதமுள்ள ஒரு கருவியும் நோய்த்தொற்றை அறிய மட்டுமே உதவும் என்பதையும் அரசின் மறுமொழியும் (செப்டம்பர் 2018) உறுதிப்படுத்தியது. இவ்வாறு, உரிய நடைமுறையை பின்பற்றாமல் விரைவு சோதனை கருவிகளை அவசரமாக அதிக அளவில் கொள்முதல் செய்வதற்கு DME முன்வைத்த காரணம் நியாயமற்றது.

(iv) மேற்படி கொள்முதலுக்கு *"மருந்துகள் மற்றும் சிகிச்சை நடைமுறை மீதான செலவை குறைப்பது"* என்ற மற்றொரு காரணத்தையும் DME அளித்தார். எனினும், மருத்துவமனைகளில் ஏற்கெனவே உள்ள தானியங்கி / பகுதியளவு தானியங்கி பகுப்பாய்வு கருவிகளை கொண்டு சோதனை செய்வதுடன் ஒப்பிடும்போது, விரைவு சோதனை கருவிகளை கொண்டு சோதனை செய்வதில் பயன்படும் பொருட்கள் (consumables) மீதான தொடர் செலவு மிக அதிகம் என சோதனை ஆய்வு செய்யப்பட்ட மருத்துவமனைகளின் தலைவர்கள் தெரிவித்தனர் (மே 2018).

(v) மேலும், சோதனை ஆய்வு செய்த மருத்துவமனைகளில் கொள்முதல் செய்யப்பட்ட கருவிகள் மூன்று ஆண்டுகளுக்கும் மேல் பயன்படுத்தப்படாமல் இருந்ததால், அவற்றின் மூன்றாண்டு உத்தரவாதம் பொருளற்றதாக ஆனது.

இவ்வாறு, தேவையை மதிப்பிடுவது என்ற நிறுவப்பட்ட நடைமுறையை மீறியும், உரிய கவனமின்றியும், அரசின் ஒப்புதலைப் பெறாமலும், விரைவு சோதனை கருவிகளை கொள்முதல் செய்வதென்ற DMEன் முடிவின் காரணமாக, ஏழு மாதிரி மருத்துவமனைகளில் ₹ 4.29 கோடி தவிர்த்திருக்கக்கூடிய செலவினம் ஏற்பட்டது; அது, ₹ 10.60 கோடி செலவில் செய்யப்பட்ட மொத்த கொள்முதலையும் கேள்விக்குள்ளாக்கியது. இது குறித்து தேவையான விசாரணையை நடத்தி, தொடர்புடைய நபர்களின் மீது இழப்பு மற்றும் நியாயமற்ற கொள்முதலுக்கான பொறுப்புடைமையை அரசு நிர்ணயிக்க வேண்டும்.

அரசு தனது மறுமொழியில் (செப்டம்பர் 2018), விரைவு சோதனை கருவிகளின் தேவையை மதிப்பிடுவதில் DMEயின் முடிவில் பிழை இருந்தது எனவும், மருத்துவ முகாம்கள் மற்றும் கள/நடமாடும் மருத்துவ அலகுகளில் அக்கருவிகளை பயன்படுத்துவதோடுகூட, மருத்துவமனைகளிடையே மற்றும்/அல்லது பிற மாவட்ட மருத்துவமனைகளுள் தேவைப்படும் இடங்களுக்கு அவற்றை மாற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தது. எனினும், (i) நோயாளி அளவில் சிகிச்சை வழங்குவதில் மேன்மைகளை கொண்ட, சிகிச்சை நிலை சோதனை (Point of Care Testing) என்பது வேகமாக வளர்ந்து வரும் தொழில்நுட்பம் (ii) கொள்முதல் செய்யப்பட்ட கருவிகள் நல்ல தரமுள்ளவை மற்றும் (iii) விலை ஒப்பந்தத்தை TNMSC ஏற்கெனவே நிர்ணயித்துள்ளதால், கருவிகளை கொள்முதல் செய்ய DME அரசின் அனுமதி பெற வேண்டிய தேவையில்லை என்பவற்றை கூறி அரசு எதிர்வாதம் செய்தது.

அரசின் எதிர்வாதங்கள் பின்வரும் காரணங்களினால் ஏற்கத்தக்கதல்ல:
(i) பின்பற்றப்பட்ட தொழில்நுட்பம் குறித்தோ கொள்முதல் செய்யப்பட்ட கருவிகளின் தரம் குறித்தோ தணிக்கை கேள்வி எழுப்பவில்லை. மாறாக, கருவிகளின் கொள்முதலில் தேவையை மதிப்பிடும் முறையையும் தானியங்கி / ஓரளவு தானியங்கி பகுப்பாய்வுக் கருவிகள் உள்ள மருத்துவமனைகள் தேவையின் அடிப்படையில் மட்டுமே மேற்கொண்டு கொள்முதல் செய்யவேண்டும் என்ற உத்தரவும் புறக்கணிக்கப்பட்டன என்பதுதான் சுட்டிக்காட்டப்பட்டது.
(ii) கொள்முதலில் DMEன் நிதி அதிகாரம் ₹ 10 இலட்சம் என்பதால், ₹ 10 கோடி மதிப்புக்கு மேல்உள்ள இந்த கொள்முதலுக்கு அரசின் ஒப்புதலை பெற்றிருக்க வேண்டும். DMEன் நிதி அதிகார அளவை மீறிய பிற கொள்முதல் நேர்வுகளில் அரசின் ஒப்புதல் பெறப்பட்டது என்பது காணப்பட்டது.

மேலும், கொள்முதல் செய்யப்பட்ட மருத்துவ கருவிகள் பயன்படுத்தப்படாமல் இருப்பது, அவற்றின் தேவையின்மையை காட்டுகிறது; கொள்முதல் செய்யப்பட்ட விரைவு சோதனை கருவிகளை தேவையான இடங்களுக்கு இடமாற்றம் செய்வது என்பது அரசின் பின்யோசனை என்றாகி, தணிக்கையின் வாதத்தை வலுப்படுத்துகிறது.

உயர்கல்வித் துறை

3.2.2 குறைபாடுடைய திட்டமிடுதல் காரணமாக ஏற்பட்ட பயனற்ற செலவு

புதிய விடுதிக்கான தேவையை மதிப்பீடு செய்ய சென்னை பல்கலைக்கழகம் தவறியதால், புதிதாக கட்டப்பட்ட விடுதி கட்டடத்தை மூன்றாண்டுகளுக்கும் மேலாக பயன்படுத்தாத நிலையும் அதன் விளைவாக ₹ 10.10 கோடி பயனற்ற செலவும் ஏற்பட்டன.

தமிழ்நாடு உயர்கல்வி துறையின் கட்டுப்பாட்டில் 13 அரசு பல்கலைக்கழகங்கள் இயங்கி வருகின்றன. 2016-18 காலகட்டத்தில் ஆறு பல்கலைக்கழகங்கள் தணிக்கை செய்யப்பட்டன. பிப்ரவரி மற்றும் மார்ச் 2018ல் உயர் கல்வித்துறை மற்றும் சென்னை பல்கலைக்கழகத்தில் 2010-17 வரையிலான பதிவுருக்களை கூர்ந்தாய்வு செய்வதில் பல்கலைகழகத்தில் பின்வரும் குறைபாட்டின் விளைவாக பயனற்ற செலவினம் ஏற்பட்டது.

சென்னை பல்கலைக்கழகம் (பல்கலைக்கழகம்) தனது நான்கு வளாகங்களிலும்[13] பயின்றுவரும் வெளிநாட்டு மாணவர்களுக்காக சென்னை, தரமணியில் உள்ள வளாகத்தில் 193 அறைகள் கொண்ட ஒரு பன்னாட்டு மாணவர் விடுதியை கட்டுவதற்கு அக்டோபர் 2010ல் திட்டமிட்டது. அத்திட்டத்திற்கு பல்கலைக்கழகத்தின் கட்டடக் குழுவும் மற்றும் ஆட்சிக்குழுவும் பிப்ரவரி 2011ல் ஒப்புதல் அளித்தன. பல்கலைக்கழகம் அப்பணியை ஏப்ரல் 2012ல் ஒரு ஒப்பந்ததாரருக்கு டெண்டர் மூலம் வழங்கியது. கட்டடம் ₹ 10.10 கோடி[14] செலவில் ஏப்ரல் 2015ல் கட்டி முடிக்கப்பட்டது; ஆனால், விடுதிக் கட்டடம் முடிவடைந்தும், வளாகத்தினுள் தங்குவதற்கு வெளிநாட்டு மாணவர்களுக்கு தேவை இல்லாத காரணத்தால், அக்கட்டடம் பயன்படுத்தப்படவில்லை (ஏப்ரல் 2018).

(i) விடுதியை கட்ட திட்டமிட்டதற்கு முந்தைய மூன்று கல்வியாண்டுகளின்போது (2007-08 முதல் 2009-10 வரை), பல்கலைக்கழகத்தில் சேர்ந்திருந்த பன்னாட்டு மாணவர்களின் எண்ணிக்கை 31 முதல் 46 வரை இருந்தது. அதற்கு பிந்தைய 2010-11 முதல் 2014-15 வரையிலான கல்வியாண்டுகளில், அந்த எண்ணிக்கை 47 முதல் 82 வரையில் இருந்தது. இந்த காலகட்டத்தில், விடுதி வசதிகளை பயன்படுத்திய மாணவர்களின் எண்ணிக்கை 4 முதல் 14 வரை மட்டுமே ஆகும். ஆனால், பன்னாட்டு மாணவர்களின் எண்ணிக்கையையும் விடுதியில் இடம் கோரும் பன்னாட்டு மாணவர்கள் எண்ணிக்கை மிகவும் குறைந்து வரும் போக்கையும் கருத்தில் கொள்ள பல்கலைக்கழகம் தவறியது. மேலும், பல்கலைக்கழகம் சென்னையில் மேலும் மூன்று வளாகங்களை கொண்டிருந்ததால், பன்னாட்டு மாணவர்கள் அனைவரும் தரமணி வளாகத்தில் நடத்தப்பட்ட படிப்புப் பிரிவுகளில் சேர்ந்திருக்கவில்லை என்பதும் கண்டறியப்பட்டது. 2009-18 காலகட்டத்தில், விடுதிகளில் தங்கியிருந்த சிறிய எண்ணிக்கையிலான வெளிநாட்டு மாணவர்கள் கூட, தரமணி வளாகத்திலிருந்து 12 கிமீ தொலைவில் உள்ள சேப்பாக்கம் வளாகத்தில் தங்குவதையே விரும்பினர் என்பதும் காணப்பட்டது. தரமணியில்

---

13 சேப்பாக்கம், கிண்டி, மெரினா மற்றும் தரமணி

14 கட்டுமான பணிகள்: ₹ 8,24,74,319; குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதார பணிகள்: ₹ 86,46,500; மின் பணிகள்: ₹ 98,71,708

விடுதியை அமைக்கும் திட்டம் அடிப்படையிலேயே தவறானது என்பதை இது சுட்டிக்காட்டியது. வெளிநாட்டு மாணவர்களின் இடவசதி தேவையை மதிப்பிட கணக்கெடுப்பு எதுவும் நடத்தப்படவில்லை என்பதை பல்கலைக்கழகம் ஒப்புக் கொண்டது (ஏப்ரல் 2018). கட்டடம் முடிக்கப்பட்ட பின்னரே, பல்கலைக்கழகத்தின் கட்டடக் குழு கட்டடத்தின் தேவையின்மையை உணர்ந்தது (ஜூன் 2013); ஆனால், அந்த நிலையில் எதுவும் செய்ய இயலவில்லை.

(ii) அதே நேரத்தில், அதே வளாகத்தில் (அ) 246 அறைகள் கொண்ட முதுநிலை பட்டப்படிப்பு மாணவர்கள் விடுதி மற்றும் (ஆ) 143 அறைகள் கொண்ட ஆராய்ச்சி மாணவர்கள் விடுதி ஆகிய வேறு இரண்டு விடுதி கட்டடங்களை பல்கலைக்கழகம் ₹ 21.27 கோடி செலவில் கட்டியது (ஏப்ரல் 2015) என்பதும் கண்டறியப்பட்டது. ஏப்ரல் 2015ல் கட்டுமானம் முடிவுற்ற பிறகு, செப்டம்பர் 2015 முதல் ஜூன் 2017 வரையிலான காலகட்டத்தில் சராசரி குடியிருப்பு வீதம் 45 சதவீதம் என்ற அளவில் இந்த இரண்டு விடுதிகளும் செயல்பட்டன. தரமணி வளாகத்தில் விடுதி வசதியின் தேவை பற்றிய ஒரு விரிவான மதிப்பீட்டை பல்கலைக்கழகம் நடத்தியிருந்தால், இந்த இரண்டு விடுதிகளுள் ஏதாவது ஒன்றில் பன்னாட்டு மாணவர்களுக்கு அறைகளை ஒதுக்குவதன் மூலம், பன்னாட்டு மாணவர்களுக்கான விடுதி கட்டுவதை முற்றிலுமாக தவிர்ப்பது இயன்றதாக இருந்திருக்கும்.

(iii) பாதுகாப்பு ஏற்பாடுகள் இருந்தும், பயன்படுத்தப்படாத விடுதி கட்டடம் சமூக விரோதிகளின் கவனத்தை ஈர்த்து, ₹ 22.30 இலட்சம் மதிப்புள்ள மின்சார மற்றும் சுகாதார பொருட்கள் களவு போயின (டிசம்பர் 2015 மற்றும் செப்டம்பர் 2016) என்பதையும் தணிக்கை கண்டறிந்தது.

இவ்வாறு, விடுதியின் தேவையை மதிப்பிடாமல் அதனை கட்டியதாலும், புதிய கட்டடத்தை மூன்றாண்டுகளுக்கும் மேலாக பயன்படுத்தாத நிலையும் அதன் விளைவாக ₹ 10.10 கோடி பயனற்ற செலவும் ஏற்பட்டன.

அரசு தனது மறுமொழியில் (ஆகஸ்ட் 2018), பன்னாட்டு மாணவர்கள் (2010-11ல் சேர்ந்தவர்கள்) சமையலறை மற்றும் கழிப்பறை வசதியுடன் கூடிய தனி அறைகள் கோரியதன் அடிப்படையிலும், அத்தகைய வசதிகளை வழங்குவதன் மூலம் மேலும் பன்னாட்டு மாணவர்களை ஈர்க்கும் நோக்கத்துடனும், விடுதி கட்டப்பட்டது என தெரிவித்தது. வெளிப்புற மற்றும் அறியப்படாத காரணங்களால் போதிய எண்ணிக்கையிலான பன்னாட்டு மாணவர்களை சேர்க்க இயலவில்லை என்பதாலும், சேப்பாக்கம் வளாகத்தில் தற்போதுள்ள மாணவிகள் விடுதியை சீர்படுத்த வேண்டியுள்ளது என்பதாலும், எண்ணிக்கை உயர்ந்து வரும் பல்கலைக்கழக மாணவிகளுக்காக பன்னாட்டு மாணவர் விடுதி முழுவதையும் பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது என அரசு மேலும் தெரிவித்தது. வெளிநாட்டு மாணவர்களின் தங்குமிட தேவையை அறிந்து மதிப்பிடுவதில் இருந்த குறைபாடுகளை பற்றி அரசின் மறுமொழி ஏதும் கூறாததால் அது ஏற்கத்தக்கதல்ல. மேலும், சேப்பாக்கம் மற்றும் தரமணி வளாக விடுதிகளுக்கிடையே ஒரு வழி பயண தூரம் 12 கிமீ என்பதால் சேப்பாக்கம் வளாக விடுதி மாணவிகளை தரமணி வளாக விடுதிக்கு இடம் மாற்றும் திட்டத்தின் சாத்தியத்தன்மை கேள்விக்குரியதாக உள்ளது.

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை

3.2.3 மருந்துகளின் முறையற்ற கொள்முதலால் ஏற்பட்ட தவிர்த்திருக்கக்கூடிய செலவினம்

ESI மருத்துவமனைகளும் மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குனரும் (ESI) இரண்டு ஆயுர்வேத மருந்துகளை முறையற்ற வகையில் கொள்முதல் செய்ததால் ₹ 2.67 கோடி தவிர்த்திருக்கக்கூடிய செலவு ஏற்பட்டது.

தொழிலாளர் அரசு ஈட்டுறுதி (Employees' State Insurance - ESI) திட்ட பயனாளிகளுக்காக தனியாக எட்டு மருத்துவமனைகளையும் 216 மருந்தகங்களையும் தமிழ்நாடு அரசு நடத்தி வருகிறது. ESI மருத்துவ அமைப்புகளுக்கு[15] மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் (ESI) (Director of Medical and Rural Health Services - DMRHS (ESI)) தலைமை வகிக்கிறார். நிறுவப்பட்ட நடைமுறைகளின்படி, புதுதில்லி, ESI கழகத்துடன் நடப்பிலுள்ள விலை விகித ஒப்பந்தத்தை (Running Rate Contract - (RRC)) கொண்டுள்ள நிறுவனங்களிடமிருந்து மருந்துகளை ESI மருத்துவ அமைப்புகள் கொள்முதல் செய்கின்றன. RRC விலைவிகிதத்தை விட குறைவாக இருந்தால், தமிழ்நாடு அரசின் பொதுத்துறை நிறுவனமான தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்திடமிருந்தும் (Tamil Nadu Medical Services Corporation - (TNMSC)) மருந்துகள் கொள்முதல் செய்யப்படுகின்றன. TNMSCன் மேலாண்மை இயக்குநர் தலைமையிலான ஒரு கொள்முதல் குழு மருந்துகளின் தேவைப்பட்டியல்களை ஆய்வு செய்து மருந்துகளின் கொள்முதலை ஒருங்கிணைக்கிறது. ஆயுர்வேத மருந்துகளை பொறுத்தவரை, தமிழ்நாடு மூலிகைப் பண்ணை மற்றும் மூலிகை மருந்துக் கழகத்தை (TN Medicinal Plant Farms and Herbal Medicine Corporation Limited - டாம்ப்கால் நிறுவனம்) கொள்முதல் முகமையாக தமிழ்நாடு அரசு நியமித்தது (டிசம்பர் 2013). தேவைப்படும் மருந்து RRC/TNMSC/டாம்ப்கால் நிறுவனம் ஆகியவற்றில் இல்லையெனில், ஒவ்வொரு மருத்துவ நிறுவனத்திலும் உள்ள உள்ளூர் கொள்முதல் குழுவின் (Local Purchase Committee) ஒப்புதலுடன், அதிகபட்சமாக ₹ 1 இலட்சம் வரை சந்தையில் கொள்முதல் செய்வதை, 'ESI கழகத்தின் கொள்முதல் நடைமுறைக் கையேடு' அனுமதிக்கிறது.

2013-17 காலகட்டத்தில், DMRHS (ESI) ₹ 4.55 கோடி மதிப்புள்ள ஆயுர்வேத மருந்துகளை உள்ளூர் கொள்முதல் குழுவின் மூலம் கொள்முதல் செய்தார். DMRHS (ESI) அலுவலகத்தில் 2013-17 காலகட்டத்திற்குரிய பதிவுருக்களின் மீது செய்யப்பட்ட சோதனை ஆய்வு (ஏப்ரல் 2018), நிறுவப்பட்ட நடைமுறைகளை மீறி, DMRHS (ESI) மற்றும் மூன்று மருத்துவமனைகள் **அட்டவணை 3.5**ல் கூறப்பட்டுள்ளபடி இரண்டு ஆயுர்வேத மருந்துகளை பெருமளவில் உள்ளூர் கொள்முதல் செய்ததை வெளிப்படுத்தியது.

---

[15] மருத்துவ கல்வி இயக்குநரின் கீழ் வரும் கோயம்புத்தூர், ESI மருத்துவ கல்லூரி மருத்துவமனை நீங்கலாக.

அட்டவணை 3.5: ஆயுர்வேத மருந்துகளின் உள்ளூர் கொள்முதல்

மருந்துக்களின் பெயர்	கொள்முதல் செய்யப்பட்ட காலம்	கொள்முதல் செய்த எண்ணிக்கை	விலை (₹ கோடியில்)	குறிப்புகள்
(1)	(2)	(3)	(4)	(5)
ரப்-ன்-ரன் (Rub N Run) எண்ணெய்	2013-14	60,000	1.21	DMRHS (ESI) கொள்முதல் செய்து தொகையை வழங்கினார்.
	2014-15	9,500	0.18	
	2015-16	50,600	1.07	மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருச்சியில் உள்ள ESI மருத்துவமனைகள் கொள்முதல் செய்தன. DMRHS (ESI) தொகையை வழங்கினார்.
	2016-17	7,500	0.15	
லீவர் டானிக் (Lever tonic)	2013-14	55,000	0.98	DMRHS (ESI) கொள்முதல் செய்து தொகையை வழங்கினார்.
	2015-16	22,000	0.40	மதுரை மற்றும் திருச்சியிலுள்ள ESI மருத்துவமனைகள் கொள்முதல் செய்தன. DMRHS (ESI) தொகையை வழங்கினார்.
	2016-17	7,500	0.14	
மொத்தம்			**4.13**	

(ஆதாரம்: DMRHS (ESI)-இடமிருந்து பெறப்பட்ட தரவுகள்)

பின்வருவனவற்றை தணிக்கை கண்டறிந்தது:

- மருந்து கொள்முதல் குழு *Rub N Run* எண்ணெய் கொள்முதல் குறித்து சீராய்வு செய்யும் போது (டிசம்பர் 2010), அம்மருந்தின் திறன் மற்றும் பயன்பாடு பற்றி அறிவது என முடிவு செய்தது. நான்கு நிறுவனங்களிடமிருந்து சாதகமான பயன்பாட்டு அறிக்கையை பெற்றபின், அக்குழு மீண்டும் அப்பொருள் பற்றி விவாதித்து (பிப்ரவரி 2011), அம்மருந்து RRCயில் சேர்க்கப்படவில்லை என்பதால், அதனை கொள்முதல் செய்ய வேண்டாம் என முடிவெடுத்தது. எனினும், DMRHS (ESI) 2011-12 மற்றும் 2012-13ல் பல்வேறு மருத்துவமனைகளுக்காக *Rub N Run* எண்ணெயை குறைந்த அளவில் கொள்முதல் செய்தார்.

- 2013-14 மற்றும் 2014-15 ஆண்டுகளில், RRC, TNMSC மற்றும் டாம்ப்கால் நிறுவனம் தொடர்புடைய கொள்முதலுக்கான நிறுவப்பட்ட கட்டமைப்பை மீறி, DMRHS (ESI) ₹ 1.39 கோடி செலவில் 69,500 பாட்டில்கள் *Rub N Run* எண்ணெயை கொள்முதல் செய்தார். இதனை தணிக்கை சுட்டிக்காட்டியபோது (ஜூன் 2015), மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறைக்கான அரசு முதன்மை செயலாளர் அக்கொள்முதலுக்கு ஒப்புதல் அளித்தார் என DMRHS (ESI) தெரிவித்தார் (ஜூலை 2016). எனினும், நடப்பில் உள்ள விதிகளை பின்பற்றி தேவையின் அடிப்படையில் வாங்க வேண்டும் என்ற எச்சரிக்கையுடன், முதன்மைச் செயலாளர் *Rub N Run* எண்ணெய் கொள்முதலை அனுமதிக்கும் கடிதத்தையே அனுப்பியிருந்தார் என்பதே உண்மை ஆகும். *Rub N Run* எண்ணெயை RRC பட்டியலில் சேர்க்க நடவடிக்கை எடுக்குமாறும் அறிவுறுத்தி இருந்தார்; ஆனால், அவ்வாறான எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

- 2015-16 மற்றும் 2016-17 ஆண்டுகளில், மூன்று ESI மருத்துவமனைகளின் மருத்துவ கண்காணிப்பாளர்கள் *Rub N Run* எண்ணெய் கொள்முதல் செய்து, அதற்குரிய தொகையை செலுத்துவதற்கான ஒப்பளிப்பை DMRHS (ESI) வழங்கினார். ESI கழகத்தின் கொள்முதல் நடைமுறை நூலில் கூறப்பட்ட உள்ளூர் கொள்முதலுக்கான உச்சவரம்பு ₹ 1 இலட்சம் என இருக்கையில், 36 கொள்முதல் நேர்வுகளுள் 12 நேர்வுகளில் பட்டிகளின் மதிப்பு ₹ 3.89 இலட்சம் முதல் ₹ 19.43 இலட்சம் வரை இருந்தது. மதிப்பு கணக்கில், ₹ 1 இலட்சத்திற்கு மேற்பட்ட கொள்முதல்களின் மொத்த மதிப்பு ₹ 1.20 கோடி என இருந்தது. நடைமுறை நூலில் கூறப்பட்ட உள்ளூர் கொள்முதல் குழு எந்தவொரு நேர்விலும் அமைக்கப்படவில்லை.

- மேலும், கல்லீரல் பாதுகாப்பிற்குரிய மற்றொரு ஆயுர்வேத மருந்தான *Liver Tonic* 84,500 பாட்டில்கள் DMRHS (ESI) அதே வழங்குநரிடமிருந்து ₹ 1.52 கோடி செலவில் கொள்முதல் செய்தார் (2013-14 மற்றும் 2015-17); இது, RRC நிறுவனங்கள்/TNMSC/டாம்ப்கால் நிறுவனம் ஆகியவற்றிலிருந்து கொள்முதல் செய்வது என்று நிறுவப்பட்ட கொள்முதல் நடைமுறையிலிருந்து விலகிய செயலாகும்.

- கொள்முதல் தொடர்பான கோப்புகளை காணவில்லை என DMRHS (ESI) தணிக்கைக்கு தெரிவித்ததால் (ஜூன் 2018), 2013-15 காலகட்டத்தில் *Rub N Run* எண்ணெய் மற்றும் *Liver Tonic* ஆகியவற்றை மையப்படுத்தப்பட்ட முறையில் பெருமளவில் கொள்முதல் செய்ததற்கு வழிவகுத்த சூழ்நிலைகளை ஆழ்ந்து ஆய்வு செய்ய இயலவில்லை. ஆவணங்கள் மற்றும் கொள்முதல் நடைமுறைகளை சரிபார்க்க ஒரு சிறப்பு குழுவை தமிழ்நாடு அரசு அமைத்தது (ஜூன் 2017). இக்குழு ஆகஸ்ட் 2017ல் விசாரணைகளை மேற்கொண்டது; ஆனால், நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

Rub N Run எண்ணெய் மற்றும் *Liver Tonic* தனியுரிமை (proprietary) தயாரிப்புகள் ஆகும். மருத்துவ அலுவலர்கள் மற்றும் DMRHS (ESI) தணிக்கைக்கு அளித்த மறுமொழிகளின்படி (ஜூலை 2016 மற்றும் ஏப்ரல் 2018), *Rub N Run* எண்ணெய் மற்றும் *Liver Tonic*க்கு இணையான மருந்துகள் RRC பட்டியலிலும் டாம்ப்கால் நிறுவனத்திடமும் இருந்தன; இவ்விரண்டு மருந்துகளுக்கு மாற்றாக அவையே[16] அவ்வப்போது பரிந்துரைக்கப்பட்டன. RRC பட்டியல்/டாம்ப்கால் நிறுவனத்திடம் இருந்த இணையான மருந்துகளுடன் ஒப்பிட்டால், கொள்முதல் நடைமுறைகளை மீறி கொள்முதல் செய்யப்பட்ட *Rub N Run* எண்ணெய் மற்றும் *Liver Tonic* மிகவும் விலை உயர்ந்தவையாக இருந்தன என்பதை தணிக்கை கண்டறிந்தது. *Rub N Run* எண்ணெய் மற்றும் *Liver Tonic* ஆகியவற்றை கொள்முதல் செய்ததன் மூலம் ஏற்பட்ட தவிர்த்திருக்கக்கூடிய கூடுதல் செலவினம் ₹ 2.67 கோடி ஆகும் (**இணைப்பு 3.6**).

---

[16] *Rub N Run* எண்ணெய்க்கு இணையான மருந்தான Rhuvamin எண்ணெய் மற்றும் *Liver Tonic*க்கு இணையான மருந்தான *Livejon syrup* ஆகியன, RRCல் இருந்தன; *Rub N Run* எண்ணெய்க்கு இணையான மருந்தான பிண்ட தைலம் மற்றும் *Liver Tonic*க்கு இணையான மருந்தான *Liv* 2000 syrup, டாம்ப்கால் நிறுவனத்திடம் இருந்தன.

இதை சுட்டிக்காட்டியபோது, அரசு தனது மறுமொழியில் (டிசம்பர் 2019), கொள்முதலில் “நடைமுறை தவறுகள்” இருந்ததை ஒப்புக்கொண்டு, முன்னாள் DMRHS (ESI) உட்பட அதிகாரிகள் மீது ஒழுங்கு நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தது. மேலும், ஒப்பீடு செய்ய எடுத்துக் கொள்ளப்பட்ட மருந்துகளின் உள்ளீடுகள் வெவ்வேறானவை என்பதால் எந்த மருந்து சிறந்தது என முடிவுக்கு வர முடியாது என்றும் அரசு வாதிட்டது. இந்த மருந்துகள் ஒன்றுக்கொன்று மாற்றாக பரிந்துரை செய்யப்பட்டுள்ளதால், மருந்துகள் ஒப்பீடுக்கு அரசு அளித்த பதில் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. மேலும், துறையே இந்த மருந்துகளை இணையாக மருந்துகள் என கருதியது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

3.2.4 இந்திய தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையத்தின் முன் அனுமதியின்றி குழாய்கள் அமைத்ததால் ஏற்பட்ட தவிர்த்திருக்கக்கூடிய செலவினம்

இந்திய தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையத்தின் உரிய அனுமதியை பெறாமல் TWAD வாரியம் குழாய்கள் அமைத்ததனால் ₹ 2.42 கோடி தவிர்த்திருக்கக்கூடிய செலவினம் ஏற்பட்டது.

தமிழ்நாட்டில், சென்னை மாநகர பகுதிகளை தவிர, குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் வசதிகளை மேம்படுத்தும் பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் (TWAD வாரியம்) ஒப்படைக்கப்பட்டுள்ளது. TWAD வாரியம் ஒன்றுக்கு மேற்பட்ட உள்ள உள்ளாட்சி மன்றங்களில், கூட்டு குடிநீர் வழங்கல் திட்டம் உட்பட குடிநீர் வழங்கல் திட்டங்களை நகர்ப்புற மற்றும் ஊரகப் பகுதிகளில் செயல்படுத்தி பராமரித்து வருகிறது. 2017-18ல் TWAD வாரியத்தின் 26 கோட்டங்களில் தணிக்கை செய்யப்பட்டது. செயற் பொறியாளர், TWAD வாரியம், கோயம்புத்தூரில் பதிவுருக்களை கூர்ந்தாய்வு செய்ததில் (நவம்பர் மற்றும் டிசம்பர் 2017) பின்வருவனவற்றை வெளிப்படுத்தியது.

‘பில்லூர் நீர்த்தேக்கத்தை மூலமாகக் கொண்டு, பல்லடம் நகராட்சி, 23 பேரூராட்சிகள் மற்றும் கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களிலுள்ள 965 கிராமப்புற குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கலை அதிகரித்தல்’ எனும் பணிக்கு தமிழ்நாடு அரசு ₹ 224.92 கோடி ஒப்புதல் அளித்தது (ஆகஸ்ட் 2010). இத்திட்டத்தின் கீழ், 36.30 கிமீ நீளத்திற்கு தேசிய நெடுஞ்சாலை (NH) 67ஐ ஒட்டி தெளிவான நீர் கொண்டு செல்லும் குழாய்களை அமைக்க TWAD வாரியம் திட்டமிட்டது.

இந்திய தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையத்தின் (National Highways Authority of India - NHAI) நிலத்தில் குழாய்களை அமைப்பதற்கு, தேசிய நெடுஞ்சாலைகள் கட்டுப்பாடு (நிலம் மற்றும் போக்குவரத்து) சட்டம், 2002ன் பிரிவு 38ன் கீழ், TWAD வாரிய செயற்பொறியாளர், கரூரில் உள்ள NHAI திட்ட இயக்குநரின் அனுமதியை கோரினார் (ஏப்ரல் 2011).

சாலையின் நடுக்கோட்டிலிருந்து 15 மீட்டருக்குள் இருந்த பகுதியில் குழாய்களை அமைக்க TWAD வாரியம் திட்டமிட்டிருந்தது; அது, நடைமுறையில் இருந்த சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகத்தின் (Ministry of Road Transport and Highways - MORTH) அறிவுறுத்தல்களுக்கு எதிரானது என்பதால், TWAD வாரியத்தின் கருத்துருவை NHAI திருப்பி அனுப்பியது (ஜூன் 2012). இது குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலாளர் MORTHக்கு தெரிவித்ததை (ஆகஸ்ட் 2013) அடுத்து, ஒரு அரிதான நேர்வாக கருதி அனுமதிக்கான கோரிக்கையை மறுபரிசீலனை செய்யுமாறு NHAIயிடம் MORTH கோரியது (டிசம்பர் 2013). எனினும், கட்டாயமான அந்த அனுமதியை NHAI வழங்கவில்லை (ஜனவரி 2014).

இதற்கிடையில், ஜனவரி 2014ஐ பணியை முடிப்பதற்கான கெடுவுடன் கூடிய பணியை ₹ 152 கோடி தொகைக்கு TWAD வாரியம் வழங்கியது. ஒரு ஒப்பந்ததாரருடன் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டு (பிப்ரவரி 2012), மூல திட்டத்தின்படி, NHஐ ஒட்டி ₹ 26.40 இலட்சம் செலவில் 7.9 கிமீ நீளத்திற்கு குழாய்கள் NHAIயின் முன் அனுமதியின்றி அமைக்கப்பட்டன.

அனுமதியின்றி குழாய்களை அமைத்ததை NHAI ஆட்சேபித்து, அமைக்கப்பட்ட குழாய்களை உடனடியாக நீக்குமாறு TWAD வாரியத்திற்கு அறிவுறுத்தியது (பிப்ரவரி 2014). அதன்படி, ₹ 23.48 கோடி கூடுதல் செலவில் குழாய்களை புதிய வழித்தடத்தில் அமைக்க TWAD வாரியம் திட்டமிட்டது. NH 67ல் மூல வழித்தடத்தில் அமைக்கப்பட்ட குழாய்கள் (குழாய்களின் மதிப்பு அல்லாது, அவற்றை அமைத்ததற்கான செலவு மட்டும் ₹ 26.40 இலட்சம்) மீட்டெடுக்கப்பட்டன/சரி செய்யப்பட்டு, பணி தளத்தில் (site) அடுக்கி வைக்கப்பட்டிருந்த குழாய்களுடன் சேர்த்து புதிய வழித்தடத்திற்குரிய பணிதளத்திற்கு ₹ 2.16 கோடி[17] செலவில் கொண்டு செல்லப்பட்டன. புதிய வழித்தடத்திற்குரிய இடத்தில் மொத்த பணியும் டிசம்பர் 2015ல் முடிக்கப்பட்டது.

இதனை தணிக்கை சுட்டிக்காட்டியபோது, NHAIக்கு MORTH செய்த பரிந்துரையின் அடிப்படையில் குழாய் அமைக்கும் பணி தொடங்கப்பட்டதாக அரசு மறுமொழி அளித்தது (ஜூலை 2018).

TWAD வாரியத்தின் கோரிக்கையை மறுபரிசீலனை செய்யுமாறு NHAIக்கு MORTH செய்த பரிந்துரையின் அடிப்படையில் மட்டும் பணியை மேற்கொள்ள TWAD வாரிய செயற்பொறியாளருக்கு அதிகாரம் இல்லை என்பதால் அரசின் மறுமொழி ஏற்கத்தக்கதல்ல. பணியை மேற்கொள்ள தெளிவான ஒப்புதல் தேவை ஆகும். NHAIன் கட்டாயமான அனுமதியின்றி பணியை மேற்கொள்வது என்ற TWAD வாரியத்தின் அவசர முடிவு காரணமாக ₹ 2.42 கோடி தவிர்த்திருக்கக்கூடிய செலவு ஏற்பட்டது.

17 ஏற்கெனவே அமைக்கப்பட்ட குழாய்களை மீட்டெடுத்தல் மற்றும் போக்குவரத்து செலவு - ₹ 1.03 கோடி; NH67ஐ ஒட்டிய மூல வழித்தடம் அடுக்கப்பட்டிருந்த குழாய்களை எடுத்து செல்லும் செலவு - ₹ 0.67 கோடி; மீட்டெடுக்கப்பட்ட குழாய்களை பழுது பார்க்கும் செலவு - ₹ 0.46 கோடி.

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலன் மற்றும் பொதுப்பணி துறைகள்

3.2.5 உணவகங்கள் மற்றும் பொது அறைகள் கட்டுவதில் பயனற்ற செலவினம்

அடிப்படை வசதிகள் இல்லாமை, பொதுப்பணித் துறையிடமிருந்து நியாய வாடகை சான்றிதழ் பெறாமை ஆகிய காரணங்களால், ₹ 1.35 கோடி செலவில் கட்டப்பட்ட உணவகங்கள் மற்றும் பொது அறைகள் செங்கல்பட்டில் உள்ள செங்கல்பட்டு மருத்துவ கல்லூரியில் ஆறு ஆண்டுகளுக்கு மேலாகவும், சேலத்தில் உள்ள மோகன் குமாரமங்கலம் மருத்துவ கல்லூரியில் இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகவும் பயன்படுத்தப்படாமல் இருந்தன.

மார்ச் 2018 அன்றுள்ளவாறு, தமிழ்நாட்டில் 21 அரசு மருத்துவ கல்லூரிகள் இருந்தன, இவற்றுள் 2017-18ல் 10 மருத்துவ கல்லூரிக்ள் தணிக்கை செய்யப்பட்டன. செங்கல்பட்டு மருத்துவ கல்லூரி (Chengalpattu Medical College - CMC) மற்றும் மோகன் குமாரமங்கலம் மருத்துவ கல்லூரிகளில் (Mohan Kumaramangalam Medical College - MKMC) செய்த தணிக்கை பின்வருவனற்றை வெளிப்படுத்தியது.

ஆண்டுக்கு 100 மற்றும் அதற்கு மேற்பட்ட மாணவர்கள் சேர்க்கை இருக்கும் மருத்துவக் கல்லூரிகள் அனைத்திலும் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு தனித்தனியான பொது அறைகளும் ஒரு உணவகமும் இருக்க வேண்டும் என்பது இந்திய மருத்துவ கவுன்சிலின் (Medical Council of India - MCI) விதிமுறைகள் (ஏப்ரல் 1999) கூறுகின்றன. MCI விதிமுறையை பின்பற்றும் பொருட்டு, CMC மற்றும் MKMC ஆகியவற்றில் உணவகங்கள் மற்றும் பொது அறைகளை கட்டுவதற்காக முறையே அக்டோபர் 2008 மற்றும் டிசம்பர் 2014ல் நிர்வாக மற்றும் நிதி ஒப்புதலை தமிழ்நாடு அரசு வழங்கியது. கட்டுமான பணிகளை பொதுப்பணித்துறை மேற்கொண்டது. CMC மற்றும் MKMCல் பணிகளின் நிலை (ஆகஸ்ட் 2018) **அட்டவணை 3.6**ல் கொடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 3.6: CMC மற்றும் MKMCயிலுள்ள திட்டங்களின் நிலை

கல்லூரியின் பெயர்	ஒப்புதல் அளிக்கப்பட்ட மாதம்	கல்லூரியிடம் ஒப்படைக்கப்பட்ட மாதம்	இதுவரை செலவிடப்பட்ட தொகை (₹ இலட்சத்தில்)	நிலை
CMC	அக்டோபர் 2008	ஆகஸ்ட் 2018	44.90	இன்னும் செயல் படவில்லை
MKMC	டிசம்பர் 2014	டிசம்பர் 2015	89.84	
மொத்தம்			134.74	

(ஆதாரம்: தொடர்புடைய கல்லூரிகளிலிருந்து பெறப்பட்ட விவரங்கள்)

- கட்டடம் கட்டி முடிக்கப்பட்ட (structural completion) பிறகு (**காட்சிப்படம் 3.6**), CMC முதல்வர் கட்டடத்தை ஜூலை 2010ல் ஆய்வு செய்தபோது, அணுகுசாலை, பாத்திரம் துலக்கும் வசதி, குளிர் சாதன வசதி, மாணவர்களுக்கான பாதுகாப்பு பெட்டகம் ஆகியன இல்லாமை போன்ற பல்வேறு குறைபாடுகளை உள்ளதை கண்டறிந்தார். அவர்

பொதுப்பணித்துறைக்கு தொடர்ந்து நினைவூட்டிய போதிலும் (ஏப்ரல் 2013 முதல் ஜனவரி 2015 வரை), அக்குறைபாடுகளை பொதுப்பணித் துறை சரிப்படுத்தவில்லை. இருப்பினும், கட்டுமானம் முடிந்து ஆறு ஆண்டுகளுக்கும் மேல் ஆன பின்னர், ஆகஸ்ட் 2018ல், கட்டடத்தின் பொறுப்பை கல்லூரி முதல்வர் பொதுப்பணித் துறையிடமிருந்து எடுத்துக் கொண்டார். குளிர் சாதன வசதி, பாத்திரம் துலக்கும் வசதி மற்றும் பாதுகாப்பு பெட்டகம் ஆகியவற்றின் தேவை பற்றி முதல்வர் மேற்கையொப்பமிட்ட மதிப்பீட்டில் குறிப்பிடப்படவில்லை என்பதை தணிக்கை கண்டது.

காட்சிப்படம் 3.6: செங்கல்பட்டு, CMCல் உணவகம் மற்றும் பொது அறை

(ஆதாரம்: ஜனவரி 2018ல் கூட்டுக் கள ஆய்வின் போது தணிக்கைக் குழு எடுத்தபடம்)

- சுட்டிக்காட்டிய குறைபாடுகள் சரிசெய்யப்படாமல் இருக்கையில், கட்டடத்தை ஒரு ஒப்பந்ததாரருக்கு குத்தகைக்கு விடுவதற்காக ஒப்பந்தப்புள்ளி கோருமாறு முதல்வர் பொதுப்பணித் துறையை ஏப்ரல் 2013ல் கேட்டுக்கொண்டார். பின்னர் ஜனவரி 2015ல், முதல்வர் இத்திட்டத்தை மாற்றி, உணவகம் நடத்த தெரிவு செய்யப்படும் ஒரு நபர்/நிறுவனத்திற்கு கட்டடத்தை வாடகைக்கு விடுவதற்காக நியாய வாடகை சான்றிதழ்[18] (வாடகை சான்றிதழ்) அளிக்குமாறு பொதுப்பணித் துறையிடம் கோரினார். வாடகைச் சான்றிதழ் கோரப்பட்டாலும், பொதுப்பணித்துறை அதற்குரிய பயனுள்ள நடவடிக்கை எதையும் எடுக்கவில்லை.

- அதே போல், சேலம் MKMC முதல்வரும் வாடகை சான்றிதழ் வழங்குமாறு ஏப்ரல் 2016ல் பொதுப்பணித்துறையிடம் கோரினார். அவர் கடிதம் மூலம் பொதுப்பணித்துறையுடன் தொடர்பில் இருந்தார். இரண்டாண்டுகளுக்கு மேலாக பொதுப்பணித்துறை பதிலளிக்கவில்லை. வாடகை சான்றிதழுக்கான எந்த வேண்டுகோளையும் MKMCயிடமிருந்து பெறவில்லை என சேலம், செயற்பொறியாளர், கட்டடங்கள் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு)

18 பொதுப்பணித்துறையின் 'D' நடைமுறை நூலின் பத்தி 275ன்படி, ஒரு அரசு கட்டடம் தனியாருக்கு வாடகைக்கு விடப்படும்போது, அதற்குரிய வாடகையை, அப்பகுதியில் தனியார் உரிமையாளர்களுக்கு சொந்தமானஅது போன்றதே ஆன ஒரு இடத்திற்கு உள்ள விகிதத்தில் காலமுறையில் வசூலிக்க வேண்டும்.

மறுமொழி அளித்தார் (மே 2018). இரு துறைகளுக்கிடையே ஒருங்கிணைப்பு இருக்கவில்லை என்பதை இம்மறுமொழி சுட்டிக்காட்டுகிறது.

- கல்லூரியில் இருக்கும் உள்கட்டமைப்பு குறித்த MCIன் வினாப்பட்டியலுக்கு (மார்ச் 2017 மற்றும் மார்ச் 2018) பதில் அளிக்கையில், இரண்டு கல்லூரிகளும் விதிகளின்படியான உணவகங்களும் பொது அறைகளும் தங்களிடம் இருப்பதாக குறிப்பிட்டன. எனினும், MCI விதிமுறைகளின்படி வழங்கப்பட வேண்டிய இந்த வசதிகள், ₹ 1.35 கோடி செலவிடப்பட்ட பின்னரும், CMC மற்றும் MKMC மாணவர்களுக்கு வழங்கப்படவில்லை என்பதே உண்மை நிலையாக இருந்தது.

மருத்துவ கல்லூரி நிர்வாகமும் பொதுப்பணித்துறையும் இந்த சிக்கலைத் தீர்க்க தவறியதால், உணவகங்கள் மற்றும் பொது அறை வசதிகள் பயன்படாத நிலையில் இருந்தன; இதனால், அந்த இரண்டு மருத்துவ கல்லூரிகளின் 3,202 மாணவர்கள் அவ்வசதிகளை இழந்தனர். ₹ 1.35 கோடி அளவிலான மொத்த செலவும் பயனற்றதானது.

அரசு தனது மறுமொழியில் (செப்டம்பர் 2018) பொது அறைகள் பயன்பாட்டில் உள்ளது எனவும் இரண்டு கல்லூரிகளிலும் உணவகக் கட்டடங்களை செயல்பாட்டிற்கு கொண்டு வர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன எனவும் தெரிவித்தது. எனினும், CMCன் பொது அறைகளில் வசதிகள் ஏதுவும் அமைக்கப்படவில்லை என்பதையும், MKMCன் பொது அறைகள் கல்லூரி கலாச்சார விழாக்கள் மற்றும் பட்டமளிப்பு விழாவின்போது 52 நாட்கள் மட்டுமே பயன்படுத்தப்பட்டு, அவை பொதுவாக பூட்டப்பட்டே இருந்தன என்பதையும் தணிக்கை கண்டது.

சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை

3.2.6 பணிபுரியும் பெண்களுக்கான விடுதி கட்டும் திட்டத்தை முடிக்காததால் ஏற்பட்ட தவிர்த்திருக்கக்கூடிய செலவு மற்றும் நிதி முடக்கம்

பணிபுரியும் பெண்களுக்கான விடுதி கட்டும் திட்டத்தை முடிக்க தொடர் முயற்சி இல்லாததால் ₹ 1.05 கோடி தவிர்த்திருக்கக்கூடிய செலவும் ₹ 2.48 கோடி அளவிலான மத்திய நிதியுதவி தொகை வங்கி கணக்கில் முடக்கமும் ஏற்பட்டன. ஒப்புதல் அளிக்கப்பட்டு 10 ஆண்டுகள் கடந்த பின்னரும் திட்டத்தின் நோக்கம் நிறைவேறாமல், திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு ₹ 20.54 கோடி உயர்ந்தது.

தமிழ்நாட்டிலுள்ள 22 பணிபுரியும் பெண்களுக்கான விடுதிகளை சமூக நல இயக்குநர் நிர்வகிக்கிறார். இதில் மார்ச் 2018 அன்றுள்ளவாறு, 15 விடுதிகள் சொந்த கட்டிடங்களிலும், ஏழு விடுதிகள் வாடகை கட்டடங்களிலும் இயங்கி வந்தன. சமூக நல இயக்குநரகத்தில் ஜனவரி முதல் டிசம்பர் 2016 வரையிலான பதிவுருக்களை (பிப்ரவரி மற்றும் மார்ச் 2017) ஆய்வு செய்ததில் பின்வருவன வெளிப்பட்டன.

தமிழ்நாடு அரசு 1972-73லிருந்து செயல்படுத்திவரும் இந்திய அரசின் நிதி வழங்கும் திட்டத்தின் கீழ், ₹ 25,000க்கு குறைவாக மாத வருமானம் பெறும் பணிபுரியும் பெண்களுக்காக சென்னையில் ஐந்து கட்டட தொகுதிகள் கொண்ட ஒரு விடுதி வளாகத்தை கட்டுவதற்கு அக்டோபர் 2007ல் ஒப்புதல் அளித்தது. அதில் 500 பணிபுரியும் பெண்கள் மற்றும் 60 முன்பள்ளி சிறார்கள் ஆகியோருக்கு இடமளிக்கவும், மழலையர் விடுதி, நூலகம், கணினி மையம், உடற்பயிற்சிக் கூடம் போன்ற பிற வசதிகளை அளிக்கவும் திட்டமிடப்பட்டது. பணிபுரியும் பெண்களுக்கு வசதியான மற்றும் பாதுகாப்பான இடவசதி வழங்குவது இந்த வளாகம் கட்டுவதன் நோக்கமாக இருந்தது. திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு ₹ 12.99 கோடி ஆகும்; இதில், 'பணிபுரியும் பெண்களுக்கான விடுதி திட்டம்' என்ற திட்டத்தின் கீழ் இந்திய அரசின் நிதி உதவியாக ₹ 5 கோடி மற்றும் மாநில அரசின் பங்கு ₹ 7.99 கோடி ஆகியவை அடங்கும். அருள்மிகு வடபழனி ஆண்டவர் திருக்கோவிலுக்கு (கோவில்) சொந்தமான 5.46 ஏக்கர்[19] நிலத்தை மாதம் ₹ 1 இலட்சம் குத்தகை வாடகையில் கையகப்படுத்துதற்கும் அரசு ஒப்புதல் (ஜூன் 2007) அளித்தது. தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் (Tamil Nadu Corporation for Development of Women - TNCDW) திட்டத்தை செயல்படுத்தும் முகமையாக நியமிக்கப்பட்டது.

திட்டத்திற்கு தனது ஒப்புதலை இந்திய அரசு அளித்திராத நிலையில், 60 பணிபுரியும் பெண்களுக்கு இடமளிக்கும் வகையில் ஒரு கட்டட தொகுதியை கட்டுவதற்கு தமிழ்நாடு அரசு ₹ 2 கோடி[20] தொகையை விடுவித்தது என்பதை வெளிக்காட்டியது. TNCDW பிப்ரவரி 2008ல் கோவில் நிர்வாகத்திடமிருந்து நிலத்தை எடுத்துக்கொண்டு, தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகத்திடம் கட்டுமான பணியை ஒப்படைத்தது. 60 படுக்கைகள் கொண்ட அத்தொகுதி ₹ 2.47 கோடி[21] செலவில் ஜூலை 2010ல் கட்டி முடிக்கப்பட்டு, 31 மாத தாமதத்திற்கு பிறகு பிப்ரவரி 2013ல் செயல்பட துவங்கியது.

இதற்கிடையில், டிசம்பர் 2010ல் இந்திய அரசு ₹ 6.61 கோடி செலவிலான திட்டத்திற்கும் தன் பங்காக ₹ 4.96 கோடி (75 சதவீதம்) என்ற தொகைக்கும் ஒப்புதல் அளித்து, அதில் ஐம்பது சதவீதம் அளவிற்கு ₹ 2.48 கோடி தொகையை விடுவித்தது (பிப்ரவரி 2011).

தணிக்கை பின்வருவனவற்றை கண்டறிந்தது:

- இது போன்ற திட்டத்தில் TNCDWக்கு உள்ள சிறப்பறிவுத் திறத்தை தமிழ்நாடு அரசு மதிப்பிடாமல், திட்டத்தை செயல்படுத்தும் பொறுப்பை அதனிடம் ஒப்படைத்தது (ஜனவரி 2007). இதன் விளைவாக, பணிபுரியும் பெண்களுக்கான விடுதிகளை நடத்துவதில் அனுபவமுள்ள சமூக நல இயக்குநருக்கு (Director of Social Welfare - DSW) திட்டத்தை செயல்படுத்தும் பொறுப்பை மாற்றும் ஒரு கருத்துருவை ஜனவரி 2010ல் அளிக்க நேர்ந்தது. திட்ட செயலாக்கத்தை TNCDWயிடமிருந்து DSWக்கு மாற்றுவதில் இயல்புமீறிய தாமதம் இருந்ததையும், அதன் விளைவாக, விடுதி கட்டடத்தின் முதல்

---

19 தமிழ்நாடு அரசு 5.96 ஏக்கர் நிலத்தை குத்தகைக்கு எடுக்க உத்தரவிட்டது. எனினும், TNCDW அந்நிலத்தின் ஒரு பகுதியை தவிர்த்துவிட்டு 5.46 ஏக்கர் நிலத்தை மட்டுமே எடுத்துக்கொண்டது.

20 பிப்ரவரி 2008 - ₹ 0.8 கோடி மற்றும் மார்ச் 2008 - ₹ 1.20 கோடி

21 கட்டுமான செலவு மற்றும் நிர்வாகம் - ₹ 1.94 கோடி + திட்ட அனுமதி மற்றும் பிற இனங்கள் - ₹ 0.53 கோடி

தொகுதி பயன்பாட்டுக்கு வந்ததில் 31 மாத தாமதம் இருந்தது என்பதையும் தணிக்கை கண்டறிந்தது.

- 500 பணிபுரியும் பெண்கள் மற்றும் 60 முன்பள்ளி சிறார்களுக்கு இடமளிக்க ஐந்து தொகுதிகள் கொண்ட ஒரு விடுதி வளாகத்தை கட்ட வேண்டும் என்பதற்கெதிராக, 60 பணிபுரியும் பெண்களுக்கு இடமளிக்கும் வகையில் ஒரு தொகுதி மட்டுமே கட்டப்பட்டது. முதல் தொகுதி கட்டப்பட்ட பின்னர் முதல் ஆறு மாதங்களில் அதில் தங்கியவர்கள் எண்ணிக்கை 6 முதல் 37 வரை (10 முதல் 62 சதவீதம் வரை) மட்டுமே இருந்ததால், மீதமுள்ள நான்கு தொகுதிகளை கட்டும் திட்டத்தை DSW துவக்கவில்லை. எனினும், தங்கியவர் எண்ணிக்கை படிப்படியாக உயர்ந்து, மார்ச் 2018ல் 62 சதவீதமாக இருந்தது.

- பிப்ரவரி 2018ல் மாண்புமிகு சமூக நல அமைச்சரின் கள ஆய்விற்கு பின்னரே மீதமுள்ள தொகுதிகளை கட்டுவதற்கான கருத்துரு வேகம் கண்டது. காவலர் வீட்டு வசதி கழகம் ₹ 31.06 கோடி தொகைக்கான ஒரு மதிப்பீட்டை தயாரித்தது. டிசம்பர் 2010ல் ஒப்புதல் அளிக்கப்பட்ட ₹ 4.96 கோடி தொகைக்கு மேலாக கூடுதல் உதவி அளிக்க இந்திய அரசின் வழிகாட்டுநெறிகள் அனுமதிக்கவில்லை என்பதை தணிக்கை கண்டறிந்தது. முதல் தொகுதியை முடிப்பதில் ஏற்பட்ட இயல்புமீறிய தாமதம் மற்றும் மீதமுள்ள தொகுதிகளை கட்டுவதற்கான கருத்துருவை அளிப்பதில் தாமதம் காரணமாக, மதிப்பிடப்பட்ட செலவு ₹ 10.52 கோடி என்பதிலிருந்து ₹ 31.06 கோடி என்ற அளவிற்கு உயர்ந்தது. கருத்துருவிற்கு தமிழ்நாடு அரசு ஒப்புதல் அளிக்கவில்லை (ஜூன் 2018).

- மாதம் ₹ 1 இலட்சம் குத்தகை வாடகையில் கோவிலிடமிருந்து குத்தகையில் எடுக்கப்பட்ட 5.46 ஏக்கர் (2.37 இலட்சம் சதுரஅடி) மொத்த நிலப்பரப்பில், 17,632 சதுர அடி மட்டுமே ஒரு தொகுதி கட்ட பயன்படுத்தப்பட்டது. திட்டமிடப்பட்டவாறு ஐந்து தொகுதிகளை கட்டாததால், நிலத்தை முழுமையாக பயன்படுத்தாமல் குத்தகை வாடகையாக ₹ 1.05 கோடி[22] செலுத்த நேர்ந்தது. தனியார் போக்குவரத்து நிறுவனங்கள் நிலத்தின் சுற்றுச்சுவற்றின் ஒரு பகுதியை உடைத்து காலி நிலம் முழுவதையும் தமது வாகனங்களை நிறுத்துவதற்காக ஆக்கிரமிப்பு செய்துள்ளனர் என்பதும் தமிழ் வளர்ச்சி, சமய அறநிலையம் மற்றும் செய்தித்துறை செயலாளருக்கு ஆணையர் அனுப்பிய கடிதத்திலிருந்து (டிசம்பர் 2013) அறியப்பட்டது. ஆக்கிரமிப்புகளை அகற்ற DSW பயனுள்ள நடவடிக்கை எடுக்கவில்லை.

- இந்திய அரசின் முதல் தவணை மானியமாக பிப்ரவரி 2011ல் பெறப்பட்ட ₹ 2.48 கோடி மார்ச் 2013 வரை TNCDWன் வங்கி கணக்கிலும், பின்னர் DSWன் வங்கிக் கணக்கிலும் வைக்கப்பட்டது. மேலும், இந்திய அரசு மானியத்தை வங்கி கணக்கில் வைத்ததன் மூலம் TNCDW ஈட்டிய வட்டி ₹ 18.24 இலட்சம் தொகையில் ₹ 9.51 இலட்சம் மற்றும் DSW ஈட்டிய வட்டி ₹ 47.42 இலட்சம் ஆகியவை அரசு

22 பிப்ரவரி 2008 முதல் பிப்ரவரி 2018 வரையான காலகட்டத்திற்கான, செலுத்தப்பட்ட குத்தகை வாடகை மற்றும் பயன்படுத்தப்படாத நிலப்பகுதிக்காக செலுத்தப்பட வேண்டிய குத்தகை வாடகை ஆகியவற்றின் அடிப்படையில் கணக்கிடப்பட்டது

கணக்கில் சேர்க்கப்பட்டு, மீதத்தொகை அடிக்கல் நாட்டுதல் விழா, திறப்பு விழா போன்றவற்றுக்காக பயன்படுத்தப்பட்டது.

இவ்வாறு, செயல்படுத்தும் முகமையை தவறாக தேர்ந்தெடுத்தது மற்றும் விடுதியில் தங்குவோர் எண்ணிக்கையை உயர்த்த DSW தொடர் முயற்சி எடுக்காதது ஆகியவை காரணமாக, திட்டத்தின் நோக்கம் முழுமையாக எய்தப்படாமல், திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு ₹ 20.54 கோடி உயர்ந்தது. திறனற்ற செயலாக்கம் காரணமாக, பயன்படுத்தப்படாத நிலத்திற்கு ₹ 1.05 கோடி குத்தகை வாடகை அளிக்க நேர்ந்தது. நிலத்தை காலியாக வைத்திருந்ததால் அது ஆக்கிரமிக்கப்பட்டது. மேலும், இந்திய அரசு மானியம் ₹ 2.48 கோடி வங்கி கணக்கில் செயலற்ற நிலையில் வைக்கப்பட்டிருந்தது; அதிலிருந்து பெறப்பட்ட ₹ 0.66 கோடி வட்டி, திட்டத்தின் கீழ் வராத செலவினங்களுக்கு மாற்றப்பட்டது.

இவற்றை தணிக்கை சுட்டிக்காட்டியபோது, தமிழ்நாடு அரசு, மீதமுள்ள நான்கு தொகுதிகளை கட்ட ₹ 31.06 கோடி தொகைக்கான ஒரு புதிய மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது (பிப்ரவரி 2018) என்றும் இந்திய அரசின் மானியம் கோரப்படும் என்றும் மறுமொழி அளித்தது (ஜூன் 2018). எனினும், 2007ல் ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்டம், 2018 அன்று வரை முடிக்கப்படவில்லை என்பதும் இந்திய அரசின் மானியம் வங்கி கணக்கில் பயனற்ற நிலையில் உள்ளது என்பதுமே உண்மை நிலைமையாக இருந்தது.

பள்ளிக் கல்வி துறை

3.2.7 முறையற்ற ஆண்டு பராமரிப்பு ஒப்பந்தம்

பொது நூலகங்களின் இயக்குநர் கணினி அமைப்புகள் மற்றும் மின்னணு சாதனங்களுக்கான ₹ 5.12 கோடி ஆண்டு பராமரிப்பு ஒப்பந்தத்தை முறையற்ற வகையில் வழங்கியது மற்றும் ஒப்பந்த மேலாண்மையில் உரிய கவனம் இல்லாதது ஆகியவை காரணமாக ₹ 0.85 கோடி தவிர்த்திருக்கக்கூடிய செலவு ஏற்பட்டது.

தமிழ்நாட்டில் பரந்து விரிந்துள்ள பல நூலகங்களை பொது நூலக இயக்குநர் நிர்வகிக்கிறார். 2016-18ல் அவருடைய கட்டுப்பாட்டில் வரும் ஒரு மாவட்ட மத்திய நூலகமும், அண்ணா நூற்றாண்டு நூலகமும் (ACL) தணிக்கை செய்யப்பட்டன. ஆண்டு பராமரிப்பு ஒப்பந்தத்தை வழங்கியதில் உள்ள குறைபாடுகள், கீழே விவரிக்கப்பட்டுள்ளவாறு, அண்ணா நூற்றாண்டு நூலக தணிக்கை வெளிப்படுத்தியது.

பொது அமைப்புகள் பொருட்கள் மற்றும் சேவைகளை பெறுவது தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளியில் வெளிப்படைத்தன்மை சட்டம், 1998 மற்றும் விதிகள் 2000 என்பவற்றுக்கு உட்பட்டவை ஆகும். இவை தவிரவும், கணினிகள் மற்றும் துணை கருவிகளுக்கான ஆண்டு பராமரிப்பு ஒப்பந்த (Annual Maintenance Contract - AMC) சேவை வழங்குநர்களை அமர்த்துவது தொடர்பாக அரசு தனி வழிகாட்டுநெறிகளை வகுத்தது (மார்ச் 2005). அந்த வழிகாட்டுநெறிகள் மற்றவற்றுடன், (i) AMC சேவை வழங்குநர் முறையான புகார்-அழைப்பு-பதிவு நடைமுறையை பின்பற்றுதல் மற்றும் (ii) AMC சேவை வழங்குநருக்கு அதற்கான தொகை இரண்டு சம தவணைகளில் செலுத்துதல் ஆகியவற்றையும் விதிக்கின்றன; குறிப்பிட்ட காலத்திற்கு அப்பாற்பட்டு சேவை வழங்காமைக்கு அதற்குரிய

விகிதத்தில் ஒரு தொகை, செலுத்துப்படும் தொகையிலிருந்து கழிக்கப்படும். மேற்படி சட்டம் மற்றும் விதிகளின்படி, ஒப்பந்ததாரர் தமது கடமையை நிறைவேற்ற தவறினால், அவர் மீது ஒரு சட்டப்படியான பிடிப்பு இருப்பதற்காக ஒப்பநந்ததாரருடன் ஒரு முறையான எழுத்து வடிவ ஒப்பந்தம் இருக்க வேண்டும்.

சென்னை, அண்ணா நூற்றாண்டு நூலகம், தனது வளாகத்தில் ₹ 23.25 கோடி செலவில் ஒரு ஒருங்கிணைந்த புத்தக கண்காணிப்பு, வலையமைப்பு மற்றும் பாதுகாப்பு அமைப்பினை (Integrated Book Monitoring, Networking and Security System - IBMS) நிறுவியது (ஆகஸ்ட் 2010). IBMS ஆகஸ்ட் 2013ல் முடியும்படியான மூன்றாண்டு உத்தரவாதத்தை கொண்டிருந்தது. உத்தரவாத காலம் முடிவடைந்த பின்னர், ஓராண்டு காலத்திற்கு (அக்டோபர் 2014 வரை) IBMSஐ பராமரிப்பதற்கு ₹ 2.56 கோடி செலவில் AMCஐ பொது நூலகங்களின் இயக்குநர் (Director of Public Libraries - DPL) IBMSஐ வழங்கிய நிறுவனத்திற்கு வழங்கினார் (அக்டோபர் 2013). எனினும், அந்நிறுவனம் AMCஐ செயல்படுத்துவதற்காக ஒரு துணை ஒப்பந்ததாரரை[23] ஈடுபடுத்தியது.

AMC காலத்தின் முதலாண்டு முடிவில், IBMSன் பராமரிப்பை மேலும் ஒரு ஆண்டு காலத்திற்கு (நவம்பர் 2014 முதல் அக்டோபர் 2015 வரை) மேற்கொள்வதற்கு DPL மீண்டும் அந்த துணை ஒப்பந்ததாரரை ஒப்பந்தப்புள்ளியின்றி அமர்த்தி, கட்டணமாக ₹ 2.56 கோடி தொகையை வழங்கினார்.

இரண்டாவது ஆண்டில் AMC நடப்பில் இருக்கும்போது, ACLல் சொத்துக்கள் பராமரிப்பின் மோசமாக தரம் பற்றிய ஒரு பொது நல வழக்கின் அடிப்படையில், மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றம், ஆய்வு செய்து அறிக்கை அளிப்பதற்காக நீதிமன்ற ஆணையாளர்களை அமர்த்தியது (ஜூலை 2015). அந்த ஆணையாளர்கள் ஒரு அறிக்கையை அளித்தனர் (ஜூலை 2015). அந்த அறிக்கையின் அடிப்படையில், பல்வேறு கணினிகள் மற்றும் CCTV கண்காணிப்பு கேமராக்கள் செயல்படாத நிலையை குறிப்பிட்டு, AMC ஒப்பந்ததாரருக்கு ஒரு காரணம் கேட்புக் குறிப்பாணையை ACL அனுப்பியது (ஜூலை 2015). ACL, (i) பொருத்தப்பட்ட மேசைக் கணினிகள் மற்றும் CCTV கேமராக்களில் பாதிக்கு மேல் செயல்படவில்லை, (ii) CCTV கேமரா சர்வரின் குறைவான சேமிப்பு திறன் (15 நாட்கள் என்பதற்கெதிராக ஒரு நாள்) மற்றும் (iii) செயல்படாத நிகழ்நிலை விபரப் பட்டியல், சர்வர் மற்றும் தானியங்கி பாதுகாப்பு நுழைவாயில்கள்[24], ஆகிய IBMSல் உள்ள பல்வேறு குறைபாடுகளை பற்றி DPLக்கும் தெரிவித்தது (ஆகஸ்ட் 2015). அக்குறைபாடுகளை AMC சேவை வழங்குநர் AMC காலம் முடிவடைவதற்கு முன்னர் சரி செய்யவில்லை.

பின்வரும் பணிகளை மேற்கொள்ள ஒரு ஒப்பந்ததாரரை[25], இரண்டாவது AMC காலம் முடிவடையும் தருவாயில் (அக்டோபர் 2015), திறந்த டெண்டர் மூலம் DPL அமர்த்தினார் (மார்ச் 2016):

- ➢ AMC காலம் தொடங்குவதற்கு முன், IBMSன் செயல்படாத வன்பொருள் மற்றும் மென்பொருள் கூறுகளில் உள்ள குறைபாடுகளை

---

23 நெட்காம் கம்ப்யூட்டர்ஸ் ப்ரைவேட் லிமிடெட்

24 நூல்கள் அனுமதியின்றி வெளியில் எடுத்துச் செல்லப்படுவதை தடுப்பதற்கான ரேடியோ அதிர்வெண் அடையாள முறை

25 மேட்ரிக்ஸ் செக்யூரிடி அண்ட் சர்விலன்ஸ் பிரைவேட் லிமிடெட், ஹைதராபாத்

₹ 2.04 கோடி செலவில் ஒரு முறை சரி செய்தல். இதில், ₹ 0.85 கோடி மதிப்புள்ள வன்பொருளை மாற்றுவதும் அடங்கும்.

- அடுத்த மூன்றாண்டுகளுக்கு (2016-19) ACLல் உள்ள IBMSஐ ₹ 6.16 கோடி செலவில் பராமரித்தல். இப்புதிய நிறுவனம் ஒரு முறை சரி செய்யும் பணியை முடித்து (ஜூன் 2016), இதுநாள் வரை (ஜூன் 2018) IBMSஐ பராமரித்தது.

ACL மற்றும் DPL அலுவலகத்தில் ஆகஸ்ட் 2017 மற்றும் மே 2018ல் 2010-18 காலத்திற்குரிய பதிவுருக்களை கூர்ந்தாய்வு செய்தபோது, பின்வருவன வெளிப்பட்டன:

- ஒரு தனி டெண்டர் இன்றி AMCஐ பொருள் வழங்குநருக்கு அளிப்பதை தற்போதுள்ள வழிகாட்டுநெறிகள் அனுமதித்தாலும், துணை ஒப்பந்ததாரரின் தகுதியை மதிப்பிட DPL முயலாத நிலையில், AMC ஒப்பந்தத்தை பெற்ற பொருள் வழங்குனர் AMC பணியை ஒரு மூன்றாம் தரப்பினரிடம் துணை ஒப்பந்தம் மூலம் ஒப்படைப்பதற்கு DPL ஒப்புதல் அளித்தது முறையற்றதாகும். இந்த முறையற்ற போக்கு, தகுதி சரிபார்க்கப்படாத அந்த துணை ஒப்பந்ததாரரிடம் 2014-15க்கான AMCஐ நேரடியாக DPL ஒப்படைத்ததன் மூலம் தீவிரமானது.

- இந்த குறைபாடு, நடப்பிலுள்ள ஆணைகளை மீறும் வகையில், AMC கட்டணம் முழுவதையும் (100 சதவீதம்) ஒப்பந்ததாரருக்கு முன்பணமாக அளித்ததன் மூலம் மேலும் அதிகமானது. இதன் விளைவாக, ஒப்பந்த காலத்தின்போது ஒப்பந்ததாரர் செயல்படாத/தாமதமாக செயல்பட்ட நேர்வுகளில் பணம் வழங்குவதை நிறுத்தி வைப்பதன் மூலம் அல்லது உரிய விகிதத்தில் தொகையை குறைப்பதன் மூலம் அவரை பொறுப்பேற்க செய்ய ACL இயலாமல் போனது. குறைபாடுள்ள பராமரிப்பிற்காக ஒப்பந்ததாரரை ACL தண்டிக்க இயலாத நிலையில், பராமரிப்பின்மை காரணமாக ₹ 0.85 கோடி மதிப்புள்ள கூறுகளை மாற்ற வேண்டி வந்தது. AMC ஒப்பந்ததாரர் தரப்பில் உள்ள குறைபாடுகள் காரணமாக ஏற்படும் இழப்புகளை ஈடு செய்வதற்காக தமிழ்நாடு அரசால் விதித்த வங்கி உத்தரவாதத்தை பெற DPL தவறினார்.

- ACL ஒரு விரிவான சேவை நிலை ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொள்ளவில்லை; IBMSன் பல்வேறு வன்பொருள் மற்றும் மென்பொருள் கூறுகளின் பராமரிப்பை அறிவதற்கும் AMC ஒப்பந்த்தாரரின் செயல்பாட்டை கண்காணிப்பதற்கும் உரிய முறைமையை ACL கொண்டிருக்கவில்லை.

ஒப்பந்த உருவாக்கம் மற்றும் மேலாண்மையில் DPL மற்றும் தலைமை நூலகர் மற்றும் தகவல் அதிகாரி (CLIO) ஆகியோரின் மேற்கூறிய தவறுகளின் அடிப்படையில், AMC மீது செய்யப்பட்ட ₹ 5.12 கோடி[26] செலவு முறையற்றது என்றும், தகுதி சரிபார்க்கப்படாத துணை ஒப்பந்ததாரிடம் ஒப்படைக்கப்பட்ட இரண்டாண்டு கால AMCன் கீழ் இருந்த IBMSன் குறைபாடுள்ள வன்பொருள் கூறுகளை ஒரு முறை சரிசெய்ததற்கான ₹ 0.85 கோடி செலவு தவிர்த்திருக்கக்கூடியது என்றும், தணிக்கை முடிவு செய்தது.

---

26 ஒரு ஆண்டிற்கு ₹ 2.56 கோடி வீதம் இரண்டு ஆண்டுகளுக்கு

இது குறித்த தணிக்கையின் ஒரு கேள்விக்கு, 2014-15 AMC காலத்திற்குரிய பராமரிப்பு பதிவுருக்களும் புகார் பதிவேடும் கிடைக்கப்பெறவில்லை எனவும், அனைத்து தொழில்நுட்ப சிக்கல்களும் AMC ஒப்பந்ததாரருக்கு வாய்வழியாக தெரிவிக்கப்பட்டு தீர்க்கப்பட்டதால், பழுது நீக்க அழைப்பு பதிவேடு பராமரிக்கப்படவில்லை எனவும் CLIO மறுமொழி அளித்தார். ஒப்பந்த மேலாண்மையில் இருந்த குறைபாட்டின் விளைவாக, AMC ஒப்பந்ததாரர் குறைபாடுள்ள நிலையில் விட்டுவிட்ட பழுதடைந்த வன்பொருள் கூறுகளை மாற்ற ஒருமுறை செலவாக ₹ 0.85 கோடி தவிர்த்திருக்கக்கூடிய கூடுதல் செலவு ஏற்பட்டது என்ற தணிக்கையின் முடிவை இந்த மறுமொழி வலுப்படுத்தியது.

அரசு, (i) தேவையான உள்கட்டமைப்பு அனைத்தும் வாசகர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்ற நீதிமன்ற ஆணையின் காரணமாக, AMCக்காக டெண்டர் முறையை பின்பற்ற இயலவில்லை என்றும் (ii) ACLல் இருந்த சார்ந்திருக்க இயலாத மின்சாரம் மற்றும் நவம்பர் மற்றும் டிசம்பர் 2015 மாதங்களில் முன்னெப்போதும் இருந்திராத அளவுக்கு மழை பெய்ததன் காரணமாக கணினி அமைப்புகளும் CCTV கேமராக்களும் பழுதடைந்து ஒரு முறை சரிசெய்யும் நடவடிக்கை தேவைப்பட்டது எனவும் மறுமொழி அளித்தது (செப்டம்பர் 2018). நீதிமன்ற ஆணைகள் AMCக்கு டெண்டர் கோருவதை தடுக்கவில்லை என்பதால் இம்மறுமொழி ஏற்கத்தக்கதல்ல. மேலும், அரசு விதித்த, AMCக்கான நடப்பிலுள்ள வழிகாட்டுநெறிகளை பின்பற்றாததற்கான காரணங்களை இம்மறுமொழி தெரிவிக்கவில்லை.

3.3 ஒழுங்குமுறை விவகாரங்கள்

சிறப்பு திட்ட செயலாக்கத் துறை மற்றும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை

3.3.1 மாநிலத்திலுள்ள பெண் பயனாளர்களுக்கு விலையில்லா மின்விசிறிகள், மிக்ஸிகள் மற்றும் கிரைண்டர்கள் வழங்கும் திட்டம்

3.3.1.1 முன்னுரை

அரிசி உரிமத்துடன் கூடிய குடும்ப அட்டைகள் வைத்திருக்கும் பெண் பயனாளர்களுக்கு விலையில்லா மின்விசிறிகள்[27], மிக்ஸி மற்றும் கிரைண்டர்கள் (Fan, Mixie, Grinder - FMG) வழங்கும் திட்டத்தை தமிழ்நாடு அரசு ஜூன் 2011ல் அறிவித்தது. இத்திட்டத்தின் கீழ், அரிசி அட்டை கொண்ட குடும்பங்களில் உள்ள (30 ஜூன் 2011 அன்றுள்ளவாறு) ஒரு பெண் உறுப்பினர் இலவசமாக FMG பெற தகுதியுடையவர் ஆவர். ஒரு வேளை, தகுதியுடைய குடும்பத்தில் பெண் உறுப்பினர் இல்லையெனில், குடும்பத் தலைவர் தகுதியுடையவர் ஆவார். 2011-16 காலகட்டத்தில், இத்திட்டம் ஐந்து கட்டங்களாக செயல்படுத்தப்பட்டது. (i) ஏழைப் பெண்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல், (ii) கடுமையான வீட்டு வேலைகளிலிருந்து பெண்களுக்கு சிறு நிவாரணங்கள் வழங்குவதன் மூலம் அவர்களை பொருளாதாரத்தில் பயனுள்ள பங்கேற்பாளராக உருவாக்குதல் மற்றும் (iii) பெண்களுக்கு சமமான வாய்ப்புகளை

27 மலைப் பிரதேங்களான நீலகிரி மற்றும் திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள கோடைக்கானலில் மின் விசிறிகளுக்குப் பதிலாக தூண்டு மின்சார அடுப்புகள் விநியோகிக்கப்பட்டன

வழங்குதல் ஆகியவை திட்டத்தின் நோக்கங்களாகும். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தை (TNCSC) உபகரணங்கள் வாங்குவதற்கான நிறுவனமாகவும், பெருநகர சென்னை மாநகராட்சியின் ஆணையர் விநியோகிக்கும் பணியை செய்வதால் சென்னையைத் தவிர்த்து மற்ற இடங்களில் விநியோகிக்கும் பணியை கையாளுவதற்கு வருவாய் துறையையும் தமிழ்நாடு அரசு நியமித்தது. அரசு அளவில், சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையின் அரசு செயலரின் தலைமையில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இந்திய தரக்கட்டுப்பாட்டு அலுவலகத்தின் தரநிலைகளுக்கேற்ப FMGக்களை கொள்முதல் செய்வதும், வழங்குவதும் திட்டத்தில் எதிர்நோக்கப்பட்டது. FMGயின் கட்டவாரியான விநியோக விவரங்கள் **அட்டவணை 3.7**ல் கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 3.7: FMGயின் கட்டவாரியான விநியோக விவரங்கள்

கட்டம்	ஆண்டு	விநியோகிக்கப்பட்டது (எண்ணிக்கையில்)			செலவினம்* (₹ கோடியில்)
		மின்விசிறி/ தூண்டு மின் அடுப்பு	மிக்ஸி	கிரைண்டர்	
I	2011-12	24,19,160	24,25,508	24,34,380	1,347.87
II	2012-13	34,54,590	34,72,270	34,62,223	1,533.82
III	2013-14	34,55,491	34,87,819	34,88,819	1,468.11
IV	2014-15	43,67,634	43,71,660	43,67,635	1,837.27
V	2015-16	37,59,295	37,33,788	37,37,729	1,529.57

* கொள்முதல், சேமிப்பு, போக்குவரத்து, காப்பீடு போன்ற செலவினங்களையும் உள்ளடக்கியது

(ஆதாரம்: வருவாய் நிர்வாக ஆணையர் அளித்த விவரங்களிலிருந்து தொகுக்கப்பட்டவை)

2017-18 காலகட்டத்தில், தமிழ்நாட்டின் சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை, வருவாய் நிர்வாக ஆணையர் (CRA), TNCSC மற்றும் 32 மாவட்டங்களில் 16 மாவட்டங்கள், எளிய தொடர்பற்ற மாதிரி முறையில் தெரிந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களிலுள்ள 116 வட்டாரங்களில் 64 வட்டாரங்கள் (**இணைப்பு 3.7**) ஆகியவற்றில் 2011-16 காலத்திற்கு தொடர்புடைய ஆவணங்களை தணிக்கை கூர்ந்தாய்வு செய்தது. காணப்பட்ட குறைபாடுகள் பின்வரும் பத்திகளில் விவாதிக்கபட்டுள்ளன.

3.3.1.2 FMGக்களின் கொள்முதல்

(i) FMGக்களின் அதிகப்படியான கொள்முதல்

ஜூன் 2011ல், இத்திட்டத்தின் கீழ் 1.83 கோடி குடும்பங்கள் பலனடையும் என தமிழ்நாடு அரசு மதிப்பிட்டிருந்தது. அதனைத் தொடர்ந்து, 30 ஜூன் 2011 அன்றுள்ளவாறு, அரிசி உரிமம் உள்ள குடும்ப அட்டைகளின்[28] எண்ணிக்கையை மறுதிருத்தம் செய்யப்பட்ட பின்னர், தமிழ்நாடு அரசு பயனாளர்களின் எண்ணிக்கையை 1.85 கோடியாக திருத்தியமைத்தது. முதல் கட்டத்தில் 25 இலட்சம் பயனாளர்களையும், இரண்டாவது மற்றும் மூன்றாவது கட்டங்களில்

[28] (i) அரிசி உட்பட அனைத்து பொருட்களுக்கும் விருப்பப்படும் குடும்பங்களுக்கு வழங்கப்படும் பச்சை (அரிசி) அட்டைகள்; (ii) அரிசி தவிர அனைத்து பொருட்களுக்கும் தகுதியுடைய வெள்ளை (சர்க்கரை) அட்டைகள், (iii) அனைத்து பொருட்களுக்கும் தகுதியுடைய காக்கி (காவல்) அட்டைகள் மற்றும் (iv) எந்தவொரு பொருளுக்கும் தகுதியற்ற வெள்ளை (பண்டமற்றவை) அட்டைகள் போன்ற நான்கு வகையான குடும்ப அட்டைகளை மாநிலத்தின் பொது விநியோக முறை பின்பற்றுகிறது.

35 இலட்சம் பயனாளர்களையும் மற்றும் நான்காவது மற்றும் ஐந்தாவது கட்டங்களில் 45 இலட்சம் பயனாளர்களையும் இக்கருத்துரு உள்ளடக்கியிருந்தது. ஒவ்வொரு கட்டத்திலும், 234 சட்டமன்றத் தொகுதிகளில் ஒவ்வொரு தொகுதியிலும் கிராமப்புற/நகர்ப்புற பகுதிகளில் கிராமங்கள்/நகர வட்டங்கள் தெரிவு செய்யப்பட்டன மற்றும் கிராமங்கள்/நகர வட்டங்களின் அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களும் ஒரே கட்டத்திலேயே உள்ளடக்கப்பட்டனர்.

அக்டோபர் 2015ல், கடைசி கட்டத்தில் FMGக்களின் தேவையை கணக்கிடும் போது, கிடங்குகளில் கையிருப்பில் செயலற்ற முறையில் இருக்கும் முந்தைய கட்டத்தின் கொள்முதலில் உள்ள உபரி சரக்குகளை நீக்கிவிட்டு, தேவைகளை கவனமாக கணக்கிடுமாறு மாவட்ட ஆட்சியர்களுக்கு CRA எச்சரிக்கை விடுத்தார். தேவைகளை மாவட்ட ஆட்சியர்கள் கணக்கிட்டு, தமிழ்நாடு அரசால் அனுமதிக்கப்பட்ட பின்னர், 36,97,879 மின்விசிறிகள்/அடுப்புகள், 37,55,963 மிக்ஸிகள் மற்றும் 37,40,272 கிரைண்டர்களை TNCSC கொள்முதல் செய்தது. மார்ச் 2018 அன்றுள்ளவாறு, ஐந்தாவது மற்றும் இறுதி கட்ட அனைத்து பயனாளர்களுக்கும் FMGக்கள் விநியோகிக்கப்பட்ட பின்னர், வருவாய் துறையின் சரக்குக் கிடங்குகளில் இருந்த பெருமளவு சரக்குகளின் விவரங்கள் **அட்டவணைகள் 3.8 (அ)** மற்றும் **(ஆ)**வில் கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 3.8 (அ): கொள்முதல் செய்து விநியோகிக்கப்பட்ட FMGக்களின் கட்டவாரியான விவரங்கள்

கட்டம்		I	II	III	IV	V
ஆண்டு		2011-12	2012-13	2013-14	2014-15	2015-16
(எண்ணிக்கையில்)						
ஆரம்ப கையிருப்பு	மின்விசிறி/தூண்டு மின்அடுப்பு	0	84,361	1,26,250	1,70,759	3,03,125
	மிக்ஸி	0	74,492	1,02,222	1,14,403	2,42,743
	கிரைண்டர்கள்	0	65,620	1,03,397	1,14,578	2,46,943
கொள்முதல் செய்யப்பட்டவை	மின்விசிறி/தூண்டு மின்அடுப்பு	25,03,521	34,96,479	35,00,000	45,00,000	36,97,879
	மிக்ஸி	25,00,000	35,00,000	35,00,000	45,00,000	37,55,963
	கிரைண்டர்கள்	25,00,000	35,00,000	35,00,000	45,00,000	37,40,272
மொத்தம்	மின்விசிறி/தூண்டு மின்அடுப்பு	**25,03,521**	**35,80,840**	**36,26,250**	**46,70,759**	**40,01,004**
	மிக்ஸி	**25,00,000**	**35,74,492**	**36,02,222**	**46,14,403**	**39,98,706**
	கிரைண்டர்கள்	**25,00,000**	**35,65,620**	**36,03,397**	**46,14,578**	**39,87,215**
விநியோகிக்கப் பட்டவை	மின்விசிறி/தூண்டு மின்அடுப்பு	24,19,160	34,54,590	34,55,491	43,67,634	37,59,295
	மிக்ஸி	24,25,508	34,72,270	34,87,819	43,71,660	37,33,788
	கிரைண்டர்கள்	24,34,380	34,62,223	34,88,819	43,67,635	37,37,729
இறுதிக் கையிருப்பு	மின்விசிறி/தூண்டு மின்அடுப்பு	84,361	1,26,250	1,70,759	3,03,125	2,41,709
	மிக்ஸி	74,492	1,02,222	1,14,403	2,42,743	2,64,918
	கிரைண்டர்கள்	65,620	1,03,397	1,14,578	2,46,943	2,49,486

அட்டவணை 3.8 (ஆ): ஐந்தாவது கட்டத்தின் முடிவில் தேவைக்கதிகமாக கொள்முதல் செய்யப்பட்ட FMGக்களின் விவரங்கள்

வரிசை எண்	விவரங்கள்	மின்விசிறி	தூண்டு மின்அடுப்பு	மிக்ஸி	கிரைண்டர்	மொத்தம்
1	ஐந்தாவது கட்டத்தில் கொள்முதல் செய்யப்பட்ட FMGக்களின் எண்ணிக்கை *	39,55,862	45,142	39,98,706	39,87,215	**1,19,86,925**
2	ஐந்தாவது கட்டத்தில் விநியோகிக்கப்பட்ட FMGக்களின் எண்ணிக்கை	37,16,293	43,002	37,33,788	37,37,729	**1,12,30,812**
3	**தேவைக்கதிகமாக கொள்முதல் (எண்ணிக்கையில்)**	**2,39,569**	**2,140**	**2,64,918**	**2,49,486**	**7,56,113** (6.73 *சதவீதம்*)
4	அலகு விலை@ (₹)	869.05	1,055.69	1,055.69	2,142.00	..
5	அதிகமாக கொள்முதல் செய்யப் பட்ட பொருட்களின் மதிப்பு (₹)	**20,81,97,440**	**22,59,177**	**27,96,71,283**	**53,43,99,012**	**102,45,26,911**

* முந்தைய கட்டங்களிலிருந்த பழைய சரக்குகளையும் உள்ளடக்கியது

@ ஐந்து கட்டங்களில் குறைந்த அலகு விலை ஏற்றுக்கொள்ளப்பட்டது

(ஆதாரம்: CRA மற்றும் TNCSCயிடமிருந்து பெறப்பட்ட விவரங்கள்)

ஐந்தாவது கட்டத்தின் அதிகப்படியான கொள்முதல் அந்த கட்டத்தில் உள்ளபடியான விநியோகத்தில் 6.73 சதவீதமாக இருந்தது மற்றும் அதன் மதிப்பு ₹ 102.45 கோடி என்பதை **அட்டவணை 3.8 (ஆ)**விலிருந்து காணலாம். அதிக அளவு சரக்குகள் கையிருப்பிலுள்ளதால், காவலர்கள், பள்ளிகள், அங்கன்வாடிகள் போன்றவற்றிற்கு உபரிப் பொருட்களை இலவசமாக விநியோகிக்க, திட்ட வழிகாட்டு நெறிகளுக்கு முரணாக, தமிழ்நாடு அரசு (ஏப்ரல் 2017) உத்தரவிட்டது. மேலும், தங்களது உணவுப் பட்டியலில் உள்ள உணவு வகைகளுக்கு மாவரைத்தல் என்பது தேவைப்படாத, பள்ளிகளின் மதிய உணவு மையங்கள் மற்றும் அங்கன்வாடிகளில், வீட்டு உபயோகத்திற்கான மிக்ஸிகள் மற்றும் கிரைண்டர்களின் பயன்பாட்டை, தமிழ்நாடு அரசு மதிப்பீடு செய்யவில்லை.

தணிக்கையில் ஒரு கேள்விக்கு பதிலளிக்கையில், இறப்பு, நிரந்தர மாற்றம், இடப்பெயர்வு, போலியான அட்டைகள் மற்றும் தகுதியற்ற பயனாளர்களை நீக்குவது ஆகியவற்றால் உபரி சரக்குகள் உண்டாயின என மாவட்ட ஆட்சியர்கள் (திருநெல்வேலி, தர்மபுரி மற்றும பெரம்பலூர் மாவட்டங்கள்) மற்றும் தாசில்தார், தர்மபுரி மாவட்டம் ஆகியோர் தெரிவித்தனர் (ஜூலை மற்றும் செப்டம்பர் 2017 மற்றும் பிப்ரவரி மற்றும் மார்ச் 2018). திட்டத்தை அறிவித்தபோது, 30 ஜூன் 2011 அன்றுள்ளவாறான பட்டியலை முதல்கட்டத்தின் விநியோகத்திற்கான அடிப்படையாக பயன்படுத்திக் கொள்வதென்று தமிழ்நாடு அரசு முடிவு செய்தது. திட்டத்தை அறிவித்தபோது, 30 ஜூன் 2011 அன்று இருந்த அரிசி உரிமம் உள்ள குடும்ப அட்டைதாரர்களின் பட்டியலை முதல் கட்ட விநியோகத்திற்கான அடிப்படையாகக் கொள்ளவேண்டும் என தமிழ்நாடு அரசு முடிவு செய்தது. பின்வரும் அடுத்தடுத்த கட்டங்களில், இறுதி தேதியான 30 ஜூன் 2011க்கான பயனாளர்களின் பட்டியலையே பயன்படுத்தியதன் விளைவாக, 30 ஜூன் 2011ல் அசல் பட்டியலிலுள்ள பல பயனாளிகள் இறப்பு, நிரந்தர மாற்றம், இடப்பெயர்வு ஆகிய காரணங்களால் நான்காண்டுகளுக்குப் பிறகு ஐந்தாவது கட்ட விநியோகத்தின் போது அதே முகவரியில் கிடைக்கவில்லை.

இவ்வாறு, ஒவ்வொரு கட்டத்திலும் உபரிகள் ஏற்பட்டது என்றும் அவை அடுத்தடுத்த கட்டங்களில் பயன்படுத்தப்பட்டது என்பதும் ஒவ்வொரு கட்டத்திற்கும் உண்மையான தேவை 30 ஜூன் 2011 அன்று செய்யப்பட்ட

ஆரம்ப மதிப்பீட்டை விட குறைவாக இருந்ததை சுட்டிக்காட்டியது. இறுதி கட்டத்திலும் 30 ஜூன் 2011ன் தரவுகளைக் கொண்டு செய்யப்பட்ட தவறான மதிப்பீடு மற்றும் 2011-12 காலகட்டத்தில் செய்யப்பட்ட ஆரம்ப மதிப்பீட்டைத் தொடர்ந்து பிறகு குடியேறியவர்கள்/இடம் பெயர்ந்தவர்கள்/மரணமடைந்தவர்கள் அல்லது தகுதியற்ற பயனாளிகளை சரிபார்ப்பதில் மற்றும் களையெடுத்தலில் குறைபாடு ஆகியவற்றால் தேவைக்கு அதிகமாக தவிர்த்திருக்கக்கூடிய கொள்முதல் செய்யப்பட்டதன் விளைவாக ₹ 102.45 கோடி தவிர்த்திருக்கக்கூடிய செலவினத்தில் முடிந்தது. அதிகப்படியான சரக்கு மொத்தக் கொள்முதலில் ஒரு சதவீதம் மட்டுமே இருந்தது எனவும் அவற்றையே பள்ளிகள், அங்கன்வாடிகள், போன்றவைகளுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் அரசு மறுமொழி அளித்தது (மே 2018).

தகுதியுடைய பயனாளர்கள் ஆரம்பத்தில் 1.85 கோடி என மதிப்பிடப்பட்டிருந்தது என்றும் அது பின்னர் விநியோக முறையில் தீவிர கண்காணிப்பு மற்றும் போலி அட்டைகள் நீக்கியதன் காரணமாக 1.81 கோடியாக குறைந்தது என்றும் அரசு மறுமொழி அளித்தது (மார்ச் 2019). இம்மறுமொழி, குறிப்பாக ஒவ்வொர் ஆண்டும் விநியோகத்திற்கு பிறகு எழும் கூடுதல் சரக்கை ஜூன் 2011 தரவுகளோடு உறுதி செய்ய நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும் என்ற தணிக்கையின் கூற்றை வலியுறுத்தியது.

(ii) முன்-விநியோக ஆய்வு மீதான தவிர்த்திருக்கக்கூடிய கூடுதல் செலவினம்

ஒப்பந்தப்புள்ளி விதிகளின் பத்தி 15.1ன்படி, வாங்குபவரின் பிரதிநிதியின் முன்னிலையில் முடிக்கப்பட்ட தயாரிப்புகளுக்கான “ஏற்றுக் கொள்ளும் சோதனை”க்கு உற்பத்தியாளர் ஏற்பாடு செய்யவேண்டும் மற்றும் தரமான பொருட்களை வழங்குவதற்காக TNCSC முன்விநியோக ஆய்வை (Pre delivery inspectin - PDI) மேற்கொள்ள மூன்றாம் நபரை ஈடுபடுத்தலாம். (i) உற்பத்தியில் பயன்படுத்தப்படும் மூலப்பொருட்களின் தரத்தை உறுதிபடுத்துதல், (ii) உற்பத்தி செயல்முறைகளை மேற்பார்வையிடுதல், (iii) ஏற்றுக் கொள்ளும் சோதனைக்கு மாதிரிகளைத் தெரிவு செய்தல், சோதனையை மேற்பார்வையிடுதல் மற்றும் 2,500 உபகரணங்கள் இருக்கும் ஒவ்வொரு பிரிவிலிருந்து ஒரு அலகிற்கு தனியான ஏற்றுக் கொள்ளும் சோதனை நடத்துதல், போன்றவற்றை PDI உள்ளடக்கியுள்ளது.

PDIஐ நடத்துவதற்கு ஒரு முகமையை தேர்ந்தெடுக்க, நான்கு உறுப்பினர்கள்[29] கொண்ட ஒரு நிபுணர்கள் குழுவை TNCSCன் நிர்வாக இயக்குநர் உருவாக்கினார் (செப்டம்பர் 2011). மூன்றாம் நபர் பரிசோதனை முகமையாக வார்ப்படப் பொருட்கள் பொறியியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம் (Central Institute of Plastics Engineering and Technology - CIPET), சென்னையை நியமிக்க இக்குழு பரிந்துரை செய்தது. அதன்படி, PDIயின் மூன்றாம் நபர் முகமையாக, திட்டத்தின் முதல் கட்ட மொத்த மதிப்புகளில் 0.25 சதவீதத்தை கட்டணமாகக் கொண்ட CIPETஐ TNCSC நியமித்தது (ஜனவரி 2012). திட்டத்தின் இரண்டாம் மற்றும் மூன்றாம கட்டங்களில் கூட்டுவிவாதங்கள் மூலம் இந்த விகிதம் 0.20 சதவீதமாக குறைக்கப்பட்டது. ஒற்றை மூல கொள்முதல் விஷயத்தில் ஒப்பந்தப்புள்ளி நடைமுறைகளை பின்பற்றாமல் ஒப்பந்தத்தை அளிக்க உதவும் தமிழ்நாடு

[29] துறைத் தலைவர், EEE, பொறியியற் கல்லூரி, கிண்டி; மூத்த மேலாளர் (QC), TNCSC; துணை இயக்குநர், தொழில் மற்றும் வர்த்தகத் துறை மற்றும் மூத்த துணைத் தலைவர், ITCOT, சென்னை

ஒப்பந்தப்புள்ளியில் வெளிப்படைத்தன்மை சட்டம், 1998ன் பிரிவு 16(b)ன் அடிப்படையில், ஒப்பந்தப்புள்ளிகளைக் கோரமலேயே செய்யப்பட்ட CIPETன் நியமனம் TNCSCஆல் நியாயப்படுத்தப்பட்டது. நான்காம் மற்றும் ஐந்தாம் கட்டங்களுக்காக, மற்றொரு முகமையான, பாரத் டெஸ்ட் ஹவுஸ், புதுதில்லியை PDIக்காக TNCSC, ஒப்பந்தப்புள்ளி நடைமுறை மூலமாக, நியமித்தது (அக்டோபர் 2014). பாரத் டெஸ்ட் ஹவுஸுடன் செய்யப்பட்ட ஒப்பந்தத்தின் படி, முகமை PDIக்கு, ஒரு நபருக்கு ஒரு மாதத்திற்கு ₹ 16,776ஐ கட்டணம் எனும் வீதத்தில், பணியாளர்களை வழங்கவேண்டும்.

இரண்டு முகமைகளாலும் வழங்கப்பட்ட சேவைகள் ஒன்று போலவே இருந்தாலும், ஒப்பந்தப்புள்ளி நடைமுறைகளைப் பின்பற்றாமல் நியமிக்கப்பட்ட CIPETன் செலவினத் தொகை, பாரத் டெஸ்ட் ஹவுஸை விட மிக அதிகமாக இருந்தது என்பதை தணிக்கை கண்டறிந்தது. PDI சேவைகளை போட்டி விகிதங்களில் வழங்க பிற நிறுவனங்கள் இருப்பதை ஆராய TNCSC தவறியது என்பதை இது சுட்டிக்காட்டுகிறது.

ஒன்றாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்டங்களில் அதிக விலை விகிதத்தில் CIPETக்கு ஒப்படைத்ததன் விளைவாக, PDI கட்டணங்களாக ₹ 8.34 கோடி மதிப்பிடக்கூடிய தவிர்த்திருக்கக்கூடிய கூடுதல் செலவினம் அரசுக்கு ஏற்பட்டதில் முடிந்தது (**இணைப்பு 3.8**).

சென்னையிலுள்ள இந்திய அரசு ஆய்வகங்களில் CIPET மட்டுமே வீட்டு உபயோக பொருட்களின் பிளாஸ்டிக்கை சோதனை செய்வதற்கான ஆய்வகம் என அரசு மறுமொழி (மார்ச் 2019) அளித்தது. இதே மாதிரியான சேவைகளை மற்ற நிறுவனங்கள் குறைந்த விலையில் அளிக்க முன்வரும்பட்சத்தில், இந்த ஒரு அரசு நிறுவனத்ததை மட்டும் நம்பியிருத்தல் கட்டாயமில்லை என்பதால், அரசின் இந்த மறுமொழி ஏற்கத்தக்கதல்ல.

3.3.1.3 FMGக்களின் விநியோகம்

(i) காப்பீடு அற்ற கிடங்குகளில் FMGக்களின் சேமிப்பு காரணமாக ஏற்பட்ட இழப்புகள்

சேமிப்புக் கிடங்குகளில் (கிடங்குகள்) உள்ள மற்றும் சேமிப்புக் கிடங்குகளிலிருந்து விநியோகிக்கப்படும் இடங்களுக்குச் செல்லும் FMGக்களை காப்பீடு செய்வது திட்டத்தின் வழிகாட்டு நெறிகளின் பத்தி 11ல் (ஆகஸ்ட் 2011) சிந்திக்கப்பட்டது. ஒவ்வொரு 234 சட்டமன்றத் தொகுதிகளிலும் ஒரு கிடங்கில் FMGக்கள் வழங்கப்பட்டன. TNCSC அனைத்து 234 கிடங்குகளையும் ஐந்து கட்டங்களிலும்[30] ₹ 1.61 கோடிக்கு காப்பீடு செய்துள்ளது.

நான்கு மாதிரி மாவட்டங்களில்[31], திட்டத்தின் வழிகாட்டு நெறிகள் மற்றும் அரசின் அறிவுறுத்தல்களுக்கு முரணாக, மாவட்ட நிர்வாகம் FMGக்களை காப்பீடு செய்யப்பட்ட கிடங்குகளுக்குக் கூடுதலாக, பல்வேறு காப்பீடு செய்யப்படாத கிடங்குகளில் சேமித்து வைத்தன. அதற்கான காரணங்கள் தணிக்கைக்கு அளிக்கப்படவில்லை. காப்பீடு செய்யப்படாத கிடங்குகளில் சேமித்து வைக்கப்பட்ட ₹ 13.64 கோடி மதிப்புள்ள 97,831 FMGக்கள் தீவிபத்து மற்றும் வெள்ளம் காரணமாக சேதமடைந்தன என தணிக்கை கண்டறிந்தது. கிடங்குகள்

---

30 முதல் கட்டத்தில் 232 சேமிப்புக் கிடங்குகள் மட்டுமே காப்பீடு செய்யப்பட்டன.

31 சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் வேலூர்

காப்பீடு செய்யப்படாததால் மேற்கூறிய சேதமடைந்த பொருட்களுக்குண்டான இழப்புகளுக்கான, TNCSCஆல் வழங்கப்பட்ட உரிமைக்கோரலை, காப்பீட்டு நிறுவனத்தால், வழக்கமான முறையில், ஒப்புக் கொள்ள இயலவில்லை (**இணைப்பு 3.9**).

இவ்வாறு, FMGக்களை சேமிப்பு நடைமுறையில் வழிகாட்டு நெறிகளையும் அறிவுறுத்தல்களையும் பின்பற்றாதது மற்றும் கூடுதல் சேமிப்புக் கிடங்குகளுக்கான ஒப்புதல் பெறுவது மற்றும் காப்பீடு செய்வது ஆகியவற்றில் மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் வட்டாட்சியர்களின் குறைபாடு ஆகியவை ₹ 13.64 கோடி மீட்க முடியாத இழப்பிற்கு வழிவகுத்தன.

(ii) தரத்தை உறுதி செய்வதில் குறைபாடுகள் மற்றும் கோளாறடைந்த பொருட்களை சரிசெய்தல் காரணமாக ஏற்பட்ட இழப்புகள்

ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளின்படி, TNCSC மற்றும் மூன்றாம் நபர் ஆய்விற்காக நியமிக்கப்பட்ட முகமையின் முன்னிலையில் 2,500 உபகரணங்கள் உள்ள ஒவ்வொரு தொகுதியிலிருந்தும் 32 மாதிரிகள் உற்பத்தியாளரால் பரிசோதிக்கப்பட வேண்டும். மேலும், "வகைப்பிரிவு சோதனை[32]"க்காக, ஒவ்வொரு மாற்றுத் தொகுதிக்கும் ஒரு மாதிரி (5,000 பொருட்களில் ஒன்று), ஒரு அங்கீகாரம் பெற்ற ஒரு ஆய்வகத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.

3,540 மாதிரி மின்விசிறி/மின்தூண்டு அடுப்புகளில் 36 எண்ணிக்கைகள், 3,551 மாதிரி மிக்ஸிகளில் 385 எண்ணிக்கைகள் மற்றும் 3,548 மாதிரி கிரைண்டர்களில் 418 எண்ணிக்கைகள் சோதனையில் தேர்ச்சியுறவில்லை. ஆனால், தேர்ச்சியுறாத மாதிரிகள் எடுக்கப்பட்ட, மொத்தம் 5,000 உபகரணங்கள் உள்ள ஒவ்வொரு தொகுதியும் இருப்பில் எடுத்துக் கொள்ளப்பட்டன/விநியோகம் செய்யப்பட்டன என்பதை தணிக்கை கண்டறிந்தது.

முதல் கட்ட ஒப்பந்தப்புள்ளிகள் இரண்டாண்டுக்கான உத்திரவாதத்தைக் கொண்டிருந்தது; ஆனால், உபகரணங்கள் பெறப்பட்டு/விநியோகிக்கப்பட்ட பின்னர் பெறப்பட்ட உற்பத்திக் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டும் சோதனை குறைபாடு அறிக்கைகளை சமாளிக்க எந்த ஒரு விதிமுறைகளும் இல்லை. எனவே, முதல் கட்ட வழங்கலைப் பொறுத்தவரை, பாதுகாப்பு வைப்புத் தொகையிலிருந்து மூன்று சதவீதம் அபராதம் விதிக்க MD, TNCSC முடிவு செய்து, ₹ 874.38 கோடி பெருமானமுள்ள மொத்த தொகுப்பு அளவான 1.05 இலட்சம் மின்விசிறிகள், 18.60 இலட்சம் மிக்ஸிகள் மற்றும் 20.20 இலட்சம் கிரைண்டர்களில் உள்ளடங்கிய குறைபாடுடைய 21 மாதிரி மின்விசிறிகள், 372 மாதிரி மிக்ஸிகள் மற்றும் 404 மாதிரி கிரைண்டர்களுக்கான அபராதமாக ₹ 1.78 கோடியை மீட்டெடுத்தார்.

பின்வரும் கட்டங்களில், தொகுதியிலுள்ள அனைத்து குறைபாடுடைய பொருட்களும் நிலுவையிலுள்ள நிலையில் மாதிரி குறைபாடுடைய தொகுதியின் மொத்த மதிப்பும் நிறுத்தி வைக்கப்படும் என்ற ஒரு குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டு விதி ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளில் உள்ளடக்கப்பட்டது. இந்த விதியின் கீழ், இரண்டாவது, மூன்றாவது, நான்காவது மற்றும் ஐந்தாவது கட்டத்தின்போது, விநியோகத்திற்குப் பிறகு சோதனையில் தேர்ச்சி பெறாத 42 தொகுதிகளின்

---

32 வகைப்பிரிவு சோதனை என்பது NABL அல்லது BISஆல் IS:555-2006 (மின்விசிறி) , IS:4250-2004 (மிக்ஸி) மற்றும் IS:302-2-209(1994) (கிரைண்டர்) அடிப்படையில் நடத்தப்படும் ஒரு மின் சோதனை.

மதிப்பான ₹ 29.55 கோடி TNCSCயால் நிறுத்தி வைக்கப்பட்டது. எனினும், பொருட்களின் தரம் பற்றிய எந்தவொரு புகாரும் பயனாளர்களிடமிருந்து பெறப்படவில்லை என மாவட்ட ஆட்சியர்கள் உறுதி அளித்ததன் அடிப்படையில், நிறுத்தி வைக்கப்பட்ட மொத்தத் தொகையும் வழங்குநர்களுக்கு விடுவிக்கப்பட்டது என்றும் காணப்பட்டது. மார்ச் 2018 அன்றுள்ளவாறு, திட்டம் முடிவடைந்த பிறகு மாநிலத்திலுள்ள 28 மாவட்டங்களின் சேமிப்புக் கிடங்குகளில் ₹ 14.20 கோடி மதிப்புடைய சேதமடைந்த/கோளாறான FMGக்கள்[33] செயலற்று கிடந்தன என்பதை தணிக்கை கண்டது. மேலும் கூடுதலாக, உபகரணங்கள் பழுது பார்ப்பையும் விஞ்சியிருந்ததால், மாதிரி தேர்வு செய்யப்பட்ட 600 பயனாளிகளில் 21 பயனாளிகள் பொருட்களைப் பயன்படுத்தவில்லை (மின்விசிறி: 9, மிக்ஸி: 5 மற்றும் கிரைண்டர்: 7) என்பதை ஒன்று முதல் மூன்றாவது கட்டத்தின்கீழ் உள்ளடக்கப்பட்ட ஆறு மாதிரி மாவட்டங்களில் மதிப்பீடு மற்றும் பயன்நோக்கு ஆராய்ச்சித் துறையால் (Department of Evaluation and Applied Research - DEAR) நடத்தப்பட்ட ஒரு ஆய்வு வெளிப்படுத்தியது.

இவ்வாறு, உபகரணங்கள் பெறப்பட்டு/விநியோகிக்கப்பட்ட பின்னர் பெறப்பட்ட மாதிரி குறைபாடுகளை காப்பதற்கு முதல் கட்ட ஒப்பந்தத்தில் பொருத்தமான நிபந்தனை இல்லை. பின்வரும் கட்டங்களில், பொருத்தமான நிபந்தனை ஒப்பந்தத்தில் உட்படுத்தப்பட்டிருப்பினும், சேதமடைந்த/குறைபாடுடைய FMGக்களின் பிரச்சனை, உபகரணங்கள் பெறப்பட்டு/விநியோகிக்கப்பட்ட பின்னர் கவனத்திற்கு கொண்டு வரப்படுவதால், போதுமான அளவு தீர்க்கப்படவில்லை. இது, பெருமளவு எண்ணிக்கையில் சேதமடைந்த உபகரணங்கள் பெறப்பட்டு பயனாளர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டதில் முடிந்தது. மேலும், **இணைப்பு 3.10**ல் விவரிக்கப்பட்டுள்ளபடி, 28 சேமிப்புக் கிடங்குகளில் சேதமடைந்த 1,13,861 FMGக்களில் உள்ள மதிப்பான ₹ 14.20 கோடி இழப்புக்கு வழிவகுத்தது.

FMGக்கள், கிடங்குகளில் கையாளும் போது, சேதமடைந்ததாகவும், அவை உத்திரவாத காலத்திற்குள் விநியோகஸ்தர்களால் மாற்றித் தரப்பட்டன என்றும் என அரசு மறுமொழி அளித்தது (மார்ச் 2019). இந்த மறுமொழி, ₹ 14.20 கோடி மதிப்பிலான 1,13,861 FMGக்களை விநியோகஸ்தர்களால் மாற்றி தரப்படாதது பற்றி விளக்கவில்லை.

இவ்வாறு, பொருந்தக்கூடிய சட்டத்தொகுப்பு நிபந்தனைகளுக்கு இணங்காதது மற்றும் நிதி ஒழுங்கு முறைமையிலிருந்து விலகல்கள் ஆகியவற்றால் அரசுக்கு ₹ 124.43 கோடி[34] இழப்பு ஏற்பட்டது.

[33] மின்விசிறி: 45,420; மின்தூண்டு அடுப்பு: 1,768; மிக்ஸி: 38,760 மற்றும் கிரைண்டர்: 27,913

[34] அதிகப்படியான கொள்முதல்: ₹ 102.45 கோடி (+) PDI மீதான தவிர்த்திருக்கக்கூடிய செலவினம்: ₹ 8.34 கோடி (+) காப்பீடு செய்யப்படாத கிடங்குகளில் சேமித்ததால் ஏற்பட்ட இழப்பு: ₹ 13.64 crore

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறை

3.3.2 பயன் மாற்றம் செய்யப்பட்ட உடலுழைப்பு தொழிலாளர்கள் பொது நல நிதி

தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம், திட்ட வழிகாட்டு நெறிகள் மற்றும் உச்ச நீதிமன்ற உத்தரவுகளை மீறி, உடலுழைப்பு தொழிலாளர்கள் பொது நல நிதியிலிருந்து ₹ 44.24 கோடி தொகையை அரசு அலுவலகங்களுக்கு கட்டடங்கள் கட்ட பயன் மாற்றம் செய்தது.

தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும பணி நிலைமைகள்) சட்டம், 1982 பிரிவு 4ன் கீழ் தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர்கள் (கட்டுமான தொழிலாளர்கள்) நலத் திட்டத்தை தமிழ்நாடு அரசு 1994ல் வகுத்தது. கட்டுமான தொழிலாளர்களின் நன்மைக்காக பல்வேறு நல வசதிகளை[35] வழங்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும். மேற்படி சட்டத்தின் பிரிவு 6ன் கீழ் நிறுவப்பட்ட தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம் (நல வாரியம்) இத்திட்டத்தை செயல்படுத்த வேண்டும். நல வாரியத்தின் தலைமையகம் சென்னையில் உள்ளது; தொழிலாளர் அலுவலர் (சமூக பாதுகாப்பு திட்டம்) (Social Security Scheme - SSS) தலைமையிலான 32 மாவட்ட அலுவலகங்கள் வாயிலாக அவ்வாரியம் மாநிலம் முழுவதும் செயல்படுகிறது. கட்டுமான நடவடிக்கைகளில் ஈடுபடும் நபர்கள்/முகமைகள், தாம் மேற்கொள்ள உள்ள கட்டுமான பணிகளின் மதிப்பீட்டு தொகையில் ஒரு சதவீத தொகையை நல வாரியத்தின் உடலுழைப்பு தொழிலாளர்கள் பொது நல நிதிக்கு (நல நிதி) மேற்கூறிய நலத் திட்டத்தை செயல்படுத்துவதற்காக வழங்க வேண்டும். உள்ளாட்சி அமைப்புகள் கட்டட அனுமதியை அளிக்கும் நேரத்தில் அந்த தொகையை வசூலித்து நல நிதிக்கு செலுத்துகின்றன. இந்த நிதியை மாநில அரசின் வேறு எந்த வகையான செலவிற்கும் பயன்படுத்தக்கூடாது என மாண்புமிகு இந்திய உச்ச நீதிமன்றம் 7 பிப்ரவரி 2012 அன்று அளித்த தீர்ப்பில் உத்தரவிட்டது.

2015-18 காலகட்டத்தில், நலவாரியம் ₹ 1,333.92 கோடியை மொத்த வருவாயாக ஈட்டியதெற்கெதிராக விழிப்புணர்வு முகாம், திருமண உதவி, கல்வி உதவி, விபத்து மரணம் மற்றும் இறுதி சடங்கு உதவி மற்றும் இன்னும் பிறவற்றுக்கு ₹ 22,469 கோடியை செலவழித்தது. நல வாரிய செயலாளரின் செப்டம்பர் 2016 முதல் செப்டம்பர் 2017 வரையிலான காலகட்டத்திற்குரிய ஆவணங்களின் மீது செய்யப்பட்ட கூர்ந்தாய்வு (ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் 2017), நல வாரியம் திட்ட வழிகாட்டுநெறிகள் மற்றும் உச்ச நீதிமன்ற உத்தரவுகளை மீறி, தொழிலாளர் துறைக்கான அலுவலக வளாகங்களை கட்ட நல நிதியில் சேர்ந்துள்ள தொகையை பயன்படுத்தியது என்பதை கீழே விவாதிக்கப்பட்டுள்ளவாறு வெளிக்காட்டியது:

தொழிலாளர் துறைக்காக மாவட்டங்களில் மாவட்ட தொழிலாளர் அலுவலக வளாகங்களை கட்டுவது என 16 மார்ச் 2012 அன்று நடைபெற்ற தமிழ்நாடு அரசின் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறையின் சீராய்வு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. அதன்படி, பிற திட்டங்களை தவிரவும், மேற்கூறிய நலத் திட்டத்தையும் செயல்படுத்தும் தொழிலாளர் அலுவலர் SSS அலுவலகம் உள்ளிட்ட பல்வேறு அலுவலகங்களை கொண்ட ஒருங்கிணைந்த அலுவலக வளாகங்களை

---

35 (1) குழந்தை காப்பகங்கள் நடத்துதல், (2) தனிப்பட்ட விபத்து நிவாரணம், (3) வருங்கால வைப்பு நிதி, (4) தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டம், (5) ஓய்வூதிய திட்டம், (6) பதிவு செய்துள்ள உடலுழைப்பு தொழிலாளர்களின் இறுதிச் சடங்கு செலவை ஏற்க உதவுதல், (7) தொழிலாளர்களின் குழந்தைகளின் கல்வி மற்றும் திருமணத்திற்கு உதவி, (8) பதிவு செய்துள்ள பெண் தொழிலாளர்களுக்கு மகப்பேறு உதவி போன்றவை

20 மாவட்டங்களில் கட்டுவதற்கு தொழிலாளர் ஆணையர் அரசுக்கு ஆகஸ்ட் 2013ல் கருத்துரு அனுப்பினார். அந்த வளாகங்களின் ஒரு கணிசமான பகுதியை தொழிற்துறை அலுவலகம் (SSS) பயன்படுத்தும் என்பதன் அடிப்படையில், வளாகங்களை கட்ட நல நிதியில் சேர்ந்துள்ள தொகையை பயன்படுத்தலாம் என ஆணையர் முன்மொழிந்து, நல நிதியிலிருந்து ₹ 40.50 கோடி தொகையை பயன்படுத்த அரசின் ஒப்புதலை கோரினார். நல நிதியில் உள்ள தொகையை பயன்படுத்துவது குறித்த உச்ச நீதிமன்றத்தின் பிப்ரவரி 2012 தீர்ப்பை மீறி, நல நிதியை பயன்படுத்தி 20 மாவட்டங்களில் ₹ 40.50 கோடி செலவில் தொழிலாளர் அலுவலக வளாகங்களை கட்டுவதற்கு தமிழ்நாடு அரசு அக்டோபர் 2013ல் ஒப்புதல் அளித்தது. தொடர்ந்து, 28 பிப்ரவரி 2014 அன்று நடைபெற்ற தனது கூட்டத்தில் நல வாரியம் ஒப்புதலை வழங்கி, பொதுப்பணித் துறைக்கு அக்டோபர் 2015 முதல் ஆகஸ்ட் 2017 வரை நான்கு தவணைகளில் மொத்தம் ₹ 44.24 கோடி தொகையை விடுவித்தது. மே 2018 நிலையில், ஒருங்கிணைந்த தொழிலாளர் அலுவலக வளாகங்கள் 10 மாவட்டங்களில் முடிவுற்று பயன்பாடு துவங்கப்பட்டது; மீதமுள்ள மாவட்டங்களில் பணிகள் நடைபெற்று வந்தன.

கட்டுமான தொழிலாளர்களுக்கான நலத் திட்டங்களை செயல்படுத்துவதற்காக மட்டுமே நல நிதியில் உள்ள தொகையை பயன்படுத்த வேண்டும் என்ற நிலையில், நல நிதியை தொழிலாளர் துறைக்கான ஒருங்கிணைந்த தொழிலாளர் அலுவலக வளாகங்கள் கட்ட பயன்படுத்துவது என்ற தமிழ்நாடு அரசு மற்றும் நல வாரியத்தின் முடிவு நல நிதியின் பயன்பாட்டை மாற்றுவதாக இருந்தது என்பதை தணிக்கை கண்டறிந்தது. கட்டுமான தொழிலாளர்கள் நலத் திட்டத்தின் கீழ் நல நடவடிக்கைகளை தொழிலாளர் அலுவலர் (SSS) மேற்கொண்டார் என்பது உண்மையாக இருந்தாலும், அது அவரது பல்வேறு செயல்பாடுகளுள் ஒன்றாகும். மேலும், ஒருங்கிணைந்த தொழில் அலுவலக வளாகங்களில் அமைக்கப்பட்ட தொழிலாளர் துறையின் பல்வேறு அலுவலகங்களுள் தொழிலாளர் அலுவலர் (SSS) அலுவலகமும் ஒன்றாகும். எடுத்துக்காட்டாக, திருச்சிராப்பள்ளி, ஒருங்கிணைந்த தொழில் அலுவலக வளாகத்தில், தொழிலாளர் அலுவலர் (SSS) அலுவலகம் தவிரவும், மண்டல இணை ஆணையர், மண்டல துணை ஆணையர், உதவி ஆணையர், மூன்று தொழில் ஆய்வாளர்கள், ஆறு துணை/உதவி ஆய்வாளர்கள், பொறிப்பீடு ஆய்வாளர்கள் (சட்ட அளவியல்) அவர்களின் மூன்று அலுவலகங்கள் மற்றும் ஒரு சட்ட அளவியல் ஆய்வுக்கூடம் ஆகியவையும் அமைந்துள்ளன. அரசின் சொந்த நிலத்தில் இக்கட்டடங்கள் அனைத்தும் கட்டப்பட்டிருந்ததால், அதன் உடைமை உரிமைகள் தமிழ்நாடு அரசுக்கே உள்ளன என்றும் காணப்பட்டது.

இது தணிக்கையால் சுட்டிக்காட்டப்பட்டபோது, தொழிலாளர்களின் நலனுக்காக ஒரே கூரையின் கீழ் அனைத்து வசதிகளும் அளிப்பதற்காக இக்கட்டடம் கட்டப்பட்டது என அரசு மறுமொழி அளித்தது (ஜூலை 2018). கட்டடம் கட்டப்பட்டுள்ள நிலம் வாரியத்திற்கு மாற்றப்படவில்லை என்றாலும், கட்டடம் வாரியத்தின் சொத்தாகவே கருதப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

வாரியம், அதன் சொந்த நிதி ஆதாரங்களுடனும் நன்கு வரையறுக்கப்பட்ட நோக்கங்களுடனும் உள்ள ஒரு தனியான சட்ட நிறுவனம் ஆகும் என்பதால் அரசு மறுமொழி தவறானது. இலவசமாக ஒதுக்கப்பட்டு அல்லது விற்பனையின் மூலமாக உரிமையை மாற்றாமல், அரசுக்கு சொந்தமான நிலங்களில் கட்டடங்களைக் கட்டுவதற்கு வாரியத்திற்கு உரிமை இல்லை. நிலம் அரசுக்கு சொந்தமானது என்பதால், அதில் கட்டப்பட்ட வாரியத்தின் கட்டடங்கள் அவற்றின் சொத்தாகக் கருதப்படும் எனும் அரசின் கூற்று ஏற்கத்தக்கதல்ல. தொழிலாளர் வளாகத்தின் கட்டுமானத்திற்காக நல நிதியைப் பயன்படுத்தியது உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பையும் சட்டத்தையும் மீறிய செயலாகும்.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை

3.3.3 குத்தகை வாடகை திருத்தியமைக்காததால் வசூலிக்கப்படாத வருவாய்

குத்தகை வாடகையை திருத்தியமைப்பதிலும் தீர்மானிப்பதிலும் ஏற்பட்ட இயல்பு மீறிய தாமதம் காரணமாக அது திருத்தப்படாமையால், ₹ 4.10 கோடி வருவாய் வசூலிக்கப்படவில்லை.

2017-18ல் 128 வட்ட அலுவலகங்கள் தணிக்கை செய்யப்பட்டன. இவற்றுள் 58 அலுவலகத்தில், குத்தகைக்கு விடப்பட்ட நிலத்தை புதுப்பிக்காமை, குத்தகை வாடகை வசூலிப்பதில் குறைவு, இன்னும் பிறவற்றை தணிக்கை வெளிப்படுத்தியது. முக்கிய குறைபாடுள்ள மற்றும் அதிக வருவாய் இழப்பு உள்ள ஒரு பிரச்சினை கீழே விவாதிக்கப்பட்டுள்ளது. இது பிப்ரவரி மற்றும் மார்ச் 2018ல் சோழிங்கநல்லூர் மற்றும் தலைமை செயலகத்தில் பதிவுருக்களை ஆய்வு செய்ததில் தெரியவந்தது.

அரசு நிலங்களை விவசாயமல்லாத நோக்கங்களுக்காக தனி நபர்கள், தனியார் குழுமங்கள், நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு குத்தகைக்கு விடுவதை வருவாய் நிலை ஆணை எண் 24-A அனுமதிக்கிறது. குத்தகை 20 ஆண்டுகள் வரையான காலத்திற்கு இருக்கலாம் என்றும் அது கூறுகிறது. குத்தகையை புதுப்பிக்கும்போது, மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை என்ற இரண்டினுள் எது முந்தையதோ, அப்போது குத்தகை வாடகை திருத்தப்படவேண்டும். ₹ 10 இலட்சம் தொகைக்கு மேற்பட்ட மதிப்புள்ள அரசு நிலத்தின் குத்தகையை புதுப்பிக்கும் அதிகாரம் நில நிர்வாக ஆணையர்/தமிழ்நாடு அரசுக்கு உள்ளது. நடப்பிலிருக்கும் ஆணைகளின்படி (ஜூன் 1998), வர்த்தக நோக்கத்திற்காக வாடகைக்கு விடப்படும்போது, அரசு நிலங்களுக்கான குத்தகை வாடகை சந்தை விலையில் 14 சதவீதம் என்ற அளவில் இருக்க வேண்டும். குத்தகை காலம் முடிந்தபின் குத்தகைதாரரை அகற்றுதல் அல்லது குத்தகையை காலமுறையில் புதுப்பித்தல் என்பதற்குரிய நடவடிக்கையை எடுப்பதற்கு மாவட்ட நிர்வாகம் பொறுப்பாகும்.

சென்னை, வேளச்சேரி சாலையில் உள்ள 10,000 சதுரஅடி (23 சென்ட்) பரப்பு கொண்ட அரசு நிலம்[36] ஒரு சில்லறை விற்பனை நிலையத்தை நிறுவுவதற்காக இந்தியன் ஆயில் நிறுவனத்திற்கு (Indian Oil Corporation Limited - IOCL) குத்தகைக்கு[37] விடப்பட்டது (ஜனவரி 2001). குத்தகை ஒப்பந்தம் 19 பிப்ரவரி 2001 முதல் 10 ஆண்டு காலத்திற்கு ஆகும். நிலத்தின் சந்தை விலையில் 14 சதவீதம் குத்தகை வாடகையாக நிர்ணயிக்கப்பட்டது; வாடகை மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை திருத்தப்படவேண்டும். குத்தகை வாடகை முதலில் ஆண்டுக்கு ₹ 1.29 இலட்சம் என நிர்ணயம் செய்யப்பட்டது; அது முன்கூட்டியே செலுத்தப்பட வேண்டும். பிப்ரவரி 2001 முதல் செப்டம்பர் 2016 வரை IOCL அந்த விகிதத்திலேயே குத்தகை வாடகையை (₹ 20.14 இலட்சம்) செலுத்தியது.

தணிக்கை பின்வருவனவற்றை வெளிப்படுத்தியது.

- 19 பிப்ரவரி 2004, 19 பிப்ரவரி 2007 மற்றும் 19 பிப்ரவரி 2010 ஆகிய நாட்களில் துவங்கும் காலத்திற்கு குத்தகை வாடகையை திருத்த சோழிங்கநல்லூர் வட்டாட்சியர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

---

36 நில அளவை எண் 23/2B, பள்ளிக்கரணை கிராமம், காஞ்சிபுரம் மாவட்டம்.

37 IOCL மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர், காஞ்சிபுரம் ஆகியோருக்கிடையேயான குத்தகை ஒப்பந்தம் பிப்ரவரி 2001ல் கையொப்பம் இடப்பட்டது.

மேலும், பிப்ரவரி 2011ல் 10 ஆண்டு குத்தகை காலம் முடிந்தபின், குத்தகையை புதுப்பிக்கவோ, அல்லது குத்தகைதாரரை அகற்றவோ எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

- குத்தகை வாடகை வசூலித்தல் குறித்த தகவல்களை அளிக்குமாறும் குத்தகை வாடகையை திருத்துமாறும் அறிவுறுத்தி ஆகஸ்ட் 2004 மற்றும் ஜூன் 2008க்கு இடையே காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் வட்டாட்சியருக்கு நான்கு கடிதங்களை அனுப்பினார். குத்தகை வாடகை திருத்தப்படாதது குறித்து வட்டாட்சியர் மறுமொழி அளிக்கவில்லை. எனினும், மாவட்ட ஆட்சியர் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்காமல், ஜூன் 2008க்கு பின் வட்டாட்சியருக்கு நினைவூட்டுவதை நிறுத்தினார்.
- தனியார் குழுமங்கள், நிறுவனங்கள் போன்றவற்றுக்கு குத்தகைக்கு விட்ட அரசு நிலங்களை பொறுத்தவரை, குத்தகை வாடகை விவரங்கள், வாடகையை திருத்த வேண்டிய நாள், குத்தகையை புதுப்பிக்க வேண்டிய நாள் போன்ற விவரங்கள் கொண்ட, தொடர்ந்து சீராக புதுப்பிக்கப்பட்ட ஒரு தரவுத்தளத்தை வட்ட அலுவலகமோ அல்லது மாவட்ட ஆட்சியர் அலுவலகமோ வைத்திருக்கவில்லை. இப்பொருள் தொடர்பாக முழுமையான ஒரு அமைப்பு இல்லாததால் கண்காணிப்பு போதிய அளவு இருக்கவில்லை.
- இதனை தணிக்கையில் சுட்டிக்காட்டியபோது (அக்டோபர் 2017), சோழிங்கநல்லூர் வட்டாட்சியர் வாடகையில் திருத்தம் செய்து நிர்ணயிக்க தமிழ்நாடு அரசை அணுகுவது எனும் உரிய நடைமுறையை பின்பற்றாமல், திருத்தியமைக்கப்பட்ட குத்தகை வாடகைக்கான ஒரு கேட்பை உருவாக்கி (ஜனவரி 2018), பிப்ரவரி 2019 வரையிலான காலகட்டத்திற்காக ₹ 4.10 கோடி (**அட்டவணை 3.9**) செலுத்துமாறு IOCLஐ கோரினார். கோரப்பட்ட தொகையை IOCL செலுத்தவில்லை (மே 2018).

அட்டவணை 3.9: சோழிங்கநல்லூர் வட்டாட்சியர் கோரிய திருத்திய குத்தகை வாடகை

குத்தகை காலம்			குத்தகை வாடகையை திருத்த வண்டிய நாள்	ஒரு சதுர அடிக்கான வழிகாட்டு மதிப்பு*	10,000 சதுர அடிக்கான வழிகாட்டு மதிப்பு (கலம் 5 X 10,000)	நிலத்தின் மதிப்பில் 14 சதவீதத்தில் விதிக்கப்பட வேண்டிய வாடகை (வழிகாட்டு மதிப்பு) (கலம் 3 x கலம் 6 x 14 சதவீதம்)	குத்தகை ஒப்பந்தத்தின் அடிப்படையில் பழைய விகிதத்தில் வசூலிக்கப்பட்ட வாடகை	வாடகையை திருத்தாததால் வசூலிக்கப்படாத வருவாய் (கலம் 7 (-) கலம் 8)
முதல்	வரை	காலம் (ஆண்டுகள்)						
				(₹)				
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)
19/02/2004	18/02/2007	3	19/02/2004	125	12,50,000	5,25,000	3,85,668	1,39,332
19/02/2007	18/02/2010	3	19/02/2007	125	12,50,000	5,25,000	3,85,668	1,39,332
19/02/2010	18/02/2013	3	19/02/2010	2,386	2,38,60,000	1,00,21,200	3,85,668	96,35,532
19/02/2013	18/02/2016	3	19/02/2013	4,500	4,50,00,000	1,89,00,000	3,85,668	1,85,14,332
19/02/2016	18/02/2019	3	19/02/2016	3,015	3,01,50,000	1,26,63,000	85,704 (செப்டம்பர் 2016 வரை)	1,25,77,296
மொத்தம்						**4,26,34,200**	**16,28,376**	**4,10,05,824** அல்லது **₹ 4.10 கோடி**

(ஆதாரம்: சோழிங்கநல்லூர் வட்டாட்சியர் அளித்த விவரங்கள்)

இவ்வாறு, மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை குத்தகை வாடகையை திருத்தி அமைக்க பயனுள்ள நடவடிக்கையை எடுக்க சோழிங்கநல்லூர் வட்டாட்சியரும் காஞ்சிபுரம், மாவட்ட ஆட்சியரும் தவறியது, புதுப்பித்தல்/திருத்தியமைத்தல் ஆகியவற்றை கண்காணிப்பதற்கும் குத்தகை வாடகையை சரியாகவும் உரிய நேரத்திலும் வசூலிப்பதற்கும் ஒரு கட்டமைக்கப்பட்ட ஒரு முறைமை இருப்பதை உறுதி செய்ய நில நிர்வாக ஆணையரும் அரசும் தவறியது ஆகிய காரணங்களால் ₹ 4.10 கோடி வசூலிக்கப்படாமல் இருந்தது.

இப்பொருள் அரசுக்கு ஜூன் 2018 தெரிவிக்கப்பட்டது; மறுமொழி பெறப்படவில்லை (ஜனவரி 2020).

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

திருத்தணி நகராட்சி

3.3.4 உயிரி எரிவாயு மற்றும் மின் உற்பத்தி ஆலையின் குறைவான பயன்பாடு

தேவைப்படும் அளவில் மக்கும் கழிவுகள் இல்லாமையால், திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள திருத்தணி நகராட்சியில் ₹ 89.75 இலட்சம் செலவில் உயிரி எரிவாயு மற்றும் மின் உற்பத்தி ஆலையை அமைத்ததன் நோக்கம் நிறைவேறவில்லை.

கழிவு உற்பத்தியை குறைத்தல், இயன்றவரை கழிவுகளை மறுபடியும் பயன்படுத்துதல், கழிவுகளை வகை பிரித்து வீட்டிலேயே மட்க வைத்தல், உருவாகும் நிலையிலேயே வகை பிரிக்கப்பட்ட கழிவுகளை வெவ்வேறு கலன்களில் வைத்தல், வகை பிரிக்கப்பட்ட கழிவுகளை அவற்றை சேகரிப்போரிடம் அளித்தல் போன்றவை குறித்து உள்ளாட்சி அமைப்புகள் கழிவுகளை உருவாக்குவோருக்கு அறிவுறுத்த வேண்டும் என நகராட்சி திடக்கழிவு (மேலாண்மை & கையாளுதல்) விதிகள், 2000 மற்றும் அதன் திருத்தப்பட்ட விதிகள், 2016 (விதிகள்) கூறுகின்றன. கழிவுகளை கொட்டும் நிலத்தின் மீதான அழுத்தத்தை குறைப்பதற்காக, உள்ளாட்சி அமைப்புகள் கழிவுகளை சேகரித்து, அவற்றை பதப்படுத்தும் அமைப்புகளுக்கு எடுத்துச் செல்ல வேண்டும் எனவும் கழிவுகளை பதப்படுத்தி அகற்றும் அமைப்புகளை உருவாக்க வேண்டும் எனவும் அந்த விதிகள் கூறுகின்றன. நோய்களை தவிரவும், நிலத்தடி நீர் மாசுபடுதல், பசுமை இல்ல வாயுக்கள் ஆகியவற்றை கட்டுப்படுத்துவதற்காக, மாநில அரசு காலமுறையிலான சீராய்வு செய்து விதிகளை அமல்படுத்தவும், மாநில மாசு கட்டுப்பாடு வாரியம் விதிகள் பின்பற்றப்படுவதை கண்காணிக்கவும் வேண்டும். மீத்தேன் வாயு நிறைந்த உயிர்வாயு மற்றும் உயிர் உரங்களை தயாரித்து நகராட்சி திடக்கழிவுகளை அகற்றுவதற்கான ஒரு முறையாக உயிரி எரிவாயு உருவாக்கத்தை விதிகள் குறிப்பிடுகின்றன. இந்த முறை வளிமண்டலத்தில் மீத்தேன் வாயு கலப்பதை குறைத்து அதன் மூலம் சுற்றுச்சூழலை காக்கிறது. உயிரி எரிவாயு சமைக்கவும் மின்சாரத்தை உருவாக்கவும் பயன்படுத்தப்படுகிறது. உயிரி உரம் இரசாயன உரத்திற்கு மாற்றாக அமைந்து, உயிர்மை உரமாக விற்கப்படுகிறது.

திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள திருத்தணி நகராட்சி (நகராட்சி), தனது பகுதியில் ₹ 90 இலட்சம் செலவில் ஐந்து மெட்ரிக் டன் (MT) கொள்ளளவு உடைய ஒரு உயிரி எரிவாயு மற்றும் மின் உற்பத்தி ஆலையை (ஆலை) அமைக்க முடிவு

செய்தது (டிசம்பர் 2012). நாளொன்றுக்கு உருவாகும் 25 MT திடக்கழிவுகளிலிருந்து 14.36 MT மக்கும் கழிவுகளை உருவாக்கலாம் என நகராட்சி மதிப்பிட்டது. மேலும், உயிரி உரத்தின் விற்பனை மூலம் ஆண்டொன்றுக்கு ₹ 5.25 இலட்சம்[38] வருமானமாகவும், உயிரி வாயுவை பயன்படுத்துவதன் மூலம் மின்சார பயன்பாடு மற்றும் மக்கும் கழிவுகளை குப்பை கிடங்கிற்கு கொண்டு செல்லும் செலவு ஆகிய வகைகளில் ₹ 17.99 இலட்சம்[39] சேமிப்பாகவும் மதிப்பிட்டது. இத்திட்டத்தை ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டம் 2012-13ன் கீழ் மேற்கொள்ள தமிழ்நாடு அரசு ஒப்புதல் அளித்தது (மார்ச் 2013).

இயக்கும் நிலை வரை ஆலையை உருவாக்கி, ஏழு ஆண்டுகளுக்கு பராமரித்து இயக்குவதற்கான ஒப்பந்தப்புள்ளிகளை நகராட்சி கோரி (மே 2013), ₹ 89.75 இலட்சம் செலவில் ஆலையை அமைக்கும் பணியை வழங்கியது (ஜூலை 2013). ஆறு மாத காலத்தில் முடிக்க திட்டமிடப்பட்ட பணி, உள்ளபடியாக டிசம்பர் 2016ல் முடிக்கப்பட்டது. இந்த தாமதத்திற்கு, தேர்ந்தெடுக்கப்பட்ட இடத்தில் ஆலையை நிறுவுவதற்கு பொதுமக்கள் தெரிவித்த எதிர்ப்பினால் பணியை துவக்குவதில் இருந்த தாமதம் காரணம் என கூறப்பட்டது. ஒப்பந்ததாரருக்கு நகராட்சி இதுவரை (டிசம்பர் 2018) ₹ 72 இலட்சம் வழங்கியுள்ளது.

நாளொன்றுக்கு 12 MT திடக்கழிவுகள் உருவாகியிருந்தும், நகராட்சி ஆலையின் பயன்பாட்டுக்கு 0.50 MT மக்கும் கழிவுகளை மட்டுமே வழங்கியது என்பதை நகராட்சியின் 2015-17 காலகட்டத்திற்குரிய நடப்பிலுள்ள பணிகள் தொடர்பான ஆவணங்கள் மீதான தணிக்கையின் கூர்ந்தாய்வு (மார்ச் மற்றும் ஜூன் 2018) காட்டியது. சோதனை இயக்கத்தை மேற்கொள்ள ஒப்பந்ததாரர் கோரிய நாளொன்றுக்கு 2 முதல் 2.5 MT என்ற குறைந்த அளவிலான மக்கும் கழிவுகளை (செப்டம்பர் 2017) வழங்கவும் நகராட்சி தவறியது. இதன் விளைவாக, உயிரி எரிவாயுவை உற்பத்தி செய்யாமல் ஒப்பந்ததாரர் ஆலையை ஒப்படைத்தார் (செப்டம்பர் 2017). இயங்கும் நிலையில் ஆலையை ஒப்பந்ததாரர் ஒப்படைக்கவில்லை என்ற அடிப்படையில், நகராட்சி இதனை ஏற்க மறுத்தது (ஜூன் 2018).

நகராட்சி, (அ) போதிய எண்ணிக்கையில் சுகாதார ஊழியர்கள் இல்லாததன் காரணமாக, வகை பிரிக்கப்பட்ட கழிவுகளின் அளவு தேவைப்பட்ட மக்கும் கழிவு அளவைவிட குறைவாக இருந்தது, (ஆ) சுகாதாரப் பணிகளின் ஒரு பகுதியை வெளியாட்களிடம் ஒப்படைப்பதற்கான ஒப்பந்தப்புள்ளியை இறுதி செய்தபின், ஆலையை நடத்த தேவைப்படும் அளவை எட்ட இயலும், (இ) தேவையான அளவை சீரான முறையில் வழங்க துவங்கிய பின், ஆலை மின் உற்பத்தியை உருவாக்க உயிரி எரிவாயுவின் உற்பத்தியை தொடங்கும் என மறுமொழி அளித்தது (ஜூன் 2018). விரிவான திட்ட அறிக்கையை தயாரித்து, ஏற்கெனவே இருந்த பணியாளர்களை கொண்டே போதிய அளவில் மக்கும் கழிவுகள் கிடைக்கும் என்பதை உறுதி செய்து கொண்ட பின்னரே நகராட்சி ஆலையை அமைக்க முடிவு செய்தது என்பதால், இம்மறுமொழி ஏற்கத்தக்கதல்ல. மேலும், மக்கும் மற்றும் மக்காத கழிவுகளை தனித்தனியாக பிரித்து அகற்றத்திற்காக

[38] உயிர்மை உரத்தின் விற்பனை மூலம் வருவானம்: ஆண்டுக்கு175 MT x MTக்கு ₹ 3,000 வீதம் = ₹ 5.25 இலட்சம்.

[39] உயிரி எரிவாயு பயன்பாட்டினால் மின்சக்தி நுகர்வில் சேமிப்பு : ஒரு நாளுக்கு 480 யூனிட் மற்றும் ஒரு யூனிட் ₹ 5.5 வீதம், 350 நாட்களுக்கு = ₹ 9,24 இலட்சம்; ஊழியர் ஊதியம் மற்றும் போக்குவரத்தில் சேமிப்பு = ஒரு நாளுக்கு 5 MT மற்றும் ஒரு MTக்கு ₹ 500 வீதம், 350 நாட்களுக்கு = ₹ 8.75 இலட்சம். எதிர்பார்க்கப்பட்ட மொத்த சேமிப்பு = ₹ 9.24 இலட்சம் (+) ₹ 8.75 இலட்சம் = ₹ 17.99 இலட்சம்

வழங்கும் பொறுப்பை கழிவை உருவாக்குவோருக்கு அளித்தும், இதில் தவறுவோர் மீது அபராதம் விதிக்கும் வகையிலும், ஏப்ரல் 2017 முதல் ஒரு துணைவிதியை மேற்கூறிய விதிகளின் அடிப்படையில் நகராட்சி மன்றம் உருவாக்கியது.

தமிழ்நாடு அரசு, (i) ஆகஸ்ட் 2018 முதல் நகராட்சி நாளொன்றுக்கு இரண்டு MT மக்கும் கழிவுகளை ஆலைக்கு வழங்கியது, (ii) ஆலை நாளொன்றுக்கு 160 யூனிட் மின்சாரத்தை உற்பத்தி செய்தது மற்றும் (iii) தகன மேடை, இறைச்சிக்கூடம், ஆழ்துளைக்கிணறு ஆகியவற்றுக்கு மின்சக்தி பயன்படுத்தப்பட்டது என மறுமொழி அளித்தது (அக்டோபர் 2018). பதிவுருக்களின் கூர்ந்தாய்வு மற்றும் நகராட்சி அலுவலர்களுடன் நடத்தப்பட்ட கூட்டுக் களஆய்வு (ஜனவரி 2019) நாளொன்றுக்கு 1.50 MT மக்கும் கழிவுகளை பயன்படுத்தி செப்டம்பர் 2018 முதல் ஆலை இயக்கப்பட்டது என்பதை காட்டியது. எனினும், உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரத்தின் அளவு குறித்த ஆவணங்கள் நகராட்சியிடம் இருக்கவில்லை. இறைச்சிக்கூடம் குத்தகைக்கு விடப்படாததாலும், எரிவாயு தகன மேடை பயனற்று இருந்ததாலும் மின்சக்தியின் பயன்பாடு குறித்த நகராட்சி கூறியது ஏற்கத்தக்கதல்ல. மேலும், ஆலை நிறுவப்பட்ட பிறகு, ஆழ்துளைக் கிணற்றின் மின்சக்தி நுகர்வு அளவு குறையவில்லை.

இவ்வாறு, ₹ 89.75 இலட்சம் செலவில் அமைக்கப்பட்ட ஆலையின் குறைவான பயன்பாடு காரணமாக, சுற்றுச்சூழல் சீர்குலைவு, உயிரி உரத்தின் விற்பனை மூலம் எதிர்பார்க்கப்பட்ட வருவானத்தை பெறாதது மற்றும் மின்சாரம் மற்றும் கழிவுகளை கொண்டு செல்வதற்கான கட்டணங்களின் தொடர்ச்சியான செலவு ஆகிய விளைவுகள் ஏற்பட்டன.

கோயம்புத்தூர் மாநகராட்சி

3.3.5 செயற்கை ஹாக்கி விளையாட்டு புல்தரை பயன்படுத்தப்படாமை

முறையற்ற திட்டமிடல் மற்றும் பன்னாட்டு ஹாக்கி கூட்டமைப்பின் தரநிலைகளை பின்பற்றாமை காரணமாக, ₹ 3.24 கோடி செலவில் உருவாக்கப்பட்ட செயற்கை ஹாக்கி விளையாட்டு புல்தரை பயன்படுத்தப்படவில்லை.

ஒரு பணி அல்லது தொடர் பணிகளுக்கு, மொத்த மதிப்பிடப்பட்ட செலவினம் ₹ 1 கோடி தொகையைவிட அதிகமாக இருக்கும் நிலையில், ஆணையர் மாநகராட்சி மன்றம் மூலமாக அரசின் ஒப்புதலைப் பெறவேண்டும் என கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம், 1981ன் (சட்டம்) பிரிவு 100 (2) கூறுகிறது.

மாணவர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக ஒரு பள்ளி வளாகத்தில்[40] ஒரு செயற்கை ஹாக்கி புல்தரையை கோயம்புத்தூர் மாநகராட்சி (மாநகராட்சி) அமைத்திருந்தது. காலம் கடந்ததன் காரணமாக அத்தரை பயன்படுத்த இயலாததாக ஆனது; போட்டிகளை நடத்தவும் பயிற்சி அளிக்கவும் ₹ 4.42 கோடி செலவில் பன்னாட்டு ஹாக்கி கூட்டமைப்பின் (International Hockey Federation - FIH) தரநிலைகளின்படி, செயற்கை ஹாக்கி புல்தரை[41] (நீர் அடிப்படையிலானது)

[40] மாநகராட்சி ஆண்கள்& பெண்கள் மேல்நிலைப்பள்ளி, இரத்தினசபாபதிபுரம்.

[41] ஹாக்கி புல்தரை என்பது, ஹாக்கி விளையாட்டை ஆடுவதற்கு சிறந்த சூழ்நிலைகளை வழங்கும் வகையில் வடிவமைக்கப்படும், இயற்கையான புல் போன்று தோற்றமளிக்கும் செயற்கை அல்லது நூல் இழைகளால் ஆன ஒரு செயற்கை விளையாட்டு மேற்பரப்பு ஆகும்.

ஒன்றை களஅதிர் திண்டு[42] (*in-situ* shock pad) கூடிய வகையில் அமைக்க மாநகராட்சி முடிவு செய்தது (ஜூலை 2014). அனைத்து நிலை ஆட்டங்களுக்கும் பொருந்தக்கூடிய, தரம் உறுதி செய்யப்பட்ட செயற்கை புல்தரைகளுக்கான கள தரநிலைகளை FIH வகுத்தது; அவற்றுள், வேலி அமைப்பது என்பதும் அடங்கும். பொதுமக்கள் அத்துமீறி நுழைவதால் ஏற்படும் சேதத்தை தடுப்பதற்காக, வடிவமைப்பு மற்றும் தரையை அமைப்பதில் கட்டுமானத்திற்கு முந்தைய நிலையில் பாதுகாப்பு வேலி மற்றும் நுழைவு மற்றும் வெளியேற்றத்தை கட்டுப்படுத்த ஒரு வாயில் ஆகியவற்றுக்கான தேவையை தரநிலைகள் வலியுறுத்துகின்றன.

மாநகராட்சியில், நடப்பில் இருந்த பணிகள் தொடர்புடைய 2014-18 காலகட்டத்திற்குரிய ஆவணங்கள் மீதான தணிக்கையின் கூர்ந்தாய்வு (ஜூன் 2018), மேற்படி பணியின் மதிப்பிடப்பட்ட செலவு ₹ 1 கோடி தொகையைவிட அதிகமாக இருந்ததால் அதற்கு அரசின் ஒப்புதல் தேவை என இருந்தும், மாநகராட்சி மன்றத்தின் அதிகார வரையறைக்குள் அதன் ஒப்பளிப்பை மட்டுமே பெற்று, அதன் மூலம் அரசின் ஒப்புதல் கோருவதை தவிர்க்கும் நோக்கத்துடன், அப்பணி ஆறு பகுதிகளாக பிரிக்கப்பட்டது என்பதை வெளிப்படுத்தியது. அவ்வாறு பிரிக்கப்பட்ட பணிகள், தடுப்பு சுவர் கட்டுதல் (₹ 0.73 கோடி) மற்றும் கரிய மேற்பரப்பு அமைத்தல் (₹ 0.75 கோடி) ஆகிய கட்டுமான பணிகளாகவும், செயற்கை புல்தரை வழங்குதல் (தலா ₹ 0.75 கோடி மதிப்புள்ள இரண்டு தனித்தனி பணிகள்), பாலியூரித்தேன் இணைப்பி, பசை, இணைப்பு நாடா ஆகியவற்றை வழங்குதல் (₹ 0.75 கோடி), SBR ரப்பர் துகள்கள் வழங்குதல், நீர் தெளிப்பான்கள், செயற்கை ஹாக்கி புல்தரை மற்றும் அதிர் திண்டு ஆகியவற்றைஅமைத்தல் (₹ 0.69 கோடி) ஆகியவை அடங்கிய பிற வகை பணிகளாகவும் வகைப்படுத்தப்பட்டன.

கட்டுமான பணிகள் மே 2015லும் பிற வகை பணிகள் செப்டம்பர் 2015லும், ஆறு மாதத்திற்குள் முடிக்கப்பட வேண்டும் என்ற காலக்கெடுவுடன் டெண்டர் மூலம் வழங்கப்பட்டன. கட்டுமான பணிகள் ₹ 1.53 கோடி செலவில் முடிக்கப்பட்டன (மே 2016/அக்டோபர் 2016). பிற வகை பணிகளின் கீழ் வழங்கப்பட்ட ₹ 2.61 கோடி[43] மதிப்பிலான பொருட்களுக்காக, மாநகராட்சி ஒப்பந்ததாரருக்கு ₹ 1.71 கோடி வழங்கியது (டிசம்பர் 2016 - ஏப்ரல் 2018). மேற்படி செலவை மாநகராட்சி தனது சொந்த நிதியிலிருந்து மேற்கொண்டது.

கட்டுமான பணிகள் முடிவுற்று, பொருட்கள் பெறப்பட்டபோதிலும், தளத்திலுள்ள அதிர் திண்டில் ஏற்பட்ட சேதத்தின் காரணமாக புல்தரை அமைக்கப்படவில்லை. அதிர் திண்டை குறைபாடுள்ள வகையில் அமைத்தது மற்றும் சமச்சீரற்ற இணைப்பு காரணமாக அது சேதமடைந்தது ஆகியவை தொடர்பாக காரணம் கேட்கும் குறிப்பாணையை மாநகராட்சி ஒப்பந்ததாரருக்கு வழங்கியது (ஆகஸ்ட் 2017). பணித்தளத்திற்கு பாதுகாப்பு இல்லாத காரணாத்தால், ஹாக்கி விளையாடும் தளத்தில் கிரிக்கெட் விளையாடுவது உள்ளிட்ட பொதுமக்களின் அத்துமீறிய நுழைவு இருந்தது எனவும், இதனால் அதிர் திண்டு சேதமுற்றது எனவும் ஒப்பந்ததாரர் வாதிட்டார். ஹாக்கி மைதானத்திற்கு வேலி அமைக்கும் கூடுதல் மேம்பாட்டு பணிகளுக்கு ₹ 0.44 கோடி ஒப்புதல் அளிக்கப்பட்டு (ஜூன்

[42] களஅதிர் திண்டு என்பது, ரப்பர் துகள்களையும் பாலியூரித்தேன் இணைப்பியையும் பணிக்களத்தில் கலந்து அமைக்கப்படும் மிருதுவான கீழ்நிலை அடுக்கு. வழுக்கும்போதும் விழும்போதும் மென்மையை உறுதி செய்வதற்காக, அது செயற்கை தளத்திற்கு ஒரு அடிப்படை தளமாக அமைக்கப்படும்.

[43] SBR துகள்கள், பாலியூரித்தேன் இணைப்பி, பசை, இணைப்பு நாடா ஆகியவற்றை வழங்குதல் (டிசம்பர் 2015): ₹ 1.11 கோடி; செயற்கை புல்தரை வழங்குதல் (ஜூன் 2017): ₹ 1.50 கோடி.

2018), அதிர் திண்டில் மெத்தையில் பழுது நீக்கம் செய்து அதன் மீது செயற்கை புல்தரையை அமைக்கும் நடவடிக்கை தொடங்கப்பட்டது என்று மாநகராட்சி தணிக்கையின் ஒரு கேள்விக்கு (ஜூன் 2018) மறுமொழி அளித்தது (ஜூன் 2018).

பணியை பிரிப்பதன் மூலம் அரசின் ஒப்புதல் பெறும் தேவையை தவிர்ப்பதற்காக சட்டத்தின் விதிகளை மாநகராட்சி மீறியது என தணிக்கை கண்டறிந்தது. மேலும், செயற்கை தளம் அமைக்கும் பணியில் கட்டுமானத்திற்கு முந்தைய கட்டத்திலேயே பாதுகாப்பு வேலி இருக்க வேண்டியதன் தேவையை FIH தரநிலைகள் வலியுறுத்தின. ஆனால், மாநகராட்சி தான் திட்டமிட்ட பணியில் வேலி அமைப்பதை சேர்க்க தவறியதால், பொதுமக்களின் அத்துமீறிய நுழைவு நிகழ்ந்தது. இதனால், அதிர் திண்டு மீது செயற்கை புல்தரை அமைக்க இயலவில்லை; ₹ 1.50 கோடி மதிப்புள்ள செயற்கை புல்தரை, சிதைந்து போக வாய்ப்புள்ள வகையில், அது பெறப்பட்டது (ஜூன் 2017) முதல் திறந்த வெளியில் பயனற்று கிடந்தது.

இவ்வாறு, பாதுகாப்பு வேலி அமைப்பது தொடர்பாக, திட்டமிடல் என்ற துவக்க கட்டத்திலேயே FIH தரநிலைகளை பின்பற்ற மாநகராட்சி தவறியதால், ₹ 3.24 கோடி[44] செலவில் உருவாக்கப்பட்ட சொத்துக்கள் சேதமுற்றன. தளத்தைச் சுற்றிலும் வேலி அமைப்பதற்கும் மற்றும் சொத்துக்களின் பயன்பாட்டை உறுதி செய்யவும், மாநகராட்சி ₹ 0.44 கோடி மதிப்பிடப்பட்ட கூடுதல் செலவு செய்ய வேண்டியுள்ளது.

தமிழ்நாடு அரசு, இத்திட்டம் பொலிவுறு நகரங்கள் திட்டத்தின் நிதியை கொண்டு முடிக்கப்படும் என மறுமொழி அளித்தது (அக்டோபர் 2019). எனினும், முறையான திட்டமிடல் இல்லாத காரணத்தால், ₹ 3.24 கோடி செலவில் அமைக்கப்பட்ட செயற்கை ஹாக்கி புல்தரை இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக பயன்படுத்தப்படவில்லை.

3.4 வருவாய் இழப்பு

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை

கோயம்புத்தூர் மாநகராட்சி, பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் பழனி நகராட்சி

3.4.1 தவறாக மதிப்பிடப்பட்ட சொத்து வரி

சொத்து வரி தவறாக மதிப்பிடப்பட்டதால் ₹ 40.02 இலட்சம் வருவாய் இழப்பும் ₹ 67.51 இலட்சம் குறைவான வரிவிதிப்பும் ஏற்பட்டன.

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 மற்றும் தொடர்புடைய மாநகராட்சிகளுக்குரிய மாநகராட்சி சட்டங்கள், நகரம்/மாநகரத்திற்குள் அமைந்த அனைத்து கட்டடங்களுக்கும் அவற்றின் ஆண்டு மதிப்பில்[45] அந்த உள்ளாட்சி

44 ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்பட்ட தொகை, கட்டுமான பணிகளுக்காக ₹ 1.53 கோடி மற்றும் பிற வகை பணிகளுக்காக ₹ 1.71 கோடி.

45 கட்டடம் வாடகைக்கு விடப்பட்டால் கிடைக்கக்கூடிய நியாயமான வாடகை தொகை, அதன் ஆண்டு மதிப்பு என கொள்ளப்படும். அது, கட்டடத்தின் பயன்பாடு, அமைவிடம், கட்டுமான வகை, வயது ஆகியவற்றின் அடிப்படையில் கணக்கிடப்படுகிறது.

அமைப்பின் மன்றம் தீர்மானிக்கும் விழுக்காடு வீதத்தில் சொத்து வரியை விதிக்க நகராட்சிகளுக்கும் மாநகராட்சிகளுக்கும் அதிகாரம் அளிக்கின்றன. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சொந்த வருவாயில் நிலம் மற்றும் கட்டடங்களின் மீதான சொத்து வரி முக்கியமான ஒன்றாகும். 2017-18 ஆண்டில் 76 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டன. சொத்து வரி தவறாக மதிப்பிடப்பட்ட, மொத்த நிதி மதிப்பு ₹ 5.64 கோடி கொண்ட 15 நேர்வுகளை தணிக்கை கண்டறிந்தது. அவற்றுள் பெரிய அளவிலான நேர்வுகள் பின்வரும் பத்திகளில் விவாதிக்கப்பட்டுள்ளன.

(அ) கோயம்புத்தூர் மாநகராட்சி

கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம் 1981, பிரிவு 121, மாநகரத்திற்குள் அமைந்த அனைத்து கட்டடங்களுக்கும் அவற்றின் ஆண்டு மதிப்பில் மாநகராட்சி மன்றம் தீர்மானிக்கும் விழுக்காடு வீதத்தில் சொத்து வரியை விதிக்க கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு அதிகாரம் அளிக்கிறது.

ஏப்ரல் 2008 முதல் வரியின் பொதுவான திருத்தத்திற்கு உத்தரவிட்டு (நவம்பர் 2007), திருத்தத்திற்கான வழிகாட்டு நெறிகளை தமிழ்நாடு அரசு வெளியிட்டது (பிப்ரவரி 2008). அதன்படி, அனைத்து வகை கட்டடங்களுக்கும் அடிப்படை மதிப்பை[46] உயர்த்துவதன் மூலம் சொத்து வரியை திருத்தி அமைக்க மாநகராட்சி மன்றம் தீர்மானித்தது (மே 2008). மாநகராட்சியின் 2016-17 ஆண்டுக்கான தணிக்கை நடத்தப்பட்டபோது (ஜனவரி 2018), மாநகரத்தில் அமைந்திருந்த 35 நட்சத்திர அந்தஸ்துள்ள தங்கும் விடுதிகளுள் எட்டு விடுதிகள் தொடர்பான சொத்து வரி மதிப்பீடுகள் கூர்ந்தாய்வு செய்யப்பட்டன. மாநகராட்சியின் வார்டு 81ல் V.H. சாலையில் உள்ள ஒரு சொத்து தொடர்பான இரண்டு மதிப்பீடுகள் (81240820 மற்றும் 81241033), கட்டடத்தை தங்கும் விடுதி என்பதற்கு மாறாக வணிக கட்டடம் என தவறாக வகைப்படுத்தியதால், தவறானவை என்பது காணப்பட்டது. அக்கட்டடம் மார்ச் 2005 முதல் தங்கும் விடுதியாக இருந்து, செப்டம்பர் 2009 முதல் ஆகஸ்ட் 2014 வரை நட்சத்திர அந்தஸ்துள்ள விடுதி என்ற நிலையை பெற்றிருந்தது. ஏப்ரல் 2005 முதல் மார்ச் 2018 வரையிலான காலகட்டத்திற்கு தங்கும் விடுதிகள் மற்றும் வணிக கட்டடங்களுக்கு பின்பற்ற வேண்டிய அடிப்படை மதிப்பு மற்றும் உள்ளபடி பின்பற்றிய அடிப்படை மதிப்பு **அட்டவணை 3.10**ல் உள்ளவாறு இருந்தன.

அட்டவணை 3.10: சொத்து வரி மதிப்பீட்டில் அடிப்படை மதிப்பு தவறாக பின்பற்றப்பட்டமை

காலகட்டம்	பின்பற்ற வேண்டியது		உள்ளபடி பின்பற்றியது	
	சொத்தின் வகை	அடிப்படை மதிப்பு (₹/சதுர அடி)	சொத்தின் வகை	அடிப்படை மதிப்பு (₹/சதுர அடி)
ஏப்ரல் 2005 - மார்ச் 2008	தங்கும் விடுதி	7.80	வணிக கடை	6.50
ஏப்ரல் 2008 - மார்ச் 2009	தங்கும் விடுதி	8.58	வணிக கடை	7.15
ஏப்ரல் 2009 - செப்டம்பர் 2014	நட்சத்திர அந்தஸ்துள்ள தங்கும் விடுதி	33.60	வணிக கடை	7.15
அக்டோபர் 2014 - மார்ச் 2018	தங்கும் விடுதி	8.58	வணிக கடை	7.15

(ஆதாரம்: கோயம்புத்தூர் மாநகராட்சியின் தீர்மானங்கள்)

46 கட்டடங்களின் பயன்பாட்டு வகைகளுக்கு, மாநகராட்சி மன்றம் நிர்ணயிக்கும் சதுர அடி அடிப்படையிலான மாதாந்திர வாடகை மதிப்பு, கட்டடத்தின் அடிப்படை மதிப்பு எனப்படும்.

மாநகராட்சி, ஏப்ரல் 2005 - மார்ச் 2018 காலகட்டத்திற்கு சொத்தின் வகையை தவறாக பின்பற்றியதால் ₹ 73.57 இலட்சம் அளவிற்கு சொத்து வரியை குறைத்து மதிப்பிட்டது என்பதை தணிக்கை கண்டது; சொத்து வரி நிலுவையை ஆறு ஆண்டுகளுக்கு பின் வசூலிப்பதற்கு தடை உள்ளதால், மேற்படி தொகையுள் ₹ 40.02 இலட்சம் வருவாய் இழப்பு ஆகும். பெற வேண்டிய மற்றும் உள்ளபடி பெறப்பட்ட சொத்து வரி பற்றிய விவரங்கள் **இணைப்பு 3.11**ல் தரப்பட்டுள்ளன.

இதனை சுட்டிக்காட்டியபோது, கட்டடத்தின் வகையை சரிபார்த்த பிறகு, உரிய அடிப்படை மதிப்பை பின்பற்றி சொத்து வரி மதிப்பீட்டை திருத்தியமைக்க மாநகராட்சி ஒப்புக்கொண்டது (ஜூன் 2018). மேற்படி குறைபாடு, மாநகராட்சியின் வருவாய் பிரிவின் ஆவணங்களில் கட்டட பயன்பாடு பற்றிய சரியான விவரங்களை நிகழ்நிலைப்படுத்த தவறியதை காட்டியது.

(ஆ) பெருநகர சென்னை மாநகராட்சி

பெருநகர சென்னை மாநகராட்சி (GCC) சொத்து வரியை மதிப்பிடுவதற்காக ஆண்டு மதிப்பை, கட்டட அமைவிடம், வகை, பயன்பாடு, வயது போன்ற காரணிகளின் அடிப்படையில் கணக்கிடுகிறது. தணிக்கை, GCCன் மண்டலம் Vல், 2016-17 ஆண்டை சேர்ந்த 3,758 புதிய குடியிருப்பு வகை மதிப்பீடுகள் அனைத்தையும், அம்மண்டலம் வழங்கிய 7,066 வணிக உரிமங்களுடன் தொடர்புபடுத்தி கூர்ந்தாய்வு (அக்டோபர் 2017) செய்தது. வணிக உரிமம் பெற்று, தமது இடத்தை வணிகத்திற்கு பயன்படுத்திய நான்கு நபர்களின் கட்டடங்கள் சொத்து வரி விதிப்பதில் குடியிருப்புகளாக கருதப்பட்டன என்பது காணப்பட்டது. அந்த நான்கு வணிக கட்டடங்களை குடியிருப்பு கட்டடங்கள் என தவறாக வகைப்படுத்தியதால், **அட்டவணை 3.11**ல் விவரிக்கப்பட்டுள்ளவாறு, ₹ 23.20 இலட்சம் அளவிற்கு சொத்து வரி குறைவாக விதிக்கப்பட்டது.

அட்டவணை 3.11: GCC சொத்து வரி குறைவாக விதித்தமை

வரிசை எண்	மதிப்பீடு எண்	அடிப்படை விகிதம் ₹/சதுர அடி	மதிப்பிடப்பட்ட பரப்பு (சதுர அடி)	ஒரு அரையாண்டிற்கு சொத்து வரி (₹ இலட்சத்தில்)				
				விதிக்க வேண்டியது	விதித்தது	குறை விதிப்பு	காலம் (அரையாண்டுகளின் எண்ணிக்கை)	மொத்த குறை விதிப்பு
1	05-061-01167-000 (வாடகையாளர் பயன்படுத்தியது)	7.50	13,800	1.40	0.17	1.23	2012-18 (11)	13.53
2	05-058-04356-000 (உரிமையாளர் பயன்படுத்தியது/ பகுதியளவு நிரந்தரமானது)[47]	4.80	25,017	1.21	0.41	0.80	2012-18 (11)	8.80
3	05-058-07457-000 (உரிமையாளர்/ வாடகையாளர் பயன்படுத்தியது)[48]	3.00	4,440	0.15	0.10	0.05	2012-18 (11)	0.55
4	05-056-02135-000 (குடியிருப்பு/ வாடகையாளர் பயன்படுத்தியது)[49]	1.00	3,050	0.08	0.04	0.04	2014-18 (8)	0.32
	(வாடகையாளர் பயன்படுத்தியது)	3.30	900					
மொத்தம்				**2.84**	**0.72**	**2.12**		**23.20**

(ஆதாரம்: GCCன் பதிவுருக்கள்)

---

47 நிரந்தர கட்டுமானம்: 24,503 சதுர அடி (+) பகுதியளவு நிரந்தர கட்டுமானம்: 514 சதுர அடி = மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த பரப்பு: 25,017 சதுர அடி.

48 உரிமையாளர் பயன்படுத்தியது: 3,020 சதுர அடி (+) வாடகையாளர் பயன்படுத்தியது: 1,420 சதுர அடி = மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த பரப்பு: 4,440 சதுர அடி.

49 குடியிருப்பு பகுதி: 3,050 சதுர அடி (+) வணிக பகுதி: 900 சதுர அடி = மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த பரப்பு: 3,950 சதுர அடி.

சொத்து வரி குறைவாக விதிக்கப்பட்ட மேற்படி நேர்வுகள், வரி செலுத்துனர்களின் சுய மதிப்பீடு அறிக்கைகளின் சரித்தன்மையை ஆய்வு செய்ய GCCல் இருந்த முறைமை சரியாக இல்லை என்பதை காட்டின. மேலும், GCCன் வருவாய் பிரிவுக்குள் ஒருங்கிணைப்பு இல்லாததால், குடியிருப்பு வகை சொத்துக்களில் வணிக வகை செயல்பாடுகளை மேற்கொள்ள சொத்து வரியை திருத்தாமலே வணிக உரிமங்கள் வழங்கப்பட்டன.

தமிழ்நாடு அரசு, நிலுவை தொகையை வசூலிக்க GCC நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், ₹ 11.12 இலட்சம் பெறப்பட்டுள்ளதாகவும் மறுமொழி அளித்தது (நவம்பர் 2018). அடிப்படை வரைபடம் தயாரித்தல், சொத்து மற்றும் பயன்பாடு விவரத்தை தொடர்புபடுத்துதல், கட்டடவாரியான ஆய்வு ஆகியவறுக்கான திட்டத்தை ஆலோசகர் மூலம் GCC துவக்கியுள்ளதாக அரசு மேலும் தெரிவித்தது.

மேற்படி தொடர்பாக, (அ) மீதமுள்ள ₹ 12.08 இலட்சம் தொகையை பெறுதல், (ஆ) சுய மதிப்பீடு அறிக்கைகளின் சரித்தன்மையை ஆய்வு செய்ய தகுந்த நிலைகளில் கட்டுப்பாடுகளை அமைக்கும் நோக்கில், தற்போதுள்ள அமைப்பை சீராய்வு செய்தல் மற்றும் (இ) GCCன் வருவாய் பிரிவிற்குள் ஒருங்கிணைப்பை ஏற்படுத்துதல் என்பவற்றுக்காக எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த இறுதி அறிக்கை எதிர்நோக்கப்படுகிறது (பிப்ரவரி 2019).

(இ) பழனி நகராட்சி

கட்டடத்தின் அடிப்படை மதிப்பு மற்றும் கட்டடத்தின் வயது, வகை, பயன்பாடு போன்ற பிற காரணிகளின் அடிப்படையில் ஆண்டு மதிப்பு கணக்கிடப்பட்டு, அதில் விதிக்கப்பட்ட விழுக்காடு வீதத்தில் சொத்து வரி கணக்கிடப்படுகிறது. அடிப்படை மதிப்பை கணக்கிடுவதற்காக பழனி நகராட்சி, அமைவிடம், பெரும்பான்மையான பயன்பாட்டு முறை, உள்கட்டமைப்பு இருப்பு என்பவற்றின் அடிப்படையில் நான்கு மண்டலங்களாக பிரிக்கப்பட்டன. வெவ்வேறு மண்டலங்களில் உள்ள குடியிருப்பு வகை சொத்துகளுக்கு சதுர அடி அடிப்படையிலான அடிப்படை மதிப்பை நகராட்சி மன்றம் நிர்ணயம் செய்கிறது. தொழில் மற்றும் வணிக வகை சொத்துகளுக்கான அடிப்படை மதிப்பு, அதே மண்டலத்தில் உள்ள குடியிருப்பு வகை சொத்துக்களுக்குரிய அடிப்படை மதிப்பின், முறையே இரண்டு மற்றும் மூன்று மடங்கு என கணக்கிடப்படுகிறது. வரி செலுத்துனர்கள் அளித்த சுய மதிப்பீடு அறிக்கைகளின் சரித்தன்மையை நகராட்சி அலுவலர்களை கொண்டு ஆய்வு செய்த பின்னரே நகராட்சிகளின் செயல்பாட்டு அலுவலர் சொத்து வரியை மதிப்பிட வேண்டும் என்றும் வழிகாட்டுநெறிகள் கூறின.

நகராட்சி A, B, C மற்றும் D மண்டலங்களில் குடியிருப்பு வகை சொத்துக்களுக்குரிய அடிப்படை மதிப்பை சதுர அடிக்கு முறையே ₹ 1.30, ₹ 1.10, ₹ 0.85 மற்றும் ₹ 0.70 என திருத்தி அமைத்தது (ஏப்ரல் 2008).

தணிக்கைக்குரிய 2014-18 காலகட்டத்தில் செய்யப்பட்ட 1,060 புதிய மதிப்பீடுகளுள் 110 மதிப்பீடுகள் மீதான தணிக்கையின் கூர்ந்தாய்வு (ஏப்ரல் 2018), மண்டலம் Aல் இருந்த 44,856 சதுர அடி பரப்புள்ள, புதிதாக கட்டப்பட்ட (ஏப்ரல் 2014) ஒரு வணிக கட்டடம் (மதிப்பீடுகள் எண் 21289, 21290, 21291 மற்றும் 21292) தொடர்பான நேர்வில், கட்டடம் அமைந்த மண்டலம் Aக்கு உரிய சதுர அடிக்கு ₹ 1.30 என்ற அடிப்படை மதிப்புக்கு மாறாக மண்டலம் Dக்கு உரிய சதுர அடிக்கு ₹ 0.70 என்ற மதிப்பை நகராட்சி பின்பற்றியதை காட்டியது.

இதனால், ஏப்ரல் 2014 முதல் மார்ச் 2018 வரை காலகட்டத்திற்குரிய குறைவாக சொத்து வரி விதிப்பு **இணைப்பு 3.12**ல் கூறப்பட்டவாறு, ₹ 10.76 இலட்சம் ஆகும்.

தமிழ்நாடு அரசு, மதிப்பீடுகள் திருத்தப்பட்டுவிட்டன எனவும் திருத்தப்பட்ட சொத்து வரியை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது எனவும் மறுமொழி அளித்தது (ஆகஸ்ட் 2018). எனினும், குறைவாக விதிக்கப்பட்ட வரி வசூலிக்கப்படவில்லை (ஆகஸ்ட் 2018). உரிய அடிப்படை மதிப்பை பின்பற்றாதது, சுய மதிப்பீடு அறிக்கைகளின் சரித்தன்மையை உறுதி செய்ய உரிய நிலைகளில் போதுமான கட்டுப்பாடுகளை அமைக்க உயர்நிலை அலுவலர்கள் தவறியதை காட்டியது.

தேவிகா

(தேவிகா நாயர்)
முதன்மை கணக்காய்வு தலைவர்
(பொது மற்றும் சமூகப்பிரிவு தணிக்கை),
தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி

சென்னை
நாள் 5 மார்ச் 2020

மேற்கையொப்பமிடப்பட்டது

(ராஜீவ் மெஹரிஷி)
இந்திய கணக்காய்வு மற்றும்
தணிக்கைத் துறைத் தலைவர்

புது டில்லி
நாள் 9 மார்ச் 2020

இணைப்புகள்

இணைப்பு 1.1

(பார்வை: பத்தி 1.5.2; பக்கம் 4)

நிலுவையிலுள்ள ஆய்வறிக்கைகள் மற்றும் தணிக்கை பத்திகளின் துறைவாரியான விவரங்கள்

வரிசை எண்	துறையின் பெயர்	நிலுவையின் எண்ணிக்கை	
		ஆய்வறிக்கைகள்	தணிக்கை பத்திகள்
1	ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்	194	1,040
2	பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலன்	112	359
3	கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு	115	252
4	நிதி	47	96
5	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலம்	686	3,147
6	உயர் கல்வி	355	1,554
7	உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை	401	1,337
8	வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி	34	122
9	தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு	69	144
10	சட்டம்	7	19
11	நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்	207	464
12	பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தம்	8	22
13	திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள்	20	43
14	பொது	18	40
15	வருவாய்	1,525	5,714
16	ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி	63	222
17	பள்ளிக் கல்வி	491	1,781
18	சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டம்	217	756
19	தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி	58	265
20	சுற்றுலா, பண்பாடு மற்றும் சமய அற நிலையங்கள்	47	151
21	மாற்றுத் திறனாளிகள் நலம்	90	368
22	இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாடு	31	109
23	சிறப்புத் திட்டச் செயலாக்கம்	3	13
	மொத்தம்	**4,798**	**18,018**

இணைப்பு 2.1

(பார்வை: பத்தி 2.1.5; பக்கம் 18)

மாவட்ட வாரியான பார்வையிடப்பட்ட அலுவலகங்கள்

வ. எண்	காவல் துறை	போக்குவரத்து துறை	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை	நெடுஞ்சாலைகள் துறை
சென்னை மாவட்டம்				
1	காவல்துறை ஆணையர் அலுவலகம், வேப்பேரி, சென்னை	இணை போக்குவரத்து ஆணையர் (தெற்கு), இணை போக்குவரத்து ஆணையர் (வடக்கு)	இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை, இராயப்பேட்டை அரசு பொது மருத்துவமனை, கீழ்ப்பாக்கம் மற்றும் ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள்	கோட்டப் பொறியாளர், நெடுஞ்சாலைகள் (கட்டுமானம் & பராமரிப்பு), சென்னை நகர சாலைகள், சென்னை
2	அடையாறு, திருமங்கலம், பாண்டி பஜார், கிண்டி, பழவந்தாங்கல், குரோம்பேட்டை, GNT சாலை, பூந்தமல்லி, யானைக்கவுனி, இராயபுரம், கோயம்பேடு, வண்ணாரப்பேட்டை, கீழ்ப்பாக்கம், அண்ணா நகர் மற்றும் அண்ணா சதுக்கம் போக்குவரத்து புலனாய்வுப் பிரிவுகள்	மாவட்ட ஆட்சியர்		ஆணையர், பெருநகரசென்னை மாநகராட்சி (பேருந்துவழித்தடங்கள்)
3		RTO மேற்கு, வடக்கு, மீனம்பாக்கம்		
கடலூர் மாவட்டம்				
4	காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலகம், கடலூர்	மாவட்ட ஆட்சியர்	சுகாதார சேவைகள் இணை இயக்குநர், கடலூர்	கோட்டப் பொறியாளர், நெடுஞ்சாலைகள் (கட்டுமானம் & பராமரிப்பு) துறை, கடலூர்
5	பண்ருட்டி, பெண்ணாடம், புதுச்சத்திரம், இராமநத்தம், வடலூர், விருத்தாசலம், காடாம்புலியூர், திருப்பாப்புலியூர், நெல்லிக்குப்பம், வேப்பூர் மற்றும் கடலூர் பழைய நகர காவல் நிலையங்கள்	RTO (கடலூர்), பண்ருட்டி மற்றும் விருத்தாசலம் பிரிவு அலுவலகங்கள்	அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை, கடலூர், அரசுவட்ட (Taluk) மருத்துவமனை, விருத்தாசலம், திட்டக்குடி மற்றும் பண்ருட்டி	ஆணையர், கடலூர் நகராட்சி
கோயம்புத்தூர் மாவட்டம்				
6	காவல்துறை ஆணையர் அலுவலகம், கோயம்புத்தூர்	மாவட்ட ஆட்சியர்	சுகாதார சேவைகள் இணை இயக்குநர், கோயம்புத்தூர்	கோட்டப் பொறியாளர், நெடுஞ்சாலைகள் (கட்டுமானம் & பராமரிப்பு) துறை, கோயம்புத்தூர்
7	காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலகம், கோயம்புத்தூர்	RTO, தெற்கு மற்றும் வடக்கு மற்றும் பொள்ளாச்சி	கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை	ஆணையர், கோயம்புத்தூர் மாநகராட்சி
8	கோயம்புத்தூர் நகரம் கிழக்கு மற்றும் மேற்கு போக்குவரத்து புலனாய்வுப் பிரிவுகள்		அரசு மாவட்ட மருத்துவமனை, பொள்ளாச்சி	
9	துடியலூர், பொள்ளாச்சி கிழக்கு, கவுந்தம்பட்டி, பெரியநாயக்கன் பாளையம், சூலூர், காரமடை, மேட்டுப்பாளையம், அன்னூர் மற்றும் கோவில்பாளையம் காவல்நிலையங்கள்		அரசு வட்ட (Taluk) மருத்துவமனை, மேட்டுப்பாளையம்	
புதுக்கோட்டை மாவட்டம்				
10	காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலகம், புதுக்கோட்டை	மாவட்ட ஆட்சியர்	சுகாதார பணிகள் இணை இயக்குநர், புதுக்கோட்டை	கோட்டப் பொறியாளர், நெடுஞ்சாலைகள் (கட்டுமானம் & பராமரிப்பு) துறை, புதுக்கோட்டை
11	ஆலங்குடி,வெள்ளனூர், விராலிமலை, கீரனூர், திருமய்யம், திருகோகர்ணம், அன்னவாசல், அறந்தாங்கி, கந்தர்வக்கோட்டை மற்றும் மாத்தூர் காவல் நிலையங்கள்	RTO (புதுக்கோட்டை) மற்றும் இலுப்பூர் பிரிவு அலுவலகம்	புதுக்கோட்டை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, அரசு மருத்துவமனை, அறந்தாங்கி மற்றும் அரசு வட்ட (Taluk) மருத்துவமனை, விராலிமலை	ஆணையர், புதுக்கோட்டை நகராட்சி

இணைப்பு 2.2

(பார்வை: பத்தி 2.1.5.1; பக்கம் 18)

மாதிரி தேர்வுக்கான முறை

RADMS என்பது, காவல், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் அவசரகால ஆதரவு ஆகிய துறைகள் சாலை விபத்து விவரங்களை பதிவேற்றுவதற்காக பயன்படுத்தும் இணையதள அடிப்படையிலான மென்பொருள் ஆகும். பல்வேறு மாவட்டங்களில் சாலை பாதுகாப்பு நடவடிக்கைகளின் செயல்திறன் பற்றிய உண்மை நிலையை RADMS தரவுகள் அளிக்கின்றன. அதனால், சாலை பாதுகாப்பு செயல்பாட்டின் மாவட்டவாரியான தரவுகள், மாவட்டங்களை '1' முதல் '4' என்ற அளவில் கணினிவழி பகுப்பாய்வு முறை மூலம் வரிசைப்படுத்த பயன்படுத்தப்பட்டன; இதில், '1' என்பது மிக மோசமானது மற்றும் '4' என்பது மிக உயர்ந்தது என்று குறிக்கப்பட்டது. மாவட்டங்களை வரிசைப்படுத்துவதில் பின்பற்றப்பட்ட வழியலகுகள் பினவருமாறு:

(i) உயிரிழப்பு இருந்த விபத்துகளில் உயிரிழப்புகளின் எண்ணிக்கை,
(ii) மொத்த விபத்துகளில் உயிரிழப்புகள்,
(iii) விபத்துக்குள்ளான சம்பந்தப்பட்ட தகுதிச் சான்றிதழ் இல்லாத வாகனங்கள்,
(iv) மொத்த வாகனங்களில் உயிரிழப்பு இருந்த விபத்துக்குள்ளான வாகனங்கள்,
(v) குடிபோதையில் வாகனம் ஓட்டியதால் ஏற்பட்ட விபத்துகள்,
(vi) பொன்னான நேரத்திற்குப் பிறகு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட விபத்தில் பாதிக்கப்பட்டவர்கள்,
(vii) தேசிய நெடுஞ்சாலைகளில் விபத்துகளின் விழுக்காடு,
(viii) மாநில நெடுஞ்சாலைகளில் ஏற்பட்ட விபத்துகளின் எண்ணிக்கையின் விழுக்காடு,
(ix) ஒற்றை வழி, இரட்டை வழி மற்றும் நான்கு வழிச் சாலைகளில் விபத்துகளின் எண்ணிக்கை,
(x) அடிக்கடி விபத்து நடக்கும் பகுதிகளின் எண்ணிக்கை மற்றும்
(xi) அடிக்கடி விபத்து நடக்கும் பகுதிகளில் நேர்ந்த உயிரிழப்புகள்.

மாநிலம் தெற்கு, மத்திய மற்றும் வடக்கு என மூன்று மண்டலங்களாக பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு மண்டலத்திலிருந்தும் சாலை பாதுகாப்பு செயல்திறன் கூறளவுகளின் மொத்த மதிப்பில் மிகவும் குறைவான மதிப்பெண் பெற்ற ஒரு மாவட்டம் தேர்ந்தெடுக்கப்பட்டது.

(அ) வடக்கு மண்டலம் - கடலூர்,
(ஆ) மத்திய மண்டலம் - கோயம்புத்தூர்
(இ) தெற்கு மண்டலம் - புதுக்கோட்டை.

மேலும், மிகவும் அதிகமான மதிப்பெண் பெற்ற ஒரு மாவட்டம் தேர்ந்தெடுக்கப்பட்டது.

(ஈ) சென்னை.

இணைப்பு 2.3

(பார்வை: பத்தி 2.1.9.1; பக்கம் 46)

சென்னை மாவட்டத்தில் சோதனை ஆய்வு செய்யப்பட்ட சாலைகள்/ பகுதிகளில் IRC குறியீட்டின்படி இல்லாத சாலை பாதுகாப்பு நடவடிக்கைகள்

<table>
<tr><th rowspan="2">வரிசை எண்</th><th rowspan="2">சாலையின் பெயர்</th><th colspan="2">சாலைவழித் தடைகள்</th><th colspan="3">வாகனப்பாதை ஒதுக்கீடுகள்</th><th rowspan="2">பாதசாரி வசதிகளில் ஆக்கிரமிப்பு</th><th rowspan="2">இடைத் தளங்களுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகள்</th><th rowspan="2">முன்னெச்சரிக்கை குறியீடு இல்லாத வேகத் தடைகள்</th></tr>
<tr><th>உயர்த்தப்பட்ட நடைபாதை குறியீடுகள் மற்றும் தடைக் குறியீட்டுப் பலகைகள்</th><th>சாலைவழித் தடைகள் இல்லாதது</th><th>சாலை / அம்புக் குறியீடுகள் அமைக்கப் படாதவை</th><th>ஏற்பு சாலைகள் தமனி சாலைகளின் நுழைவாயிலில் எச்சரிக்கைப் பலகைகள் பொறுத்தப் படாதவை</th><th>வாகனங்களை நிறுத்தி ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட வண்டிப்பாதைகள் மற்றும் 2.5 மீ என்ற தர நிலைக்கு பொருந்தாத சாலை விளிம்புகள்</th></tr>
<tr><td></td><td>IRC குறியீடு எண்</td><td colspan="2">67-2010</td><td colspan="3">35-2015</td><td>67-2010 மற்றும் 35-2015</td><td>SP 41-1994</td><td>99-1988 மற்றும் 67-2010</td></tr>
<tr><td>1</td><td>GST சாலை (SHU 88)</td><td>3 பகுதிகள்</td><td>6 பகுதிகள்</td><td>12 பகுதிகள்</td><td>4 பகுதிகள்</td><td>..</td><td>4 பகுதிகள்</td><td>4 பகுதிகள்</td><td>6 பகுதிகள்</td></tr>
<tr><td>2</td><td>GNT சாலை (SHU 87)</td><td>..</td><td>5 பகுதிகள்</td><td>8 பகுதிகள்</td><td>..</td><td>12 பகுதிகள்</td><td>15 பகுதிகள்</td><td>4 பகுதிகள்</td><td>..</td></tr>
<tr><td rowspan="8">3</td><td colspan="9">சென்னை மாநகராட்சி - பேருந்து வழித்தட சாலைகள்</td></tr>
<tr><td>(i) உத்தமர் காந்தி சாலை</td><td colspan="2">3 இடங்கள்</td><td colspan="3">5 இடங்கள்</td><td>3 இடங்கள்</td><td>2 இடங்கள்</td><td>..</td></tr>
<tr><td>(ii) ஆலந்தூர் சாலை</td><td colspan="2">2 இடங்கள்</td><td colspan="3">3 இடங்கள்</td><td>1 இடம்</td><td>1 இடம்</td><td>..</td></tr>
<tr><td>(iii) ரேஸ் கோர்ஸ் சாலை</td><td colspan="2">2 இடங்கள்</td><td colspan="3">1 இடம்</td><td>1 இடம்</td><td>1 இடம்</td><td>..</td></tr>
<tr><td>(iv) கிழக்கு இராமநாதன் சாலை</td><td colspan="2">2 இடங்கள்</td><td colspan="3">1 இடம்</td><td>1 இடம்</td><td>..</td><td>..</td></tr>
<tr><td>(v) வாலாஜா சாலை</td><td colspan="2">5 இடங்கள்</td><td colspan="3">..</td><td>4 இடங்கள்</td><td>3 இடங்கள்</td><td>..</td></tr>
<tr><td>(vi) உஸ்மான் சாலை</td><td colspan="2">1 இடம்</td><td colspan="3">2 இடங்கள்</td><td>..</td><td>..</td><td>..</td></tr>
<tr><td>(vii) சர் தியாகராயா சாலை</td><td colspan="2">3 இடங்கள்</td><td colspan="3">2 இடங்கள்</td><td>..</td><td>4 இடங்கள்</td><td>..</td></tr>
</table>

இணைப்பு 2.4

(பார்வை: பத்தி 2.1.10.2 (அ) மற்றும் (ஈ); பக்கங்கள் 53 மற்றும் 55)

மாதிரி மாவட்டங்களில் சோதனை சரிபார்ப்பு செய்யப்பட்ட மருத்துவமனைகளின் அவசர கால சிகிச்சை மையங்களில் போதுமானதாக இல்லாத கருவிகளின் விவரங்கள்

வரிசை எண்	கருவியின் பெயர்	அரசு ஆணை வழிகாட்டுநெறிகளின் படி தேவையானவை	கருவிகள் இருந்த எண்ணிக்கை									
			RGGGH	கீழ்ப்பாக்கம் MCH	GH, இராயப்பேட்டை	ஸ்டான்லி MCH	கோயம்புத்தூர் MCH	புதுக்கோட்டை MCH	GH, அறந்தாங்கி	GH, கடலூர்	GH, விருத்தாசலம்	GH, பொள்ளாச்சி
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)	(12)	(13)
1	மொபைல் இமேஜ் இன்டென்சிபையர் (சி-ஆர்ம்) - துணை அமைப்புகளுடன்	**1**	1	1	0	1	0	0	0	3	0	1
2	தள்ளுவண்டி அடிப்படையிலான 3 D அல்ட்ராசோனோகிராபி	**1**	1	1	1	0	0	0	0	1	0	0
3	இருட்டு அறை வசதியுடன் கூடிய 500 mA எக்ஸ் ரே இயந்திரம்	**1**	1	1	1	1	0	1	0	1	0	1
4	CT ஸ்கேன் மல்ட்டி-ஸ்லைஸ்	**1**	1	0	1	1	0	1	0	1	0	0
5	100 mA கையடக்க எக்ஸ் ரே கருவி	**1**	1	0	0	0	0	1	0	1	1	0
6	அறுவை சிகிச்சை அரங்க மேஜை- எலும்பியல் இணைப்புடன் கூடிய ஒளி ஊடுறுவும் மேற்பகுதி கொண்ட 4 பிரிவுகள்	**1**	1	0	0	1	0	0	0	1	0	1
7	கட்டரைஸேசன் கருவி	**2**	2	0	0	1	0	0	0	2	0	0
8	அறுவை சிகிச்சை அரங்கில் நிழலற்ற மேற்கூரை விளக்குகள்	**2**	2	0	2	1	0	0	0	2	0	1
9	உயர் வெற்றிட உறிஞ்சு இயந்திரம்	**2**	2	2	0	0	0	4	0	1	0	0

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)	(12)	(13)
10	6-8 மீஅலைவரிசை காண்திரை கொண்ட மயக்கநிலை கருவி	**2**	2	2	0	0	0	2	0	4	0	0
11	காற்றுப் பட்டை	**2**	2	0	0	0	0	0	0	0	0	0
12	பொது அறுவை சிகிச்சை கருவிகள் (செட்)	**2**	2	0	2	2	0	0	0	0	2	0
13	மார்பறை திறப்பு அறுவை சிகிச்சை கருவி (செட்)	**1**	1	0	0	0	0	0	0	0	0	0
14	முதுகுத் தண்டு அறுவை சிகிக்சை கருவிகள் (செட்)	**1**	1	0	1	0	0	0	0	1	0	0
15	மின் துளைக் கருவி & மின் இரம்பம்	**1**	1	0	1	0	0	0	0	0	0	1
16	மண்டை திறப்புக் கருவி (செட்)	**2**	2	0	1	1	0	0	0	0	0	0
17	சிராய்கள் மற்றும் இழுவை	**2**	2	0	2	2	0	0	0	0	0	0
18	ஆய்வகம், தானியங்கி இரத்த வாயு பகுப்பாய்வி	**1**	1	1	0	0	0	3	0	0	0	0
19	தானியங்கி உயிர் பகுப்பாய்வி	**1**	1	1	0	0	0	1	0	0	1	0
20	நோயாளி வெதுவெதுப்பூட்டும் அமைப்பு	**1**	1	0	0	0	0	0	0	0	0	0
21	அதிர்வுப் பெட்டி	**2**	2	2	1	0	1	22	0	2	0	0
22	அறுவை சிகிச்சை நுண்ணோக்கி	**1**	1	0	0	0	0	0	0	0	0	0
23	அறுவை சிகிச்சையில் பயன்படும் மேல் விளக்குகள்	**2**	2	0	0	0	0	0	0	0	0	0
24	ஃபவுலர் படுக்கை	**20**	20	0	0	20	8	10	0	6	0	0
25	5 காண்திரைகள் & 4 அலைவரிசைகள் கொண்ட இறங்கும் வசதியுள்ள 10 படுக்கைகள் உள்ள மீட்பு அலகு	**தேவை**	2	0	0	0	0	0	0	0	0	0
26	மறுசீரமைப்பு கருவி - SW மின்தீய்பு மருத்துவம் (Diathermy), IFT கருவி, கழுத்து மற்றும் கீழ்முதுகு இழுவைக்கருவி மற்றும் உடற்பயிற்சி மருத்துவம்	**தேவை**	1	0	1	1	1	0	0	0	0	0

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)	(12)	(13)
27	இரத்தவங்கி	**தேவை**	1	1	1	1	1	1	0	1	0	1
	நுண்ணுயிரியல் வசதி			1	1	0	1	1	0	1	0	1
28	ஏற்புத்தன்மையுடைய காற்றோட்ட தொழில்நுட்பத்துடன் கூடிய வென்ட்டிலேட்டர்	**6**	6	6	1	3	6	1	0	2	0	0
29	ET CO2ஐ உள்ளடக்கிய பல கூறளவு காண்பொறி	**6**	6	6	1	2	0	0	0	0	0	0
30	அடுக்கமைவு காற்று ஓட்டம் - கட்டக அரங்கம்	**1**	1	0	1	0	0	0	0	0	0	0
31	8 மணி நேர மின் பாதுகாப்பு	**1**	1	0	1	0	1	0	0	0	0	0
32	LAN, கட்டமைப்பு வலை மற்றும் அகண்ட அலைவரிசை வசதி, மின் அச்சுப் பொறி, UPS ஆகியவற்றுடன் கூடிய கணினி அமைப்பு	**6**	6	6	0	0	0	0	0	0	0	0
33	தொலைபேசி, இன்டர்காம், அலைபேசி	**தேவை**	1	1	0	0	1	0	0	1	0	0
34	ஆக்ஸிஜன், நைட்ரஸ் ஆக்ஸைடு, அழுத்தப்பட்ட காற்று மற்றும் வெற்றிடம் என்பவற்றுக்கான மையப்படுத்தப்பட்ட அமைப்பு	**தேவை**	1	1	0	1	1	0	0	1	1	0
35	மூச்சுப் பெருங்குழாய் திறப்புத் தொகுதி	**5**	5	0	1	5	0	0	0	0	0	0
36	குருதி வடிப்புத் தொகுதி	**6**	6	0	0	6	0	0	0	0	0	0
37	ECG கருவி	**1**	1	1	1	1	1	1	0	1	1	1
38	நரம்புகள் தூண்டும் கருவி	**2**	2	2	1	2	0	0	0	0	0	0
39	நோயாளிகளை இடம் மாற்றுவதற்கான படுக்கை / தள்ளுவண்டி	**தேவை**	1	0	0	0	1	0	0	0	0	1
	இருந்த வகைவாரியான கருவிகளின் மொத்தம்	**39**	**39**	**16**	**19**	**19**	**10**	**12**	**0**	**18**	**5**	**8**
	இல்லாத கருவிகள்		0	23	20	20	29	27	39	21	34	31
	இருந்த வகைவாரியான கருவிகளின் விழுக்காடு		*100*	*41*	*49*	*49*	*26*	*31*	*0*	*46*	*13*	*21*
	***இல்லாத* வகைவாரியான கருவிகளின் விழுக்காடு**		*0*	*59*	*51*	*51*	*74*	*69*	*100*	*54*	*87*	*79*

MCH: மருத்துவக் கல்லூரி மருத்துவமனை; GH: அரசு மருத்துவமனை; RGGGH: ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனை

இணைப்பு 2.5

(பார்வை: பத்தி 2.1.10.2 (ஆ); பக்கம் 54)

மாதிரி மாவட்டங்களில் சோதனை ஆய்வு செய்யப்பட்ட மருத்துவமனைகளின் அவசர கால சிகிச்சை மையங்களில் போதுமானதாக இல்லாத ஊழியர்களின் விவரங்கள்

வரிசை எண்	ஊழியர்கள் வகை	பதவி	அரசு ஆணை 122ன் படி தேவையானவை	பணியில் இருந்தவர் எண்ணிக்கை									
				RGGGH	கீழ்ப்பாக்கம் MCH	GH, இராயப்பேட்டை	ஸ்டான்லி MCH	கோயம்புத்தூர் MCH	புதுக்கோட்டை MCH	GH, அறந்தாங்கி	GH, கடலூர்	GH, விருத்தாசலம்	GH, பொள்ளாச்சி
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)	(12)	(13)	(14)
1	சிறப்பு நிபுணர்	பொது மருத்துவர்	2	4	2	0	0	0	0	0	0	0	1
2		எலும்பு மூட்டு மருத்துவர்	4	4	4	0	0	0	0	0	8	0	0
3		மயக்க மருத்து அளிப்பவர்	3	6	0	0	0	0	0	0	0	0	0
4		விபத்து மருத்துவ அதிகாரி	4	30	3	0	0	0	1	0	0	0	0
5	செவிலி பணியாளர்கள்	செவிலியர்	12	100	0	0	0	0	0	0	8	0	1
6		செவிலியர் உதவியாளர்கள்	4	24	0	0	0	0	0	0	3	0	0
7	துணை மருத்துவ பணியாளர்	மருந்தாளுநர்	1	1	0	0	0	0	0	0	0	0	0
8		அறுவை சிகச்சை அரங்க தொழில்நுட்ப வல்லுநர்	3	10	0	0	0	0	0	0	2	0	0
9		ஆய்வக தொழில் நுட்ப வல்லுநர்	2	4	1	0	0	0	0	0	1	0	0
10		கதிர்படப் பதிவாளர்	3	4	0	0	0	0	0	0	1	0	0
11		மருத்துவமனை ஊழியர்	6	6	0	0	0	0	0	0	1	0	1
12		சுகாதார ஊழியர்	6	6	0	0	0	0	0	0	0	0	0
13		அமைச்சுப்பணி ஊழியர் (கணினி அறிவுடன் கூடியவர்)	1	1	0	0	0	0	0	0	0	0	0
14		உடற்பயிற்சி மருத்துவர்	2	2	0	0	0	0	0	0	0	0	0
15		மாவுகட்டு தொழில்நுட்ப ஊழியர்	4	4	0	0	0	0	2	0	1	0	0
16	மற்றவர்கள்	பாதுகாப்பு ஊழியர்கள்	4	8	0	0	0	4	0	0	0	0	0
		பெரு மொத்தம்	**61**	**214**	**10**	**0**	**0**	**4**	**3**	**0**	**25**	**0**	**3**
		பணியமர்த்தப்படாத ஊழியர்கள்		**0**	**51**	**61**	**61**	**57**	**58**	**61**	**36**	**61**	**58**
		(பணியமர்த்தப்படாத ஊழியர்களின் விழுக்காடு)		*0*	*84*	*100*	*100*	*93*	*95*	*100*	*59*	*100*	*95*

MCH: மருத்துவக் கல்லூரி மருத்துவமனை; GH: அரசு மருத்துவமனை; RGGGH: ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனை

இணைப்பு 2.6

(பார்வை: பத்தி 2.1.12.2; பக்கம் 61)

கூட்டு நேரடி ஆய்வின்போது, காணப்பட்ட/ மாவட்ட சாலை பாதுகாப்பு குழுவால் பரிந்துரைக்கப்பட்டு செயல்படுத்தப்படாத சாலை பாதுகாப்பு நடவடிக்கைகளின் விவரங்கள்

மாவட்ட சாலை பாதுகாப்பு குழு (DRSC) கூட்ட நாள்	புதுக்கோட்டை கூட்டு நேரடி சரிபார்ப்பு : ஜூலை 2018 DRSC கூட்டம் : நவம்பர் 2015						கடலூர் கூட்டு நேரடி சரிபார்ப்பு: ஜூலை 2018 DRSC கூட்டம்: ஜூன் மற்றும் நவம்பர் 2017 மற்றும் மார்ச் 2018		கோயம்புத்தூர் கூட்டு நேரடி சரிபார்ப்பு: ஆகஸ்டு 2018 DRSC கூட்டம் : பிப்ரவரி 2015			
தேசிய நெடுஞ்சாலை (NH) / மாநில நெடுஞ்சாலையின்(SH) எண்	SH 29	SH 29	SH 26	SH 26	SH 71	SH 71	NH	SH 138	SH 15	பிரதான மாவட்ட சாலை (MDR) 361	SH	SH
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)	(12)	(13)
சாலையின் பெயர்	தஞ்சாவூர் - சாயல்குடி சாலை	தஞ்சாவூர் - சாயல்குடி சாலை	திருச்சி -புதுக் கோட்டை - அறந்தாங்கி -மீமீசல்	திருச்சி- புதுக்கோட்டை- அறந்தாங்கி - மீமீசல்	முசிறி -குளித்தலை- புதுக்கோட்டை- சேதுபவசத்திரம் சாலை	முசிறி -குளித்தலை- புதுக்கோட்டை- சேதுபவசத்திரம் சாலை	கடலூர்-சிதம்பரம்	மலை சிறைச்சாலை- வெள்ளக்கரை- குமலங்குளம்	மேட்டுப்பாளையம் - சத்தியமங்கலம்	..	சேலம் -கொச்சின் சாலை	ப்ரூக் பாண்டு சாலை
இடம்	கட்டுமாவடி சந்திப்பு	அறந்தாங்கி, GH அருகில்	விலியனூர் - குட்டை	நானக்குடி வளைவு	முழுவதும்	முழுவதும்	மோகினி பாலம், சீமாட்டி - SBI மற்றும் NHஉடன் கிளைச் சாலைகள் சேருமிடம் C	மத்திய சிறைச் சாலையின் பிரதான வாயில்	சிறுமுகை சாலை- கூத்தமடைசந் திப்பு	போதனூர் - குறிச்சி சலை சந்திப்பு மற்றும் குறிச்சி பேருந்து நிலைய சந்திப்பு	PSG கல்லூரி கள்	ப்ரூக் பாண்டு கடை வளாகம்
சாலை தூரம்	93/4-94/6	92/210	105/2	90/6-90/8	46/6-89/59 [A]	101/96-137/2 [B]	..	..	70/6	0/2		
சுற்று வளைப்பு வழி	×											
எச்சரிக்கை & அறிவுப்புப் பலகை	×	×			×	×				×		
சந்திப்பு இல்லாதவை						×						
சாலைத் திட்டு இல்லாதவை					×	×						
உயர் கோபுர விளக்கு	×											
போக்குவரத்து வழிக் கோடு	×				×	×						
எல்லை/விளிம்புக் கோடு	×				×	×						
அம்புக்குறி/திசை குறிப்புகள்	×					×						
சாலை விரிவாக்கம்							×					

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)	(12)	(13)
அபாயக் குறியீடுகள்	×				×	×	×	×		×		
மஞ்சள் நிற சாலை குறியீடுகள்	×				×	×						
பாதசாரிகள் கடக்கும் நடைபாதை	×				×	×						
பேருந்து நிறுத்தத்தில் நடைபாதை குறியீடுகள்	×											
வேகத்தடைகள்	×				×	×	×	×D		×		
சாலையின் நடுச்சுவரில் பாதுகாப்புத் தடுப்பு	×											
நடைபாதை & பாதசாரி நடைபாதை	×	×			×	×					×E	×F
சாலை ஆக்கிரமிப்புகள்	×	×			×	×						
நடுச் சுவர்	..	×			×	×	×					
இரும்பினாலான விபத்து தடுப்புகள்			×	×								
சூரிய ஒளியில் இயங்கும் பிரதிபலிக்கும் விளக்குகள்					×	×						
குறைபாடுள்ள கரை விளிம்புகள் பராமரிக்கப்படாமை					×	×		×				
நடைபாதை குறியீடுகள்					×	×	×					
சாலை நடுச்சுவரில் இடைவெளிகள்					×	×						
மரத்தினால் ஏற்படும் தடைகள்			×									
குறுகிய வளைவுகள்									×			
குமிழிகள்							×			×		

(A) வளைவில் கோயிலின் ஆக்கிரமிப்பு (69/6), 10 இடங்களில் சிறு பாலங்கள் மற்றும் மதகுகளில் அபாயக் குறியீடுகள், பாதுகாப்புத் தடுப்புகள் மற்றும் பிரதிபலிக்கும் குறியீடுகள் இல்லாமை; (B) கண்ணுக்குத் தெரியாத வளைவுகள் (136/8) மற்றும் விபத்துப் பகுதி (127/2), 4 இடங்களில் சிறு பாலங்கள் மற்றும் மதகுகளில் அபாயக் குறியிடுகள், பாதுகாப்புத் தடுப்புகள் மற்றும் பிரதிபலிக்கும் குறியீடுகள் இல்லாமை; (C) இரவு நேரங்களில் தெளிவற்ற காணும் தன்மை மற்றும் சாலைத் திட்டுக்கள் போன்ற தடைகள், சாலை நடுச்சுவரில் இடைவெளிகள் மற்றும் வண்டிப் பாதைகளுக்கு அருகிலுள்ள பொருட்கள் மற்றும் மின் விளக்குகள், பாலத்தின் ஒரு பக்கத்தில் மட்டும் நிறுவப்பட்ட குறியீடுகள். நடுச் சுவர் நிறுவப்படவில்லை; (D) விவரக் குறியீட்டின் படி பணிகள் செய்யப்படவில்லை; (E) கல்லூரி வளாகத்தினுள் உள்ள நடை மேம்பாலத்திற்கு நடைபாதையிலிருந்து பொதுமக்களுக்கு பாதை வழங்கப்படவேண்டும் மற்றும் (F) நடை மேம்பாலம் வழங்கப்படவில்லை. விபத்துகள் அடிக்கடி நிகழும், சேத்தியாதோப்பு இராஜீவ்காந்தி சிலை சந்திப்பு மற்றும் சேத்தியாதோப்பு கூட்டு சாலை ஆகிய இரண்டு இடங்களில் உயிரிழப்புகளுடன் கூடிய விபத்துகளை தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு கடலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு DRSC கூட்டத்தில் (நவம்பர் 2014) அறிவுறுத்தப்பட்டது. எனினும், தணிக்கை நடத்திய கூட்டு ஆய்வின்போது, முதல் இடத்தில் காவலர், சிக்னல் அமைப்பு மற்றும் CCTV கேமரா இல்லாமை மற்றும் இரண்டாவது இடத்தில எச்சரிக்கை பலகை/குறியீடு பலகை இல்லாமை, வேகத்தடைக்கு வர்ணப்பூச்சு இல்லாமை என்பன காணப்பட்டன.

இணைப்பு 2.7

(பார்வை: பத்தி 2.2.5; பக்கம் 67)

மாதிரி ISM அமைப்புகள்

வரிசை எண்	அமைப்பின் பெயர்	அமைப்புகளின் எண்ணிக்கை		மாதிரி ISM அமைப்புகளின் பெயர்கள்
		இருப்பவை	மாதிரியாக எடுக்கப்பட்டவை	
1	மருத்துவக் கல்லூரிகள் மற்றும் இணைக்கப்பட்ட மருத்துவமனைகள்	6	5	அரசு சித்தா MCH, சென்னை அரசு ஆயுர்வேத MCH, நாகர்கோவில் அரசு யோகா மற்றும் இயற்கை மருத்துவம் MCH, சென்னை அரசு யுனானி MCH, சென்னை. அரசு ஹோமியோபதி MCH, திருமங்கலம்
2	மாவட்ட சித்தா மருத்துவ அலுவலர்கள் (DSMO)	22	6	திண்டுக்கல், ஈரோடு, தஞ்சாவூர், நீலகிரி, சிவகங்கை மற்றும் வேலூர் மாவட்டங்கள்
3	அரசு மருத்துவமனைகளில் ISM பிரிவுகள் (மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் (MCH), மாவட்ட தலைமை மருத்துவமனைகள் (DHQH), வட்ட/ வட்டம் அல்லாத மருத்துவமனைகள் (TK/NTK)	471	47	திண்டுக்கல் - 9 ஈரோடு - 5 தஞ்சாவூர் - 10 நீலகிரி - 4 சிவகங்கை - 8 வேலூர் - 11
4	PHCக்கள் / மருந்தகங்கள் மற்றும் AYUSH நல மையங்களில் ISM பிரிவுகள்	1,014	53	திண்டுக்கல் - 10 ஈரோடு - 09 தஞ்சாவூர் - 07 நீலகிரி - 07 சிவகங்கை - 08 வேலூர் - 12

MCH: மருத்துவக் கல்லூரி மருத்துவமனை
TK: வட்ட மருத்துமனை
NTK: இதர மருத்துவமனை

இணைப்பு 2.8
(பார்வை: பத்தி 2.2.8.2(அ); பக்கம் 75)

உள்நோயாளி வசதிகள் வழங்கப்படாத சோதனை சரிபார்ப்பு செய்யப்பட்ட ISM பிரிவுகள்

வரிசை எண்	பிரிவின் பெயர்	மருத்துவ முறை	மாவட்டம்	உள்நோயாளி வசதிகள்
1	TK மருத்துவமனை, அந்தியூர்	சித்தா	ஈரோடு	இல்லை
2	NTK மருத்துவமனை, கவிந்தம்பாடி	சித்தா	ஈரோடு	இல்லை
3	TK. மருத்துவமனை, கொடைக்கானல்	சித்தா	திண்டுக்கல்	இல்லை
4	TK மருத்துவமனை, ஒட்டன்சத்திரம்	சித்தா	திண்டுக்கல்	இல்லை
5	TK மருத்துவமனை, வேடசந்தூர்	சித்தா	திண்டுக்கல்	இல்லை
6	NTK மருத்துவமனை, தாண்டிக்குடி	சித்தா	திண்டுக்கல்	இல்லை
7	TK மருத்துவமனை, இளையான்குடி	சித்தா	சிவகங்கை	உண்டு
8	TK மருத்துவமனை, திருபுவனம்	சித்தா	சிவகங்கை	இல்லை
9	NTK மருத்துவமனை, பூலாங்குறிச்சி	சித்தா	சிவகங்கை	இல்லை
10	TK மருத்துவமனை, ஒரத்தநாடு	சித்தா	தஞ்சாவூர்	உண்டு
11	TK மருத்துவமனை, பட்டுக்கோட்டை	யோகா & இயற்கை மருத்துவம்	தஞ்சாவூர்	இல்லை
12	NTK மருத்துவமனை, அதிராமப்பட்டினம்	யுனானி	தஞ்சாவூர்	உண்டு
13	NTK மருத்துவமனை, திருப்பனந்தாள்	சித்தா	தஞ்சாவூர்	உண்டு
14	TK மருத்துவமனை, மஞ்சூர்	சித்தா	நீலகிரி	உண்டு
15	TK மருத்துவமனை, ஆம்பூர்	சித்தா	வேலூர்	உண்டு
16	TK மருத்துவமனை, அரக்கோணம்	ஹோமியோ	வேலூர்	உண்டு
17	TK மருத்துவமனை, அரக்கோணம்	சித்தா	வேலூர்	உண்டு
18	TK மருத்துவமனை, அரக்கோணம்	யோகா & இயற்கை மருத்துவம்	வேலூர்	இல்லை
19	NTK மருத்துவமனை, கலவை	சித்தா	வேலூர்	இல்லை

TK : வட்ட மருத்துவமனை NTK: இதர மருத்துவமனை

இணைப்பு 2.9

(பார்வை: பத்தி 2.2.8.2(இ)(ii); பக்கங்கள் 77 மற்றும் 78)

சித்தா, ஆயுர்வேதா மற்றும் யுனானி பிரிவுகளில் வழங்கப்பட்ட/வழங்கப்படாத/செயல்படாத உபகரணங்களின் விவரங்கள்

மாவட்டம்	வரிசை எண்	ISM பிரிவின் பெயர்			செக்குருளை		கஷாயம் வழங்கு இயந்திரம்		நீராவி குளியல்		உடற்பயிற்சி மிதிவண்டி	
					வழங்கப் பட்டவை	செயல் படாதவை	வழங்கப் பட்டவை	செயல் படாதவை	வழங்கப் பட்டவை	செயல் படாதவை	வழங்கப் பட்டவை	செயல் படாதவை
திண்டுக்கல்	1	அம்மையநாயக்கனூர்	GPHC	சித்தா	0	0	0	0	0	0	0	0
	2	தாடிக்கொம்பு	GPHC	சித்தா	0	0	0	0	0	0	0	0
	3	கொசவப்பட்டி	GPHC	சித்தா	0	0	0	0	0	0	0	0
	4	K. புதுக்கோட்டை	NRHM PHC	சித்தா	0	0	0	0	0	0	0	0
	5	களிமந்தயம்	NRHM PHC	சித்தா	0	0	1	1	1	0	1	0
	6	பூலத்தூர்	NRHM PHC	சித்தா	0	0	1	1	1	1	1	1
	7	சிறுநாயக்கன்பட்டி	NRHM PHC	சித்தா	0	0	1	0	1	0	1	0
	8	பிளாத்து	NRHM PHC	சித்தா	0	0	1	0	1	0	1	0
	9	தாண்டிக்குடி	NTKH	சித்தா	0	0	0	0	0	0	0	0
	10	கொடைக்கானல்	TKH	சித்தா	1	0	0	0	1	0	0	0
	11	ஒட்டன்சத்திரம்	TKH	சித்தா	1	1	0	0	1	0	1	0
	12	வேடசந்தூர்	TKH	சித்தா	1	1	0	0	1	1	1	0
	13	திண்டுக்கல்	DHQH	சித்தா	1	1	1	0	1	1	0	0
	14	திண்டுக்கல்	DHQH	ஆயுர்வேதா	0	0	0	0	0	0	0	0
		மொத்தம் (A)	**14**		**4**	**3**	**5**	**2**	**8**	**3**	**6**	**1**
ஈரோடு	15	முத்தூர்	GPHC	ஆயுர்வேதா	1	1	1	0	1	1	0	0
	16	குன்னத்தூர்	GPHC	சித்தா	0	0	0	0	0	0	0	0
	17	சிறுவள்ளூர்	GPHC	சித்தா	0	0	0	0	0	0	0	0
	18	சாவடிப்பாளையம்	GPHC	சித்தா	0	0	0	0	0	0	0	0
	19	மொடக்குறிச்சி	GPHC	சித்தா	0	0	0	0	0	0	0	0
	20	நசியனூர்	NRHM PHC	சித்தா	0	0	1	0	1	0	1	0
	21	வெள்ளோடு	NRHM PHC	சித்தா	1	0	1	0	1	0	1	0
	22	அத்தாணி	NRHM PHC	சித்தா	0	0	1	1	1	0	1	0
	23	கவுந்தம்பாடி	NTKH	சித்தா	1	0	0	0	1	0	0	0
	24	அந்தியூர்	TKH	சித்தா	0	0	0	0	0	0	0	0
	25	ஈரோடு	DHQH	சித்தா	1	0	0	0	1	0	1	0
		மொத்தம் (B)	**11**		**4**	**1**	**4**	**1**	**6**	**1**	**4**	**0**

மாவட்டம்	வரிசை எண்	ISM பிரிவின் பெயர்			செக்குருளை		கஷாயம் வழங்கு இயந்திரம்		நீராவி குளியல்		உடற்பயிற்சி மிதிவண்டி	
					வழங்கப்பட்டவை	செயல்படாதவை	வழங்கப்பட்டவை	செயல்படாதவை	வழங்கப்பட்டவை	செயல்படாதவை	வழங்கப்பட்டவை	செயல்படாதவை
சிவகங்கை	26	இடையமேலூர்	NRHM PHC	ஆயுர்வேதா	0	0	1	0	1	0	1	0
	27	திருவேகம்பேட்டை	GPHC	சித்தா	1	0	1	1	1	1	0	0
	28	முத்தநேந்தல்	GPHC	சித்தா	1	1	1	0	1	1	0	0
	29	மல்லக்கோட்டை	GPHC	சித்தா	1	1	1	1	1	0	0	0
	30	கருப்பூர்	மருந்தகம்	சித்தா	0	0	0	0	0	0	0	0
	31	சூராணம்	NRHM PHC	சித்தா	0	0	1	1	1	1	1	0
	32	பூலாங்குறிச்சி	NTKH	சித்தா	0	0	0	0	0	0	0	0
	33	இளையான்குடி	TKH	சித்தா	1	1	0	0	1	1	1	0
	34	திருபுவனம்	TKH	சித்தா	1	0	1	1	1	0	0	0
	35	சிவகங்கை	MCH	சித்தா	1	1	1	1	1	1	0	0
	36	காரைக்குடி	DHQH	சித்தா	1	1	0	0	1	1	1	1
		மொத்தம் (C)	**11**		**7**	**5**	**7**	**5**	**9**	**6**	**4**	**1**
தஞ்சாவூர்	37	அதிராமபட்டினம்	NTKH	யுனானி	0	0	0	0	0	0	0	0
	38	சோழபுரம்	NRHM PHC	ஆயுர்வேதா	0	0	1	1	0	0	0	0
	39	கபிஸ்தலம்	GPHC	சித்தா	1	1	1	1	1	1	0	0
	40	முருக்கங்குடி	GPHC	சித்தா	0	0	0	0	0	0	0	0
	41	பட்டீஸ்வரம்	GPHC	சித்தா	1	1	1	0	1	0	0	0
	42	பாப்பாநாடு	GPHC	சித்தா	1	1	1	1	1	1	0	0
	43	மதுக்கூர்	NRHM PHC	சித்தா	0	0	1	0	0	0	0	0
	44	திருப்பனந்தாள்	NTKH	சித்தா	0	0	0	0	0	0	0	0
	45	ஒரத்தநாடு	TKH	சித்தா	0	0	0	0	0	0	0	0
	46	தஞ்சாவூர்	MCH	சித்தா	0	0	0	0	0	0	0	0
	47	கும்பகோணம்	DHQH	சித்தா	1	1	0	0	1	1	0	0
	48	கும்பகோணம்	DHQH	ஆயுர்வேதா	0	0	0	0	0	0	0	0
		மொத்தம் (D)	**12**		**4**	**4**	**5**	**3**	**4**	**3**	**0**	**0**
நீலகிரி	49	நடுவட்டம்	GPHC	சித்தா	1	0	0	0	1	1	1	0
	50	கேத்தி	GPHC	சித்தா	0	0	0	0	0	0	0	0
	51	கேரடமட்டம்	GPHC	சித்தா	0	0	0	0	0	0	0	0
	52	கிண்ணக்கோரை	மருந்தகம்	சித்தா	0	0	0	0	0	0	0	0
	53	மஞ்சூர்	TKH	சித்தா	0	0	0	0	0	0	0	0
	54	உதகமண்டலம்	DHQH	சித்தா	1	0	0	0	1	0	1	0
		மொத்தம் (E)	**6**		**2**	**0**	**0**	**0**	**2**	**1**	**2**	**0**

மாவட்டம்	வரிசை எண்	ISM பிரிவின் பெயர்			செக்குருளை		கஷாயம் வழங்கு இயந்திரம்		நீராவி குளியல்		உடற்பயிற்சி மிதிவண்டி	
					வழங்கப் பட்டவை	செயல் படாதவை	வழங்கப் பட்டவை	செயல் படாதவை	வழங்கப் பட்டவை	செயல் படாதவை	வழங்கப் பட்டவை	செயல் படாதவை
வேலூர்	55	மேல்களத்தூர்	NRHM PHC	ஆயுர்வேதா	0	0	0	0	0	0	0	0
	56	லாலாபேட்டை	GPHC	சித்தா	1	0	1	0	1	0	0	0
	57	ஆண்டியப்பனூர்	GPHC	சித்தா	1	1	1	1	1	1	0	0
	58	பாணாவரம்	GPHC	சித்தா	1	1	1	1	1	1	0	0
	59	புதூர்நாடு	Tribal Dy.	சித்தா	0	0	0	0	0	0	0	0
	60	பட்சூர்	NRHM PHC	சித்தா	0	0	1	1	1	0	1	0
	61	பொன்னை	NRHM PHC	சித்தா	0	0	1	0	1	0	1	0
	62	கலவை	NTKH	சித்தா	0	0	0	0	1	1	0	0
	63	ஆம்பூர்	TKH	சித்தா	1	0	0	0	1	0	1	1
	64	அரக்கோணம்	TKH	சித்தா	1	1	0	0	1	1	1	1
	65	காவேரிப்பாக்கம்	GPHC	யுனானி	0	0	0	0	0	0	0	0
	66	அம்மூர்	NRHM PHC	யுனானி	0	0	0	0	0	0	0	0
	67	வேலூர்	MCH	சித்தா	1	1	0	0	1	1	0	0
	68	வேலூர்	MCH	யுனானி	0	0	0	0	0	0	0	0
	69	வாலாஜா	DHQH	சித்தா	1	1	0	0	0	0	1	0
		மொத்தம் (F)	**15**		**7**	**5**	**5**	**3**	**9**	**5**	**5**	**2**
		பெரு *மொத்தம்* (A+B+C+D+E+F)	**69**		**28**	**18**	**26**	**14**	**38**	**19**	**21**	**4**

GPHC: அரசு ஆரம்ப சுகாதார மையம்; NRHM PHC: தேசிய ஊரக சுகாதாரத் திட்டம் ஆரம்ப சுகாதார மையம்; TKH: வட்ட மருத்துமனை; MCH: மருத்துவக் கல்லூரி மருத்துவமனை; NTKH: இதர மருத்துவமனை; DHQH: மாவட்ட தலைமை மருத்துவமனை

இணைப்பு 2.10

(பார்வை: பத்தி 2.2.8.2 (இ) (iii); பக்கம் 78)

நீலகிரி மாவட்டத்தில் ISM பிரிவுகளுக்கு வழங்கப்பட்ட செயல்படாத கருவிகள்

வரிசை எண்	கருவியின் பெயர்	பிரிவுகளின் பெயர்கள்	வழங்கப்பட்ட தேதி	விலை வீதம் (₹) மற்றும் எண்ணிக்கை	மொத்த மதிப்பு (₹)
1	துருபிடிக்காத கால்படிகளை உடைய தொக்கண மேசை	கோலக்கொம்பை, அம்பலமூலா, கட்டபெட்டு, கோலப்பள்ளி, ஸ்ரீமதுரை, நெலக்கோட்டை, மேலூர் ஹொரசட்டி	30-11-2014	20,486 x 7	1,43,402
2	ஆய்வு மேசை	கோலக்கொம்பை, மேலூர் ஹொரசட்டி, கட்டபெட்டு, ஸ்ரீமதுரை, கோலப்பள்ளி, அம்பலமூலா, நெலக் கோட்டை, கூக்கல்துறை	30-11-2014	7,256 x 8	58,048
3	கஷாயம் வழங்கு இயந்திரம்	கோலக்கொம்பை, மேலூர் ஹொரசட்டி, கட்டபெட்டு, ஸ்ரீமதுரை, கோலப்பள்ளி, அம்பலமூலா	26-03-2014	58,905 x 6	3,53,430
4	தோர்ணி பானை (Dhorni pot)	கோலக்கொம்பை, மேலூர் ஹொரசட்டி, கட்டபெட்டு, ஸ்ரீமதுரை, கோலப்பள்ளி, அம்பலமூலா	10-01-2015	5,040 x 6	30,240
5	அமர்ந்து குளிக்கக் கூடிய நீராவி குளியல்தொட்டி மற்றும் நீராவி மின்னியக்கி	கோலக்கொம்பை, மேலூர் ஹொரசட்டி, கட்டபெட்டு, ஸ்ரீமதுரை, கோலப்பள்ளி, அம்பலமூலா	10-01-2015	56,385 x 6	3,38,310
6	இதயத் துடிப்பு மானி (Stethoscope), வெப்ப மானி (Thermometer), இன்ஃப்ராபில் விளக்குத் தொகுதி, டன் கலந்த நீராவி உறிஞ்சி	கோலக்கொம்பை, மேலூர் ஹொரசட்டி, கட்டபெட்டு, ஸ்ரீமதுரை, கோலப்பள்ளி, அம்பலமூலா, நெலக் கோட்டை, கூக்கல்துறை	19-02-2016	2,164.40 x 8	17,315
7	கணினி/தடையில்லா மின்சாரம்	கோலக்கொம்பை, மேலூர் ஹொரசட்டி, கட்டபெட்டு, ஸ்ரீமதுரை, கோலப்பள்ளி, அம்பலமூலா, கூக்கல்துறை, நெலக்கோட்டை	17-06-2015	49,316 x 8	3,94,528
8	R.O. அமைப்பு	கோலக்கொம்பை, மேலூர் ஹொரசட்டி, கட்டபெட்டு, ஸ்ரீமதுரை, கோலப்பள்ளி, அம்பலமூலா, நெலக்கோட்டை	28-06-2017	30,450 x 7	2,13,150
	மொத்த மதிப்பு				**15,48,423**

இணைப்பு 2.11

(பார்வை: பத்தி 2.2.9.3; பக்கம் 81)

ISM மருத்துவமனைகள் மற்றும் ISM பிரிவுகளில் பணியாளர் பற்றாக்குறை (AMO/MO)

வரிசை எண்	பணியின் பெயர்	மருத்துவ முறை	காலமுறை/ ஒப்பந்த ஊதியம்	பெரு மொத்தம்		
				ஒப்புதல் அளிக்கப் பட்டவை	நிரப்பப் பட்டவை	நிரப்பப் படாதவை
1	கண்காணிப்பாளர் (AAGHIM)	சித்தா	முறைப்படி	1	0	1
2	மருத்துவமனை கண்காணிப்பாளர் (A)	ஆயுர்வேதா	முறைப்படி	1	0	1
3	மருத்துவ அதிகாரி (S)	சித்தா	முறைப்படி	15	1	14
4	கூராய்வு மருத்துவ அதிகாரி (சித்தா)	சித்தா	முறைப்படி	1	0	1
5	நிலைய மருத்துவ அதிகாரி (A)	ஆயுர்வேதா	முறைப்படி	1	1	0
6	மருத்துவ அதிகாரி (A)	ஆயுர்வேதா	முறைப்படி	6	4	2
7	மருத்துவ அதிகாரி(U)	யுனானி	முறைப்படி	3	1	2
8	கூராய்வு மருத்துவ அதிகாரி (யுனானி)	யுனானி	முறைப்படி	1	1	0
9	மருத்துவ அதிகாரி/ உறைவிட மருத்துவ அதிகாரி (யோகா & இயற்கை மருத்துவம்)	யோகா & இயற்கை மருத்துவம்	முறைப்படி	2	0	2
10	மருத்துவ அதிகாரி (நவீன மருத்துவம்)		முறைப்படி	1	0	1
11	மருத்துவ நோய்குறியாய்வு வல்லுநர்		முறைப்படி	1	1	0
12	உயிர் வேதியியல் வல்லுநர்		முறைப்படி	1	1	0
13	நோய்குறியாய்வு வல்லுநர்		முறைப்படி	2	0	2
14	கதிர்வீச்சு மருத்துவர்		முறைப்படி	2	2	0
15	உதவி மருத்துவ அதிகாரி(S/A/U/H)*		முறைப்படி	965	941	24
16	கண்காணிப்பாளர் (H)	ஹோமியோ	முறைப்படி	1	1	0
17	உதவி மருத்துவ அதிகாரி (Y & N)	யோகா & இயற்கை மருத்துவம்	முறைப்படி	90	39	51
18	மாவட்ட சித்த மருத்துவ அதிகாரி	சித்தா	முறைப்படி	22	13	9
	மொத்தம்			**1,116**	**1,006**	**110 (10 விழுக்காடு)**

*S/A/U/H - சித்தா/ஆயுர்வேதா /யுனானி /ஹோமியோபதி

பொது பிரிவுகளில் மருத்துவ உதவியாளர் & மற்றவர்கள்

வரிசை எண்	பணியின் பெயர்	காலமுறை/ ஒப்பந்த ஊதியம்	பெரு மொத்தம்		
			ஒப்புதல் அளிக்கப் பட்டவை	நிரப்பப் பட்டவை	நிரப்பப் படாதவை
1	செவிலிப் பணி கண்காணிப்பாளர்Gr.II	முறைப்படி	7	7	0
2	செவிலியர்கள்	முறைப்படி	96	92	4
3	செவிலியர்கள்	ஒப்பந்த ஊதியம்	4	4	0
4	தலைமை மருந்தாளுநர் (சித்தா)	முறைப்படி	2	0	2
5	மருந்தக மேற்பார்வையாளர் (S/A/U)	முறைப்படி	5	0	5
6	மருந்தகத்தில் உதவியாளர்	முறைப்படி	4	0	4
7	மருந்தாளுநர்* (S/A/U/H)	முறைப்படி	892	644	248

வரிசை எண்	பணியின் பெயர்	காலமுறை/ ஒப்பந்த ஊதியம்	பெரு மொத்தம்		
			ஒப்புதல் அளிக்கப் பட்டவை	நிரப்பப் பட்டவை	நிரப்பப் படாதவை
8	செவிலிப்பணி சிகிச்சையாளர் (யோகா & இயற்கை மருத்துவம்)	முறைப்படி	4	4	0
9	செவிலிப்பணி உதவியாளர் (ஆண்/பெண்)	முறைப்படி	80	8	72
10	உடனிருப்பவர்/உதவியாளர்/ பெண் பணியாளர்	முறைப்படி	8	5	3
11	தூக்குப் படுக்கை தாங்கிச் செல்பவர்	முறைப்படி	5	2	3
12	குடிநீர் வழங்குபவர்	முறைப்படி	5	3	2
13	வாயில் காப்போன்	முறைப்படி	1	1	0
14	முடி திருத்துபவர்	முறைப்படி	1	1	0
15	பெருக்குபவர்/ பெருக்குபவர் மற்றும் குடிநீர் வழங்கும் பெண் தொழிலாளி / பெருக்குபவர் மற்றும் குடிநீர் வழங்கும் ஆண் தொழிலாளி	முறைப்படி	26	13	13
16	தோட்டக்காரர்	முறைப்படி	2	1	1
17	காவலாளி	முறைப்படி	21	8	13
18	துப்புரவுத் தொழிலாளர்	முறைப்படி	52	20	32
19	அலுவலக உதவியாளர்	முறைப்படி	40	8	32
20	சிற்றேவலர்	முறைப்படி	14	6	8
21	சமையல்காரர் / சமையல்காரர் உதவியாளர் / சமையல்காரர் துணையாள்	முறைப்படி	14	6	8
22	சலவையாளர்	முறைப்படி	7	5	2
23	மருத்துவமனை ஊழியர்/ மருத்துவமனை பணியாளர் / பல்நோக்குத் தொழிலாளி	முறைப்படி	639	400	239
24	பிணக்கிடங்கு பணியாளர்	முறைப்படி	2	1	1
25	பொதி கட்டுபவர்	முறைப்படி	1	1	0
26	பாத்திரங்கள் தேய்ப்பவர்	முறைப்படி	4	0	4
27	துப்புரவு பணியாளர்	முறைப்படி	3	1	2
28	தஃபேதார்	முறைப்படி	1	0	1
29	மருத்துவ ஊர்திப் பணியாளர்	முறைப்படி	2	1	1
30	ஏவலாள் மற்றும் காவலாளி	முறைப்படி	1	0	1
31	மருந்தக உதவியாளர்		2	1	1
32	மருத்துவமனை பணியாளர் (OS)	வெளியாட்கள் மூலமாக	2	2	0
33	காவலாளி/துப்புரவுத் தொழிலாளர்	டெக்ஸ்கோ மூலமாக	2	1	1
34	துப்புரவுத் தொழிலாளர்	(ஒப்பந்த ஊதியம்)	5	5	0
35	மருத்துவமனை பணியாளர்/ துப்புரவுத் தொழிலாளர்	(ஒப்பந்த ஊதியம்)	11	10	1
36	தோட்டக்காரர்	(ஒப்பந்த ஊதியம்)	4	4	0
37	காவலாளி	(ஒப்பந்த ஊதியம்)	2	2	0
38	சலவையாளர்	(ஒப்பந்த ஊதியம்)	3	3	0
39	சமையல்காரர்	(ஒப்பந்த ஊதியம்)	2	2	0
40	உடம்பு பிடித்து விடுபவர் (ஆண் / பெண்)	(ஒப்பந்த ஊதியம்)	5	0	5

* நிரப்பப்படாத இடங்களின் விழுக்காடு: மருந்தாளுநர் (சித்தா) - 22.1; மருந்தகம் (ஆயுர்வேதா) - 71.7

வரிசை எண்	பணியின் பெயர்	காலமுறை/ ஒப்பந்த ஊதியம்	பெரு மொத்தம்		
			ஒப்புதல் அளிக்கப் பட்டவை	நிரப்பப் பட்டவை	நிரப்பப் படாதவை
41	ஆய்வக உதவியாளர் / துணையாளர்	(ஒப்பந்த ஊதியம்)	5	5	0
42	பல்நோக்குத் தொழிலாளி	வெளியாட்கள் மூலமாக	9	9	0
	மற்றவர்கள் - மருத்துவமனைகள்				
43	அறிவியல் அதிகாரி (DTL)	முறைப்படி	2	0	2
44	கணினி முறைமைப் பகுப்பாய்வாளர் மற்றும் திட்டச் செயலாளர்	முறைப்படி	1	0	1
45	மருந்தக உதவியாளர்	முறைப்படி	74	26	48
46	கட்டு போடும் தொழில்நுட்ப பணியாளர்	முறைப்படி	1	0	1
47	சிகிச்சை உதவியாளர்	முறைப்படி	203	115	88
48	துணை செவிலியர் (A.N.M.)	முறைப்படி	5	3	2
49	கதிர்படப் பதிவாளர்	முறைப்படி	4	1	3
50	உடம்பு பிடித்து விடுபவர்	முறைப்படி	32	20	12
51	இருட்டுஅறை உதவியாளர்	முறைப்படி	3	0	3
52	எக்ஸ்ரே உதவியாளர்	முறைப்படி	2	0	2
53	மருந்தக பணியாளர் (ஒப்பந்த ஊதியம்)	(ஒப்பந்த ஊதியம்)	19	2	17
54	பல்நோக்குத் தொழிலாளி	(ஒப்பந்த ஊதியம்)	11	0	11
	மொத்தம்		**2,352**	**1,453**	**899 (38 *விழுக்காடு*)**

NRHM பிரிவுகளில் பணியாளர் பற்றாக்குறை

வரிசை எண்	பணியின் பெயர்	பெரு மொத்தம்		
		ஒப்புதல் அளிக்கப் பட்டவை	நிரப்பப் பட்டவை	நிரப்பப் படாதவை
1	ஆலோசகர் (S/A/U/H/Y&N)	475	354	121
2	மருந்தளிப்பவர் (S/A/U/H)	424	134	290
3	சிகிச்சை உதவியாளர் (M/F) (யோகா & இயற்கை மருத்துவம்)	71	4	67
4	பல்நோக்குத் தொழிலாளி	475	258	217
	NRHM - மொத்தம்	**1,445**	**750**	**695 (48 *விழுக்காடு*)**

AYUSH நல மருத்துவமனையில் பணியாளர் பற்றாக்குறை

வரிசை எண்	பணியின் பெயர்	பெரு மொத்தம்		
		ஒப்புதல் அளிக்கப் பட்டவை	நிரப்பப் பட்டவை	நிரப்பப் படாதவை
1	மருத்துவர்/ஆலோசகர் (S/A/U/H/Y&N)	31	0	31
2	சிகிச்சை உதவியாளர்	34	0	34
3	உதவியாளர்	26	0	26
	மொத்தம்	**91**	**0**	**91 (100 *விழுக்காடு*)**

S: சித்தா; A: ஆயுர்வேதா; H: ஹோமியோபதி; Y&N: யுனானி மற்றும் இயற்கை மருத்துவம்
M: ஆண்; F: பெண்

இணைப்பு 2.12

(பார்வை: பத்தி 2.2.9.4; பக்கம் 82)

மருத்துவர்கள் பணியமர்த்தப்படாததால் சோதனை ஆய்வு செய்யப்பட்ட மாவட்டங்களில் இயங்காத ISM பிரிவுகள்

வரிசை எண்	பிரிவின் பெயர்	மருத்துவ முறை	இயங்காத தேதி
நீலகிரி			
1	NRHM, PHC, அம்பலமூலா	சித்தா	செப்டம்பர் 2013
2	NRHM, PHC, கோலப்பள்ளி	சித்தா	மார்ச் 2011
3	NRHM, PHC, கோலக்கொம்பை	சித்தா	மார்ச் 2011
4	NRHM, PHC, மேலூர் ஹொசட்டி	சித்தா	மார்ச் 2011
5	NRHM, PHC, கொட்டபெட்டு	சித்தா	மார்ச் 2011
6	NRHM, PHC, ஸ்ரீமதுரை	சித்தா	மார்ச் 2011
7	NRHM, PHC, நெடுகுலா	சித்தா	ஜூலை 2011
8	NRHM, PHC, T. ஓரநள்ளி	சித்தா	செப்டம்பர் 2013
9	NRHM, PHC, நிலக்கோட்டை	யுனானி	மார்ச் 2011
10	NRHM, PHC, கூக்கல்துறை	ஹோமியோ	மே 2011
11	NRHM, PHC, பிக்கட்டி	ஹோமியோ	ஜூலை 2014
தஞ்சாவூர்			
12	NRHM, PHC, குருவிக்கரம்பை	ஹோமியோ	மார்ச் 2011
13	NRHM, PHC, பண்டாரவாடை	யுனானி	மே 2012
14	NRHM, PHC, சில்லத்தூர்	சித்தா	மார்ச்2012
DSMO, வேலூர்			
15	NRHM, PHC, கள்ளப்பாடி	சித்தா	நவம்பர் 2013
16	NRHM, PHC, விலப்பாக்கம்	சித்தா	ஆகஸ்ட் 2015
17	NRHM, PHC, உஸ்ஸூர்	யுனானி	மே 2017
18	NRHM, PHC, மின்னல்	யுனானி	செப்டம்பர் 2017
19	NRHM, PHC, நவ்லாக்	யுனானி	ஆகஸ்ட் 2016
DSMO, திண்டுக்கல்			
20	GPHC, மன்னவனூர்	சித்தா	பிப்ரவரி 2017
21	GPHC, சிலுவத்தூர்	ஆயுர்வேதா	அக்டோபர் 2013
22	GPHC, அய்யலூர்	ஆயுர்வேதா	மார்ச் 2017
23	GPHC, கொசுக்குறிச்சி	யுனானி	மே 2011
24	GPHC, நரசிங்கபுரம்	யுனானி	2009
25	GPHC, கீரனூர்	யுனானி	2009
26	GPHC, விராலிப்பட்டி	யுனானி	2009
27	மாவட்ட தலைமை மருத்துவமனை, திண்டுக்கல்	யுனானி	2010
DSMO, சிவகங்கை			
28	அரசு வட்ட மருத்துவமனை, தேவகோட்டை	யோகா & இயற்கை மருத்துவம்	மே 2017
29	NRHM PHC, புழுதிப்பட்டி	யுனானி	ஏப்ரல் 2011
30	NRHM PHC, இடையமேலூர்	ஆயுர்வேதா	மார்ச் 2016
31	NRHM PHC, கீழசெவல்பட்டி	ஆயுர்வேதா	ஜனவரி 2013

PHC: ஆரம்ப சுகாதார மையம்

இணைப்பு 2.13

(பார்வை: பத்தி 2.2.10.4; பக்கம் 87)

மாதிரிகளை எடுப்பதில் குறைவு

வரிசை எண்	மாவட்டம்	2013-14			2014-15			2015-16			2016-17			2017-18		
		இலக்கு	எடுக்கப் பட்ட மாதிரிகள்	குறைவு	இலக்கு	எடுக்கப் பட்ட மாதிரிகள்	குறைவு	இலக்கு	எடுக்கப் பட்ட மாதிரிகள்	குறைவு	இலக்கு	எடுக்கப் பட்ட மாதிரிகள்	குறைவு	இலக்கு	எடுக்கப் பட்ட மாதிரிகள்	குறைவு
1	சென்னை	42	42	0	63	63	0	96	60	36	96	85	11	96	112	0
2	கடலூர்	42	33	9	63	63	0	96	82	14	96	64	32	96	84	12
3	ஈரோடு	42	42	0	63	65	0	96	79	17	96	96	0	96	110	0
4	திருப்பூர்	42	42	0	63	66	0	96	74	22	96	89	7	96	83	13
5	காஞ்சிபுரம்	42	36	6	63	71	0	96	68	28	96	94	2	96	63	33
6	திருவண்ணாமலை	42	43	0	63	62	1	96	80	16	96	98	0	96	96	0
7	திருநெல்வேலி	42	27	15	63	82	0	96	68	28	96	13	83	96	67	29
8	வேலூர்	42	36	6	63	75	0	96	48	48	96	83	13	96	55	41
9	நீலகிரி	42	41	1	63	68	0	96	96	0	96	99	0	96	96	0
10	தர்மபுரி	42	39	3	63	64	0	96	88	8	96	96	0	96	80	16
11	நாகப்பட்டினம்	42	27	15	63	60	3	96	71	25	96	96	0	96	100	0
12	விருதுநகர்	42	20	22	63	73	0	96	94	2	96	104	0	96	66	30
13	புதுக்கோட்டை	42	27	15	63	61	2	96	82	14	96	25	71	96	47	49
14	திண்டுக்கல்	42	37	5	63	68	0	96	96	0	96	96	0	96	93	3
15	நாகர்கோவில்	42	33	9	63	45	18	96	106	0	96	69	27	96	80	16
16	பெரியகுளம்	42	34	8	63	54	9	96	84	12	96	32	64	96	98	0
17	இராமநாதபுரம்	42	44	0	63	66	0	96	81	15	96	104	0	96	86	10
18	சேலம்	42	27	15	63	68	0	96	72	24	96	44	52	96	72	24
19	சிவகங்கை	42	39	3	63	36	27	96	108	0	96	91	5	96	99	0
20	தஞ்சாவூர்	42	29	13	63	60	3	96	70	26	96	95	1	96	96	0
21	தூத்துக்குடி	42	20	22	63	63	0	96	49	47	96	81	15	96	92	4
22	திருச்சி	42	27	15	63	53	10	96	104	0	96	87	9	96	89	7
23	விழுப்புரம்	42	41	1	63	68	0	96	40	56	96	86	10	96	81	15
	மொத்தம்	**966**	**786***	**183**	**1,449**	**1,454***	**73**	**2,208**	**1,800**	**438**	**2,208**	**1,827***	**402**	**2,208**	**1,945***	**302**

* ஒரு பொருளின் ஒரே உற்பத்தி தொகுதியிலிருந்து பல்வேறு மாதிரிகள் எடுக்கப்பட்டதன் காரணமாக, பக்கம் 87லுள்ள **அட்டவணை 2.32**ல் உள்ளவற்றிலிருந்து மாறுபடும்.

இணைப்பு 2.14
(பார்வை: பத்தி 2.3.7.3; பக்கம் 103)
வர்த்தகர்களிடமிருந்து தொழில் வரி பெறாததால் வருவாய் கசிவு

வரிசை எண்	நகராட்சியின் பெயர்	அரை-யாண்டில் குறைந்த பட்ச முறை வீதம் (₹)	2015-16		2016-17		2017-18	
			வழங்கப்-பட்ட உரிமங்-களின் எண்-ணிக்கை	விதிக்கப்-படாத தொழில் வரி (₹ இலட்சத்-தில்)	வழங்கப்-பட்ட உரிமங்-களின் எண்-ணிக்கை	விதிக்கப்-படாத தொழில் வரி (₹ இலட்-சத்தில்)	வழங்கப்-பட்ட உரிமங்-களின் எண்-ணிக்கை	விதிக்கப்-படாத தொழில் வரி (₹ இலட்-சத்தில்)
1	ஆற்காடு	118	759	1.79	421	0.99	283	0.67
2	கோபி செட்டி-பாளையம்	133	706	1.88	706	1.88	721	1.92
3	காரைக்குடி	100	1,578	3.16	1,101	2.20	838	1.68
4	திருமங்கலம்	120	973	2.34	1,010	2.42	1,042	2.50
5	திருவாரூர்	130	134	0.35	310	0.81	214	0.56
6	திருப்பத்தூர்	118	515	1.22	23	0.05	394	0.93
7	வாலாஜாப்பேட்டை	118	140	0.33	187	0.44	94	0.22
	மொத்தம்		**4,805**	**11.07**	**3,758**	**8.79**	**3,586**	**8.48**

இணைப்பு 2.15

(பார்வை: பத்தி 2.3.9.1 (i); பக்கம் 125)

மாதிரி நகராட்சிகளில் செப்டம்பர் 2015 முதல் ஜனவரி 2018 வரை பெறப்பட்டு, நிலுவையிலுள்ள கோரிக்கைகள்

வரிசை எண்	நகராட்சியின் பெயர்	நிலுவையிலுள்ள கோரிக்கைகள்
1	அனகாபுத்தூர்	276
2	அரக்கோணம்	697
3	ஆற்காடு	1,513
4	பவானி	1,665
5	குன்னூர்	478
6	கோபிசெட்டிப்பாளையம்	352
7	காரைக்குடி	3,074
8	கும்பகோணம்	5,027
9	மன்னார்குடி	2,644
10	பல்லவபுரம்	8,263
11	பம்மல்	1,460
12	திருமங்கலம்	1,771
13	திருவாரூர்	7,922
14	திருப்பத்தூர்	3,452
15	உதகமண்டலம்	2,690
16	வாலாஜாப்பேட்டை	273
	மொத்தம்	**41,557**

இணைப்பு 2.16

(பார்வை: பத்தி 2.3.9.1 (ii); பக்கம் 125)

நகராட்சி சேவைகளை வழங்குவதில் தாமதம்

வரிசை எண்	நகராட்சியின் பெயர்	சொத்து வரி மதிப்பீடு			குடிநீர் இணைப்புகள்		
		பெறப்பட்ட மற்றும் முடிக்கப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை	காலக்கெடுவுக்குள் முடிக்கப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை	காலம் கடந்து முடிக்கப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை	பெறப்பட்ட மற்றும் முடிக்கப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை	காலக்கெடுவுக்குள் முடிக்கப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை	காலம் கடந்து முடிக்கப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை
1	அனகாபுத்தூர்	861	696	165	348	21	327
2	அரக்கோணம்	130	31	99	0	0	0
3	ஆற்காடு	410	273	137	173	60	113
4	பவானி	126	49	77	0	0	0
5	குன்னூர்	426	381	45	10	1	9
6	கோபிசெட்டிப்பாளையம்	474	269	205	143	128	15
7	காரைக்குடி	1,690	221	1,469	819	19	800
8	கும்பகோணம்	1,737	621	1,116	259	10	249
9	மன்னார்குடி	2,238	2,056	182	797	397	400
10	பல்லவபுரம்	4,488	1,160	3,328	1,523	1,263	260
11	பம்மல்	1,432	900	532	338	13	325
12	திருமங்கலம்	728	210	518	154	0	154
13	திருவாரூர்	926	222	704	150	14	136
14	திருப்பத்தூர்	428	383	45	0	0	0
15	உதகமண்டலம்	961	312	649	48	7	41
16	வாலாஜாப்பேட்டை	54	41	13	27	2	25
	மொத்தம்	**17,109**	**7,825**	**9,284**	**4,789**	**1,935**	**2,854**

இணைப்பு 2.17

(பார்வை: பத்தி 2.3.9.2 (i); பக்கம் 126)

மாதிரி நகராட்சிகளில் தொழில் வரி நிலுவை

வரிசை எண்	நகராட்சியின் பெயர்	மதிப்பீடுகளின் எண்ணிக்கை	தொகை (₹ இலட்சத்தில்)
1	அனகாபுத்தூர்	329	3.44
2	அரக்கோணம்	3,706	153.47
3	ஆற்காடு	1,263	28.77
4	பவானி	687	10.49
5	குன்னூர்	767	22.35
6	கோபிசெட்டிப்பாளையம்	521	5.57
7	காரைக்குடி	3,649	52.05
8	கும்பகோணம்	2,634	110.87
9	மன்னார்குடி	1,651	37.25
10	பல்லவபுரம்	2,876	77.65
11	பம்மல்	834	36.84
12	திருமங்கலம்	1,269	23.05
13	திருவாரூர்	1,740	46.34
14	திருப்பத்தூர்	3,292	54.93
15	உதகமண்டலம்	653	11.51
16	வாலாஜாப்பேட்டை	357	9.57
	மொத்தம்	**26,228**	**684.15 (அ) 6.84 கோடி**

இணைப்பு 2.18

(பார்வை: பத்தி 2.3.9.2 (iv); பக்கம் 126)

மாதிரி நகராட்சிகளில் வரி அல்லாத இனங்களில் நிலுவை

வரிசை எண்	நகராட்சியின் பெயர்	காலம்	தொகை (₹ இலட்சத்தில்)
1	அனகாபுத்தூர்	2017-18	2.42
2	அரக்கோணம்	2015-16 முதல் 2017-18 வரை	9.57
3	ஆற்காடு	2015-16 முதல் 2017-18 வரை	17.97
4	பவானி	2016-17 முதல் 2017-18 வரை	1.35
5	குன்னூர்	2015-16 முதல் 2017-18 வரை	5.97
6	கோபிசெட்டிப்பாளையம்	2016-17 முதல் 2017-18 வரை	3.32
7	காரைக்குடி	2013-14 முதல் 2017-18 வரை	351.47
8	கும்பகோணம்	2013-14 முதல் 2017-18 வரை	158.41
9	மன்னார்குடி	2014-15 முதல் 2017-18 வரை	11.12
10	பல்லவபுரம்	2015-16 முதல் 2017-18 வரை	20.32
11	திருமங்கலம்	2013-14 முதல் 2017-18 வரை	5.78
12	திருவாரூர்	2013-14 முதல் 2017-18 வரை	22.20
13	திருப்பத்தூர்	2014-15 முதல் 2017-18 வரை	100.78
14	உதகமண்டலம்	2013-14 முதல் 2017-18 வரை	2,073.56
15	வாலாஜாப்பேட்டை	2015-16 முதல் 2017-18 வரை	9.05
	மொத்தம்		**2,793.29** அல்லது **27.93** கோடி

இணைப்பு 2.19
(பார்வை: பத்தி 2.4.1; பக்கம் 130)

திட்ட அனுமதி வழங்குவதற்கான நிலைகள்

விண்ணப்பதாரர்

சாதாரண கட்டடங்களுக்கான விண்ணப்பங்களை அளித்தல் (தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகளுக்கு)	சிறப்பு கட்டடங்கள்/அடுக்குமாடி கட்டடங்களுக்கான விண்ணப்பத்தினை அளித்தல் (CMDAக்கு)
தளத்தை ஆய்வுசெய்தல் மற்றும் செலுத்தவேண்டிய கட்டணங்களை அளவிடுதல் - நகர திட்டமிடல் பிரிவு	தள ஆய்வு - உதவி திட்டமிடுபவர்/துணை திட்டமிடுபவர்/தலைமை திட்டமிடுபவர்
கொள்கை அளவு ஒப்புதல் - நகர பொறியாளர்/நகர திட்டமிடல் அதிகாரி/ஆணையர்	கட்டணம்/வைப்புத்தொகை செலுத்துவதற்கான கோரிக்கை அறிவிப்பு
கட்டணம்/ வைப்புத்தொகை செலுத்துதற்கான கோரிக்கை அறிவிப்பு	கட்டணம்/வைப்புத்தொகை செலுத்துதல்
கட்டணம்/ வைப்புத்தொகை செலுத்துதல்	ஒப்புதல் - சிறப்பு கட்டடங்களுக்கு: உறுப்பினர் செயலர் அடுக்குமாடி கட்டடங்களுக்கு: அரசு
ஒப்புதல் - ஆணையர்	திட்ட அனுமதி வழங்கல்

கட்டட உரிமம் வழங்குதல் - தொடர்புடைய உள்ளாட்சி அமைப்பு

இணைப்பு 2.20

(பார்வை: பத்தி 2.4.6.1; பக்கம் 134)

சொத்து வரி மதிப்பீட்டு விவரங்கள்

வரிசை எண்	உள்ளாட்சி அமைப்பின் பெயர்	தளங்களின் எண்ணிக்கை	சொத்து வரி மதிப்பீடு செய்யப்பட்ட 3 முதல் 5 தளங்களை கொண்ட மொத்த கட்டிடங்களின் எண்ணிக்கை	காலம் (4)ல் உள்ள கட்டடங்களில் CMDAவின் திட்ட அனுமதி பெறாத கட்டடங்களின் எண்ணிக்கை	விழுக்காடு (5)/(4)*100
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1	**GCC**				
	மண்டலம் V	3, 4 மற்றும் 5	704	360 தெருக்களில் 640 கட்டடங்கள்	91
	மண்டலம் X	3, 4 மற்றும் 5	642	243 தெருக்களில் 325 கட்டடங்கள்	51
	மண்டலம் XI	3, 4 மற்றும் 5	607	301 தெருக்களில் 433 கட்டடங்கள்	71
	மண்டலம் XV	3, 4 மற்றும் 5	484	178 தெருக்களில் 331 கட்டடங்கள்	68
	மொத்தம்		**2,437**	**1,082** தெருக்களில் **1,729** கட்டடங்கள்	
2	பல்லவபுரம் நகராட்சி	3, 4 மற்றும் 5	188	22 தெருக்களில் 156 கட்டடங்கள்	83
3	பூந்தமல்லி நகராட்சி	4 மற்றும் 5	10	6 தெருக்களில் 8 கட்டடங்கள்	80
	மொத்தம்		**198**	**28** தெருக்களில் **164** கட்டடங்கள்	

CMDA-சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம்;
GCC - பெருநகர சென்னை மாநகராட்சி

இணைப்பு 2.21

(பார்வை: பத்தி 2.4.6.2; பக்கம் 135)

உள்ளாட்சி அமைப்புகள் வழங்கிய திட்ட அனுமதிகளில் விதி மீறல்

வரிசை எண்	சோதனை சரிபார்ப்பு செய்யப்பட்ட உள்ளாட்சி அமைப்பின் பெயர்	சாதாரண கட்டடங்களுக்கான திட்ட அனுமதிகளின் எண்ணிக்கை		
		சோதனை சரிபார்ப்பு செய்யப்பட்டவை	விதிமீறல்கள்	
			300 ச.மீ.க்கு மேற்பட்ட தரை பரப்பளவு	இரண்டாவது மாடியில் அனுமதிக்கப்பட்ட வரம்பை மீறிய துறை பரப்பளவு
1	GCC மண்டலம் V	161	21	0
2	GCC மண்டலம் X	278	14	9
3	GCC மண்டலம் XI	267	24	16
4	GCC மண்டலம் XV	208	34	12
5	பல்லவபுரம் நகராட்சி	341	18	57
6	பூந்தமல்லி நகராட்சி	67	0	2
7	மாடம்பாக்கம் பேரூராட்சி	150	18	30
8	பெருங்களத்தூர் பேரூராட்சி	100	9	12
9	திருநின்றவூர் பேரூராட்சி	67	1	0
10	புழல் ஊராட்சி ஒன்றியம்	21	0	0
11	பரங்கிமலை ஊராட்சி ஒன்றியம்	856	63	93
12	திருவள்ளூர் ஊராட்சி ஒன்றியம்	19	2	0
மொத்தம்		**2,535**	**204**	**231**

GCC: பெருநகர சென்னை மாநகராட்சி

இணைப்பு 2.22

(பார்வை: பத்தி 2.4.7.1 மற்றும் 2.4.7.2; பக்கங்கள் 137 மற்றும் 138)

2013-18 காலகட்டத்தில் சென்னை பெருநகர் பகுதியில் வளர்ச்சிக் கட்டணங்கள் மற்றும் திறந்தவெளி ஒதுக்கீட்டுக் கட்டணங்கள் பெற்றதும் மற்றும் வழங்கிய தொகைகள்

(₹ கோடியில்)

உள்ளாட்சி அமைப்புகளின் வகை	வளர்ச்சிக் கட்டணங்கள்				திறந்தவெளி ஒதுக்கீட்டுக் கட்டணங்கள்			
	பெற்றது	வழங்க வேண்டியது	வழங்-கியது	மீதம்	பெற்றது	வழங்க வேண்டியது	வழங்கியது	மீதம்
பெருநகர சென்னைமாநகராட்சி	50.61	37.96	30.65	7.31	333.42	250.06	234.50	15.56
நகராட்சிகள்	7.22	5.42	3.37	2.05	70.60	52.95	31.57	21.38
பேரூராட்சிகள்	2.68	2.01	0.60	1.41	22.03	16.52	4.49	12.03
ஊராட்சி ஒன்றியங்கள்	*4.08	3.05	0	3.05	*58.87	44.15	0	44.15
மொத்தம்	**64.59**	**48.44**	**34.62**	**13.82**	**484.92**	**363.68**	**270.56**	**93.12**

* 2016-18 காலகடத்திற்கு தாம் பெற்ற தொகை விவரத்தை CMDA தெரிவிக்கவில்லை

இணைப்பு 2.23

(பார்வை: பத்தி 2.4.7.2 (i); பக்கம் 138)

OSRக்கு மாறாக கட்டணங்கள் வசூலித்தல்

வரிசை எண்	திட்ட அனுமதி எண் மற்றும் நாள்	கட்டிட வகை	மனையின் முகப்பு பகுதியின் அளவு (மீ)	நிலத்தின் மொத்த அளவு	OSR கட்டணங்கள் வசூலிக்கப்பட்ட நிலத்தின் அளவீடு	வசூலிக்கப்பட்ட OSR கட்டணங்கள்
				(ச.மீ.)		(₹ கோடியில்)
1	7806 - 07/02/2013	சிறப்பு கட்டடம்	79.52	4,628.58	367.56	0.38
2	7198 - 21/06/2013	அடுக்குமாடி கட்டடம்	64.40	4,085.84	258.00	2.78
3	8110 - 16/08/2013	அடுக்குமாடி கட்டடம்	91.00	9,769.00	677.00	1.46
4	8390 - 18/11/2013	சிறப்பு கட்டடம்	102.95	5,178.52	125.00	0.20
5	8141 - 31/12/2013	அடுக்குமாடி கட்டடம்	85.60	9,984.57	698.46	6.45
6	8181 - 29/10/2014	அடுக்குமாடி கட்டடம்	81.30	5,638.18	263.82	1.28
7	9122 - 13/05/2015	சிறப்பு கட்டடம்	72.60	8,046.79	507.00	2.18
8	9024 - 10/08/2015	அடுக்குமாடி கட்டடம்	62.10	7,530.00	453.00	1.95
9	9061 - 11/03/2016	அடுக்குமாடி கட்டடம்	55.21	5,915.74	291.74	1.82
10	9071- 10/05/2016	அடுக்குமாடி கட்டடம்	46.65	5,320.34	532.03	2.00
11	9077 - 26/05/2016	அடுக்குமாடி கட்டடம்	57.90	5,709.55	264.73	5.70
12	11118 - 08/12/2016	அடுக்குமாடி கட்டடம்	83.20	8,465.12	846.51	3.19
13	11333 - 24/03/2017	சிறப்பு கட்டடம்	42.91	4,183.87	119.38	2.06
மொத்தம்						**31.45**

OSR - திறந்தவெளி ஒதுக்கீடு; SB - சிறப்பு கட்டடங்கள்; MSB - பல அடுக்குமாடி கட்டடங்கள்

இணைப்பு 2.24

(பார்வை: பத்தி 2.4.7.2 (iii); பக்கம் 139)

சோதனை சரிபார்ப்பு செய்யப்பட்ட திட்ட அனுமதிகளில் OSR இடங்களை உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாற்றம் செய்யாமை

வரிசை எண்	திட்ட அனுமதி எண் மற்றும் நாள்	மனை பரப்பு	OSR நிலத்தின் அளவு	தானப்பத்திர நாள்
		(சதுர மீட்டரில்)		
1	8624 - 14/02/2014	11,850.94	1,162.57	02/01/2014
2	8169- 29/05/2014	14,665.07	1,490.16	10/04/2014
3	8173- 12/06/2014	30,604.55	3,098.86	02/05/2014
4	9244 - 09/09/2015	24,389.46	2,460.00	03/08/2015
5	9413- 19/11/2015	22,014.72	1,869.85	25/05/2015
6	9433- 22/12/2015	22,520.44	2,026.45	14/10/2015
7	9584- 06/07/2016	4,728.84	473.60	07/03/2016
8	11203- 18/11/2016	1,36,663.50	12,724.42	05/11/2015
9	11297- 20/02/2017	46,050.00	4,810.63	10/01/2017
10	11326 - 18/03/2017	19,296.39	1,945.71	06/01/2017
11	11622 - 06/10/2017	22,024.00	2,231.51	28/08/2017
12	11342 - 03/04/2017	43,228.59	4,987.57	25/01/2017
13	11472 - 11/08/2017	45,827.54	4,281.50	15/06/3017
14	11606 - 22/09/2017	14,961.23	2,314.23	28/07/2017

OSR - திறந்தவெளி ஒதுக்கீடு

இணைப்பு 2.25
(பார்வை: பத்தி 2.4.8; பக்கம் 140)
பல்வேறு வகை கட்டடங்களுக்கான FSI மற்றும் ஊக்க FSI விவரங்கள்

கட்டட வகை மற்றும் DR எண்	வகை	தள பரப்பு குறியீடு	ஊக்க தள பரப்பு குறியீடு DR 36		
			சாலையின் அகலம் 9 மீ முதல் 12 மீட்டருக்கு குறைவாக இருக்கையில் 20 சதவீதம்	சாலையின் அகலம் 12 மீ முதல் 18 மீட்டருக்கு குறைவாக இருக்கையில் 30 சதவீதம்	18 மீ மற்றும் அதற்கு மேற்பட்ட சாலை அகலத்திற்கு 40 சதவீதம்
சாதாரண கட்டடங்கள் DR 25 (1) E	-	1.50	-	-	-
சிறப்பு கட்டடங்கள் DR 26 (அட்டவணை -A)	-	1.50	1.80	1.95	2.10
தொகுப்பு மேம்பாடு DR 27 (3) D	-	1.50	1.80	1.95	2.10
குடியிருப்பு அடுக்குமாடி கட்டடம் DR 28 (2) D	1(a)	1.50	1.80	1.95	2.10
	1(b)	1.75	2.10	2.27	2.45
	II மற்றும் III	2.50	3.00	3.25	3.50
		2.25	2.70	2.92	3.15
		2.00	2.40	2.60	2.80
பிறவகை அடுக்குமாடி கட்டடங்கள் DR 28 (2) D	I(a)	1.50	1.80	1.95	2.10
	I(b)	1.75	2.10	2.27	2.45
	II மற்றும் III	2.50	3.00	3.25	3.50
		2.25	2.70	2.92	3.15
		2.00	2.40	2.60	2.80

DR - வளர்ச்சி விதிகள்; FSI - தரைபரப்பு குறியீடு

இணைப்பு 2.26

(பார்வை: பத்திகள் 2.4.8(i)(அ), 2.4.8(i)(ஆ), 2.4.8(ii)(அ), 2.4.8(ii)(ஆ), 2.4.8(ii)(இ) மற்றும் 2.4.8(ii)(ஈ); பக்கங்கள் 141, 142, 143 மற்றும் 144)

FSI கணக்கீட்டில் அளவுருக்கள் தவறாக கடைபிடித்தமை

வரிசை எண்	திட்ட அனுமதி எண் மற்றும் நாள்	மிகையான FSI*	மிகையான FSIக்கு நிகரான நில அளவு** (சதுர அடியில்)	சதுர அடிக்கு வழிகாட்டி மதிப்பு(₹)	நிகரான நிலத்தின் மதிப்பு Col.4 x Col.5 (₹ கோடியில்)
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1	7200 - 28/06/2013	0.60	83,070.01	2,750	22.84
2	8121 - 26/09/2013	0.06	14,508.15	1,500	2.18
3	9020 - 10/07/2015	0.15	38,122.64	2,000	7.62
4	9413 - 20/11/2015	0.10	14,730.43	2,200	3.24
5	9094 - 30/08/2016	0.10	23,132.14	6,500	15.04
6	9097 - 09/09/2016	0.29	40,059.18	4,000	16.02
	மொத்தம்				66.94

FSI - தரைபரப்புக் குறியீடு

* மிகையான FSI = எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய FSI - எடுத்துக்கொள்ளப்பட்ட FSI

** நிகரான நிலம் = [மனையின் பரப்பு (சதுர மீட்டரில்)(தானப் பகுதி நீங்கலாக) x மிகையான FSI]/ சாதாரண FSI x 10.764ஆக மாற்றுக் காரணி

இணைப்பு 2.27

(பார்வை: பத்தி 2.4.9.1; பக்கம் 145)

போதுமான வாகன நிறுத்துமிடம் இல்லாமை

வரிசை எண்	திட்ட அனுமதி எண் மற்றும் நாள்	கட்டட வகை	கட்டட பரப்பு	தேவையான வாகனம் நிறுத்துமிடம்		அமைக்கப்பட்ட நிறுத்துமிடம்		வாகன நிறுத்துமிடம் வழங்குவதில் பற்றாக்குறை	
			FSI பரப்பளவு	நான்கு சக்கர வாகனம்	இரு சக்கர வாகனம்	நான்கு சக்கர வாகனம்	இரு சக்கர வாகனம்	நான்கு சக்கர வாகனம்	இரு சக்கர வாகனம்
			(ச.மீ.)	(எண்ணிக்கை)					
1	7804 08/02/2013	SB-வணிகம்	1,519.52	33	33	22	68	11	0
2	7849 04/03/2013	SB- குடியிருப்பு	4,282.17	41	25	20	92	21	0
3	7198 21/06/2013	MSB - வணிகம்	12,398.19	247	247	201	217	46	30
4	7199 10/07/2013	MSB- வணிகம் / குடியிருப்பு	26,535.29	459	372	394	518	65	0
5	8115 29/08/2013	MSB- தகவல் தொழில்நுட்பம்	1,60,674.41	3,214	6,427	2,702	5,738	512	689
6	8137 27/12/2013	MSB - வணிகம்	4,791.32	53	211	42	161	11	50
7	8141 31/12/2013	MSB- வணிகம் / குடியிருப்பு	28,262.81	562	555	437	437	125	118
8	8182 05/11/2014	MSB- தகவல் தொழில்நுட்பம்	1,58,143.91	3,124	6,300	2,414	4,614	710	1,686
9	8183 15/11/2014	MSB- தகவல் தொழில்நுட்பம்	7,267.54	145	291	110	220	35	71
10	9011 15/04/2015	MSB- அலுவலகம்	8,386.18	91	368	70	283	21	85
11	9061 11/03/2016	MSB- வணிகம்	15,201.36	303	303	249	622	54	0
12	9536 02/05/2016	SB - வணிகம்	7,324.98	79	322	61	244	18	78
13	9622 26/09/2016	SB - வணிகம்	4,080.05	82	164	68	135	14	29
14	11132 20/02/2017	MSB- வணிகம் / குடியிருப்பு	1,78,627.84	3,046	2,280	2,483	1,798	563	482
15	11138 17/03/2017	MSB- மருத்துவமனை	11,936.77	159	159	120	121	39	38
16	11333 24/03/2017	SB -அலுவலகம் / வணிகம்	6,206.50	198	206	108	141	90	65
17	11148 12/04/2017	MSB- தகவல் தொழில்நுட்பம்	82,887.09	1,661	3,323	1,255	2,530	406	793
18	11151 11/05/2017	MSB- வணிகம் / குடியிருப்பு	38,245.55	408	398	385	366	23	32
		மொத்தம்		**13,905**	**21,251**	**11,141**	**17,005**	**2,764**	**4,246**

FSI - தரைபரப்புக் குறியிடு; SB - சிறப்பு கட்டடம்; MSB - அடுக்குமாடி கட்டடம்

குறிப்பு: தேவைப்படும் மற்றும் அமைக்கப்பட்ட மொத்த இரு சக்கர வாகன நிறுத்துமிடங்கள், பற்றாக்குறை உள்ள இடத்தில் மட்டும் கணக்கிடப்பட்டது

இணைப்பு 2.28

(பார்வை: பத்தி 2.4.10.2; பக்கம் 149)

GCCயின் கள ஆய்வு மற்றும் கட்டட உரிமங்களை வழங்குவதில் தாமதம்

கள ஆய்வு நடத்துவதில் தாமதம்	மண்டலம் V		மண்டலம் X		மண்டலம் XI		மண்டலம் XV		விண்ணணப்பங்களின் மொத்த எண்ணிக்கை
	விண்ணணப்பங்கள் (எண்ணிக்கையில்)	கட்டட உரிமம் வழங்குவதில் தாமதம்	விண்ணணப்பங்கள் (எண்ணிக்கையில்)	கட்டட உரிமம் வழங்குவதில் தாமதம்	விண்ணணப்பங்கள் (எண்ணிக்கையில்)	கட்ட ட உரிமம் வழங்குவதில் தாமதம்	விண்ணணப்பங்கள் (எண்ணிக்கையில்)	கட்ட ட உரிமம் வழங்குவதில் தாமதம்	
1 முதல் 15 நாட்கள்	432	21 முதல் 438 நாட்கள்	489	18 முதல் 558 நாட்கள்	342	18 முதல் 365 நாட்கள்	368	16 முதல் 620 நாட்கள்	1,631
16 முதல் 30 நாட்கள்	174	36 முதல் 358 நாட்கள்	60	32 முதல் 278 நாட்கள்	52	31 முதல் 264 நாட்கள்	70	35 முதல் 190 நாட்கள்	356
31 முதல் 60 நாட்கள்	112	47 முதல் 454 நாட்கள்	19	74 முதல் 147 நாட்கள்	39	55 முதல் 246 நாட்கள்	26	49 முதல் 344 நாட்கள்	196
61 முதல் 90 நாட்கள்	16	94 முதல் 247 நாட்கள்	7	101 முதல் 153 நாட்கள்	4	131 முதல் 217 நாட்கள்	9	101 முதல் 211 நாட்கள்	36
91 முதல் 339 நாட்கள்	9	135 முதல் 322 நாட்கள்	3	155 முதல் 385 நாட்கள்	Nil	Nil	4	132 முதல் 247 நாட்கள்	16
மொத்தம்	**743**		**578**		**437**		**477**		**2,235**

GCC: பெருநகர சென்னை மாநகராட்சி; Nil: இல்லை

இணைப்பு 2.29

(பார்வை: பத்தி 2.4.10.3; பக்கம் 150)

திட்ட அனுமதி வழங்கப்பட்ட பின் பெறப்பட்ட சுற்றுச்சூழல் அனுமதி

வரிசை எண்	திட்ட அனுமதி எண்	திட்ட அனுமதி வழங்கப்பட்ட நாள்	சுற்றுச்சூழல் அனுமதிக்கான விண்ணப்ப நாள்	சுற்றுச்சூழல் அனுமதி வழங்கப்பட்ட நாள்	சுற்றுச்சூழல் அனுமதிக்கு முன் வழங்கப்பட்ட திட்ட அனுமதி (நாட்கள் எண்ணிக்கையில்)
1	7171	24/01/2013	07/06/2013	01/06/2018	1,954
2	7176	18/02/2013	04/02/2013	01/06/2013	103
3	7834	25/02/2013	17/07/2012	01/04/2013	35
4	7178	01/03/2013	05/04/2013	01/06/2013	92
5	7183	14/03/2013	07/08/2013	09/04/2014	391
6	7918	08/05/2013	29/09/2011	01/07/2013	54
7	7950	31/05/2013	13/06/2014	30/03/2015	668
8	7200	26/06/2013	01/03/2013	01/09/2013	159
9	8235	19/07/2013	07/06/2013	06/02/2014	202
10	8256	05/08/2013	26/07/2013	01/02/2016	910
11	8265	16/08/2013	29/10/2013	21/04/2014	248
12	8279	26/08/2013	06/01/2014	01/07/2017	1,405
13	8118	03/09/2013	10/09/2012	06/02/2014	156
14	8122	04/10/2013	12/03/2013	09/04/2014	187
15	8131	06/12/2013	02/01/2014	10/04/2014	125
16	8133	16/12/2013	10/12/2013	30/04/2014	135
17	8558	20/12/2013	03/09/2013	01/04/2015	467
18	8146	13/02/2014	29/10/2013	28/11/2014	288
19	8152	07/03/2014	25/11/2013	18/03/2014	11
20	8657	11/03/2014	22/01/2014	20/03/2014	9
21	8154	12/03/2014	02/01/2014	21/04/2014	40
22	8717	29/04/2014	28/01/2014	30/04/2014	1
23	8741	19/05/2014	26/02/2014	02/06/2014	14
24	8762	28/05/2014	20/03/2014	18/12/2014	204
25	8443	09/12/2014	13/11/2014	23/12/2014	14
26	9025	06/01/2015	10/12/2014	01/04/2015	85
27	8935	18/02/2015	28/07/2014	18/03/2015	28
28	8975	24/03/2015	09/01/2015	01/04/2015	8
29	9193	17/07/2015	12/03/2015	02/11/2015	108
30	8522	12/04/2016	18/02/2015	01/08/2016	111
31	11392	11/05/2017	09/06/2017	01/07/2017	51

இணைப்பு 2.30

(பார்வை: பத்தி 2.4.11.5; பக்கம் 155)

திட்ட அனுமதி வழங்குவதற்கு முன் தொடங்கப்பட்ட கட்டுமானப் பணிகள்

வரிசை எண்	திட்ட அனுமதி எண் மற்றும் நாள்	கட்டிட வகை	கட்டப்பட்ட மொத்த பகுதி ச.மீ.	குடியிருப்பு கட்டிடமென்றால் வசிப்பதற்கேற்றவைகளின் எண்ணிக்கை	திட்ட அனுமதி வழங்கப்பட்ட நாளில் கட்டுமான நிலை
1	7190/ 09/05/2013	அடுக்குமாடி குடியிருப்பு	2,58,810	7,440	கட்டமைப்பு ரீதியாக முடிந்தது
2	8160/ 03/04/2014	அடுக்குமாடி மருத்துவமனை/ நிறுவனம்	44,252.27	--	கூடுதல் கட்டுமானம் - பகுதி அளவில் முடிந்தது
3	8182/ 03/11/2014	அடுக்குமாடி /தகவல் தொழில்நுட்பம்	2,66,030.61	--	கட்டமைப்பு ரீதியாக முடிந்தது
4	8891/ 31/12/2014	சிறப்பு குடியிருப்பு	1,863.12	12	கட்டமைப்பு ரீதியாக முடிந்தது
5	9033/ 01/10/2015	அடுக்குமாடி குடியிருப்பு	7,96,234.14	20,274	கட்டமைப்பு ரீதியாக முடிந்தது
6	9297/ 29/10/2015	அடுக்குமாடி குடியிருப்பு	2,02,600.00	8,048	கட்டட தொகுதிகள் பல்வேறு நிலை கட்டுமானம்
7	9087/ 29/07/2016	அடுக்குமாடி குடியிருப்பு	3,525.67	16	கட்டமைப்பு ரீதியாக முடிந்தது
8	9094/ 30/08/2016	அடுக்குமாடி குடியிருப்பு	1,89,763.85	1,188	இரண்டு தொகுதிகள் கட்டமைப்பு ரீதியாக முடிக்கப்பட்டன
9	11153/ 22/06/2017	அடுக்குமாடி குடியிருப்பு	1,45,855.32	1,500	முடிக்கப்பட்டு குடியிருப்புக்கு தயாராக உள்ளது

இணைப்பு 3.1

(பார்வை: பத்தி 3.1.1; பக்கம் 160)

மாதிரி செயலாக்க பிரிவுகள்

மாவட்டம்	நகராட்சி	பேரூராட்சிகள்	ஊராட்சி ஒன்றியங்கள்	கிராம ஊராட்சிகள்
தர்மபுரி	தர்மபுரி	அரூர்	அரூர்	அச்சலவாடி
		கடத்தூர்		கோங்கவேம்பு
		பெண்ணகரம்		செல்லம்பட்டி
				வேப்பம்பட்டி
			பாப்பிரெட்டிப்பட்டி	மஞ்சவடி
				பட்டுகோணாம்பட்டி
கிருஷ்ணகிரி	-	கெலமங்கலம்	பர்கூர்	அஞ்சூர்
		ஊத்தங்கரை		பலிநயனப்பள்ளி
				குட்டூர்
				சிகரளப்பள்ளி
			ஊத்தங்கரை	சந்திரப்பட்டி
				கங்காபிராம்பட்டி
				கருமாந்தப்பட்டி
				திருவானப்பட்டி
			வேப்பனப்பள்ளி	சென்னசந்திரம்
				சமந்தமலை
				சிகரமாகனப்பள்ளி

இணைப்பு 3.2

(பார்வை: பத்தி 3.1.3.1; பக்கம் 163)

உந்து நீரேற்றுக் குழாய்கள் மற்றும் ஈர்ப்பு நீரேற்றுக் குழாய்கள் மூலம் உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்பட்ட ஒகேனக்கல் குடிநீர்

வரிசை எண்	உள்ளாட்சி அமைப்பின் பெயர்	2011 மக்கள் கணக்கெடுப்பின் படி மக்கட்தொகை	2011 மக்கள் கணக்கெடுப்பின் படி தேவையான அளவு (MLD)	வழங்கப்பட்டவை (MLD)			2015-18 காலகட்டத்தில் வழங்கப்பட்ட சராசரி அளவு	2015-18 காலகட்டத்தில் பற்றாக்குறை / மிகை (MLD)	2015-18 காலகட்டத்தில் பற்றாக்குறை / மிகை (விழுக்காட்டில்)
				2015-16	2016-17	2017-18			
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9) (நிரல்கள் 8-4)	(10)
உந்து நீரேற்றுக் குழாய்கள்									
1	கிருஷ்ணகிரி நகராட்சி	72,000	2.22	3.87	3.11	2.69	3.22	1.00	45.05
2	ஒசூர் நகராட்சி	2,44,518	16.23	9.27	9.50	9.19	9.32	(-) 6.91	(-) 42.58
3	காரிமங்கலம் பேரூராட்சி	15,635	0.49	0.43	0.39	0.33	0.38	(-) 0.11	(-) 22.45
4	மாரண்டஹல்லி பேரூராட்சி	12,811	0.57	0.52	0.52	0.51	0.52	(-) 0.05	(-) 8.77
5	பாலக்கோடு பேரூராட்சி	20,645	0.53	0.62	0.67	0.63	0.64	0.11	20.75
6	பர்கூர் பேரூராட்சி	16,625	0.83	0.18	0.50	0.55	0.41	(-) 0.42	(-) 50.60
7	காவேரிப்பட்டினம் பேரூராட்சி	15,000	0.34	1.08	0.59	0.42	0.70	0.36	105.88
8	நாகோஜனஹல்லி பேரூராட்சி	9,804	0.37	0.41	0.39	0.31	0.37	0.00	0
9	கெலமங்கலம் பேரூராட்சி	13,294	0.64	0.85	0.88	0.70	0.81	0.17	26.56
10	தேன்கனிக்கோட்டை பேரூராட்சி	25,000	1.01	0.70	0.69	0.59	0.66	(-) 0.35	(-) 34.65
11	பாலக்கோடு ஊராட்சி ஒன்றியம்	1,56,117	5.29	4.97	5.15	4.48	4.87	(-) 0.42	(-) 7.94
12	காரிமங்கலம் ஊராட்சி ஒன்றியம்	1,43,451	4.87	4.35	4.80	4.39	4.51	(-) 0.36	(-) 7.39
13	பர்கூர் ஊராட்சி ஒன்றியம்	1,91,483	6.51	1.78	5.22	5.37	4.12	(-) 2.39	(-) 36.71
14	கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியம்	1,54,441	5.52	2.69	3.78	3.43	3.30	(-) 2.22	(-) 40.22
15	காவேரிப்பட்டினம் ஊராட்சி ஒன்றியம்	1,69,252	5.66	6.66	5.99	5.10	5.92	0.26	4.59
16	வேப்பனப்பள்ளி ஊராட்சி ஒன்றியம்	94,483	3.29	2.81	3.68	2.91	3.13	(-) 0.16	(-) 4.86
17	கெலமங்கலம் ஊராட்சி ஒன்றியம்	1,28,884	4.45	3.60	3.30	2.72	3.21	(-) 1.24	(-) 27.87
18	தளி ஊராட்சி ஒன்றியம்	1,81,017	6.09	4.77	4.48	3.95	4.40	(-) 1.69	(-) 27.75
19	சூலகிரி ஊராட்சி ஒன்றியம்	1,77,900	5.99	3.29	3.80	3.79	3.63	(-) 2.36	(-) 39.40
20	ஒசூர் ஊராட்சி ஒன்றியம்	1,16,388	3.51	2.86	3.01	2.58	2.82	(-) 0.69	(-) 19.66
	மொத்தம்		**74.41**				**56.94**	**(-) 17.47**	**(-) 23.48**

வரிசை எண்	உள்ளாட்சி அமைப்பின் பெயர்	2011 மக்கள் கணக்கெடுப்பின் படி மக்கட்தொகை	2011 மக்கள் கணக்கெடுப்பின் படி தேவையான அளவு (MLD)	வழங்கப்பட்டவை (MLD)			2015-18 காலகட்டத்தில் வழங்கப்பட்ட சராசரி அளவு	2015-18 காலகட்டத்தில் பற்றாக்குறை / மிகை (MLD)	2015-18 காலகட்டத்தில் பற்றாக்குறை / மிகை (விழுக்காட்டில்)
				2015-16	2016-17	2017-18			
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9) (நிரல்கள் 8-4)	(10)
ஈர்ப்பு நீரேற்றுக் குழாய்கள்									
1	தர்மபுரி நகராட்சி	68,595	4.98	5.05	4.99	3.63	4.56	(-) 0.42	(-) 8.43
2	B. மல்லபுரம் பேரூராட்சி	12,711	0.32	0.36	0.37	0.33	0.35	0.03	9.37
3	அரூர் பேரூராட்சி	25,640	1.13	0.96	1.02	0.95	0.98	(-) 0.15	(-) 13.27
4	கடத்தூர் பேரூராட்சி	11,380	0.48	0.50	0.49	0.42	0.47	(-) 0.01	(-) 2.08
5	கம்பைநல்லூர் பேரூராட்சி	12,586	0.41	0.43	0.43	0.40	0.42	0.01	2.44
6	பாப்பிரெட்டிப்பட்டி பேரூராட்சி	9,374	0.23	0.26	0.28	0.22	0.25	0.02	8.7
7	பெண்ணாகரம் பேரூராட்சி	16,892	0.78	0.65	0.66	0.63	0.65	(-) 0.13	(-) 16.67
8	பாப்பாரப்பட்டி பேரூராட்சி	12,555	0.58	0.55	0.62	0.59	0.59	0.01	1.72
9	ஊத்தங்கரை பேரூராட்சி	18,468	0.79	0.87	0.81	0.80	0.83	0.04	5.06
10	மொரப்பூர் ஊராட்சி ஒன்றியம்	1,51,495	5.14	5.12	5.35	4.70	5.06	(-) 0.08	(-) 1.56
11	அரூர் ஊராட்சி ஒன்றியம்	1,65,291	5.59	4.75	5.25	5.00	5.00	(-) 0.59	(-) 10.55
12	பாப்பிரெட்டிப்பட்டி ஊராட்சி ஒன்றியம்	96,448	3.30	2.73	2.57	2.31	2.54	(-) 0.76	(-) 23.03
13	பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியம்	2,05,199	7.07	5.89	6.64	6.87	6.47	(-) 0.60	(-) 8.49
14	நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம்	1,90,535	6.38	6.69	6.68	5.83	6.40	0.02	0.31
15	தர்மபுரி ஊராட்சி ஒன்றியம்	1,81,994	6.40	6.86	5.61	5.23	5.90	(-) 0.50	(-) 7.81
16	மாத்தூர் ஊராட்சி ஒன்றியம்	1,07,520	3.65	4.17	3.97	3.83	3.99	0.34	9.32
17	ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியம்	1,44,375	4.90	4.80	4.96	4.80	4.85	(-) 0.05	(-) 1.02
	மொத்தம்		52.13				49.31	(-) 2.82	(-) 5.41

MLD: மில்லியன் லிட்டர் நாளொன்றுக்கு

இணைப்பு 3.3

(பார்வை: பத்தி 3.1.5.1; பக்கம் 169)

கூடுதல் அளவுகளுக்கு புதிய விகிதங்களை பின்பற்றியதால் அதிகமாக பணம் செலுத்தப்பட்டமை

குழாய்களின் விவரம் (மிமீல் அளவு)		ஒப்பந்த அளவு (மீ)	நிறைவேற்றப்பட்ட அளவு(மீ)	நிறைவேற்றப் -பட்ட அளவில் வித்தியாசம் (விழுக்காட்டில்) மிகை(+) பற்றாக்குறை (-)	அதிக விலைவீதத்தில் நிறைவேற்றப்பட்ட அளவு (மீ)	ஒரு மீட்டருக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட அதிக விலைவீதம் (₹)	10.835 விழுக்காடு தள்ளுபடிக்குப் பிறகு ஒரு மீட்டருக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய ஒப்பந்த விலைவீதம் (₹)	மீட்டருக்கான விலை வீதத்தில் வித்தியாசம் (₹)	அனுமதிக்கத் தகாத தொகை (₹)
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	8)	(9) (7) - (8)	(10) (6) x (9)
DI K7	450	15,930	15,931.43	(+) 0.009	212	5,328	3,815.37	1,512.63	3,20,677.56
DI K7	250	12,880	12,854.52	(-) 0.2	750	2,443	1,719.99	723.01	5,42,257.50
DI K7	150	65,533	64,901.09	(-) 1	354	1,436	1,028.07	407.93	1,44,407.22
DI K7	100	84,155	81,453.34	(-) 3.21	11,253	971	694.60	276.40	31,10,329.20
DI K9	350	17,065	17,064.99	(-) 0.00006	1,015	4,514	3,209.94	1,304.06	13,23,620.90
DI K9	300	32,590	32,590.25	(+) 0.0008	680	3,733	2,585.78	1,147.22	7,80,109.60
DI K9	250	49,360	49,363.77	(+) 0.008	315	2,952	2,040.99	911.01	2,86,968.15
DI K9	150	53,556	54,466.86	(-) 1.7	1,110	1,624	1,200.16	423.84	4,70,462.40
HDPE	280	15,670	15,670.61	(+) 0.004	666	1,850	987.06	862.94	5,74,718.04
HDPE	125	5,260	5,205.97	(-) 1.03	1,546	440	193.49	246.51	3,81,104.46
HDPE	63	16,11,842	16,53,446.00	(+) 2.58	1,09,457	104	49.93	54.07	59,18,339.99
								மொத்தம்	1,38,52,995.02

DI - நீள் இரும்புக்குழாய்கள்
HDPE -உயர் அடர்த்தி பாலி எத்திலீன்

இணைப்பு 3.4

(பார்வை: பத்தி 3.1.5.2; பக்கம் 170)

நீள் இரும்புக் குழாய்களை (DI) இணைக்க தனி இனம் வழங்கப்பட்டதால் ஏற்பட்ட தவிர்த்திருக்கக்கூடிய செலவினம்

சிப்பம் எண்	இனம்	இணைத்தல்			கொண்டு செல்லுதல் மற்றும் பதித்தல்			மொத்தம் (₹)	செலுத்துப் பெருங்குழாய்கள்/ வழங்குப் பெருங் குழாய்களை கொண்டு செல்ல, பதித்திட மற்றும் இணைக்க ஒரு மீட்டருக்கு மேற்கோள் காட்டப்பட்ட வீதம் (₹)	செலுத்துப் பெருங்குழாய் களுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வீதத்தின் படி செய்யப்பட்ட பணக் கொடுப்பு (₹)	தவிர்த்திருக்கக்கூடிய செலவினம் (₹)
		அளவு	ஒரு இணைப்பிற்கான விலைவீதம் (₹)	தொகை (₹)	அளவு (m)	விலைவீதம் (₹)	தொகை(₹)				
(1)	(2)	(3)	(4)	(5) (3) x (4)	(6)	(7)	(8) (6) x (7)	(9) (5) + (8)	(10)	11)	(12) (9)-(11)
III	DI 100 மிமீ	36,599.00	27.00	9,88,173.00	1,93,563.51	14.00	27,09,889.14	36,98,062.14	14.00	27,09,889.14	9,88,173.00
	DI 150 மிமீ	5,978.00	35.00	2,09,230.00	35,531.50	22.00	7,81,693.00	9,90,923.00	22.00	7,81,693.00	2,09,230.00
	DI 200 மிமீ	4,791.00	46.00	2,20,386.00	26,766.95	23.00	6,15,639.85	8,36,025.85	22.00	5,88,872.90	2,47,152.95
	DI 250 மிமீ	4,288.00	64.00	2,74,432.00	27,034.05	39.00	10,54,327.95	13,28,759.95	41.00	11,08,396.05	2,20,363.90
	DI 300 மிமீ	1,061.00	77.00	81,697.00	5,642.50	41.00	2,31,342.50	3,13,039.50	41.00	2,31,342.50	81,697.00
	DI 350 மிமீ	886.00	84.00	74,424.00	4,904.20	44.00	2,15,784.80	2,90,208.80	41.00	2,01,072.20	89,136.60
	DI 400 மிமீ	91.00	93.00	8,463.00	459.43	48.00	22,052.64	30,515.64	48.00	22,052.64	8,463.00
	DI 450 மிமீ	1,683.00	104.00	1,75,032.00	10,643.35	52.00	5,53,454.20	7,28,486.20	52.00	5,53,454.20	1,75,032.00
IV	DI 100 மிமீ	57,062.00	106.00	60,48,572.00	3,04,836.31	18.00	54,87,053.58	115,35,625.58	29.00	88,40,252.99	26,95,372.59
	DI 150 மிமீ	30,528.00	133.00	40,60,224.00	1,66,018.44	22.00	36,52,405.68	77,12,629.68	44.00	73,04,811.36	4,07,818.32
	DI 200 மிமீ	12,494.00	167.00	20,86,498.00	67,354.36	28.00	18,85,922.08	39,72,420.08	58.00	39,06,552.88	65,867.20
	DI 250 மிமீ	11,878.00	226.00	26,84,428.00	60,287.77	38.00	22,90,935.26	49,75,363.26	73.00	44,01,007.21	5,74,356.05
	DI 300 மிமீ	2,677.00	260.00	6,96,020.00	15,017.35	43.00	6,45,746.05	13,41,766.05	87.00	13,06,509.45	35,256.60
	DI 350 மிமீ	8,839.00	306.00	27,04,734.00	42,203.62	51.00	21,52,384.62	48,57,118.62	102.00	43,04,769.24	5,52,349.38
	DI 400 மிமீ	4,624.00	369.00	17,06,256.00	26,111.34	62.00	16,18,903.08	33,25,159.08	116.00	30,28,915.44	2,96,243.64
	DI 450 மிமீ	2,690.00	426.00	11,45,940.00	14,813.43	71.00	10,51,753.53	21,97,693.53	131.00	19,40,559.33	2,57,134.20
	DI 500 மிமீ	2,150.00	495.00	10,64,250.00	12,403.69	82.00	10,17,102.58	20,81,352.58	145.00	17,98,535.05	2,82,817.53
V	DI 100 மிமீ	43,449.00	27.00	11,73,123.00	2,40,002.50	9.00	21,60,022.50	33,33,145.50	9.00	21,60,022.50	11,73,123.00
	DI 150 மிமீ	22,393.00	35.00	7,83,755.00	1,17,510.18	14.00	16,45,142.52	24,28,897.52	14.00	16,45,142.52	7,83,755.00
	DI 200 மிமீ	10,292.20	46.00	4,73,441.20	54,001.89	15.00	8,10,028.35	12,83,469.55	15.00	8,10,028.35	4,73,441.20
	DI 250 மிமீ	10,655.00	64.00	6,81,920.00	60,510.84	39.00	23,59,922.76	30,41,842.76	39.00	23,59,922.76	6,81,920.00
	DI 300 மிமீ	8,986.00	77.00	6,91,922.00	50,078.13	41.00	20,53,203.33	27,45,125.33	41.00	20,53,203.33	6,91,922.00
	DI 350 மிமீ	2,806.00	84.00	2,35,704.00	17,086.95	44.00	7,51,825.80	9,87,529.80	44.00	7,51,825.80	2,35,704.00
	DI 400 மிமீ	1,022.00	93.00	95,046.00	5,930.03	48.00	2,84,641.44	3,79,687.44	48.00	2,84,641.44	95,046.00
மொத்தம்											113,21,375.16

மி.மீ.: மில்லி மீட்டர்

இணைப்பு 3.5

(பார்வை: பத்தி 3.2.1(i); பக்கம் 176)

இரண்டு மாதிரி மருத்துவமனைகளில் தானியங்கி/பகுதி அளவு தானியங்கி பகுப்பாய்வு கருவிகளை கொண்டு இரத்த மாதிரிகள் பரிசோதிக்கப்பட்ட விவரங்கள் (எடுத்துக்காட்டு நேர்வுகள்)

வரிசை எண்	மருத்துவமனையின் பெயர்	உபகரணத்தின் பெயர்	கருவிக்கொண்டு சோதிக்கக்கூடிய இரத்த மாதிரிகளின் எண்ணிக்கை		ஆண்டு	கடந்த மூன்று ஆண்டு களில் நாளொன்றுக்கு அதிகபட்சமாக சோதனை செய்யப்பட்ட இரத்த மாதிரிகள்	கடந்த மூன்று ஆண்டு களில் கருவிகளின் திறன் பயன்பாடு (விழுக்காட்டில்)
			ஒரு மணி நேரத்திற்கு	நாளொன்றுக்கு (2 வேலை மாற்றம்/ 16 மணி நேரம்) (கலம் 4 x 16 மணி நேரம்)			
(1)	**(2)**	**(3)**	**(4)**	**(5)**	**(6)**	**(7)**	**(8)**
1	அரசு தர்மபுரி மருத்துவ கல்லூரி மருத்துவமனை	தானியங்கி பகுப்பாய்வு கருவி	480	8,160	2015-16	1,530	*18.75*
		பகுதி அளவு தானியங்கி பகுப்பாய்வு கருவி	30		2016-17	1,382	*16.94*
					2017-18	1,956	*23.97*
2	அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவ கல்லூரி மருத்துவமனை, சேலம்	தானியங்கி பகுப்பாய்வு கருவி(2 எண்ணிக்கைகள்)	300 (+) 150	8,000	2015-16	2,436	*30.45*
		பகுதி அளவு தானியங்கி பகுப்பாய்வு கருவி	50		2016-17	2,548	*31.85*
					2017-18	3,352	*41.90*

இணைப்பு 3.6

(பார்வை: பத்தி 3.2.3; பக்கம் 182)

ரப்-ன்-ரன் (*Rub N Run*) *எண்ணெய்* மற்றும் லீவர் டானிக் (*Liver Tonic*) ஆகியவற்றின் கொள்முதலில் தவிர்த்திருக்கக்கூடிய மிகைச் செலவினம்

ஆண்டு	கொள்முதல் செய்யப்பட்ட புட்டிகள்	ஒரு புட்டிக்கான கொள்முதல் விலை (100 மிலி)	சமமான மருந்தின் (ஒரு புட்டி) விலை (100 மிலி) (50 மிலி x 2)*	வேறுபாடு	தொகை
		(₹)			
Rub N Run எண்ணெய்					
2013-14	60,000	195	64	131	78,60,000
2014-15	9,500	185	64	121	11,49,500
2015-16	50,600	185	64	121	61,22,600
2016-17	7,500	185	64	121	9,07,500
மொத்தம்					**1,60,39,600**

* 50 மிலியின் விலை ₹ 32

ஆண்டு	கொள்முதல் செய்யப்பட்ட புட்டிகள்	ஒரு புட்டிக்கான கொள்முதல் விலை (300 மிலி)	சமமான மருந்தின் (ஒரு புட்டி) விலை (300 மிலி) (100 மிலி x 3)**	வேறுபாடு	தொகை
		(₹)			
Liver Tonic					
2013-14	55,000	175	48.33	126.67	69,66,850
2015-16	22,000	175	48.33	126.67	27,86,740
2016-17	7,500	175	48.33	126.67	9,50,025
மொத்தம்					**1,07,03,615**
பெரு மொத்தம்					**2,67,43,215**

** 100 மிலியின் விலை ₹ 16.11

இணைப்பு 3.7

(பார்வை: பத்தி 3.3.1.1; பக்கம் 194)

தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்கள் மற்றும் வட்டங்களின் விவரங்கள்

வரிசை எண்	தெரிவு செய்யப்பட்ட மாவட்டத்தின் பெயர்	தெரிவு செய்யப்பட்ட வட்டத்தின் பெயர்			
1	கோயம்புத்தூர்	மேட்டுப்பாளையம்	மதுக்கரை	கோயம்புத்தூர் (தெற்கு)	வால்பாறை
2	தர்மபுரி	பாலகோடு	காரிமங்கலம்	பெண்ணாகரம்	தர்மபுரி
3	காஞ்சிபுரம்	காஞ்சிபுரம்	சோழிங்கநல்லூர்	உத்திரமேரூர்	செய்யூர்
4	கன்னியாகுமரி	தோவாளை	அகஸ்தீஸ்வரம்	விலவங்கோடு	கல்குளம்
5	கிருஷ்ணகிரி	ஒசூர்	போச்சம்பள்ளி	பர்கூர்	கிருஷ்ணகிரி
6	மதுரை	மதுரை(மேற்கு)	வாடிப்பட்டி	மதுரை(தெற்கு)	மதுரை(வடக்கு)
7	பெரம்பலூர்	ஆலத்தூர்	பெரம்பலூர்	குன்னம்	வேப்பந்தட்டை
8	சிவகங்கை	இளையான்குடி	திருப்பத்தூர்	சிவகங்கை	காரைக்குடி
9	தஞ்சாவூர்	ஒரத்தநாடு	திருவையாறு	கும்பகோணம்	பாபநாசம்
10	நீலகிரி	குன்னூர்	குந்தா	கூடலூர்	கோத்தகிரி
11	தேனி	ஆண்டிப்பட்டி	பெரியகுளம்	போடிநாயக்கனூர்	தேனி
12	திருச்சிராப்பள்ளி	மணப்பாறை	மணச்சநல்லூர்	திருச்சிராப்பள்ளி (மேற்கு)	திருச்சிராப்பள்ளி(கிழக்கு)
13	திருவண்ணாமலை	கீழ்பெண்ணாத்தூர்	போளூர்	திருவண்ணாமலை	வெண்பாக்கம்
14	திருநெல்வேலி	திருநெல்வேலி	தென்காசி	செங்கோட்டை	பாளையங்கோட்டை
15	திருவள்ளூர்	ஊத்துக்கோட்டை	அம்பத்தூர்	திருவள்ளூர்	ஆவடி
16	விழுப்புரம்	விக்கிரவாண்டி	செஞ்சி	கள்ளக்குறிச்சி	திண்டிவனம்

இணைப்பு 3.8

(பார்வை: பத்தி 3.3.1.2(ii); பக்கம் 198)

பொருள் வழங்கலுக்கு முந்தைய ஆய்வின் (PDI) கட்டணங்கள் மீதான தவிர்த்திருக்கக்கூடிய மிகை செலவினம்

வரிசை எண்	கட்டம்	கொள்முதல் செய்யப் பட்ட FMGக்களின் எண்ணிக்கை	PDI முகமையின் பெயர்	செலுத்தப் பட்ட PDI கட்டணங்கள் (₹)	PDI கட்டணங்-களின் அலகு வீதம் (₹) (நிரல் 5/நிரல் 3)	கட்டங்கள் IV மற்றும் Vன் அலகு வீதத்தை எடுத்துக்-கொண்டு செலுத்தப்-பட்ட PDI கட்டணங்கள் (₹)	தவிர்த்திருக்கக் கூடிய மிகைக் செலவினம் நிரல் 5 (-) நிரல் 7 (₹)
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
1	I	2,85,00,000	CIPET, சென்னை	8,95,66,806	3.143	61,84,500	8,33,82,306
2	II						
3	III						
4	IV	2,46,94,114	பாரத் டெஸ்ட் ஹவுஸ், புதுதில்லி	53,66,635	0.217	53,66,635	..
5	V						
	மொத்தம்	5,31,94,114		9,49,33,441		1,15,51,135	8,33,82,306

இணைப்பு 3.9

(பார்வை: பத்தி 3.3.1.3(i); பக்கம் 199)

காப்புறுதி செய்யப்படாத கிடங்குகளில் FMG கருவிகள் வைக்கப்பட்டதன் காரணமாக ஏற்பட்ட இழப்பு

வரிசை எண்	மாவட்டம்	பழுதடைந்த கருவி	பழுதடைந்த கருவிகளின் எண்ணிக்கை	காப்பீட்டு நிறுவனம் ஏற்காத தொகை (₹)	காப்பீட்டு நிறுவனம் ஏற்காததற்கான காரணம்
1	சென்னை	மின்விசிறி	29,376	10,03,30,929	இழப்பீடு கோரப்பட்ட இடத்திற்கு காப்புறுதி செய்யப்படவில்லை.
		மிக்ஸி	21,968		
		கிரைண்டர்	24,392		
2	காஞ்சிபுரம்	மின்விசிறி	1,355	74,33,860	இழப்பீடு கோரப்பட்ட இடத்திற்கு காப்புறுதி செய்யப்படவில்லை.
		மிக்ஸி	871		
		கிரைண்டர்	1,751		
3	திருவள்ளூர்	மின்விசிறி	3,100	2,65,17,467	இழப்பீடு கோரப்பட்ட இடத்திற்கு காப்புறுதி செய்யப்படவில்லை.
		மிக்ஸி	4,961		
		கிரைண்டர்	8,677		
4	வேலூர்	மின்விசிறி	30	21,30,197	இழப்பீடு கோரப்பட்ட இடத்திற்கு காப்புறுதி செய்யப்படவில்லை.
		மிக்ஸி	725		
		கிரைண்டர்	625		
	மொத்தம்		**97,831**	**13,64,12,453**	

இணைப்பு 3.10

(பார்வை: பத்தி 3.3.1.3(ii); பக்கம் 200)

கிடங்குகளிலுள்ள சேதமடைந்த மற்றும் குறையுடைய FMG கருவிகள்

வரிசை எண்	மாவட்டம்	சேதமடைந்த மற்றும் குறையுடைய FMG கருவிகளின் எண்ணிக்கை			
		மின்விசிறி	தூண்டு மின் அடுப்பு	மிக்ஸி	கிரைண்டர்
1	அரியலூர்	251	..	131	157
2	சென்னை*	4,578	..	12,473	674
3	கோயம்புத்தூர்	3,605	..	1,926	2,895
4	கடலூர்	4,637	..	3,800	3,654
5	ஈரோடு	917	..	632	396
6	காஞ்சிபுரம்*	5,920	..	2,576	3,690
7	கன்னியாகுமரி	1,681	..	1,514	865
8	கரூர்	200	..	33	7
9	கிருஷ்ணகிரி	313	..	156	131
10	மதுரை	4,465	..	2,563	1,833
11	நாமக்கல்	59	..	73	39
12	நீலகிரி	..	1,768	1,232	0
13	பெரம்பலூர்	842	..	684	766
14	புதுக்கோட்டை	0	..	0	238
15	இராமநாதபுரம்	598	..	274	303
16	சேலம்	1,828	..	585	1,100
17	சிவகங்கை	154	..	33	68
18	தஞ்சாவூர்	1,622	..	1,370	827
19	தேனி	42	..	39	38
20	திருநெல்வேலி	3,418	..	2,957	2,594
21	திருப்பூர்	2,020	..	865	722
22	திருவள்ளூர்*	4,550	..	3,068	5,381
23	திருவாரூர்	626	..	376	426
24	திருச்சிராப்பள்ளி	232	..	165	112
25	தூத்துக்குடி	586	..	268	301
26	வேலூர்*	1,462	..	155	252
27	விழுப்புரம்	86	..	0	0
28	விருதுநகர்	728	..	812	444
	மொத்தம்	**45,420**	**1,768**	**38,760**	**27,913**
	ஒரு கருவியின் விலை # (₹)	*869.05*	*1,055.69*	*1,055.69*	*2,142.00*
	சேதமடைந்த மற்றும் குறையுடைய FMG கருவிகளின் மதிப்பு (₹)	**3,94,72,251**	**18,66,460**	**4,09,18,544**	**5,97,89,646**
	பெரு மொத்தம்		**14,20,46,901** அல்லது **₹ 14.20** கோடி		

* தீ மற்றும் வெள்ளம் காரணமாக சேதமடைந்த FMG கருவிகளின் எண்ணிக்கையை கணக்கில் கொண்டபின்

ஐந்து கட்டங்களில் மிக குறைவான விலை எடுத்துக்கொள்ளப்பட்டது

இணைப்பு 3.11

(பார்வை: பத்தி 3.4.1 (அ); பக்கம் 211)

கோயம்புத்தூர் மாநகராட்சியில் குறைவாக சொத்து வரி விதிக்கப்பட்ட நேர்வுகள்

மதிப்பீடு எண்	பரப்பு (ச.அ.)	காலம்	ஒவ்வொரு அரையாண்டிற்குமான சொத்து வரி (₹ இலட்சத்தில்)			வருவாய் இழப்பு மற்றும் குறைவான விதிப்பின் மொத்தம் (₹ இலட்சத்தில்)
			விதிக்க வேண்டியது	விதித்தது	குறைவான விதிப்பு	
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7) கலம் (6) x அ.ஆ
81240820	42,648	**வருவாய் இழப்பு**				
		ஏப்ரல் 2005 - மார்ச் 2008 (6 அ.ஆ)	1.79	1.62	0.17	1.02
		ஏப்ரல் 2008 - மார்ச் 2009 (2 அ.ஆ)	1.97	1.79	0.18	0.36
		ஏப்ரல் 2009 - மார்ச் 2012 (6 அ.ஆ)	7.70	1.79	5.91	35.46
		குறைவான விதிப்பு				
		ஏப்ரல் 2012 - செப்டம்பர் 2014 (5 அ.ஆ)	7.70	1.79	5.91	29.55
		அக்டோபர் 2014 - மார்ச் 2018 (7 அ.ஆ)	1.97	1.79	0.18	1.26
81241033	3,608	**வருவாய் இழப்பு**				
		அக்டோபர் 2007 - மார்ச் 2009 (3 அ.ஆ)	0.15	0.13	0.02	0.06
		ஏப்ரல் 2009 - மார்ச் 2012 (6 அ.ஆ)	0.65	0.13	0.52	3.12
		குறைவான விதிப்பு				
		ஏப்ரல் 2012 - செப்டம்பர் 2014 (5 அ.ஆ)	0.65	0.13	0.52	2.60
		அக்டோபர் 2014 - மார்ச் 2018 (7 அ.ஆ)	0.15	0.13	0.02	0.14
மொத்தம் (வருவாய் இழப்பு: ₹ 40.02 இலட்சம் மற்றும் குறைவான விதிப்பு: ₹ 33.55 இலட்சம்)						**73.57**

அ.ஆ - அரையாண்டு

இணைப்பு 3.12

(பார்வை: பத்தி 3.4.1 (இ); பக்கம் 213)

2014-18 காலத்திற்கான பழனி நகராட்சியில் சொத்து வரி குறைவாக விதித்தமை

வ. எண்	விளக்கம்	சொத்து வரி (₹)		
		விதிக்கப்படவேண்டியது	விதித்தது	குறைவான விதிப்பு
மதிப்பிடப்பட்ட பகுதி: **44,856** சதுர அடி				
1	**ஆண்டு வாடகை மதிப்பு** (ARV) மதிப்பிடப்பட்ட பரப்பு (x) மண்டல விகிதத்தின் மும்மடங்கு (x) 12 மாதங்கள்	20,99,261	11,30,371	9,68,890
2	**கட்டட மதிப்பு** (BV) ARV (-) மனையின் மதிப்பு (ARVல் 1/6)	17,49,384	9,41,976	8,07,408
3	**சொத்து மதிப்பு** (PV) BV (-) பராமரிப்பிற்காக 10 விழுக்காடு	15,74,446	8,47,778	7,26,668
4	**ஆண்டு மதிப்பு** (AV) நில மதிப்பு (+) PV	19,24,323	10,36,173	8,88,150
5	**அரை ஆண்டிற்கான சொத்து வரி** AV (x) 11.5 விழுக்காடு	2,21,297	1,19,160	1,02,137
6	**கல்வி வரி** (AVல் 2.5 விழுக்காடு)	48,108	25,904	22,204
7	**நூலக செஸ்** (சொத்து வரியில் 10 விழுக்காடு)	22,130	11,916	10,214
8	**அரை ஆண்டிற்கு சொத்து மீதான மொத்த வரி** (வரிசை எண்கள் 5 + 6 + 7)	2,91,535	1,56,980	1,34,555
9	**எட்டு அரை ஆண்டிற்கான சொத்து வரி** (2014-15 - 2017-18)	23,32,280	12,55,840	10,76,440

சுருக்கச் சொற்றொடர்களின் திரட்டு

சுருக்கச் சொற்றொடர்கள்	சொற்றொடர்களின் விளக்கம்
ACL	அண்ணா நூற்றாண்டு நூலகமும்
ADGP	காவல் துறை கூடுதல் தலைமை இயக்குநர்
AMC	ஆண்டு பராமரிப்பு ஒப்பந்தம்
AMRUT	புத்துணர்வு மற்றும் நகர்ப்புற மாற்றங்களுக்கான அட்டல் திட்டம்
ATNs	நடவடிக்கை எடுத்ததற்கான அறிக்கைகள்
AV	ஆண்டு மதிப்பு
BPRD	காவல் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு குழு
CAG	இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவர்
CC	பணி நிறைவு சான்றிதழ்
CCH	மத்திய ஓமியோபதி கவுன்சில்
CCIM	இந்திய மருத்துவ முறை மத்திய கவுன்சில்
CED	மத்திய ஆயத்தீர்வை வரி
CFC	குடிமக்கள் வசதி மையங்கள்
Ch.MA	சென்னை பெருநகர் பகுதி
CIPET	வார்ப்படப் பொருட்கள் பொறியியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம்
CLIO	தலைமை நூலகர் மற்றும் தகவல் அதிகாரி
CMA	நகராட்சி நிர்வாக ஆணையர்
CMC	செங்கல்பட்டு மருத்துவ கல்லூரி
CMDA	சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம்
CRA	வருவாய் நிர்வாக ஆணையர்
CRIDP	ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாடு திட்டம்
CRZ	கடலோர ஒழுங்குமுறை மண்டலம்
CSR	சமுதாய சேவை பதிவேடு
CSS	விலையுடன் கூடிய மென்பொருள்
CWP	குடிமக்கள் இணையதளம்
DCB	கேட்பு, வசூல் மற்றும் நிலுவை
DEAR	மதிப்பீடு மற்றும் பயன்நோக்கு ஆராய்ச்சித் துறை
DF&RS	தீயணைப்பு மற்றும் மீட்பு துறை இயக்குநரகம்
DGP	காவல் துறை தலைமை இயக்குனர்
DHQH	மாவட்ட தலைமை மருத்துவமனைகள்
DI	நீள் இரும்பு குழாய்கள்
DIMH	இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்குனரகம்
DLFA	உள்ளூர் நிதி தணிக்கை இயக்குநரகம்

சுருக்கச் சொற்றொடர்கள்	சொற்றொடர்களின் விளக்கம்
DME	மருத்துவ கல்வி இயக்குநர்
DMRHS	மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர்
DSMO	மாவட்ட சித்தா மருத்துவ அதிகாரி
DPC சட்டம்	இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத்தலைவரின் (கடமைகள், அதிகாரம் மற்றும் பணி முறைமை) 1971 ஆண்டு சட்டம்
DPL	பொது நூலகங்களின் இயக்குநர்
DPO	மாவட்ட காவல் அலுவலர்கள்
DR	வளர்ச்சி விதிமுறைகள்
DRSC	மாவட்ட சாலை பாதுகாப்பு குழு
DSW	சமூக நல இயக்குநர்
DTCP	நகர ஊரமைப்பு இயக்குனர்
EARC	அவசர விபத்து நிவாரண சிகிச்சை மையங்கள்
ESI	தொழிலாளர் அரசு ஈட்டுறுதி
EWS	பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினர்
FA	நிதி கணக்குவைப்பு
FIH	பன்னாட்டு ஹாக்கி கூட்டமைப்பு
FIRs	முதல் தகவல் அறிக்கை
FMG	மின்விசிறி, மிக்ஸி மற்றும் கிரைண்டர்
FSI	தரைப்பரப்பு குறியீடு
GCC	பெருநகர சென்னை மாநகராட்சி
GRS	குறை தீர்ப்பு முறைமை
GST	சரக்கு மற்றும் சேவைகள் வரி
HIG	உயர் வருவாய் பிரிவினர்
HPTs	நெடுஞ்சாலை ரோந்து குழுக்கள்
H&UD	வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை
IBMS	ஒருங்கிணைந்த புத்தக கண்காணிப்பு, வலையமைப்பு மற்றும் பாதுகாப்பு அமைப்பு
IDC	துறையிடைக் குழு
IDEA	வினாக்கள் மற்றும் தரவு பகுப்பாய்வு மென்பொருள்
IDT	துறையிடைக் குழு
IOCL	இந்தியன் ஆயில் நிறுவனம்
IRC	இந்திய சாலைகள் அமைப்பு
ISM	இந்திய மருத்துவ முறை
IIT	இந்திய தொழில்நுட்ப நிறுவனம்
ITMS	ஒருங்கிணைந்த போக்குவரத்து மேலாண்மை அமைப்பு

சுருக்கச் சொற்றொடர்கள்	சொற்றொடர்களின் விளக்கம்
JICA	ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை
KMCH	கீழ்ப்பாக்கம் மருத்துவ கல்லூரி மருத்துவமனை
LIG	குறைந்த வருவாய் பிரிவினர்
LPCD	லிட்டர் - ஒரு நபருக்கு நாளொன்றுக்கு
MAWS	நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்
MCI	இந்திய மருத்துவ கவுன்சில்
MDR	மாவட்ட பிராதன சாலை
MIS	மேலாண்மை தகவல் அமைப்பு
mg/l	மில்லிகிராம்/லிட்டர்
MKMC	மோகன் குமாரமங்கலம் மருத்துவ கல்லூரி
MLD	மில்லியன் லிட்டர் நாளொன்றுக்கு
MORTH	சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகம்
MR	பல்வகை வரவுகள்
MRTS	பெருந்திரள் துரித இரயில் திட்டம்
MT	மெட்ரிக் டன்
MVI	மோட்டார் வாகன ஆய்வாளர்
NABH	தேசிய மருத்துவமனை அங்கீகரிப்பு குழு
NAM	தேசிய ஆயுஷ் குழுமம்
NH	தேசிய நெடுஞ்சாலை
NHAI	இந்திய தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையம்
NIC	தேசிய தகவல் மையம்
NRHM	தேசிய ஊரக நலவாழ்வு திட்டம்
O&M	இயக்க மற்றும் பராமரிப்பு
OHT	மேல்நிலை தண்ணீர் தொட்டிகள்
OSR	தொகையை திறந்தவெளி ஒதுக்கீடு
OSS	விலையில்லா மென்பொருள்
PCE	திட்ட முதன்மை பொறியாளர்
PDI	முன்விநியோக ஆய்வு
PHCs	ஆரம்ப சுகாதார மையங்கள்
PIP	செயல்பாட்டு திட்டம்
PT	சொத்து வரி
R&D	ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி
RADMS	சாலை விபத்து தரவு மேலாண்மை
RDMA	நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்கள்

சுருக்கச் சொற்றொடர்கள்	சொற்றொடர்களின் விளக்கம்
RFP	முன்மொழிவிற்கான கோரிக்கை
RRC	நடப்பிலுள்ள விலை விகித ஒப்பந்தம்
RSA	சாலை பாதுகாப்பு தணிக்கை
RTO	வட்டார போக்குவரத்து அலுவலகம்/ர்
SDG	நிலையான வளர்ச்சி இலக்குகள்
SH	மாநில நெடுஞ்சாலை
SMP	இரண்டாவது முழுமைத் திட்டம்
SRS	கணினிக்குத் தேவையான விவரக்குறிப்பு
SRSC	மாநில சாலை பாதுகாப்பு குழு
SSS	சமூக பாதுகாப்பு திட்டம்
STPC	போக்குவரத்து திட்டமிடல் பிரிவு
SUC	திடக்கழிவு மேலாண்மை பயனாளர் கட்டணம்
TAMPCOL	தமிழ்நாடு மூலிகைப் பண்ணை மற்றும் மூலிகை மருந்துக் கழகம்
TCC	அவசர கால சிகிச்சை மையம்
TNCDW	தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்
TNCSC	தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்
TNeGA	தமிழ்நாடு மின் ஆளுமை முகமை
TNHSP	தமிழ்நாடு நல்வாழ்வு அமைப்பு திட்டம்
TNMSC	தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம்
TNSDC	தமிழ்நாடு மாநில தரவு மையம்
TNSUDP	தமிழ்நாடு நீடித்த நகர்ப்புற வளர்ச்சி திட்டம்
TWAD Board	தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்
UGD	கழிவுநீர் வடிகால்
ULBs	நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள்
UTIS	Urban Tree Information System
VLT	காலி நில வரி
WS	குடிநீர் வழங்கல்

© இந்திய கணக்காய்வு மற்றும்
தணிக்கைத் துறைத் தலைவர்
www.cag.gov.in